
# ஒரு பைத்தியத்தின் பயணம்



## பூஜ்யஶ்ரீ சத்குரு தூளி பாபாவின்
## சுயசரிதம்

# ஒரு பைத்தியத்தின் பயணம்



சுயசரிதம்


வெளியீடு
அன்பின் குடில்
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு
கோம்பூர், நெருஞ்சிப் பேட்டை - 638 311
பவானி வட்டம்
ஈரோடு மாவட்டம்
தமிழ் நாடு
தொலைபேசி எண் - (04256) 227655
மின்னஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதற் பதிப்பு: 2004
பிரதிகள்: 1000


அச்சிட்டோர்:
ஜ்வாலாமுகி ஜாப் பிரஸ்
44/1, கே. ஆர். ரோடு
பசவனகுடி
பெங்களூர் - 560 004
தொலைபேசி: (080) 26523921

Certified under section 12A(a) of the Income-Tax act, 1961


C.No. 227(28)/CIT-II/CBE/2002-03 dated 23/07/2002



ஸ்ரீ குருதேவர்
பூஜ்யஸ்ரீ சத்குரு வடிவேல் சுவாமிகள்



பகவான் ஸ்ரீ பாண்டுரங்கன்



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

உ

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

அன்புருவாய்; ஆருயிராய்;

இன்புருவாய்; ஈர்ப்புருவாய்;

உண்மையாய்; ஊமையாய்;

எங்குமாய்; ஏகாந்தமாய்;

ஐக்கியமாய்; ஒன்றாய்;

ஓம்காரமாய்; ஔஷதமாய்;

ஃ தொன்றாய்;

ஃ தில்லாததாய்;

பிணம் போல் நடந்து,

உண்மையின் பைத்தியமாய் திரிந்த

ஓர் தூளியின்

# சுயசரிதம்.

எல்லாம் நீ!

ஸ்ரீசத்குரு திருவடி துணை!

# பயணத்தில்...


| | | |
|---|---|---|
| 1 | வரலாறு | 1 |
| 2 | திருஅவதாரம் | 2 |
| 3 | அனுபவ ஞானம் கரை சேர்க்கும்! | 3 |
| 4 | கல்லில் கடவுளை காணும் நிலை! | 7 |
| 5 | ஆரம்ப பாடம்! | 15 |
| 6 | அபேத திருஷ்டியும் பணிவும்! | 17 |
| | 1. மூன்று அடியில் திருவடி! | 17 |
| | 2. ஸாது கொடுத்த பிரசாதம்! | 19 |
| 7 | பைத்தியத்துடன் பரமன் மறைமுக விளையாட்டு! | 21 |
| 8 | விமலன் பேசிய விகடம்! | 23 |
| 9 | பாஷாணம் உண்ட பரமன்! | 24 |
| 10 | ஆனந்த வேதனை! | 25 |
| 11 | பக்திக்கு கட்டுப்படாத பரமன் இல்லை! | 32 |
| 12 | தானாக கனிந்த பழம்! | 34 |
| 13 | வார்த்தையில்லா வெற்றுப் பெட்டி! | 40 |
| 14 | இயற்கையே இறைவன்! | 44 |
| 15 | உலகியல் மார்க்கத்தில் அவனால் மாற்றம்! | 48 |
| 16 | வஸிஷ்டர் அருளிய வாஸிஷ்டம்! | 54 |
| 17 | இது உனக்கு தகாது! | 55 |
| 18 | ஊருக்குத்தான் உபதேசமா? | 57 |
| 19 | அது தாயுள்ளம்! | 58 |
| 20 | அபயகரம் ஸ்வய அனுபவம்! | 60 |
| 21 | முடிந்தால் முடி இல்லையேல் விடு! | 62 |
| 22 | துயர்வரின் நினைமின்! | 66 |
| 23 | மரணத்திற்கு மரணம்! | 70 |
| 24 | இதனால் என்ன பயன்? | 72 |

| | | |
|---|---|---|
| 25 | திருச்செந்தூர் முருகனான எம்மருமான் குறவனிடம் சில விளையாட்டுகள்! | 73 |
| | 1. துகில் காத்த கந்தன் | 73 |
| | 2. உ(க)ந்தன் மிரட்டுக்குள்ளே உலகம் இருக்குதடி! | 74 |
| | 3. அறிவு சூன்யமானது புத்தி பிரகாசித்தது! | 75 |
| | 4. அழுதால் உன்னை பெறலாம் | 80 |
| 26 | யாத்திரை - அவனுடன் சிலகாலம்! | 89 |
| | அ. அரவணைத்தான் ஆரம்பித்தான் | 89 |
| | ஆ. கனவின் காட்சி அவனே சாட்சி! | 94 |
| | இ. பிராப்தம் தானே நடக்கும்! | 97 |
| | ஈ. அவன் ஆட்சி செய்த இடம்! | 100 |
| | உ. கோகுலமும் கோவர்த்தனமும்! | 102 |
| | ஊ. அவனால் ஆகாத காரியம் என்ன? | 110 |
| | எ. ஹரித்துவாரிலிருந்து வெள்ளியங்கிரி வரை! | 113 |
| | ஏ. காசி யாத்திரை! | 125 |
| | ஐ. ஏன் இந்த கோரக்காட்சி? | 136 |
| | ஒ. இதுவரை சரி இனி இல்லை! | 140 |
| | ஓ. அவன்தான் தாங்களா? தாங்கள்தான் அவனா? | 146 |
| | ஔ. சபரிமலையில் ஸ்ரீபக்தவத்ஸலன்! | 150 |
| 27 | ஸ்ரீசர்வாங்க சேவை! | 151 |
| | 1. எது உண்மையோ அது நடைபெறும்! | 151 |
| | 2. அஹத்தில் அடங்கான் - அகத்தில் அமர்வான்! | 152 |
| | 3. மறந்து போன மாத்திரை | 155 |
| 28 | ஸ்ரீசத்குரு சேவையினால் யாம் பெற்ற அனுபவங்கள்! | 159 |
| | 1. பசியாற்றிய பச்சிலை! | 159 |
| | 2. இரண்டில் ஒன்று! | 160 |
| | 3. பசிக்கு உணவா? படுக்க இடமா? | 161 |
| 29 | பொறுமையின் பெருமை! | 164 |
| | 1. அனைவரும் நல்லவர்களே! | 164 |
| | 2. கண்டிப்பதோ! தண்டிப்பதோ! | 167 |
| | 3. வாய்யா நாமதாரி! | 168 |

30 திருடனின் அறிமுகம்! 173

31 யாத்திரையில் கண்ட பாதாள கங்கையும், இரு சமாதிகளும்! 175

32 அதிசயம் ஆனால் உண்மை! 179

33 திருச்சியில் காவிரிக்கரை சம்பவம்! 183

34 மன ஒர்மைப்பாடு! 188

  1. அவர் ஒரு மந்திரவாதி! 188

  2. பொம்மை அல்ல உண்மை (கருடன்)! 189

35 பயமே பலிதம்! 194

36 மறுபடியும் ஸ்ரீபண்டரிபுரம்! 202

37 அது கரைந்துவிட்டது! 213

38 காந்தமலை ரகசியம்! 217

39 ஸ்ரீசத்பாவ சேவை! 222

  1. பாக்கியவான்பெற்ற குழந்தை! 222

  2. சந்தன அபிஷேகமா! 223

40 பாதம்பட்ட தூஸிகள்! 225

41 தூலத்தில் பணிவும்! உள்ளத்தில் கனிவும்! 228

42 புனித காலம் சகஜ ஐக்கியம்! 230

43 முடிக்காமல் யாம் முடியோம்! 236

44 சில சித்தர்களின் விளையாட்டுகள்! 240

  1. சித்து இல்லாத சுத்த பைத்தியம்! 240

  2. சூதறிந்த கள்வன்! 241

  3. இறைநாமமும் குருஸ்மரணையும்! 244

  4. இது எம் தலைவிதி! 244

  5. அதிசய அறுசுவை உணவு! 245

45 ஒன்றினுள் ஒன்று அடக்கம்! 250

46 வாக்காகிய வினையே வாழ்க்கை விளையாட்டு! 252

47 இது சித்து அல்ல - குருநாம மஹிமை! 255

48 பகிர்ந்துண்டால் பசியாறும்! 260

  1. சமாராதனை! 260

  2. ஓர் கவளம் உணவு! 261

| | | |
|---|---|---|
| 49 | பணிந்த உள்ளத்தில் இறையருள் தங்கும்! | 264 |
| 50 | எம்மதமும் சம்மதமே! | 266 |
| 51 | கிறிஸ்துவும் கிருஷ்ணனும் ஒன்றே! | 276 |
| 52 | இறைவனுக்கு ஏற்ற இடம்! | 279 |
| 53 | ரிபுகீதை கிடைத்த கதை! | 282 |
| 54 | இங்குதான் இருக்கிறோமா? அங்கு இல்லையா?? | 284 |
| 55 | ரமண குடீரத்தில் ரமித்த காலம்! | 285 |
| 56 | ஸாது தரிசனம் பாப விமோசனம்! | 289 |
| 57 | கதாதர் கரை சேர்த்தார்! | 294 |
| 58 | அன்பின் குடில்! | 297 |
| 59 | ஸ்வய அனுபவ மாணிக்கங்கள்! | 303 |
| 60 | ஓர் அறிமுகம் | 310 |
| 61 | முடிவுரை | 311 |


எல்லாம் நீ!



ஸ்ரீசத்குரு திருவடி துணை!

# முகவுரை

அருள்ஞானக் குழந்தைகளே!

முகவுரை என்றால் ஆரம்பம் என பொருள். ஆரம்பம் என ஒன்றுண்டானால் முடிவு எனவும் ஒன்று உண்டு. தற்காலிகமாக **உங்கள் உணர்வுக்காக** சில வாசகங்களை பைத்தியக்காரத்தனமாக உளறுகிறோம்.

**"நீங்களும் ஒரு பைத்தியமானால்" இதை படிக்கலாம்!**
**புத்திசாலிகள் இதை படிக்கவேண்டாம்!**

காரணம் புத்தி கற்பனை பண்ணும். இது நடக்குமா? நடக்காதே! இது முடியுமா? முடியாதே! இது கட்டுக்கதை, இது கற்பனைக் கதை, இது சினிமாக்கதை என எண்ணம் உள்ளவர்களுக்கு **"அது அப்படியே"** தோற்றும். **இது** பிரமாணம்.

அவரும் நம் போன்று பத்து மாதம் கர்ப்பத்திலே இருந்து பிறந்து வளர்ந்தவர் தானே; நாம் உலகத்தில், குடும்பத்தில், தொழிலில் கஷ்டப்படுகிறோம்; அவர் தெய்வீகத்தில் அந்த காட்சிக்காக, அதே உணர்வுக்காக இரவும் பகலும் அயராது உழைத்தார். இப்போது **அவர் அது ஆகவே** இருக்கிறார்.

முயற்சி திருவினையாக்கும் (திருவினை என்றால் தெய்வ இணைப்பு) என்றபடி இந்த கலியில் நீங்கள் சிறிது முயற்சித்தாலும் பெரும்பலனை பெறுவீர்கள் என **ஆணையிட்டுக் கூறுகிறோம்.** எவனும் பிறக்கும்போதே கலெக்டராகவோ, மந்திரியாகவோ, விஞ்ஞானியாகவோ, தொழில் அதிபராகவோ தோன்றவில்லை. அதைப்போல இதை படிக்கும் உங்களில் அனேகர் உயர்ந்த பக்தனாகவோ, அனுபவ ஞானியாகவோ அவஸ்யம் வரலாம்! எண்ணம், சொல், செயல் இந்த மூன்றும் நலமாக (இறை சிந்தனையாக) இருக்க வேண்டும்.

**நல்லதை எண்ணு!**
**நல்லதை பேசு!!**
**நல்லதை செய்!!!**

என்பதை விரதமாகக் கொள்ளுங்கள். **தீயதை பாராதே, தீயதை கேளாதே, தீயதை பேசாதே** என்றார் எம் மகாத்மாஜீ.

**"ஸத்ய பிரமாணமாகச் சொல்கிறோம்"**

நீங்கள் பெண்ணும் அல்ல ஆணும் அல்ல; உயர்ந்தவன் தாழ்ந்தவன்; செல்வந்தன் ஏழை; படித்தவன் படிக்காதவன் என இந்த பேதம் இல்லவே இல்லை!


**நீங்கள் "அனைவரும் அந்த காலாதீத ஒன்றே!"**
**"அது நீ; நீ அது."**

**இது ஸத்யம்.**

பாபா

உ

ஸ்ரீசத்குரு திருவடி துணை!






ஸத்யம் பேச வேண்டும்!
தர்மம் செய்ய வேண்டும்!
நாவை அடக்க வேண்டும்!
வாக்கை காக்க வேண்டும்!
கருணையோடு இருக்க வேண்டும்!

ஓ.. எம் ஸத்யத்தின் சொரூபங்களே!
அடக்கத்தினால் அமைதி பெறுவீர்களாக!
கரண ஒழுக்கத்தினால் சாந்தி பெறுவீர்களாக!
அபேத திருஷ்டியினால் ஆத்மஞானம் பெறுவீர்களாக!

அவன் அருளால் அவன்தாள் வணங்கி என்றபடி ஸ்ரீபரமாத்மா கிருபையினாலும், ஸ்ரீசத்குரு ஆசியினாலும் ஓர் ஜீவன் பக்குவ ஆன்மாவாகி, காலக்கிரமத்தில் ஊர் உலகிற்கு உதவாத ஓர் பைத்தியமாகி, பரதேசியாகி (பரத்தையே தேசமாக உடையவனாகி) சஞ்சரித்த ஒரு வரலாற்றை

**உங்கள் திருவடியின் கீழ் பணிவுடன்**

**சமர்ப்பிக்கிறோம்.**

**எல்லாம் நீ!**

அன்பின் குழந்தைகளே!

எதையும் கதையாக காணவேண்டாம்!

கருத்தாக உணருங்கள்!

கதை புறத்திற்கு உதவும்.

கருத்து அக உணர்வை உண்டு பண்ணி

உங்களுக்கு அநுபூதியை அவஸ்யம் அளிக்கும்!

நலம் பெற வாழ்த்துகிறோம்!

எல்லாம் நீ!



# வரலாறு

குழந்தைகளே!


முத்துக்குளிக்கும் இடமாகியும், தூத்துக்குடி என்ற பிறப்பிடமாயும், திருமந்திரநகர் என்ற சிறப்பிடமாயும் அமைந்த ஓர் நகரில் ஸ்ரீவடிவேல் சுவாமிகள் என்ற ஓர் மஹான் வாழ்ந்து வந்தார். ஜீவனாம்சமாக ஓர் மளிகைக் (பலசரக்கு) கடை ஸ்ரீசுவாமிகள் வைத்திருந்தார். பால்யத்திலேயே **நான், எனது** என்ற அபிமான அஹங்காரத்தைக் கொன்றவர். சந்தேக குற்றங்களை வென்றவர்!

பொருளாசை இல்லாத தன்மையினால் **எதிலும் போதும்** என்ற **நிறைவு** கொண்டவர்! இதனால் வியாபாரம் செய்ய தகுதி அற்றவரானார். கடையை விட்டுவிட்டு திண்டுக்கல் என்ற ஊருக்குச் சென்று ஒரு மளிகைக் கடையில் சம்பளத்திற்கு வேலை பார்த்தார். ஆறு ஆண்டுகள் கழித்து திரும்ப ஊருக்கு வந்தார். லட்சுமி என்ற பெண்ணுடன் திருமணம் ஆகி ஆன்மீக உறவு கொண்டு வாழ்ந்து வந்தார். பத்து ஆண்டுகள் கழித்து ஓர் பெண் மகவை ஈன்றெடுத்தனர்!

ஆனால் அந்த லட்சுமி அம்மாளுக்கு ஓர் ஆண் மகவை பெறவேணுமென்று ஆசை! தம் ஸ்ரீபதியிடம் அதை தெரிவிக்க அதற்கு ஸ்ரீசுவாமிகள், நம் ஜாதகப்படி ஒரு குழந்தைதான் உண்டு. அதுவும் பெண் குழந்தைதான். நீ ஆண் குழந்தைக்கு ஆசைப்படுவது மூடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகும். ஆகவே ஆசையை விட்டுவிடு என்றார்கள்!

அந்த அன்னையோ ஆசையை விட்டபாடில்லை! தங்களது பக்தியின் சிரத்தையினால் எனக்கு எப்படியும் தங்களைப் போல் ஓர் ஆண் மகவு வேண்டும் என பலமுறை கதறி அழுது கேட்க, ஸ்ரீசுவாமிகள் உள்ளம் இரங்கியதாலும், இறைவனின் கருணையினாலும் ஓர் நிபந்தனையிட்டார்கள். உன் குழந்தை ஊர் உலகத்திற்கு உதவமாட்டான்; ஒரு **உதவாக்கரையாகவும்** இருப்பான்; அற்ப ஆயுள் (36 வயது) உடையவனாகத்தான் இருப்பான்; பின்பு வருந்தாதே என ஸ்ரீசுவாமிகள் கேட்க, அந்த லட்சுமி தேவியாரும் பரிபூரணமாக சம்மதித்தார்களாம்.

ஸ்ரீசுவாமிகள் கடும்விரதம் இருக்கச் சொன்னார்கள் போலும். அந்த அன்னையாகிய லட்சுமி தேவியாரும் ஸ்ரீபதியின் வாக்குப்படி விரதம் ஏற்க, இதற்குள்ளாக அந்த பெண்குழந்தை பிறந்து பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன போலும். விரதத்தின் பலனாக அந்த அன்னை லட்சுமிதேவி கருவுற்றார்கள். அதன்படி அந்த குழந்தை பிறந்ததாம்!



# திருஅவதாரம்

1930-ம் வருஷம் சித்திரை மாதம் 16-ம் தேதி திங்கள் கிழமை பகல் பனிரெண்டு மணிக்கு ஓர் சிசு பிறந்தது! அதற்கு **பாசத்தின் காரணமாக** தம் குலதெய்வத்தின் நாமாவை வைக்க வேண்டுமென அந்த சிசுவின் அன்னை, **கருப்பசாமி** என நாமகரணம் இட்டார்கள் போலும். (அது என்ன குலமோ, என்ன தெய்வமோ தெரியவில்லை)




பஜனை மடம்

அந்த குழந்தைக்கு படிப்பில் கவனம் இல்லை. அந்த குழந்தை எட்டு வயதில் இருந்தே பஜனைகளில் அதிக ஈடுபாட்டுடன் வளர்ந்து வந்தது. நம்மாழ்வார் என்ற தெருவில் ஒரு பஜனை மடம் உண்டு. அங்கு உள்ள அன்பர்கள் அனைவரும் இதன்மேல் நல்ல மதிப்பு மரியாதை வைத்து இருந்தார்கள்.

**“அவன் அருளால் அவன் தாள் வணங்கி”**

என்றபடி அந்த குழந்தை கதாசிரவணம், நாமகீர்த்தனை மற்றும் தேவாரம், திருவாசகம் ஆகியவைகளை அணுஅணுவாக கிரஹித்து வந்தது. ஸ்ரீதியாகராஜபிள்ளை என்பவரிடம் சமயக்குரவர் நால்வரின் தேவார, திருவாசகங்களை கற்றது. ஆனால் அதற்கு இசையைவிட நாமாவளிதான் அதிகமாகப் பிடிக்கும். நாமாவளியில் ஈடுபட்டால் உடல் உலகை மறந்துவிடும். கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். தெய்வீக காட்சியில் திளைத்தாலன்றி பாடலை நிறுத்துவதில்லை. காட்சியில் ஒன்றிவிட்டால் பிரக்ஞை அற்றுவிடும்.



# அனுபவ ஞானம் கரை சேர்க்கும்!

அந்த பைத்தியத்திற்கு அப்போது வயது பத்து. அப்பா இதை ஒரு அகலமான கிணற்றிற்கு கூட்டிச் சென்றார். இன்று இங்கு நீ நீச்சல் பழகு என்றார். நீச்சல் என்றால் இடுப்பளவு அல்லது மார்பு அளவு நீருள்ள குளம், ஏரியில் பழகலாம். இருபது அடி, முப்பது அடி ஆழமுள்ள ஜலத்தில் எப்படி நீச்சல் பழகமுடியும் எனக்கேட்டது.

**"துணிந்தவனுக்கு துக்கம் இல்லை!**
***தன்னை (தூலத்தை) மறந்தவனுக்கு மரணம் இல்லை!"***

இதை கேள்விப்பட்டிருக்கிறாயா? என்றார். இந்த பெரிய வார்த்தைக்கெல்லாம் 'இதற்கு' அர்த்தம் தெரியுமா? என்றது அந்த பைத்தியம்.

அவர் சொன்ன வாசகம்:

நீரில் இறங்கினால்தான் நீந்த கற்றுக்கொள்ள முடியும்!!
நீரில் இறங்கவில்லையானால் நீந்த கற்றுக்கொள்ள முடியாது!!!
தரையில் படுத்துக் கொண்டு கை கால்களை உதைத்தால் நீச்சல் வருமா?

"நீரில் இறங்கி சிரமப்பட்டு கற்றுக் கொள்வதைப்போல் இருப்பது **அனுபவ ஞானம்**".

நீரில் இறங்காமலேயே இப்படி படுக்க வேண்டும்; கைகளை அழுத்தி நீரை பின்தள்ள வேண்டும்; கால்களை அழுத்தி உதறி நீரை பின்தள்ள வேண்டும்; ஜலம் குடிக்கக் கூடாது; மூச்சை இழுத்து பழகவேண்டும்; தலை தாழாமல் உயர்த்தியே இருக்க வேண்டுமென்று **பாடம் கற்றுக்கொடுப்பது** சாஸ்திரஞானம். அது **வாய்ஞானமாகும்**. அவன் கரை சேரமாட்டான்.

இன்று போதிக்கும் குருமார்களும், பயிலும் மாணவர்களும் பார்த்தவுடன் ஞானம் கிடைக்க வேண்டும் அல்லது விளக்கம் கேட்டவுடன் ஞானம் வாய்க்கவேண்டும் என எண்ணுகிறார்கள். உணர்வு பூர்வமான குருமார்களும் இல்லை; **பொறுமையுடன்** உணரக்கூடிய சத்சிஷ்யனும் இல்லை. இது கலிதோஷம். எவரையும் குறை கூறக்கூடாது!

அவசரமான உலகம்!

ஆத்திரமான மனம்!!

**"கற்பனையான அனுபவம்!!!"**

சரி! கதைக்கு வருவோம். ஒரு அகலமான, அதிஆழமான கிணறு; இறங்கிச் செல்ல படிகள். நீந்த முடியாதவர்கள் நின்று குளிக்க ஓர் அகலமான பாறை (அதில் இடுப்பளவு ஆழம்). அப்பா அந்த அகலப்பாறையில் நிற்கிறார். தண்ணீர் இறைக்கும் கமலை குழியில் இது நிற்கிறது. குதிப்பது இருபது அடி ஆழம். அப்பா நிற்கும் இடமோ இது குதிக்கும் இடத்திலிருந்து நாற்பது அடி தூரம். இது மேலே இருந்தே கூறுகிறது.

**இது :** அவ்வளவு தூரத்தில் நிற்கிறீர்களே! கொஞ்சம் அருகில் வாருங்கள். இப்போதுதான் ஆழ அகல ஜலத்தைப் பார்க்கிறது. எப்படி இதை தூக்கிக் கரையேற்றுவீர்கள்? முன்பின் பழக்கம் இல்லாத இடம். "உள்ளூர்காரனுக்கு ஜலத்தை கண்டால் பயம்; வெளியூர்காரனுக்கு தெருவை கண்டால் பயம்" இது வெளியூரும் இல்லை, உள்ளூரும் இல்லை. ஆகவே இரண்டிலும் பயம் உண்டு!! ஆரம்பத்திலேயே இப்படி **பயமுறுத்தி** பாடம் கற்றுக் கொடுத்தால், "அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பார்கள். பேய் அடித்து பிள்ளை பிழைக்கப் போவதில்லை என்பார்கள்! கொஞ்சம் முன்னால் வாருங்கள்! (எனக்கெஞ்சியது)

**அப்பா:** ஓ.. ஓ.. நீ பேசக் கற்று கொண்டாய்! உனக்கு எம் பாடம் வராது போல் தோற்றுகிறதே!! நீ ஸத்தான குழந்தை எனச்சொன்னானே! இப்படி அசடாக, அசத்தாக இருக்கிறாயே. பயம் உனக்கெதற்கு? வீரன் ஒருநாள் சாவான்; கோழை நித்தம்நித்தம் சாவான். நீ இருந்து என்ன சாதிக்கப்போகிறாய்?

**"இருந்தால் வீட்டைக் காக்க; செத்தால் செடியைக் காக்க".**

அங்கிருந்து குதிக்கப் போகிறாயா? இல்லையா? இல்லை என்றால் யாம் மேலே வந்து உன் கைகளையும், கால்களையும் கட்டி இந்த கிணற்றில் போட்டுவிட்டுப் போய்விடுவோம்! மேலே இருந்து பூச்சாண்டி காட்டுகிறாயே! விழுவாயா? மாட்டாயா? (என சற்று இரைந்து கோபக்கனலை லேசாக காட்டினார்)

(அது எண்ணுகிறது) இவர் அப்பனாக தெரியவில்லை. மேலே வந்து இவர் சொன்னபடி செய்தாலும் செய்வார். இவர் வந்து நம்மை கொல்வதற்கு முன் நாமாக குதித்து செத்தாலும் பரவாயில்லை என மனத்துணிவுடன்,

**"சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரமும் முழங்கால் ஜலம்"**

என எண்ணி ஜலத்தில் குதித்தது. எவ்வளவு ஆழம் போனோமோ தெரியவில்லை. எப்படியோ கைகால்களை அழுத்தி உதறி மேலே வந்தது. மேலே பார்த்தால் ஒரே **ஜலப்பிரளயம்**. ஜலம் மூக்கு, வாய் வழியாக தாராளமாக செல்கிறது! மூச்சுத்திணறல், குமட்டல், இருமல் - **ஒரே மரண அவஸ்தை!**

அப்பாவை பார்த்தால் இருபது அடிக்கு அப்பால் இருக்கிறார். அவர் வா திருவடி! வா திருவடி! வா என அழைக்கிறாரே தவிர அருகில் வந்து பாவம் என காப்பாற்றும் நிலையில் இல்லை! அப்போதுதான் மனதில் ஒரு **இருள் கவ்வியது.** அதை இன்று நினைத்தாலும் **ஆச்சர்யமாக** இருக்கிறது! அன்று வயது பத்துதானே - விளையாட்டுப் பருவம். அப்போது வந்த எண்ணம் அதை அப்படியே எழுதுகிறது.

**வாசகர்கள் இதை மன்னிக்கவும்.**

இவன் ஒரு அப்பனா? கல் நெஞ்சக்காரன்! ஈவு இரக்கமே இல்லாத கொலைகாரன்!! பிள்ளை சாகக்கிடக்கிறான்!!! நீந்தி வந்து ஐயோ.. என் பிள்ளை சாகப்போகிறானே என கொஞ்சம்கூட இரக்கமற்றவன்!!! அங்கிருந்து வா வா என அழைத்தால் எப்படி போவது? தரையானால் நடந்து செல்லலாம். ஜலம் சமுத்திரமாக இருக்கிறது. கொஞ்சம்கூட பிள்ளை பாசமே இல்லாத கல்நெஞ்சன்!!! இன்னும் விதவிதமான **மரண கற்பனை** போலும்? எப்படியோ கையை காலை உதறி அவர் அருகில் சென்றுவிட்டது போலும்!

கங்கை ஒரு ஜீவனை மும்முறை வெளியே தூக்கிவிடுவாள். அதிலும் அந்த ஜீவன் தன்னை காப்பாற்றிக் கொள்ளாவிட்டால், உள்ளேயே தம்முள் வைத்துக்கொள்வாள். பின் பிராணன் சென்றதும் பிணமாக மேலே மிதக்க வைப்பாள். இனி எடுத்து அடக்கம் செய்யுங்கள் என ஆணையிட்டது போல் இருக்கும் அந்த பிரேதத்தின் நிலை!

அதேபடி இந்த தூலத்தையும் அடிஆழத்தில் இழுத்துச் செல்வதும், வெளியே வருவதுமாக தூலமும், மனமும் (வினையும், குணமும்) அவள் (கங்கை) **இயக்கத்தினாலும்**, பிராப்த இயக்கத்தினாலும் மூன்று முறை உள்ளே அழுத்தி மூன்றாவது முறை வெளியே வரும்போது **எம் கருணாமூர்த்தி** அப்பா இதன் முடியை பற்றி ஓர் மீனை கரையில் தூக்கிப் போடுவது போல் போட்டு கிணற்றுக்கு மேலே கொண்டு வந்துவிட்டார். பின் குப்புறப்படுக்க வைத்து சிஸ்ருசை செய்தார். உள்ளே போன ஜலம் வெளியேற்றப்பட்டது. அதுவும் மூர்ச்சை தெளிந்தது போலும். நாம் இன்னமும் உயிருடன் இருக்கிறோமா அல்லது மேல் உலகத்திற்கு சென்று விட்டோமா என தன்னைத் தானே கிள்ளி சரிபார்த்துக் கொண்டது அந்த பைத்தியம்.




பார்வை தெளிவான பின் அப்பாவை கண்டது, ஆனந்தம் கொண்டது. உடல் அதிக சோர்வு அடைந்து விட்டது. அப்படியே மண்டியிட்டு அவரை நமஸ்கரித்தது. பிறகு

எழுந்து கிணற்றை எட்டிப்பார்த்து அவரை நோக்கி, ஐயா! இவ்வளவு தூரம் நீந்தி வந்துவிட்டதா? அல்லது தாங்கள் பாதியில் தூக்கி வந்துவிட்டீர்களா? எனக்கேட்க, நீந்தி வந்துவிட்டாய் ஆனால் பெரும்பாடுபட்டாய், பலனை அடைந்தாய். இனி உனக்கு எந்த கிணறும் முழுங்கால் ஜலமே! இந்த துணிவு உனக்கு தாமே வந்துவிட்டது. இனி ஜலத்தில் நீந்த முடியுமா என்ற **சந்தேகமும்** வேண்டாம், ஜலத்தில் இறந்துவிடுவோமா என்ற **பயமும்** வேண்டாம்! இந்த கிணற்றிலேயே முழு பயிற்சி பெற்று அதன் பிறகு சமுத்திரத்திலும் நீந்தலாம் என்றார்கள். அதுவும் தாங்கள் கிருபை எனச்சொல்லி நமஸ்கரித்தது.

**"இதில் நீந்திக் கரை ஏறிவிட்டாய்; இனி அதில் கரை ஏறு. நீ கரை ஏறி மற்றவர்களுக்கும் வழி காட்டுவாயாக"**

என ஆசி கூறினார்கள்!!!

**எல்லாம் நீ!**





# கல்லில் கடவுளை காணும் நிலை!

படிக்கும்போது பள்ளி விடுமுறை நாட்களில் இந்த பைத்தியத்தின் அப்பா பிறந்த ஊருக்கு இது செல்வதுண்டு! சிலசமயம் அப்பாவும், அம்மாவும் உடன் வருவதுண்டு! ஓர்சமயம் அவர்கள் இருவருடனும் இது அந்த கிராமத்திற்கு சென்றது! அப்போது வயது பத்து இருக்கலாம்! விளையாடுவதுதான் அதிகமாக இருக்கும். கோலி விளையாடுவதிலும், பம்பரம் விளையாடுவதிலும்தான் அதிக விருப்பம் போலும்! கோலி விளையாடச் சென்றால் டிராயர் பையில் ஐந்தாறு கோலிகளை எடுத்துச் செல்லும். தன் வயதொத்த பையன்களுக்கு கோலிகளை கொடுத்து விளையாட அழைப்பதுண்டு!

கோலி விளையாட்டில் அதிகம் ஈடுபாடு இருப்பதால் இது கோலி கொண்டு மற்றொரு கோலியை அடிக்கும்போது அந்த கோலி எத்தனை தூரத்தில் இருந்தாலும் **குறிபார்த்து** அடிக்கும். **அக்குறியும் தப்பாது.** அடி சரியாக விழும். சிலசமயம் அருகில் இருக்கும் கோலியை **விரைவாக** அடிக்கும் போது அடிவாங்கும் கோலி **இரண்டாகவும்** உடைவதுண்டு. பல துண்டுகளாக உடைந்து சிதறுவதும் உண்டு. இதனால் இதன் நண்பர்கள் இதனுடன் கோலி ஆட பயம் கொள்வர். இது அவர்களை சமாதானப்படுத்தும். இதுதானே உங்களுக்கு கோலி தருகிறது! உடைந்தால் இதன் கோலிதானே உடையும் என சமாதானப்படுத்தி விளையாட அழைப்பதுண்டு! அவர்களும் அவன் கோலிதானே என சம்மதித்து விளையாடுவார்கள்!

இதைப்போலவே பம்பரமும், கயிறும் பல கொண்டு செல்லும். நண்பர்களிடம் இதன் பம்பரங்களை கொடுத்துத்தான் விளையாடும். இதிலும் அதே கூத்துதான். பம்பரம் குத்துவதில் கீழே குத்துப்படும் பம்பரம் இரண்டாக உடையும் அல்லது பம்பரத்தின் ஓர சில்கள் சிதறும்! இது பம்பரமோ, கோலியோ அவர்களுக்கு கொடுத்து விளையாடுவதனால் அவர்களுக்கு நஷ்டம் இல்லை. ஆகவே இதனுடனும் பிரியமாகவும் இருப்பார்கள். கூப்பிட்டவுடன் வரவும் செய்வார்கள். ஓர்நாள் விளையாட்டில் அதிக அக்கரையுடன் விளையாடும்போது இதன் தந்தை அங்கு வந்தார்கள். ஏண்டா! எந்த நேரமும் விளையாட்டுதானா? ஓய்வே கிடையாதா? என்றார். இந்த வயதில் விளையாடாமல் உங்கள் வயதில் விளையாட முடியுமா? என்றது.

அவர் சொன்னது:

இந்த வயதில் இந்த விளையாட்டை மாற்றி **அந்த** விளையாட்டை நீ விளையாடப் பழகிவிட்டால் நீ வந்த காரியத்தையும் விளையாட்டாக செய்து முடிக்கலாமே! இந்த வீண் வம்பு விளையாட்டை விட்டுவிடு என்றார்.

அவர் சொன்ன அந்த அர்த்தம் அப்போது இதற்கு விளங்கவில்லை போலும். திரும்ப இதுதான் கேட்டது, ஐயா! பாரதியார் என்ன பாடி இருக்கிறார் தெரியுமா?

"ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - நீ
**ஒரு குழந்தையை வையாதே** பாப்பா" என்றார்.

அதாவது விளையாடும் பருவத்தில் நன்றாக விளையாடு. பிறருக்கு தீங்கு செய்யும் விளையாட்டை விளையாடாதே என்றார். இது விளையாடும் இந்த பம்பரம், கோலி இரண்டும் எவருக்கும் தீங்கு செய்யாது. இதுவே இவைகளை வாங்கிக் கொடுத்து விளையாடச் செய்கிறது. அதனால் அவர்களுக்கும் நஷ்டம் இல்லை. மேலும் பாரதியார் சொல்வது:

"பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்லல் ஆகாது பாப்பா
(பிறரை புறணி பேசுவது)
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா".

இந்த விளையாட்டில் பொய், சூது, வஞ்சகம் இல்லை. எந்த தீங்கும் கிடையாது என்றது. எம் தந்தை இதன் முதுகில் தட்டிக் கொடுத்தார். நல்ல அறிவுள்ள படிப்புதாண்டா நீயும் உன் படிப்பும். யாம் உன்னை மெச்சுகிறோம். ஒன்றை மறந்து விட்டாயே. உன் பாரதி **தெய்வம் நமக்குத் துணை** என்றானே. அதை நீ விளக்கவில்லையே. மேலும் அந்த பாரதி

"காக்கை சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரிய நிறம் தோணுதடா நந்தலாலா
கேட்கும் ஒலியிலெல்லாம் நந்தலாலா - நின்றன்
இனிய (குரல்) கீதம் கேட்குதடா நந்தலாலா!"

என்றானே. அதன் பொருள் என்ன என கேட்கும்போதே அவர் நாவு தழுதழுத்தது. கண்களில் கண்ணீர் பனித்து நின்றது. அதுசமயம் அது எம் விளையாட்டுப் பருவம், எம் கண்களில் கண்ணீர் கசியவில்லை. ஆனால் உள்ளம் **"அன்றுதான் நெகிழ்ந்தது"**. அதாவது ஈரத்துணியை கசக்கிப் பிழிவது போல் ஓர் உணர்வு.

ஆமாயா! (ஆமாம் ஐயா!)

**"பார்க்கும் பக்கம் எல்லாம் பரமனை பார்க்கவேண்டும்!**
**கேட்கும் ஒலியிலெல்லாம் அவன் ஒலியை கேட்கவேண்டும்!"**

இதுதானே பொருள் என்றது இந்த பைத்தியம். அதற்கு அவர், பொருள் அதுதான்; பொருள் பொருளாக இருந்தால் அது அருளாக வேண்டாமா?

**பைத்தியம்:** அர்த்தம் புரியவில்லையே?

**அப்பா:** கல்லும் கனிய வேண்டும்!

**பைத்தியம்:** கல் கனியாகுமா! கல் எப்படி கனியாகும்? காய்தானே மூதிர்ந்தால் கனியாகும்! இல்லாததை, நடக்க முடியாத ஒன்றை நடப்பதாக சொல்கிறீர்களே!

**அப்பா:** உலகம் நடத்தாததை உள்ளம் நடத்த வேண்டும். அதாவது உலகம் உயிர் இல்லாதது. உள்ளம் உயிர் துடிப்போடு கூடியது. **இந்த உயிர்துடிப்பை** இந்த உயிரற்ற உலகத்தில் செலுத்தினால் அதற்கும் உயிர் வந்துவிடும். அதற்கும் உயிர் வந்துவிட்டால் உயிர் இல்லாத பொருளே இல்லை என்றாகிவிடும் அல்லவா? அதைத்தான் கல்லும் கனியாகும் எனச்சொன்னோம். இப்போது புரிகிறதா?

**பைத்தியம்:** புரியுது! உயிர் உள்ள ஜீவர்களை உயிரினங்கள் எனச்சொல்லலாம்! உயிரற்ற அனைத்தும் ஜடம்தானே! அதற்கு எப்படி உயிர் கொடுக்க முடியும்? எந்நிலையிலும் ஜடம் ஜடம்தானே!

**அப்பா:** ஜடத்தையும் பகவானாகப் பார்க்கலாம்! அப்படி பார்த்துப்பார்த்து அதையும் பகவானாக ஆக்கலாமே!

**பைத்தியம்:** அந்த பகவான் வைகுண்டம், கைலாயம் அங்குதானே இருப்பதாக சொன்னீர்கள். இங்கும் கோவில்களில் அந்த மூர்த்தித்துவம் இருப்பதாகவும் சொன்னீர்கள். உயிரற்ற ஜடத்தை உயிர் உண்டாக்குவது அவர் வேலைதானே! அதை நாம் செய்ய முடியுமா?

**அப்பா:** அவஸ்யம் முடியும். அவர் அங்கும் இங்கும் எங்கும் இருக்கிறாரே! எங்கும் காணலாமே!

**பைத்தியம்:** (ஓர் கூழாங்கல் அங்கு இதன் கண்களுக்குப்பட்டது. உடனே அதை கைகளில் எடுத்துக்கொண்டது) இதை **கனியவைக்க** முடியுமா? அதாவது **கடவுள் இருப்பை** காட்ட முடியுமா?

**அப்பா:** கல்லே கடவுள்; ஆனால் கடவுள் கல் ஆகமாட்டார். அதாவது கல்போன்று கருணை இல்லாதவராக மாட்டார். கருணையென்றால் தெய்வம். தெய்வம் என்றால் கருணை. அதாவது உலகப்பொருள்கள் எவைகளிலும் கடவுளைக் காணலாம். ஆனால் கடவுள் அப்பொருள்கள் ஆகாது.

இதன் உட்பொருள்:

**அப்பொருள்களின் குணதோஷம் கடவுளிடம் கிடையாது!**

நீ காணும் எப்பொருளிலும் **ஓர் தன்மை** அதாவது **ஓர் குணம்** அவஸ்யம் தோற்றும். ஆனால் கடவுளிடம் எந்த குணமும் கிடையாது! **பால் போன்றது கடவுள்! ஜலம் போன்றது ஜகம்!** பாலில் எவ்வளவு ஜலம் விட்டாலும் அது இந்த ஜலத்தை தனியே காட்டாது. **தன் வெண்மை மாறுவதில்லை**.

அதிக ஜலத்தில் குறைந்த பாலை கலந்தால் பால் தோற்றாது, ஜலம்தான் தோற்றும். **பால் அழிவதில்லை; மறைந்திருக்கும்**. ஜகம் (ஜலம்) என்ற குணம் மேலோங்குவதால் அங்கு பால் (பகவான்) தோற்றுவதில்லை. அதேபோல் உன்னுள் கடவுளை உணர வேண்டுமானால் வாஸனை (குணம்) ஏறி இருக்கும் உன் கல் போன்ற உள்ளத்தை **கடவுள்** என கனிய வைக்க வேண்டும்.

**அதாவது கடவுள் என்ற நாம உருவத்தைக்கொண்டு உள்ளம் என்ற குண சொரூபத்தை உருகி கரையப்பண்ண வேண்டும். கடவுள் நாமாவை சொல்லும்போது பக்தீ என்ற அக்னி பெருகும். ஜகம் என்ற நாம ரூபத்தை இல்லை எனத் தள்ளும்போது அதன் குணம் உருகி கருகி தீஞ்சு போகும். அங்கு மிஞ்சுவது கடவுளே; அங்கு அன்னியமில்லை!**

**வைத்தியம்:** இந்த விளையாட்டு நூதனமாகவும், அதிபுதுமையாகவும் இதுநாள் பரியந்தம் விளையாடாததாகவும் தோற்றுகிறதே! இந்த கல்லை வைத்தே விளையாடலாமா?

**அப்பா:** ஓ.. விளையாடலாமே! உலக விளையாட்டை விட்டால்தான் இந்த விளையாட்டை விளையாட முடியும்.

**“இரண்டு இருந்தால் ஒன்றாக முடியாது!**
**ஒன்றாகி விட்டால் இரண்டு வராது”.**

**வைத்தியம்:** இப்போது இது என்ன செய்யவேண்டும்?

**அப்பா:** உன் விபரீத விளையாட்டை விடவேண்டும்!

**வைத்தியம்:** இவ்வளவுதானே! விட்டால் போச்சு! (எனச்சொல்லிய வண்ணம் அங்கு நின்றிருந்த பையன்களிடம் கோலி, பம்பரம் இவைகளை கொடுக்கச் சொல்ல அப்பாவே பிரித்துக் கொடுத்துவிட்டார். அவரே அன்பாக அழைத்துச் சென்றார். புதுவிளையாட்டுக்காக புதிய கூழாங்கல்லுடன் வீடு சென்றோம்.)

அந்த வீட்டின் வெளியே ஒரு ஒட்டுத் திண்ணை. திண்ணையை ஓர் மறைப்புத் தட்டி மறைத்திருந்தது. அந்த திண்ணைச்சுவரில் ஓர் **மாடக்குழி** அதாவது அது அகல்விளக்கு ஏற்றி வைக்கும் சற்று அகலமான பொந்து. அந்த பொந்தில் அந்த கூழாங்கல்லை வைக்கச் சொன்னார். இது வைத்தது. ஓர் மண்சட்டி நிறைய அடுப்பு சாம்பல் எடுத்துக் கொடுத்து இதை வைத்துக் கொண்டு அந்த கல்லை நோக்கி அமர் என்றார். அப்படியே அமர்ந்தது. அடுப்புச் சாம்பலை (விபூதியை) இடது கையால் தாங்கிக் கொண்டு வலது கையில் **சின்முத்திரை** வடிவில் (பெருவிரல் நுனியும், ஆள்காட்டி விரல் நுனியும் இணைந்து) பஸ்பத்தை எடுத்து ஒவ்வொரு **சிட்டிகையாக** அந்த கல்லாகிய

1. **முருகன் மீது** போட்டுக் கொண்டேயிரு! (அந்த கல் சற்று பெரியதே)
2. அந்த கல் முருகன் மறையும் வரை பஸ்பம் விழுந்து கொண்டே இருக்கவேண்டும்!
3. இடையில் எக்காரணம் கொண்டும் எழலாகாது!
4. அக்கம்பக்கம் எது நடந்தாலும், எந்த சப்தம் கேட்டாலும் உன் பார்வையும், கவனமும் வெளியே செல்லக்கூடாது!
5. விபரீதமான, உன்னை கலங்க வைப்பதான காட்சியோ, ஒலியோ அவசியம் உன்னை திசை திருப்பும். **கவனம் மாறாமல் கவனமாயிரு**.
6. ஒவ்வொரு சிட்டிகை போடும்போதும் உன் உள்ளமும், நாவும் முருகா! முருகா! முருகா! என்றே ஸ்மரிக்க வேண்டும்!
7. ஸ்மரணை தப்பி வேறு **என்னமோ, ஒலியோ** உன்னை திசை திருப்பும். **கலக்கம், பயம் வேண்டாம்.** (உன் ஐயா உன் உடன் இருப்பார்!) **இது ரகஸியம்.**
8. முடிவில் ஓர் காட்சி உண்டு! கண்ணீர் கொட்டும்!! ஸ்மரணை கெடும்!!!

குழந்தாய்!

நீ என்ன சொல்கிறாய்? இந்த விளையாட்டில் உனக்கு பூரண சம்மதம்தானே? இந்த விளையாட்டில் நீ வெற்றி பெற்றால் வேறு விளையாட்டு உன்னை அண்டாது. வெறும் கனவாய் முடியும், என்ன? என இதன் முதுகில் தட்டிக்கொண்டு கேட்டார்.

அந்த பைத்தியம் சரேலென சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தபடி திருவடியைப் பற்றி, விளையாட கூப்பிட்டதும் நீயே! விளையாடுவதும் நீயே!! விளையாட்டும் உனதே!!! அதன் பலனும் உம்முடையதே!!! ஆழ நீள அகலம் காணாத **கிணற்றில்** ஒரு க்ஷணத்தில் நீந்த கற்றுக் கொடுத்த **ஐயா!** உமக்கு எல்லாம் விளையாட்டே. இது ஓர் பகடைக்காய் தானே! தாங்கள் போட்ட நாடகத்தில் இது **மயங்காமல்** விளையாடினால் போதும்!

**"அவன் அருளால் அவன் தாள் வணங்கி"** என்றபடி
**ஐயா ஆட்டி வைத்தார்; இது இயங்கியது!**

ஓர் வஸ்திரத்தை விரித்து அதில் அமரச்செய்தார். இது அதில் அமர்ந்தது. விபூதி பாத்திரத்தை கைகளில் தந்தார். இது அதை வாங்கிக் கொண்டது. **முருகா!** என்ற ஸ்மரணையைக் கொடுத்தார். அதை ஏற்றுக் கொண்டது. அந்த ஸ்மரணையினால் கண்கள் தாமே திரையிட்டுக் கொண்டது!!

கை **யந்திரமாக** வேலை செய்தது!
வாய் **உணர்வுடன்** அசைந்தது!!
மனம் **ஸ்மரணையில்** லயித்துவிட்டது!!!

சுமார் ஆறு மணி நேரம் உடல் அசையவில்லை. கால்கள் மாற்றவில்லை. சிலநேரத்தில் இருவருடைய அசட்டு சிரிப்பொலி; அடுத்து இருவருடைய கோரமான ஆணவச் சிரிப்பொலி; அடுத்து ஒரு பெண்ணின் வசை மாறி (சகிக்க முடியாத வார்த்தைகள்) ஒலிகள்! அடுத்து அப்பெண்ணின் ஒப்பாரி அழுகை ஓசை! அவைகள் முடிவுற்றன. அடுத்து பூஜை மணி ஓசை மிகமெல்லிய நிலையில் கேட்டது. அதை அடுத்து சில மந்திர (வேத) கோஷம் ஆனால் காட்சி எதுவும் இல்லை. இது உண்மை!



ஓர் ஒளிவட்டம். அது இன்னதென விவரிக்க முடியாதது! அந்த ஒளியின் பிரகாசத்தினால் ஆறு மணிநேரம் மூடியிருந்த கண்கள் **கூர்ந்த திருஷ்டியால்** நோக்கியது. அதை எழுத முடியாது.

**அதை கண்டாரும் கிடையாது; விண்டாரும் கண்டதில்லை!**
**அது அண்டரண்ட கோடியெல்லாம் ஒன்றாய் சமைந்திருக்கும் அல்லவோ!**
**எளியேன் சொல்லவோ? நேரமாகுதல்லவோ!**

இதுவே முடிவு! வாக்கியார்த்தத்திற்காக அதாவது இதை படிக்கும் உங்களுக்காக சொல்வது:

**வண்ணமயில் மீது என்ன வடிவாக சுந்தர**
**ஜோதி ஸ்வரூப குழந்தை முருகன் வந்தான்.**

விபூதி பாத்திரமும் காலி, மாடக்குழியில் இருந்த கூழாங்கல்லும் காலி (இல்லை). **“எங்கும் பஸ்பமயம்”.** பஸ்பம் என்றாலே அனைத்தும் எரிந்து சாம்பலாகி **அனைத்தும் இல்லை; இல்லை; இல்லையென ஆகிவிட்டால் அங்கு இருப்பது ஒன்றுதானே!!! இதுவே உண்மை!**

ஒருநாள் முழுவதும் எதுவும் பேசமுடியவில்லை. அன்னபானமோ ஏற்க முடியவில்லை. வேறு காட்சிகளும் தோற்றவில்லை. இரு தினங்கள் கழிந்தன. இதன் ஐயாவிடம் ஓர் விளக்கம் கேட்டது.

**வைத்தியம்:** இரண்டு தினங்களுக்கு முன் நடந்த தெய்வீக காட்சி ஏன் திரும்பவும் கிடைக்கவில்லை? அதே முயற்சியை தினமும் அவ்வளவு கடுமையாக செய்தால்தான் அது கிட்டுமா? ஆனால் அன்று கொடுத்த மனம் இன்று காணோமே! அன்று இருந்த மனம் வேறு இன்று இருக்கும் மனம் வேறா? இல்லையே! எவருக்கும் மனம் ஒன்றுதானே. நிலைக்குத் தக்கபடி மாறி மனம் பல வடிவம் பெறுவதாக தோற்றுகிறது. ஏன் இந்த ஜீவர்களும் இப்படி கடினபயிற்சி செய்தால் அது காலக்கிரமத்தில் சாசுவதமாக ஆகிவிடாதா? ஏன் இதை செய்ய எவரும் முன்வருவதில்லை? கூர்ந்து நோக்கினால் இது கடவுளின் மறைப்பும் இல்லையே! அப்படியானால் இந்த மனிதனின் மறைப்புதான் என்ன? எதனால் இந்த மனிதன் இப்படி மூடுண்டு கிடக்கிறான்? (என அந்த நேரம் பற்பல கேள்விகளை கேட்டது. அதற்கு எம் தந்தை சிரித்துக்கொண்டே சொன்னார்)

**அப்பா:** குழந்தாய்! இப்போதுதான் யாம் உனக்கு ஓர் (பகவான் என்ற) விதையை ஊன்றி இருக்கிறோம். அது **உன் வாலிபத்திற்குப்பின்** பலன் தரும்! அதற்கு இப்போதிருந்தே நீ பாடுபடவேண்டும்! இந்த கலிதோஷம் மிகமிக கடுமையானது! **ஜீவ வாசனையை** பற்றி ஓர் விளக்கம் தருகிறோம், அதை உணர்.

"இதை மதில்மேல் பூனை" என சொல்வதுண்டு. ஒருவனுக்கு பூனை வளர்க்க வேண்டுமென்று கொள்ளை ஆசை வந்ததாம். எங்கிருந்தோ ஓர் பூனை அவன் வீட்டிற்கு தெய்வாதீனமாக வந்து சேர்ந்தது. உடனே அதற்கு பாலும், பால் சோறும் ஊட்டி வளர்த்து வந்தான். பல வருஷங்கள் ஆகியும் இது அவனை விட்டுப் பிரியாமல் இருந்தது. பூனைக்கு பிரியமானது பால்தானே. அது இந்த பூனைக்கு எந்த வேளையும் கிடைப்பதால் இவனை விட்டு பல வருஷங்களாக பிரியாமல் இருந்தது.

அடுத்த வீட்டிலிருந்த ஒருவன் இந்த பூனை பாலும், சோறும் சாப்பிட்டு கொழுகொழு என்றிருப்பதை பலமுறை கண்டான். அவன் நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்தது. அதாவது இந்த பூனையை ஒருநாள் முடித்து நாம் இதை சாப்பிட்டுவிட வேணுமென்று ஆசை கொண்டான்.

ஓர்சமயம் இவர்களுக்கு பொதுவான மதிலில் (சுவரில்) இந்த பூனை நடந்து சென்று கொண்டிருந்தது. இந்த பூனையை வளர்ப்பவன் ஓர் கிண்ணத்தில் பாலை வைத்துக் கொண்டு அதை கீழே இறங்கி வரும்படி அழைத்தான். அதேநேரம் அடுத்த வீட்டுக்காரன்இந்த பூனையை கண்டான். அவன் இதைப் பிடிக்க ஓர் தந்திரம் செய்தான். கருவாடு ஒன்றை சுட்டு ஓர் தட்டில் வைத்துக்கொண்டு அந்த பூனைக்கு நேராக நீட்டினான்.

பலகாலம் வளர்ப்பவன் **வளமான பாலை** காட்டினான்!
இன்று வந்தவன் **காய்ந்த கருவாடை** நீட்டினான்!!

பூனை எங்கு பாயும்? என இதைக் கேட்டார் எம் ஐயா. பூனை காய்ந்த கருவாடைத்தான் நோக்கும் எனச் சொல்லியது இந்த பைத்தியம்!

சரியாகச் சொன்னாய் குழந்தாய். இது உனக்கு எப்படி அனுபவம்? என்றார் எம் தந்தை! இதற்கு அனுபவம் தேவை இல்லையே. பூனை என்றாலே மாமிச பட்சினி; அது சாகச பட்சினி அல்லவே! ஆகவே அவ்வாறு சொன்னது என்றது!

அது உண்மையே. இதன் விளக்கத்தை சற்று கவனி.

**பால் பகவத் சொரூபம்.**
**கருவாடு ஜகத் சொரூபம்.**

பாலுக்கு ஒரே நிறம், ஒரே குணம், ஒரே சுவை, தனித்தன்மை - இறைவன் பிரசாதம்.

கருவாடு என்றாலே பல வடிவம், பல நிறம், பல குணம், பல சுவை அதிலும் மிகக்கொடிய துர்ஸ்கந்தம் (துர்வாடை).

பாலாகிய பகவானையும் காட்டி, கருவாடாகிய பெண்ணையும் காட்டி உனக்கு எது **தேவை** என்று இன்றைய ஜீவனைக் கேட்டால் கருவாடாகிய பெண் **சேவை** ஒன்றே போதும், பாலாகிய பகவானை அப்புறம் பார்க்கலாம் என்பான். பாலைவிட கருவாடுதான் முக்கியமா? என கேட்டால் இதன் **மணம், குணம், சுவை** பாலிடம் இல்லையே என்பான். நீ அதனிடம் போனால் அந்த துர்மணமும், அசுர குணவிருத்தியும், இனிய காம சுகமும் உன்னை விடாதே என்றால், பாலாகிய பகவானிடம் சென்றால் மயமாகி கரைந்து விடுவேனே! அதில் **எனக்கு என்ன லாபம்?** கருவாட்டின் (பெண்ணாகிய ஜகத்தின்) மணம் கோடானுகோடி, குணம் கோடானுகோடி, சுவை கோடானுகோடி, பல கோடி ஜன்ம ஜன்மமாக அனுபவித்து அனுபவித்து **நான்** இன்ப (துன்ப) சொரூபமாகவே இருப்பேனே! இந்த பாலாகிய பகவானிடம் என்ன இருக்கிறது? நிர்குணன், நிர்விஹாரி, நிமலன், நிசேதன், அசங்கன் **ச்சீ... ச்சீ... தூ... தூ...** ஒன்றுமே இல்லாததற்கு ஏன் இந்த பிரயத்தனம் என்று இன்றைய ஜீவன் சென்றுவிடுகிறான் என்றார்!


## உள்ளத்தில் உறைந்த "ராம்" மந்திரம்!

அந்த பைத்தியத்திற்கு உலக பள்ளிப் பாடபடிப்பில் அதிக ஆர்வம் இல்லை. ஆனால் ஒவ்வொரு பாடத்திலும் பாஸ் மார்க் (100க்கு 36 முதல் 40 வரை) கண்டிப்பாக எடுத்துவிடும். ஆகவே எட்டாவது வகுப்பு வரை ஃபெயில் ஆகாமல் பாஸ் செய்து வந்தது!

தம் பனிரெண்டு வயதிலிருந்து பதினைந்து வயது வரை தூங்க முடியாமல் (தூக்கம் வரவில்லை) பாடலிலும், பக்திப் பெருக்கிலும் காலம் கடந்தது. இதன் நிலையை கண்ட தந்தையாகிய ஸ்ரீசுவாமிகள் அதற்கு ஸ்ரீராமநாமத்தை (ராம்) உட்செலுத்தி வைத்தார்கள். அந்த மந்திரமாவது அதன் சுவாசத்துடன் (பிராணனுடன்) கலந்துவிட்டது. அந்த பைத்தியத்துடனே கலந்து நிறைந்துவிட்டது. இந்த பைத்தியம் கர்மாவின் நிமித்தம் சிலசமயம் அதை மறந்தாலும் அது அதனை மறவாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.

**இது சத்தியம்!**

**எல்லாம் நீ!**





# ஆரம்ப பாடம்!

அப்போது அதன் வயது பதினாறு ஆகும். ஸ்ரீசுவாமிகளின் ஆரம்ப பாடம் இதுதான்.

குழந்தாய்!

இதை கவனி:

1. **"நான், எனது"** என்ற வாசகத்தை உன் வாக்கில் வரவிடாமல் பாதுகாத்துக்கொள்! அதற்கு பதிலாக **"இது, அது"** என உன்னை ஒரு அஃறிணை பொருளாக வகுத்துக்கொள்!
2. மண், பொன், பெண் (ஆடவர், பெண்டிர் விஷய ஆசை) ஆகிய இந்த மூன்றும் செயலற்ற தன்மையில் இருக்கவேண்டும்!
3. **"எல்லாம் நீ"** என்பதே தாரக மந்திரமாக அமையவேண்டும்!
4. எவரிடமும் எதிர் வார்த்தையும், எரிந்த வார்த்தையும் பேசாதே!
5. வீதியில் செல்லும்போது உன் பார்வை மூன்று அடிக்குள்ளாகவே இருக்கவேண்டும்! அக்கம்பக்கம் பார்க்கக்கூடாது!
6. எந்த அசைவிலும் இறைநாமாவையே உச்சரிக்க வேண்டும்!
7. எந்த ஜீவர்களும் தம் நெற்றியில் விபூதியோ, திரிபுண்டரமோ அணிந்து வந்தால் இடம், காலம் அறியாமல் அவர்கள் திருவடியில் வீழ்ந்து நமஸ்காரம் செய்தல் வேண்டும்!
8. எதைக் கற்றாலும் கற்றுக்கொண்டோம் என்ற அஹம் வரவேகூடாது! ("தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய்")
9. புறக்காட்சியில் மயங்காதே! ஆத்மதரிசனத்திலேயே மனம் அழுந்திக் கரையவேண்டும்!
10. ஏணியாக இருந்து பரண் ஏற்றவேண்டுமே தவிர நீ பரண் ஏறக்கூடாது. இந்நிலையில் பொறுமையும், சகிப்புத்தன்மையும், விட்டுக்கொடுத்தலும், எதையும் ஏற்றுக்கொள்ளுதலும், பிறர் குற்றங்களை **விசாரிக்காமல்** மறத்தலும், மன்னித்தலும் ஆக ஒரு ஏணிபோல் ஸ்ரீஅன்பர்களின் ஸ்ரீதிருவடிகளை தாங்கும் ஓர் பீடமாக அமையவேண்டும்!

ஆக இந்த பத்து உபதேச கருத்துக்களையும் கிரமமாக நீ ஏற்று, பணிந்து உன்னை ஆக்கிக்கொண்டால் **திருவடி** என்ற நாமா உனக்கு பொருந்தும் என ஆசி கூறினார்கள்!

முக்கியமாக நீ ஓடமாகவோ, ஏணியாகவோதான் இருக்கவேண்டும்.

**ஓடம் கரை ஏறாது, ஏணி பரண் ஏறாது.**

இதுவே உன் நிலையாக இருக்கவேண்டும். உன் மீது தம் பாதம் ஊன்றிச்செல்லும் அடியார்கள் ஆனந்தம் அடைவதைக் கண்டுதான் நீ ஆனந்தம் அடையவேண்டும். உனக்கென தனி ஆனந்தம் இல்லவே இல்லை.

**எல்லாம் நீ!**





# அபேத திருஷ்டியும் பணிவும்!

## 1. மூன்று அடியில் திருவடி!

ஓர்சமயம் திருமந்திர நகரில் ஒரு கமிஷன் மண்டியில் சம்பளத்திற்காக வேலை பார்த்துக் கொண்டிருந்தது இந்த பைத்தியம்.

ஸ்ரீசுவாமிகளின் திருவாக்கு:

வீதியில் நடந்து செல்லும்போது உன் பார்வை கீழ்நோக்கி மூன்று அடி தூரத்திலேயே இருக்கவேண்டும். அக்கம்பக்கமும், மேல்நோக்கியும் பார்க்கக்கூடாது. அப்போதுதான் நடந்து செல்லும் அனைவரின் **திருவடியையும் நீ தரிசிக்கலாம்.** அங்கு பேதம் தோற்றாது!

அனைத்தும் இறைவன் திருவடியாக உன் பார்வையை மாற்று. அங்கு ஆண் பெண் பேதமோ, பெரியவன் சிறியவன், கற்றவன் கல்லாதவன், பிராமணன் சூத்திரன் என்ற இனபேதம் தோற்றாது என அபேத திருஷ்டிக்கு ஒரு பாடம் தந்தார்கள்!

அந்த கடை முதலாளி ஒரு தரகரை (புரோக்கரை) பார்த்து கூட்டி வர அனுப்புவார். இந்த பைத்தியம் தலையை குனிந்தபடியே செல்வதால் நாம் பார்க்க வேண்டிய நபரை எப்படி காணமுடியும்? ஆனால் இங்குதான் இறையருள் குருஅருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும். எப்படி என்றால் நாம் எந்த நபரை தேடிப் போகின்றோமோ அதே நபர் நம்முன் அவஸ்யம் வருவார். வருவதோடில்லாமல் நம் தோளைத் தட்டி கூப்பிடவும் செய்வார். எங்கு செல்கிறாய்? எனக் கேட்பார். ஐயா! உங்களைத்தான் தேடி வந்தோம். முதலாளி உங்களை அழைத்துவர அனுப்பினார் என்போம். அவர் ஏளனமாக சிரித்துக் கொண்டு, அடே! என்னை பார்க்கப் போகிறவன் செம்மறி ஆடுபோல் தலையை குனிந்து கொண்டே சென்றால் என்னை எப்படி நீ காணமுடியும்? நான் உன்னை தட்டி கூப்பிடாவிட்டால் நேராக கிழக்கே சென்று சமுத்திரத்தில் விழுந்துவிடுவாய்.

உனக்கும் உன் முதலாளி தண்டச்சம்பளம் கொடுக்கிறான் பார், அவனை சொல்ல வேண்டும். உன்னை சொல்லி குற்றம் இல்லை, நீ வா! என கடும் வார்த்தைகளை கொட்டியதோடு அந்த பைத்தியத்தையும் ஒரு ஆட்டுக்குட்டியை இழுத்துச் செல்வதுபோல் அதன் முதலாளியிடம் இட்டுச் சென்று இப்படிப்பட்ட **தண்டங்களை** எல்லாம் (தண்டம் என்றால் கம்பு அல்லது கழி எனப் பெயர்

பெறும். தண்டத்தை நேராக வைத்து விட்டுவிட்டால் எங்காவது ஒரு பக்கம் “தடால்” என விழுந்துவிடும். நீட்டினேன், நிமிர்ந்தேன், விழுந்தேன் என தண்டம் சமர்ப்பித்தேன் என்ற நிலை பெறும். அந்த பாக்கியத்தை அன்றே கொடுத்துவிட்டான் என பெருமையுடன் ஏற்றுக்கொண்டது அந்த பைத்தியம்) ஏன் கடையில் வைத்து இருக்கிறாய்? இவன் மாடு மேய்க்கக்கூட லாயக்கில்லை என இன்னமும் ஏதேதோ லட்சார்ச்சனை செய்வார்.

அந்த கடை முதலாளியும் வீட்டில் என் மனைவியும், பிள்ளைகளும் என் பிராணனை வாங்குகிறார்கள். இங்கு வந்தால் இவன் ஊமையாக இருந்தே என் பிராணனை வாங்குகிறான். “பெருச்சாளி (எலி) வீட்டைக் கெடுக்கும், ஊமை ஊரைக் கெடுக்கும்” என்பார்கள். அது இவனுக்கு பொருந்தும். இவன் அம்மா இவனை பெற்றதற்கு பதிலாக ஒரு ஆட்டுக்குழவியையாவது, அம்மிக்குழவியையாவது பெற்று இருக்கலாம். அதாவது மாவு ஆட்டவும், மசாலா அரைக்கவும் உதவும்.

இந்த உதவாக்கரையை (யாம் என்றும் உடலுக்கும், உலகுக்கும் உதவாக்கரைதான்) ஏன்தான் பெற்றுப் போட்டாளோ? இவனுக்கு மாதாமாதம் சம்பளம் (ரூபாய் 12/-) அழவேண்டியிருக்கு என இன்னமும் அனேகவித லட்சார்ச்சனை செய்வார். இவை இரண்டையும் அந்த பைத்தியம் கேட்டுக் கொண்டே நிற்கும். பதிலுக்கு சமாதான வார்த்தை எதுவும் பேசுவதில்லை (பேசத் தெரியாது). ஆனால் கண்களில் கண்ணீர் அருவி கொட்டும். அது ஆனந்தக் கண்ணீர் ஆகும்.

**“எவர் என்ன சொன்னாலுமே எதிர்த்துப் பேசாமலே**
**மௌனமாயிருப்பது எப்போ? எப்போ??”**

என ஒரு அன்பர் பாடிவிட்டு போய்விட்டார். ஆனால் யாம் அதை அனுபவித்தோம். அந்நிலையில் மனதை சாந்தி செய்வோம். எப்படி என்றால், ஹே.. ப்ரபோ! புரோக்கராக வந்து நலம் பெற திறம்பட பேசுகிறாய்! முதலாளியாக இருந்தும் உண்மையை சிரத்தையோடு உபதேசிக்கிறாய்! ஒரு பைத்தியமாக இருந்து கொண்டும் அனைத்தையும் **சம்மதித்த நிலையில்** அமைதியாக ஏற்றுக்கொள்கிறாய்! என்னே உன் திருக்கூத்து?

**“இந்த மனதை சாகடிப்பதில் நீ எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறாய்”.**

ஆகா! இந்த பாக்கியம் எவருக்கு கிட்டும்? நீ மகா திறமைசாலி, உன் நாடகத்தை நடத்தி முடி. இதுபோதும் என முழுநிறைவோடு ஏற்றுக்கொள்ளும்.

அன்புக் குழந்தைகளே!

இப்படி ஈனமான வார்த்தைகளையும், கடும்சொல், சுடும்சொல் இவைகளையும் கேட்டு அதிர்ந்து விடாதீர்! அயர்ந்து விடாதீர்! சோர்வடையாதீர்! துக்கம், கலக்கம், பயம் வேண்டாம்.

**“அனைத்தும் நீயே என சரண் புகுவீர்,**
**இப்படி சரணாகதியில்தான் உங்கள் மனம் சாகும்”.**

**"சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்**
**மனம் இறக்க கல்லார்க்கு வாயேன் பராபரமே"**

என்றார்கள் சான்றோர்கள்.

**மானம், சூடு, சுரணை, வெட்கம் (லட்ஜை) அனைத்தையும் விடுங்கள்!**

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. ஸாது கொடுத்த பிரசாதம்!

திருமந்திர நகரில் கடைவீதிகளில் செல்லும் போதெல்லாம் ஒரு ஸாதுவை தரிசிக்கும் இந்த பைத்தியம். அந்த ஸாதுவுக்கு ஏதாவது உணவு வாங்கிக் கொடுக்க வேணுமென்ற எண்ணம் அவரை காணும் போதெல்லாம் உண்டாகும்.

**"ஏனோ அப்படி ஒரு எண்ணம்?"**

பல மாதங்களாக பலமுறை கேட்டோம், பலன் அளிக்கவில்லை. சுட்டெரித்துவிடும் கடும்பார்வைதான் கிடைக்கும். மௌனமாக ஒதுங்கிக் கொள்ளும் இந்த பைத்தியம்!

**பொது கழிப்பிடம்** சமீபம் ஒரு வாருகால் (கான்) இருந்தது. அந்த இடம் சமீபம் வரும்போதே ஜனங்கள் மூக்கை ஒரு துணியை வைத்தோ அல்லது கைகளாலோ பொத்திக்கொண்டு செல்வர். அவ்வளவு சுகந்தம் (நாற்றம்) போலும்?? அந்த கான் அருகில் அமர்ந்த வண்ணம் கல்லையும், மண்ணையும் அள்ளி அந்த கானில் போடுவது, அந்த புனிதநீரை அள்ளி தெளிப்பதுவுமாக விளையாடிக் கொண்டிருந்தார் அந்த ஸாதுஜீ!

அந்த நேரம் அந்த பைத்தியம் அவரை கண்டது. சற்று தூர இருந்து கவனித்த பைத்தியம், ஏதோ ஓர் செயலால் உந்தப்பட்டு அவர் அருகில் சென்றது. காலை மணி ஒன்பது இருக்கும். சுவாமி! பசிக்கு ஏதாவது வாங்கித் தரலாமா? இட்லி, தோசை, வடை என நீங்கள் எதைக் கேட்டாலும் வாங்கித் தருகிறோம். தயவுசெய்து கருணைகூர்ந்து செவிசாய்க்கவேண்டும் என கெஞ்சிய நிலையில் அதிக பரிவோடு கேட்டது அந்த பைத்தியம். அவர் ஓர் முறை முறைத்துப்பார்த்தார். அது பயந்து சற்று விலகி ஒதுங்கி நின்றது. உடனே அவர் பார்வையில் கருணை பிறந்தது! புன்முறுவலுடன் அருகே வரும்படி சமிக்ஞை செய்தார்! அதுவும் தைரியமாக அவர் அருகில் சென்றது. இப்படி உட்கார் எனச் சொன்னார்! அதுவும் அதிபவ்யமாக அவர் சமீபம் குத்துக்கால் வைத்து அமர்ந்தது!

**அவர்:** உட்கார்வதுதான் உட்கார்ந்தாய், **அதிலும் பேதமா?** இங்கு **சமமாக உட்கார முடியாதா?** (எனச்சொல்லிய வண்ணம் அதன் மார்பை பிடித்து தள்ளினார். அது நிலைதடுமாறி கீழே சாய்ந்தது. பிறகு சமாளித்துக்கொண்டு சம்மணம் போட்டு சமமாக அமர்ந்தது அந்த பைத்தியம்) ஆமாம், நீயும் பலகாலமாக எம் பசிக்கு ஏதாவது தரவேண்டுமென்று ஆசைப்படுகிறாய். நீ என்ன வாங்கிக் கொடுப்பாய்?

**அது:** தாங்கள் கேட்கும் பலகாரம், பட்சணம், பண்டபதார்த்தம் எதுவானாலும் வாங்கித் தருகிறது, ஆணையிட்டால் போதும்!

**அவர்:** பத அர்த்தத்தைத்தான் பதார்த்தம் என ஆக்கிவிட்டீர்களே!! கண்டு கண்டு, உணர்ந்து உணர்ந்து அனுபவிக்கும் உண்மையின் **பத அர்த்தத்தைத்தான்** பதார்த்தமாக மாற்றிமாற்றி, உண்டு உண்டு கழித்துக் கொண்டிருக்கிறீர்களே! இது போதாதா? கண்டு கழிப்பதை உண்டு களிப்பதனால் வந்ததுதானே இந்த வினைக்கூடு? இதை என்று போட்டு இனி கூடு இல்லாமல் ஆகப்போகிறாய்? இந்த அர்த்தம் இப்போது உனக்குப் புரியாது; உணர முடியாது; பின்பு உணர்வாய்; **அது ஆவாய்!**

பெரியவர்கள் சொல்லும் அனுபவ அர்த்தத்தை உணர முடியாமல் அதை அனர்த்தமாக்கி அதனால் இந்த ஜீவர்கள் (சம்)போக வலையில் மாட்டி திரும்பத்திரும்ப பிறக்கவும், இறக்கவும் முடியாத துன்பமாக அனுபவிக்கிறார்கள். ஆனால் அதில் நீ மாட்டமாட்டாய், எமக்குத் தெரியும். அது சரி, எமக்கு நீ ஆகாரம் வாங்கிக் கொடுக்கும் முன்பு யாம் கொடுக்கும் ஆகாரத்தை நீ துவேஷம் இல்லாமல் ஏற்றுக் கொண்டால் நீ கொடுக்கும் ஆகாரத்தையும் யாம் ஏற்றுக்கொள்வோம்!

**அது:** ஸ்வாமி! தாங்கள் எதைக் கொடுத்தாலும் இது ஏற்றுக்கொள்ளும்!

**அவர்:** உன் வாக்கில் தெளிவு இருக்கிறது. அதாவது **'நான்'** என்ற அஹங்காரத்தை காணோம். ஆகையால் நீ பாக்கியவான். ஆனால் யாம் கொடுக்கும் ஆகாரத்தில் அருவருப்பு அடையமாட்டாயே?

**அது:** கண்டிப்பாக அசூசை அடையாது. தங்கள் சித்தம் எதுவோ அது இதன் பாக்கியம்!

அவர் கடகடவென சிரித்தார். தம் இரண்டு கரங்களாலும்

"அந்த கான் ஜலத்தை மலத்துடன் அள்ளி, **இம்... ஏற்றுக்கொள்"** என்றார்!

அது ஒரு வினாடி திகைத்தது. ஸ்ரீகுரு வார்த்தையும், ஸ்ரீதிரு அனுக்கிரஹமும் உடனே அதை ஆட்கொண்டன. அப்படியே தம் இருகரங்களிலும் ஏற்றுக்கொண்டு ஆனந்தமாக உட்கொண்டது!

**அன்றிலிருந்து வாசனையும் (நறுமணமும், துர்வாசனையும்) ருசியும்**
**அந்த பைத்தியத்தை விட்டு அகன்றது.**
**இது அனுபவம்.**

அவரும் இது வாங்கித் தந்த பலகாரங்களை ஏற்றுக்கொண்டார் (உலக நிலையில்).

எமக்காகவே வந்த எம்பெருமான் அந்த தூலவடிவில் அதன் பிறகு காணவில்லை!

**எந்த பாடமும் அனுபவமாக இருக்கவேண்டும்!**

**எல்லாம் நீ!**



# பைத்தியத்துடன் பரமன் மறைமுக விளையாட்டு!



மேல் மாடி பூஜை அறை

அந்த பைத்தியம் பஜனை பாடல்களும், பக்திப் பாடல்களும் பாடும் போதும், பிறர் பாட கேட்கும்போதும் பாடலோடு நின்று விடுவதில்லை; கருத்தின் ஆழத்திற்கு சென்றுவிடும். அந்த சொரூப தரிசனத்தை அப்படியே அனுபவிக்கும்! இதயத்தில் அந்த காட்சியில் அப்படியே லயித்து உறங்கிவிடும்!

சிலசமயம் மாடியில் உள்ள பூஜை அறையில் பாட்டுப்பாடி கதறி அழுது பூஜை முடியும் தருவாயில் கற்பூர ஆரத்தி ஒருமுறை செய்து அது அணைவதற்குள்ளாக சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு பிறகு எழுந்து மறுமுறையும் கற்பூர ஆரத்தியை பூர்த்தி செய்து பஸ்பம், தீர்த்தம், திருத்துளாய் எடுத்துக் கொண்டு அதே களைப்புடன் கீழே இறங்கி வந்து ஏதோ ஆகாரம் எடுத்துக் கொண்டு படுத்துவிடும்!


சிலசமயம் முதல் கற்பூர ஆரத்தி செய்து புலம்பி அழுது, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த நிலையில் பிரக்ஞையற்று தூங்கிவிடும் போல் தெரிகிறது! அதேநிலையில் எமதய்யன் (ஸ்ரீகண்ணன்) இந்த தூலத்தை அசைவில்லாமல் தூக்கி கீழே உள்ள கட்டிலில் பெட்ஷீட் விரித்து தலையணை போட்டு அதை படுக்க வைத்துவிடுவான்! விழிப்பு வரும் சமயம் பதறி எழுந்து, மேலே பூஜை அறைக்குச் சென்று தூங்கியதால் அன்றோ உனக்கும் ஓர் வேலையைக் கொடுத்துவிட்டது. அடுத்த கற்பூரமும் கொளுத்த முடியாமல் போய்விட்டதே, பூஜை பூர்த்தி ஆகவில்லையே என மறுபடியும் அடுத்த கற்பூரம் கொளுத்தி பூஜையை முடிக்கும்!

அது அவனிடம், ஆமாம் சுவாமி! தூக்கிக்கொண்டு வந்து கீழே கட்டிலில் போட்டாயே! உன்னைக் காட்டி இந்த காரியத்தை செய்தால் என்ன? உங்கப்பன் வீட்டு சொத்தா குறைந்து போய்விடும்?

ஏன் இந்த திருட்டுத்தனம்? உன் குலம், கோத்திரம் அனைத்தும் திருட்டுக்குடும்பம் ஐயா! அந்தக் குடும்பத்தில் இந்த பைத்தியத்தையும் ஒன்றாக்கிவிட்டாயே!


உன் திருட்டுத்தனத்தை கண்டு கொண்டாலல்லவோ உன்னைக் கண்டுகொள்ள முடியும். அந்த நாள் எந்நாளோ? உன் வலையில் இது சிக்கிக்கொண்டது! இது போடும் வலையில் நீ என்று சிக்கப் போகிறாயோ? உன்னை நேரே தரிசித்து என்று அளவளாவப் போகிறதோ? என பலவிதமாகப் புலம்பி அழுதுவிட்டு வந்து படுத்துவிடும்! இது இப்படி பலமுறை நடந்ததுண்டு! ஆனால் மறைபொருளாக இருப்பதனால் அந்த காரியமும் மறைவாகவே நடைபெற்றது போலும்!

**எல்லாம் நீ!**





# விமலன் பேசிய விகடம்!




ஒருமுறை அதிகாலையில் பஜனை பாடிக்கொண்டு அன்பர்களுடன் வீதிவலம் வந்து பஜனை மடத்தில் முடித்தோம்! ஆடிப்பாடி வந்ததில் அந்த பைத்தியத்தின் இடையில் கட்டியிருந்த அங்கவஸ்திரம் நழுவி எங்கோ தெருவில் விழுந்துவிட்டது. பஜனை மடத்தில் தீர்த்தம் தரும்போது, தீர்த்தம் வாங்குவதற்கு வஸ்திரத்தைப் பார்த்தால் வஸ்திரத்தைக் காணவில்லை. பஜனைமடத்தில் அர்ச்சாவதார மூர்த்தியாகிய எம் திருடனை (கண்ணனை) பார்த்தால், ராதையின் தோள்களில் கைகளைப் போட்ட வண்ணம் மோகனப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தான்!


ஏனையா! நீ ராதையின் தோளைப் பற்றிய வண்ணம் கம்பீரமாக நிற்கிறாயே; இந்த பைத்தியம் இடுப்பில் கட்டியிருந்த அங்கவஸ்திரத்தை காணோமே, அதை என்ன செய்தாய்? என்று கேட்கும் பாவனையில் அவனை நோக்க, அவன் கருவிழியை சுழற்றிய வண்ணம் அலட்சியப் பார்வையில், அட பைத்தியக்காரா! பக்கத்தில் பார் என சுட்டிக் காட்டுவதைப் போல் ஓர் தோற்றம்!

உடனே அருகில் நோக்கினால் ஓர் எட்டு வயது சிறுவன் திருபுண்டரம், துளசிமணி மாலையுடன் பஞ்சகச்சத்துடன் நின்றவன் இதைப் பார்த்து, ஏன் சுவாமி! இடுப்பில் கட்டிய துண்டு அவிழ்ந்து விழுவதும் தெரியாமலா தெருவில் ஆடிப்பாடி வருவது. நாளை வேஷ்டியும் அவிழ்ந்து விழப்போகிறது. அதையும் நீ கவனிக்கப் போவதில்லை, கௌபீனத்துடன் நிற்கப்போகிறாய் போ என விகடம் பேசினானா? உண்மையை பேசினானா? என்று தெரியவில்லை. அவனைக் காணோம்! திருடன் மோகனமாக சிரித்தான்! அந்த சிரிப்பின் ஆழ்ந்த கருத்து இன்று புரிகிறது!

**எல்லாம் நீ!**



# பாஷாணம் உண்ட பரமன்!



ஒருசமயம் நம் பஜனை கோஷ்டி ஆடிப்பாடி வரும்போது மாதத்தில் ஒரு நாள் அனைவருக்கும் பாலும் பழமும் கொடுப்பது வழக்கம்! அன்றும் அவ்வாறு கொடுக்கப்பட்டது. அது ஓர் மளிகைக் கடை செட்டியார் வீடாகும்! அன்று அந்த செட்டியாரின் மனைவி பாலில் பனங்கற்கண்டு போடுவதற்காக வழக்கமாக இருந்த டப்பாவில் கையை விட்டு எடுத்தாள். அது அதிகாலை இருட்டாக இருந்ததினால் பனங்கற்கண்டு இருந்த இடத்தில் மயில்துத்தம் (பாஷாணம் அதாவது விஷம்) டப்பா மாற்றி வைக்கப்பட்டுள்ளதை அறியாமல் இந்த அம்மா அவசரத்தில் மயில் துத்தத்தை பனங்கற்கண்டு என எண்ணி கையினால் அள்ளி பாலில் போட்டு கலக்கி ஸ்ரீஅன்பர்களுக்கு கொடுத்துவிட்டாள்!

நம் மெய்யன்பர்களும் எந்த சலனமும் இல்லாமல் ஆனந்தமாக பாலை அருந்திவிட்டு, பழமும் சாப்பிட்டுவிட்டு ஆடிப்பாடி பஜனை கூடத்திற்கு வந்துவிட்டார்கள்! நம் பஜனை மடத்தில் எம் பிரபுவும், ராதாவும் ஐந்தடி உயரத்தில் சித்திர சொரூபத்தில் ஆஜானுபாகு சொரூபமாக இளம்ரோஸ் வர்ணத்தில் தேஜோமயமாக இருப்பார்கள்! ஆனால் அன்று கற்பூர ஆரத்தி செய்யும்போது எம் ஆயர்பாடி சிறுவன் (ஸ்ரீகண்ணன்) நீலமேகஷ்யாமள ஸ்வரூபனாக ஆனந்தமாக காட்சி தந்தான்! ஓகோ! கோகுல கோபாலனாக இன்று காட்சி தருகிறாயா! என அவனுடன் மௌனமாக உரையாடிக் கொண்டிருக்கும்போது, திடீரென செட்டியாரும், செட்டியார் மனைவியும் அலறி அடித்துக்கொண்டு சந்நிதியில் வந்து புலம்ப, நிலைமையை உணர்ந்தோம்!

அவன் மௌனமாக சிரித்தான். அந்த சிரிப்பை அன்று உணர முடியவில்லை. இன்று உணர்கிறோம்! (அது ரகஸ்யமாகும்) அன்பர்கள் உண்ட விஷத்தை அவன் ஏற்றுக் கொண்டான் என உணர்ந்தது. பக்த விஜயத்தில் இந்த நிகழ்ச்சிகளைப் படித்ததுண்டு! கதை சொல்ல இந்நிகழ்ச்சிகளைக் கேட்டதுண்டு! இன்று நேருக்குநேர் கண்டு ஆனந்த புளகாங்கிதம் கொண்டது! அவனை **நம்பினார் கைவிடப்படுவதில்லை!**

**எல்லாம் நீ!**



# ஆனந்த வேதனை!

மேற்கு தொடர்ச்சி மலையில் ஒரு இடத்தில் சதுரகிரி (மஹாலிங்கமலை) என்றும், குற்றாலம் என்றும், திருக்குறுங்குடிமலை என்றும் இன்னமும் அனேக பெயர்கள் அந்தந்த இடத்திற்கு தக்கபடி அமைவதுண்டு. அதில் சதுரகிரி மலைக்கு குடும்பத்துடன் போனோம். சந்தன மஹாலிங்கத்தையும், சுந்தர மஹாலிங்கத்தையும் தரிசித்து கீழே இறங்க முடிவெடுத்தோம்.

அதில் ஒரு பகுதியில் நின்றவாறு, அதோ ஒரு சிகரம் தெரிகிறதே அதை கூர்ந்து நோக்கு என்றார் ஸ்ரீசுவாமிகள். இது கூர்ந்து நோக்கி மரங்களும், புதரும் அடர்ந்த இடமாக இருக்கிறது என்றது. அதில் ஏதேனும் உன் கண்களுக்கு புலப்படுகிறதா? எனக்கேட்டார். மேலோட்டமாக பார்த்து ஒன்றும் தோற்றவில்லை என்றது. சரி கீழே இறங்கு! எனச்சொன்னார் ஸ்ரீசுவாமிகள். கொஞ்சம் கீழே வந்ததும் ஏதோ ஒன்றை சுட்டிக்காட்டுகிறார், நாம்தான் சிரத்தையற்று ஒன்றும் தோற்றவில்லை என்றுவிட்டோம். இது நமது **கவனக்குறைவு** என உணர்ந்தது அந்த பைத்தியம். திரும்பவும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அது எந்த இடம், எந்த சிகரம், சிகரத்தின் மத்தியா, உச்சியிலா என்று சற்று விளக்கமாக சொல்லக்கூடாதா? என கெஞ்சிக் கேட்டது.

அவர் சிரித்துக்கொண்டே, திருவடி! ''நல்ல மாட்டிற்கு ஒரு சூடு'', ''நல்லவனுக்கு நெல்லொத்த சொல்லே போதும்'', ''ஆடத்தெரியாத தேவடியாளுக்கு தெரு கோணல்'' ஆகவே வா போகலாம்! என்றார். அது அவரை விடவில்லை, குமுறி அழ ஆரம்பித்தது. (யாம் அழுதே காரியங்களை சாதித்து இருக்கிறோம்) எம் அழுகையை கண்டு அம்மா மற்றும் அனைவரும் அவனை அழவைத்துதான் வேடிக்கை காணவேண்டுமா? அவன் வேண்டியதைத்தான் கொடுங்களேன்! என்றார்கள். (எங்கள் இருவர் நிலையையும் எவரும் அறியார்)

ஸ்ரீசுவாமிகள் ஓர் புன்முறுவலுடன், சரி! இப்போதாவது சிரத்தையாக கவனி! எனச்சொல்லி ஓர் உயர்ந்த சிகரத்தை சுட்டிக்காட்டி, அதன் கீழே ஓர் பத்து அடி கூர்ந்து நோக்கு! என்றார். அது ஸ்ரீகுருநாம தியானத்துடன் அவர் சொன்ன இடத்தை நோக்கியது. பச்சைபசேல் என்ற இடத்தில் **ஓர் கரும்புள்ளி** (அதிநுட்பம்) தோற்றியது. உடனே அவரை நோக்கி, கடுகத்தனை **ஓர் கரும்புள்ளி** தோற்றுகிறது என்றது! அவர் சிரித்துக்கொண்டே, இதை ஏன் **முதலில்** கவனிக்கவில்லை? என்றார். அது அசிரத்தையா? எனக் கேட்டது. **உன் கவனம் இங்கில்லை**; பரந்து விரிந்திருந்தது. கூர்ந்த

அறிவு பிரகாசிக்கவில்லை. **"கூர்க்கத்தெரிந்த மருந்து"** என அடியார்கள் சொல்வர். அதை உன்னுள் (ஒன்றில்) கூர்ந்து **அறிந்து உணர்ந்து** கொண்டாயானால் பின் ஒடுங்கி ஒன்றில் உணர்ந்ததை **விளக்கத்திற்காக** விரிவுபடுத்தலாம். உன்னுள் உணர்ந்த பின்னே அது எங்கும் எல்லாமாய் இருப்பதை காணவும் (தூலம்), தெரியவும் (சூட்சுமம்), உணரவும் (காரணம்) முடியும். இப்போ இந்த விளக்கம் உனக்குப் புரியாது. பிற்காலத்தில் இதற்கு விளக்கம் அதிதெளிவாக நீ கொடுக்க முடியும். (**அது இன்று நடைபெறுகிறது.** அன்று பதினாறு வயதில் நடந்த சம்பவம் இது) சரி! இனி கதைக்கு வருவோம்.

ஸ்ரீசுவாமிகள் கேட்டார், அந்த புள்ளியில் என்ன இருக்கும் என உன் யூகம். பாறை அப்படி தோற்றாது. ஓர் குகை இருக்கும் எனக் கருதுகிறது என்றது. ஆமாம் திருவடி! அது ஓர் குகைதான். இதன் பெயர் **கைலாயப் புடவு.** (புடவு என்றால் குகை)



கைலாயப் புடவு என்றால் அங்கு சிவபெருமான் இருக்கிறாரா? இமயமலையில் கைலாச யாத்திரை செல்கிறார்களே அவர் இங்கு இருந்தால் அங்கே ஏன் அந்த பனி மலையில் கஷ்டப்பட்டு ஏறவேண்டும்? என அது கேட்டது.

ஸ்ரீசுவாமிகள் சிரித்தார். அந்த விரிசடையோன் எங்கு கூப்பிட்டாலும் வருவான். அவனை தன்னுள் உணர்ந்து உணர்ந்து அவனாகவே ஆகியவர்களை நாம் தேடிச் சென்றால்தான் நாம் அவனாகவும், அது நாமாகவும் ஆக முடியும்! இந்த விளக்கம் பின் உணர்வாய். அந்த குகையில் சில மஹான்கள் இருக்கிறார்கள். அங்கு எவரும் சென்றதில்லை. அது அதிக சரிவான பகுதி! பற்றிப் பிடிப்பதற்கோ, பிடித்து ஏறுவதற்கோ எதுவும் சாத்தியமாகாது. ஆனால் அவனாக அதில் ஏற்றிவிட்டாலன்றி செல்ல முடியாது எனச்சொல்லி ஊருக்கு கூட்டி வந்துவிட்டார்.

இரண்டு வருடங்கள் கடந்தன. எண்ணம் அந்த குகையையே சுற்றிச்சுற்றி வட்டமிட்டது. ஓர் நாள் ஸ்ரீசுவாமிகளிடம் அனுமதி கேட்டது. ஸ்ரீசுவாமிகள், அந்த இடம் குறிப்பாக நினைவிருக்கிறதா? காடும் மலையும் இயற்கை அம்சமாகும்; எவரையும் மதிமயக்கி சுற்றிச்சுற்றி அலையவைத்துவிடும் எனச்சொல்லி சிரித்தார். இது சொன்னதாவது: இது போகவில்லையே! தாங்கள்தானே வழிநடத்திச் செல்கிறீர்கள்! அந்த **கவலை, பயம்** இங்கு **இல்லவே இல்லை!** தூலம் அங்கேயே முடிந்தாலும் நலமே! திரும்பி வந்தாலும் நலமே! எனச்சொல்லி அவர் அனுமதி பெற்றுச் சென்றது.

தூத்துக்குடி *to* கோவில்பட்டி, கோவில்பட்டி *to* ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் *to* வத்திராயிருப்பு, வத்திராயிருப்பு *to* கூமாப்பூர். கூமாப்பூர் மலை அடிவார கிராமம். அங்கிருந்து எட்டு

மைல் சந்தனமஹாலிங்கம், சுந்தர மஹாலிங்கம். அங்கிருந்து மலை சிகரம் ஆறு மைல் **நெட்டு ஏற்றம்**. எப்படியோ ஸ்ரீகுரு கிருபையால் மேலே சென்றுவிட்டது.

அந்த குகை சமீபம் ஒரே வழுக்குப் பாறை; பற்றி ஏறுவது மஹா கடினம். ஆனால் எப்படியோ ஓர் இரண்டு அடிக்குள்ளாக சென்றுவிட்டது. எப்படியோ தெய்வாதீனமாக பாறையில் கால் வழுக்கி கைப்பற்ற இடம் இல்லாமல் திணற, சரீரம் இரண்டு பல்ட்டி அடிக்க, ''திக்கற்றவனுக்கு தெய்வமே துணை'' என்றபடி அது **"ஹரே... ராம்..." (மரணபயம், மரண அலறல்)** என்று அழைத்தது. அவ்வளவுதான் இடுப்பில் கட்டி இருந்த **லங்கோட்டை** (நூதன கௌபீனம்) ஓர் பாறை கரண்டி போல் பற்றிப்பிடிக்க அந்தரத்தில் சர்க்கஸ்காரன் போல் தொங்கிக் கொண்டிருந்தது அந்த பைத்தியம். கீழே விழுந்தால் எலும்பைக்கூட எண்ணிப் பார்க்க முடியாது. அத்தனை **அதலபாதாளம்.** எப்படியோ எவரோ உடம்பை உந்தித் தள்ளுவது போன்ற ஓர் நிலை. குகை வாசலில் சரீரம் விழுந்தது. **அது அவன் செயல்** .

அந்த குகை வாயிலை பார்த்தால் தலைதான் நுழையும், உடம்பு நுழைய மார்க்கம் இல்லை. ஹே... குருதேவா...! என காடே அலறும்படி ஒரு சப்தம் எப்படி வந்ததோ இதுக்கு தெரியாது. அந்த துவாரத்திற்குள் படுத்தபடி இருகரங்களையும் நமஸ்காரம் செய்த நிலையில் நீட்டியது. அடுத்த பத்து வினாடிக்குள் உள்ளே இருந்து எவரோ இதன் கரங்களைப் பற்றி இழுக்கும் **உணர்வு தோற்றியது.** அடுத்த நிமிஷம் குகையின் உள்ளே இருந்தது. உள்ளே ஐந்தாறு பேர் அமரலாம், படுக்கலாம். தரை வழுவழுவென மொசைக் போட்டது போல் அவ்வளவு சுத்தமாக இருந்தது.

மூன்று ஸ்ரீமஹான்கள் அங்கு இருந்து இந்த பைத்தியத்தை வரவேண்டும் வரவேண்டுமென அன்புடன் அழைத்து உள்ளே அமர வைத்தனர். அது அவர்கள் திருவடிகளில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து திருவடிதூளி தம் சிரமேல் தாங்கி அவர்கள் முன் பவ்யமாக அமர்ந்தது. அவர்களில் ஒருவர், உன் அப்பா வடிவேலை தெரியும், பலமுறை இங்கும், வேறு சில இடங்களிலும் சந்தித்து உரையாடி இருக்கிறோம். உம்மை அனுப்புவதாகச் சொன்னார்.

**நீ கொடுத்து வைத்தவன்.** உன் தரிசனம் எங்கள் **தபோபலனாகும்.** பல ஆயிரம் வருஷம் தவம் செய்தாலும் உன் போன்ற வைராக்கியமும், நம்பிக்கையும் உள்ள ஓர் சுத்தாத்மாவை காண்பது அரிதாகும். ''நீ நலம் பெறுவாயாக'' என வாழ்த்தி சில கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொண்டோம். (அது ரகஸ்யம்)

இரண்டு இரவு ஒரு பகல் அங்கே தங்கிவிட்டு அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, பாதை சரிவர தெரியாமல் ஐந்து தினங்கள் அந்த காட்டிலேயே சுற்றி அலைந்து சில காய்களையும், சில பழங்களையும் (அவன் அருளால் கிடைத்ததை) உண்டு ஏழாவது நாள் ஓர் மலைக் குகையில் இரவு தங்கிவிட்டு வெளியே வரும்போது ஓர் விறகு வெட்டி தெய்வாதீனமாக வர அவன் இதைக்கண்டு ஆச்சர்யம் கொண்டு, ஐயா! இந்த குகைக்குள் இருந்தா வருகிறீர்கள்? இதில் யாரும் போக முடியாது ஐயா! போகக் கூடாது. காரணம் இதனுள் சென்றால் சாம்பலாகி விடுவார்கள். இதை ''போகர் குகை'' எனச்சொல்வதுண்டு.

போகருக்குப் பிறகு ஒரு தபஸ்வி இருந்தார். ஓர் **அசம்பாவிதம்** காரணமாக இந்த குகையினுள் எவன் சென்றாலும் (மனிதனைத் தவிர எந்த ஜீவனும் போகலாம்) பஸ்பமாவான் என சாபமிட்டார். அதன்படி விபரம் அறியாமல் இருவர் பஸ்பமானதை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் நீங்கள் தெய்வப்பிறவி போல் தோற்றுகிறது எனச்சொல்லி நமஸ்கரித்தான். அவனிடம் ராஜபாளையம் செல்ல பாதை கேட்டோம். அவன் ஓர் பாதையைக் காட்டி ஓர் பத்துக்கல் தூரம் போனால் அடிவாரம் அடையலாம் ஆனால் காட்டில் பாதை தவறிவிட்டால் சுற்றிச்சுற்றி அலையவேண்டி வரும். ஆனால் உங்களைப் பார்க்கும்போது ஏனோ என் உள்ளத்தில் இந்த காடே உங்கள் சாம்ராஜ்யம் என சொல்லத் தோன்றுகிறது. சரி! நீங்கள் சென்று வாருங்கள் எனச்சொல்லி அவன் சென்றுவிட்டான்.

இதுவும் அந்த பாதை வழியே செல்லும்போது காலை பதினோருமணி இருக்கலாம். அங்கு ஜலமும் கிடைக்கவில்லை. காய்கனியும் கிடைக்கவில்லை. பசி, தாகம் இரண்டும் வாட்டியது போலும். ஓர் நாழிக்கிணறு போன்று சிறுகிணற்றைக் கண்டது. ஜலம் கைக்கு எட்டும் தூரத்தில் தோற்றியது. கையை உள்ளேவிட ஜலம் கீழே சென்றது. சரி, ஜலம் அள்ளிக் குடிக்க இயலவில்லையானாலும் உதட்டையும், நாக்கையும் நனைத்துக் கொள்ளலாம் என தலையில் கட்டிய ஐந்து முழத்துண்டை தொங்கவிட்டால் அந்த துண்டுக்கும் எட்டவில்லை. ஜலம் அதற்கும் அடியில் சென்றுவிட்டது. இது மாயாஜாலம் போல் விசித்திரமாக இருந்தது.

அப்போது கலகலவென சிரிப்போசை கேட்டு, அது யார்? என நோக்க, ஒரு மலைவாசி கையில் அரிவாள், கயிறு, ஒரு சிறிய தூக்குப் பாத்திரம் இவைகளுடன் நின்றிருந்தான். அவன் இதை நோக்கி, ஜலம் எட்டவில்லையா? ஐயா! இதில் ஜலம் அருந்தியவர் எவரும் கிடையாது. இது "போகர் கிணறு". இந்த ஜலம் உமக்கு வேண்டாம். பக்கத்தில் என் தென்னந்தோப்பு இருக்கிறது. அங்கு வாரும், இளநீர் சாப்பிட்டுப் போகலாம் என்றான். இது, ஐயா! இதனிடம் காசு பணம் கிடையாது என்றது. அவன், நீர் காசு பணம் ஒன்றும் தரவேண்டாம். உமக்கு இளநீர் கொடுத்த புண்ணியமாவது எனக்கு கிடைக்கும் என சொன்னான். சற்றுதூரம் வந்ததும் இருபது தென்னை மரங்களாவது இருக்கும்.

அவன் ஒரு மரத்தில் ஏறி பத்து இளநீர் வெட்டி கீழே போட்டான். பின் கீழே இறங்கி வந்து அவற்றை வெட்டி அவன் தூக்குப் பாத்திரத்தில் இளநீர் ஜலமும், பாத்திர மூடியில் வழுக்கை தேங்காயும் கொடுத்தான். ஐந்துக்கு மேல் இது சாப்பிட்டு இருக்கலாம். அவனும் மிச்சம் மீதியை வெட்டி சாப்பிட்டான். எப்படியோ பத்து இளநீரும் காலி. எங்கள் பசி, தாகமும் காலி. ஐயா! இதே பாதையில் போய் சேருங்கள் என பாதையை காட்டிவிட்டு அவன் காட்டில் சென்றான். அவனைக்



காணோம். ஓர் எண்ணம் வந்தது. இந்த மலை காடுகளில் தென்னை மரம் எப்படி வளரும்? தோட்டமோ, வீடோ, விவசாய பூமியோ ஒன்றும் இல்லையே! என திரும்பி வந்து பார்க்கும்போது அடர்ந்த காடுதான் இருந்ததே தவிர தென்னைமரம் ஒன்றும் இல்லை! தென்னை மரங்களையும் காணோம்! வந்தவனையும் காணோம்! **ஆனந்த வேதனை** தாங்க முடியவில்லை!

ஹே.. பிரபோ! கருணைக் கடலே! கருணா சாகரா!! என்னே உன் திருவிளையாடல்!!! இந்த விபரமற்ற பஞ்சைக்கு, ஒன்றும் உணரமுடியாத பைத்தியத்திற்கு எப்படியெப்படி எல்லாம் வந்து அருள்பாலிக்கிறாய்!!! கூப்பிட்டால் வருகிறாய்! கேட்டால் கொடுக்கிறாய்!! அறியாத அறிவிலியாக இருந்தாலும் **வலிய வந்து** அறிமுகமாகிறாய்!! உன் கருணா சாகரத்தை, கருணை பிரவாகத்தை இந்த ஜீவர்கள் ஏன் உணரமாட்டாமல் கண்டதே காட்சி, கொண்டதே கோலமென மன மாயைக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வருகிறார்களே! என்ன மதியீனம்?

உடலையும், அதைச்சார்ந்த உலகையும் விட்டால் **அடுத்த வினாடி** உன்னைத் தொட முடிகிறது. அல்லது உன்னை **உறுதியாகப் பற்றினால்** மற்ற அனைத்தும் புயல் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சென பஞ்சாய் பறந்துவிடும்! இந்த உடல் உலக **இனிமை** எவ்வளவு மயக்கத்தை உண்டு பண்ணிவிடுகிறது. ஆனால் எம் ஐயனே! **உன் கிருபை** இன்றி எத்தனை ஜெகஜாலம் செய்தாலும் உன்னை அடையமுடியாது. இது உறுதி.

"கல்லொத்த மனிதருக்கு **நெல்லொத்த** உன் சொல் போதும்"

ஆனால் இந்த கலிதோஷம் அதிபயங்கரமானது போலும்? ஆனாலும் இந்த பைத்தியத்திற்கு மட்டும் அப்படி கஷ்டமானதாக தோற்றவில்லையே!

பேரானந்தத்துடன் சதுரகிரி மலையை விட்டு கீழே இறங்கினோம். வழியில் நீரார்த்தஐயன் கோவில் என ஒன்றுண்டு. அங்கே ஒருநாள் தங்கி மறுநாள் ராஜபாளையம் வந்து அங்கு ஒரு அன்பரிடம் உணவு அருந்தி, அவரிடமே பஸ் டிக்கட்டிற்கு பணம் வாங்கி திருமந்திரநகர் வந்து ஸ்ரீசுவாமிகளை நமஸ்கரிக்க, ஆமாம் திருவடி! பாறையில் வழுக்கி விழுந்தாயாமே? உள்ளே செல்ல திகைத்து உன் கரம் நீட்ட, உள்ளே இருப்பவர்கள் உன்னை இழுத்து இரண்டு இரவு ஒரு பகல் தங்கி அவர்களிடம் சில விஷயங்களை உணர்ந்தாயே! (அங்கு நடந்ததெல்லாம் அப்படியே விவரித்தார் ஸ்ரீசுவாமிகள்) அவைகளை சற்று விளக்கமாகச் சொல் எனக்கேட்க அந்த பைத்தியம், ஆமாம்! அங்குதான் இதனுடன் இருந்தீர்களே இன்னமும் கேள்வியா? என, அதற்கு அவர்,

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்றபடி உன் வாய் மூலம் கேட்டால் அதில் ஒரு தனித்த இன்பமாகும் என்றார். இந்த பைத்தியமும் அந்த மஹான்கள் சொன்ன சில விஷயங்களை உணர்ந்தது. மேலும் இது சில விஷயங்களை உணர்ந்த நிலையில் சொல்ல, கடைசியில் அவர்கள் **அத்வைத** நிலையில் ஒரு பாடம் சொன்னார்கள். (அந்த நேரம் பதினெட்டு வயது) அந்த நிலையில் விளங்கவில்லை. திரும்பவும் அவர்களிடம் கேட்க, அவர்கள் சிரித்துக் கொண்டே, உன் ஸ்ரீசுவாமிகளிடம் கேட்டு பெற்றுக்கொள் என சொல்லிவிட்டார்கள்.

அத்வைத பாடம் பற்றி ஸ்ரீசுவாமிகளிடம் வினவ அவரும் சிரித்துக் கொண்டே, இந்த அனுபவம் உனக்கு தாமே சித்திக்க வேண்டுமேயன்றி சொல்லவோ, உணர்த்தவோ முடியாது. **"நீ பாடுபடு"** என மட்டும் சொன்னார்கள்.

எப்படி பாடுபடுவது எனப்புரியவில்லை. வருஷம் ஒன்று ஆகியது. பலமுறை கெஞ்சிக் கேட்டுப் பார்க்கும். கேட்டால் கண்களை மூடிக்கொள்வார். பதில் வராது. சிலசமயம் சினக்குறிப்புடன் நோக்குவார், இது அமைதியாகிவிடும். கிட்டத்தட்ட ஒன்றரை வருஷம் ஆகியது.

**ஓர் உண்மையை உணர காலம் கணக்கில்லை.**
**எண்ணம் ஒன்றே உன்னுடையது.**
**உன்நிலை கண்டு அது உணர்த்தும், காத்திரு!!**
**பொறுமையே உன் லட்சியம்!**

அந்நிலையில் காத்திருந்தது. பழுக்காமல் கனி கிளையை விட்டு இறங்காது. காலம் கனிந்தது போலும்.

ஒருநாள் காலை எட்டரை மணிக்கு வேலை பார்க்கும் கடைக்கு இது சென்று கொண்டிருந்தது. வழக்கமாக இது ரயில் தண்டவாளத்தின் மீதோ அல்லது அதன் மத்தியில் உள்ள பாதையிலோ தான் செல்லும். ஏனெனில் பிரதான சாலையில் சென்றால் ஜனசந்தடி, இரைச்சல், பேச்சு ஆகியவற்றால் கவனம் குறையும். வழக்கம் போல் அன்று இரயில் தண்டவாள மத்தியில் செல்லும்போது ஒரு பொட்டலம் தாளில் சுற்றி நூலால் கட்டி எறியப்பட்டது போல் ஒரு தோற்றம். ஏதோ ஒரு வேகத்தில் அந்த பொட்டலத்தை பந்தாடுவது போல் ஒரு உதை உதைத்தது. அந்த பொட்டலம் காலில் பெருவிரலில் ஒட்டிக்கொண்டது. அது ஒட்டவில்லை. அதனுள் இருந்த மீன்முள் இதன் காலில் நன்றாகவே குத்தி அந்த பொட்டலத்துடன் ஒட்டிக்கொண்டது. குனிந்து மெதுவாக எடுத்துப் பார்த்தால் காலில் ரத்தம் சொட்டியது. அதில் கொஞ்சம் மண்ணை அள்ளி போட்டுவிட்டு இது இந்த நிலையில் நம்முடன் ஒட்டக் காரணமென்ன என அதை பிரித்துப் பார்த்தது அந்த பைத்தியம்!

ஒரு முழு நியூஸ் பேப்பர் உள்ளே ஒரு வாழை இலை அதனுள் கல்கி புத்தகத்தின் ஓர் இதழ். அதில் ஸ்ரீகாஞ்சி மாமுனிவர் (ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளின்) அமுத வாக்கு. அதை சற்று கவனமாக நோக்கியது அந்த பைத்தியம். கண்களில் கண்ணீர் தாரைதாரையாக கொட்டியது.

**"அன்று கேட்ட கேள்விக்கு இன்று முழுமையான பதில்".**

கடைக்குச் செல்லவில்லை. கோவிலில் அமர்ந்திருந்த ஸ்ரீசுவாமிகளிடம் சென்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அவர் திருவடியைப் பற்றி தேம்பித்தேம்பி அழுதது. அவரும் இதை எதிர்பார்த்தது போல், என்ன திருவடி! உன் கேள்விக்கான பதிலை ஸ்ரீகாஞ்சிமஹான் உணர்த்தினாரா? என்றார்.

அது சொன்னது, அந்த ஸ்ரீகாஞ்சிமஹான் அங்கும் இங்கும் எங்கும் இருக்கிறாரே! ஆனால் இந்த பைத்தியத்திற்கு "மனோ நிலையில் ஒரு தேர்வு!"


தேர்வு வைப்பதுவும் நீ!
தேர்வின் பொருளும் நீயே!!
தேர்வதுவும் நீயே!!!
இங்கு விளக்க வார்த்தை ஏது?

எந்த வினாடியும் **அஹங்காரமும், அபிமானமும்** மட்டும் எழாமல் **"பாதுகாப்பது உம் கடன்! எம் கடன் பணி செய்வதே!"**

**எல்லாம் நீயே** என அமர்ந்தது.
அது முற்றுப்பெற்றது!

**எல்லாம் நீ!**





# பக்திக்கு கட்டுப்படாத பரமன் இல்லை!

ஸ்ரீசுவாமிகள் திண்டுக்கல்லில் ஒரு கடையில் வேலை பார்க்கும்போது வசூல் செய்வதற்காக பக்கத்து கிராமங்களுக்கு செல்வதுண்டு. ஒரு ஊரில் வசூல் செய்துவிட்டு இரவு நேரத்தில் திரும்பி வரும்போது பசியால் திருடர்களான ஐந்துபேர்கள் இவர் பணம் கொண்டு செல்வதைப் பார்த்துவிட்டு அதை தட்டிப் பறிப்பதற்காக பின்னால் வந்து கொண்டிருந்தனர். ஸ்ரீசுவாமிகளுக்கு வெற்றிலை போட்டுக்கொள்வது பழக்கம். ஆகவே அன்றும் வாயில் பாக்கை போட்டு வெற்றிலைகளை கையில் மடித்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு வெற்றிலையாக எடுத்து அதன் **காம்பை கிள்ளி எறிந்துவிட்டு** சுண்ணாம்பை தடவி வெற்றிலையை மென்று கொண்டே வந்தார். மரங்கள் அடர்ந்த இருண்ட பகுதியில் வரும்போது அந்த ஐவரும் சற்று நெருங்கி வந்தார்கள் போலும். இவர் அதேநேரம் கீழே உள்ள திருப்புகழ் பாடலை சற்று சப்தமிட்டே உள்ளம் உருகியவண்ணம் பாடிக்கொண்டே வந்தார். இவர் ஒரு முருகபக்தர்.

### திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித்திருநகை அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக் கொருவித்துக் குருபர எனவோதும்

முக்கட்பரமற்குக் சுருதியின் - முற்பட்டது கற்பித்திருவரும்
முப்பத்து மூவர்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலைதத்தக் கணைதொடு ஒற்றைக்கிரி மத்தைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியில் இரவாகப்

பத்தற்கிறை தத்தைக்கடவிய பச்சைப்புயல் மெச்சத்தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித்தருளுவ தொருநாளே

தித்தித்தெய ஒத்தப்பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொக் கநடிக்க கழுகொடு கழுதாட

திக்குப்பரி அட்டப்பயிரவர் - தொக்குத்தொகு தொக்குத்தொகுதொகு
சித்ரப்பவுரிக்குத் திரிகடக எனவோதக்



கொத்துப்பறை கொட்டக்களமிசை குக்குக்குகு குக்குக்குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற்றவுணரை வெட்டிப்பலியிட்டு குலகரி
குத்துப்பட ஒத்துப்பொரவல பெருமாளே!

அந்த ஐவரும் தீய எண்ணத்துடன் இவரைப் பின்தொடர்ந்து வர அவன் கிருபையினால் கிள்ளி எறியப்பட்ட வெற்றிலைக் காம்புகள் சிறுசிறு கூர்வடிவேலாக மாறி அந்த ஐவரையும் குத்தி காயப்படுத்திவிட்டன. ஒவ்வொருவரும் ஐயோ... அம்மா... என அலறியவண்ணம் ஒருவர் பின் ஒருவராக கீழே விழுந்து உபாதை தாங்கமுடியாமல் அலறிக் கொண்டிருந்தனர் போலும்! இவர் ஊர் சமீபம் வந்ததும் டீக்கடைக்காரன், பீடாக்கடைக்காரன் முதலியவர்களிடம், ஐயா! வரும் வழியில் சற்றுதூரத்தில் ஐந்துபேர் அடிபட்டு கிடக்கிறார்கள். ஓர் வண்டி கொண்டுபோய் அவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள். நீங்கள் உடனே சென்றால் அவர்களை காப்பாற்றிவிடலாம் என கருணையோடு சொல்லிவிட்டு போய்விட்டார்களாம். அவர்களும் தண்டனை அனுபவித்து பின் பிழைத்துக்கொண்டார்களாம்.


**"பக்திக்கு கட்டுப்படாத பரமன் இல்லை".**

**"பழிபாவத்துக்கு அஞ்சாத பாமரர்களும் இல்லை".**

**"பாமரன் பக்தனாகினால் பகவான் அவனுக்கும் கட்டுப்படுவான்".**

**எல்லாம் நீ!**





# தானாக கனிந்த பழம்!

ஓர்சமயம் ஸ்ரீசுவாமிகள் தோட்டத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். இது அந்த தோட்டத்தை சுற்றிப்பார்த்து வரும்போது ஒரு வாழைமரம் புஷ்டியான வாழைக்காய்களுடன் இருந்தது. அந்த காய்களை பார்த்தவுடன் ஓர் ஆசை உண்டாயிற்று.

**அது:** ஐயா! இது என்ன காய்? இவ்வளவு புஷ்டியாக இருக்கிறதே!

**ஸ்ரீசுவாமிகள்:** அது வாழைக்காய்!

**அது:** அது தெரிகிறது! வாழைக்காய் இல்லாமல் மாங்காயா?

**ஸ்ரீசுவாமிகள்:** வாழைக்காயை வாழைக்காய் என்றுதான் சொல்வோம்! மாங்காயை மாங்காய் என்றுதான் சொல்வோம்!

**அது:** அது புரிகிறது! என்ன ஜாதி காய் எனக்கேட்கிறது?

**ஸ்ரீசுவாமிகள்:** ஓகோ..! உனக்கு ஜாதி, இனம், மொழி எல்லாம் தெரிகிறதா? பரவாயில்லையே! நீ பிழைத்துக் கொள்வாய்!

**அது:** இது வீண் வம்பு! வாழையில் நாடு, பச்சைநாட்டான், கதலி, செவ்வாழை, ரஸ்தாளி (கோழிக்கோடு), பூவன், நேந்திரம் என பல ரகம் உண்டே? அதில் இது எந்த ரகம்? எனத்தான் கேட்டது! ஜாதி, இனம், மதம் இவைகள் நமக்கேது? உங்களிடம் வாயைக் கொடுத்து வசமாய் மாட்டிக்கொள்கிறது!

**ஸ்ரீசுவாமிகள்:** ''கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்'' என முதலில் சற்று பேசி, கலங்கி, வார்த்தை மாயா ஜாலத்தில் ஈடுபட்டு போதும் எம் ஐயனே...! என **உணர்ந்து விலகினால்** அந்த மயக்கத்திலிருந்து விடுபட்டு **''மௌனம் கலக நாஸ்தி''** என்ற அனுபவ நிலை தாமாக சித்தியாகும். முதலிலேயே மௌனத்தில் ஆழ்ந்துவிட்டால் **அனுபவம் முறையாக சாத்தியமாகாது!**

**அது:** ஏன் முதலிலேயே வாய் பேசா மௌனத்தை கடைபிடித்தால் பின் மனம் பேசா மௌனம் சாத்தியமாகாதா? பேசுவதில் எங்கெங்கோ அகப்பட்டுக் கொள்கிறோமே! இருபக்கமும் ஒலி

அலைகள் மோதி **ஏண்டா இதை பேசினோம்** என்று எண்ணி எண்ணி மனம் சங்கடப்படாமல் ஆரம்பத்திலேயே மௌனம் (வாய் பேசா நிலை) அனுபவித்தால் என்ன?

**ஸ்ரீசுவாமிகள்:** ஏன் ஊமை கூடத்தான் பேசாமல் இருக்கிறான். ஒரு வியாதியஸ்தன் உடல் நலிவினால் பேச முடியாமல் இருக்கிறான். இவர்கள் அனைவரும் மனம் பேசா மௌனத்தை அனுஷ்டிக்கிறார்கள் என அர்த்தமா? அவர்கள் பார்க்கும்போதும், சில வார்த்தைகளைக் கேட்டு உணரும்போதும் அவர்கள் மனம் அனலில் இட்ட புழு போல துடிக்கும்! மனம் அழுந்தி அழுந்தி வெடித்து சிதறும்! அது எவ்வளவு துக்கம் தெரியுமா? அதாவது "கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்" எனச்சொன்னது, லௌகீகி அதாவது ஓர் குடும்பஸ்தன் பக்தி, ஞான சாதனை செய்வது என்றால் உடல், பொருள், தொழில், குடும்ப க்ஷேமம் மற்றும் லோக க்ஷேம வார்த்தைகளை **நிறுத்தக் கூடாது, குறைக்க வேண்டும்.** நிலை அறிந்து, மனமறிந்து, செயலறிந்து, சபை அறிந்து **மிகுந்த பொறுமையுடன்** பேசவேண்டும்.

ஆனால் பேசும்போது **ஸ்ரீபகவந் நாமாவை** இணைத்துப் பேசவேண்டும். ஸ்ரீபகவந் நாமாவை இணைப்பதால் உலகியல் வார்த்தை **வினையையும் சாராது உன்னையும் பந்தப்படுத்தாது.** அப்புறம் தெய்வீக நிலை, செயல், கருணை, காருண்யம் ஆகியவைகளை கற்று **அனுபவ நிலையில்** உள்ளவர்களிடம் தொடர்பு கொண்டு உள்ளநெகிழ்வுடன் கேட்டு **தெளிதல், உணர்தல்** வேண்டும். இங்கும் "கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்" என்ற வாசகம் பொருந்தும். சர்வசதாவும் கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தால் கலகம் களங்கத்தையும், கலக்கத்தையும்தான் உண்டு பண்ணுமேயன்றி **நியாயம்** தோன்றாது.

**"கேட்கக் கூடியதை கேட்க வேண்டும்,**
**அனாவசியமாக தேவையில்லாத கேள்வி கேட்கக் கூடாது".**

உதாரணம்:

உனக்கு பசி உண்மையாக எடுக்கிறது. சாப்பாடு போடுபவனிடம், ஐயா! பசிக்கிறது எனக்கேட்பாய். அவரும் உன் நிலை அறிந்து இலை போடுவார். கூட்டு, பொரியல், அவியல், அப்பளம், சாதம், சாம்பார், ரசம், பாயாசம், மோர் என முறையாக கொடுப்பார். நீயும் தேவையானவற்றை விரும்பிக்கேட்டு சாப்பிடுவாய். நீ அமர்ந்து **பசியாறும் நேரத்தில்** பொன், பொருள், துணிமணி, பெண், உறவு சுற்றம், வீடு, மனைவி, மக்கள் இவைகளைக் கேட்பாயா?? மாட்டாய்! **அவை அந்த நேரம் தேவையா?**

சாப்பிடும்போது இதர பேச்சு வராது. இதர பேச்சு வராத நிலை "மௌனம் கலக நாஸ்தி" என்ற நிலையாகும். சாப்பிட்ட பின் பேச முடியாது, தூக்கம்தான் வரும். அதாவது வாயும், மனமும் மௌனமானால் பேசவும், எண்ணவும் இயலாத நிலை **சமாதியாகும்!** சரி.. நீ இங்கு வந்த காரணம் என்ன? இப்போது உனக்கு என்ன வேண்டும்?

**அது:** (சிரித்துக்கொண்டே) இந்த வாழைப்பழம் நல்ல பருமனாக, முதிர்ந்து காணப்படுகிறது. இந்த பழத்தை எத்தனை நாளில் சாப்பிடலாம்?

**ஸ்ரீசுவாமிகள்:** நாளை மாலை சாப்பிடலாம்.

**அது:** இவ்வளவு கடும்காயாக இருக்கிறதே, இது எப்படி நாளை பழுக்கும்? அதை எப்படி சாப்பிட முடியும்?


**ஸ்ரீசுவாமிகள்:** இந்த வார்த்தை உனக்கு எதற்கு? நாளை மாலை வா. இதை சாப்பிடு. (அதுவும் மௌனமாக சென்றுவிட்டது)

ஸ்ரீசுவாமிகளும் அந்த வாழைக்குலையை வெட்டினார். ஒரு சாக்குப்பையில் வைத்து வாயைக்கட்டினார். கோவிலுள் கொண்டு வைத்தார். மறுநாள் மாலை அது அங்கு சென்றது. என்ன திருவடி! வாழைப்பழம் சாப்பிடுகிறாயா? எனக்கேட்டார். அதுவும் சிரித்துக் கொண்டே “கரும்பு தின்னக் கூலியா?” என விளையாட்டாக கேட்டது. அதற்கு அவர், கரும்பு உரிக்க எத்தனை கஷ்டப்பட வேண்டும் தெரியுமா? உரித்தால் மட்டும் போதாது. அதை கடித்து, சுவைத்து, சாற்றை விழுங்கி சக்கையை துப்பிவிட வேண்டும். சாறோடு சக்கையும் கவனக்குறைவால் உள்ளே சென்றுவிட்டால் பின் டாக்டரிடம் ஓடவேண்டும். ஆனால் இந்த பழம் மெதுவாக தோலை உரித்துவிட்டு பல் இல்லாத பெரியவர்கள் கூட சாப்பிடலாம். இதனால் உபாதை இல்லை என்றார்கள். ஒரு வாழைப்பழ சோம்பேறி கதை தெரியுமா உனக்கு? ஆனால் நீ அப்படி சோம்பேறி அல்ல. அதை சுருக்கமாக சொல்கிறோம் கேள்.

இரண்டு சோம்பேறிகள் ஒரு சத்திரத்தில் தங்கி இருந்தார்கள். சத்திரக்காரன் எது கொடுத்தாலும் பந்தியில் சென்று சாப்பிடமாட்டார்களாம்! ஐயா! இங்கு எங்கள் பாத்திரத்தில் கொட்டிவிடுங்கள். நாங்கள் அங்கே எப்படி எழுந்து வரமுடியும்? எங்களுக்கு **தூக்கம்தான்** முக்கியம் என்பார்களாம். அந்த சத்திரக்காரனும் இவர்கள் சோம்பலை கவனித்தான். ஐயோ பாவம் என அவர்கள் இடத்திலேயே கொண்டு வந்து கொடுத்துவிடுவான். கையையும் பாத்திரங்களையும்கூட கழுவ செல்லமாட்டார்களாம். அங்கும் நடக்க வேண்டுமே என்ற சோம்பேறித்தனம். பின் பாத்திரத்தையும், கையையும் எப்படி சுத்தம் செய்வார்கள் என்றால் **தம் நாவால் நக்கியே சுத்தம்** பண்ணுவார்கள்! மலஜல உபாதை எப்படியோ! அதை இறைவனே அறிவான்!!

ஓர்நாள் ஓர் தோட்டத்தில் இருந்து வாழைப்பழம் சில குலைகள் ஓர் சம்சாரி அந்த சத்திரத்திற்கு தானமாக கொடுத்தான் போலும். அன்று அங்கு வந்தவர்கள் வேறு எதுவும் சாப்பிடாமல் வாழைப்பழம் மட்டும் சாப்பிட்டுச் சென்றார்கள். இந்த சத்திரக்காரனும் இந்த சோம்பேறிகள் இருவருக்கும் ஓர் வாழைக்குலையை தலைக்குமேல் தொங்கவிட்டு, இன்று ஆகாரம் இதுதான்! தேவைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் எனச்சொல்லி போனான். இந்த சோம்பேறிகள் இருவரும் பழத்தாரை தொங்கவிட்டு சத்திரக்காரன் போய்விட்டால் இதை யார் தாரில் இருந்து பிய்த்து **பழத்தை உரித்துக்** கொடுப்பது? இது நம்மால் ஆகாது என பழத்தாரைப் பார்த்தவண்ணம் அன்று முழுவதும் உபவாசம் இருந்தார்களாம். இது கதை.

**ஸ்ரீசுவாமிகள்:** என்ன திருவடி! வாழைப்பழம் சாப்பிடுகிறாயா? அதையும் யாம் உனக்கு உரித்து ஊட்டவா? (என கேலியாக கேட்டார்!!)



**அது:** போதும் ஐயா போதும்! அந்த அளவுக்கு இது சோம்பேறி இல்லை. எங்கே சாக்கை அவிழ்த்து பழம் பழுத்திருக்கிறதா? இன்னும் காயாக இருக்கிறதா? என பார்ப்போம். நேற்று கடும்காயாக இருந்தது. இன்று தோல் நிறம் மாறி சாப்பிடும் அளவுக்கு ஆகிவிட்டதா பார்ப்போம்!

**ஸ்ரீசுவாமிகள்:** இன்னும் இவர் மீது சந்தேகமா? இதோ பார், ரஸ்தாளி பழம் எத்தனை மஞ்சளாக இருக்கிறது. உனக்கு தேவையானதை உரித்து சாப்பிடு எனச்சொல்லி அவர் இரண்டு பழங்கள் மட்டும் சாப்பிட்டு சென்றுவிட்டார். இது நான்குதான் சாப்பிட்டது. அதற்கு மேல் சாப்பிட முடியவில்லை. ஸ்ரீசுவாமிகள் வந்தார், பழம் எனக்கேட்டாயே நான்குதான் முடிந்ததா? என்றார். போதும், அதற்கு மேல் ஏற்க முடியவில்லை என்றது அந்த பைத்தியம்.

ஒரு வாரம் சென்றது. மறுமுறையும் அதே தோட்டத்தில் ஸ்ரீசுவாமிகளை சந்தித்தது! வாழை தோட்டத்தை சுற்றி வருகையில் வேறொரு வாழை மரம், அதுவும் ரஸ்தாளியே. அன்று இருந்ததைவிட இது சற்று அதிக பருமனாகவே தோற்றியது. ஐயா! இதுவும் ரஸ்தாளிதானே? எனக்கேட்க, அவரும் ஆமாம்! உனக்கு இன்னமும் இந்த பழ ஆசை விடவில்லையா? என்றார்.

**அது:** பழம் தின்ற குரங்கு பழத்தை மறக்குமா?

**ஸ்ரீசுவாமிகள்:** ஓகோ.. உன்னை குரங்கு எனச்சொல்கிறாயா? குரங்கு புத்தி எனச்சொல்கிறாயா?

**அது:** குரங்கிற்கும், குரங்கு புத்திக்கும் இரண்டு நிலை உண்டா?

**ஸ்ரீசுவாமிகள்:** ஆமாம். தென்னாட்டு குரங்கிற்கு சேஷ்டை, அடாவடித்தனம், ஒன்றை எடுத்தால் அதை கொடுக்காமல் துவம்சம் பண்ணும் தன்மை, ஒரு இடத்தில் நிலைத்து நில்லாமல் தாவிக் கொண்டும், ஆடிக்கொண்டும் இருக்கும் தன்மை ஆகியவைகள் உண்டு. இவை வால் உள்ள குரங்கு. வடக்கே ஃபரிதாபாத் என்ற இடத்திலிருந்து சரயு நதியை தாண்டிச் சென்றால் அயோத்தியில் (முன் நகரம், பின் கடும் காடு) உள்ள குரங்கு அங்கு வரும் மனிதர்களை அனுசரித்து நடக்கும்.

(மேலே சொன்னதுபோல் குரங்கு சேஷ்டை செய்தால்) அவர்களை **அழிக்கவும்** தயங்குவதில்லை. பெரும்பாலும் **"ராம்"** நாமா சொன்னாலோ, பாடி ஆடினாலோ **கரதாளம் போட்டு மெய்மறந்து ஆடும்.** நமக்கு உபகாரம் பண்ணும்.

**அது:** இதுவும் இந்த தென்னாட்டு குரங்குகளைத்தான் கண்டு பழகி இருக்கிறது. வடநாடு

செல்ல எப்போ அனுமதி கொடுக்கிறீர்களோ அப்போது அதை கண்டு தரிசித்துக் கொள்ளும்! இப்போ இந்த ரஸ்தாளியை நாளை சாப்பிடலாமா எனக்கேட்டது. அவரும் சிரித்துக்கொண்டே அவசரத்திற்கு அந்த பழம். பொறுமைக்கு இந்த பழம் என்றார். இது ஒன்றும் புரியவில்லையே என்றது. அந்த வாழைக்காயை தொட்டுப்பார்த்து விட்டு இன்னமும் ஐந்து தினங்கள் பொறு என்றார். அது காரணம் கேட்டது. அவர் சொன்னார், சென்றவாரம் நீ சாப்பிட்டது **நாமாக பழுக்க வைத்தோம்.** அதாவது இங்கு அனேக பழக்கடைகளில் ஊத்தம் போட்டு பழுக்க வைப்பது போல.

ஊத்தம்:

ஓர் சிறிய காற்றுப்போக இடம் இல்லாத அறையாக இருக்கும். அதில் நூற்றுக்கணக்கான வாழைத்தார்களை அடுக்கி வைத்து **புகை மூட்டம் போடுவார்கள்.** ஒருநாள் பூராவும் அந்த புகைக்குள் இருந்தே பழமாகிவிடும் அந்த வாழைக்காய். **இதுவே ஊத்தம்.**

ஆனால் இந்த தாரை செயற்கையில் பழுக்கவிடாமல் இயற்கையாகவே மரத்தில் இருந்தே பழமாவதற்கு ஐந்து தினங்கள் ஆகும். ஆகவே பொறு என்றார். அது சரி என சம்மதித்தது. ஐந்தாவது நாள் மாலை வந்து பார்க்க அந்த பழம் முந்தையதைவிட குணம், மணம், சுவை, நிறம் ஆகியவற்றில் அதிக பொலிவாக இருந்தது. இன்று மரத்தில் இருந்தே பறித்துக் கொடுத்தார் ஸ்ரீசுவாமிகள். அன்று நான்குதான் சாப்பிட முடிந்தது. இன்று எட்டு பழம் சாப்பிட முடிந்தது. அந்த அளவுக்கு மதுரம், சுவை, மணம் இருந்தது. இதன் கருத்தை கேட்டது. அதற்கு ஸ்ரீசுவாமிகள் சொன்னதாவது:

குழந்தாய் திருவடி!

ஆழ்ந்த பக்தியோ, முதிர்ந்த ஞானமோ ஓர் பக்குவ ஆன்மாவிற்கு சித்திக்க வேண்டுமேயானால் **அளவற்ற பொறுமையும்,** எதையும் ஏற்றுக்கொள்ளும் **சகிப்புத்தன்மையும் வேண்டும். பொறுமையில் காலம் செல்லும், ஆனால் காலன் அவனை அணுகான்! சகிப்புத்தன்மையில் வினை சம்பந்தத்தால் (பிராப்தம், ஆகாமியம், சஞ்சிதம் இவைகளால்) வரும் பாபம் இவனை உண்ணாது. இவன் அந்த வினைகளை (பாபம்) உண்டுவிடுவான்!!**

குறிப்பு:

பொறுமை என்றால் காலத்திற்காக காத்திருத்தல், சகிப்புத்தன்மை என்றால் உபாதைகளை அமைதியாக ஏற்றல். காலன் என்பது தாயிடம் இருந்து தானே பழுப்பது (இது பொறுமை). வினை (பாபம்) என்பது ஊத்தம் போடாமல் தானே பழுப்பது (இது சகிப்புத்தன்மை). அவசரப்படும்போது புத்தி வேலை செய்யும், இது விபரீதமாக முடியும். நிதானம் (இறை சிந்தனை), பொறுமை என்ற காலக்கணக்கு தூலத்திற்கேயன்றி காலாதீதமான நமக்கன்று என அந்த "ஒன்றிலேயே ஆழ்ந்து விடுதலே" பரிபூரண பக்தியும், ஞானமும் ஆகும். **பக்தி வேறு ஞானம் வேறல்ல.**

**பக்தி:** ஸ்ரீபகவானை அன்றி வேறு எதுவும் முக்காலும் இல்லை என்ற **நம்பிக்கை!!**


**ஞானம்:** ஸ்ரீபகவானும் நாமும் ஒன்றே! இந்த இரண்டும் ஒன்றுபடும்போது எங்கும் வியாபகமாக இருக்கின்ற அந்த ஒன்றும், யாமும் ஒன்றே என்ற **பரிபூரணத்தில் வைராக்கியம்!**

**ஆரம்பம்:** "சாதனை மிகமிக முக்கியம்".

**முடிவு:** ஒன்றில் நிலைத்து சாதனையை கொஞ்சம் கொஞ்சமாக விட்டு அனுபவத்தை மட்டும் கூட்டவேண்டும்.

குழந்தைகளே!

சில காலங்களில் தனக்குத்தானே விசாரணை செய்து பார்த்ததில் ஸ்ரீசுவாமிகள் உள்ளிருந்து உணர்த்தினார்கள். அதாவது வாழைப்பூ மடலுக்குள் இருந்துதான் பிஞ்சு ஆகவேண்டும். அந்த பிஞ்சு காய் ஆகும் தருணத்தில் மடல் தானே விழுந்துவிடுகிறது. அதை அடுத்து அந்த காயானது மழை, பனி, வெயில், காற்று ஆகியவற்றை உரிய காலத்தில் அனுபவித்து பக்குவ காலத்தில் தாமே மரத்தில் இருந்த நிலையிலேயே பழுத்தால் அதன் சுவையே அலாதிதான்.



அத்தன்மைபோல் ஒரு ஜீவன் பக்குவ காலத்தில் தோட்டக்காரனான ஸ்ரீகுருதேவரால் பராமரிக்கப்பட்டு உரமும், ஜலமும் (உபதேசமும், அனுபவமும்) கொடுக்கப்பட்டு எலி, அணில் (காமம், கோபம்) முதலிய ஜந்துக்களால் தீண்டப்படாமல் பாதுகாத்து மும்மலம், மூவினை, முக்குணம், மூவாசை ஆகிய பனிரெண்டையும் பிராப்தத்தின்படி இயங்க வைத்து அதில் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்து பக்குவ காலத்தில் அது தானாக பழுக்க அதன் தோலை அகற்றி அதாவது ஜீவத்தன்மையை கழற்றி பழத்தின் சுவையை ஸ்ரீகுருதேவர் அனுபவிக்கிறார்.

அதாவது ஸ்ரீசத்சீடனும், ஸ்ரீசத்குருவும் ஒன்றாகிவிடுகிறார்கள்.

அதாவது படைஞனும், அரசனும் தம் கருவிகளை விட்டநிலை ஆகிறார்கள்.

**எல்லாம் நீ!**



# வார்த்தையில்லா வெற்றுப் பெட்டி!

எம் ஸ்ரீசுவாமிகள் (அப்பா), எம் அம்மா (லட்சுமி அம்மாள்) இவர்கள் குடும்பம் நடத்தும்போது ஸ்ரீசுவாமிகள் நிகழ்த்திய சாதனையை கவனித்து யாமும் இருமுறை (இதுவரை) அதன்படியே நடந்து சாதித்தோம்.

அதாவது ஸ்ரீசுவாமிகள் ஒரு மளிகைக் கடை வைத்து அதிவிமரிசையாக நடத்தி வந்தார். அவர் **கவனக்குறைவினாலும்**, கடன் தொல்லையாலும் கடையை நடத்த முடியவில்லை. அதனால் அதை விட்டுவிட்டார். அப்புறம் விதிவசத்தால் ஒருகாலத்தில் தம்மிடம் வேலை பார்த்து பின்பு அதிர்ஷ்டவசத்தால் பணக்காரராகி ரைஸ் மில், ஆயில் மில், துவரை மில் என பல தொழில்களுக்கு அதிபதியாய் இருந்த பழனிசாமி என்பவரிடம் எம் ஸ்ரீசுவாமிகள் வேலை பார்த்தார். அதை வேலை என்று சொல்லக்கூடாது! அங்கு ஒரு கோயில் உண்டு, அங்கு அமர்வார். அதுதான் அவர் வேலை!

அங்கு ஸ்ரீராமன் பாதுகை உண்டு. தினமும் அதை ஒரு பக்கா ஜலம் (செம்பில்) கொண்டு அபிஷேகம் செய்வார். அந்த பாதுகையில் திருத்துளாய் போட்டு நமஸ்கரிப்பார்! அங்கு உள்ள சாலக்கிராம சொரூபத்திற்கு நூறு மில்லிலிட்டர் பால் அபிஷேகம் செய்வார். அந்த திருத்துளாயை மூன்று வேளை சாப்பிட்டு ஸ்ரீபாததீர்த்தத்தையும் மூன்று வேளை அருந்துவார். மாலையில் அரைலிட்டர் பால் மட்டும் அருந்துவார்!

அந்த துவரை மில்லின் ஒரு பக்கம் அரை ஏக்கர் பூமி காலியாக இருந்தது. அதில் ஒரு கிணறு உண்டு. ஸ்ரீசுவாமிகள் அந்த பூமியை சுற்றி வேலி கட்டினார். அதை வண்டல் நிலமாக்கினார். அங்கு இருபது தென்னை மரங்கள் உண்டு. அந்த பூமியில் மா, கொய்யா, சீதாபழம், எலுமிச்சை, வாழை ஆகிய மரங்களும் மல்லிகை, பிச்சி, ரோஸ், சம்பங்கி, செவ்வந்தி, துலுக்க செவ்வந்தி ஆகிய புஷ்ப வகைகளும், கீரை வகைகளும், குரோட்டன்ஸ் வகைகளும் மற்றும் காய்கறி வகைகளும் உற்பத்தி பண்ணி பராமரித்து வந்தார். அந்த மூன்று வருஷம் ஆகாரம் ஏற்காமல் இருந்தார்.

ஆகாரம் உட்கொள்ளாமல் இருந்தாலும் வேலி கட்டுதல், பாத்தி கட்டுதல், திலா மூலம் தண்ணீர் இறைத்து மரம், செடி, கொடிகளுக்கு நீர் பாய்ச்சுதல், சிறுசிறு கொத்து வேலை ஆகிய மூன்றுபேர் பார்க்கும் கடின வேலைகளை தாம் ஒருவராகவே செய்வார். அவருக்கு உடலில் களைப்போ, மனச்சோர்வோ வந்ததில்லை. தோட்டக்கலையில் அவர் ஒரு நிபுணர் என்றே சொல்லலாம்.

ஸ்ரீசுவாமிகள் வீட்டு செலவுக்காக வாரம் ரூபாய் பத்து மட்டும் கொடுக்க செய்திருந்தார். இந்த பைத்தியம், தற்காலிக அம்மா, அக்கா ஆகிய மூவருக்கும் அந்த பத்து ரூபாய் போதாததுதான். ஆனாலும் முடித்துக்கொள்வோம்.

இதில் வேடிக்கை என்னவென்றால் ஸ்ரீசுவாமிகளுக்கென சில அன்பர்கள் உண்டு. அவர்கள் இவரை தேடி வருவார்கள். ஒன்றிரண்டு பேர் வந்தால் ஓட்டலில் ஏதாவது வாங்கிக் கொடுத்து அனுப்பிவிடுவார். ஐந்தாறு பேர் வந்தால் வீட்டிற்கு வந்து, லட்சுமி! இன்று மதியம் ஒரு மணிக்கு ஏழுபேர் உணவு அருந்த வருவோம். **எப்படியாவது முடித்து வை** என சொல்லி அம்மாவின் வார்த்தைக்கு காத்திராமலேயே சென்றுவிடுவார்.

அம்மாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். அவர்தான் வார்த்தைக்கு காத்திருப்பது இல்லையே! அம்மா தானே புலம்ப ஆரம்பித்துவிடும்! இந்த மனிதனுக்கு கொஞ்சம்கூட புத்தி என்பதே இல்லையே! இருந்தால் வீட்டில் என்ன இருக்கிறது, என்ன இல்லை என்பதை பார்த்து விருந்தினரை கூட்டி வருவார்! வரட்டும் அப்புறம் சொல்கிறேன் என முணுமுணுத்துக்கொண்டே எப்படியோ கடனோ, கைமாத்தோ வாங்கி அவர் சொன்னபடி செய்துவிடுவார்கள்.

ஸ்ரீசுவாமிகளோடு ஏழுபேர் சரியாக ஒரு மணிக்கு வந்துவிடுவார்கள். ஸ்ரீசுவாமிகளும், லட்சுமி என்றால் லட்சுமிதான், எவ்வளவு சீக்கிரம் முடித்து எங்களுக்காக காத்திருக்கிறாள் என அம்மாவை தூக்கி வைத்து பேசி காரியம் முடிந்ததும் அவர்களுடனே சென்றுவிடுவார். விருந்தினரிடம் முகம் கோணாமல் அன்பாக உபசரித்து ஆகாரம் முடித்து தாம்பூலம் கொடுத்து அவர்கள் போகும் போது, ஐயா! அடிக்கடி வாருங்கள். உங்களை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறோம் என புகழ்ந்து சொல்ல, அவர்களும் முகம் மலர்ந்து, அம்மா லட்சுமி! நீ நன்றாக இருப்பாய்! எங்கள் ஆசீர்வாதம் உனக்கு எப்போதும் உண்டு! சாப்பாடு வெகு அருமை! இனி அடிக்கடி வருவோம்! வரும்போது எங்கள் அன்பர்களையும் அழைத்து வருவோம் என்பார்கள். இந்த லட்சுமி அம்மாளும் முகம் மலர்ச்சியுடன், ஐயா! வாருங்கள், எத்தனை பேரானாலும் அழைத்து வாருங்கள். சாப்பிட வரும்முன் எத்தனை பேர் என்பதை தகவல் கொடுத்துவிடுங்கள். உங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் என அனுப்பி வைப்பார்கள். எம் தற்காலிக அம்மாவிற்கு **“அதிக பொறுமை”**.


**வீட்டின் தலை வாசல்**

ஸ்ரீசுவாமிகள் அவர்களை வழி அனுப்பி வைத்துவிட்டு வீட்டுக்குள் நுழைவார். இந்த அம்மா (லட்சுமி) லட்சார்ச்சனையை ஆரம்பிக்கும்.

என்ன மனுசனையா நீர்? வீட்டில் என்ன இருக்கிறது, என்ன இல்லையென என்றாவது நீர் பார்த்ததுண்டா? ஏழு பேரை சாப்பிட கூட்டிச் செல்கிறோமே அரிசி உண்டா? பருப்பு உண்டா? என பார்த்ததுண்டா? பணம் இருக்கிறதா என கேட்டதுண்டா? உங்கள் அப்பன் வீட்டு கடையா அரிசிக்கடையும், மளிகைக்

கடையும்? கடைக்காரன் உம்மிடமா பணம் கேட்கிறான்? நம் வீட்டில் இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற எண்ணமாவது உண்டா? வாய்க்கு ருசியாக எதுவும் வேண்டாமையா, பசிக்கு ஏதாவது போடவேண்டாமா? எனக்கு வீட்டில் ஆண்பிள்ளை ஒருவர் இருக்கிறார் என்று சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது!! என இன்னமும் ஏதேதோ பேசி திட்டி முடிக்கும் அந்த லட்சுமி அம்மா!



அந்த ஸ்ரீசுவாமிகளும் அதிஆனந்தத்துடன் ரசித்துக் கேட்டுக்கொண்டே அமர்ந்திருப்பார்! ஒரு வார்த்தையாவது மறுப்பு வார்த்தையோ, பதில் விளக்கமோ, போதும் நிறுத்து என முற்றுப்புள்ளியோ அவர் வாயில் இருந்து வரவே வராது! அதே சமயத்தில் முகத்தில் கவலை, கோபம், பயம், சலிப்பு, அதிருப்தி ஆக எந்த குறியும் வரவே வராது! இதில் இன்னொரு விசித்திரம் செய்வார்! அந்த அம்மா பேச ஆரம்பிக்கும்போதே வீட்டினுள் சென்று ஓர் பெரிய ஓலைப்பெட்டியை (மூன்று, நான்கு குடம் ஜலம் கொள்ளும் அளவுக்கு பெரிய பெட்டி) அந்த அம்மாவுக்கும் அவருக்கும் மத்தியில் வைத்துவிட்டு கையை கட்டிக்கொண்டு கண்களை மூடாமலே இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டே சிரித்த வண்ணம் அமர்ந்திருப்பார். கிட்டத்தட்ட அரைமணி நேரம் அந்த அம்மா பேசி களைத்துப்போகும்.

இனி பேச இயலாது என்று தெரிந்ததும் இந்த ஸ்ரீசுவாமிகள் அந்த அம்மாவின் அருகில் சென்று **ஆதரவுடன்** அந்த அம்மாவின் தலையை தடவி, மிருதுவாக வருடி அவர் துண்டை வைத்து அந்த அம்மாவின் முகத்தை துடைத்து (கண்ணீரும் ஆறாக ஓடியிருக்கும்), என்ன லட்சுமி! கோபமும், ஆத்திரமும் தீர்ந்ததா? எவ்வளவு அழகாகப் பேசினாய்? மேடை பிரசங்கி, அரசியல்வாதி கூட உன்னாட்டமா பேசமாட்டான் போ? உன் பேச்சை அப்படியே ஒரு டேப் எடுத்து வைக்கலாம் என நினைப்போம். ஏன் என்றால் அடிக்கடி போட்டு கேட்டுக் கொள்ளலாமே என்றால் அடிக்கடி உன் வார்த்தையை அனேக விதவிதமாகக் கேட்கலாமே என்ற எண்ணத்தால்தான் அப்படி செய்யாமல் இருக்கிறோம்! ஒரு ஸ்பீக்கர் வைத்து நன்றாக கேட்போம் என்றால் உன் வார்த்தை எமக்கே உரியது, உன் பையனுக்கும் உரியது. மற்ற எவரும் கேட்க அனுமதியோம்!

உன் பையனுக்கு **இந்த பாடம் அவஸ்யம் தேவை!** ஆகவேதான் உன் பையனையும் உடன் அமரவைத்தே இப்பாடம் ஆரம்பிக்கிறோம்! ஆமாம் லட்சுமி!!! ஒரு அரை மணி நேரத்திற்கு மேல் **லட்சார்ச்சனை** செய்தாயே! அந்த லட்சம் வார்த்தையிலும் ஒரு வார்த்தையாவது **இந்த பெட்டியில் காணோமே.** பெட்டி காலியாகவே இருக்கிறது. யாம் பெட்டி நிறைந்திருக்கும் என்றல்லவா பார்த்தோம். அத்தனையும் வீணாகிவிட்டதே. (அவர் பெட்டி நிறையவில்லை எனச்சொன்னது, "இதயத்தில் தங்கவில்லை" எனப்பொருள்) அதிகம் பேசி களைத்துவிட்டாய், உன் தொண்டை நோவும்!! வாய் வலிக்கும், ஐயோ பாவம்!!! எனச்சொல்லி குளிர்ந்த மண்பானை ஜலத்தை ஒரு பெரிய செம்பில் மோண்டு கொடுப்பார்!


அந்த அம்மாவுக்கு அந்த நேரம் ஜலம் தேவை. உடனே வாங்கி கடகடவென குடித்து தம் முந்திசேலையால் தம் முகம், கைகால்களை துடைத்துக்கொண்டு, ஐயா...! இப்படி கல்லாட்டமா இருந்தால், நான் முட்டினால் என் மண்டைதானே உடையும்! உமக்கென்ன? இப்படி **இடிச்சபுளியாட்டமாக** இருந்தால் உமக்கு ரோஷம் எங்கே வரப்போகிறது? வெட்கம், மானம், சூடு, சுரணை உமக்கு இருந்தால்தானே?


அவர் இடைமறித்து, ஆமாம் லட்சுமி! அது எந்த கடையில் கிடைக்கும்? பணம் தருகிறோம் கொஞ்சம் வாங்கி வா! கடையில் இல்லாமல் உன்னிடம் இருக்கும் என்றால் **கொஞ்சம் கடனாக தா**! பிறகு திருப்பிக் கொடுத்துவிடுகிறோம்! உன்னை யாம் **கட்டிய அன்றே** அனைத்தையும் உதறிவிட்டோமே என்பார்!

குழந்தைகளே!

யாமும் இந்த மாதிரி பாடம் இரண்டு முறை அனுபவித்தோம். ஆனால் பெட்டியை வைப்பதில்லை. சும்மாவே சிரித்துக்கொண்டே இருப்போம். பெரிய சிரிப்பல்ல! **புன்முறுவல்தான்**. ஆனால் எம் புன்முறுவல் எம் தற்காலிக மனைவியின் வார்த்தையை அடக்கிவிடும். **"அது மாயாஜாலசிரிப்பு"** ஆகும். எம் சிரிப்பின் பொருள் **அந்தராத்மாவாக** இருக்கும்; இதை எவரும் அறியமுடியாது. அது **அதிரகஸ்யம்!**

**எல்லாம் நீ!**





# இயற்கையே இறைவன் !

குழந்தைகளே!

பொறுமையாகவும், அடக்கமாகவும் இருந்தால் இந்த கலியுகத்தில் வாழமுடியாதே என எண்ணுகிறீர்களா? **ஓர் உண்மையைச் சொல்கிறோம்.**

**“நீ அடங்கி நடந்தால் இவ்வுலகம் உன்னுள் அடங்கும்!**
**நீ அடக்க நினைத்தால் இவ்வுலகம் உன்னை அடக்கிவிடும்!”**

இந்த உண்மையை எம் ஸ்ரீசுவாமிகள் அனுபவ வாழ்க்கையிலும் இந்த பைத்தியத்தின் வாழ்க்கையிலும் நடந்த சில சம்பவங்களை தருகிறோம் உணர்க!

ஸ்ரீசுவாமிகள் பணத்தை கைகளால் தொடுவதில்லை, ஆச்சர்யமாக இருக்கிறதா? அப்படியும் இக்கலியின் கோரமான பிடியில் வாழ்க்கை நடத்த முடியுமா என கேட்கத் தோன்றுகிறதா?

**இறை உணர்வோடு இருந்தால் அவஸ்யம் முடியும்!**

எம் ஸ்ரீசுவாமிகள் வெற்றிலை பாக்கு போடும் பைபோல் ஓர் சிறிய பை வைத்திருப்பார். அதில் இரு அறைகள் உண்டு. ஒன்றில் பணநோட்டுகளும் ஒன்றில் நாணயங்களும் இருக்கும். மளிகைக் கடைக்கோ, ஷாப்பிங்கிற்கோ, ஜவுளிக் கடைக்கோ எந்த கடைக்குச் சென்றாலும், ஹோட்டலுக்கு சென்றாலும் சாமான் வாங்கிய பில்லை கொடுத்தாலோ, சாப்பிட்ட பில்லை கொடுத்தாலோ பணம் எடுத்து கொடுக்கமாட்டார். பையை விரித்து நீட்டுவார்; உன் பில்லுக்கு எவ்வளவு தேவையோ அதை எடுத்துக் கொள்; இந்த பக்கம் நோட்டு அந்த பக்கம் சில்லரை என்பார். **பழகியவர்கள்** பணிவோடு சரியாக எடுத்துக் கொள்வர். **பழகாதவர்கள்,** ஏன் சாமி? இப்படி பணத்தை நீட்டினால் நாங்கள் சரியாகத்தான் எடுக்கிறோம் என உங்களுக்கு எப்படி தெரியும்? நாங்கள் அதிகமாக எடுத்தால் உங்களால் காண முடியாதே? நீங்கள் ஏமாந்து போவீர்களே! என கேட்பார்கள்.

அதற்கு ஸ்ரீசுவாமிகள் வாசகமாவது:

ஐயா! தற்காலிகமாக இவரால் காண முடியாதுதான். ஆனால் உங்களுக்குள்ளும், எமக்குள்ளும், இந்த பணத்தினுள்ளும் **ஒருவன் இருக்கிறானே!** அவன் அறியாமல் எங்கும் எப்படியும் ஓர் காரியம்

நடைபெறாதே! நீங்கள் ஏன் சந்தேகமும் பயமும் அடைகிறீர்கள்? அவன் சித்தம் எதுவோ அது நடந்தே தீரும். **இது அவன் உலகம்தானே?** என வேடிக்கையாக சிரித்துக் கொண்டே பையை நீட்டுவார், அவர்களும் **கணக்கு தவறாமல்** பைசா மாற்றி எடுத்துக் கொண்டு, ஸ்வாமி! எங்களை மன்னிக்கவும் என பணிந்து கூறுவார்கள்! இது பல வருஷங்களாக நடந்த கதையாகும்!

மேலும் ஆட்டோக்காரர்களுக்கும், ரிக்ஷாகாரர்களுக்கும், குதிரை வண்டிக்காரர்களுக்கும் இதே நிலைதான். முதலில் திகைப்பார்கள் பின் திருந்திவிடுவார்கள். ஓர்சமயம் ஒரு ரிக்ஷாக்காரன் இந்த சாமி இப்படி விவஸ்தையில்லாமல் பையை நீட்டுகிறாரே, எவரிடமும் வாடகையும் பேசுவதில்லை, ராஜா மாதிரி ஏறி உட்கார்ந்துவிடுகிறார், சாமி வாடகை என்ன தருவீர்கள் எனக்கேட்டால்

**உனக்கு எவ்வளவு தேவையோ அதை எடுத்துக் கொள்**

என்கிறார். இவர் நாம் எவ்வளவு நோட்டை எடுக்கிறோம், சில்லரையை எவ்வளவு எடுக்கிறோம், மீதி எவ்வளவு போடுகிறோம் என கவனிக்காமல்

**சிரித்த முகத்துடனே கண்களை மூடிக்கொள்கிறாரே!**

கொஞ்சம் அதிகமாக எடுத்தால் இவர் கவனிக்கவா போகிறார்? என எண்ணி **ஓர் நப்பாசையினால்** தேவைக்கு அதிகமாகவே எடுத்துக் கொண்டான் போலும்! அவன் மறுநாள் பணத்தாலோ, உடலாலோ கடும்கஷ்டம் அனுபவித்து ஸ்ரீசுவாமிகளை அவர் இருக்கும் கோவிலுக்கு தேடிச் சென்று வருந்தி அழுது மன்னிப்பும் கேட்டு உண்மையை சொல்லி எவ்வளவு அதிகமாக எடுத்தானோ அதையும் அப்படியே கொடுத்து மேலும் அபராதமாக ரூபாய் பத்தும் கொடுத்துப் பார்த்தானாம். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே,

குழந்தாய்!

**பணம் ஓர் உயிர்கொல்லி! அது ஓர் நச்சரவம்!**

அளவோடு தொட்டுப் பழகினால் அது வாழ வைக்கும்! தேவைக்கு அதிகமாகத் தொட்டால் அது தீண்டிவிடும். சிலருக்கு அவ்விஷம் உடனே ஏறி கடும் அவஸ்தைக்குள்ளாக நேரிடும்!

சிலருக்கு அவர்கள் **புண்ணிய வினையை** அனுசரித்து சிலநாளோ, சிலகாலமோ சமயம் பார்த்து தீண்டும். ஆகவே பணம் விஷயத்தில் சற்று ஜாக்ரதையாக இரு என்றார்கள். மீதிப்பணம் எவ்வளவோ அவ்வளவுதான் பையில் போட அனுமதித்தார்கள். அபராத தொகை ரூபாய் பத்து வாங்கவில்லை.


குழந்தாய்!


இந்த கலியுகத்திலும் நாம் **அடங்கி** வாழ்ந்தால் இந்த இல்லாத உலகம் நம்மை வாழ வைக்கும். அதற்கு மாறாக பணம், புகழ், பட்டம், பதவி, அந்தஸ்து, ஆடம்பரம் இவைகளால் **உலகை அடக்கி ஆள** (உலகில் ஆழ) நினைத்தால் உலகம் நம்மை பல நிலைகளிலும் வறுத்தி கொன்றுவிடும். ஆகவே


**அடங்கி இருங்கள்!**
**அடக்க எண்ணாதீர்!!**
**மேலும் பண விஷயத்தில் சர்வ ஜாக்ரதையாக இருங்கள்.**

**இது அவன் உலகம்!**
**அவன் ஆளுகை!!**
**அவன் நாமாவைச் சொல்லி ஆனந்தமாக வாழலாம்!!!**

**எல்லாம் நீ!**








# உலகியல் மார்க்கத்தில் அவனால் மாற்றம்!

இதனுடைய இருபதாம் வயதில் இதன் அன்புத்தாய் இறைவனடி சேர்ந்தார். இதன் இருபத்தியோராம் வயதில் சொர்ணம்மாள் என்ற வதுவையை திருமணம் செய்தார்கள்! இதுக்கோ திருமணம் என்றாலே **பிராணனை வாங்கும் நரகக்குழி** என கருத்து உண்டாயிற்று. திருமண பத்திரிக்கையும் அடித்துவிட்டார்கள். அதை எல்லா ஊர்களுக்கும், உறவினர்களுக்கும் கொடுத்தாகிவிட்டது. திருமணத்திற்கு ஆறு தினங்கள் முன்பாகவே **திருமணத்திற்கு பயந்து** திருக்குறுங்குடி மலையில் உள்ள சிறிய நம்பி கோயிலுக்கு சென்றுவிட்டது!



மறுநாள் ஸ்ரீசுவாமிகள், அண்ணா, அக்கா ஆகிய அனைவரும் திடுக்கிட்டுப் போனார்கள். ஒருநாள் பூராவும் உள்ளூரில் உறவினர் வீடுகளில் தேடினார்களாம்! இல்லையென்றவுடன் அண்ணா அழுதாராம். தம்பி இல்லாமல் நான் இருக்கமாட்டேன் என்று ஸ்ரீசுவாமிகளிடம் உறுதியாகச் சொல்ல, ஸ்ரீசுவாமிகள் சிரித்துக்கொண்டே, அவன் எங்கே இருப்பான்? நம்பி கோவிலில்தான் இருப்பான் எனக்கூறி அண்ணாவையும் அழைத்துக்கொண்டு நம்பி கோவிலுக்கு வந்துவிட்டார்கள்! அங்கே இதை கண்டுகொண்டார்கள். கீழே இறங்கும்படி கேட்டார்கள். அது சம்மதிக்கவில்லை. ஸ்ரீசுவாமிகள் சிரித்துக்கொண்டே, நீ இங்கேயே இருக்கலாம். உன் பாதையை தடுக்கமாட்டோம். இரண்டு கேள்விகள் கேட்கிறோம்; அதற்கு தக்க விடை கூறிவிட்டால் நீ இங்கேயே இரு என்றார்கள்! அதுவும் சரி என சம்மதித்தது!

**ஸ்ரீசுவாமிகளின் கேள்விகளாவது:**

1. நீ இங்கே இருக்கும்போது மேலே வனங்களில் சஞ்சரிப்பாய்! பசிக்கு உணவு எப்படியும் கிடைக்கும். **அவன் உன்னை கைவிடான்!** உன் பிராப்தாதீனமாக சில மஹான்களையும், சில மஹரிஷிகளையும் நீ தரிசிக்கலாம். அவர்களை கண்டால் என்ன செய்வாய்? என்ன கேட்பாய்??

உ. உன் சாதனையை அனுசரித்து கடுமையான சோதனைகளும் நடைபெறும். அதாவது சொர்க்காதிபதிகள் (தேவர்கள்) சாமான்யர்கள் அல்ல. உன் முயற்சியை கெடுக்கும் நோக்கத்துடனோ, உன் மனம் உறுதியாக இருக்கிறதா என்று பரீட்சிக்கும் நிலையிலோ அப்ஸரஸ் ஸ்திரீகளில் எவளாவது ஒருத்தி வருவாள். அவளைக் கண்டால் நீ என்ன செய்வாய்? என்ன கேட்பாய்??

அது திகைத்தது! பின் தோன்றிய பதிலை சொன்னது. அதாவது மஹறிஷிகளை கண்டால் நமஸ்காரம் செய்து **பணியும்; ஆனந்தம்** கொள்ளும். **அவர்களுடன் போகாது.** ஞான சம்பந்தமான அறிவுரை சொன்னால் **தங்கள் வாசகத்திற்கு ஒத்திருந்தால்** ஏற்றுக்கொள்ளும். ஏற்புடையது இல்லையாயின் அதை அப்போதே **மறந்துவிடும்.** அதை **குறைவாகவோ, அலட்சியமோ** செய்யாது! கண்கட்டி வித்தையாகிய செப்படி வித்தைகளை - "**சித்துக்களை**" எக்காலமும் ஏற்காது! இது உறுதி!

பெண் விஷயத்தை சொல்லும் போதுதான் **இங்கேயே கேள்வி உண்டாகிறது!** தேவலோக பெண்கள் என்றாலே அதை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களை **வெறுத்தாலும் சிரமத்தில் அகப்பட்டுக் கொள்வோம்**! அவர்களை **விரும்பினாலும் சிரமத்தில் அகப்பட்டுக் கொள்வோம்!!**

**"விருப்பும் வெறுப்பும் அற்ற சமநிலையை யாம் பெறவில்லை"** என்றோம்.

**இதற்கு மார்க்கம் என்ன?** என்றோம்!!!

ஸ்ரீசுவாமிகள் சொன்னார்:

இந்த மார்க்கம் சொல்லி விளக்கக் கூடியது அல்ல. செயல் விளக்கமாக உணரக்கூடியது ஆகும். அந்த செயல் விளக்கம் இந்த **காட்டிலோ, ஆலயங்களிலோ, ஆஸ்ரமங்களிலோ** இல்லவே இல்லை. "**குடும்பம்**" (கணவன், மனைவி) என்ற சகதி அல்லது சேர் அல்லது **சாக்கடைக்குள்தான்** இருக்கிறது. இப்போது உனக்கிருக்கும் **மனோவிரக்தி மின்னலைப்** போன்றது. அதாவது தோன்றி மறைவது. அதாவது பிரசவ வைராக்கியம், ஸ்மஸான வைராக்கியம் போன்றதாகும். இது நீடித்து நிற்காது. சிலகாலம் உன் வைராக்கியத்தினால் சாதனை பண்ணிணாலும் தவறி இந்த சம்சாரத்தில் (சாக்கடையில்) விழுந்துவிட்டால் **பின் எழமுடியாது!!!!**

இந்த சாக்கடையில் இருந்து கஷ்டம், கவலை, துக்கம், துயரம் இவைகளை **அனுபவித்துக்கொண்டே** அவனை நீ நினைத்து உருகினால் அவசியம் பலன் உண்டு. **"இது கலியுக தோஷம்"**.

"அங்கிருந்து கொண்டு (சத்தியத்தில் இருந்து கொண்டு) இங்கு உள்ள விஷய அனுபவத்தை எண்ணினால்" அது மஹாபாபம் ஆகும். பாசமும், பற்றும் உடனே பற்றிக் கொள்ளும்.

"இங்கிருந்து கொண்டு (குடும்ப சாகரத்தில் இருந்து கொண்டு) அங்குள்ள பேரின்பத்தை எண்ணிஎண்ணி அனுபவம் கூட்டினால்" சீக்கிரம் முதிர்ச்சி அடைவாய். **முக்தி பெறுவாய்** என்றார்.

மறுவார்த்தை பேசவில்லை. உடனே கீழே இறங்கிவிட்டது. திருமணத்திற்கு முன் எம் ஸ்ரீசுவாமிகள் கொடுத்த வாசகம்:

குழந்தாய்!

உனக்கு வரும் மனைவி

**"உன் வழிக்கு வரமாட்டாள்!**
**உன்னை உன் வழியில் தடை செய்யவும் மாட்டாள்!!**
**அவளை நீ கண்டு கொள்ளாதே! கண்டிக்காதே!**
**ஆனால் நெறி தவறி நடக்க மாட்டாள்!!** இது உண்மை" என்றார்கள்.

இந்த பதில் எமக்குப் போதும் என ஆகிவிட்டது.



**திருமதி. சொர்ணம்மாள்**

குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட காலத்தில் திருமணம் நடைபெற்றது போலும்? இதில் முக்கியம் என்னவென்றல் நாளை விடிந்தால் அதிகாலை ஐந்து மணிக்கு முகூர்த்தம். அன்று இரவு (முகூர்த்தத்திற்கு முன் இரவு) பத்து மணியிலிருந்து நம் பஜனைமட அன்பர்கள் திவ்யநாம பஜனையை விடியவிடிய நடத்தினார்கள்! இதுவும் பஜனையில் கலந்துகொண்டு பேரானந்தம் அனுபவித்துக் கொண்டிருந்தது. அதிகாலை நான்கு மணி சுமாருக்கு இதை **சிற்றின்ப நுகர்ச்சிக்காக** துரிதப்படுத்தினார்கள். பேரின்பத்தை இழக்க முடியாத்தன்மையினாலும், சம்சாரம் என்ற **புதைச்சேற்றிலே** அழுத்தப் போகிறார்களே என்ற துக்கத்தினாலும் சற்று வாய்விட்டே **கதறி அழுதது** இந்த வைத்தியம். அதுசமயம் அது திருமண வீடாகத் தெரியவில்லை. ஏதோ துக்க வீடாக காட்சி அளித்தது. அனைவரும் என்ன? என்ன? என துக்கம் விசாரித்தார்கள்! பின் நிலைமையை உணர்ந்தனர். அனைவரும் ஆச்சர்யமும், அதிசயமும் கொண்டு இதை சமாதானப்படுத்தினார்கள் போலும்.

"திருமணம் வேண்டாம் என கதறி அழும் புதுமாப்பிள்ளையை இன்றுதான் இந்த வீட்டில்தான் காண்கிறோம் என்றார்கள்!!!"

## இறைவன் போட்ட ஆணையை எவர் மீற முடியும்?

எப்படியோ இறைவன் நாம சங்கீர்த்தனத்துடனும், இறைவன் கருணையுடனும் அவன் அருளால் திருமணம் நடந்தேறியது. **அன்று இரவு சாந்தி முகூர்த்தம். இதை எழுத முடியவில்லை; எழுதக் கூடாது?** ஆனால் உங்களுக்காக எழுதுகிறோம்.

இதன் தற்காலிக மனைவியாக வந்திருந்த அந்த பெண்குழந்தை பால் கொணர்ந்து கொடுத்தது. இது பாதி அது பாதியாக சாப்பிட்டு முடித்தோம். அன்று இரவு பக்தி சம்பந்த சில கதைகளை சொல்லி அதை உறங்க வைத்துவிட்டது. அதிகாலை மூன்று மணிக்கு எழுந்தவுடன், அம்மா சொர்ணம்! இந்த திருமணம் **உலகிற்கே தவிர நம் இருவருக்கும் அல்ல;** நாம் இருவரும்

இறைவனின் குழந்தைகள்! நீ சாந்தமான பெண்! சாமர்த்தியமான பெண்! அதிர்ஷ்டசாலி பெண்! அற்புதமான பெண்! **"இந்த உடல் சம்பந்த உறவு நமக்கு வேண்டாம்" தெய்வீக உள்ளம் சம்பந்த உறவை ஏற்றுக் கொள்வோம். ஆனால் இதை உலகிற்கு காட்டிக்கொள்ள கூடாது** என்றது இந்த பைத்தியம்.

"எமதய்யன் (கண்ணன்) திருடன் கருணையினால்" அவள் சொன்னாள்:

நீங்கள் எது சொன்னாலும் அதுவே எனக்கு வேதவாக்கு! நீங்கள் எதைச் செய்தாலும் அது என் இறைவன் (முருகன்) செயல் இது உறுதி என பிரமாணமாக ஒப்பித்தாள் (ஒப்புவிக்க வைத்தான்). இந்த ரகசியமான உறவு **இரண்டரை** ஆண்டுகள் நடந்தன. **இது பிரமாண உண்மை.**

## நம்பினால் நம்புங்கள் நம்பாவிட்டால் போங்கள்!

"அது பற்றி இதுக்கு கஷ்டம் கவலை இல்லை!!"

எம்மைத் தள்ளுங்கள்; அந்த குழந்தை அத்தனை உத்தமியாக இருந்தது. இரண்டரை வருஷம் கழித்து இது எப்படியோ (அவன் கருணையினால்) உலகிற்கு தெரியவந்தது போலும்! பின் இதுபற்றி இதன் அண்ணா, அண்ணியும் சேர்ந்து அதிர்ச்சியும், கவலையும் அடைந்து ஸ்ரீசுவாமிகளிடம் சொல்ல (அனைத்தும் உணர்ந்த அவர்) தண்ணீருக்கு அடியில் குசு (காற்று) விட்டால் மேலே வராமலா போகும் என சிரித்துக் கொண்டே அம்மூவரும் இணைந்து **அதை விளக்கி பின் செயல்படவைத்தனர்.** அதை காரணமாகக் கொண்டு இறைவன் கிருபையினால் மூன்று பெண் குழந்தைகள் உலகிற்கு வந்தார்கள் போலும்?



**பைத்தியத்தின் தற்காலிக குடும்பம்**

எம் ஸ்ரீசுவாமிகள் வாக்குப்படி எம் தர்மபத்தினியும் பஜனையோ, சத்சங்கமோ, காடுகளில் மஹான்களின் சந்திப்பிற்காகவோ இது எங்கு சென்றாலும் ஏன்? எதற்கு? என கேட்டதில்லை. அதைப்போலவே அவள் சினிமாவுக்கு (காம்பவுண்டில் சில பெண்கள் போகும்போது) எம் அனுமதியுடன் செல்வாள். யாமும் தடுப்பதில்லை. வருஷம் இரு முறையாவது டூரிஸ்ட் பஸ் மூலம் சில கோவில்களுக்கு போகும்போது எம்மையும் அழைப்பாள். யாமும் தடை செய்யாமல் கூட்டிச் செல்வதுண்டு. செல்லும் இடங்களில் அவள் அசைவ உணவு கேட்டாலும் வாங்கிக் கொடுப்பதுண்டு. அப்படி பிரயாணம் செய்யும் போது ஆகார வகைகளோ, வெற்றிலை, பாக்கு, புஷ்பம் இவைகளோ குறைவின்றி வாங்கிக் கொடுப்போம்.

குறை என்பதே அந்த குழந்தை அறியவில்லை. அவள் மனம் நிறைவுடன் கேட்பதை கொடுத்தும், சொல்வதைச் செய்தும் அவள் வாழ்க்கை நாடகத்தில் **“குறைவின்றி திறம்பட நடித்தோம்”.** மனைவி என்ற அந்த பெண்குழந்தை வந்த காரியம் 1995-ல் முடிவுற்றது. அவள் வாழ்க்கை முடிவுறும் சமயம் ஹைதராபாத் சென்று விட்டோம். அங்கு எம் அன்பின் சாந்தா - திருமலையின் மூத்த குமாரன் சுதாகர் பணிபுரிந்து கொண்டு மனைவியுடன் தங்கி இருந்தான். இருபது நாட்கள் அங்கு தங்கி இருந்தோம். யாம் அங்கு சென்ற ஒரு வாரத்தில், ஒருநாள் இரவு பனிரெண்டு மணிக்கு எம் திருவடியின் சமீபம் ஏதோ சப்தம் கேட்க எழுந்து அமர்ந்தோம்! தற்காலிக மனைவி அங்கு நிற்கப் பார்த்தோம். ஆச்சர்யமாகிவிட்டது.

**அது :** என்ன சொர்ணம் இந்த நேரத்தில் இங்கு எப்படி வந்தாய்?

**அவள்:** தங்களைப் பார்த்து **சொல்லிப்போக** எண்ணினேன். ஆகவே சொல்ல வந்தேன்.

**அது :** எம்மைப் பார்க்க எப்படி நீ தனியாக வரமுடியும்? ஒரு டவுண் பஸ்ஸில் ஏறுவதானாலும் உன் குழந்தை துணை வேணும். அல்லது யாராவது துணை வேணும். ஆயிரம் மைல் தாண்டி எந்த ரயிலில் யார் துணையுடன் வந்தாய்?

**அவள்:** (சிரித்தாள்) உங்களை **தீர்க்கமுடன் எண்ணினால்** வரமுடியாதா? அந்த ஆற்றல் தாங்கள் எனக்குத் தரவில்லையா?

**அது : முடியும்**. ஆனாலும் ஆச்சரியமாக இருக்கிறதே!! நீ ஆஸ்பத்திரியில் பெட்ரெஸ்டில் அல்லவா இருப்பதாக அறிந்தோம்! பெட்டில் இருந்தவள் இவ்வளவு தூரம் எப்படி வந்தாய் என்பதுதான் எமக்குப் புரியவில்லை! (எனச்சொல்லி சற்று கூர்ந்து அவள் பின்னால் நோக்கினால் அங்கே எமதய்யன் திருடன் திருட்டு முழியுடன் நின்றிருந்தான்) ஏனையா! கூட்டி வந்ததுதான் வந்தாய் நீ முன்னால் வரக்கூடாதா?

**கண்ணன்:** அந்த குழந்தை உன்னை பார்க்க விரும்பியது. அந்த குழந்தை சொன்னாதவது: அவர் எங்கிருக்கிறாரோ? எங்கும் நலமாகவே இருப்பார்! அவருக்கென்ன குறை? எனக்கும் குறையில்லை. **“எம்மை உண்மையாக நினைத்தால் நீ எம்மை காணலாம்”** என நீ சொன்னதை எண்ணி அந்த குழந்தை உருகி அழுதது. யாமோ சர்வாந்தர்யாமி; இதயவாஸி; தீனபந்து; நீயோ மனமற்றவன், நீ மறந்துவிட்டாய். அப்படியானால் யாம் உன் பணியை குறையில்லாமல் செய்ய வேண்டாமா? இதை யாம் செய்யவில்லையானால் பக்தர்களால் மேலே சொன்ன நாமாக்கள் எமக்கு பொருந்தாதே! **உன்**

**வாசகமும், எம் வாசகமும் ஒன்றுதானே.** ஆனால் நீயோ **தூலதாரி!** யாமோ **சூத்திரதாரி**! நீ தூலத்தில் இருந்துகொண்டே அனைத்தையும் **ஒன்றென உணர்வாய்! ஆனால்** யாமோ அவை அனைத்தையும் **தனித்தனியாக அறிவோம்!!!** யாம் அறிந்ததால் **குறைகளை நீக்குகிறோம்!** நீ ஒன்றானதால் குறையில்லை, **சும்மா இருக்கிறாய்!**

**அது:** ஓ.. எம் ஐயனே! இந்த **கபடமான** வார்த்தைகள் இங்கு வேண்டாம். உன் வார்த்தைளின் **மாயாஜாலத்தில்** யாம் சிக்கிக் கொண்டால் எம்மையே மறந்துவிடுவோம். அந்த குழந்தையை நீ ககனமார்க்கமாக கொண்டு வந்ததை அது அறியுமா? அறியாதா? உன்னை அது தரிசித்ததா?

**கண்ணன்:** அது எப்படி அறிய முடியும்? எப்படி தரிசிக்க முடியும்?? அதுவோ **கர்மா சம்பந்தம்**! யாமோ **மாயாசம்பந்தம்**!! நீயோ **அதீத** (சம்பந்தமில்லாத) **சொரூபம்**!!! எப்படி ஒன்றுடன் ஒன்று இணையும்?

அது கர்மாவை விட்டால் யாமாகலாம்! எம் மாயையை விட்டால் **அது நீயாகலாம்**! இந்த கணக்கு எல்லாம் உனக்குத் தெரியும்! எமக்கு இப்போது தேவை இல்லை. சரி, வீணாக பேசி காலம் கடத்த வேண்டாம். யாம் என்ன செய்ய வேண்டும்? உன்னை அழைத்தாள், உன்னிடம் சேர்த்தோம். இனி அங்கு சேர்க்க வேண்டியதுதானே? சீக்கிரம் சொல்.

**அது:** ஏன் இந்த அவசரம்?? உனக்கு காலம் ஏது? காலம் உன் கையில்தான் சுழன்று கொண்டிருக்கிறதே. இதை யாம் அறியாததா? அதுவோ இனி இந்த வினைப்பூமியில் இருக்கப் போவதில்லை. உன் திவ்விய தரிசனத்தை **ஒரு வினாடிதான்** அறிவுறுத்தி அப்புறம் அழைத்துச் செல்வேன்! உன் பாட்டன் சொத்து குறைந்தா போய்விடும்? (என விகடமாகச் சொன்னோம்)

**கண்ணன்:** (கடகடவென சிரித்தான்) நீ சுத்த பைத்தியம் போ! உன் நிலையை பார்க்கும்போது, **“சொன்னாலும் சுனையில்லை! சுட்டாலும் நாற்றமில்லை!!”** (எம் **பிரபுவும் ஜீவ உபாதை களைந்து** அந்த குழந்தையை ஆட்கொண்டான். தரிசனம் தந்தான். **அது பதமுக்தியே!** பரமுக்தி (ஜீவன் முக்தி) அல்ல!

அவள் அமைதியாக, **“நான் போறேன்”** என அனுமதி கேட்டாள். மாயா சொரூபமும், அவித்யா சொரூபமும் மறைந்தன. அவள் இருந்த திருமந்திர நகரில், அவள் தெளிவாக இருக்கும்போது இந்த பைத்தியத்தின் **தற்காலிக அண்ணன்**, என்னம்மா சொர்ணம் என் தம்பியை வரச்சொல்லவா? அல்லது நான் போய் கூட்டி வரவா? எனக்கேட்டாராம். அதற்கு அவள், வேண்டாம் நான் சொல்லிவிட்டு வந்துவிட்டேன் என்றாளாம். (இங்கு நடந்த சம்பவம் அவர் அறியார்) அன்று இரவு அந்த குழந்தை அவஸ்தை இல்லாமல் ஆனந்தமாய் சொர்க்கத்தை அடைந்தாள்.

அந்த பைத்தியமும் நாற்பது தினங்கள் கழித்து திருமந்திரநகர் வந்தது. யாம் வரும் முன்னே கர்மாக்கள் அனைத்தும் நடந்து முடிந்தன. அங்கு உள்ள ஜீவர்களும் எம்மை தெய்வாதீனமாக மறந்துவிட்டனர். எம் திருடன் (ஸ்ரீகண்ணன்) கிருபையினால் எம் திருட்டு நாடகத்தையும் சுகமாக முடித்துக்கொண்டோம்!

**எல்லாம் நீ!**



# வஸிஷ்டர் அருளிய வாஸிஷ்டம்!



**திரு. ஆத்தியப்பன்**

முன்பு ஸ்ரீசுவாமிகள் திண்டுக்கல்லில் சஞ்சாரம் செய்த சமயம் ஓர் ஸ்ரீமஹான் வாயிலாக ஸ்ரீசுவாமிகளுக்கு கிடைத்த வாக்கு: "ஸ்ரீராமனுக்கு ஸ்ரீவஸிஷ்டர் அருளிய ஸ்ரீஞானவாஸிஷ்டம் என்ற நூல் எப்போது உன் கைகளில் சிக்குகிறதோ அப்போதுதான் **ஜீவன் முக்தி நிலை** நீ பெறமுடியும்" எனச்சொன்னாராம்.

ஸ்ரீசுவாமிகளுக்கு பல ஆண்டுகளாக பல ஊர்களில் தேடியும் ஸ்ரீஞானவாஸிஷ்டம் கிடைக்காமல் பழைய பேப்பர், பழைய புத்தகம் வாங்கி வியாபாரம் செய்து வரும்போது இதனுடைய பெரியப்பா மகன் (தற்காலிக அண்ணன்) ஆத்தியப்பன் என்பவர் மூலமாக கிடைத்தது. அக்காரணத்தால் அந்த ஆத்தியப்பனுக்கு தேவையை பூர்த்தி செய்வோம் என இகத்திற்கு தேவையான செல்வத்தை ஸ்ரீசுவாமிகளும், அந்த வைத்தியமும் **தேவையறிந்து** கொடுத்தனர். அது உலகின் நிலையில் நடந்த ஒரு கனவின் கதை.

1955ம் ஆண்டிலிருந்து சபரிமலை யாத்திரை போய்க் கொண்டிருந்தது. அதில் இரண்டு வருஷம் மிட்டாய் கடை வைத்திருந்த லாலா என்னும் (கோவிந்த லாலா அவர்கள்) பெரியவருடனும், அடுத்து திரு. C.A. ஹரிஹர ஐயர் என்ற ஒரு ஸ்ரீபிராமணோத்தமருடனும் (துணையாகக் கொண்டு) சபரிமலைக்கு செல்வதுண்டு.



**இடமிருந்து வலம்: இரண்டாவதாக நிற்பவர் திரு. C.A. ஹரிஹர ஐயர்**



# இது உனக்கு தகாது!



தற்காலிக அண்ணாவுக்கு இரண்டு கடைகள் உண்டு. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், பித்தளை, அலுமினியம், பிளாஸ்டிக் என பலரகம் உண்டு. தற்காலிக அண்ணா வியாபாரம் செய்யும்போது கவனிப்போம். பாத்திரம் எடை போட்டு கொடுக்கும்போது இருபது கிராம் படிக்கல்லை ஐம்பது கிராம் எனச்சொல்லி கணக்கு கூட்டி சொல்வார். கடைக்கு வந்த வாடிக்கையாளர்களும் ஒன்றும் மறுத்துப் பேசாமல் அவர் சொல்லும் பணத்தை குறையாமல் கொடுத்துச் செல்வர்.

சிலசமயம் இதை யோசிப்பதுண்டு! இது **பொய்யும், களவும்** ஆகும். இதை அண்ணாவிடமே கேட்கும். அவர் இது **வியாபார தந்திரம்;** பொய்யும், களவும் அல்ல என்பார். என்ன தந்திரமோ யாம் அறியோம்! அண்ணாவைப் போல் நாமும் வியாபாரம் செய்து பார்ப்போமா என எண்ணம் வரும். உள் உணர்வு **இது உனக்கு தகாது** என உணர்த்தும். இருந்தாலும் அந்த கள்ளமனம் **பழக்க தோஷத்தினால்** நீ செய் இது தவறு அல்ல என அடிக்கடி தூண்டும்!

ஒருநாள் சில பெண்கள் சில பாத்திரங்களை பொறுக்கி எடை போடச் சொன்னார்கள். இதுக்கு ஓர் **நப்பாசை**. நாமும் செய்து பார்ப்போமே என எண்ணி பத்து கிராம் படிக்கல்லை இருபது கிராம் எனச் சொல்லி கணக்கு பார்த்தது! ஒரு பெண் (அந்த திருடனை) கண்டு கொண்டாள். அவள் சொன்னது:


ஏனையா! நாங்கள் எல்லாம் குருடி என எண்ணிவிட்டாயா? நல்லா பட்டையா நாமம் போட்டுக் கொண்டு வந்து கல்லா பெட்டியில் அமர்ந்துகொண்டு, எங்களுக்கெல்லாம் நாமம்


போடப்பார்க்கிறாயா? இப்படி எத்தனை பேருக்கு நாமம் போட்டாயோ தெரியவில்லை? **உன் அண்ணா எவ்வளவு உத்தமமானவர்!**

அவர் உடன் பிறந்த தம்பி இப்படி மூளை இல்லாமல் இருக்கிறாயே! நீ வியாபாரம் செய்தால் கடை உருப்படாது. உன்னை யார் கடையில் அமர்த்தியது? நீ எல்லாம் ஜால்ரா, சிப்ளா ஏந்தி **சங்கரா, சிவா** என கோவில் கோவிலாக போகவேண்டியதுதானே!! (அன்றே எம் நிலையை அறிந்து கொண்டான் போலும் அந்த சூதறிந்த கள்வன்) என பலவித **சகஸ்ர நாமார்ச்சனை** செய்து விட்டாள்!

"யாம் சிரித்துக் கொண்டே அமர்ந்திருந்தோம். வாயும், மனமும் அடங்கிவிட்டது". பொய்யும், களவும், சூழ்ச்சியும் உலக மக்களுக்குத் தேவை; உனக்கு தேவையா?? **பக்குவ ஆன்மாக்களுக்கு ஸத்யத்தை போதித்து தர்மத்தை ஸ்தாபிக்க வந்த நீ** தவறு செய்யக்கூடாது என்பதுதான் பிரத்தியட்சம். ஆகவே இந்த நாடகத்தை நடத்தினோம் என்றான் எம் சூதறிந்த கள்வன்!!!

**எல்லாம் நீ!**





# ஊருக்குத்தான் உபதேசமா?

பாத்திர வியாபாரத்தில் வெளியே அனேகருக்கு நிலை அறிந்து கடன் கொடுப்பதுண்டு. பெரிய மார்க்கெட்டில் ஓர் மளிகை வியாபாரியின் மனைவி கடன் வாங்குவதுண்டு. இந்த பைத்தியம் மளிகைக் கடையில் போய் பணம் வாங்கி வந்துவிடும். அந்த வியாபாரி இது போகும் போதெல்லாம் இப்படி பட்டையாக ஏழுமலையான் போல் நாமம் போடுகிறாயே, இந்த வாலிப வயதில் நன்றாக அனுபவிக்க வேண்டாமா? எவரை ஏமாற்ற இப்படி நாமம் போடுகிறாய்? தெய்வம் கோவிலிலும் இல்லை, உன் வீட்டு பூஜை அறையிலும் இல்லை. அங்கு கல்லும், படமும்தானே இருக்கிறது. **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"** என்பதை நீ அறியவில்லையா? படிக்கவில்லையா? உன் அம்மாவும், அப்பாவும்தான் கண்கண்ட தெய்வம். அவர்களை வணங்காமல் கல்லையும், படத்தையும் வணங்கி என்ன பலன்? இப்படி நாமம் போட்டு ஊரை ஏமாற்றாதே என அங்கு போகும் போதெல்லாம் **இதோபதேசம்** செய்வார்.

ஓர்சமயம் அவர் பாத்திர பில்லுக்கு கடையில் பணம் இல்லை எனச்சொல்லி வீட்டிற்கு வா என்றார். அவர் பைக்கில் வீடு சென்றார். இது சைக்கிளில் கொஞ்சம் தாமதித்து சென்றது. வாசலில் சைக்கிளை நிறுத்தி வீட்டின் கேட்டில் நின்று பார்த்தது. அங்கே நடந்த கோரக் காட்சியாவது: அந்த மளிகை வியாபாரி தம் மனைவியின் பேச்சைக் கேட்டு அதிஉக்ர சொரூபத்துடன் அவர் தாயை (அறுபது வயதிற்கு மேல் இருக்கும்) அடித்தும், காலால் மிதித்தும், தூஷண வார்த்தை பேசியும் துவம்சம் செய்து கொண்டிருந்தார். எம்மைக் கண்டதும் வெலவெலத்துப் போனார்.

அவருக்கு பேச வாய் வரவில்லை. முகத்தில் **கலக்கமும், பயமும்** உண்டானது. இந்தா தம்பி பணம், நீ போய்வா எனச்சொன்னார். "யாம் விருந்து சாப்பிடவா வந்தோம்? விருந்துதான் அமோகமாக இருந்ததே. ஊருக்குதான் உபதேசமா? உமக்கு தேவை இல்லையா?? நல்ல ஆளையா நீ" எனச் சொல்லிவிட்டு பணத்தை வாங்கிக் கொண்டு அவர் பதிலுக்கு காத்திராமல் வந்துவிட்டோம்.

**எல்லாம் நீ!**



# அது தாயுள்ளம்!

ஒரு ஐயர் வீட்டில் பாத்திரம் கடன் கொடுத்தோம். அவர் பையன் ஏதோ வெளியூரில் இருக்கிறான் போலும். மாதாமாதம் அவர் அனுப்பிய பணத்தால் இந்த ஐயரும், ஆச்சியும் ஜீவனாம்சம் செய்து வந்தனர். கடை பில்லுக்கு மூன்று மாதமாக பணம் தரவில்லை. ஒவ்வொரு சமயமும் அடுத்த மாதம் தருகிறேன், அடுத்த மாதம் தருகிறேன் என போக்கு காட்டியே வந்தார் அந்த பெரியவர். அவர் இரு காலிலும் படைபோல் முழங்காலுக்கு கீழே, கணுக்காலுக்கு மேலே கருப்பாக இருக்கும். துர்நீராக வடியும். அந்த புண்ணை மறைக்கும் நிமித்தம் வேட்டியை கணுக்கால் வரையிலும் தொங்கவிட்டிருப்பார்; தூக்கி கட்டுவதில்லை. வலியும் கொஞ்சம் அதிகமாக இருக்கும் போல் தெரிகிறது. இரண்டு கால்களையும் சற்று தாங்கி நடந்து செல்வார். அவர் பையன் பணம் அனுப்பவில்லையோ அல்லது அனுப்பிய பணம் வீட்டு செலவுக்கு காணவில்லையோ தெரியாது.

அன்று பல இடங்களிலும் வசூலுக்காக அலைந்தும் பணம் சரியாக சேரவில்லை. இந்த ஐயர் எப்படியும் கொடுப்பார் என நம்பி வந்து கேட்கும்போது இவரும் **பயந்தும், வருந்தியும்,** தம்பி! இந்த ஒரு மாதம் பொறுத்துக்கொள். அடுத்த மாதம் எதையாவது விற்றாவது பணம் தந்துவிடுகிறேன். உனக்கு மூனு மாதமாக தவணை சொன்னது ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கிறது. இந்த நாலாவது மாதமும் தவணை சொல்லும்போது என் உடம்பே நடுங்குகிறது. தயவுசெய்து இந்த ஒரு மாதமும் சற்று பொறுத்துக்கொள் தம்பீ! என்றார்.

அப்போதெல்லாம் இதற்கு கோபம் வரும். அடுத்த வினாடி திருந்த முயற்சி செய்து பொறுத்திருக்கிறோம். ஆனால் இன்று ஏனோ வந்த கோபத்தை அடக்க முடியவில்லை. அதனால் என்ன வார்த்தை வாயில் வருகிறதென தோற்றவும் இல்லை. (அதாவது இது விதியின் தன்மை)

என்ன சாமி! இத்துடன் நாலு மாதம் ஆகிவிட்டது. எந்த இடத்திலும் இரண்டு மாதத்திற்கு மேல் பாக்கி நிற்காது. நீர் ஏமாற்றுவதை பார்த்தால் பணம் தரும் நோக்கமே இல்லை போலும்? இதுவரையில் விற்பதை விற்று பாக்கியை அடைக்க முடியவில்லை. இனி எதை விற்கப் போகிறீர்? உம் வீட்டில்தான் என்ன பாத்திரம் இருக்கிறது விற்றுக் கொடுப்பதற்கு? **இனி விற்க வேண்டுமானால் ஆச்சியைத்தான் விற்க வேண்டும்.** அதைச் செய்யும் என்றது இந்த பைத்தியம். இதுவரை அமைதியாக இருந்த அந்த பெரியவர் **ருத்ரன் ஆனார்!! "என்னடா சொன்னே"** என அடுத்த வார்த்தை

பிரயோகிக்கும் முன் அந்த அம்மா குபீரென ஓடிவந்து அவர் வாயை பொத்திக் கொண்டாள். (இல்லையானால் அன்று என்ன சாபம் கிடைத்திருக்குமோ, அறியோம்!)

இது சொன்ன வார்த்தையையும், அவர் சொன்ன வார்த்தையையும் ஐந்து வினாடி மனனம் பண்ணி பார்த்தது அந்த பைத்தியம். சிலையாக நின்றுவிட்டது.

அந்த அம்மாள் அவரை கைவாகு கொடுத்து வீட்டிற்குள் அழைத்துச்சென்று சின்னஞ்சிறுசு, நம் புள்ளையாண்டான் போல் இருக்கிறான் அவனிடம் நாம் கோபப்படலாமா? நம் புள்ளை நம்மை எட்டி உதைத்தால் ஆனந்தப்படுவோமா? அல்லது காலை வெட்டிவிடுவோமா?? இவன் என்ன கேட்கிறான்? அவன் நமக்கு கொடுத்த கடனை கேட்கிறான். அதிலே என்ன தப்பு என பலவித சமாதானம் சொல்லி பின் வெளியே வந்து, தம்பி! கோபித்துக் கொள்ளாதே. கொடுத்தவன் கேட்கிறாய்! இங்கு இல்லை முழிக்கிறோம்!! நம் பெருமான் இப்படியே விட்டுவிட மாட்டான்!!! அடுத்த மாதம் அவஸ்யம் உன் பாக்கி அடைபட்டுப்போகும். உன் தாய் சொல்கிறேன், போய் வா ஐயா! என கெஞ்சி சொன்னது அந்த மாதரசி!

## "அது தாயுள்ளம்".

இந்த பைத்தியத்தின் கண்களில் கண்ணீர் கொட்டியது. வாக்கும் மனமும் மௌனமானது. சிறிது நேரத்தில் மனம் கரைந்தது. ஹே.. ப்ரபோ! நீ ஸத்ய சொரூபனானால் இந்த வரம் எமக்கு வேண்டும். இப்படி கடும்சொல் (சுடும்சொல்) வந்ததும் இல்லை, இப்படி சம்பவம் நடந்ததும் இல்லை! இதுவே ஆதியும், அந்தமுமாக இருக்கட்டும். இனி இந்த தவறு செய்ய விட்டுவிடாதே! இது தாங்காது!! இந்த சம்பவத்தின் நிமித்தம் ஓர் தண்டனை எமக்கு வேண்டும். அதாவது அந்த பெரியவருக்கு இரு கால்களிலும் இருக்கும் **அரிப்பு படை வியாதியை** எம் இரு கால்களுக்கும் கொடு. அதை யாம் அன்புடன் ஏற்கிறோம். அவருக்கு உடனே குணமாக்கு! என உள்ளம் உருகி வேண்டியது.

அவன் ஸத்ய சொரூபன்! ஸத்ய சங்கல்பன்!! அவ்வாறே மூன்றாவது நாளில் எம் காலில் அரிப்பு ஆரம்பித்தது. அடுத்த ஒரே வாரத்தில் அவர் கால்கள் போன்று எம் கால்கள் மாறிவிட்டது. இதில் மற்றோர் ஆச்சர்யம், அடுத்த வாரம் அந்த பெரியவர் பணத்துடன் வந்து பில் முடித்து கொடுத்துவிட்டுப் போனார். அவர் முகத்தில் புன்முறுவல், எதுவும் பேசவில்லை, மௌனமாகவே சென்றார். அவர் கால்களை நோக்கினோம், படை இருந்த தடயமே இல்லை. எம் பிரபுவுக்கு நன்றி சொன்னோம்.

கேட்பதை (நிலை அறிந்து) கொடுக்கும் தயாநிதி அவன்! யாம் அந்த படை வியாதியை மூன்று வருஷங்கள் அனுபவித்தோம் ஆனந்தமாக.

**நம்பினார் கெடுவதில்லை. இது நான்கு வேதத்தின் தீர்ப்பாகும்!**

**எல்லாம் நீ!**




# அபயகரம் ஸ்வய அனுபவம்!

ஒரு காலத்தில் இந்த பைத்தியம் ஒரு தொழில் அதிபராக வேஷம் போட்ட சமயம். துவரை, உளுந்து ஆகியவற்றை மொத்தமாக அதாவது ஐம்பது, நூறு மூட்டையாக உடைத்து சொந்தமாகவே வியாபாரம் செய்த நேரம். அதேபோல் அதே துவரை மில்லின் அடுத்த பகுதியில் பட்டாணி, கடலை பருப்பு மொத்தமாக மாவாக அரைத்து வெளியூர் வியாபாரிகளுக்கு பருப்பு மற்றும் மாவு வியாபாரம் செய்து வந்தது. அந்த மில்லின் அதிபர் இதன் தற்காலிக பெரியப்பா மகன் ஆத்தியப்பனாகும். இதுவும் அவரும் இணைந்து வியாபாரம் செய்தோம். அது தவிர தூத்துக்குடியிலேயே பெரிய கடையாக ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், பித்தளை, அலுமினியம், பிளாஸ்டிக், பல நூதன பரிசுப் பொருள்கள் வைத்து பலகோடிகளுக்கு அதிபர் என்ற **நாடகவேஷம் போட்டு** ஒரு பதினெட்டு ஆண்டுகள் நடித்தோம்!

துவரை நனையப் போடுவதற்காக ஒரு பெரிய தொட்டியில் ஐந்நூற்று ஐம்பது வாளி (பெரிய பக்கெட்) தண்ணீர் கிணற்றிலிருந்து இறைக்க வேண்டும். இந்த தண்ணீர் இறவை தினமும் மதியம் நடைபெறும்! துவரை இல்லாத காலங்களில் இறைக்கத் தேவையில்லை. பெரும்பாலும் மாதம் இரண்டொரு நாள்தான் துவரை இராது. இந்த தண்ணீர் இறவைக்கு ஒன்றரை மணிநேரம் அவஸ்யம் ஆகும். இது சற்று கடிணமான பயிற்சிதான். தண்ணீர் இறைத்து மாலை சுமார் ஐந்து மணி அளவில் இருபது அல்லது இருபத்தைந்து மூட்டை வரை அத்தொட்டியில் தட்டி ஊற வைக்க வேண்டும். பின் இரண்டு மணி நேரத்தில் துவரை நனைந்துவிடும்!

தொட்டியின் அடியில் வலை உண்டு. இரண்டு மணி நேரம் கழித்து அத்தண்ணீரை திறந்துவிடவேண்டும். அது அப்படியே ஊறிப்போய் தொட்டியிலேயே கிடக்கும். மறுநாள் காலை எட்டு மணிக்கு பத்து பெண்கள் அத்துவரையை பெட்டிகளில் சுமந்து வந்து செம்மண் (இறுகிய) தரையில் பரக்க விரிய வைத்து (காயவைத்து) மாலை ஐந்து மணிக்கு அவைகளை கூட்டி கோணியில் அள்ளி ஆபீஸினுள் வைத்துவிடுவார்கள். மறுநாளும் அத்துவரையை வெளியே வெய்யிலில் உலற வைத்து மறுநாள் அவைகளை உடைத்து பருப்பாக ஆக்கிவிடுவோம். இது நித்யகர்மா ஆகும்.

ஒருசமயம் கிணற்றில் ஜலம் இறைத்து தொட்டியில் விட்டுக்கொண்டிருந்தோம். கிணற்றின் அகலம் இரண்டு மீட்டராகும். ஆழம் பதினைந்து மீட்டராகும். ஜலத்தின் ஆழம் ஐந்து மீட்டராகும். மழை காலங்களில் ஜலம் வற்றுவதில்லை. கோடை காலங்களில் ஜலம் வற்றும் ஆனாலும் இரண்டு மீட்டருக்கு




கீழே ஜலம் போகாது! அன்று இறவை முடியும் நேரம் ஜலம் அடிஆழத்திற்கு போய்விட்டது. ஆகவே கீழே கொஞ்சம் அதிகமாக குனிந்து ஜலம் எடுக்க வேண்டியதாயிற்று. அப்படி கீழே குனிந்து ஏற்றக்கழியை அடிஆழத்தில் வாளியை (பக்கெட்டை) அழுத்தும் போது எப்படியோ கிணற்றின் கைப்பிடிச்சுவரில் பின்புறம் பிட்டி (விலா எலும்பின் ஒரு பகுதி) இடித்துவிட்டது. **உடல் நிலை தடுமாறியது**. வாளியின் கழியைப் பற்றிய வண்ணம் **தலைகீழாக உடல் கிணற்றில்** தள்ளப்பட்டது. உடல் தலைகீழாக போவதால் கிணற்றின் அடியில் **உள்உறை** என ஒரு சிறிய வட்டவடிவ **சிமெண்ட் காங்கிரீட்** உண்டு, அதில் அவஸ்யம் தலை மோதும். அதனால் தூலத்தின் கதை முடிய ஏதுவாகும். இந்நிலையில் ஓர் **மரண பயம்** கவ்வியது.

**"தூலம் தலைகீழாக போனவண்ணம்**
**ஹரே... கிருஷ்ணா..."**


என அலறியது. அந்த சப்தத்தில் அந்த கட்டிடமே அதிர்ந்தது போலும்!

**கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவனும், பார்க்கும் நிலையில் இருந்து பார்த்தால் புலப்படுபவனும், கேட்டதை நிலை அறிந்து கொடுப்பவனுமாகிய எம் அண்ணலின்**



**"அபயகரம்"**

இதன் இடையின் இரு பக்கத்தையும் பற்றுவதாக **ஓர் உணர்வு.** இமைக்கும் நேரத்தில் தலைகீழாக போன உடல் **நேராக கிணற்றில் மெதுவாக இறக்கிவிட்ட ஓர் ஸ்வய அனுபவம்!** இது அடைந்த சுகத்தை விளக்கவோ, விவஹரிக்கவோ எந்த வார்த்தைகளும் இல்லை, **"அது சுகமே"**. பின்னர் வீட்டில் உள்ளவர்கள், ஆபீஸில் வேலை பார்ப்பவர்கள் அனைவரும் கூடி ஒரே கூட்டமாகிவிட்டது போலும். என்ன? என்ன? எனக்கேள்வி; **ஒன்றுமில்லையென பதில்!** எந்த சிராய்ப்பும், எந்த அடியும் இல்லாத ஒரு **சுகானந்த நிலை!**



# முடிந்தால் முடி இல்லையேல் விடு!



துவரை மற்றும் மாவு மில்

துவரை மற்றும் மாவு மில்லில் ஆணும் பெண்ணுமாக பதினாறு பேர் வேலை பார்ப்பார்கள். சிலசமயம் இரவுகால வேளைகளில் துவரையோ, உளுந்தோ இருபது அல்லது முப்பது மூட்டைகள் உடைக்கவும்; பட்டாணியோ, கடலை பருப்போ இருபது மூட்டை அரைக்கவும் சந்தர்ப்ப வேலை வரும். அதுசமயம் மாவு மில்லில் இரண்டு பெண்களும், துவரை மில்லில் மூன்று பெண்களும் அவஸ்யம் வேண்டும்! இது அங்கும் இங்கும் சென்று வேலைகளை சரிபார்க்கும். வாரம் இரண்டு மூன்று தினங்கள் இந்த இரவு வேலை நடைபெறும். பகலிலும் வேலை சற்று கடினமாகவே இருக்கும்! பகலின் வேலை கடினத்தால் இரவிலும் வேலை செய்ய பெண்களாலும் இயலாது!

சிலசமயம் இரவு வேலைக்கு ஐந்து பெண்களை அண்ணா வரச்சொல்லுவார். அவர்களும் மறுக்காமல் வருவதுண்டு. சிலசமயம் அவர்களால் இயலாத தன்மையினால் வருகிறோம் என சொல்லிச் சென்ற பெண்கள் வரமாட்டார்கள்! வேலை நேரம் இரவு பத்து மணி முதல் காலை ஆறு மணி வரை ஆகும். இரவு வேலைக்கு தற்காலிக அண்ணா வரமாட்டார். இதுதான் போகும்! காலை ஏழு மணிக்கு வந்து வேலை விபரத்தை பார்த்து தெரிந்து கொண்டு போய்விடுவார்! சிலசமயம் ஐந்து பெண்களும் கூடிப்பேசி வேலைக்கு வரமாட்டார்கள்!

இது இரவு ஒன்பதரை மணிக்கு மில்லை திறந்து வைத்து அவர்களை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும். மணி 10.10 ஆகிவிட்டால் இனி அவர்கள் வரமாட்டார்கள் என தெரிந்து கொண்டு உள்புறமாக கதவை தாளிட்டுக் கொள்ளும். எமதய்யனிடம் அது முறையிடும். அதாவது,

ஹே.. பரமாத்மா!

இந்த மில்லும் உன்னுடையதே!
இதில் உள்ள சரக்குகளும் உன்னுடையதே!
இவைகளை பருப்பாகவும், மாவாகவும் கேட்கும் வியாபாரியும் நீயே!
இவைகளை உடைத்து அரைக்கும் எந்திரமும் உன்னுடையதே!
இவைகளில் வேலை செய்யும் பெண்களும் நீயே!
அவைகளை கண்காணிக்கும் மேஸ்திரியும் (இந்த பைத்தியமும்) நீயே!

## ஆனால் இப்போது!!

பணிபுரியும் ஐந்து பெண்களாக இருக்கும் நீயே வேலை நிறுத்தம் செய்கிறாய். ஆனால் நாளை காலை ஆர்டர் வாங்கிய ஐம்பது மூட்டைகளும் வெளியே போகவேண்டும்! உன் சரக்கு உனக்கு அந்தந்த காலங்களில் போய் சேரவில்லையானால் வியாபாரம் பண்ணமுடியாது. அண்ணாவாக இருக்கும் உனக்கு வியாபார பணம் வந்து சேராது.

## வேலை நின்ற காரணத்தினால்

வியாபாரிகளாகிய உனக்கும் சிரமம், அண்ணாவாக இருக்கும் உனக்கும் சிரமம்தான். இந்த சிரமம் நீங்க வேண்டுமானால் இந்த இரவு வேலை நடந்தாக வேண்டும். "அந்த வேலைக்கு இதை தயார் செய்துவிட்டாய். இதன் ஒத்துழைப்புக்கு நீயும் தயாராகிவிடு", நீ என்ன செய்வாயோ? ஏது செய்வாயோ? இதுக்கு தெரியாது! இரண்டு மோட்டாரையும் ஓட்டிவிடும்! ஆனால் காலை ஆறு மணிக்குள் ஐம்பது மூட்டையும் தயாராகிவிட வேண்டும்.

## முடிந்தால் முடி! இல்லையேல் விடு!!

என **கண்ணருவி ஓட** அவனிடம் முறையிட்டு விட்டு இரண்டு மோட்டாரையும் ஓடவிட்டுவிடும்!

பின் **அவன் நாமாவளியில்** இறங்கிவிடும். ஸ்மரணை கெட்டுவிடும்! ஆனால் ஆட்டமும் பாட்டும்தான் ஒரே களியாட்டம் போங்கள்! அங்கு நடக்கும் காரியமாவது:

இது உளுந்தை மேல் தொட்டியில் அள்ளிப்போடும்.
உடையாத உளுந்தை மாற்றி தனியாகப் போடும்.
உடைந்த பருப்பை தனியாகப் போடும்.
உடைந்த குருணையை தனியாக ஒரு கோணியில் போடும்.
உடையும் தூசியையும் ஒரு கோணியில் தனியாகப் போடும்.

இங்கு இக்காரியங்களில் ஈடுபடும்போது அடுத்த அறையில் உள்ள மாவு மில்லில் பட்டாணி பருப்பு மேல் தொட்டியில் அள்ளிப் போடும் டப்பா சத்தம் கேட்கும். மாவை தனியாக இழுத்து குவியலாக போடும் டப்பா சத்தமும் கேட்கும்! கோணியை இழுத்து மூட்டையை வெட்டி கீழே குவிக்கும் சத்தமும் கேட்கும்.

**"அங்கு அவன் சிரத்தையாக வேலை பார்ப்பான்".**

பின் மாவு அறையில் சென்று அந்த வேலையை இது பார்க்கும்போது துவரை மில்லில் உளுந்து அள்ளிப்போடுவது, பருப்பு, குருணை, தூசியை மாற்றுவது ஆக அனைத்து காரியங்களையும்

**"இங்கும் அவன் சிரத்தையாக வேலை பார்ப்பான்".**

அதிகாலை 5.55க்குள்ளாக உடைப்பும், அரவையும் ஒழுங்காக எக்குறையும் இல்லாமல் ஆனந்தமாக முடியும்.

**ஆனால் அந்த மாயத் தோற்றம் தெரிவதில்லை.**

அப்புறம் ஒரு அரை மணி நேரமாவது கதறி அழும்! ஹே.. பரமாத்மா! அனாத ரட்சகா! தீனபந்தோ! தீன தயாளோ! ஐயா உன் கருணையை எந்த வாயால் புகழ்வது? யாம் அடியார்க்கும் அடியவன், சேவகனுக்கும் சேவகன் என நீ சொல்லும் வாசகம் எப்படியென மெய்ப்பித்து காட்டிவிட்டாயே! எம் நிழல் போன்று எம்மை விட்டுப் பிரியாமல் இப்படி உறுதுணையாக இருக்கிறாயே! உன் திருவடிக்கு இந்த சரீரத்தை செருப்பாக தைத்து போட்டாலும் அது மிகையாகாதே!

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருகிறாய்! இட்ட பணியை குறைவின்றி முடிக்கிறாய்! உன் கையில் காலமென்னும் சக்கரம் சுழல்வதை யாம் உணர்கிறோம்! அச்சுழற்சியின் வேகத்தில் உன்னை உணர முடியவில்லையே பிரபோ! மலத்திலே புழுக்கும் அப்புழுக்களிலும் கடையேனாகிய இந்த நாயடியேன் மீது உனக்குத்தான் எத்தனை வாத்சல்யம்! எத்தனை கருணை! உன் அருளின் வேகத்தை யார் அறிவர்?

ஐயா...! ஐயா...!! ஐயா...! இந்த சேயைக் கைவிட்டுவிடாதே ஐயா! பக்தர்கள், பாகவதோத்தமர்கள், நாயன்மார்கள் சரித்திரங்களை படித்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம்! அதை இப்போது இந்த கடையேனுக்கும் நீ அருளி ரட்சிப்பதற்கு இது எந்த வகையில் இப்பேறு பெற்றதோ தெரியவில்லையே! அன்று பண்டரியில் நீ செங்கலில் ஏறும்போது **"அப்போதைக்கப்போது ரட்சிப்பின் நிமித்தம் சற்று இறங்கி ஏறிக்கொள்கிறோம்"** என நீ சொன்ன ஸத்யவாசகத்தை இன்று உணர்கிறது எம் தேவா!


ஓ... பாண்டுரங்கா...! எம் பண்டரி நாதா! கருணைக்கடலே! கருணா சாகரா! நம்பும் அடியவரைக் காப்பேன் என உன் வலக்கரத்தில் **கங்கணம்** கட்டியிருக்கிறாயே. அதில் எத்தனை எளிமை! எத்தனை இனிமை! எத்தனை கருணை! எத்தனை மஹிமை! உன்னை சர்வக்ஞன், சர்வாந்தர்யாமி என எல்லாம் புகழலாம்! ஆனால் உன்னை புகழ்வதில் அர்த்தமில்லைபோல் தெரிகிறதே!!

நீ ஓர் சூழ்ச்சிக்காரன்! அப்படி இல்லாமல் இருந்தால் இத்தனை காரியத்தையும் நீ செய்தாயே ஒரு வினாடி ஒரே ஒரு வினாடி, உன் **சௌலப்ய தரிசனத்தை** அணுப்பிரமாணம் காட்டி மறைக்கலாமே! அது உங்கப்பன் சொத்தா? உன் பாட்டன் சொத்தா? **அது அடியார்கள் சொத்துதானே!** அதை ஏன் நீ மறைக்க வேண்டும். திருடனிலும் பக்கா திருடனையா நீ!

கைப்பிடித்த நாயகியை கைநழுவ விடுவதுபோல் அம்போ என விட்டுவிட்டாயே! இரவு பூராவும் உடன் இருந்தே வேலை பார்த்தாயே, வேலை முடிந்ததும் நழுவிவிட்டாயே! வேலை முடிந்ததும் ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை **"சென்று வருகிறோம்"** என குரல் கொடுத்துவிட்டு **உன் கமல நயன பார்வை** ஒன்றால் ஓர் பார்வை பார்த்துவிட்டு நீ போனால் என்னவாம்? அப்பார்வை ஒன்றே போதுமே இவ்வேழைக்கு!

இன்னமும் அந்த பாக்கியம் பெறவில்லை போலும்? என்று அப்பேறு பெறுவோமோ? இது பெறுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது? நீயாக அருளினால் அன்றி அப்பேறு பெறமுடியாது! கருணைக்கடலே! கடைக்கண் பாராய் என அழுது அழுது அரற்றிவிட்டு எம் கோராக்கும்பரின் ஒருபாடலை முழுமையாக உணர்ந்து, கரைந்து பாடி அழும். அதனால் **"இதயஜோதி ஒளிபெறும்"**.

அப்பாடல் கீழே



**பல்லவி**

நீயே பாரா முகம் ஆயின் ஜெகம் தன்னில்
நாயேன் கதி ஏதையா? - பாண்டுரங்கா....

( நீயே...)

**அனுபல்லவி**

தாயே மகவை மறந்தால் என்ன செய்வது?
சரணம் சரணம் என கதறும் அடிமையிடம்

( நீயே... )

**சரணம்**

பாரில் பிறந்த உயிர்க்கெல்லாம் சிறந்த உயிர்
பகுத்தறிவுள்ள நரஜென்மம் தந்தாய் - அதில்
தீராக் கவலை சம்சார விலங்கை மாட்டி
திகைக்கச் செய்தாய் எமக்கு தாயும் தந்தையுமான

(நீயே... )

ஜெய ஜெய விட்டலா! ஜெய ஜெய விட்டலா!
ரகுமாயி மணாளா! ஜெய ஜெய விட்டலா!

(இது பலமுறை)

என முறையிட்டு அழுது ஓயும்! இப்படி பலமுறை துவரை மற்றும் மாவு மில் வேலையை அவனுடன் நன்றாக அனுபவித்து அனுபவித்து வேலை வாங்கினோம் என்று சொல்வதை விட

**"எம் வேலையை வாங்கி விட்டான்"**

எனத்தான் சொல்ல வேண்டும்!

**எல்லாம் நீ!**



# துயர்வரின் நினைமின்!

ஓர்சமயம் அதே ஆபீஸில் துவரை மூட்டை இருபது அல்லது இருபத்தைந்து அல்லது முப்பது என அத்தொட்டியின் மேல்தளத்தில் மூன்றுமூன்று மூட்டையாக அடுக்கி வைக்க கம்பெனி ஆட்கள் என்ற பெயரில் **சுமை தூக்கிகள்** எட்டில் இருந்து பத்துபேர் வரை வருவதுண்டு! ஒரு பத்து நிமிஷத்தில் வைத்துவிட்டு போய்விடுவார்கள். அப்புறம் இது அந்த தொட்டிக்கு ஜலம் நிறைய விட்டு மூட்டைகளை தட்டி அவைகளை ஊறப்போடுவதுண்டு. ஞாயிறு அன்று அவர்கள் வேலைக்கு வருவதில்லை. சில அவசரமான காலங்களில் ஞாயிறு அன்று **கூலி அதிகமாக** கொடுத்தால் வேலைக்கு வருவார்கள். சிலசமயம் அதிக கூலி கொடுத்தாலும் வரமாட்டார்கள்.

அன்று இப்பைத்தியமே **அவன் துணையால்** தனியாகவே இருபத்திஐந்து அல்லது முப்பது மூட்டைகளை தூக்கி தொட்டியில் வைத்துவிடுவதும் உண்டு. **அப்போது மூட்டைகள் அனைத்தும் நூறு கிலோ எடைதான்.** குறைவான எடை உள்ள மூட்டைகள் கிடையாது. அந்த நூறு கிலோ மூட்டையை நான்கு பேர் தூக்கி ஒரு நபர் தலையில் வைப்பார்கள். அவர் தலையில் தாங்கியே தொட்டியில் வரிசையாக அடுக்கி வைப்பார். பத்து பேர் வருவதால் நான்கு பேர் மூட்டைகளை தூக்கிவிட ஆறு பேர் மூட்டைகளை சுமக்க ஆக பத்து நிமிஷத்தில் அவர்கள் வேலை முடியும். இந்த பைத்தியம் தலையில் தூக்க இயலாது காரணம் தூக்கிவிட ஆள் இல்லை. ஆகவே ஒவ்வொரு மூட்டையாக புரட்டிப்புரட்டி முதுகில் தாங்கிக்கொண்டு தொட்டியில் அடுக்கும். தொட்டியும் சற்று உயரமாக இருப்பதால் ஒரு மூட்டை வைக்க முடியும். மற்றும் இரு மூட்டைகளையும் அடுக்க இயலாது. ஆனாலும் அவன் நாமாவைச் சொல்லி அவனை அழைத்த வண்ணம் முதுகில் வைத்த மூட்டையை ஓர் **உந்து உந்தினால்** மூட்டை வரிசையாக மேலே போய் அமரும்.

**“இது மாயம் இல்லை; மந்திரம் இல்லை!**
**மன ஓர்மைப்பாடு! அவன் மீது நம்பிக்கை!!**
**தெளிந்த நிலையில் வைராக்கியம்!!!”**

இது ஓர்மித்து இருந்தால் உலகின் எக்காரியத்தையும் **“பணிவுடன் அனாயசமாக”** செய்து முடிக்கலாம்.

**முடியுமா** என சந்தேகம் அணுப்பிரமாணம் வந்தாலும் **அது முடியாது!**
**நடக்குமா** என சந்தேகம் அணுப்பிரமாணம் வந்தாலும் **அது நடக்காது!**

நமக்கு இந்நிலை கூடுமா என்றால் கூடாது.
உன் கேள்வியே பதிலாக அமையும். அதாவது

முடியுமா என்றால் அது முடியாது!
நடக்குமா என்றால் அது நடக்காது!

நமக்கும் இந்நிலை கூடுமா என்றால் அது கூடாது!

“உன் சந்தேகமே உன் பரம எதிரி;
உன் மன உறுதியே உன் ஆத்ம நண்பன்”.

பகவான் நாமாவையோ, குருதேவா என்றோ, **“உள்ளம் உருகி கண்ணீர் மல்க எல்லாம் நீ”** என எதை தொட்டாலும், எதை பேசினாலும், எங்கு போனாலும், எதை செய்தாலும் **சர்வார்ப்பணமாக உன் காரியத்தை அவனுடையதாகச் செய்!**

**முதலில் சற்று கடினமாகத் தோற்றும்; முடிவு வெகு திருப்தியாகவும், ஆனந்தமாகவும் முடியும். இது உறுதி.**

ஓர் ஞாயிறு அன்று அந்த வேலை செய்யும் கம்பெனி ஆட்கள் வேலைக்கு வரவில்லை. அன்று இந்த பைத்தியமே மூட்டைகளை தொட்டியில் அடுக்கும் நிலை வந்தது. அன்று தெய்வாதீனமாக அந்த கிட்டங்கியில் (பெரிய அறையில்) ஆயிரக்கணக்கான மூட்டைகள் இருந்தன. ஒன்றின் மேல் ஒன்றாக இருபது மூட்டைகள் வரை அடுக்கி அறை நிறைந்திருந்திருக்கிறது. அதிக உயரமான (அட்டி) அடுக்குதல்.

அந்த பைத்தியமும் அதிஜாக்கிரதையாக ஒவ்வொரு மூட்டையாக பார்த்துப்பார்த்து எடுத்து தொட்டியில் ஓர் இருபது மூட்டைக்கு மேல் அடுக்கி வைத்து விட்டது. இன்னமும் ஓர் நான்கு மூட்டை எடுத்தால் போதும் வேலை பூர்த்தியாகிவிடும். உட்புறம் உள்ள மூட்டைகளில் எலிகள் வெட்டி துவரையை நாசம் செய்து மூட்டைகள் சரிந்து பலமற்று இருந்தது போலும்? ஓர் மூட்டையை நிமிர்த்தி வைத்து அதை இதன் முதுகில் தாங்கி எடுக்கும் நேரம் மேலே உள்ள மூட்டைகள் அப்படியே சரிந்துவிழ ஆரம்பித்தன. அதன் சப்தம் சரசர சரசரவென கேட்டன. ஓர் இருபது மூட்டைகளாவது இந்த பைத்தியத்தை நோக்கி (ஆகாயத்தில் இருந்து பலத்த மழை கொட்டுவது போல) வேகமாக வந்து கொண்டிருந்தன! அத்தனையும் விழுந்தால் இந்த பைத்தியத்தின் உருவமே தெரியாது. தரையோடு தரையாக ஒட்டிப்போய்விடும்! (இப்படி கதைகளை சொல்ல இது இங்கு இருக்காது)

அந்த மூட்டைகளை பார்த்ததும் உடம்பின் நாடி நரம்புகள் எல்லாம் அப்படியே நின்றுவிட்டன. நம் கதை இன்று இப்படியா முடியவேண்டும் என ஓர் கணிப்பு. வெளியிலோ வேறு எத்திசையிலும் ஓட முடியாது, அசைய முடியாது. இந்நிலையிலும்

**"துஞ்சும்போது அழைமின்;**
**துயர்வரின் நினைமின்;**
**நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு**
**நமோ நாராயணா என்னும் நாமம்!"**

பகவந்நாமாவை தேன் என்றும், கற்கண்டு என்றும், பாகு என்றும், பழரசமே என்றும், அமுது என்றும், அதிமதுரம் என்றும், பேரின்பம் என்றும் இன்னும் பற்பல விதமாக அன்பர்கள் பாடினார்கள், ஆடினார்கள், பருகிக் கூத்தாடினார்கள், ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்தார்கள், அனுபவித்தார்கள்.

ஆனால் உயிரை குடிக்கக்கூடிய நஞ்சு(விஷம்) என்று **பகவந்நாமாவை சொல்லவில்லை!** சொல்லவும் முடியாது! சொல்லவும் கூடாது! ஆனால்! இங்கு நம் ஆழ்வார்களில் ஒருவர் **"நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு"** என்றார். அதுவே உண்மை.

**"வல்வினைக்கு நஞ்சு; மனநலனுக்கு அமுதமாகும்".**

இதையே இந்த வைத்தியமும் **எந்த வினாடியும் அனுபவித்தது.** கையை மேலே தூக்கிய வண்ணம்

**"ஹரே... கிருஷ்ணா..."** என அலறியது!

**அதிசயம் ஆனால் உண்மை. சரிந்து வந்த இருபது மூட்டைகளும் அப்படியே நின்றுவிட்டன.** மேல் நோக்கி சென்று அதனதன் யதாஸ்தானத்தில் அமர்ந்து கொண்டன!!! மாயாஜாலம் போல் நடந்த இக்காட்சிகளை காணும்போது மனம் அசையவில்லை! மனதில் எக்கேள்வியும் இல்லை!! உணர்வு பொங்கி ஆனந்தித்தது!!! துவாபரயுக சம்பவம் ஒன்று உடனே ஞாபகம் வந்தது.

மாடு மேய்க்கும் சிறுவர்களுடன் தானும் ஓர் சிறுவனாக மாடு மேய்க்கச் சென்றான் எமதய்யன்! சிறுவர்கள் கேட்கிறார்கள், ஹே.. கண்ணா! நம்முடைய குறும்புத்தனத்திற்காக நம் பெற்றோர் ஊருக்குள் இருக்காதவாறு மாடுகளை கொடுத்து மேய்த்துவர அனுப்பிவிட்டனர். இப்போது தயிர், பால், வெண்ணெய் என ருசியான பொருள்களை கண்களால் காணக்கூட முடியவில்லை என்றார்கள். எமதய்யனும் உங்களுக்கு இப்போது பால், தயிர், வெண்ணெய் வேண்டும் அவ்வளவுதானே என்றான்.

அவர்களும் அவை வேண்டும் என்றால் அவை நாட்டில் இருக்கிறது. நாம் காட்டில் இருக்கிறோம், இது எப்படி சாத்தியமாகும் என்றார்கள். எமதய்யனும் காட்டை நாடாகவும், அதை வீடாகவும் ஆக்கிவிடுவோம். அந்த கவலையை விடுங்கள் என்றான். அமர்ந்த நிலையில் வேணுகானம் இசைத்தான். அவ்வளவுதான்! கோகுலத்தில் **இவர்களுக்குத் தேவையான வீடுகளில் இருந்து தேவையான பால், தயிர், வெண்ணெய்** முதலியன உறியை விட்டும் அடுக்குப்பானையை விட்டும் தாமே இறங்கி வரிசையாக வெளியேறி ஒவ்வொரு முற்றத்திற்கும் வந்து அவையவைகள் **கூடிப்பேசி** ஒருங்கிணைந்து கோகுலம் விட்டு வெளியேறி பிருந்தாரண்யம் வந்து இவர்கள் மரத்தடியில் வந்து அமர்ந்தன. அவரவர் விரும்பியதை அவரவர் புசித்தனர்.

**அவர்களுக்கு போதும் என்ற நிறைவு உண்டாயிற்று.** அத்தனை காலிப்பானைகளும் அவைகளுக்குரிய இடத்தில் ஏறி அமர்ந்து கொண்டது. **இது அன்று நடந்தது!** இல்லை இல்லை **அது இன்றும் இங்கும் நடக்கும்** என எமதய்யன் நிரூபித்துக் காட்டினான். இந்நிலை உங்களுக்கும் அவஸ்யம் நடக்கும்! இன்றும் நீங்கள் அனுபவிக்கலாம்! இது மாயம் அல்ல, மந்திரம் அல்ல! செப்படி வித்தையும் அல்ல! சித்துக்களும் அல்ல! **மன ஓர்மை!**

**பகவத் சொரூபத்தில் தைலதாரை போல் இடையறாத எண்ணமும், உறுதியான பிடிப்பும்; உலக நாமரூபத்தில், குணசொரூபத்தில் காகத்தின் எச்சத்தைப் போல் பிடிப்பில்லாமல் இருந்தால்** இது அவஸ்யம் முடியும், நடக்கும். நீங்களும் அனுபவிக்கலாம்!

**தனிக்க வைப்பான்!**
**தவிக்க வைப்பான்!!**
**ஒன்றும் இயலாத்தன்மை கொடுப்பான்!!!**

என்பதே உண்மை. அதுவே ஸத்யம். ஆனால் ஓர் உண்மை.

**அவன் எங்கும் எதிலும் எல்லாமாய் அமைவான்! அமர்வான்!! ஆகுவானே!!!**

இந்நிலை பெறும்போது

**தனிமை ஏது?**
**தவிப்பது ஏது??**
**இயலாத் தன்மையின் பொருள்தான் ஏது???**
**உங்களுக்காகவே அவனே யாமாய்;**
**யாமே அவனாய்;**
**யாமே நீங்களாய்;**
**நீங்களே யாமாய் இருக்கின்றோமே!**
**உணர்க! உய்க!! ஆகுக!!!**
**முடியும்! முடியும்! முடியும்!**

**எல்லாம் நீ!**



# மரணத்திற்கு மரணம்!


இதற்கிடையில் இந்த பைத்தியத்தின் தூலத்திற்கு முப்பத்தாறு வயது ஆரம்பம் ஆகியது போலும்! காலதேவனும் ஒரு பெண் தேவதையை அனுப்பி வைத்து நான்கு மாதங்களுக்கு முன்பாகவே நாள் குறித்துக் கொடுத்தான் போலும்! நான்கு மாதமாக அந்த பெண்ணோடு பல மனோ அவஸ்தைகளையும், தூல சிரமங்களையும் அனுபவித்தது! கடைசியாக ஒரு நாள், தேதி, கிழமை, நேரம் எல்லாம் குறித்து இத்துடன் உனக்கு ஆயுள் முடிவு என நிச்சயிக்கப்பட்டது. அது வைகாசி மாதம் வியாழக்கிழமை (குரு வாரம்) இரவு பனிரெண்டு மணி என முடிவு செய்யப்பட்டதாகும்!

இதை ஸ்ரீசுவாமிகளிடம் அந்த பைத்தியம் சொல்லி வைத்தது! **நடப்பது நலமே** என அவர்கள் சொன்னார்கள். அன்று வியாழன்இரவு ஸ்ரீசுவாமிகளும் அந்த பைத்தியத்தின் அருகே ஒரு கட்டில் போட்டு படுத்திருந்தார்கள். நேரம் செல்லச்செல்ல அந்த பைத்தியத்திற்கு தூக்கம் வரவில்லை. ஏதோ ஒரு பயம் சூழ்ந்து கொண்டது! தியானம் கூட சரிவர செய்ய முடியவில்லை. அதுவும் தடைபட்டது! இதயத்திலும் ஓர் இருள் சூழ்ந்த நிலை! ஓகோ..! இதுதான் மரண பயம் (அவஸ்தை) போலும்? என உணர்ந்தது.


ஸ்ரீசுவாமிகள் ஏதேனும் உதவி செய்வார்கள் என எதிர்பார்த்து அவரைப் பார்த்தால் அவர் எவ்வித சலனமும் இன்றி ஒரு வெள்ளைத்துணியை போர்த்திய வண்ணம் அமைதியாக படுத்திருந்தார்கள்! அவர்களை எழுப்பவும் தோணவில்லை! ஆனால் உள்ளத்தின் அடிஆழத்தில் **"ராம்"** மந்திரம் ஓடிக்கொண்டிருந்தது போலும். அது எம்மையும் அறியாமல் எந்த வினாடியும் நடைபெறும்.

மணி பனிரெண்டு அடித்தது. அந்த காம்பவுண்டுக்கு தலைவாசல், புறக்கடைவாசல் என இரண்டு வாசல்கள் உண்டு! இப்போது ஸ்ரீசுவாமிகளும் இந்த பைத்தியமும் படுத்த நிலையில் பார்க்கும் வாசல் புறக்கடை வாசலாகும்! அந்த புறக்கடை வாசலில் ஒரு தகரக்கதவு போடப்பட்டிருந்தது! அந்த கதவு படபடவென தட்டும் ஓசை கேட்டது. அந்த பைத்தியம் திடுக்கிட்டு எழுந்து அந்த வாசலை நோக்க தட்டும் ஓசை நின்றது. அடுத்த வினாடி அந்த கதவை உலக்கை கொண்டு இடிப்பது போல் பலமான இரண்டு மூன்று இடிகள், அந்த கதவு கொண்டியுடன் பெயர்த்துக் கொண்டு 'தடால்' என உட்பக்கமாக வீழ்ந்தது!

அந்த கும்மிருட்டிலும் அந்த பெண்ணை பார்க்க முடிந்தது. வழக்கமாக வந்து பயமுறுத்தும் பெண்ணும், உடன் இரண்டு கிங்கரர்கள்போல் பூதாகரமான இரு உருவமுமாக மூவரும் உள்ளே வந்தனர். அந்த வீழ்ந்த கதவின் பக்கம் நின்று கொண்டனர். அந்த பெண் வழக்கம்போல் ஒக்கலில் (இடுப்பில்) ஒரு குழந்தையை வைத்திருந்தாள்.


புறக்கடை வாசல்


பூதாகரமாக தோன்றிய அவ்விருவரும் ஒரு கையில் கருப்புக் கயிறும், ஒரு கையில் குண்டாந்தடியும் வைத்திருந்தனர். தடிகொண்டு அடித்து கயிற்றால் கட்டி இழுத்துச் செல்வது அவர்கள் இயல்பு போலும். (ஆனால் யாரை அடித்து கட்டி இழுக்க வந்தார்களோ தெரியவில்லை) அந்த பெண் அவர்களிடம் ஆணையிட்டாள், "அதோ உட்கார்ந்திருக்கிறானே அவன்தான் நான் சொல்லும் நபர். அவனை அடித்து கட்டி இழுத்து வாருங்கள்" என்றாள்.



இதுவரையில் சற்று நடுங்கிக் கொண்டிருந்த அந்த வைத்தியம் அப்பெண்ணையும், அவள் ஆணையின் வாசகத்தையும், அந்த கிங்கரர்களின் தோற்றத்தையும் கண்டு "சரி! நம் கதை முடிந்து விட்டது; நம் ஸ்ரீசுவாமிகள் இப்படி ஏதும் அறியாமல் தூங்குகிறாரே; **தூங்குபவரை எழுப்பலாகாது என சட்டம்;** ஆனால் அவர் அறியாமலா இருப்பார்? அவர் சம்மதத்துடன்தானே இக்காரியம் நடைபெறுகிறது! **அவர் அறியாமல் எக்காரியமும் நடைபெறாது!** முடிவில் நம் கடமையை செய்ய வேண்டும். நடைபெறுவதற்கு நாம் கர்த்தா இல்லவே. இது அவர் கொடுத்த பாடமே" என முடிவு செய்து இரண்டொரு வினாடிகளில் இருக்கையிலேயே ஆசனம் இட்டு அமர்ந்து ஸ்ரீபகவத்தியானத்தில் ஆழ்ந்தது. அடுத்த நிமிஷம் எதிரில் இருபக்கமும் இருவிளக்குகள் பிரகாசமாக எரிய **ஸ்ரீசிவலிங்கம்** ஜோதிலிங்கமாக காட்சி கொடுத்தது.

இந்த ஜோதிலிங்கத்தின் பிரகாசத்திலிருந்து ஓர் சுடர் அவர்கள் மூவரை நோக்கிப் பாய அந்த பெண் மாயாவியாக இருப்பதால் ஓடி மறைந்துவிட்டாள். ஆனால் அவ்விரு கிங்கரர்களும் எரிந்து சாம்பலானார்கள். ஸ்ரீசுவாமிகளும், என்ன குழந்தாய்! கதை முடிந்துவிட்டதா? இனி காலதேவனும் உன் அனுமதி பெற்றுத்தான் உன்னிடம் வரமுடியும். அது என்ன கருத்தை வைத்து அப்படி சொன்னார்களோ யாம் அறியோம். தோன்றிய லிங்க ஸ்வரூபமும் அவர்களுக்குள்ளேயே சென்று மயமானது. உலகின் **காலபயம்** அன்றுடன் முடிந்துவிட்டது!

**எல்லாம் நீ!**



# இதனால் என்ன பயன்?



அனேக மஹான்களின் தொடர்பு ஸ்ரீசுவாமிகளுக்கு உண்டு. அதன் காரணமாக சில வித்தைகள் கற்றிருந்தார்கள். ஜலத்தின் மீது அங்கவஸ்திரத்தை விரித்து அதன் மேல் அமர்தல்! மழை பெய்தால் அங்கவஸ்திரத்தை விரித்து உதறி தலைக்கு மேலே விரித்துவிட்டால் அது அவர்களுடன் மேலேயே மழை விழாதபடி குடைபிடித்துக் கொண்டு பறந்து வருதல்! ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மறைந்து செல்லுதல் அதாவது ககனமார்க்கமாக பறந்து போகுதல்! இப்படி ஒன்றிரண்டு சித்திகள் அவர்களிடம் இருந்தன!

தாய்ப்பறவை குஞ்சுக்கு இரை ஊட்டுவது போல அந்த பைத்தியத்திடமும் இவைகளை நீயும் கற்றுக் கொள்கிறாயா? எனக்கேட்பார்கள். அதற்கு அந்த பைத்தியம், **இதனால் என்ன பயன்?** அஹம்தானே வளரும். அது அழிவுக்கு வித்து ஆகும்! ஆத்மவித்தைக்கு அதாவது **தன்னை அறியும் அறிவுக்கு** இது பொருந்தாதே. இதை கற்க வேண்டுமா என அவர்களிடமே சரண்புகுந்துவிடும். அந்த ஸ்ரீபரமபுருஷனும் புன்முறுவலுடன், இவை உனக்கு தேவை இல்லை. யாமும் விட்டுவிடுகிறோம் என அவைகளை காலக்கிரமத்தில் அனைத்தையும் உதறிவிட்டார்!

1965ம் ஆண்டு S. சண்முகவேல் என்ற அஃரூரர் மற்றும் சுப்பம்மாள் என்ற சபரி தம்பதி சகிதமாக அறிமுகமாயினர். **இவர்களே எம் முதல் சிஷ்யர்களாகும்!**

**எல்லாம் நீ!**



# திருச்செந்தூர் முருகனான எம்மருமான் குறவனிடம் சில விளையாட்டுகள்!

## 1. துகில் காத்த கந்தன்!

ஒருமுறை திருச்செந்தூரில் கடுமையான கூட்டம். இந்த வைத்தியம் சமுத்திரத்தில் குளிப்பதாக இருந்தால் சுமார் இரண்டு மணி நேரமாவது ஆகும். காரணம் சமுத்திரத்தின் உட்பகுதிக்குச் சென்று கைகால்களை நீட்டிய வண்ணம் மல்லாந்து படுத்துவிடும்! ஒரு மணி அல்லது ஒன்றரை மணி நேரம் கழித்துதான் பிரக்ஞை வரும். அப்புறம் கரைக்கு வருவதுண்டு.

அன்று கூட்டத்தில் வஸ்திரத்தை கழற்றி என்ன செய்வது? எவரை காவலுக்கு வைப்பது? என சற்று சிந்தித்தது. ஒரு முடிவுக்கு வந்து சந்நிதியை நோக்கி அவனிடம் ஒப்படைத்துவிட்டு ஓர் தீர்த்தக் கல்லின் முன்பு அனைத்தையும் சுருட்டி வைத்துவிட்டு ஆனந்தமாக ஜலத்திற்குள் சென்றுவிட்டது. அனைத்தையும் மறந்துவிட்டது. ஆனந்தமாக ஸ்நானம் செய்துவிட்டு இரண்டு மணி நேரம் கழித்து கரைக்கு வர எம் கடற்கரை ஆண்டி விபூதி, ருத்ராட்சத்துடன் அமர்ந்த நிலையில் தம்மடியில் எம் வஸ்திரங்களை பத்திரமாக பாதுகாத்து வைத்திருந்தான்.

அவன் கேட்ட கேள்வி:

ஏணையா! இங்குதான் திருடர் பயம் அதிகம் உண்டே, நீ பாட்டுக்கு உன் வஸ்திரத்தை இப்படி கவலையில்லாமல் வைத்துச் சென்றுவிட்டால் அதை யார் பாதுகாப்பது? நாம் எடுத்து வைத்திருந்ததனால் சரியாப்போச்சு. இல்லையானால் இந்த கௌபீனத்துடன் நீ போக வேண்டியதுதான்! கொஞ்சம்கூட பொறுப்பு இல்லையே என அந்த வைத்தியத்தின் கைகளில் அந்த வஸ்திர மூட்டையை கொடுத்துவிட்டு பதில் வார்த்தைக்குக்கூட காத்திராமல் சென்று கூட்டத்தில் மறைந்துவிட்டான்!




தீர்த்தக்கல்

அவன் ஓர் திருடன், அவன் மாமன் ஓர் திருடன், அவன் அப்பன் ஓர் முரடன். அந்த கூட்டமே திருடனும், முரடனுமாக இருக்கிறது! அதனால்தான் அவன் ஓர் கௌபீனத்துடன் நின்ற கோலத்தில் பழனியில் காட்சி கொடுக்கிறான். இந்த வைத்தியத்தையும் ஓர் கௌபீனத்துடன் இருக்க வைத்துவிட்டான் போலும்!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. உ(க)ந்தன் மிரட்டுக்குள்ளே உலகம் இருக்குதடி!


திருச்செந்தூர்

ஓர்நாள் திருச்செந்தூரில் இரவு பத்து மணிக்கு தரிசனத்திற்காக அந்த வைத்தியம் கோவிலுக்கு சென்றது! அர்த்தஜாம பூஜை முடியும் வேளை போலும்! இது ஆலயத்தினுள் செல்லாமல் வெளியில் நின்றபடியே ஆறு முகத்தோடு நின்ற அவனை தீர்க்கமான ஒரு முகத்தோடு உள்ளத்திலேயே தரித்து ஆனந்த பாஷ்பம் ஒழுக நின்று கொண்டிருக்க பதினைந்து நிமிஷங்கள் கழிந்திருக்கும். கண்களை திறந்து, நமஸ்கரித்த கைகளையெடுத்து அவனை உற்றுணர்ந்து பார்த்துவிட்டு புறப்படும்போது எதிரில் ஓர் பனிரெண்டு வயது சிறுவன் நெற்றியில் விபூதி பட்டை, கழுத்தில் ஓர் ருத்ராட்ச கொட்டை, தோளில் ஓர் அங்கவஸ்திரம், இடுப்பில் பஞ்சகச்ச வேஷ்டி இவைகளுடன் தம் **இடது கையில்** இலை விபூதியும், கொஞ்சம் விடுபூவும் பற்றிய வண்ணம், உனக்காக எவ்வளவு நேரம் காத்திருப்பது? இந்தா பிடி! என அலட்சியமுடன் விபூதி பொட்டலத்தை அதன் கைகளில் போட்டான். அது அவன் கம்பீரமான தோற்றத்தைக்கண்டு ஆனந்தித்த வண்ணம், ஏன் ஸ்வாமி! கொடுப்பதுதான் கொடுக்கிறாய், பிரசாதத்தை **வலது கையால்** கொடுக்கக் கூடாதா? என பணிவுடன் கேட்க அதற்கு எம் பெருமான் சொன்ன பதில்:

(கடகடவென சிரித்த வண்ணம்) ஓகோ..! உனக்கும் வலக்கரம் இடக்கரம் என பேதம் தெரிகிறதா? ஐயோ பாவம் என்றான்! என்ன ஆச்சர்யம்! அவன் கொடுத்த கரம் வலக்கரமாக காட்சி கொடுத்தது. கையை மாற்றவும் இல்லை, மடிக்கவும் இல்லை. அது என்ன மாயாஜாலமோ யாம் அறியோம்! “உந்தன் மிரட்டுக்குள்ளே உலகம் இருக்குதடி” என்ற நிலையில் உலகமே அவன் கைகளில் சுழலும்போது இது ஒரு பெரிய காரியமா? இதைப்போல் அற்புதங்கள் பலநூற்றுக் கணக்கில் அனுபவித்திருக்கிறோம். அதையெல்லாம் எழுதிக்கொண்டே போவது என்றால் இந்த ஏடும் போதாது, காலமும் போதாது!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

# 3. அறிவு சூன்யமானது புத்தி பிரகாசித்தது!

ஒருசமயம் திருச்செந்தூரில் பல மளிகைக் கடைகளுக்கு உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பட்டாணி, கடலை மாவு இப்படி பலசரக்கு ரகங்கள் போடுவதுண்டு. அதுசமயம் வாராவாரம் புதன், வியாழன் அங்கு தங்குவதுண்டு. கோவிலுக்கு இரவு செல்வதுண்டு. கோவிலுக்குப் போனால் அர்த்தஜாம பூஜை, பள்ளி அறை பூஜை முடிய இரவு பதினோரு மணி ஆகும். அதன் பின்பு ஓர் மளிகை வியாபாரியின் வீட்டு மேல் மாடியில் படுக்க இரவு பனிரெண்டு மணி ஆகும்.

காலை நான்கு மணிக்கு எழுந்து கோவிலுக்கு வந்து சமுத்திரத்தில் நீராடி, நாழிக்கிணற்றில் ஸ்நானம் செய்து கோவிலை விட்டு வெளியேற காலை எட்டு மணி ஆகிவிடும். அதன் பின்பு சிற்றுண்டி முடித்து பஜார் சென்று அங்கிருந்து உடன்குடி, பரமன்குறிச்சி, குலசை, மெய்ஞானபுரம், தட்டார் மடம், சாத்தான் குளம் இப்படி பல ஊர்களுக்குச் சென்று வசூல் செய்து சரக்கு ஆர்டரும் எடுத்து திரும்பவும் திருச்செந்தூர் வந்து தங்கி மறுநாளும் ஆலயதரிசனம் முடித்து ஆறுமுகநேரி, ஆத்தூர், ஏரல், மூக்காணி என்ற ஊர்களுக்கு சென்று வசூல் முடித்து ஆர்டரும் எடுத்து திருமந்திரநகர் வரும் இந்த பைத்தியம். இது வாராவாரம் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.



கந்தசஷ்டி மண்டபம்

ஒருநாள் வசூல் மற்றும் ஆர்டர் முடித்து திருச்செந்தூர் சஷ்டி மண்டபத்தில் கடைசிப் படியில் சமுத்திரத்தை பார்த்த வண்ணம் இருந்தது. அப்போது இரவு ஒன்பது மணி. இது அமர்ந்த படிக்கட்டுக்கு மேல் பகுதியில் காவி உடையில் ஒரு சந்நியாசி, அவர் சிஷ்யர்கள் இரண்டு பேர்கள், மேலும் இரண்டு கிருஹஸ்தர்கள் அமர்ந்திருந்தார்கள். (ஊர் தெரியாது) ஏதேதோ இந்த கிருஹஸ்தர்கள் கேட்க அந்த சந்நியாசி விளக்கம் கொடுக்க அவர் சிஷ்யர்களும் தலையை அசைத்த வண்ணம் கேட்டுக் கொண்டிருக்க இரவு மணி பத்தரை ஆகியது.

கோவிலின் உள்ளே அர்த்தஜாம பூஜை மணி அடித்தது. அந்த சந்நியாசி இதை நோக்கி சிரித்துக் கொண்டே, ஏ.. வெள்ளை வேட்டி பண்டாரம்! என இரைந்து கூப்பிட்டார். அப்போது வேட்டி, சட்டை, பனியன், தலையில் துண்டு இவைகளுடன் இருக்கும் இந்த பைத்தியம். அவர் குரல் கேட்டதும் சிரித்த வண்ணம் எழுந்து நின்று அவரை வணங்கியது. கொஞ்சம் மேலே வா என்றார். இது ஓர் மூன்று படி ஏறி அவர் திருவடியின் கீழ் அமர்ந்தது. இது அருகில் போனதும் அந்த கிருஹஸ்தர்கள் இருவரும் கோவிலுள் சென்றுவிட்டனர். அவர் சிஷ்யர்கள் இருவரும் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். இது காலடியில் அமர்ந்ததும் அவர் சிஷ்யர்கள் இருவரும் அப்படி அப்படியே படியில் சாய்ந்து படுத்தார்கள். நித்ராதேவி அவர்களை ஆட்கொண்டாள் போலும்.

இப்போது இந்த பைத்தியம், அந்த சந்நியாசி ஆகிய இருவரும்தான். மற்றும் அந்த மண்டபத்தில் பத்து பேர் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் தூங்கிவிட்டனர். சந்நியாசி பக்தி சம்பந்தமான பக்தர்கள் சரித்திரங்களை வெகு தெளிவாக சொல்லிக் கொண்டிருந்தார். மணி பதினொன்று ஆகியது, கோவிலையும் சாத்திவிட்டார்கள். இந்த நிலை கண்டு இது கேட்டது.

**இது:** ஸ்வாமி! தாங்கள் நெடுநேரமாக இங்கே அமர்ந்திருப்பது போல் தெரிகிறது. ஏதாவது சாப்பிட இட்லி, தோசை வாங்கி வரலாமா?

**அவர்:** பொறு! பொறு! இப்போ பசி யாருக்கு?

அவர் சுவாரஸ்யமாக பேச்சில் ஈடுபட்டார். அவர் வாசகத்தில் கதையும் உண்டு, அதன் தத்துவ விளக்கமும் உண்டு. வெகு ஆனந்தமாக கேட்டுக் கொண்டிருந்தது. கோவில் மணி பனிரெண்டு அடித்தது. எங்கள் இருவரையும் தவிர வேறு எவரும் இல்லை. பிறகு மணி பனிரெண்டு முப்பது ஆகியது. அப்போதுதான் அவர் கேட்டார். பசிக்கிறதே ஏதேனும் ஆகாரம் கிடைத்தால் நலமாக இருக்கும் என்றார். இது சொன்னது: ஸ்வாமி! அப்போதே பதினோரு மணிக்கு ஆகாரம் வேணுமா என்றது, பொறு பொறு என்று சொல்லிவிட்டீர்கள். இப்போது மணி பனிரெண்டு முப்பது. எந்த கடையும் இராது. இப்போது ஆகாரம் கேட்டால் இனி எங்கு போவது? யாரிடம் கேட்பது என்றது!! அவர் சிரித்துக் கொண்டே, அந்த கவலை நமக்கு எதற்கு? "அந்த குறப்பயலுக்கு இல்லாத அக்கறை" நமக்கு எதற்கு? என்றார்.

அவர் சொல்லி ஒரு ஐந்து நிமிஷம் கழிந்திருக்கும். கோவிலின் உட்பகுதியிலிருந்து நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் நெற்றியில் விபூதி, கழுத்தில் ருத்ராட்சம், இடுப்பில் ஓர் பட்டு வேஷ்டி, அதன் மேல் பச்சைதுண்டை இடையில் சுற்றி ஓர் எவர்சில்வர் பெரியதாளம், அதில் நெய் வழிய சர்க்கரைப் பொங்கலுடன் **வெகு பவ்யமாக** வந்து நின்றார்.

பொங்கல் இரண்டு பக்கா அதாவது நான்கு லிட்டர் அளவு இருக்கும். வந்தவர் அமரவில்லை. பொங்கல் தட்டை நீட்டிய வண்ணம் குனிந்த நிலையில் நின்றார். அந்த நெய் வாஸனையில் படுத்திருந்த அந்த சிஷ்யர்கள் விழித்தெழுந்தனர். என்ன ஸ்வாமி! நெய் வாஸனை அடிக்குதே ஏதாவது விசேஷமா?- எனக்கேட்ட வண்ணம் தட்டை நோக்கினர். ஸ்வாமி! அதில் கொஞ்சம் கொடுங்கள் டேஸ்ட் பார்ப்போம் என்றனர்!

உங்களுக்காகத்தானே இவர் கொண்டு வந்திருக்கிறார், சாப்பிடுங்கள் எனச்சொல்லி ஆளுக்கு ஒரு கவளம் கொடுத்தார். அவர் கையில் உருட்டும் உருண்டையும் அந்த காலத்தில் திருப்பதி லட்டு எவ்வளவு பெரிதாக இருக்குமோ அந்த அளவுக்கு பெரிதாக இருந்தது! அந்த நேரம் நான்கு நாய்கள் (தூய வெள்ளை) எங்கிருந்து வந்ததோ அவர் முன்னால் வந்து இதில் எங்களுக்கும் பங்கு உண்டு எனக்கேட்பது போல் அமர்ந்தன!

அவரும் சிரித்த வண்ணம் அந்த சிஷ்யர்கள் இருவர், இந்த பைத்தியம், புதிதாக வந்த நாய்கள் நால்வர் ஆக எட்டு பேரும் சாப்பிட்டோம். பொங்கல் கொண்டு வந்தவர்க்கு ஒரு கவளம் கூட கொடுக்கவில்லை. அவரும் கேட்கவில்லை. ஆனந்தமாக சிரித்தபடியே தட்டை ஏந்தியபடியே குனிந்து நின்று கொண்டிருந்தார்!

இதில் அதிசயம் என்னவென்றால் ஒவ்வொரு கவளமும் அதிபெரியதாக இருந்ததே தவிர குறையவில்லை. நாய்களுக்கும் தனித்தனியே போடுவார். அவைகளும் சத்தம் போடாமல் ஒன்றை ஒன்று உறுமி குரைக்காமல் உண்ணும். (நாய்களின் குணம் எவ்வளவு திருப்தியாக உண்டாலும் அடுத்த நாயை சாப்பிடவிடாது. சாப்பாட்டு விஷயத்தில் அவை விட்டுக்கொடுப்பது இல்லை. அடுத்த நாயை விரட்டிய பின்பே அது சாப்பிடும். வலியவன் மெலிந்தவனை விரட்டுவான். இது நாய்களுக்குள் இருக்கும் ஒற்றுமை. ஆனால் இங்கு வந்த நாய்களோ எந்த அசம்பாவிதமும் பண்ணாமல் ஒற்றுமையாக சிரித்த முகத்துடன் உண்டது அதிஅதிசயமே!!)

அந்த சந்நியாசி தாமும் உண்பார். மனித இனம் மூன்று, நாய் இனம் நான்கு ஆக ஏழு பேருக்கும் எந்த பேதமும் இல்லாமல் போடுவார்! இந்த எட்டு ஜீவர்களும் எழுபத்தைந்து நிமிஷமாவது சாப்பிட்டிருப்போம். ஆனால் தட்டில் இருந்த பொங்கல் குறையவே இல்லை. அது மலை போல் வளர்ந்து கொண்டே இருந்தது. இது அதிசயமாகவே இருந்தது. இதை நோக்கும்போது அந்த சந்நியாசி எம்மை நோக்கினார். என்ன மாயம் செய்தாரோ யாம் அறியோம். தட்டில் ஓர் இரண்டு கவளம்தான் மீதி இருந்தது. உடனே கொண்டு வந்தவரை நோக்கி, உனக்கு பிரசாதம் கொடுக்கவில்லை அல்லவா? இதை நீ ஏற்றுக்கொள் எனச்சொல்லி அனுப்பிவிட்டார். அவரும் வெளியே எங்கும் போகவில்லை. கோவிலின் படி வழியே இறங்கி கோவிலுள்ளேயே போய்விட்டார் போலும்? வந்தது யார்? இங்கு பொங்கலை விநியோகம் செய்த சந்நியாசி யார்? என்று இதை விசாரணை செய்யும்போது அந்த சந்நியாசி ஓர் இரைச்சல் போட்டார்.

**"எங்கே கவனம் இருக்கிறது?**
**நாம் சொல்வதை கவனி!**
**எந்த இடத்தில் கதையை விட்டோம்???"**

இந்த பைத்தியத்திற்கு ஒன்றும் ஓடவில்லை! கதையின் நாயகனே கதை சொல்ல வந்தால் கதை எப்படி சுவைக்கும்! அவரைப் பற்றி ஊடுருவி நோக்கியது! கருத்தில் அறிவூன்றி விசாரணை செய்த சமயம் அந்த சந்நியாசி இதன் தலையில் ஓர் தட்டு தட்டினார். ஏன் தூக்கம் வருகிறதா? தூக்கம் வந்தால் படுத்து தூங்குவதுதானே? ஏன் உட்கார்ந்து கொண்டு தூங்கவேண்டும் என்றார்! அவர் தட்டிய தட்டில் **அறிவு சூன்யமானது, புத்தி பிரகாசித்தது!**

புத்தியின் சொரூபம் கற்பனை அதாவது விரிதல். அறிவின் சொரூபம் அந்த ஒன்றிலேயே நிலைபெற்று அசையாதிருத்தல். அதாவது ஒடுங்கிஒடுங்கி ஏதும் இல்லாமல் அசைவற்று ஒரே எண்ணத்தோடு "**அது நாம், நாமே அது**" என தற்போதமாக இருத்தல்.

இங்கு புத்தி விகாரப்படும்போது வந்த எண்ணம்:

இவர் ஏதோ ஓர் மடத்தை நிர்வகிக்கும் ஓர் சந்நியாசி. இவர்கள் இருவரும் இவரது சிஷ்யாள். கோவிலுள் இருந்து பொங்கல் கொண்டு வந்தவர் சமையல்கார பிராமணர், இங்கு வந்து நம்மோடு உண்ட நாய்கள் கோயிலை சுற்றி வந்து எவர் எது கொடுத்தாலும் உண்ணும் தெரு நாய்கள். நாம் ஒரு பைத்தியம் என கற்பனையை விரித்தது புத்தி. இந்த நிச்சயமே உண்மை என உறுதி பண்ணிவிட்டது.

கோவில் மணி இரண்டு அடித்தது. அவர் மேலும் பக்த விஜயத்திலிருந்து கபீர், கோராகும்பர், புரந்தரதாஸ், ஏகநாதர் ஆகியவர்கள் ஸ்ரீசத்குருவை அடைய அவர்கள் பட்ட சிரமங்களை சாங்கோபாங்கமாக விரித்துக் கூறினார். கடைசியில் பிரம்மச்சாரி விட்டோபா சம்சாரி ஆனதும், இதை மறைத்து ஸ்ரீபாத சுவாமிகளிடம் சந்நியாச தீட்சை பெற்றதும், பின் ஸ்ரீகுருவருளால் சம்சாரியாகி நான்கு குழந்தைகளுக்கு தகப்பன் ஆகி, பின் ஸ்ரீகுரு கிருபையினாலும், தம் புத்திரர்கள் ஹரி, ஹரன், பிரம்மா, ஆதிசக்தி ஆகிய நால்வர் இணக்கத்தினாலும் பிரம்மஞானியானதையும் அதிவிரிவாகவும், நல்ல கருத்துக்களுடனும் சொன்னார். இவை அனைத்தையும் சொல்லி முடிக்கும்போது கோவில் மணி நான்கு அடித்து ஓய்ந்தது!

உடனே அவர் இதன் தோள்களை தட்டி குலுக்கிய வண்ணம், நீயோ இந்த கதையின் நாயகன்! அதாவது இக்கதைகள் அனைத்தையும் கிரகித்து உன் அன்பர்களுக்கு இதன் மூலத்தையே பிழிந்தெடுத்து சக்கையை (படாடோப பக்தி) நீக்கி, ரசாம்சம் (ஆழ்ந்த பக்தி, உணர்ந்த ஞானம்) அப்படியே சொட்ட சொட்ட உணர்த்திக் கொண்டிருப்பவன். உன்னிடம் யாம் கதை அளந்தோமே! இது கொல்லன் உலையில் சென்று ஊசி வித்தவன் கதை போல் ஆயிற்று!!!

**சரி, நீ உன் பணியை பார்!**
**யாம் எம் வேலைகளை செய்கிறோம்!!**
**நீ ஓர் பணியாளன்!!!**
**யாம் உன் வேலைக்காரன்!!!!**

யாம் சென்று வருகிறோம்! உன்னை ரொம்ப சிரமப்படுத்திவிட்டோம் எனச்சொல்லி, **நடை திறந்து விட்டார்கள்!** எல்லோரும் உள்ளே போகிறார்கள்! யாம் முதலில் போகவேண்டும் என இதன் பதிலுக்குக் கூட காத்திராமலே சரேலென உள்ளே போனார். இது அப்படியே சிலையாக அமர்ந்துவிட்டது! சிஷ்யர்கள் இருவரையும் காணோம்! அந்த வெள்ளை நாய்கள் நான்கையும் காணோம்! இப்படி இதை தவிக்க வைத்துவிட்டு போய்விட்டார்களே என கண்களில் கண்ணீர் கொட்டிய வண்ணம் சமூத்திரத்தை நோக்கி அமர்ந்திருந்தது அந்த பைத்தியம். கோவில் மணி ஆறு அடித்தது. அப்போதுதான் பிரக்ஞை வந்தது இந்த பைத்தியத்திற்கு.

சந்நியாசி பறையன்!
கொணர்ந்தவர் குறவன்!!
நாய்கள் நான்கு வேதம்!!!
கதை கேட்டவன் எவனோ!!!!

உனக்கும் எமக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ?
இந்த பொருத்தம் உலகில் பிறர்க்கு எய்தும் பொருத்தமோ??

என பாடிக்கொண்டே கூத்தாடியது ஓர் பைத்தியம். அதில் யாம் சொன்ன ஓர் உண்மை வாசகம்!

நீ ஓர் குறவன்!
உங்கப்பன் ஓர் பறையன்!
ஓர் நிலையில் உங்கப்பன் ஓர் மூரடன்!
சிருஷ்டி கர்த்தாவோ ஓர் குருடன்!
காக்கும் ஹரியோ ஓர் திருடன்!

இவர்களிடம் இந்த உலகம் அகப்பட்டதனால் குணதோஷங்களினால் பந்தப்பட்டு அல்லோலப்படுகிறது, பின் ஜீவர்களை கேட்கவா வேண்டும்!!!!

அன்பர்களாகிய உங்கள் அனைவரின் பத்மபாதம் பணிந்து உங்கள் திருவடிதூசி எம் சென்னி மீது தாங்கி மிகவும் தாழ்ந்து கேட்டுக்கொள்கிறோம்!

**மேலே கூறிய அபத்தமான வார்த்தைகளை எவரும் பிரயோகப்படுத்த வேண்டாம்!!! எமக்கு உரிமை இருக்கிறது!** அதனால் பிரயோகிக்கிறோம்! இதன் விளக்கம் தருகிறோம்!

**குறவன் :**

குறவன் பறவை இனங்களையும், சாதுவான மிருக இனங்களையும் பிடிப்பவன். (வேடன் வேறு குறவன் வேறு. வேடன் ஆயுதங்களால் அடித்துக் கொன்று பிடிப்பவன். குறவன் வலைவிரித்து அதில் சிக்கியவைகளைத்தான் பிடிப்பான்) குறவன் வலையில் எல்லா பறவைகளும், சாது மிருகங்களும் சிக்குவதில்லை. அதைப்போல் **பக்குவ ஆன்மாக்கள்தான்** அவன் அன்பாகிய கருணை வலையில் சிக்கும். அவன் அவைகளுக்கு **ஜென்ம சாபல்யம்** கொடுப்பான். **அவன் கருணை நிறைந்தவன்!**

**பறையன் :**

இவன் கைகளில் ஓர் உடுக்கை வைத்திருப்பான். இந்த உடுக்கையை அசைத்து “அறியாமையினால் உறங்கிக் கிடக்கும் மூடர்களே விழித்தெழுங்கள்!” காலன் உங்களை ஒவ்வொரு வினாடியும் துரத்திக் கொண்டிருக்கிறான். காலபாசத்தில் (மண், பொன், பெண்) சிக்கிவிடாதீர்கள். நீங்கள் எம்மை காணும் நிமித்தம் சுயஞ்ஜோதியாக அக்னியை ஏந்தி இருக்கிறோம். இந்த ஒளியில் எம் ஒலியைக் கேட்டு எம்மிடம் வாருங்கள், உங்களை ரட்சிக்கிறோம்” என்கிறான்.

**மூரடன் :**

நீங்கள் கோடானுகோடி வரம் பெற்றாலும் அந்த வரத்திலும் **ஓர் உள்ளார்த்தம்** வைத்து உங்களை மடக்குவான். இப்படியே கேட்டுக்கேட்டு கெட்டுப் போகாதீர்கள்! நீங்கள் கேட்டு பெற்றால் அது அழியும், அஹத்தை உண்டு பண்ணும். நீங்கள் கேளாமல் மௌனமாக (வாய் பேசாமௌனம், மனம் பேசாமௌனம்) இருந்து “உன் சித்தம் எதுவோ அது நடைபெறும்” என அமைதியாக இருந்தால் சாயுச்ய பதவியைத் தருகிறோம் என மூரட்டுப் பிடிவாதமாக இருப்பவன்.

**குறிப்பு :**

சாயுச்ய பதவி சொர்க்காதிபத்யத்திற்கும் மேலானது. சாலோக, சாமீப, சாருப, சாயுச்யம்

என நான்கு உண்டு. இது **பதமுக்தியே**; பரமுக்தி அல்ல! பரமுக்தி என்பது **கைவல்யமாகும்**. இது பிறவா நிலையாகும்!

**குருடன் :**

எண்பத்திநான்கு லட்சம் ஜீவகோடிகளையும் அதன் உணவு, உடை, இருப்பிடம் இவைகளையும் **விகிதாச்சாரப்படி** கொடுப்பான். ஒன்றுக்கு ஒன்றை மாற்றிக் கொடுக்கமாட்டான். பந்தபாசத்தினால் (மாய வலையில்) சிக்கிய ஜீவர்கள் கேட்டது கிடைக்காது, நினைத்தது நடக்காது. இதன் அர்த்தம் வினைவிதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். இதன் முடிவானது **பாரபட்சதோஷம் இல்லாதவன்**.

ஆகவே ஜீவ உபாதையில் இருக்கும் ஜீவர்களுக்கு இவர்கள் நினைத்ததோ, கேட்டதோ கிடைக்காததனால் இவன் சிருஷ்டி குருட்டுத்தனமாகும்!

ஆழ்ந்த பக்திக்கும், உணர்ந்த ஞானத்திற்கும் இது பொருந்தாது!

**திருடன் :**

இவன் ஓர் விசித்திரமானவன். அதாவது இவனை நெருங்கிச் சென்றால் **போக போக்கியங்களை அனுபவிக்க முடியாது.** அனைத்தையும் பிடுங்கிவிடுவான். பிராப்தம் இருந்தாலும் ஆகாமியம் மூலமாக **பலவந்தமாக** பிடுங்கி நிலைத்தது, நிலையில்லாததை உணர்த்தி **பரதேசியாக** (பரத்தையே தேசமாக உடையவனாக) ஆக்கிவிடுவான். உண்மைகளை உணரும்போது இவன் அன்பர்களின் **உள்ளங்களை திருடி** அதை புனிதமாக்கி கொடுக்கக் கூடியவன். இது ஜீவர்களுக்கு ஆரம்பத்தில் தோற்றாது! முடிவில்தான் **நடந்தது** என்ன என உணரமுடியும்!

இவர்களால் உலகம் சுபிட்சமாகாது!
இவர்களால் உள்ளம் சுபிட்சமாகும்!
இதன் முடிவு: **உள்ளம் சுபிட்சமானால்** உலகம் அவஸ்யம்
சுபிட்சமானதாகவே தோற்றும்!!!

இல்லாத உலகத்தை இருப்புடையதாக பாவிக்கும் ஜீவர்களுக்கு மனம்போல் **வாழ்வு** என்றும், மனம்போல் **மாளிகை** என்றும், மனம்போல் **மாங்கல்யம்** என்றும் சொல்வதுண்டு. மனம் மஹத்தாகவே இருந்து விட்டால் வாழ்வோ, மாளிகையோ, மாங்கல்யமோ இல்லவே இல்லை.

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## ௯. அழுதால் உன்னை பெறலாம்!

ஓர்சமயம் திருமந்திர நகரில் எம் ஆலயத்தில் அமர்ந்து இருந்தோம். அப்போது மாலை நான்கு மணி இருக்கலாம். ஒரு அன்பர் வந்தார். அவர் ஒரு வியாபாரி. வந்தவுடன் நமஸ்கரித்தார். ஒரு பத்து நிமிஷம் எம் மருமகனாகிய முருகனைப் பற்றி அவர் அனுபவித்ததை பேசிக்கொண்டிருந்தார். அவர் கண்கள் குளமாகி நீர் வழிந்தது. பின் என்ன நினைத்தாரோ, ஸ்வாமி! திருச்செந்தூர் போய் வரலாம்

வாருங்கள். அங்கு எமதய்யன் வேலவன் இன்று தங்கரதத்தில் பவனி வருகிறான். அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இன்று அந்த தங்கரதம் இழுக்கும் குடும்பத்தவர்கள் எனக்கு அதிகம் வேண்டியவர்கள். அவர் என்னுடன் இணைந்து வியாபாரம் செய்பவர் என்றார். சரி, உம் ஆசையை ஏன் கெடுக்க வேண்டும்? எனச்சொல்லி அவருடன் புறப்பட்டது அந்த பைத்தியம்.

இருவரும் பஸ் நிலையம் வந்தோம். அவர் தம் கைகளால் பையை தடவிப் பார்த்து, ஸ்வாமி! பர்ஸ் வீட்டில் இருக்கிறது. சட்டை மாற்றிப் போடும்போது எப்படியோ தவறவிட்டேன் என அங்கலாய்த்தார். இது சொன்னது, ஏன் ஐயா! இந்த விஷயத்தை அங்கேயே கோவிலில் சொல்லியிருந்தால் அங்கேயாவது பணம் எடுத்துக் கொடுத்திருக்குமே. இப்படி இங்கே வந்து சொல்கிறீரே? சரி, சற்று இங்கேயே இருங்கள். இது கோயிலுக்குச் சென்று பணம் எடுத்து வருகிறது எனச்சொல்லி ஒரு பத்து அடி நடந்திருக்கும்.

ஒரு பெரியவர் எதிரில் வந்தார். அவருக்கு வயது அறுபது இருக்கலாம், வெள்ளை வெளேர் என்ற வேஷ்டி பஞ்சகச்சம் வைத்து கட்டியிருந்தார். ஒரு மெல்லிய துண்டு மேலே போர்த்தி இருந்தார். அந்த துண்டின் உட்பகுதியில் அவர் அணிந்திருந்த முப்பிரி நூல் ஸ்பஷ்டமாக தெரிந்தது. பஞ்சுப்பொதி போல வெண்மையான தலைமுடி, வெண்மையான தாடி, தெய்வீக கலை அப்படியே அவர் முகத்தில் ஜொலித்தது. அவர், தம்பீ! தம்பீ!! என இதை அழைத்தார். அவர் யாரையோ அழைக்கிறார் என சற்று விலகிச் சென்றது. அவர் விடவில்லை. இதன் தோளைத்தட்டி கூப்பிட்டு, உன்னைத்தானே கூப்பிடுகிறேன் காது கேளாதது போல் போனால் என்ன அர்த்தம்? என்றார்!!

இல்லை ஐயா! இது கோவிலுக்கு ஒரு காரியமாக கவனமாகப் போனதால் தாங்களையும், தங்கள் குரலையும் கவனிக்கவில்லை. மன்னித்துவிடுங்கள். என்ன விஷயம் என அவரைக் கேட்க, அவர் எனக்கு திருச்செந்தூர் ஊராகும். என் பேர் **ஷண்முகம்.** இங்கே என் குழந்தைகள் இருக்கின்றார்கள். என் அன்பர் எனக்கு பதினைந்து ரூபாய் தரவேண்டும். அதை இங்கே இந்த பஸ்டாண்டில் தான் கொடுத்தார். என் கையில் ரூபாய் ஐந்து இருக்கிறது. இது பஸ்சுக்கு போதும், டிக்கட் ரூபாய் ௪.80 தானே. ஆகவே இந்த பதினைந்து ரூபாயை வைக்க இடம் இல்லை. சட்டை போடவில்லை. சட்டை இருந்தால் இதை சட்டைப்பையிலேயே வைத்துக் கொள்வேன். இந்த பணத்தை ஊருக்கு செல்லும் வரை கையில் வைத்திருந்தால் வியர்வையில் நனைந்துவிடும். மடியிலும் வைத்து பழக்கம் இல்லை. நீ ஒரு **நம்பிக்கையானவன்** என எனக்குத் தெரியும். நீதான் வாராவாரம் கோவிலுக்கு வருவாயே. அங்கு உன்னை அடிக்கடி பார்த்திருக்கிறேன். அடுத்தமுறை நீ அங்கு வரும்போது உன்னிடம் கேட்டு வாங்கிக் கொள்கிறேன். உன்னைப் பற்றித்தான் எனக்கு தெரியுமே! நீ **ஒரு பணக்கார தம்பி**. பிறர் பணத்துக்கு ஆசைப்படமாட்டாய் என்பதும் எனக்குத் தெரியும் என ஏதேதோ பேசி இதை மயக்கிவிட்டார்.

இந்த பைத்தியமும் இவர் கோவிலில் அடிக்கடி பார்ப்பதாக சொல்கிறார். இப்போது நமக்கும் பணம் தேவை. அதுவும் பதினைந்துதான் வேண்டும். நம் இருவருக்கும் பணம் ரூபாய் பத்து பஸ்சுக்கு வேண்டும். மேலும் கை செலவுக்கு ரூபாய் ஐந்து போதும். இவர் திருச்செந்தூர் வந்ததும் அவருக்கு வேண்டிய வியாபாரியிடம் பணம் வாங்குவார். வருவதற்கும் பிரச்சனை இல்லை. சரி, இவர்தான் போனால்

போகட்டுமே. அங்கு இருப்பவன் (முருகன்) நம்மை சும்மாவா தவிக்கவிடுவான் என எண்ணி அவரிடம் கை நீட்டி ரூபாய் பதினைந்தும் வாங்கிக் கொண்டது அந்த பைத்தியம்! அந்த பணம் பதினைந்தும் கூட்டிச்செல்ல வந்த அந்த வியாபாரியிடம் கொடுத்து, இது கோவிலுக்கு போகாமலே அந்த முருகன் நமக்கு பணம் கொடுத்துவிட்டான். இனி பஸ் ஏறு எனச்சொல்லி பஸ்ஸில் அமர்ந்தோம்.

திருச்செந்தூரில் வந்து இறங்கியதும் கோயிலுக்கு நடந்தோம். கூட வந்த வியாபாரியை அங்கு உள்ள ஒரு மளிகை வியாபாரி அவர் பேர் சொல்லி அழைத்தார். இந்த வியாபாரியும், இந்த கந்தசாமி நாடார் என்னை ஏனோ அழைக்கிறார், ஸ்வாமி! நீங்கள் கோவிலுக்கு செல்லுங்கள். நான் அவரிடம் சென்று விபரம் கேட்டுவிட்டு கோவிலுக்கு வந்துவிடுகிறேன். நீங்கள் அந்த கடற்கரை மணலில் அமர்ந்திருங்கள். நான் சீக்கிரமாக வந்துவிடுகிறேன் எனச்சொல்லி போய்விட்டார். இது அந்த பதினைந்து ரூபாயையும் அவரிடம் கொடுத்துவிட்டது. பஸ் டிக்கட்டுக்கு போக மீதியிருந்த ஐந்து ரூபாயையும் அவரே வைத்திருந்தார்.

இதனிடம் பையும் இல்லை. கையில் காசும் இல்லை. இதுக்கு அந்த நேரம் காசும் தேவை இல்லை. மண்டபச் சாலை வழியாக கோயிலின் சமீபம் போனது. ஒரு மேடு ஏறி இறங்கினால் கோயில் சந்நிதி, மேடு ஏறிவிட்டோம். இறங்க ஆரம்பிக்கும் போது கீழே சந்நிதியில் இருந்து (தங்கத்தேர் புறப்படும் இடத்தில் இருந்து) எம் முருகன் எழுந்தருளி புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறான்!

முருகு என்றால் அழகு! அழகு என்றால் முருகு! கண்ணனும் கந்தனும் அழகில் ஒன்றே! இவன் கையில் குழலும், அவன் கையில் வேலும் வெகு பொருத்தமாக இருக்கும்! இருவர் ஆட்டமும் வெகு அற்புதமாயிருக்கும். கண்ணன் கண் அழகன். முருகன் வேல் அழகன். இருவரின் கால் சலங்கை ஒலியும் கேட்பவர் உள்ளத்தை நெகிழ வைக்கும்.

கண்ணன் மாயையை (மனதை) களைவான்! கந்தன் வினையை (தூலத்தை) களைவான்! கண்ணன் மடுவில் (குளத்தில்) காளியன் தலையில் ஆடினான்! முருகன் மலைக்கு மலை தாண்டி ஆடுவான், மலைகளை பந்தாடுவான்! கண்ணன் பெண்களிடம் வெண்ணெயை (மனதை) திருடி சுத்தமாக்கி கொடுத்தான்! கந்தன் கிழவியிடம் (ஔவையிடம்) அஹந்தையை பஸ்பமாக்கி அவளோடு கலந்தான்! கண்ணன் சேலையை திருடி அபிமானத்தை பஸ்பமாக்கினான். கந்தன் ஔவையின் வித்யா கர்வத்தை (ஓலையை) மடக்கி அஹங்காரத்தை பஸ்பமாக்கினான். **கண்ணா!** என்றாலோ, **கந்தா!** என்றாலோ விதியை முடிக்கும் காலன் உங்கள் காலடியில் மறைந்துவிடுவான்!

ஒரு இருபது அடிதூரத்தில் முருகன் தங்கத்தேரில் பவனி வந்து கொண்டிருந்தான். அன்று ஏனோ தேரை இழுப்பவர்கள் ஒரு பதினைந்து பேர்கள், மேளம், குழல் அணியினருடன் பக்தர்கள் முப்பது பேர்தான். கிட்டத்தட்ட மொத்தம் ஐம்பது பேர்கள் தான் இருப்பார்கள். அந்த ஏற்றத்தில் ஒரு கல்யாண மண்டபம் இருந்தது. அதன் பக்கம் முருகன் வந்தான். அங்கு திருக்கண் சாத்தி கற்பூர ஆரத்தி நடந்தது. அந்த கற்பூர ஆரத்தியில் முருகன் ஜெகத்ஜோதியாக ஜொலித்தான். அதில் அவன் குலுங்கிக்குலுங்கி சிரிப்பதை உணர்ந்தோம்.

அதேசமயம் ஆரத்தி காட்டிய பட்டர் இந்த பைத்தியத்தை பார்ப்பதை உணர்ந்தோம். அவர் அருகில் இருந்தே, திருமந்திர நகரில் இந்த பைத்தியத்திடம் பதினைந்து ரூபாய் கொடுத்த பெரியவர் வேகமாக வந்தார். வந்தவர், தம்பீ! தம்பீ!! உன்னிடம் கொடுத்த பதினைந்து ரூபாயையும் இப்போ தந்தால் உபயோகமாகவே இருக்கும்! இப்போது அந்தப் பணம் அவசரமாக தேவைப்படுகிறது என துரிதப்படுத்தினார்.

இது அந்தப் பெரியவரையும் பார்த்தது, தேரில் ஆஜானுபாகுவாய் அமர்ந்திருந்த முருகனையும் பார்த்தது. கலகலவென சிரித்தது அந்த பைத்தியம்!!

**யாமோ ஓர் திருடன்! திருடனிடமே திருட்டு வேலையா??**

என உள்ளூர சிரித்துக் கொண்டே

**அது:** ஐயா வாருங்கள்! இங்கே எப்போ வந்தீர்கள்?

**அவர்:** ஓ..! ஓ..! உபசரிப்பெல்லாம் பலமாக இருக்கே! உன் உபசரிப்பெல்லாம் அப்புறம் வச்சுக்கலாம். இப்போ நான் கொடுத்த பணம் வேணும்! எடு எடு!!

**அது:** பணமா! ஏது? எவ்வளவு? எங்கே கொடுத்தீர்கள்? எப்போ கொடுத்தீர்கள்? உங்களுக்கும் நமக்கும் பணத்தால் சம்பந்தம் இல்லையே! ஆனால் வேறு ஒன்றால் சம்பந்தம் உண்டு!! (இதை யாம் தமாஷாகவே சொன்னோம்)

**அவர்:** என்ன விளையாடுகிறாயா? பைத்தியம் போல் ஏதேதோ உளறினால் விட்டுவிடுவேன் எனப் பார்க்கிறாயா? நான் யார் என்று உனக்கு தெரியுமா? கிழவன் என்று ஏமாற்றப் பார்க்கிறாயா?? நான் யாரையும் ஏமாற்றவும் மாட்டேன் ஏமாறவும் மாட்டேன். (ஊம்... ஊம்... என உறுமினார்)

**அது:** நல்லா நடிக்கிறீர்கள் ஐயா! யாமோ ஓர் சிறந்த நடிகன். நீர் எம்மைவிட திறம்பட நடிக்கிறீர். பலே பேஷ்! இப்போ உமக்கு என்ன வேண்டும்? ஏன் இப்படி ஆர்ப்பாட்டம் செய்கிறீர்? (தமாஷாக கேட்டது)

**அவர்:** (கோபத்தால் ருத்ரன் என ஆனார்!) டேய் வெறும் பயலே! என்னிடமே பணம் வாங்கி செலவழித்த பயல் நீ என்னை கிண்டல் செய்கிறாயா? எங்கேடா தூத்துக்குடி பஸ் நிலையத்தில் பதினைந்து ரூபாய், அதான் மூன்று ஐந்து ரூபாய் நோட்டு கொடுத்தேனே, அதைக் கொடு எனக்கேட்டால் என்னெல்லாமோ கதை அளக்கிறாயே!! உன்னை விட்டேனா பார்!! (என ஆர்ப்பரித்தார்)

**அது:** (வெகு சாதுவாக சொன்னது) அந்த பணம் பதினைந்துதானே, அதை அந்த நிமிஷமே கொடுத்துவிட்டோமே!!

**அவர்:** அங்கு நீ அதை கொடுத்திருந்தால் இங்கு வந்து அதை கேட்பேனா? நான் என்ன உன்னைப்போல் பைத்தியமா?

**அது:** யாம் என்றும் பைத்தியம்தான்! ஆனால் நீரோ பலே கில்லாடியான காரியக்காரர். இதை தெரியாமலா இருக்கிறோம்??

**அவர்:** (கூட்டத்தை கூட்டி விட்டார்) ஐயா! இந்த வெறும் பயல் செய்யும் அநியாயத்தை பாருங்கள். ஐயா!! நான் கிழவன் எனச்சொல்லி என்னை ஏமாற்றுகிறான்! தூத்துக்குடியில் வைத்து இன்று மாலை மூன்று ஐந்து ரூபாய் தாள்கள் கொடுத்தேன். இப்போது கேட்டால் உம்மிடம் கொடுத்துவிட்டேன் என அடம்பிடிக்கிறானே! நான் புள்ளைகுட்டிக்காரனையா! நான் கொடுத்த பணத்தை இவனிடம் இருந்து வாங்கித் தந்தால் உங்களுக்கு புண்ணியமாய் போகும். (என எல்லோரையும் கெஞ்சினார் அப்பெரியவர்)



கூட்டம் இப்போது முருகனைப் பார்க்கவில்லை. எல்லோர் கவனமும் எங்கள் இருவரையும் நோக்கியது! அதில் ஒருவர் சொன்னார், காலம் கெட்டுப் போச்சையா. இந்த வாலிப பயல் உழைச்சு சாப்பிடலாம். இந்த வயதான கிழவனிடம் இப்படி பணம் வாங்கி மோசடி செய்கிறானே! இவனை சும்மா விடலாகாது என கூட்டத்தை தூண்டிவிட்டார். அங்கு இருந்த அனைவர் கவனமும் இந்த பைத்தியத்தின் மீது பாய்ந்தது. (இந்த பைத்தியம் பார்த்தது)

## யாம்தான் நடிப்பில் வல்லவனாயிற்றே!!!

அது சாஷ்டாங்கமாக அந்த பெரியவர் கால்களில் விழுந்து கதறி அழுதது. (அது முறையிட்டதாவது)

**அது:** ஓ.. எம் ஐயனே! இது உண்மைதானே உரைக்கிறது. பொய் பேசி பழக்கம் இல்லையே. ஒரு பெரியவராக வந்து குறிப்பிட்ட பணம் கொடுத்தாய்! ஒரு வியாபாரியாக இருந்து அந்த பணம் முழுவதும் வாங்கிக் கொண்டாய்!! ஒரு பைத்தியமாக இருந்து வாங்கியும் கொடுத்தும் **வரவு, பற்றை** நிறைவு செய்துவிட்டாய்!!! உலக பொருளும் நீயே!!! பின் வாங்கியது ஒருவன்! அவன் கொடுக்கவில்லையென அபாண்டப் பழியை சுமத்துவதும் நீயே! அந்தப் பழியை ஏற்றுக்கொள்வதும் நீயே!! இப்படியும் ஒரு விளையாட்டா? மனம் படைத்த ஜீவர்கள் இந்த மதிமயக்கத்தினால்

நான் கடன் பட்டேனே!
நான் கடன் கொடுத்தேனே!!
நான் தீமை செய்தேனே!
நான் தீயதை அனுபவிக்கிறேனே!!

நான் புண்ணியம் செய்தேனே!
நான் புண்ணியத்தை அனுபவிக்கிறேனே!!
நான் பாபம் செய்தேனே!
நான் பாபத்தை அனுபவிக்கிறேனே!!
நான் அழகான மனைவியை அடைந்தேன்!
அவளால் இன்பதுன்பத்தை அனுபவிக்கிறேனே!
நான் அழகான பிள்ளைகளை அடைந்தேன்!
அவர்களால் இன்பதுன்பத்தை அனுபவிக்கிறேனே!
நான் அழகான கணவனை அடைந்தேன்!
அவரால் இன்பதுன்பத்தை அனுபவிக்கிறேனே!
நான் பொன் பொருளை அமோகமாக அடைந்தேன்!
அவைகளால் இன்பம், பயம், துக்கம் அனுபவிக்கிறேனே!
நான் வறுமையை அனுபவிக்கிறேன்!
அதனால் கொடுமையான துன்பத்தை அனுபவிக்கிறேனே!
நான் தீராத கடும்நோயை அனுபவிக்கிறேனே!
அதனால் உடல் கஷ்டத்தை அனுபவிக்கிறேனே!
நான் பட்டம், பதவி என ஆடம்பரத்தை அனுபவிக்கிறேன்!
அதனால் பணிவு, கனிவு, பொறுமை, இறை இன்பத்தை மறந்துவிட்டேனே!!!

இது அறிவில்லா மனிதஜீவன் அலறும் நிலையாகும்! இவர்கள் புத்தி வசப்பட்டதனால் கற்பனையை விகாரம் அடையச் செய்து விவகாரத்தில் (பிரச்சனையில்) மாட்டிக் கொண்டு அல்லோல ஹல்லோலப் படுகிறார்கள்! இது ஜீவநிலை. இந்நிலையில் நீ **வாக்குவாதம்** செய்தால் இந்த அறியாக் குழந்தையின் நிலை என்ன ஆகும்?? சோதனைக்கும் ஓர் அளவுண்டு! இந்த பிஞ்சு உள்ளத்திற்காக ஊரையே கூட்டுகிறாயே! இது அடுக்குமா? இது தவறு செய்ததாக தெரியவில்லையே!

"சிறியோர் செய்த சிறுபிழையாயினும் பொறுப்பது உன் கடன்"

என மஹான்கள் சொல்கிறார்களே!! இதன் தவறை கூறு பார்ப்போம். உன்னைக் காண உலகின் நிலையில் பணம் தேவைப்பட்டது. அதை அறிந்து உடனே எம்மை அலையவிடாமல் பணம் கொண்டு வந்து கொடுத்தாய்! அதை பக்கத்தில் ஓர் வியாபாரியாக இருந்து நீ கொடுத்த பணம் பூராவும் வாங்கிக் கொண்டாய். யாம் என்றென்றும் **வெறும்பயல்தானே! வெறும் பயல்** என பட்டம் சூட்டிய பின் எதை எம்மிடம் எதிர்பார்க்கிறாய்???

உள்ளத்தை பார்க்கிறாயா? அதுதான் இல்லையே! நீ என்று எம் உள்ளத்தில் குடிபுகுந்தாயோ அது அன்றே அழிக்கப்பட்டுவிட்டதே!! இப்போது நீ வசிக்கும் ஆலயம் தானே இருக்கிறது!! அதையும் இல்லாமல் பண்ணிவிடு என்கிறாயா?? பிராப்தாதீனமாக தூலம் சஞ்சாரம் பண்ணும் பரியந்தம் அந்த ஆலயம் தேவைப்படுகிறது!!

## இதயத்தில் நீ! சகஸ்ராரத்தில் ஸ்ரீகுருதேவர்!

ஒன்று சிதாகாசம் (இதயம்); ஒன்று மஹாஹாசம் (துரியாதீதம்). நீ உள்ளே இருந்து பரகர்மாவை ஆட்டுகிறாய்! ஸ்ரீகுருதேவர் மேலே இருந்து கொண்டு நடத்துகிறார். நடத்துகிறார் என்று சொல்வதைவிட **அவர் திருஷ்டியில்** தாமே நடைபெறுகிறது. இந்த விவகாரத்திற்கு இத்தனை பிரச்சனையா? போதும் ஐயனே! போதும்!!!

**ஸ்ரீமுருகன்:** ஓ.. எம் அன்புக் குழந்தாய் தூஸி என்ற சுகா! உன்னை அளவுக்கு மீறி சோதித்துவிட்டோம் **எம்மை மன்னித்துவிடு** (என கனிமொழிகளால் சொல்லி தம் இரு கரங்களாலும் தூக்கி தம் மார்போடு அணைத்துக்கொண்டு உச்சி மோந்து முத்தமிட்டு) ஓ.. திருவடி! அதிகம் துடித்துப் போய்விட்டாய் போலும்? **எமக்கு இப்படி விளையாடுவது என்றால் அதிக ப்ரீதி!**

எம் அம்மா, அப்பா, அண்ணன் ஆகியவர்களுடன் விளையாடும்போதும் இப்படி ஏதாவது ஏடாகூடமாக பேசுவோம். அதில் கலகத்தை உண்டு பண்ணுவோம். அல்லது சிண்டு முடிச்சு (இல்லாததையும், பொல்லாததையும்) சொல்லி **ஆத்திரத்தை** மூட்டுவோம். இது எமக்கு கைவந்த கலையாகும்! அவர்கள் சண்டை போடுவதையும், உணர்ந்து எம்மை திட்டும் போதும் அதை ஆனந்தமாக ஏற்போம்! திரும்ப திட்டமாட்டோம்! அதே விளையாட்டை உன்னிடம் விளையாடினோம்! நீ தயவு செய்து எம்மை திட்டிவிடாதே! சாபம் கொடுத்துவிடாதே! ஆனால் நீ அவ்வாறு செய்யமாட்டாய் என்று எமக்குத் தெரியும். உன்னைப் பற்றி எமக்குத் தெரியும். நீ பொறுமையின் சிகரம்! உனக்கு திட்டத் தெரியாது.

ஆனால் உள்ளம் கசிந்து அழத்தெரியும். நீ அழுது அழுது உன் உள்ளத்தை தூய்மைப்படுத்திவிடுகிறாய். இதை அன்பர்கள் ஏற்றுக் கொண்டால் **உள்ளம் சுத்தமாகும்**. யாம் அமரும் ஆலயமாகவும் ஆகும்! பொன் பொருளுக்கும், பெண்ணுக்கும், குழந்தை குட்டிக்கும், இந்த மண்ணாங்கட்டிக்கும், இது இல்லையே அது இல்லையே என கூக்குரலிட்டு அழுகிறார்கள். "இறைவா உன்னை காண இயலாமல் வீண் காலம் செல்கிறதே" என எவரும் உருகி அழுவதில்லை.

## "அழுதால் உன்னை பெறலாம்" இதுவே உண்மை!

**அது:** ஓ.. எம் ஐயனே! கந்தா! கடம்பா! சரவணபவா! ஷண்முகா! நீ எந்த ரூபத்தை எடுத்தாலும் உருவம் ஒன்றுதானே! நாமம் பற்பலவாக வைத்துக் கொள்கிறார்கள். பற்பல நாமம் இட்டு அழைக்கும்போது இந்த நாமாவுக்கு **இந்த குணம்** என விவகரிக்கப்படுகிறது. அந்த விவகாரத்தில்தானே விபரீதமே உண்டாகிவிடுகிறது. அந்தந்த குணங்களை உண்டு பண்ணாமல் இறைசொரூபமே நீ தேடும் இறை நாமாக்களே, "அந்த ஒன்றிலிருந்து வந்ததுதானே" என அப்போதைக்கப்போது ஐக்கியப்படுத்திக் கொண்டால் மனம் விகாரப்படாது, விபரீதமும் உண்டாகாது. அந்த பொறுமை இந்த ஜீவர்களுக்கு இல்லை.

அந்த **"பொறுமையை தா"** என சாதனையாளர்கள் கேட்கும்போது ஆச்சர்யமாகவே இருக்கிறது. இது கொடுக்கும் வஸ்துவும் இல்லை, வாங்கும் வஸ்துவும் இல்லை, சொல்லி விளக்கும்

வஸ்துவும் இல்லையே! அது **நாமாக ஏற்கும் குணமாகும்**! ஒருவருக்கு உள்ள வலியையோ, பசியையோ, சுவைக்கும் மதுரத்தையோ ஒருவருக்கு சுட்டிக்காட்டத்தான் முடியுமா? சொல்லி உணர்த்தத்தான் முடியுமா? ஆனால் இந்த ஜீவர்கள் **அதிக அவசரபுத்தி** உடையவர்களாக இருப்பதாலும் பார்த்ததும் கிடைக்க வேண்டும் என்றும், சொன்னவுடன் பலிதமாக வேண்டுமென்றும், எடை பார்க்கும் மெஷினில் ஏறி நின்றவுடன் எடைச்சீட்டு உடனே கைமேல் கிடைப்பது போல எண்ணுகிறார்கள்.

ஒரு பெரியவர் தினமும் அரசமரத்தை இருபத்தியோரு தடவை சுற்று உனக்கு புத்திரபாக்கியம் உண்டாகும் என சொன்னாராம். அந்த மங்கையும் ஒரு வாரம் சுற்றினாளாம். வீட்டில் சென்று அடிவயிறு பெருத்திருக்கிறதா? நாம் பெறப்போகும் குழந்தை வயிற்றில் வந்து தங்கிவிட்டானா என்றும் தடவிப் பார்த்து அவர் சொன்னது பொய் என ஊகிப்பது போல (பொய் என்றால் அதுவே பலிதமாகும்) இந்த மாந்தர் **கற்பனையிலேயே** மிதக்கிறார்களே பாவம்!

**வந்து போகும்** சிசுவுக்கே பத்து மாதம் காத்திருந்துதான் அதை அடைய முடிகிறது. என்றும் அழிவில்லாத சத்யசொரூபம் **அது நீ** என ஆகவேண்டுமானால் உன் சாதனை எத்தனை உறுதியாக இருக்கவேண்டும்!

ஹே.. தயாநிதி! முருகா!

இன்றைய சாதகர்கள் நிலை எந்த வினாடியும் **சந்தேகம்!** உறுதியில் நிற்பதற்கு **மனோபலம்** இல்லை! காரணம் அந்த மனதைத்தான் **பொன் பொருள் மோஹத்திலும், பூவையர் வலையிலும்,** பிள்ளைகளை கரையேற்றி அவர்கள் ஒரு நிலைக்கு வந்து, அவர்கள் வயிற்றில் **ஒரு புழுபூச்சியைப் பார்த்து** அதன் பிறகு **"உடனே ஞானம் பெறலாம்"** என நப்பாசையில் இருக்கிறார்களே தவிர உண்மையில் உறைய அவர்கள் மனம் இடம் கொடுப்பதில்லை.

காரணம்

**"சபலம், சலனம், சந்தேகம்".**

**"சாண் ஏற முழம் சறுக்க"** என்ற கதையாகத்தான் இருக்கிறது.

இதனால்தான்

**"திரிலோகத்தில் ஒரு ஞானி"** என ஆன்றோர் சொன்னார்கள்!

**ஓ.. எம் ஐயனே!**


**"உன்னுள் எம்மையும், எம்முள் உன்னையும் உணர்ந்து கரைந்த பின் இங்கு வாக்குக்கோ, எண்ணத்திற்கோ இடம் இல்லை".**


**ஆனால் எங்கும் நலத்தை தவிர துக்கம் இல்லை!**
**சுகத்தை தவிர (உடல் உலக) இனிமை இல்லை!**
**ஆன்மாவை தவிர அந்நியம் இல்லை!**
**பரமாத்மாவை தவிர பாரம் இல்லை!**

| **எல்லாம் நீ!** | **எல்லாம் நீ!!** | **எல்லாம் நீ!!!** |
| --- | --- | --- |
| உடல் உலக நாமரூப பொருள்கள் **இல்லவே இல்லை.** | தெய்வ நாம ரூபமோ, அதன் அழகோ, அதன் வல்லமைகளோ **இல்லவே இல்லை.** | தற்போதமோ நாம் அதுவாக இருக்கிறோம் என்ற அந்த உணர்வும் **இல்லவே இல்லை.** |

இந்த பைத்தியம் தம் வாழ்க்கை என்ற நாடகத்தில் திறம்பட நடித்தது. **நான், எனதை** நீக்கி நடித்ததால் ஆனந்தமாக சுவைத்து நடித்தது! அதன் தூல நாடகத்தில் பாத்திரக்கடை, துவரை ஆபீஸ், மாவு மில் என பல நிலைகளிலும் பணம் துள்ளி விளையாடியது. லட்சுமி தேவி பணத்தை அந்த நாடகத்திற்காக அள்ளிக் கொட்டினாள் போலும். **பைத்தியம் சற்று மிரண்டது.** இந்த விளையாட்டு போதும் என நிறைவு வந்தது போலும். வந்த பணம் "ஆகா" என நீங்க ஆரம்பித்தது.

**எல்லாம் நீ!**





# யாத்திரை - அவனுடன் சிலகாலம்!

## அரவணைத்தான் ஆரம்பித்தான்!

குழந்தைகளே!

இந்த பைத்தியம் ஸ்ரீசத்குரு கிருபையினால் அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்ற நிலைப்படி அவனுடன் (திருடன்) சிலகாலம் அதாவது ஒரு வருஷம் தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம் ஆகிய இம்மூன்றையும் முறையாகச் செய்தது. அது முடியுமா? என்றால் முடியும்.

**அதாவது "உண்மையை உணர்ந்த நிலையிலும், உலகத்திற்கு உதவாத நிலையிலும் ஓர் பைத்தியமானால் நீங்களும் அனுபவிக்கலாம்!"** அவனுடன் சஞ்சாரம் செய்யும் காலங்களில் அவனை உணர முடியவில்லை.

**அதுதான் அவனுடைய சாமர்த்தியம்! வினை பரிபாகம், மன பரிபாகம் என இரண்டு உண்டு. இந்த ஜீவனுடைய பூர்வ புண்ணியமும், இந்த ஜன்மாவில் கேட்டு வாங்கி வந்ததும் பக்குவப்பட்டு வந்தால் வினை முடியும். ஆசை, கோபம், மோகம், பயம், துக்கம், சந்தேகம் ஆகிய குணதோஷங்களினால் பீடிக்கப்பட்ட மனமானது பக்குவம் அடைந்து மனம் மஹத்தானால் மனம் முடியும். இந்த இரண்டும் முடிந்தால் ஸத்யம் தாமே பிரகாசிக்கும்.**

அருள்ஞானக் குழந்தைகளே!

அவன் அன்றி அணுவும் அசையாது! அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்றபடியும், நீட்டினேன், நிமிர்ந்தேன், விழுந்தேன் என்றபடியும் அவன் ஸ்ரீதிருவடியை கெட்டியாகப் பிடித்து தம்மை முழுமையாக ஆக்கிக்கொண்டால் அவன் உங்களை ஆனந்தமாக நடத்தி வைக்க காத்துக்கொண்டிருக்கிறான். இதை தம் சுயஅனுபவத்தில் உணர்ந்தது இந்த பைத்தியம்!

இந்த பைத்தியம் தம் ஸ்ரீசுவாமிகளுக்கு ஆட்பட்டு சேவை செய்துவரும் காலத்தில் மூர்த்தி, தீர்த்தம், ஸ்தலம் இவைகளை முறையாக செய்துவர மானசீகமாக வேண்டிக் கொண்டது! இந்நிலை கண்ட ஸ்ரீபரமாத்மா ஸ்ரீகுரு அருளாகவும், ஸ்ரீதிரு அருளாகவும் ஓர் நாடகத்தை நடத்தி வைத்தது!



**ஸ்ரீபண்டரிபுரம்**

ஸ்ரீமஹா பக்தவிஜயத்திலுள்ள ஸ்ரீஅடியார்கள் சரித்திரங்களை படித்து உணர்ந்து ஸ்ரீபண்டரி ஸ்தல பெருமையையும், மஹிமையையும், ஸ்ரீபாண்டுரங்கனின் பக்த வாத்ஸல்யத்தையும், ஸ்ரீசந்திரபாகா நதியின் மஹிமைப் பிரபாவத்தையும், அந்த ஸ்தலத்தில் அவன் அருள் பெற்று கோயில் கொண்ட வரலாற்றையும் உணர்ந்து ஸ்ரீபண்டரிபுரம் எப்படியாவது போகவேண்டுமென ஓர் சங்கல்பத்தை உறுதிசெய்து அவனிடம் முறையிட்டது. அதையும் அந்த வைத்தியத்தின் மனம், வினை (காலம், பக்குவம்) அறிந்து ஓர் காலத்தில் (1970-ல்) ஒரு நாளில் நிறைவேற்றி வைத்தான்!


அந்த வைத்தியம் ஒரு நாள் அவன் அருளால் ஸ்ரீகுரு கிருபையுடன் திருமந்திரநகர் விட்டு ரயில் ஏறி செல்லும்போது ரூபாய் அறுபது மட்டும் கொண்டு சென்றது. திருத்தலம் சேரும்போது ரூபாய் இருபது தான் மிஞ்சியது. சந்திரபாகா நதியில் நீராடி ஸ்ரீபாண்டுரங்கனை தரிசித்து விட்டு ஸ்ரீஅடியார்கள் கோயில் கொண்ட இடங்களை எல்லாம் தரிசித்து பேரானந்தம் அடைந்தது. தமிழை தவிர வேறு பாஷை தெரியாத காரணத்தினால் எதுவும் பேசவோ, கேட்கவோ முடியவில்லை. ஐந்து தினங்கள் ஆயின. கொண்டு சென்ற பணமும் தீர்ந்து விட்டது.

ஆறாவது நாள் உபவாசம் ஆகிவிட்டது. ஏழாவது நாள் பசியின் கொடுமை தாளமுடியவில்லை. ஸ்ரீதெய்வாதீனமாக அரைகுறையாக தமிழ் பேசும் செட்டியார் ஒருவரை பார்க்க நேர்ந்தது. அவர் மூலமாக அவர் விலாசத்தில் திருமந்திர நகருக்கு தபால் எழுதி ரூபாய் அறுபது மட்டும் அனுப்பும்படியாகவும், ஊருக்கு திரும்பி விடுவதாகவும் எழுதியது. எட்டாவது நாள் மனம் மிகவும் நைந்து அதிவேதனையுடன் நதியில் நீராடிவிட்டு கோயிலுக்குச் செல்லும்போது கதறி அழுது புலம்பிக் கொண்டே சென்றது அந்த வைத்தியம்!

கண்ணா! உன்னை கருணைக்கடல் என்றும், பக்தவத்ஸலன் என்றும், பதிதபாவனன் என்றும், தீனபந்து என்றும் சொல்வதெல்லாம் பொய்யா? இந்த அனாதையிடம் என்ன வன்மமோ? ஏன் இந்த பாராமுகம்? பக்தவிஜயத்தில் காணப்படும் உன் மஹிமைப்பிரபாவங்கள் அனைத்தும் வாசகம் மட்டும்தானா?

உண்மை கிடையாதா? இதை வாய் பேசா ஊமையாக்கிவிட்டாயே? இனம், மொழி தெரியாத காட்டில் இப்படி புலம்பி அலைய விட்டுவிட்டாயே? வாய் பேச முடியாமலும், முகம் பார்க்க முடியாமலும் இருக்கும் இந்த அபலையிடம் உனக்கென்ன வன்மம்? இந்த அனாதையின் குரல் உன் செவியில் விழவில்லையா? உன் வீடு தேடி வந்த ஓர் அபலையை இப்படி தெருவில் அலைய வைத்துவிட்டாயே இது முறையா? இது உனக்கு அடுக்குமா? இது தர்மந்தானா?

ஓ... கண்ணா! ஹரே... கிருஷ்ணா! என முறையிட்டு கதறி அழுதுகொண்டே ஆலயத்துள் சென்றதும் அவன் இடுப்பில் இருகரம் வைத்து புன்முறுவலுடன் செங்கல் மேல் ஆனந்தமாக நிற்கும் காட்சியை கண்டதும் அளவற்ற துக்கம் தொண்டையை அடைத்தது. அடுத்து அந்த துக்கம் பீறிட்டு வெடித்தது. ஏ... கண்ணா! மணிவண்ணா! ஹே... பிரபு! நீ கல்தானா? கருணையே உன்னிடம் கிடையாதா? அன்று நாமதேவர் ஊட்டிய அன்னம் உண்டது நீதானே? யாத்திரை செல்ல இருந்த நாமதேவரை பிரிய மனம் இல்லாமல் அழுது புலம்பினாயே? அவர்தான் உன் குழந்தையா? துகாராம் ஸ்வாமிகளை ஆலிங்கனம் செய்து நீயும் யாமும் ஒன்று என உணர்த்தினாயே! நிம்பராஜன், ஷேக்முஹமது போன்று வேறு பாஷை பேசும் அடியார்களையும் அவரவர்க்குத் தகுந்தபடி பேசி அரவணைத்துக் கொண்டாயே! அது பொய்யா? இந்த அனாதை அந்த பேறு பெறவில்லையா? உன்னையன்றி வேறு கதியில்லை கண்ணா! உன் குழந்தையை உதாசீனம் செய்தால் அது எங்கு செல்லும்? ஆதரிப்பார் யார்? இந்த திக்கற்ற தீனனை பார் கண்ணா! பேசு கண்ணா! பேசு கண்ணா! பேசு கண்ணா! என கதறி அவன் திருவடியில் முட்டி மோதியது! ஓர் பைத்தியம்தான் புலம்புகிறது.



அந்த நேரம் அந்த கோயிலில் தெய்வாதீனமாக இரண்டொரு ஆத்மாக்களைத் தவிர வேறு எவரும் இல்லை. அந்த நேரம் அந்த அதிசயம் நடந்தது. எதிர் படிக்கட்டில் **அறுபது வயது மதிக்கத்தக்க ஓர் பெரியவராக அவன் நின்றுகொண்டு** அந்த பைத்தியத்தின் நாமாவை சொல்லி அழைத்து, ஏன் அப்பா! அங்கே முட்டி மோதிக் கொள்கிறாய்? வா இப்படி. உனக்கு என்ன வேண்டும்? நீ அனாதையா? நான் இருக்கும்போது நீ எப்படி அனாதையாக முடியும்? என்றார்.

குழந்தைகளே!


அவரைக் கண்ட அந்த கணத்தில்...... அதை எழுத முடியவில்லை! சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தது. அவர் அதை கைவாகு கொடுத்து அரவணைத்தபடி வெளிமண்டபத்திற்கு அழைத்து வந்து தம் தோளில் போட்டிருந்த வஸ்திரத்தால் அதன் கண்ணீரைத் துடைத்து (கண்ணீரை துடைத்தானா? திரையிட்டு மூடினானா?) அமைதிப்படுத்தினான். அதன் பிறகுதான் உலகம் தெரிந்தது.

குழந்தைகளே!

அவர் சொன்ன வாசகம்:

தம்பி! என் சொந்த ஊர் பெங்களூர். எனக்கு மூன்று குழந்தைகள் உண்டு. இரண்டு ஆண், ஒரு பெண். எல்லோரும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். என் மனைவி ஒரு பையன் வீட்டில் இருக்கிறார்கள். என்னை எவரும் சரிவர கவனிப்பதில்லை. நான் பால்யத்திலேயே யதேச்சையாக திரிந்தவன். கட்டுப்பாடு எனக்குக் கிடையாது. அவர்களின் கட்டுக்குள் அடங்கி இருக்க என்னால் முடியவில்லை. நான் ஊரைவிட்டு கிளம்பி மூன்று தினங்கள் ஆகின்றன. இங்கேயே இருக்கலாமென வந்தேன். நதியில் குளித்துக்கொண்டிருந்த உன்னை கண்டேன். நீ அழுதுகொண்டு வரும்போது உன் பின்னால் வந்தேன். நீதான் எதையும் கவனிக்கவில்லையே? என்னை எங்கு கவனிக்கப் போகிறாய்?

உன் நிலை கண்டு பரிதாபம் கொண்டேன். சரி நமக்கு ஓர் துணை கிடைத்ததென உன்னை பற்றிக்கொண்டேன்! இருவரும் இனி ஒருவருக்கொருவர் துணையாக இருப்போம். அடுத்து என்ன செய்ய வேண்டும்? உன் எண்ணத்தின்படி நான் நடக்கிறேன்! என் எண்ணத்தின்படி உனக்கு நடக்க முடியாது என்றார். **அன்றிலிருந்து அவரை அப்பா என்றும், சிலசமயம் ஸ்வாமி என்றும் அழைப்பதுண்டு.**



அந்த பைத்தியம் தன் வரலாற்றையும் சொல்லி, ஊர் போவதற்கு பணம் கேட்டு எழுதியிருப்பதாகவும், இனி ஊர் செல்ல விரும்பவில்லை என்றும், வடக்கே சென்று சகல ஸ்தலங்களையும் தரிசிக்க உங்கள் அனுக்ரஹம் வேண்டும் எனவும் அவரை வேண்டிக் கொண்டது. அவரும் சரி எனப்பகர்ந்து, உன் பணம் வந்து அதன் மூலம் நீ யாத்திரை செய்ய விரும்புகிறாயா? அல்லது எந்த மார்க்கமாக யாத்திரை செய்ய விரும்புகிறாய்? என கேட்டார்.

ஸ்வாமி! பணம் உயிர்கொல்லி என அப்பா சொல்லுவார்கள். ஆகவே பண உதவி இல்லாமலே யாத்திரை செய்யவேண்டும் எனக் கூறியது. அதற்கு அவர் பணம் இல்லாமல் பஸ்ஸிலும், ரயிலிலும் பிரயாணம் செய்ய முடியாதே! அப்படியானால் பாத யாத்திரையாக செல்ல உத்தேசமா என கேட்டார். அது சொன்னது: ஸ்வாமி! ரயிலிலேயே பிரயாணம் செய்யலாம். ரயில் செல்ல முடியாத இடத்தில் பாத யாத்திரையாகச் செல்லலாம் எனக் கூறியது. அதற்கு அவர் ரயிலில் டிக்கட் எடுக்க வேண்டாமா? எனக்கேட்டார். அது கூறியது: ஸ்வாமி! இதன் அப்பா முன்பு யாத்திரை செய்தார்கள்! அப்போது இது உன் "அப்பன் வீட்டு ரயில்" என ஸ்வாமி அப்பாவிடம் சொன்னானாம். அப்படியானால் நமக்கு இது தாத்தா வீட்டு ரயில் எனக்கூறியதும் அவர் கடகடவெனச் சிரித்தார். உன் யூகம் சரியானதே எனக்கூறினார்; அதன் முதுகில் தட்டியும் கொடுத்தார்.

ஸ்வாமி! வரும் பணத்தை வாங்காமலே சென்று விடலாமா? என அது கேட்டது. அதை வாங்கு, சில சாமான்கள் வாங்க வேண்டுமென அவர் சொன்னார்! அதுபோல் பணம் வந்தது. வந்ததும் ஓர் சால்வை (அவர் சால்வை வைத்திருந்தார்) இரண்டு அலுமினிய சட்டி, இரண்டு மூடி, இரண்டு டம்ளர், இரண்டு தட்டு, இரண்டு ஜால்ரா இவைகள் வாங்கி மீதி ரூபாய் இருபதை திரும்ப அனுப்பிவிட்டது. முடிவில் அவரும் அதுவும் நதியில் இறங்கி **சங்கல்பம்** செய்து கொண்டார்கள்.

அந்த சங்கல்பமாவது:


**அது பாட வேண்டுமாம்; அவர் தாளம் போட வேண்டுமாம். தர்மார்த்தமாக கிடைக்கும் சில்லரை ரூபாய் நான்கு சேர்ந்தால் பாட்டை முடித்து யாசகத்தை நிறுத்திவிட வேண்டும். பணம் சேமிப்பு ஆகாது. அன்றைய ஆகாரத்திற்கு அது போதுமானது. இரவுகாலம் தங்கும் இடம் ஸ்மஸானமாக இருக்க வேண்டும்! இல்லையேல் ஜன நடமாட்டம் இல்லாத ஓர் இடமாகப் பார்த்து பயன்படுத்த வேண்டும்.**

இரவு காலங்களில் தங்கும் இடத்திலோ, ஆலயத்திலோ அமர்ந்து ஒரு மணி நேரமாவது உருகிப் பாடவேண்டும். ரயிலில் ஏறி பயணம் செய்யும்போது எந்த இடத்திலும் டிக்கட் பரிசோதகர் டிக்கட் என்று கேட்கக்கூடாது. கேட்டால் அதற்கு மேல் ரயிலில் பயணம் செய்யக்கூடாது. போதும் என்ற நிறைமனம் வரும் வரை யாத்திரையை தொடர்ந்து செய்யலாம் என்ற பிரதிக்ஞையுடன் காவிவஸ்திரம் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொண்டதுகள்.

பதினைந்தாவது தினம் சந்திரபாகா நதியில் இறங்கி ஸ்நானம் செய்து அந்த இரண்டும் ஆலயத்தில் சென்று உருகி வழிபாடு செய்து கண்ணீர் ஆறாகப் பெருக விடை கோரியதுகள். ஸ்ரீபாண்டுரங்கனும் அன்று ஸ்ரீஞானேஸ்வரரையும், ஸ்ரீநாமதேவரையும் வழி அனுப்பும் பான்மை அங்கு பிரதிபலித்தது. ரயில்வே ஸ்டேஷன் வரை அதற்கு நடக்க முடியவில்லை, நடை பின்னலாடியது. அவர் இதன் கரம் பற்றியே அழைத்துச் சென்றார். திருக்கோவில் கோபுர தரிசனத்திலேயே லயித்து அழுத வண்ணமாக ரயிலில் அமர்ந்தது.

ரயில் புறப்படும் சமயம் அவர் அதன் நிலைகண்டு ஓர் புன்னகையுடன் பெயர் சொல்லி அழைத்து நான் உன் அருகில் இருக்க வேறு எதைத் தேடுகிறாய்? எதை விட்டுப் பிரிகிறாய்? இங்கு பார் எனக் குரல் கொடுத்தார்! அவரைக் கண்டதும் அப்படியே ஆலிங்கனம் செய்துகொண்டது. அந்நிலையில் தினமும் "ஸ்ரீபண்டரிநாதனை ஆலிங்கனம் செய்த உணர்ச்சி உண்டாக" அவரை நோக்க அந்த ஸ்ரீகாருண்யமூர்த்தி அதன் கண்ணீரைத் துடைத்தார், அதை எழுத முடியவில்லை. அன்று ஸ்ரீநாமதேவர் நிலை அந்நிலை போலும்? திருக்கரம் பட்டமாத்திரத்திலேயே உலக காட்சிகள் தோன்றியது, யாத்திரை செய்கிறோம் என்ற உணர்வு வந்தது.

**எல்லாம் நீ!**



# கனவின் காட்சி அவனே சாட்சி!

குழந்தைகளே!

ஸ்ரீபண்டரியிலிருந்து **குருதுவாடி** என்ற ஸ்டேஷனுக்கு வந்தார்கள். அதிலிருந்து பம்பாய் செல்லும் ரயில் மூலமாக சென்றார்கள். இடையில் சில ஊர்களில் இறங்கி அங்கு உள்ள ஆலயங்களை தரிசித்து **பூனா** சேர்ந்தார்கள். அங்கிருந்து **ஸ்ரீசிருடிபாபா** ஆலயம் கால்நடையாக சென்றார்கள். அங்கு முஸ்லீம்களும், இந்துக்களும் நிறைய செல்கிறார்கள். அங்கு மலையில் சிறிது தூரம் சென்றதும் ஓர் பள்ளிவாசல் இருக்கிறது. அங்கு முஹம்மதியர்கள் தொழுகை நடத்துகிறார்கள். அங்குதான் ஸ்ரீபாபா அடங்கிய இடம் என அவர்கள் கொள்கை. அதை அடுத்து சற்று தூரத்தில் ஓர் ஆலயம் இருக்கிறது. அங்குதான் ஸ்ரீபாபா அடங்கிய இடம் என இந்துக்கள் வழிபடுகிறார்கள்.

இந்த இரண்டையும் தாண்டி ஓர் அடர்ந்த கானகத்தினுள் அந்த பைத்தியத்தை அழைத்துச் சென்றார். அங்கு மனித சஞ்சாரமே கிடையாது. அங்கு ஓர் குகை இருக்கிறது. அதன் வெளியே நின்றபடி ஸ்வாமிகள் ஓர் குரல் கொடுத்தார். அந்த குரலின் தன்மையோ, அர்த்தமோ ஒன்றும் அதற்கு புரியவில்லை. ஆனால் உள்உணர்வில் ஏதோ ஓர் அரியகாட்சி கிடைக்கும் என விழிநீர் மல்கி நின்றுகொண்டிருந்தது.

குகைக்குள் இருந்து **ஒன்று சூலம், கபாலம் ஏந்தி ஜடாமுடியுடன் காட்சி அளித்தது**. அந்த பைத்தியம் அவர் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்தது. திருவடியை பற்றிக் கொண்டது. பிறகு எழுந்தது. காட்சி மாறியது. அங்கு ஓர் தபஸ்வி நின்று கொண்டிருந்தார். அவர் யோகதண்டு கமண்டலத்துடன் காட்சி தந்தருளினார்.

அந்த மஹான் அந்த பைத்தியத்தை தம் மார்போடு அணைத்த வண்ணம் ***"நீ கொடுத்து வைத்தவன்"*** இந்த புருஷனை எங்கே தேடி கண்டுபிடித்தாய்? எனக்கேட்டார். அதற்குள் ஸ்வாமிகள் இடைமறித்து, நானும் உன்னைப் போன்றுதான் அலைந்து பண்டரியில் இவனைப் பார்த்தேன். ஏனோ இவனை விட்டுப்பிரிய மனம் இல்லை. நீயும் பல இடங்களில் சுற்றிவிட்டு இங்கு வந்து அமர்ந்துவிட்டாய் போலும்! உன் சீடர்கள் எங்கே? எனக்கேட்டார். அதற்குள் நான்கு பேர் குகைக்குள் இருந்து வந்தனர்.

இந்த காட்சிகளை கண்டவுடன் அந்த பைத்தியத்திற்கு அவர்கள் நால்வரும் சனத்குமாரர்களாகவும், அவர் ஸ்ரீதட்சிணாமூர்த்தி ஆகவும், ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீபாண்டுரங்கனாகவும் தோன்றியதாம்! என்ன பாவனை பாருங்கள்? இப்படியும் காண முடியுமா?

**பைத்தியம் என்றால் சுத்த பைத்தியம் போங்கள்! நீங்களும் பைத்தியமானால் இந்நிலை பெற முடியும். உங்களுக்கும் பைத்தியக்காரன் பட்டம் கட்டுகிறது. அது உங்கள் மனோ நிலையை பொருத்திருக்கிறது.**

குழந்தைகளே!

அங்கு மூன்று தினங்கள் தங்கி இருந்தார்களாம்; விசேஷமான விருந்து! பல உபசாரத்துடன் இந்த இரண்டையும் அனுப்பிவைத்தார்கள். அந்த ஸ்ரீமஹானைப் பிரியும் சமயம் இருவர் கண்களிலும் கண்ணீர் பனித்து முத்தாக நின்றது! கீழே விழவில்லை! அதை இருவரும் ஒருவருக்கொருவர் தம் அபயகரத்தால் துடைத்துக்கொண்டனர். அதன் தன்மை என்னவென்று தெரியவில்லை. வந்து கொண்டிருக்கும் போது சகலமும் கனவாக மாறிவிட்டது.

அது ஸ்ரீஸ்வாமிகளிடம் கேட்டது, ஸ்வாமி! அவர்கள் யார்? நெடுநாள் பழக்கம் உள்ளவர்களைப் போல் பேசிக்கொண்டீர்களே? அந்த நேரம் ஏதோ தோற்றியது. உடனே மறந்துவிட்டது! அதன் காரணம் என்ன? எனக்கேட்டது.

அதற்கு ஸ்ரீஸ்வாமிகள், அவர் எங்கள் ஊர்க்காரர்தான். ஓர் வகையில் பந்துவும் ஆவார். சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் ஓர் சாதுவை கண்டு, அவர் பின்னால் இவர் ஓடிவிட்டார். நல்லவேளை கல்யாணம் ஆகவில்லை! சில மாதங்களுக்கு முன் பெங்களூருக்கு வந்தார். இந்த நான்கு சீடர்களையும் உடன் கூட்டிவந்தார்.

வடக்கே இமயமலை வரை சென்றதாகவும், யோகத்தின் மூலம் சில சக்திகளை பெற்றதாகவும், இந்த நான்கு பேர் சீடர்களாக சேர்ந்தார்கள் என்றும், இனி ஏதாவது ஓரிடத்தில் அமரவேண்டும் எனச்சொல்லி சென்றார். இங்கு அமர்ந்துவிட்டார் போலும்? நல்ல இடம்! அமைந்தால் இப்படி அல்லவா அமைய வேண்டும். கிடைத்தால் இப்படி அல்லவா சீடர்கள் கிடைக்க வேண்டும்! கொடுத்து வைத்தவர் என புகழ்ந்து கொண்டே வந்தார்.

ஸ்ரீஸ்வாமிகளை அந்த பைத்தியம் கேட்டது, ஆமாம் ஸ்வாமி! இந்த குகையில் இவர் இருப்பதாக உங்களுக்கு எப்படி தெரியும்? நேராக சொல்லி வைத்ததுபோல வந்து நின்று ஏதோ பரிபாஷையில் அழைத்தீர்களே! இந்த மலையில், இந்த குகையில் இருக்கப்போவதாக உங்களுக்கு தகவல் கொடுத்தாரா? எனக்கேட்டது.

அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் சொன்னதாவது:


(ஓர் புன்முறுவலுடன்) நன்றாக கேட்கத் தெரிந்து கொண்டாயே! இந்த குகையில்தான் ஸ்ரீபாபா இருந்ததாக பெரியவர்கள் கூறுவார்கள். நான் பாபாவைத்தான் அழைத்தேன். இவர் வந்தார், எனக்கு ஒன்றும் தெரியவில்லையப்பா! என உரைத்து சிரித்தார். அந்த சிரிப்பின் அர்த்தம் ஒன்றும்


புரியவில்லை. அது மாயப்புன்னகை. அதை யாரால் அறிந்து கொள்ளமுடியும்? அது பாபாவா? பரமனா? அதற்கு அவனே சாட்சி.

குழந்தைகளே!

**எந்தெந்த வடிவில் உங்கள் மனம் உறுதிப்படுகிறதோ அந்த வடிவில் காட்சிகளும் அமையும். காண்பானும் காட்சியும் ஒன்றுபடும்போது அங்கு தோற்றம் இராது! மௌனம்தான் நிலவும். அங்கு விகாரமோ, விவகாரமோ இராது! அதுவே உங்கள் சொரூபம். நீங்களும் அனுபவிக்கலாம். அதாவது காரியத்தை (உலக சுவை) மறந்தால் காரணத்தை (இறை நிலையை) உணர முடியும். இதுவோ ஓர் பைத்தியம், அது கண்டதை எழுதுகிறது. அது ஓர் கனவின் காட்சியே!**

**எல்லாம் நீ!**





# பிராப்தம் தானே நடக்கும்!

குழந்தைகளே!

இரண்டொரு மாதங்கள் ஒவ்வொரு ஆலயங்களாக தரிசித்து வரும்போது **பஞ்சவடி** வந்தார்கள். அந்த புண்ணிய நதியின் ஒரு கரை பஞ்சவடி, மறுகரை **நாசிக்**. இதில் பஞ்சவடி ஸ்ரீராமன் பர்ணசாலை அமைத்த இடமும், நாசிக் சூர்ப்பனகை மூக்கு அறுபட்ட இடமும் என சொன்னார்கள். அங்கு தரிசிப்பதற்கு ஒன்றும் இல்லை போலும். ஆகவே அவைகளை காட்டிவிட்டு அடுத்து **ஜடாயு மோட்சம்** பெற்ற இடம் ஒன்று இருக்கிறது என்றும், அங்கு ஓர் ஸ்ரீமஹான் இருக்கிறார் என்றும், அவரை தரிசிக்க வேண்டும் என்றும் அழைத்துச் சென்றார். அங்கு பாதயாத்திரையாக ஒரு வாரம் நடந்தார்கள்.

அப்படி நடந்த காலத்தில் ஓர் கிராமத்தில் ஒரு தோப்பில் அமர்ந்தார்கள். அதை அடுத்து ஓர் சிறிய வீடு. அதில் ஓர் திருமண வைபவம்; அவர்கள் சம்பிரதாயப்படி நடந்து முடிந்து தம்பதிகளை அழைத்து அந்த வீட்டிற்குள் சென்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிகள், அங்கு சென்று கொஞ்சம் ஜலம் வாங்கிவா எனப் பணித்தார்! அதற்கு அது, ஸ்வாமி! இதுக்கு பாஷை தெரியாதே! ஏதாவது கேட்டால் என்ன பதில் சொல்வது? நீங்கள் சென்றால் நலமாக இருக்கும் என்றது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகள், நீதான் செல்ல வேண்டும், அங்கு ஓர் காரியம் உன்னால் நடைபெற வேண்டும் என்றார். நான் இங்கு இருந்தே உன்னை கவனித்துக் கொள்கிறேன் என்று சொன்னார். சரி என சம்மதித்து அது கையில் ஓர் பாத்திரத்துடன் அங்கு சென்றது.

ஓர் ஓரமாக நின்றுகொண்டு அங்கு நின்ற ஓர் பெரியவரைப் பார்த்து பாபுஜீ என்றது. அவர் திரும்பிப் பார்த்தார். அவருக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. அதன் திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்தார். அந்நிலையில் அது அவனுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டது. விழுந்தவர் அதன் கரங்களை தம் கண்களில் ஒற்றிக்கொண்டு வீட்டின் உள்ளே ஏதோ சப்தமிட்டு அழைத்தார். புதுமணத் தம்பதிகளும் மற்றும் சிலரும் வெளியே வந்தனர். பெரியவர் தம்பதிகளை நமஸ்காரம் செய்யச் சொன்னார். அதன் கைகளில் அட்சதையை கொடுத்து ஆசீர்வதிக்கச் செய்தார்.

அந்த பைத்தியத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. கண்களில் நீர்சுரக்க வெளியே மரத்தடியில் அமர்ந்திருந்த ஸ்ரீஸ்வாமிகளை நோக்கியது. அவர் ஆசீர்வதிக்க ஜாடை செய்தார். அவன் கைக்கருவியாக

இருந்துகொண்டு அட்சதையை எடுத்து அந்த புதுத்தம்பதிகளை ஆசீர்வதித்தது. எல்லோரும் ஸ்வாமிகளிடம் வந்துவிட்டார்கள். அவர் ஏதோ பாஷையில் சொல்ல அவர்கள் ஜலமும், உணவும் கொணர்ந்து தந்தார்கள். எல்லோரும் நமஸ்காரம் செய்தபடி நின்றிருக்க கைகளை அசைத்தபடி ஸ்ரீஸ்வாமிகள், அந்த பைத்தியத்தின் கரத்தைப் பற்றி இழுத்துச் சென்றுவிட்டார். வழியில் செல்லும் போது இது என்ன நாடகம்? எனக்கேட்டது. பிராப்தம் தானே நடக்கும், அதை நீ கண்டு கொள்ளாதே என்றார்கள்.

குழந்தைகளே!

**ஜடாயு மோட்சம்** பெற்ற இடத்தை அடையும்போது இரவு எட்டு மணி இருக்கும். அது ஒரு அடர்ந்த காடு. அதன் நடுவே ஓர் பாழ் மண்டபம் போல் ஒரு குகை. அங்கு வெளிச்சம் இல்லை. மரங்களிடையே மூன் நிலவின் வெளிச்சம் பாதை காட்டியது. அந்த மண்டப படிகட்டுகளில் அனுபவம் உள்ளவர்போல் ஸ்ரீஸ்வாமிகள் அதன் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். அடுத்து ஓர் குறுகலான வழி அதில் மூன்றுபடி ஏறி அதிகமாக குனிந்து செல்ல வேண்டும். அந்த இடத்தில் ஓர் பாறையில் அமரும்படி சொல்லிவிட்டு தனியே உள்ளே சென்றார். உள்நுழைந்தவுடன் ஒரு குரல் கொடுத்தார்.

மங்கலான தீவட்டி வெளிச்சத்தில் அங்கு நடப்பதை கவனிக்க முடியும். அதன்படி அவன் அருளால் அது கவனித்தது. ஸ்ரீஸ்வாமிகளுடைய குரல் கேட்டதும் உள்ளே இருந்து சுமார் **ஏழு அடி உயரம் உள்ள ஓர் ஸ்ரீமஹான் ஜடாதாரியாய்** வந்து ஸ்வாமிகள் திருவடியில் வீழ்ந்து பணிந்து, ஓ.. கண்ணா! ஜனார்த்தனா!! மதுசூதனா!!! என பல நாமாக்களை உரக்கக் கூவி கதறி வீழ்ந்தார். வீழ்ந்தவரை ஸ்வாமிகள் இருகரம் கொண்டு தூக்கி நிறுத்தி அவர் வாயைப் பொத்தி, கண்ணீரைத் துடைத்து, சத்தம் போடாதே! காட்டிக் கொடுத்துவிடாதே! உன் போன்ற ஒருவனை அழைத்து வந்திருக்கிறேன். இது ரகசியமாக இருக்கட்டும் என அமைதிப்படுத்தி, அவர் ஓர் நிலைப்பட்டவுடன் அந்த பைத்தியத்தின் பெயரைச் சொல்லி அழைத்து, நிதானமாகப் பார்த்து உள்ளே வரலாம் என்றார். அவர்கள் குரல் எப்படி காதில் விழுந்தது என தெரியவில்லை. (அதுவும் ரகசியமாக இருக்கட்டும்)

உள்ளே சென்றதும் அந்த ஸ்ரீமஹானுபாவர் திருவடியில் விழுந்து கெட்டியாக பற்றிக்கொண்டது. எழுந்திருக்கவே முடியவில்லை. அந்த ஸ்ரீபாகவதோத்தமரே தம் இரு கரத்தாலும் தூக்கி ஓர் குழந்தையைப் போல் இடுப்பில் வைத்த வண்ணம் ஒரு கரத்தால் அதன் கண்ணீரைத் துடைத்து ஆசுவாசப்படுத்தினார். அதை என்னவென்று எழுத முடியவில்லை.

அந்த ஸ்ரீமஹரிஷியின் தோற்றம் சுமார் ஏழு அடி உயரம் இருக்கும். திருமுகத்தில் பிரம்மதேஜஸ்! ஜடாமுடி முழங்காலை தொட்ட வண்ணம் அமைந்திருந்தது! பத்து விரல்களிலும் மூன்று அங்குல நீளத்திற்கு நகம், இடையில் ஓர் கௌபீனம்! ஆனால் அவர் பல நூற்றாண்டு காலமாக அங்கு இருக்கிறார் என தெரிந்தது! அவர் எங்கும் செல்வதில்லை. அவர் சீடர்கள் இருவர். அவர்களே வெளியே உஞ்சவிருத்தி எடுத்துவந்து பணிபுரிவதாக தெரிகிறது! தமிழ் அரை குறையாக பேசுகிறார்கள். ஆனால் அந்த ஸ்ரீமஹான் தமிழில் தெளிவாக பேசுகிறார்.

அந்த ஸ்ரீமஹரிஷி சொன்னதாவது:

குழந்தாய்! ஸ்வாமிகளை எப்படி கண்டு கொண்டாய்? எங்கு கண்டு கொண்டாய்? எவ்வளவு காலமாகத் தெரியும்? நீ பெற்ற பேறு இனி யார் பெற முடியும்? இப்படி கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே வெளியே சென்ற ஸ்வாமிகள் வந்து விட்டார். உடனே அவர் அவசரமாக, நான் சொன்னது என்ன? நீ சொல்வது என்ன? **“மௌனம் கலக நாஸ்தி”.** ஏதாவது ரொட்டி இருந்தால் கொடு, பசி அகோரமாக இருக்கிறது என துரிதப்படுத்த அதற்கு மேல் எதுவும் தெரியாமலும், உணர முடியாமலும் மறைத்தான் போலும்?

ஒரு மணி நேரம் பஜனை நடந்தது. அதில் அனுபவித்த நிலைகளை எப்படி எழுதுவது? அடுத்து உணவு உட்கொண்டதும் நித்ராதேவி ஆட்கொண்டாள். விடிந்ததும் புறப்படு என துரிதப்படுத்தி கிளப்பிவிட்டார். அந்த ஸ்ரீமஹானை மீண்டும் நமஸ்கரித்தது. அவர் ‘‘சர்வ ஞானாபீஷ்ட சித்திரஸ்து’’ என்றார். வரும் வழியில் அவரைப்பற்றி விசாரிக்கும்போது, இங்கு பல நூற்றாண்டுகளாக ஓர் ஞானி உலகத்திற்கு தோற்றாமல் இருக்கிறார் என கேள்விப்பட்டேன், தெய்வாதீனத்தால் அவரை தரிசிக்க முடிந்தது என்றார். யார் யாரை தரிசித்தார்களோ? அது ரகசியமானது.

**எல்லாம் நீ!**





# அவன் ஆட்சி செய்த இடம்!

குழந்தைகளே!

அடுத்து குஜராத் மாநிலத்திற்கு வந்தார்கள்.

அங்கே அவன் ஆட்சி செய்த இடம் **நவத்துவாரஹா** என ஒன்பது இடங்கள் இருக்கின்றன. நவத்துவாரங்களான இந்த தூல உடலில் இந்த ஜீவன் இருந்து ஆட்சி செய்வதுபோல் அமைந்திருக்கிறது. அதன்படி அவன் மாயாவடிவை மறைக்கும்போது சகலத்தையும் மறைத்துவிட்டான். அவைகள் சமுத்திரத்தில் மூழ்கிவிட்டன. இப்பொழுது இருப்பது வியாபாரத்திற்காக கட்டப்பட்டது போலும்!

அந்த துவாரகையை சமுத்திரத்தில் ஜலத்தின் அடியில் தோன்றும் ஒரு சில கட்டிடங்களை கைடுகள் யாத்திரைவாசிகளுக்கு படகில் அழைத்துச் சென்று காட்டுகின்றனர். ஸ்வாமிகளும் அந்த பைத்தியத்தை அழைத்துக் கொண்டு நாமும் அவன் ஆட்சி செய்த இடத்தை காணவேண்டாமா என அழைத்துச் சென்றார்.



கடற்கரை வழியாக கொஞ்சதூரம் சென்றதும் அங்கு ஒரு கைடு (வழிகாட்டி) இவர்களுக்காகவே காத்து இருந்தார் போலும்? அந்த கைடு ஸ்வாமிகளை கண்டதும் வணங்கினான். அவர்கள் பாஷையில் ஏதோ பேசிக் கொண்டார்கள். அருகில் ஓர் படகு நின்றிருந்தது. கைடாக இருந்தவன் படகை செலுத்தினான். சமுத்திரம் அலையில்லாமல் அமைதியாக

இருந்தது. சமுத்திரத்தின் அடியில் கண்ட காட்சிகளை எழுத முடியாது. வந்தவன் யார்? கைடு எப்படி படகோட்டியாக மாறினான்? அந்த மாயாவினோதமான காட்சிகளை எப்படி காட்டினான். சகலமும் ஸ்ரீமாயவனின் மாயம்!

**அவனாக மயக்கத்தை நீக்கினாலன்றி அவன் ஊட்டுவதை உணர முடியாது. உடல் உணர்வுகளையும், உடல் உபாதைகளையும் அது கர்மாவாக இருந்தாலும் அவனாக விலக்கினால்தான் முடியும், தாமாக விலகாது. இதை அனுபவித்து உணர வேண்டும்.**

குழந்தைகளே!

அடுத்து பிரயாகா (அலகாபாத்) வந்தார்கள். அங்கு மூன்று புனிதநதிகளும் (கங்கை, யமுனா, சரஸ்வதி) ஒன்று சேர்வதால் இதை திரிவேணி சங்கமம் என சொல்கிறார்கள். அதை அடுத்து கயா போக வேண்டுமா? என்றார். அங்கு என்ன விசேஷம்? எனக்கேட்டது. அங்கு பிண்ட தர்ப்பணம், பித்ரு சிரார்த்தம் என கர்மாக்களை விருத்தி செய்யும் இடம். உனக்குத் தேவையா? என்றார். கர்மா நீக்கம் வேண்டுமே தவிர கர்மா விருத்தி வேண்டாம் என்றது. ஆகவே கயா செல்லாமலே அதாவது அங்கு இறங்காமலே மதுரா சென்றார்கள்.

**எல்லாம் நீ!**





# கோகுலமும் கோவர்த்தனமும்!

மதுராவில் ஒரு வாரம் தங்கி **கோகுலம், கோவர்த்தனம், பிருந்தாரண்யம்** தரிசிக்கச் செய்தார். கோகுலம் சென்ற சமயம் அங்கு ஓர் மரத்தடியில் இருந்து நீர்ஊற்று பெருக்கெடுத்து ஓடி யமுனையில் சங்கமம் ஆகிறது! அந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அதன் அருகே சமைத்து பாதாள கங்கைக்கு நிவேதனம் செய்து சாப்பிட்டார்கள். ஸ்வாமி! இந்த இடத்தில் இந்த பாதாள கங்கை வர காரணம் என்ன? எனக்கேட்க அதற்கு ஸ்ரீஸ்வாமிகள், அது பரமரகசியம் நீ உன் ஊர் சென்றதும் அதை உணரும் நேரம் வரும், அப்பொழுது அது புலப்படும் என்றார்.

அடுத்து **பிருந்தாரண்யம்** செல்லும் பாதையில் இரு சமாதிகள் இருந்தன. அதன் அருகே அமர்ந்து பாடும்படி பணித்தார். கொஞ்ச நேரம் பாடிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு நடுத்தர வயது தம்பதிகள் இரண்டு கலசங்களில் பால், தயிர், ஒரு பாத்திரத்தில் அரிசி சாதம், புரசை இலையில் சில ரொட்டிகள் சொதியுடன் கொணர்ந்து சமாதியின் முன் வைத்து பஜனை முடிந்ததும் அவைகளை அவர்கள் சாப்பிடும்படி வேண்டி நமஸ்கரித்து, ஆசிபெற்று மிகுந்த உச்சிஷ்டத்தை அந்த தம்பதிகள் உண்டு பின் வணங்கிச் சென்றனர். அப்பொழுது ஸ்வாமிகளிடம் அந்த சமாதிகளைப் பற்றியும் கேட்டது. அதற்கு முன்போலவே பதில் சொன்னார்கள்.

**அவன் கைக் கருவியாக இயங்க பழகி விட்டால் எதுதான் நடக்காது? கருவிக்கு சோகம், பயம் எப்படி வரும்? அந்நிலை நீங்களும் பெற்று அனுபவிக்கலாம்.**

அடுத்து **காளியன் மடுவை** பார்த்தார்கள். அங்கு சற்று நேரம் சிரமபரிகாரம் செய்துவிட்டு **பிருந்தாரண்யம்** சென்றார்கள். அங்குதான் தமிழ்நாட்டு பாணியில் கோபுரமும், உள்ளே சுவர் சித்திரங்கள், ஸ்ரீஆண்டாள் திருப்பாவை முப்பதும் தமிழ் வடிவில் அமைந்திருக்கிறது. அங்கு உள்ள அர்ச்சகர்களும் தமிழில் பேசுகிறார்கள். அதில் ஒருவர் விசேஷமானவர். அவர் மட்டும் அந்த பைத்தியத்துடன் நெடுநேரம் புராண இதிகாசங்களையும், சிவஞானார்த்த தத்துவங்களையும் பற்றி இரவு அதிகநேரம் உரையாடிக் கொண்டிருந்தார். வெகுகாலம் பழக்கம் உள்ளவரைப் போல் ஆகிவிட்டார். இரண்டு வேளையும் ஸ்வாமி பிரசாதத்துடன் பிராமண போஜனமும் செய்வித்தார். அவர் செய்தாரா? இவர் இயக்குவித்தாரா? என புரியவில்லை. ஸ்ரீஸ்வாமிகள் அன்று ஒரு வார்த்தையும் பேசாமல் மௌனமாக இருந்து இந்த இரண்டையும் (அர்ச்சகரையும், பைத்தியத்தையும்) சரிபார்த்தார் போலும்?

இரவு பஜனை நடந்தது. அது முடிந்ததும் அர்ச்சகர் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். வெகுகாலம் வாய் பேசாமல் ஊமையாக இருந்த ஒன்று பேசும் சக்தி வந்தால் எந்நிலை ஆகுமோ அந்நிலை ஏற்பட்டது. நடுஇரவு ஒரு மணி சுமாருக்கு ஸ்வாமிகள் சொன்னார், உன் பேச்சுக்கு தோதுவாக ஒரு ஆள் கிடைத்தால் போதும், என்னை மறந்து விட்டாயே? எனக்கூறி சிரித்தார். அப்பொழுதுதான் உண்மை புரிந்தது. உண்மையை உணர வைத்தான். பேச்சை குறைத்துக்கொண்டது. அர்ச்சகர் தூங்கி விட்டார்.

ஸ்ரீஸ்வாமிகள் கேட்டார், காலையில் இருந்து இதுபரியந்தம் ஏதேதோ பேசினாய்; அவர் கேட்டார்; அவர் பேசினார்; நீ கேட்டாய்; அதில் ஏதும் ஆனந்தம் தென்படுகிறதா? இரண்டு நிமிடம் அவர் கூறிய வாசகத்தை உணர்ந்து நோக்கியது! அனைத்தும் வியர்த்தமாக தோன்றியது. **“மௌனம் கலகநாஸ்தி” என்ற நிலையில்**

**“மௌனஸ்திதியில் சகலமும் உணரலாம்!**
**பேச்சின் நிலையில் சகலமும் அறியலாம்!**
**ஆனால் உள்உணர்வு மட்டுமே உண்மை!**
**தோற்றத்தை அறிவது பொய்!”**

குழந்தைகளே!

மறுநாள் காலை போஜனத்தை முடித்துவிட்டு **மதுரா** செல்வதற்காக பிருந்தாரண்யம் வழியாக வந்தார்கள். வரும்வழியில் அந்த பைத்தியம் மலஉபாதையின் நிமித்தம் அவரிடம் விடை பெற்று சென்றது.

அவர் ஓர் மரத்தடியில் அமர்ந்தார். அது தனியாக யமுனைக்கு வந்தது. வரும் வழியில் மணல் குன்றுகளும், சோலைகளும், புல்வெளிகளும், மரங்களும் எம் கண்ணன் அங்கு நடமாடிய காலத்தை நினைவூட்டின. அந்த பைத்தியம் கண்ணருவி பெருக உள்ளம் நெகிழ்ந்து உருகியவண்ணம், ஹே... கண்ணா! அன்று நீ ஆயர்பாடியிலும், இந்த பிருந்தாவனத்திலும் லீலைகள் செய்தாய் என ஸ்ரீபாகவதத்திலும், ஸ்ரீமஹான்கள் வாயிலாகவும் கேட்டு உணர வைத்தாய். அன்று இந்த அபலையை ஓர் மரம், செடி, கொடியாகவோ, இந்த யமுனையில் ஓர் மீனாகவோ, இந்த மணல் குன்றாகவோ சிருஷ்டித்திருக்கக் கூடாதா? உன் திருவடி தரிசனமும், உன் திருக்கர ஸ்பரிசனமும் கிடைத்திருக்குமே? அன்று கோபிகைகள் என்ன பாக்யம் செய்தார்களோ? ராதா என்ன புண்ணியம் செய்தாளோ? உன் தாய் யசோதா செய்த பாக்யம்தான் என்ன? உன்னை உன் தாய் கயிற்றினால் கட்ட முயன்றபோது அவள் பட்டபாடுதான் என்ன?

அப்படி கட்ட இன்று யாரும் இல்லை என்று யதேச்சையாக திரிகின்றாயா? நீ எங்கும் நிறைந்திருக்கிறாய் என வேதம் சொல்வது பொய்யா? தஸ்கர்ணாம்பதி என்றால் அடியார்கள் உள்ளத்தை கோயிலாகக் கொண்டவன் என்றுதானே அர்த்தம்! அது பொய்யா? இந்த இடத்தில் ஸ்ரீபாகவதோத்தமர் அஃரூரர் உன் திருவடிபட்ட இடத்தில் சங்கு சக்கர ரேகைகளை கண்டு, உருண்டு புரண்டு அங்கமெல்லாம் திருவடித்தூளியால் பூசி பேரானந்தம் அடைந்தாரே! அவர்கள் எல்லாம் ஸ்ரீமஹான்கள் என்றும், அவதார

புருஷர்கள் என்றும் சொல்லுவாயாகில் உனக்கு பாரபட்சம் கிடையாதே? உன்னிடம் ஏற்றத்தாழ்வு கிடையாதே?

ஓர் முதலையினிடத்தும், ஓர் யானையினிடத்தும், பாம்பினிடத்தும், வானரத்தினிடத்தும், வேடனிடத்தும், அசுரனிடத்தும் சமபார்வை பார்த்தவனாயிற்றே. இன்று உன் கருணையின் திறன் எங்கு சென்றது? ஓ... மாயவா! மதுசூதனா! கமலக்கண்ணா! ஹரே... கிருஷ்ணா! கிருஷ்ணா! கிருஷ்ணா! என பைத்தியமாக ஓடியது.

அதுசமயம் எங்கிருந்தோ அவன் குழல் ஓசை கேட்டது. ஓசை வந்த திசையில் பிரமை பிடித்தவன்போல் செல்ல, யமுனைக் கரைக்கு வந்துவிட்டது. அங்கு அநேகர் நீராடிக் கொண்டிருந்தனர். சற்று தூரத்தில் ஓர் பாறையில் ஒரு பத்து வயது மதிக்கத்தக்க பையன் கருத்த மேனி; கையில் ஓர் கம்பு; இடையில் ஓர் குழல்; தலையில் ஓர் முண்டாசுக்கட்டு; கழுத்தில் ஓர் துளசிமணி மாலை; அந்த குழலை கையில் எடுத்து சுழற்றிய வண்ணம் ஆனந்தமாக சிரித்த நிலையில் இருந்தான். அவன் அருகில் சென்று நோக்கியது அந்த பைத்தியம். மனதை மிரள வைத்தான் போலும்? அதுக்கு சந்தேகம் என்ற அரவம் தீண்டியது. இவன் எப்படி அந்த குழல் ஊத முடியும்? இவன் ஏதோ மாடு மேய்க்கும் சிறுவன் என அவ்விடம் விட்டு அகன்றது! சோர்ந்துபோய் ஸ்ரீஸ்வாமிகளிடம் வந்தது!

அங்கு கண்ட காட்சி அஃரூரர் நிலையை உணர்த்தியது! ஜலத்தினுள்ளும், ரதத்திலும் கண்ணனைக் கண்டதுபோல் அங்கு ஸ்ரீஸ்வாமிகள் அருகில் அவன் வீற்றிருந்தான். அதைக்கண்டு சற்று வேகமாக ஸ்வாமிகள் அருகில் செல்லும்போது அவன் ஓர் புன்முறுவலுடன் மரத்துள் மறைந்தானா? அவனாகிய மஹத்துள் மறைந்தானா? ஓடிச்சென்று ஸ்வாமிகளின் பாதங்களை பற்றியது. அவர் அதிக கோபத்துடன் விரட்டிப் பேசினார். அதாவது நான் உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைவது? கால் வலியுடன் உட்கார்ந்திருந்தேன். அதே காலில் வந்து விழுந்து விட்டாயே.

சிவனே! என பண்டரியில் இருந்தவனை கெடுத்து, இந்த வயதான காலத்தில் என்னையும் அலைய வைத்து, என் பாபத்தையும் கட்டிக்கொள்ளப் போகிறாயா? என் பாபம் உன்னை சும்மா விடாது. என் பிள்ளைகளுக்கு அடங்கி நடந்திருந்தால் இந்த கஷ்டம் எனக்கு வந்திருக்காது. அவர்களுக்கு பயந்து உன்னிடம் வந்து மாட்டிக் கொண்டேனே? நீயோ பைத்தியம் போல் அலைகிறாய். உன்னை உன் அம்மா எந்த நேரத்தில்தான் பெற்றுப் போட்டாளோ? என்னை வந்து அவஸ்தைப்படுத்த வந்திருக்கிறாய்? என பலவிதமாகத் திட்டினார்.

அந்த காட்சியை மாற்ற இப்படி ஒரு நாடகம் ஆடினார் போலும்? அந்த அசுர வேகத்தில் அனைத்தும் மறந்தன. அழுதுகொண்டே அமர்ந்திருந்தது. சற்று நேரத்தில் தெளிவடைந்தது போல் பாவனையைக் காட்டி அதன் பெயர் சொல்லி அழைத்து, என்ன மதுரா போக வேண்டாமா? இன்னும் எவ்வளவு இடங்களுக்கு செல்லவேண்டும்? இங்கேயே காலத்தைப் போக்கினால் என்ன செய்வது? என துரிதப்படுத்தி கிளப்பிவிட்டார்.

**அவனாகப் பார்த்து அந்த திரையை அகற்றவில்லையானால் இந்த ஜீவர்களால் என்ன செய்ய முடியும்? அந்த பொய்யை அகற்றும் மெய்யாக அவனே இருக்கிறான்.**

ஸ்வாமிகளிடம் எதுவும் பேசாமல் மௌனமாக பின் சென்றது. அவரும் ஓரக்கண்ணால் பார்த்த வண்ணம் முன்னால் நடந்து சென்று கொண்டிருந்தார். சற்றுதூரம் சென்றதும் அதன் கவனத்தைத் திருப்பும் நிமித்தம், ஏன் பேசா மடந்தையாகி விட்டாயா? அல்லது எந்த கோட்டையைப் பிடிப்பதாக உத்தேசம்? என தமாஷான வார்த்தையாடினார். அதற்கு பசி உண்டானது போலும்? ஸ்வாமி! பசியாக இருக்கிறது. இனி மதுரா போய் மாவு வாங்கி ரொட்டி தட்டி சாப்பிடும் வரை பசி பொறுக்காது போல் தெரிகிறது. ஒன்று பசி இல்லாமல் செய்யுங்கள் அல்லது ஏதாவது ஆகாரம் பார்த்து தாருங்கள் என முறையிட்டது.

குழந்தைகளே!

அவரும் சற்று யோசித்தார். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய் எனக்கும் பசிதான், என்ன செய்வது? என அண்ணார்ந்து பார்த்தார். அதன் பெயரைச் சொல்லி அழைத்து, அதோபார் ஓர் மலைஇலந்தை மரம் தெரிகிறது. அதில் பழம் நிறைய இருக்கிறது. அதில் நீ ஏறி பழங்களை பறித்துப் போடு, அவை போதும் நம் பசியை தணிக்க என்றார். ஸ்வாமி! மரம் ஏறத்தெரியாது என்றது. அதற்கு அவர் நீயோ வாலிபன். நீ மரம் ஏறாமல் நான் ஏறமுடியுமா? என்றார். அது சொன்னது, ஸ்வாமி! அன்று ஸ்ரீகண்ணன் ஏறாத மரமே கிடையாது. தன் நண்பர்களுக்கும், வானரங்களுக்கும் இலந்தை பழம் பறித்துக் கொடுத்து பசியாற்றினானாம். அதே இடத்தில் நம் பசியைப் போக்க அந்த ஸ்ரீகண்ணன் இல்லையே என உரக்கச் சொல்லியது.

அவர் ஓர் புன்முறுவலுடன், சரி நீ ஓர் பாட்டுப் பாடு. ஸ்ரீகண்ணன் பழம் தந்து நம் பசியை தணிக்கின்றானா பார்ப்போம்? என்றார். அந்த பைத்தியம் தன்னை மறந்து ஸ்ரீகண்ணனை நினைத்து மனம் உருகி ஓர் பாட்டு பாடியது. இரண்டு அடிகளை திரும்பத் திரும்ப பாட, அதற்கு மேல் பாட முடியாமல் தொண்டை விக்கியது, சப்தம் எழவில்லை, ஸ்மரணை கெட்டது. அந்நிலையில் ஸ்வாமிகள் இலந்தை மரத்தை தொட்டார். இந்த இடத்தை எழுத முடியவில்லை. மரம் குலுங்கிக்குலுங்கி அசைந்தது. பழம் அனைத்தும் பூமிக்கு வந்து விட்டது. ஸ்வாமிகள் அந்த பைத்தியத்தின் முதுகில் ஓர் தட்டு தட்டினார். அதற்கு சேதனாசக்தி வந்தது. காட்சிகள் மாறின! அவர் சொன்னார் பாடினது போதும்; பழங்களை பொறுக்கிக் கொண்டுவா சாப்பிடலாம் என்றார். அங்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. பசிக்கு பழம் கிடைத்தது, அது போதும் என்ற மனதைக் கொடுத்தான். மற்றதை மறைத்தான் போலும்?

அவன் நடத்தும் நாடகம் அவனாக உணர்த்தினால்தான் புரியும்.

## இது ஓர் பைத்தியத்தின் உளறல்களே!

குழந்தைகளே!

ஒருவகையாக பசியாறி **மதுரா** வந்தடைந்தார்கள். ஆற்றின் மறுபுறம் ஸ்மஸானம். அங்கு ஓர் மரத்தடியில் தங்கினார்கள். அங்கு அவர் உடல் நலம் சரியில்லை எனச்சொல்லி ஒரு நான்கு தடவையாவது மலம் கழிக்கச் சென்றுவந்து படுத்துவிட்டார். அப்பனே! இனி என்னால் நடக்க முடியாது. இன்னமும் நான்கு தடவை போனால் என் கதை முடிந்துவிடும். நீ இந்த உடலை யமுனையில் இழுத்துப் போட்டுவிட்டு சென்றுவிடலாம். என்னை இப்படியே நாற வைத்துவிட்டுப் போய்விடாதே! நீ எங்கு சென்றாலும் என் பாபம் உன்னை தொடர்ந்து வரும்.

ஆனால் நீ அவ்விதம் செய்யமாட்டாய் என எனக்குத் தெரியும். ஒரு தகப்பனுக்கு மகன் செய்ய வேண்டியவைகளை குறைவின்றி செய்கிறாய். ஆகையால் நீ எங்கு சென்றாலும் நலமாக இருப்பாய் என வாழ்த்திக் கொண்டே, எனக்கு இந்நிலையில் தயிர் வேண்டும், ரொட்டி ஆகாது. கொஞ்சம் அரிசியும் வாங்கி வா. இன்று நான் சமைக்க முடியாது, நீதான் சமைக்க வேண்டும் எனச்சொல்லி படுத்துக்கொண்டார்.

அந்த பைத்தியத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. யாரிடம் சென்று என்ன சொல்லி எதைக் கேட்பது? இன்னமும் அங்கே நின்று கொண்டிருந்தால் அவருக்கு ஆத்திரம் மூட்டுவதாக அமையும் என அவ்விடம் விட்டகன்றது. யமுனையில் தொடை அளவு ஜலமே ஓடிக்கொண்டிருந்தது. பாலத்தின் வழியே செல்லாமல் பாதை வழியே சென்று அவன் கோபுரத்தை பார்த்தவண்ணம் ஆற்றில் இறங்கிவிட்டது. செல்லும்போது புலம்பிக் கொண்டே சென்றது.

ஹே.. கண்ணா! இரக்கம் என்பதே உனக்குக் கிடையாதா? இப்படியே சோதித்து சோதித்து என்ன பலனைக் கண்டாய்? எவரிடம் அரிசி கேட்பது? எவரிடம் தயிர் கேட்பது? இப்படி திக்கு திசை தெரியாமல், பாஷை தெரியாமல் தவிக்கும் ஓர் அபலையை இப்படி திணற அடிக்கிறாயே? இதுதான் கருணையா? இதுதான் அரவணைப்பா? ப்ரபோ! நீயே கதி. நீ என்ன செய்வாயோ! ஏது செய்வாயோ! கேட்பதும் நீ; கொடுப்பதும் நீ; இந்த இரண்டிற்கும் இடையில் உள்ள பொருளும் நீ! என முறையிட்டுக்கொண்டே ஆற்றை எப்படி கடந்தோம் என தெரியாமல் கடந்து கரையேறி உருக்கமுடன் ஓர் பாட்டுப்பாடி அவன் சந்நிதி முன் வந்து நின்றது.

அதன் தோளில் ஓர் கரஸ்பரிசம் பட்டு உணர்ந்து நோக்கியது. ஓர் பெரியவர் நின்றிருந்தார். அவர் அந்த பைத்தியத்தின் தோளைத் தட்டி, ஓ.. சாதுஜீ! போஜன் காவ் (சாப்பிடுகிறாயா?) எனக்கேட்டார். அவர் கை சைகையினால் உணரமுடிந்தது. அவரிடம் தமிழில், தந்தை அங்கு இருக்கிறார் இருவருக்கும் சேர்த்து ஆகாரம் வேண்டுமென சொல்லியது. அவரும் அதைப் புரிந்து கொண்டது போல் அதன் கரங்களைப் பற்றிக் கொண்டு அழைத்துச் சென்றார். அவர் இல்லத்தில் அமரச்செய்து திருவடிகளில் நமஸ்கரித்தார். குழந்தைகளையும் நமஸ்கரிக்கச் செய்தார். பிறகு ஓர் பார்சல் கையில் கொடுத்தார். அதை பிரித்துப் பார்க்கவில்லை, அதை வாங்கி ஜோல்னா பையில் போட்டுக் கொண்டு அவர்களை ஆசீர்வதித்துவிட்டு ஆற்றைக் கடந்து ஸ்வாமிகளை அடைந்து அவரை நோக்கியது.

குழந்தைகளே!

அந்த மாயவனாகிய ஸ்ரீஸ்வாமிகள் ஓர் பாறை மீது கால்மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்தவண்ணம் ஆனந்த மந்தஹாசத்துடன், அந்த பைத்தியத்தின் பெயரைச் சொல்லி உரக்க அழைத்து, தயிர்சாதம் கொண்டு வந்துவிட்டாயா? உன்னை அழைத்துச் சென்று கொடுத்தானா? நீ கெட்டிக்காரன்! வைராக்கிய சீலன்! நீ நினைத்தால் சகலமும் நடக்கும். உன்னால் முடியாத காரியம் எதுவும் இல்லை என துதி பாடிய வண்ணம் அந்த பார்சலை பிரித்தார். அது அவர் திருவதனத்தை பார்த்தவண்ணம், கண்ணீரைப் பெருக்கிய வண்ணம், ‘‘தொட்டிலையும் ஆட்டிவிட்டு, தொடையையும் கிள்ளி விடுகிறாயே’’ இதுதான் உன் பக்தவாத்ஸல்யம் போலும்? நடத்து உன் நாடகத்தை! என அமைதியாக அமர்ந்தது அது.

பார்சலைப் பிரித்த ஸ்ரீஸ்வாமிகள், அதை இரு பாகமாக்கி இரு தட்டிலும் வைத்து ஒரு தட்டை அந்த பைத்தியத்தின் கரத்தில் வைத்தார். அப்போதுதான் அது தயிர்சாதம் என தெரிந்தது. அந்த பைத்தியம் அவரைப் பார்த்தவண்ணம் மௌனமாக, ஹே.. கண்ணா! ஒரு வடிவத்திலிருந்து தயிரும், அரிசியும் கேட்டாய்; அடுத்து ஓர் வடிவமாக இருந்து அதை சமைத்து தயிர் சாதமாக்கி கொடுத்துவிடுகிறாய்! என்னே உன் மஹிமை? என்னே உன் பெருமை? ஆரம்பத்தில் திகைக்க வைத்து திசை தெரியாமல் ஆக்கிவிட்டு அடுத்த கணம் சகல பொறுப்புகளையும் உன்வசம் ஒப்புவித்தால் அந்த நாடகத்தை நடத்தியும் முடித்துவிடுகிறாய். ஹே.. பரமாத்மா! உன் மஹிமையை எப்படி அறிவது என உள்ளுக்குள் புலம்பிய வண்ணம் அவரைப் பார்த்தது. அவரும் அமைதியாக ஆனந்தமாக அதைப் பார்த்து, எனக்கு எல்லாம் குணமாகி விட்டது. நீ சாப்பிடு என விகடமுடன் உரைத்தார் அதுவும் உண்டது. அன்றைய பொழுது கழிந்தது.

குழந்தைகளே!

மறுநாள் **கோவர்த்தனகிரிக்கு** செல்ல வேண்டும் என புறப்பட்டார்கள். அது ஓர் சின்னகிராமம். மலை அடிவாரத்தில் இருக்கிறது. அங்கு நுழைந்ததும் அது பாட ஆரம்பித்தது. அவர் தாளம் போட்டார். ஆனால் ஒரு வீட்டிலாவது ஒரு பைசா கூட கிடைக்கவில்லை, இரண்டொரு ரொட்டித் துண்டுகளே கிடைத்தன. ஊருக்கு வெளியே ஓர் மரத்தடியில் வந்து அமர்ந்தார்கள்.

அந்த பைத்தியம் ஸ்ரீஸ்வாமிகளிடம் கேட்டது, ஏன் ஸ்வாமி! இந்த கிராமம் மிகுந்த வறுமையால் வாடுவதுபோல் காணப்படுகிறதே என்றது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகள், இவர்கள்தான் நிறைமனம் கொண்டவர்கள். தேவையை விரிக்காதபடி இருப்பதைக்கொண்டு ஆனந்தமாக பயன்படுத்தி ஸ்ரீகண்ணன் திருநாமத்தை ஒரு நிமிஷமும் மறவாமல் இருக்கிறார்கள். ஸ்ரீகண்ணன் மலையைத் தூக்கி குடையாக பிடித்த காலத்தில் அவன் திருவடி நிழலில் இருந்தவர்கள்.

**திருவடி தரிசனமும், திருவடி ஸ்பரிசமும் ஒருவன் பெற்றுவிட்டால் அவனுக்கு வேறு எதிலும் நாட்டம் இராது. அவனுக்கும், உலக வாழ்வுக்கும் உள்ள உறவு துண்டிக்கப்படும். அவர்கள் தேவை அறிந்து தகுந்த நேரத்தில் தக்கதைக் கொடுத்து ரட்சிக்கிறான் என உண்மையான திருவடி பக்தியை ஸ்ரீஸ்வாமிகள் உணர்த்தினார்.**

திரும்பவும் **மதுரா** வந்தார்கள். அன்று காலைக்கடனை முடித்துவிட்டு ஓர் மரத்தடியில் அமர்ந்தார்கள். ஸ்வாமிகள் ஏதோ ஓர் சிந்தனையில் ஆழ்ந்தார். அது என்ன என்று புரியவில்லை. காலை சுமார் பத்து மணி இருக்கும் நீ இங்கேயே அமர்ந்திரு, நான் வெளியே போக வேண்டியதிருக்கிறது எனச்சொல்லி போய்விட்டார்.

மணி பனிரெண்டு ஆகியது, ஸ்வாமிகளை காணவில்லை. ஸ்வாமிகள் சென்ற வழியே பார்த்துக் கொண்டிருக்கும் போது எட்டு வயது சிறுவன் வந்து, மகராஜ்! போஜன்காவ் என அழைத்தான். பசியும் அதிகமாக இருந்தது. ஏது காரணமோ தெரியவில்லை, அவன் அழைத்ததும் அவன் பின்னே சென்றது. இரண்டு தெருக்களைக் கடந்ததும் ஓர் பெரிய வீட்டின் முன் நின்றான். மேலே செல்லும் ஏணியின் வழியாக அழைத்தான். அதில் ஏற கால் மறுத்தது. மேல் மாடியில் இருந்து ஒரு அன்னை குரல் கொடுத்து

சைகை காட்டி வரும்படி அழைத்தார்கள். அதைப் பார்த்ததும் தயங்காது மேலே சென்றது. இந்த பையனை சேர்த்து நான்கு குழந்தைகள் போலும் அந்த தம்பதிகளுக்கு. ஒரு பெரியவரும் இருந்தார். அவர்தான் குடும்பத்தலைவர் போலும்.

அந்த வைத்தியத்தை ஓர் ஆசனத்தில் அமரச்செய்து ஸ்ரீபாதபூஜை நடந்தது போலும். உணர்ச்சியற்ற கட்டையாக அது அமர்ந்து இருந்தது. எல்லோரும் நமஸ்காரம் செய்து அட்சதை பிரசாதம் வழங்கியதும், ஆகாரம் உட்கொள்வதற்காக ஓர் ஆசனப் பலகையை போட்டு ஓர் இலையில் ஏதோ பலகாரங்களும் அரிசிசாதம் மற்றும் தேவையெல்லாம் வைத்து அந்த இலையின் ஓரத்தில் பதினோரு ரூபாய் வைத்தார்கள். அது தட்சணை போலும்? அது அந்த பணத்தை எடுத்து தனியாக வைத்துவிட்டு தீர்த்தத்தை புரோட்சித்தது. பெரியவர் அந்த பத்து ரூபாய் தாளை எடுத்து இருபது ரூபாய் வைத்தார். அது அதையும் உடனே எடுத்து வெளியே வைத்துவிட்டது. பெரியவர் பயந்தபடி சாதுஜீ! க்ஷமிக்கவும் எனச்சொல்லி ஐம்பது ரூபாய் தாளை வைத்தார். அவசரமாக அதையும் அப்புறப்படுத்திவிட்டு எழுந்தது.

உடனே பெரியவர் கண்ணீருடன் கதறி, மகராஜ்! எனச்சொல்லியபடி நூறு ரூபாய் தாளை அதன் கையில் திணித்தார். அதை அந்த வைத்தியம் அவர் கைகளிலேயே திணித்தது! இதை அவர்களிடம் புரிய வைக்கவும் முடியவில்லை. பெரியவர் அதன் திருவடியை கெட்டியாக பிடித்துக்கொண்டார். குழந்தைகளும் அழ ஆரம்பித்தன. இந்த கலவரத்தில் சமையற்கட்டில் இருந்த வேலைக்காரி ஓடி வந்தாள். அவள் தமிழ்நாட்டை சேர்ந்தவள் போலும்? தெய்வாதீனமாக அவள் வந்தவுடன் நிலைமையை பெரியவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அந்த வைத்தியத்தைப் பார்த்து, ஏன் ஸ்வாமி! பணம் பத்தாது எனச் சொல்கிறீர்களா? என தமிழில் கேட்டாள்.

அது அவளிடம் சொன்னது:

அம்மா! உன்னைப் பார்த்ததும் மகாலட்சுமியைக் கண்டது போல் இருக்கிறது! தமிழ் வார்த்தைகளைக் கேட்டு எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. அந்த ஸ்ரீபகவானே இதன் நிலைகண்டு உன்னை அனுப்பினான் போலும்? பணம் வேண்டாம் எனச்சொல். இதனுடைய அப்பாவுக்கும் சேர்த்து ஆகாரம் வேண்டும் எனச்சொல். அவரும் பசியோடு இருக்கிறார் என்றது. அதற்கு அவள், ஏன் ஸ்வாமி பணம் வேண்டாம்? இருபது ரூபாயாவது வாங்கிக் கொள்வதுதானே? செலவுக்கு பணம் வேண்டாமா? பணம் இல்லாமல் எப்படி ஜீவிக்க முடியும்? என அனேக கேள்விகளைக் கேட்டாள்.

அது சொல்லியது, அம்மா! இந்த பணம் உயிர்கொல்லி எனச்சொல்லுவார்கள். தேவைக்கு மேல் வைத்திருப்பது இல்லை. பணம் காலனுக்குச் சமானமாகும். அது நம்மைத் தேடி வரவேண்டும். அப்படியே வந்தாலும் அந்த நேரம் எது தேவையோ அதை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதை தொடக்கூடாது! அதை தேடிச்செல்லவும் கூடாது. மேலும் நம் தேவைகளை பூர்த்தி பண்ண அவன் காத்துக் கொண்டிருக்கிறான். அந்த கவலை நமக்கு எதற்கு? என உண்மைகளைச் சொன்னது.

அவள் அப்படியே கண்ணீர்விட்டுவிட்டாள். ஸ்வாமி! சாதுக்களில் பணம் வேண்டாம் என்று சொல்லும் ஓர் உண்மை சாதுவை இன்றுதான் முதன்முதலாக காண்கிறேன் என சொல்லி, சகல

நிகழ்ச்சிகளையும் அவர்களுக்கு விளக்கத்துடன் எடுத்துரைத்தாள். அந்த பெரியவரும், குடும்பத்தாரும் அடைந்த நிலையை விளக்கி எழுதமுடியாது. உண்மை உணர்வை பெற்றார்கள்.

ஆகாரத்தை ஓர் பாத்திரத்தில் வைத்து அந்த பெரியவரும், வேலைக்காரியும் உடன் வந்து ஆகாரத்தை ஸ்ரீஸ்வாமிகளுக்கும், அந்த பைத்தியத்திற்கும் கொடுத்து அஞ்சலியஸ்தர்களாக நிற்க ஸ்ரீஸ்வாமிகள் சொன்னார்: உனக்கு நல்ல வரவேற்பு போல் தெரிகிறது. பரீட்சையில் தேறிவிட்டாய். இனி தாழமாட்டாய். இனி உன்னை எதுவும் தாக்காது என ஆசி கூறி, அவர்களுக்கும் ஆசி கூறி அனுப்பிவிட்டு ஆகாரத்தை உட்கொண்டு அன்றைய பொழுதை கழித்தார்கள்.

மறுநாள் மதுராவை விட்டு **ஆக்ரா** சென்றார்கள். தாஜ்மஹாலை பார்த்துவிட்டு, யமுனைக் கரையில் ஓர் மயானத்தில் இருதினம் தங்கிவிட்டு **டெல்லி** சென்றார்கள்.


குழந்தைகளே!

அங்கு காந்திஅடிகள் சமாதி சென்று, அங்கு ஓர் பஜனை குழுவுடன் சேர்ந்து பஜனை பாடி முடித்து இரவு அங்கு தங்கி மறுநாள் **அயோத்தி** சென்றார்கள். சரயு நதிக்கரையில் உள்ள அயோத்தியையும் பார்த்து, பூர்வீக அயோத்தி ஓர் வனத்தில் இருப்பதாக சொல்லி, ஸ்ரீஸ்வாமிகள் அந்த அயோத்திக்கு அழைத்துச் சென்றார்கள். செல்லும் பாதை அடர்ந்த காடாக இருக்கிறது. அங்குள்ள வானரங்கள் உருவத்தில் பெரியதாகவும், இரண்டு கால்களால் நடக்கக் கூடியதாகவும், பார்வைக்கு அஞ்சும்படியாகவும் இருக்கிறது.

ஸ்ரீஸ்வாமிகள், அதன் பெயரை கூப்பிட்டு, இந்த காட்டின் உள்ளே போனால் உண்மையான அயோத்தியை காணலாம். ஆனால் இந்த வானரங்களின் அன்பை பெறாமல் உள்ளே போகமுடியாது. ஆகவே நீ ஸ்ரீராமகானம் பாடு என்றார். சரி என அது பாடியது. அதாவது ஸ்ரீபாபுஜீ பாடிய "ரகுபதி ராகவ ராஜாராம்" என்ற பாடலை உணர்ந்து பாடியது. ஸ்ரீஸ்வாமிகள் தாளம் போட்டார்.

காட்டின் உள்ளே சென்றார்கள்; ஒன்று இரண்டு மூன்று என பத்து வானரங்களுக்கு குறையாமல் கூடிவிட்டன. ஸ்ரீராமகானத்தை லயித்துக் கேட்டன. அவைகளும் தம் கரங்களால் தாளம் போட்டன. அப்படியும் இப்படியுமாக தலை அசைத்தன. அவைகள் முன்னே வழிகாட்ட இவர்கள் இருவரும் பின் செல்ல ஆனந்தமாக பஜனை கோஷ்டியுடன் ஸ்ரீராமனின் அயோத்தியை தரிசித்தனர். முடிவில், எங்கே புறப்பட்டார்களோ அங்கேயே கொணர்ந்து விட்டுவிட்டு சென்றுவிட்டன. இக்காட்சிகள் அனைத்தும் பேரானந்தமே.

**எல்லாம் நீ!**



# அவனால் ஆகாத காரியம் என்ன?

குழந்தைகளே!

அடுத்து நேபாளம் சென்றார்கள். அங்கு கண்டகி நதிதீரத்தை அடைந்து ஸ்ரீசாலக்கிராமம் தரிசித்து மூன்று தினங்கள் தங்கினார்கள். அதில் ஸ்ரீசாலக்கிராமம் பற்றி வரலாறு கேட்டது.


அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் சொன்னதாவது:

ஸ்ரீஅடியார்கள் பெருமையை எவராலும் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஸ்ரீஅடியார்கள் திருவடித் தூளியை ஸ்ரீபரமாத்மா தனியாக வைத்து பூஜிக்கிறார். பூமியில் அடியார்கள் எங்கெங்கெல்லாம் சஞ்சரிக்கிறார்களோ அங்கெல்லாம் இந்த தூளி, ஆலயங்களின் கொடிமரத்தடியிலும், பலிபீடத்தருகிலும் ஒதுங்கும். அதை ஸ்ரீவாயுபகவான் சேகரிக்கிறார். அதை ஆகாய கங்கையிடம் கொண்டு சமர்ப்பிக்கிறார்.

அந்த ஆகாயகங்கையே ஸ்ரீபிரம்மன் கமண்டலம் மூலமாக ஸ்ரீபகீரதன் கடும் தபஸ் பண்ணிக் கொண்டு வந்த கங்கையாகவும் ஆகிறது. எப்படி என்றால் பகீரதனுக்காக ஆகாயகங்கையை ஸ்ரீபரமேஸ்வரன் தம் ஜடாபாரத்தில் ஏற்றார். காரணம் அவள் வரும் வேகத்தை பூமி தாங்காது என தம் ஜடாமுடியை விரித்து கங்கையை உள்அடக்கி ஜடையை முடித்துக்கொண்டார். பகீரதன் வேண்டுகோளுக்கிணங்கி ஓர் ஜடையை பிரித்தெடுத்து கங்கையை பூமிக்கு ஓர் அளவு பிரமாணமாக விடுத்தார். அந்த கங்கை பூமியில் விழும் சமயம் இரண்டாகப் பிரிந்தது. ஒரு பகுதி ஸ்ரீபிரம்மன் கமண்டலத்தில் விழுந்தது. அதிலிருந்து பிரவாகமாக எடுத்து பிரம்மபுத்ரா என்ற நாமத்துடன் நேபாள மலையில் இருந்து இறங்கி பாய்கிறது. மற்றொரு பகுதி பத்ரிநாராயணம் சமீபம் கங்கோத்ரி என பிரவாகம் எடுத்து ரிஷிகேஷ், ஹரித்துவார் வழியே கங்கையாக காசியை அடைகிறது.

ஸ்ரீவாயுபகவான் எடுத்துச் சென்ற ஸ்ரீபாததூளிகள் ஸ்ரீபிரம்மன் கமண்டலத்தின் வழியாக கண்டகி நதியில் வரும்போது அதில் ஓர் உருவம் பெறுகிறது. உருண்டை கற்களாக கரியநிறமாக திருமாலாகவும், கௌரிசங்கராகவும் ஸ்படிக வடிவில் பிரம்மசொரூபமாகவும் காட்சி கொடுத்து ஜீவன் உள்ளவைகளாக மாறி ஜலத்தை எதிர்த்துச் செல்லும் அதிசயசக்தி வாய்ந்ததாக ஆகிவிடுகின்றன. இதை ஸ்ரீசாதுக்கள்தான் கண்டுகொள்ள முடிகிறது. இந்த கற்கள் அருவிக்கரையில் நீர்வீழ்ச்சியையும் அதன் வேகத்தையும் எதிர்த்து மேலெழுந்தவாரியாக செல்கின்றன. இந்த பாததூளியே சாலக்கிராமம் எனப் பெயர் பெறுகிறது எனக்கூறி முடித்தார்.

Cyan Magenta Yellow blacK



நேபாள மார்க்கமாக கைலாச யாத்திரை செல்லலாம். அந்த ஸ்ரீகைலாசம் சைனா பார்டரில் இருக்கிறது. ஆகையால் இந்திய அதிகாரிகள் மூலமாகவும் சைனா அதிகாரிகள் மூலமாகவும் அனுமதி பெற்றால்தான் செல்ல முடியும். இமயமலையில் மற்றோர் யாத்திரை ஸ்தலம் அமர்நாத் ஆகும். இது காஷ்மீரின் தலைநகர் ஸ்ரீநகர் வழியாக செல்ல வேண்டும். அங்கு அமர்நாத்தில் ஓர் குகையில் சுமார் ஐந்தடி உயரத்தில் ஓர் பனிலிங்கமாக ஸ்ரீஜயன் காட்சி தருகிறார்.

இமயமலையின் மற்றொரு பகுதியில் ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரி, கேதாரம் வழியாக வெள்ளியங்கிரி செல்லலாம். இதில் கேதாரம் வரையிலும் குடும்பிகள் செல்லலாம், அதற்கு மேல் வெள்ளியங்கிரி செல்வதானால் இந்திய சர்க்கார் அனுமதியுடன் சாதுக்கள்தான் செல்ல முடியும். யாத்திரைவாசிகள் மிக குறைவாக இருக்கிறார்கள். பாதை மிககடினமானது.

**எல்லாம் நீ!**





# ஹரித்துவாரிலிருந்து வெள்ளியங்கிரி வரை!

குழந்தைகளே!

ஸ்வாமிகள் சொன்னதாவது:

உன் தந்தை ஸ்ரீஅமர்நாத் சென்று தரிசித்து முடித்து விட்டார்கள். நீ வெள்ளியங்கிரி சென்று தரிசித்து திரும்ப வேண்டும் என்றார்கள். சரி என புறப்பட்டார்கள்.

**ஹரித்துவார்** வந்து கங்கையில் புனித நீராடி ஸ்ரீமஹான்களை தரிசிக்க செய்தார்கள். இதுவே இமயமலையின் அடிவாரம். இந்த மலையில் கைபர், போலன் என இரு கணவாய் (போக்குவரவு பாதை) இருக்கிறதென்றும், ஒன்பது இடத்தில் பிலத்துவாரம் (ஒருவழிப்பாதை) உண்டென்றும் சொன்னார்கள். அதில் ஓர் பிலத்துவாரத்தைக் காட்டி இது அழகாபுரி (குபேர பட்டணம்) செல்லும் பாதை, சென்றால் திரும்ப வரமுடியாது. அங்கு செல்ல பல மாதங்களாகும் என்றும், வெளிச்சமே கிடையாது என்றும், தங்கும் இடமே கிடையாது என்றும் பல நுட்பங்களைச் சொன்னார். இதைப் போல ஒவ்வொரு தேவகணங்களும் ஓர் இராஜ்யத்தை அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள் எனவும், அவைகள் எல்லாம் பட்டம், பதவி, இச்சை உள்ளவர்களுக்குத் தேவைதான், நமக்குத் தேவை இல்லை. அதை அதிகமாக விமர்சிக்கவும் வேண்டாம் என முடித்துக்கொண்டோம்.

இரண்டு தினங்களுக்கு பிறகு **ரிஷிகேஷ்** சென்றார்கள். அத்துடன் ரயில் பாதை முடிவுற்றது. இனி **பத்ரிநாத்** செல்ல வேண்டுமாயின் பஸ்ஸில்தான் செல்ல வேண்டும். சுமார் மூந்நூறு மைல்களுக்குக் குறையாமல் இருக்கும். நடைபாதையாக சென்றால் அனேக இடங்களில் குறுக்குப் பாதை இருப்பதால் சுமார் நூறு மைல்கள் குறையும் என தெரிகிறது. ஆகவே அங்கு போவதா? வேண்டாமா? என பிரச்சனை எழுந்தது. அது மிகவும் பணிந்து கேட்டுக்கொண்டது, ஸ்வாமி! இதுவரை கூட்டி வந்த தாங்கள் **கேதார்நாத்தும், வெள்ளியங்கிரியும்** சென்று தரிசிக்கவில்லை என்றால் யாத்திரையின் பலன் முற்றுப்பெறாது. இதை எப்படியும் நடத்தித்தர வேண்டுமென கேட்டுக்கொண்டது.

அதற்கு ஸ்வாமிகள் சொன்னதாவது:

எனக்கோ வயசாகி விட்டது. காலில் வாதம் வேறு, இந்நிலையில் மூந்நூறு மைல்கள் நடந்து அதற்கு மேல் வெள்ளியங்கிரி பனிமலையில் என்னால் நடக்க முடியுமா? அப்படி நடந்து திரும்ப

Cyan Magenta Yellow blacK



முடியுமா? எனக்கு அது சாத்தியமாகப்படவில்லை. இந்த ரிஷிகேசத்திலேயே ஒரு வாரம் தங்கிவிட்டு திரும்பிவிடலாம் என்றார்கள். அதற்கு அந்த பைத்தியம், ஸ்வாமி! தாங்கள் போகலாம் என முடிவு செய்தால் அது நிறைவேறியே தீரும். அதை தடுக்க யாராலும் முடியாது. ஏதோ சோதித்துப் பார்க்கிறீர்கள். உங்கள் சோதனைகளைத் தாங்கும் அளவுக்கு சக்தி கொடுத்தால் போதும். அந்த சக்தியே உங்களையும் இதையும் வழி நடத்திச் செல்லும் என பணிவுடன் கூறியது. சரி படு; காலையில் பார்க்கலாம் என்றார்கள்.


அங்கு ஸ்ரீசிவானந்தா ஆஸ்ரமத்தில் மூன்று தினங்கள் தங்கினார்கள். கடைசியில் கங்கைக்கரை ஓரமாக லக்ஷ்மண் ஜூலா பாலத்தையும் தாண்டி கங்கை வரும் பாதையிலேயே ஓர் ஓரமாக நான்கு ஐந்து மைல்கள் நடந்திருக்கலாம். அந்த கங்கைநதிப் பிரவாகத்திலிருந்துகொண்டு இருபுறமும் உயர்ந்த சிகரங்களையும், அடர்ந்த புதர்களையும், ஓம்காரத்தின் உள் ஒலியையும் அனுபவித்த வண்ணமாக ஓர் இடத்தில் அமர்ந்தார்கள்.

அந்த பைத்தியம், ஸ்ரீஸ்வாமிகளிடம் சற்று வெளியே சென்று வருவதாக சொல்லி விடைபெற்று நதி வரும் பாதை வழியாக மேல் நோக்கிச் சென்றது. அந்த பைத்தியத்திற்கு அறியாமையின் எண்ணம் ஒன்று உதயமானது. அதாவது இதுவோ பல மகரிஷிகள் தபஸ் செய்யும் இடம். இதைவிட வசதியான இடம் வேறு எங்கும் கிடையாது. அருகில் கங்கை, ஆரண்யமான பகுதி, ஓம்காரத்தின் த்வனி, மனதில் ஓர் அமைதி. இதுபோதும், எங்காவது ஓர் இடத்தில் அமர்ந்துவிடலாம். இத்துடன் இந்த வினைகட்டு முடியட்டும் (என்ன அறியாமை பாருங்கள்? இந்த தூலத்தால் இவ்வளவு கர்மாக்கள் செய்யவும், உங்களைப் போன்ற சாதுக்களின் உறவும், உங்கள் ஆசியும், உங்கள் திருவடித்தூளியின் பெருமையையும் அடையும் பிராப்தி இருக்க, கற்பனை வழியில் மனம் சென்று ஓர் பாதையை வகுத்தது) என முடிவு செய்தவண்ணம் ஓர் மூன்று மைல்களுக்கு மேல் நடந்து இருபுறமும் நோக்குகையில் ஓர் இடம் தென்பட்டது.



அடர்ந்த புதர், தெரிந்துகொள்ள முடியாத குகை, மெதுவாக உள்ளே சென்றது. முதலில் படுத்து ஊர்ந்த வண்ணம் உள்ளே செல்ல, உள்ளே இருப்பிடமாக இருந்த ஒரு சில ஜீவர்கள் வெளியில் ஓட அது தனி இடம் ஆயிற்று. சுமார் இருபது அடி தூரம் நகர்ந்து சென்றது. எழுந்து நிற்கும் அளவுக்கு ஓர் விசாலமான இடமாகத் தெரிந்தது. தெய்வாதீனமாக ஓர் வெளிச்சம் உள்ளே பிரவேசித்தது. அந்த மங்கலான ஒளியில் சற்று கூர்ந்து கவனித்தால் அருகில் இருக்கும் வஸ்துக்களை ஓரளவு அறியலாம். அந்த நேரத்திற்கு அது போதும் என நிறைவு கொண்டது. கட்டியிருந்த வேஷ்டியையும் அவிழ்த்து மேல் துண்டையும் மடித்து ஆசனமாக விரித்து கௌபீனதாரியாக அமர்ந்தது. அவனோ கபடநாடக சூஸ்திரதாரி, அவன் இல்லாத இடம் இல்லை, அறியாத பொருள் இல்லை.

Cyan Magenta Yellow blacK



குழந்தைகளே!

எப்படியோ ஓர் இரண்டு மணி நேரம் சென்றது. அந்த வைத்தியத்தின் இடது தொடையில் ஓர் கரம் படும் உணர்ச்சி தெரிந்தது. மின்சார ஷாக் ஆனது போல் உடலெங்கும் ஓர் உணர்வு பொங்கியது. ஓர் காட்சியும் இதயகுகையில் தோன்றியது. எல்லாம் கலைந்தது. மெதுவாக கண்களைத் திறந்து நோக்கியது. அருகில் ஸ்வாமிகள் புன்னகையுடன் அமர்ந்திருந்தார். அவரைக் கண்டதா? அவனைக் கண்டதா? புரியவில்லை. சொல்லும் திறனும் இல்லை! அப்படியே அவர் மடியில் தலையைப் புதைத்து விக்கிவிக்கி அழுதது. அவர் தலையில் இருந்து முதுகு வரையிலும் தடவிக் கொடுத்தவண்ணம் இருந்தார். பிறகு இரு கரம் கொண்டு அதன் தலையை நிமிர்த்தினார். அதன் கண்ணீரைத் துடைத்தார். அவர் கண்களிலும் கண்ணீர் பனித்து உருண்டு நின்றது. அதன் கரம் கொண்டு அந்த கண்ணீரையும் அது துடைத்ததாம்! பிறகு என்ன நடந்தது என சொல்லவோ, எழுதவோ முடியவில்லை. இருவரும் வெளியே வந்துவிட்டார்கள்! ஸ்ரீஅடியார்களாகிய உங்களை தரிசிக்கும் நிமித்தம் இந்த தூலத்தை சஞ்சாரம் செய்ய வைத்துவிட்டான் போலும்?

குழந்தைகளே!

வெளியே வந்து ஓர் பாறையில் அமர்ந்தார்கள். ஸ்வாமிகள் சொன்னார்: **பிராப்தத்தை முடிக்காமல் அமரமுடியுமா? உன் தூலத்தால் எத்தனையோ காரியங்கள் நடைபெற வேண்டியிருக்கின்றன. உன் பிதாவின் கடமையை முடிக்காமலும், அநேக ஜீவர்களின் கதையை (வினையை) முடிக்காமலும் நீ எப்படி சிவமே என இருக்க முடியும்? திருவாதிரை நாளும், சபரிமலை யாத்திரையும் உன்னோடு ஒன்றிய ஒன்றாகும். அதை உன் மனம் என்று கூற்றுகிறதோ அன்று உன் பிராப்தம் முடியும் என ஆசி கூறினார்.**

குழந்தைகளே!

இந்நிகழ்ச்சிக்குப் பிறகுதான் பத்ரி யாத்திரைக்கும், ஸ்ரீவெள்ளியங்கிரி தரிசனத்திற்கும் செல்லலாம் என உத்தரவு கொடுத்தார். முன்னவை மறைந்தது. பின்னது தொடர்ந்தது. குறுக்குப்பாதை வழியாக செல்லும்போது அனேக இடங்களில் வனவாசிகள் மரங்களில் வீடுகட்டி குடியிருக்கிறார்கள். காரணம் மிருகங்களுக்குப் பயந்து அவ்வாறு இருக்கிறார்களாம்! ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குப் போவது என்றால் மரங்களும், கொடிகளும் அடர்ந்திருப்பதால் மரங்களின் மீதிலேயே கம்புகளால் பாலம் போல் அமைத்திருக்கிறார்கள். அது இல்லாத இடங்களில் காட்டுக்கொடிகளால் நூலேணி வைத்திருக்கிறார்கள். வந்தவர்கள் கீழ்நின்று சப்தம் கொடுத்தால் மேலே இருப்பவர்கள் அந்த நூல் ஏணியை கீழே தொங்க விடுகிறார்கள். அவர்கள் மேலே ஏறி வந்ததும் அந்த ஏணியையும் உடனே மேலே எடுத்துக் கொள்கிறார்கள்.

அந்த ஆதிவாசிகள் சாதுக்களிடம் நடக்கும் முறையே உன்னதமான பிரேம பக்தியை காட்டுகிறது. கண்ணீர் பெருக்கெடுத்து ஓட சாதுக்களுக்கு திருவடிபூஜை செய்கிறார்கள். அவர்கள் பாடல் புரியவில்லையானாலும் ஹர ஹர, சிவ சிவ, மஹாதேவா, ராம் ராம், கிருஷ்ணா, கண்ணா போன்ற நாமங்களை உச்சரித்து ஆனந்த தாண்டவம் ஆடுகிறார்கள். அவர்களிடம் மாவும், தேனும் சர்வசாதாரணமாக கிடைக்கிறது.

குழந்தைகளே!

இரண்டு வாரங்களுக்கு மேல் இருக்கும். காட்டின் நடுவே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஸ்வாமிகள் ஓர் கடும் சோதனையை உண்டு பண்ணினார். கையில் மாவும் இல்லை, வேறு எந்த உணவும் இல்லை. எல்லாம் தீர்ந்துவிட்டன போலும்? ஸ்வாமிகள் ஓர் இடத்தில் படுத்துக்கொண்டு இனி என்னால் ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியாது. உடம்பு ரொம்ப களைத்துவிட்டது. ஒரு கிழவனை கூட்டிவந்து இப்படி பாடாய்ப் படுத்துகிறாயே! உனக்கு கொஞ்சமும் இரக்கம் என்பதே இல்லையா? என் பாவம் உன்னை சும்மாவிடாது. எனக்கு மூச்சு அடைத்துக் கொண்டு வருகிறது. நேற்றும் சரியான ஆகாரம் இல்லை. இன்னமும் ஒரு ஆகாரமும் சாப்பிடவில்லை. வழியில் ஒரு வீடும் கிடையாது. நீ என்ன செய்வாயோ? ஏது செய்வாயோ? எனக்குத் தெரியாது. ஆகாரத்திற்கு ஏதாவது வழியைப் பார். இல்லையானால் நான் இங்கேயே கிடந்து சாகிறேன், என் கதை முடியட்டும். நீ போகலாம் என கடினமான வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளிவந்தன. ஒன்றும் பேச முடியவில்லை.

இரண்டு நாட்களாக ஆகாரம் சாப்பிடாததினால் சரீரம் நடுங்க ஆரம்பித்தது. கைகால்கள் நடுங்க, மனம் சோர்ந்து போக, கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அந்த பைத்தியம் அகன்றது. அந்த அடர்ந்த காட்டின் வழியாக அழுது புலம்பிக் கொண்டே சென்றது, ஹே.. பரமாத்மா! இது என்ன சோதனை? இதுவே உனக்கு வழக்கமாகி விட்டதா? இந்த திக்கு தெரியாத காட்டில் மிருகங்கள் நடமாடும் இந்த வனத்தில் மனித இனத்தையே பார்க்க முடியாமல் செய்து இந்த இடத்தில் படுத்துக்கொண்டு ஆகாரம் கொண்டுவா என்றால் எவரைப் பார்ப்பது? எவரிடம் கேட்பது? எந்த ஜீவர்களையும் காண முடியவில்லையே? இந்த இடத்தில் ஆகாரம் வேண்டும் என்றால் என்ன செய்யமுடியும்? சோதனை கொடுப்பதிலும் ஓர் நிலை வேண்டாமா? ஹே... அனாதரட்சகா! ஹே... ஆபத்பாந்தவா! என கதறியவண்ணம் ஓர் பித்தனைப் போல் புலம்பிக்கொண்டே சென்றது.

என்ன ஆச்சர்யம்! எதிரே ஓர் பெரியவர் கம்பு ஊனிய நிலையில் தட்டுத்தடுமாறி வந்து கொண்டிருந்தார். அவரோ ஓர் தூய வெண்மையான பழுத்த பழம்போல் தோன்றினார். அவர் ஓர் வெண்மையான துணியில் ஓர் பொட்டலம் போட்டு அதை கக்கத்தில் இடுக்கியவண்ணம் அருகில் வந்துவிட்டார். வந்தவர் அந்த பைத்தியத்தின் தோளைப் பற்றி அசைத்து (தமிழில் பேசினார்), தம்பி! ஏன் இந்த நடுக்காட்டில் தன்னந்தனியாக அழுத வண்ணம் செல்கிறாயே? உன் நிலை மிகமிக பரிதாபகரமானதே! பசி அதிகமாக இருக்கிறதா? உன் தந்தையும் பசியின் வேகத்தில் உன்னை விரட்டுகிறானா? "பசி வந்தால் பத்தும் (ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து) பறந்துவிடும்" என்பார்கள். அது உங்கள் விஷயத்தில் சரியாக இருக்கிறது. இதில் நிறைய மாவு இருக்கிறது, இதைக் கொண்டு ரொட்டி தட்டி பசியாறிவிட்டு யாத்திரையை மேற்கொள்ளுங்கள் என பரிந்துரைத்து, அந்த மாவுப் பொட்டலத்தை அப்படியே அந்த பைத்தியத்தின் கைகளில் கொடுத்துவிட்டு எப்படியோ சென்று மறைந்தார், மறுமொழிக்குக் கூட காத்திருக்கவில்லை.

குழந்தைகளே!

அந்த இமயமலையின் அடர்ந்த நடுக்காட்டில் ஒருவர் வந்து அறிந்தவர்போல் உபகாரம் செய்வதும், அந்த இடத்தில் தமிழில் பேசுவதும் அது அவன் திருக்கருணையே!

இந்த இடத்தில் ஒன்றுமே தோன்றாமல் மாவு கிடைத்ததை மட்டும் எண்ணிக்கொண்டு அதை சுமந்த வண்ணமாக கையில் மாவுப் பொட்டலத்துடன் பிரமை பிடித்ததுபோல் அந்த பெரியவரை நோக்க அவரைக் காணோம்! ஸ்ரீஸ்வாமிகளிடம் போய் கேட்போம், அங்குதான் போயிருக்கலாம் என ஸ்ரீஸ்வாமிகளிடம் வேகவேகமாக வந்தது. அங்கு ஸ்ரீஸ்வாமிகள் அடுப்புக்கு மூன்று கற்கள் அடுக்கி வைத்துக்கொண்டு போர்வையை விரித்து அதில் சிரித்தவண்ணம் அமர்ந்திருந்தார்.

இந்த பைத்தியத்தைக் கண்டதும் அதன் பெயரைச் சொல்லி அழைத்து, நீ வெகு திறமைசாலியப்பா! உன்போல் ஓர் வைராக்கியசாலியை நான் இதுவரை பார்த்ததே இல்லை! அவனே ஓர் கிழவனாக வந்தானா? உனக்காக மாவுப் பொட்டலத்தை எங்கிருந்து சுமந்து வந்திருக்கிறான் பார்! அவனே உனக்கு பணியாளனாக இருக்கும்போது உன் தன்மையை என்னவென்று சொல்வது? என உரைத்துக் கொண்டு, சரிசரி மாவை பிசை, ரொட்டி தட்டு. அடுப்பு, விறகு, சட்டி எல்லாம் ரெடி என்றார். அடியார்களுக்கு பணிவிடை செய்வதில் தனிச்சிறப்பு போலும்!

குழந்தைகளே!

**உலக அறிவில்லாத முழுமூடமாகிவிட்டால் அவன் சரண கமலாலயத்தையே கதி எனப் பற்றிக்கொண்டால் தெய்வீகம் தானே நடத்தும்! அதாவது எந்த பற்றுதலும் இன்றி, எந்த வேண்டுதலும் இன்றி அவனுள் கரையும் நிலையை மேற்கொண்டால் அவசியம் இந்நிலையில் ரட்சிக்கப்படுவீர்கள். இது உறுதி.**


மேலும் இரண்டொரு தினங்கள் நடந்திருக்கலாம். பிரதான சாலையை அடைந்தார்கள். அங்கு ஓர் மரத்தடியில் அமர்ந்தவண்ணம் அதன் பெயர் சொல்லி அழைத்து, நடந்தது போதும் இனி பஸ்ஸில் அல்லது வேனில் அல்லது ஜீப்பில்தான் போகவேண்டும். இனி நடக்க முடியாது, ஏதாவது வருகிறதா பார்? என்றார். அதற்கு அந்த பைத்தியம் சொன்னதாவது, ஆமாம் ஸ்வாமி! ரயில்தான் தாத்தா ரயில் ஆகிவிட்டது! பஸ்சும், வேனும் எப்படி தாத்தாவின் உடைமையாகும்? அதற்குப் பணம் வேண்டாமா? பணமோ நம் சத்ரு. இந்த இடத்தில் அந்த பாழாய்ப்போன பணம் தேவைப்படுகிறதே? எனக்கேட்டது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, அதோ பார் ஓர் ஜீப் வருகிறது; அது நம் பேராண்டிகள் வண்டி; அதை நிறுத்தி அதில் ஏறிச்செல்லலாம் என சொல்லியவண்ணம் பைகளை தோளில் மாட்டிக்கொண்டு ரோட்டுக்கு வந்து விட்டார். அந்த பைத்தியமும் அவர் பின்னால் சென்றது.

குழந்தைகளே!

அது ஒரு **ராணுவ ஜீப்!** அதில் இருந்து ஐந்து ராணுவ வீரர்கள் இறங்கினர். இவர்களைக் கண்டதும் கோபத்துடன், சந்தேக நோக்கத்துடன் சூழ்ந்து சோதனை செய்தனர். ஸ்வாமிகளும் அவர்கள் பாஷையில் ஏதேதோ சொன்னார். இதில் ஓர் ஆச்சர்யம்! எந்தெந்த இடத்தில் யார் யார் எந்த பாஷையில் பேசினாலும் அந்தந்த பாஷையில் (14 மொழிகளும் அவருக்குப் பாடம் போலும்) சமாளித்துவிடுகிறார். கொஞ்ச நேரம் பேசியதும் அவர்கள் பணிந்துவிட்டனர். ஸ்ரீஸ்வாமிகளின் திருவடிகளில் பணிந்து எழுந்தனர். வண்டியில் ஏறும்படி பணிந்து கேட்டுக் கொண்டனர்.

வண்டி அதிவேகமாக சென்றது. சில இடங்களில் பிரதானசாலையை விட்டு ஊடு பாதையில் சென்று பிரதானசாலையை பிடித்தது. செல்லும் வழியில் இரண்டு ராணுவ முகாமில் டீயும், ரொட்டியும்,

Cyan Magenta Yellow blacK



பழங்களும் கொடுத்து உபசரித்தார்கள். பத்ரிநாத் எல்லைக்கு இரண்டு மைல் அருகில் வண்டியை நிறுத்தி அவர்கள் மூகாமுக்கு செல்ல விடை கேட்டனர். ஸ்வாமிகளும் ஆசி கூறினார். அதில் ஒருவர் இருபது ரூபாய் கொடுக்க, ஸ்ரீஸ்வாமிகள் அதை வேண்டாம் என மறுக்க, உன் அன்பிற்காக ரூபாய் ஐந்து மட்டும் கொடு என அதை வாங்கிக் கொண்டு அவர்களை அனுப்பிவிட்டார். அடுத்து ஓர் கடையில் சென்று அரிசி, பருப்பு, வெல்லம், டீ பொட்டலம் ஆகியவைகளை வாங்கி வந்தார்.

குழந்தைகளே!

ஒருவருடம் அந்த பைத்தியத்துடனே அலைந்த அந்த ஸ்ரீபரம்பொருள், அதுதான் சமைக்கும். ஒரு நாளாவது அந்த பைத்தியம் அடுப்பு மூட்டியதில்லை. அவர் சமையலே புதுமாதிரியாக இருக்கும். அதன் தன்மையைக் கண்டுகொள்ள முடியாது. அது அலாதியானது! இப்படியே தொண்டு பண்ணிய எம் ஸ்ரீகண்ணன் வாய்க்கு ருசிகாட்டி மயக்கியே தம்மை உணர ஒட்டாமல் செய்துவிட்டான். அவன் திறமையை என்னவென்று சொல்வது?

## பார்வையில் மயக்கிய அந்த ஸ்ரீமாயவன், ருசியால் ஏன் மயக்க மாட்டான்?

குழந்தைகளே!

**பத்ரியில்** மூன்று நாட்கள் தங்கினார்கள். **கங்கோத்ரி** என்று கங்கையில் ஒரு பாகம் உற்பத்தி ஆகும் இடம் இருக்கிறது. அங்கு அழைத்துச் சென்றார், அங்கு ஓர் இடத்தில் வெந்நீர் ஊற்று இருக்கிறது. அதில் ஒரு துணியில் அரிசியைக் கட்டி கொஞ்ச நேரம் மூழ்கவிட்டால் அரிசி வெந்துவிடுகிறது. அந்த அளவுக்கு ஜலம் கொதித்துக் கொண்டிருக்கிறது. அதை அடுத்து சற்றுதூரத்தில் ஜலம் ஐஸ் மாதிரி குளிராக பொங்கி வருகிறது. இதைப்போல அனேக காட்சிகளைக் காட்டி அவைகளை மறக்க வைத்துவிட்டான். ஸ்ரீபத்ரியில் ஸ்ரீமந்நாராயணன் தபஸ்வியாக யோகநிலையில் காட்சி கொடுக்கிறார்.

ஸ்ரீஉத்தவருக்கு ஸ்ரீகண்ணன் தன் அந்திம காலத்தில் உடன் இருந்து அனேக தத்துவங்களை உணர்த்தி முடிவாக தன் மூலவிக்ரஹத்தைக் கொடுத்து நீ பத்ரிநாத் செல்வாயாக என உரைத்தான். அங்கு யாம் தபஸ்வியாக அமர்ந்திருக்கிறோம். அங்கு சென்று எம்மை பூஜிப்பாயாக எனவும், உன் தூலத்தில் உனக்கு வெறுப்பு ஏற்பட்டு அதை விடும் காலத்தில் எம் மூலவிக்ரஹத்தை சமத்துவம் நிறைந்த பூமியில் பிரதிஷ்டை செய்வாயாக! எனப் பணித்தார். அந்த உத்தவரும் அங்கு வந்து ஸ்ரீபத்ரிநாராயண மஹரிஷியை தரிசித்து அருகில் அமர்ந்து வழிபட்டு தம் தூலத்தை அங்கேயே விட்டுவிட்டார். அவர் சமாதியும் அங்கே உண்டு, அது அனேகருக்குத் தெரியாது.

ஒருசிலர் காலக்கிரமத்தில் ஜீவனாம்சத்தின் (வியாபாரத்தின்) நிமித்தம் வசதிக்காக வேறோர் பெயரைக் கொடுத்து தாம் அதை பூஜை பண்ணுவதற்காக சகலத்தையும் மாற்றி விடுகிறார்கள். இது கலியுகத்தின் மாற்றமாகும்.

குழந்தைகளே!

ரிஷிகேசத்தில் காளி கம்பளிவாலா என ஓர் மார்வாடி இருக்கிறான். அவன் பத்ரி, கேதாரம் செல்லும் சாதுக்களுக்கு கம்பளியும், கோட்டும், ஒரு தொப்பியும் கொடுக்கிறான். உங்கள் யாத்திரை

முடிந்ததும் திரும்ப கொடுத்துவிடுங்கள் என சொல்லியே கொடுக்கிறான். ஆனால் ஒருசிலர் கொடுப்பதில்லை, ஒருசிலர் கொடுத்துவிடுகிறார்கள். அதை ஸ்வாமிகளும் அந்த பைத்தியமும் வாங்கி இருந்தன. வரும் சமயம் திரும்ப கொடுத்துவிட்டார்கள்.

**கேதார்நாத்** வரை யாத்திரைவாசிகளும், சாதுக்களும் சேர்ந்தே செல்கிறார்கள்! அதற்கு மேல் ஸ்ரீவெள்ளியங்கிரி செல்லும்போது யாத்திரைவாசிகளை அதிகமாக விடுவதில்லை. அங்கு ஓர் பாதுகாப்பு அதிகாரி அதற்கு மேல் செல்பவர்களின் முழு முகவரியையும் குறித்துக் கொண்டு கையொப்பமும் வாங்கி, இனி நீங்கள் திரும்பி வந்தால் புனிதப்பிறவியே அதாவது இறைவன் அம்சமே என வழி அனுப்புகிறார்கள். அதுவும் குறிப்பிட்ட அந்த ஓர் மாதத்தில்தான் யாத்திரை செய்ய முடியும். மற்ற காலங்களில் கேதார்நாத்துக்கு மேல் எவரையும் செல்ல அனுமதிப்பதில்லை. செல்லும் யாத்திரைவாசிகளில் திரும்பும்போது பாதி ஜீவர்கள் கூட திரும்புவதில்லை. செல்லும் பாதையிலேயே முடிந்துவிடுகிறார்கள். அப்படி பிராணன் பிரிந்த உடல்களை ஓர் ஓரமாக இழுத்து வைத்துவிட்டு செல்ல வேண்டும். உடன் சில டாக்டர்களும் வருகிறார்கள். முதலுதவி செய்தவண்ணம் வந்தாலும் விதி முடியும்போது அந்த டாக்டர்கள்தான் என்ன செய்யமுடியும்? அந்த இடத்தில் ஜீவன் பிரிய கொடுத்து வைக்க வேணுமென்று சொல்லப்படுகிறது.

**வெள்ளியங்கிரி** பனிமயமாய் ஆனது! அது சூரிய ஒளியில் வெள்ளியாக தோற்றுவது என்ன மாயாஜாலமோ? இந்த ஜீவர்களை மயக்க அவன் செய்யும் சிருஷ்டி அற்புதமானது! அங்கு அநேகமாக பாறைகள் காணப்படுவதில்லை எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் பாறைகள் தென்படுகின்றன. சூரியன் சிலசமயம் அபூர்வமாக வந்து மறைந்து விடுகிறான். மேலும் பாறைகள் அனைத்தும் பனி மூடிக்கொள்வதால் எங்கும் பனிப்பாறைகள்தான்! செடி, கொடி, புல் பூண்டு அதிகம் அங்கு தோற்றுவதில்லை. ஊசி இலைக்காட்டு மரங்கள் சில இடங்களில் காணப்படுகின்றன. எந்த உயிரினங்களும் அங்கு கிடையாது. ஒரே மயான அமைதிதான். அடியார்கள் மட்டும் உரத்த குரலில், “ஹரஹர மஹாதேவா” என்று அழைக்கிறார்கள். அந்த சப்தமே வானைப் பிளக்கிறது. பஜனைகளும், நாமாவளிகளுமே அங்கு கேட்க முடியும்.

அந்த உலகமே வேறுதான். இங்கே உள்ள அனாச்சாரமான பழக்க வழக்கம், வார்த்தைகள் எதுவும் அங்கு காண முடியாது. கீழே கவனமாக ஊன்றிச் செல்ல ஓர் வாக்கிங் ஸ்டிக் (ஊன்று கோல்) கொடுக்கப்படுகிறது. அதன் அடிப்பாகத்தில் உள்ள முள் போன்ற பல கிளைகள் கீழே குத்தப்படும்போது தரையைப் பற்றிக் கொள்கிறது. அந்த கம்பிகள் பனிக்கட்டிகளை குத்தி பற்றிக்கொள்ளவும், மேடு பள்ளங்களை பனித் தரையில் கண்டு கொள்ளவும் உதவுகிறது. வழுக்கி பள்ளத்தில் வீழ்ந்தால் எழுந்திருப்பது மிகவும் சிரமம். அப்படியே உடல் பள்ளத்தை நோக்கி சென்று விடுகிறது, அதற்கு வழுக்குதலே காரணம். அப்படி சென்ற உடல்களை காணமுடியாது.



Cyan Magenta Yellow blacK




வழிப்பயணத்தில் சில குதிரைகளும், கோவேறு கழுதைகளும் ஆகாராதிகளையும், அதன் பாத்திரங்களையும் தூக்கிச் செல்ல பயன்படுத்தப்படுகிறது. சில இடங்கள் மிகக் குறுகலாகயிருக்கும், அந்த இடங்களில் கைடுகள் உதவிபுரிகிறார்கள். விதி முடிந்த ஜீவர்கள் கீழே உருண்டு சென்றுவிடுகிறார்கள். சில இடங்களில் பெரிய பள்ளங்கள் பனியால் மூடப்பட்டிருப்பதால் அதில் சில ஜீவர்கள் இறங்கிவிடுகிறார்கள். அவர்கள் கதியும் அதோகதிதான். சில இடங்களில் பனிப்புயல் வீசுகிறது. அதன் நிலைகளை கழுதைகள் அறிவுறுத்திவிடுகின்றன. இதை அறிந்து கைடுகளும் எச்சரிக்கிறார்கள். செல்லும் யாத்திரைவாசிகள் அருகில் உள்ள பெரிய பாறைகளின் அடியிலும், குகைகளிலும் சென்று பதுங்கிக் கொள்கிறார்கள்.

சமவெளியில் செல்லும் நேரத்தில் அந்த பனிப்புயல் வந்தால் தம் கையில் உள்ள வாக்கிங் ஸ்டிக்கை அந்த பனிக்கட்டிகளில் அழுத்திக் குத்தி கீழே குப்புறப்படுத்துக் கொண்டு அந்த கம்பியை பற்றிக்கொள்கிறார்கள். அதுசமயம் இறைநாமாவை அனைவரும் உரக்க அழைக்கிறார்கள். மேலே கம்பளி கோட் அணிந்திருப்பதாலும், கம்பளி சால்வை போர்த்திக் கொண்டிருப்பதாலும் பனிப்புயலில் பனிக்கட்டிகளும், பருமணல்களும் அவர்களை தாக்கினாலும் சிரமத்தை உண்டு பண்ணுவதில்லை.

ஆனால் விதி முடிந்த ஜீவர்களை உருட்டி இழுத்துச் சென்றுவிடுகிறது. அவர்கள் மீளமுடியாது. சிலருக்கு இதயத்துடிப்பு நின்று விடுகிறது. அவர்களையும் ஓர் ஓரமாக இழுத்து வைத்து விட்டு செல்லவேண்டியதுதான்! சில காலங்களில் பனி உருகும்போது அந்த சடலங்கள் அந்த பிரவாகத்தால் அடித்துச் செல்லப்பட்டு நதிகளில் கலந்து மீன் மற்றும் பறவைகளுக்கு ஆகாரம் ஆகிவிடுகிறது. ஸ்ரீவெள்ளியங்கிரியின் அருகில் செல்லும்போது ஓர் அமைதி ஏற்படுகிறது.

குழந்தைகளே!

அந்த நர்த்தன சுந்தரனின் இடம் வெகு அழகாக, அமைதியாக காட்சி கொடுக்கிறது. அந்த நர்த்தனசபை ஒரு மைல் உயரத்திற்கும் ஐந்து மைல் சுற்றளவுக்கும் வட்ட வடிவமாக அமைந்திருக்கிறது. நான்கு புறமும் செங்குத்தாக அமைந்திருப்பதால் அதில் இறங்கவோ, ஏறவோ பாதை கிடையாது!



**வெள்ளியங்கிரி**

மேலே யோகிகளும், ஞானிகளும், தேவகணங்களும், பூதகணங்களும் ஸ்ரீஜயனிடத்தில் ஒன்றி இருப்பதாக சில பனிப்பாறைகள் காட்சி கொடுக்கின்றன. அவைகளை பாறைகளாகப் பார்த்தால் பாறைகள் தான். அவைகளை ஸ்ரீமஹான்களாகப் பார்த்தால் ஸ்ரீமஹான்கள்தான். அதைப்போல கீழேயும் அனேக ஸ்ரீமஹரிஷிகள் பனிப்பாறைகள் வடிவத்தில் நின்ற கோலத்திலும், அமர்ந்த வடிவத்திலும் அமர்ந்திருக்கிறார்கள். அந்த காட்சி அப்படி அமைந்திருக்கிறது.

அந்த உண்மைகளை அறியும் அறிவு தந்தான், அதை அவனே அறிந்தான். **அறிபவனும் அறியப்படும் பொருளும், அதை அறியும் அறிவும் அவனே**. ஹரித்துவார், ரிஷிகேஷ், பத்ரிநாத், கேதார்நாத், வெள்ளியங்கிரி சென்று திரும்ப இரண்டு மாதங்களாகி விட்டன.

குழந்தைகளே!

அவன் அருளால் ஸ்ரீநர்த்தன சுந்தரேசனின் தரிசனம் ஸ்ரீவெள்ளியங்கிரியில் பெற்று அவனால் இறக்கிவிடப்பட்டார்கள். அடுத்து **ஹரித்துவார்** வந்து ஒரு வாரம் தங்கினார்கள். அங்கு ஓர் இடத்தில் ஸ்ரீகணநாதன், ஸ்ரீமுருகன், ஸ்ரீஜயப்பன் ஆகிய மூன்று மூர்த்திகளுக்கும் ஓர் ஆலயம் கட்டியிருக்கிறார்கள். அங்கு உள்ள ஓர் அர்ச்சகர் தமிழில் பேசினார். அவருக்கு மதுரை சமீபமாக உள்ள ஓர் கிராமமாம். பால்யத்தில் ஏதோ விரக்தி ஏற்பட்டு கிளம்பி அனேக இடங்களை தரிசித்து, காசியில் இரண்டு ஆண்டுகள் தங்கி அங்கு உள்ள ஓர் மடாதிபதி இவரை ஹரித்துவார் அழைத்துவந்து இந்த ஆலயத்தையும் கட்டி இவர் பொறுப்பில் விட்டிருக்கிறார். அவரும் கூடுமானவரை உலக விவகாரங்களில் தலையிடுவதில்லை. கால்கட்டுக்கு ஆட்படாமல் விலகி பிரம்மச்சர்யத்துடன் தெய்வீகமாகவே காலத்தை கடத்தி விட்டார். இனியும் இவர் கால்கட்டுக்கு ஆட்படமாட்டார் என ஸ்ரீஸ்வாமிகள் சொன்னார்கள்.

குழந்தைகளே!


அடுத்து **குருக்ஷேத்ரம்** வந்தார்கள். அங்கு பீமகுண்டு (குண்டு - குளம்), அர்ச்சுனகுண்டு என ஐந்து குளங்கள் இருக்கின்றன. அது பாரதப்போர் நடந்த இடம் ஆகும். அங்கு ஸ்ரீபீஷ்மர் அம்புப் படுக்கையில் பார்த்திபன் தொடுத்த பாணங்களை தாங்கிய நிலையில் அமைதியாக படுத்திருக்கிறார். ஸ்ரீகண்ணன் விஸ்வரூப காட்சியாக ஓர் அம்சம் அமைந்திருக்கிறது. இவை அனைத்தையும் தரிசித்துவிட்டு ஒருவார பிரயாணத்தில் புண்ணிய பூமியாகிய **வாரணாசி**(காசி)யை நோக்கி வந்தார்கள்.

வரும் பகுதி மிகுந்த வறட்சியாக இருந்ததால் அந்த பைத்தியம் குளித்து மூன்று தினங்கள் ஆகிவிட்டது. அது அவரைக் கேட்டது, ஸ்வாமி! இங்கு எங்கு பார்த்தாலும் ஒரே வறட்சியாக இருக்கிறது. தண்ணீரையே பார்க்க முடியவில்லை. குளித்து மூன்று நாளாயிற்று. இனி என்று குளிக்க முடியுமோ? என புலம்பியது. அவரும் இன்று நீ உடல் அழுக்குகள் எல்லாம் போக்கவேண்டும் அவ்வளவுதானே! நீ குளிக்கலாம் என்றார். அதன் மர்மம் அப்போது புரியவில்லை. அங்கு நதிகளோ, குளமோ கிடையாது. அங்கு தர்மார்த்தியை முடித்துவிட்டு கிடைத்த அரிசியை சமைப்பதற்கு ரயில்வே ஸ்டேஷனில் ஓர் ஓரமாக திறந்த வெளியில் இரு கம்பிகளில் போர்வையின் இரு நுனியையும் கட்டி அடுத்த இரு நுனியையும் கைகளால் பிடித்துக்கொண்டு வெயிலில் நின்றபடி இருந்தது அந்த பைத்தியம். ஸ்ரீஸ்வாமிகள் உள்ளே நிழலில் அடுப்பு கூட்டி சமைத்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீஸ்வாமிகள் தற்செயலாக ஆகாயத்தை வெளியில் எட்டிப் பார்த்தபடி ஏதோ முணுமுணுத்துவிட்டு, பிறகு அவர் தம் தொழிலைச் செய்துகொண்டிருந்தார். அரிசியைக் களைந்து அப்போதுதான் போட்டார். எதிர்பாராமல் திடீர் என மேகம் குமுறி இடிஇடித்து மழை கொட்டோகொட்டு என கொட்ட அந்த மழையில் அந்த பைத்தியம் குளிக்கும் பாவனையில் அதாவது ஆகாயகங்கை அருவி கொட்டுவதைப்போல் அமைந்தது. அந்த ஜலப்பிரவாகம் விழுந்த வேகத்தில் அந்த தூலம் அழுக்கைப் போக்கி பாவனம் ஆகியது. அந்த பைத்தியம் அழுக்கு நீக்கி குளித்த நிலையில் ஸ்வாமிகள் தலையை நிமிர்ந்தவண்ணம், என்ன குளித்தாகிவிட்டதா? உன் உடல் அழுக்கு நீங்கிவிட்டதா? என சூசகமாக கேட்டார். அதுவும், போதும் ஸ்வாமி! இதற்கு மேல் உடல் தாங்காது என கூறியது. என்ன ஆச்சர்யம்! மழையும் நின்று விட்டது, சமையலும் முடிந்துவிட்டது. துணியை எடுத்து தலையை துவட்டிவிட்டு மற்ற உபகரணங்களையும் எடுத்துக்கொண்டு ஓர் நிழலைத் தேடிச் சென்றோம். அங்கு அன்று உணவை ஏற்றுக்கொண்டார்கள்.

**அவனால் ஆகாத காரியம் என்ன இருக்கிறது?**

**எல்லாம் நீ!**





# காசி யாத்திரை!

குழந்தைகளே!

**காசி க்ஷேத்திரம்** வந்து சேர்ந்தார்கள். வண்டியை விட்டு இறங்கியதும் திருக்கோயிலை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். வழியில் பிர்லா மந்திர் (அங்கு ஆலயங்களை மந்திர் என கூறுவது வழக்கம்) என ஸ்ரீராமன், ஸ்ரீகண்ணன், ஸ்ரீசிவன் ஆகியோருக்கு அனேக வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு ஆலயம் அமைத்திருக்கிறார்கள். அது பெரிய கோடீஸ்வரன் கட்டியதால் அவன் பெயர் இருக்கிறது போலும்? அந்த ஆலய வாயிலில் தம்பதியர் இருவர் நின்றிருந்தனர். இவர்கள் வரவை எதிர்நோக்கியது போல் தெரிந்தது. இவர்களைக் கண்டதும் அந்த தம்பதியர் இருவரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அதிக சிரத்தையுடன் சிரமபரிகாரம் செய்யலாம் என வேண்டினார்கள். ஸ்வாமிகளும் ஓர் புன்முறுவலுடன் சம்மதித்து கோயிலில் ஓர் மண்டபத்தில் அமர்ந்தார்கள். அந்த தம்பதிகள் அதிபக்தியுடன் அந்த இருவருக்கும் பட்சணங்களும், சாப்பாடுகளும் கொடுத்தார்கள். அவைகளை ஏற்றுக்கொண்டு மேலே கோயிலை நோக்கிச் சென்றார்கள். அங்கு புனித கங்காபவானியில் நீராட படிக்கட்டில் இறங்கி ஓர் ஓரமாக சாமான்களை வைத்துவிட்டு ஓர் பாத்திரத்தை மட்டும் கையில் எடுத்துச் சென்றது.

முதன் முதலில் காசி க்ஷேத்திர கங்கையில் நீராடுவதால் ஜலத்தில் இறங்காமலே நீராடவேண்டும் எனச்சொல்லி மேல்படியில் அதை உட்கார வைத்து, பாத்திரத்தில் கங்கை ஜலத்தை எடுத்து அந்த பைத்தியத்தின் தலையில் விட்டு ஏதோ முணுமுணுத்து அதை நீராட்டினார். பிறகு அது உடம்பைத் துடைத்து ஈரவஸ்திரத்துடன் ஸ்ரீஸ்வாமிகளை படிக்கட்டில் அமரச்செய்து, அபிஷேக வடிவில் தீர்த்தம் விட்டு அபிஷேகம் செய்தது போலும்! அந்த நேரத்தில் அங்கு கண்ட காட்சிகள் சொல்லவோ, எழுதவோ முடியாது. அதனால்தான் **“கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை”** என சொன்னார்கள் போலும்?

திவ்விய தரிசனத்துடன் நிற்கும்போது, அறிமுகம் இல்லாத ஓர் எட்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் விடுபூ (உதிரிப்பூ) பொட்டலமும், கையில் ஓர் ஆரமும் தயாராக வைத்திருந்தான். அவன் அந்த பைத்தியத்தைப் பார்த்து, மகராஜ்! என பவ்வியமாக அழைத்தான். அது அவனைப் பார்க்க, அவன் அந்த புஷ்பங்களை அதன் கைகளில் கொடுக்க, அந்த பைத்தியம் அந்த சிறுவனை நோக்க,

அவன் திருப்புண்டரங்களுடன் காட்சிதர, அந்தக் காட்சியில் ஆனந்தமாக தம்மை மறந்து அந்த புஷ்பங்களை அவன் திருவடியிலும், திருமார்பிலும் சாத்தி தரிசித்தது. அந்த பேரானந்த காட்சி முடிந்தது. அடுத்து ஸ்ரீஸ்வாமிகள் குரல் கேட்டு சேதனாசக்தி ஏற்பட்டது.

அடுத்து இருவரும் ஸ்ரீவிஸ்வநாதர் ஆலயத்திற்குச் சென்றனர். அங்கும் ஆனந்தமான தரிசனம்! அங்கு பெருமானை கட்டிப்பிடித்து முத்தமிட்டு நெடுநாள் காணாத தந்தையை சேய் கண்டால் நிலை என்னவோ அதேநிலையில் அவன் மேல் உருண்டுபுரண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியது. அந்த ஆனந்த பரவசத்தில் ஈடுபட்டிருக்கும்போது ஸ்ரீநந்திகேஸ்வரன் சப்தமிட்டு புன்னகையுடன் அருகே வரும்படி அழைத்ததுபோல் ஓர் காட்சி! உடனே ஸ்ரீநந்தியம்பெருமானின் திருவடியைப் பற்றி மெய்மறந்து புலம்பி அழுதது. அதாவது ஹே.. மஹானுபாவா! புருஷோத்தமா!! நந்திதேவா!!! அன்று இதே இடத்தில் ஸ்ரீதுளசிதாஸர் உலகபதியாகிய 'ஸ்ரீஹரா' மந்திரத்தையும், லோகநாயகியாகிய 'உமா' மந்திரத்தையும் சேர்த்துப் பின் இரண்டையும் கூட்டி **"ராமா"** என ஆக்கி, ஸ்ரீராம நாமத்தை உரைத்தார். அதாவது

**"ரா"** என்றால் **மஹா சக்தியாகும்.**
**"மா"** என்றால் **சிற் சக்தியாகும்.**
**"ரா"** என்றால் **ஹரன் ஆகும்.**
**"மா"** என்றால் **ஹரி ஆகும்.**
**"ரா"** என்றால் **பரமாத்மா ஆகும்.**
**"மா"** என்றால் **ஜீவாத்மா ஆகும்.**
**"ரா"** என்றால் **சகல பாபங்களும் வெளியேறும்.**
**"மா"** என்றால் **வெளியேறிய பாபங்கள் உள்ளே வராமல் மூடிக்கொள்ளும்.**
**"ரா"** என்றால் **சர்வ சக்திகளும் உள்ளே ஆகர்ஷிக்கப்படும்.**
**"மா"** என்றால் **அவை பூரணத்வமாகும்.**
**"ராம்"** என்றால் **திரிமூர்த்திகளையும் நினைத்ததாகும்.**
**"ராம்"** என்றால் **சர்வ சக்திகளையும் உள் அடக்கியதாகும்.**
**"ராம்"** என்றால் **சகல பாபங்களையும் நிவாரணம் பண்ணியதாகும்.**

**ஸ்ரீஹரிஹர பேதத்தை ஒழிப்பது ஸ்ரீராம நாமமாகும்.**

ஸ்ரீராம நாமத்தின் மஹிமையை உலகிற்கு காட்ட அதாவது இவைகள் உண்மையானால் இந்த இலையில் உள்ள சகல பதார்த்தங்களையும் நீ உண்டு மெய்ப்பித்துக் காட்டவேண்டும் என ஸ்ரீதுளசிதாஸர் அன்று வேண்ட, நீ மெய்யுருவுடன் காட்சி தந்து மூன்றுதரம் ஓம்காரமிட்டு இலையோடு சகல பதார்த்தங்களையும் புசித்தாயே! இந்த இல்லாத உலகுக்கு மெய்யைக் காட்டினாயே! உண்மையை ஊட்டினாயே! அப்படிப்பட்ட உன் தரிசனார்த்தம் இந்த அபலைக்கும் கிடைக்குமா என அழுது அதன் திருவடியில் சிரம் வைத்து கதறும்போது, அருகில் நின்ற பசு மெல்ல வந்து தம் நாவால் அந்த பைத்தியத்தின் சிரசில் தடவிக் கொடுத்து சேதனாசக்தியை உண்டு பண்ணியது. அப்படியே அந்த பைத்தியம் எழுந்து அந்த பசுவாகிய ஸ்ரீஹரிஹரனைத் தழுவியது.

இந்நிலை கண்ட ஸ்ரீஸ்வாமிகள் அதன் அருகில் வந்து புன்னகையுடன், போதும்! இன்னமும் ஒன்றிவிடாதே! பிறகு இங்கு திரும்பமுடியாது என அமைதியாக உரைத்து அந்த பைத்தியத்தின் தலையை தடவிக்கொடுத்தார். உடனே உலகம் தோன்றியது, உண்மை மறைந்தது. குழந்தைகளே! கற்கண்டை பார்த்தாலோ, எடுத்தாலோ சுவை தெரியாது; வாயில் போட்டால்தான் சுவைக்க முடியும்.

குழந்தைகளே!

ஓர்நாள் ஸ்ரீஅன்னை அன்னபூரணி தேவிக்கு அன்னாபிஷேகம் நடந்தது. அது இங்கு நடந்ததா, அங்கு நடந்ததா என புரியவில்லை. அந்த ஸ்ரீசமாராதனையில் சகல சாதுக்களும் அமர்ந்து ஸ்ரீஹரிஹர நாமத்தை அண்டமுட்டும் அளவுக்கு கோஷித்து உண்டார்கள். அவர்கள் உண்ட மீத உச்சிஷ்டத்தை அனைத்து தேவகுழாம்களும் பகிர்ந்து உண்டார்கள். அந்த உச்சிஷ்டத்தில் அந்த இரண்டிற்கும் பங்கு கிடைத்தது.

அன்று ஓர் **நிர்வாண சாதுஜீ ஒருவரை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது**. அந்த நிர்வாண சாதுவைப் பற்றி ஸ்வாமிகளிடம் கேட்கும்போது அவர்கள் இமயமலை காடுகளிலும், குகைகளிலும், அருவிக் கரையிலும் அமர்ந்திருப்பதாகவும் அவர்கள் பசி உணர்ந்து கண் விழித்தால் அவர்கள் தேவையை ஸ்ரீபகவான் உணர்ந்து பூர்த்தி செய்கிறார் என்றும் உரைத்து, மேலும் சில மஹான்கள் “நாம் சஞ்சாரம் செய்ய வேண்டாம்” என சங்கல்பம் செய்து, தாமே தம் சங்கல்பத்தால் மலைப்பாம்பு உருப்பெறுகிறார்கள் என்றும், அவர்கள் குகைகளிலும் அடர்ந்த புதர்களிலும் வாசம் செய்கிறார்கள் என்றும், அவர்களுக்கு பசி வந்தால் சற்று வெளியில் வந்து நோக்குகிறார்கள் என்றும், அதுசமயம் விதி முடிந்த ஓர் ஜீவன் அங்கு வரும் என்றும், அதை அப்படியே விழுங்கிவிடுவது என்றும், தாகம் ஏற்பட்டால் அவர்கள் வானை நோக்குவதாகவும், அதுசமயம் ஸ்ரீதெய்வாதீனமாக மழை பெய்யும் என்றும், அந்த ஜலத்தை அருந்தி பசி, தாகம் அற்ற நிலையில் தம் தூலத்தின் கணக்கை முடித்துக் கொள்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

மேலும் அந்த நிர்வாண சாதுக்கள் எதையும் நோக்குவது இல்லை. சிலசமயம் கங்கையில் ஓர் முழுக்கு போட்டுவிட்டு தம் கமண்டல ஜலத்துடன் நேராக ஸ்ரீவிஸ்வநாதரிடம் சென்று, அந்த கமண்டல ஜலத்தை ஸ்ரீபகவானுக்கு அபிஷேகம் செய்வித்து, மீண்டும் அந்த கமண்டலத்தில் தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு, ஸ்ரீவிஸ்வநாதனைக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்துவிட்டு கிளம்பிவிடுகிறார்கள் என்றும், அவர்கள் நடையே வினோதமானது என்றும், அவர்கள் பின் எவரும் தொடர்ந்து போகமுடியாது என்றும், அவர்கள் ‘ஜெய் மஹாதேவா!’ ‘ஜெய் ஷங்கரா!’ என உரக்கக் குரல் கொடுத்தவண்ணம் சென்றுவிடுவார்கள் என்றும் சொன்னார்கள்.

அந்த ஸ்ரீமஹான்களின் காட்சி ஹரித்துவாரில் ஒருமுறை அந்த பைத்தியத்திற்கு கிடைத்தது. பெரும்பாலும் ஸ்ரீமஹான்கள் காட்சி கிடைத்தாலே போதும். அவர்கள் எதுவும் கொடுக்கவேண்டாம், எதுவும் பேசவும் வேண்டாம், அவர்கள் தீட்சண்யமான பார்வை ஒன்று கிடைத்தாலே போதும் தம் வினைக்கு. அவர்கள் பார்வையிலேயே அனைத்து சக்திகளும் அடங்கி இருக்கிறது. காசியில் தங்கும் இடங்கள் ஸ்ரீஹரிச்சந்திரன் மயானம் அல்லது ரயில்வே ஸ்டேஷன் அருகே ஓர் பாலத்தின் சமீபம் அமைந்த ஓர் பாழ் மண்டபம். அந்த மண்டபம் ஒருசமயம் அன்னசத்திரம் ஆக இருந்ததாம். அதுதான் ஸ்ரீதுளசிதாஸர் அமர்ந்திருந்த மண்டபம் என தெரிந்தது.

குழந்தைகளே!

ஓர்நாள் சாயங்கால வேளை ஓர் திறந்தவெளியில் ஸ்வாமிகள் சமையல் செய்து கொண்டிருந்தார். அது விறகு சுள்ளிகளை பொறுக்கிக் கொண்டிருந்தது. திடீரென மேகம் கூடி இடிஇடித்து மழை பெய்ய ஆரம்பித்தது. இரண்டொரு மழைத்துளிகள் பருமனாக விழுந்தது. சற்று தூரத்தில் இரைந்தபடி கனமழை வெகு இரைச்சலாக வந்துகொண்டிருந்தது. அது புலம்பியது, ஸ்வாமி! இன்று சமையல் செய்த மாதிரிதான்? அதோ பாருங்கள், மழை வெகு இரைச்சலாக வந்துகொண்டிருக்கிறது, என்ன செய்வது எனச் சொல்லிய வண்ணம் சாமான்களை எடுத்துக்கொண்டே கேட்டது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகள் சிரித்த வண்ணம், நீ ஏன் அவசரப்படுகிறாய்? மேலே வானம், கீழே பூமி. இந்த இரண்டிற்கும் இடையே மேகமூட்டம் இருக்கத்தானே செய்யும்? அது அதன் வேலையைப் பார்க்கிறது; நாம் நம் வேலையைப் பார்ப்போம்; எது நடக்குமோ அது நடந்தே தீரும் என உரைத்துக் கொண்டே மேலே அன்னாந்து பார்த்தார். "சற்று பொறு" என உரைத்து தம் காரியத்திலேயே கண்ணாக இருந்தார்.

நான்கு புறமும் ஒரு நூறு அடி தூரத்தில் மழை கொட்டுகிறது, இங்கு மழை இல்லை. பெய்த மழைத் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கிறது. ஆனால் எதுவும் நனையவில்லை. எப்படியோ சமையல் வேலை முடிந்தது. உடனே ஸ்ரீஸ்வாமிகள், தூக்கு! தூக்கு! இனி பொறுக்காது என்றார். உடனே அருகில் உள்ள மண்டபத்தை அடைந்தோம். மழை கொட்டியது. அடுப்பையும் காணோம், பற்ற வைத்த இடத்தையும் காணோம். அனைத்தும் ஜலப்பிரளயத்தில் மூழ்கிவிட்டது போலும்.

**அவனுள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து விட்டால் நம்மைப் பற்றிய கவலையை அவன் எடுத்துக் கொள்கிறான். ஒவ்வொரு நிமிஷமும் கண்ணும் கருத்துமாக இருக்கிறான்.**

குழந்தைகளே!

ஸ்ரீவிசோபாகேசர் என்ற மஹான் ஸ்ரீநாமதேவருக்கு உண்மை ஞானம் உணர்த்திய இடம் காசியே! ஸ்ரீவிசோபாகேசர் ஓர் ஸ்ரீசிவலிங்கத்தின் மீது தலையை வைத்த நிலையிலும், ஓர் ஸ்ரீசிவலிங்கத்தின் மீது கையை போட்டுக்கொண்டும், ஓர் ஸ்ரீசிவலிங்கத்தின் மீது தம் கால்களை வைத்துக் கொண்டும், ஸ்ரீசிவலிங்கத்தின் மீதிலேயே மலமூத்திரம் பெய்து அசூசை படுத்திக்கொண்டும், உலக நிலையில் அசூசையை உணர்த்திக் கொண்டும் படுத்திருக்க ஸ்ரீநாமதேவர் அந்த ஸ்ரீமஹானை நோக்கி, ஏன் ஸ்வாமி! இப்படியா சிவலிங்கத்தை அசிங்கப்படுத்துவது? சற்று விலகி படுத்திருக்கக்கூடாதா? மலமூத்திரம் எழுந்து போய் செய்யக்கூடாதா? எனக் கேட்க, அப்பா! என் உடம்பு என் வசம் இல்லை, ஆகவே அந்த திருவடியை சற்று தூக்கி சிவலிங்கம் இல்லாத இடத்தில் வைத்துவிடு என அவர் உரைக்க ஸ்ரீநாமதேவரும் அந்த ஸ்ரீமஹான் வேண்டுகோளுக்கிணங்கி அவர் திருவடிகளை இருகரம்கொண்டு தூக்கி சிவலிங்கம் இல்லாத இடத்தில் வைக்கும்போது அங்கும் சிவலிங்கம் இருக்கக் கண்டு அடுத்த இடத்தில் மாற்றி வைக்க, அங்கும் சிவலிங்கம் இருக்கக் கண்டு, மும்முறை முயற்சித்தும் எங்கும் சிவலிங்கம் இருக்கக் கண்டு ஸ்ரீநாமதேவர் மெய்யுணர்வு எய்தினார். எங்கும் ஸ்ரீபரம்பொருள் வியாபித்திருக்கும் நிலையை உள் உணர்வாக உணர்ந்தார், அமைதியாக அமர்ந்தார்.

சிலகாலம் கழித்து கபடநாடக சூஸ்திரதாரியான ஸ்ரீபாண்டுரங்கன் ஸ்ரீநாமதேவரின் பரிபூரண நிலையை உணர்ந்து பிரத்தியட்சமாகி ஓர் நாடகம் ஆடினார். அதாவது அப்பா நாமதேவ்! இப்படி எம்மை அடியோடு மறந்துவிட்டாயே! இது நியாயமா? இது தர்மமா? யாம் என்ன குற்றம் செய்தோம் எம்மை உதாசீனம் செய்வதற்கு? எம்மை விட்டுப் பிரிய எப்படி மனம் வந்தது? உன்னை விட்டு யாம் எப்போதாவது பிரிந்து தனியாக உணவு அருந்தியது உண்டா? யாம் ஊட்டாமல் நீ உணவு அருந்தியது உண்டா? எம்மை ஓர் குழந்தைபோல் போஷித்து வந்தாயே! இந்த குழந்தையை தாயாகிய நீ மறக்கலாமா? தாய் மறந்தால் இந்த குழந்தையாகிய யாம் எங்கே போவோம்? எம்மை ஆதரிப்பார் யார்? நீ எம்மை ஸ்நானம் செய்விக்காமல் எம் மேனியில் அழுக்கைப் பார்? எம் வஸ்திரத்தின் அழுக்கைப் பார்? இந்த வஸ்திரம் மாற்றி எவ்வளவு நாள் ஆகிறது தெரியுமா? எம்மை பண்டரியில் திக்கற்றவனாக விட்டுவிட்டு நீ இங்கு வந்து அமர்ந்துவிட்டாயே? உன்னைப் பிரிந்து எம்மால் இருக்க முடியவில்லை. நீ எப்படி எம்மை மறக்க முடிந்தது? எம் உயிராகிய நீ இங்கிருந்தால் உடலாகிய யாம் அங்கிருந்து என்ன பயன்? இப்படி உன் மனம் கல்லாகி விட்டதே? கருணையுடன் எம்மைப் பார்! என கெஞ்சுகிறான் ஸ்ரீபகவான்.

குழந்தைகளே!

மேலே கூறிய கூற்றுக்களை நன்றாக உணரவும். இந்த முறையீடு ஓர் பக்தன் ஸ்ரீபகவானிடம் செய்ய வேண்டியதிருக்க, ஸ்ரீபகவான் ஓர் பக்தனிடம் முறையிடுகிறானாம்! இது என்ன விந்தை?

**பக்தி என்னும் கடலில் மூழ்கி ஞானம் என்னும் நல்முத்து பெற்று விட்டால், பக்தியின் பிணைப்பில் உள்ள ஸ்ரீபகவான் இரும்பாகவும், அவனை ஈர்த்துக் கொள்ளும் பக்தனாகிய ஞானி ஓர் காந்தமாகவும் ஆகிவிடுகிறான்.**

எம் செல்வங்களே!

இந்நிலையில் அந்த ஞானியாகிய ஸ்ரீநாமதேவர் சொன்னது:

ஹே.. கண்ணா! ஏ.. மாயவா! நீ எங்கு இல்லை? எங்கு இருக்கிறாய்? நீ இல்லாத இடமே இல்லையே! உன்னை எங்கும் காண்கிறோம்! ஹே.. ப்ரபோ! தூல உணர்வுகளுக்கு உட்பட்டு இரண்டுபட்ட தன்மையில் இருந்து அவைகளை அனுபவிக்க சாத்தியமாக இருந்தாய்! வினைகளும், காலங்களும் பரிபக்குவமாகும் நிலையை அறிந்து நீயே ஸ்ரீசத்குரு வேட்கையை உணர்த்தினாய். நீயே ஸ்ரீசத்குருவாக வந்தாய், உன் சேவையில் ஆட்படுத்தினாய், உன் சேவா மஹிமையினால் உள் உணர்வு பெருகவைத்தாய். உன் உபதேசத்தாலும், உள் உணர்வாலும் நீ எங்கும் வியாபித்திருப்பதை உணர வைத்தாய். இதுவரை வினையின் காரணமாக அனுபவித்தவைகள் அனைத்தும் அரிசியின் மேல் உள்ள உமியெனப்போயின! உமி போனபின் 'மணி' என ஒன்றுதானே உண்டு! அந்த மணியே நீயும் யாமும். வாக்கியார்த்தத்திற்காக வேண்டுமானால் உன்னையும், எம்மையும் பிரித்துச் சொல்வதுண்டு என்று ஸ்ரீநாமதேவர் உரைத்த திவ்விய ஸ்ரீகாசி க்ஷேத்திரத்தில் நூற்றியெட்டு சிவலிங்கம் சாலக்கிராம வடிவில் மூன்று விருட்சத்தினடியில் அமைந்திருக்கிறது. அதற்கு தினமும் குடம்குடமாக பால் விடப்படுகிறது. அந்த லிங்கங்கள் மூழ்கும் அளவுக்கு தினமும் பால் விடப்படுகிறது. அதை ஒரு பெரியவர் ஓர் உத்தரணி மூலமாக வரப்பட்ட சாதுக்களுக்கும், யாத்திரைவாசிகளுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர்களும் அந்த தரிசனமும், அந்த பிரசாதமும் பெற்றார்கள். ஸ்ரீபரமாத்மாவுடன் செல்லும்போது எதுதான் கிடைக்காது? எல்லாம் தேடிவரும்.

எம் செல்வங்களே!

ஸ்ரீஹரிச்சந்திர மயானத்தில் மூன்று இரவுகள் தங்கினார்கள். மூன்று இரவுகள் தங்கி ஸ்ரீஆடல் அரசனாகிய ஸ்ரீகூத்தபிரான் நர்த்தனத்தையும், அதன் தன்மையையும் உணரும் நிலை கூட்டி வைத்தான். மூன்றாவது நாள் மயானத்திலிருந்து காலையில் கோயிலுக்கு செல்ல வேண்டுமென புறப்படுகையில், அந்த மயானத்தை காவல் செய்யும் காவலர் (புலையன்) அவர்கள் இருவரையும் நமஸ்கரித்து, மூன்று தினங்களாக உங்கள் இருவரையும் காண்கிறேன். ஏதோ என் மனதிற்கு தெய்வீக புருஷர்களாக தோன்றுகிறீர்கள். உங்களை மறக்கவும் முடியாது; உங்கள் இருவர் உருவமும் அப்படியே என் உள்ளத்தில் பதிந்து விட்டது. அடியேனுக்கு ஓவியம் வரையவும் தெரியும். ஆகவே உங்கள் இருவரையும் திருஉருவமாக வரைந்து என் வீட்டில் வைத்து பூஜிக்க அனுமதி கொடுக்க வேண்டுமென பணிந்து கேட்டுக் கொள்கிறேன். உங்களை கேட்காமல் செய்வது அபசாரமாகும். மேலும் இன்று ஒரு நாள் அடியேன் இல்லத்தில் பகல் பனிரெண்டு மணி சுமாருக்கு வந்து அமுது ஏற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் வரவை வெகுஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன் என கண்ணீர் மல்கி அவர்கள் பாஷையில் சொல்ல, ஸ்ரீஸ்வாமிகள் சற்று யோசித்து அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கி, அவனை தட்டிக் கொடுத்து, அவசியம் உன் இல்லத்திற்கு இன்று மதியம் வருவோம். உன் சித்தப்படி எங்களை சித்திரமாக வரைந்து கொள் என ஆசிகூறி அவனை வழியனுப்பி வைத்தார்.

குழந்தைகளே!

அவர்கள் கங்கையில் நீராடிவிட்டு ஸ்வாமி தரிசனம் செய்து பஜனை பாடி முடித்து சுமார் பனிரெண்டு மணி அளவில் அந்த உத்தமோத்தமர் இல்லத்திற்கு சென்றார்கள். அவனும் அவன் மனைவியும் அதிஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை பணிவுடன் உள்ளே அழைத்துச் சென்று ஸ்ரீஸ்வாமிகளுக்கு ஸ்ரீபாதபூஜை செய்து ஆரத்தி எடுத்து, திருவடி தீர்த்தத்தை உண்டு சிரசில் புரோட்சித்து ஆசனம் கொடுத்து அந்த இருவரையும் அமரச்செய்து தமிழ்நாட்டு பாணியில் சாதம், கூட்டு, ரசம், பாயாசம், அப்பளம், வடை இத்யாதி உணவுகளை பரிந்து ஊட்டி சந்தன தாம்பூலம் கொடுத்து உபசரித்தார்கள்.

அங்கு அவன் வரைந்திருந்த படம் மிகஅற்புதமாக தத்ரூபமாக அமைந்திருந்தது. இப்படி ஓவியம் நிஜஸ்வரூபமாக வரைபவரை அங்குதான் அந்த பைத்தியம் கண்டது. அவர்களின் பணிவு, அடக்கம், செய்கைகள் கண்டு அந்த பைத்தியம் அப்படியே மெய்மறந்துவிட்டது. ஸ்ரீஸ்வாமிகளிடம் வரும்போது கேட்டது, ஸ்வாமி! இப்படியும் ஓர் தம்பதியர் அதிலும் தாழ்ந்த வகுப்பில் பிறந்து இப்படி உயர்ந்த பிராமண ஆச்சாரத்துடன் நடந்து கொண்டார்களே! இதில் ஏதோ முக்கிய அம்சம் இருப்பதாக தெரிகிறது. அதை தெளிவுபடுத்த வேண்டுமென கேட்டது. அதற்கு ஸ்ரீஸ்வாமிகள், இவர்கள் வேறு யாரும் அல்ல, **'ஸ்ரீகாலதேவன்' அம்சம்**, இது ரகசியமாக இருக்கட்டும் என்றார்.

குழந்தைகளே!

காசிக்கு மூன்று முறை வரவேண்டுமாம். முறைப்படி முழுக வேண்டுமாம். முறைப்படி அபிஷேக வழிபாடுகள் செய்ய வேண்டுமாம். அதை நாம் செய்ய வேண்டுமென முறைப்படி நடத்தி வைத்தார். அவர் சொன்னதாவது: இனி இதை விட்டு ஒரு அறுபது மைல்களுக்கு அப்பால் சென்று பத்து தினங்கள்



தங்கிவிட்டு திரும்ப வரவேண்டும். சில தினங்கள் செய்ய வேண்டிய கிருத்தியங்களை குறைவின்றி செய்ய வேண்டும். பிறகு இங்கிருந்து புறப்பட்டு முன்பு போகாத இடத்திற்குப் போக வேண்டும். அங்கு பத்து தினங்கள் தங்க வேண்டும். திரும்பி வரவேண்டும். இப்படி மும்முறை காசிக்கு வரவேண்டும். மூன்றாவது முறை வந்தவுடன் முறையாக அபிஷேக வழிபாடுகளை செய்து அந்த தீர்த்தத்தை நீ ஊருக்கு கொண்டு செல்ல வேண்டும் என முறைகளை புகட்டினார். அந்த பைத்தியமும், ஸ்வாமி! தாங்களுக்கு எது தோற்றுகிறதோ அதை நிறைவேற்றி வையுங்கள் இதனிடம் என்ன கேள்வி? என விலகிக்கொண்டது.

அன்று காலை ரயிலில் ஏறி வேறு இடத்திற்கு சென்றுவிட்டார்கள். அங்கு பத்து தினங்கள் தங்கி விட்டு திரும்ப காசிக்கு வந்து சில தினங்கள் தங்கி செய்ய வேண்டிய கிரியைகளை முறையாகச் செய்து, மறுபடியும் வேறு ஓர் ஊருக்கு பிரயாணம் செய்து அங்கு சில தினங்கள் தங்கி திரும்பவும் காசிக்கு வந்து செய்ய வேண்டிய கிரியைகளை குறைவில்லாமல் செய்து, மறுபடியும் அறுபது கிலோ மீட்டரில் உள்ள மொஹல்ஷராய் என்ற ஊருக்குச் சென்று அங்கு பத்து தினங்கள் தங்கினார்கள்.

அங்கு ஸ்ரீஸ்வாமிகள் சொன்னார்கள், இனி காசிக்கு மூன்றாவது முறையாக போகப் போகிறோம். இத்துடன் காசி யாத்திரையை முடித்துக் கொள்கிறோம். ஆனால் இம்முறை காசியில் கடைசியில் மூழ்கும்போது புதிய வஸ்திரம் கட்டிக் கொண்டுதான் மூழ்க வேண்டும். அந்த ஈரவஸ்திரத்துடன் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்வித்து தரிசித்து அந்த தீர்த்தத்தையே எடுத்து முறைப்படி சீல் வைத்து அதை உன் ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டும் என சொல்லி முடித்தார்கள்.

குழந்தைகளே!

அந்த பைத்தியம் கேட்டது: ஆமாம் ஸ்வாமி! கோடி வஸ்திரம் எடுத்து அதை கட்டி அபிஷேக ஆராதனை செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்களே, அது நடைபெறுகிற காரியமா? நாம் யாத்திரையாக புறப்பட்டு சுமார் ஏழு மாதங்கள் ஆகிறது. இது பரியந்தம் ரூபாய் நான்கிற்கு மேல் வசூல் செய்ததில்லை. இனி மேலும் செய்யப் போவதில்லை. அதுவே போதுமானதாக இருக்கிறது. இதுதான் மனதிற்கு சிரமமில்லாமல் இருக்கிறது. மேலும் இந்த தூலத்திற்கு ஆகாரம் தேடி வந்துவிட்டால் அன்று வசூல் செய்வதில்லை. காபியும் டீயும் எந்த ஜீவனாவது வாங்கிக் கொடுத்துவிடுகிறது. ஒருசில நாட்களில் வெல்லமும் தர்மார்த்தமாக கிடைத்துவிட்டால் டீ பொட்டலமும் வாங்கி அதையும் காலி செய்துவிடுகிறோம். தெய்வாதீனமாக நீண்ட தூரம் பிராயாணம் செய்தால் ஸ்ரீபகவத் வாக்கியார்த்த உரையாடலில் பசி இல்லாமல் போய்விடுகிறது. அந்த பசியையும் சிலகாலம் மறந்து திரிந்துவிடுகிறோம்.

காணும் காட்சிகளும், நிகழும் நாடகமும் பரிபூரணத்தை நினைவுபடுத்தி அங்கேயே இழுக்கிறது. இப்படி அருள் பிரவாகமாகவே ஈடுபடுத்தும் தாங்கள் பொருளுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்? ஜவுளிக்கடையும் நம் அப்பா அல்லது தாத்தா கடையாக இருந்தால் புதிய வேஷ்டி துண்டுக்கு கவலை இல்லை. அதை நாம் முன்பே கேட்கவும் இல்லை. கேட்டிருந்தால் அதையும் கொடுத்திருப்பான். இந்த சந்தர்ப்பம் அந்த நேரம் நமக்கு ஞாபகம் இல்லை. குறைந்த பட்சம் ஒரு இருபது ரூபாயாவது வேண்டும். அதை இனி வசூல் மூலமாக தேடுவதா? அல்லது வேறு எவரையாவது நாடுவதா? ஒன்றும் புரியவில்லையே! எப்படி திருஅருள் நடத்துமோ? என அவர் திருமுகத்தை பார்த்தவண்ணம் சொல்லியது அந்த பைத்தியம்.

எம் செல்வங்களே!

அவர் ஓர் புன்முறுவலுடன், ஆமாம் நீ சொல்வது சரிதான். தர்மம் ரூபாய் நான்கிற்கு மேல் வாங்கியதும் இல்லை, இனியும் வாங்கப்போவதும் இல்லை. அந்த பணத்தை எவரிடமும் வாங்கக் கூடாது. அது அவனுக்குத் தெரியும். மேலும் நாளை அவசியம் காசி செல்கிறோம். கோடி வஸ்திரம் கட்டுகிறோம் அது உறுதி. அந்த கவலை நமக்கு எதற்கு? சரி நீ பாடு என பணித்தார். அவன் பாட வைத்தான் அது பாடியது. சில்லரையாக நான்கு சேர்ந்துவிட்டது போலும்? போதும் நிறுத்து என்றார், உடனே அது நிறுத்தியது. இப்படி தர்மார்த்தியாக வரும்போது சில பட்சணங்களும் கிடைக்கும். அதில் சாப்பிடுவதற்கு பல்லுக்கு மெதுவாக உள்ளதை அவருக்கு பிரித்துக் கொடுத்துவிடும். கடினமானவைகளை அது உண்ணும். இதுதான் வழக்கம்.

அன்றும் அவ்விதம் பலகாரம் சேர்ந்திருந்தது. ஜனசந்தடி இல்லாத ஓர் இடமாகப் பார்த்து அமர்ந்தார்கள். அந்த இடம் மூன்று வீடுகள் வரிசையாக பூட்டிய நிலையில் இருந்தது. வெளிவராந்தாவில் அமர்ந்தார்கள். ஸ்ரீஸ்வாமிகள் சில்லரையை எண்ணிக் கொண்டிருந்தார். அது பலகாரத்தை பிரித்துக் கொண்டிருந்தது. அதுசமயம் தெய்வாதீனமாக ஒரு பத்து ரூபாய் நோட்டு மடங்கிய நிலையில் மெல்லிய காற்றில் உருண்டு உருண்டு அதன் அருகில் வந்து நின்றது. அந்த பைத்தியம் அதைப் பார்த்தது. மூன்று வீடுகளும் பூட்டிய நிலையில் இருக்கிறது, எந்த ஜீவ நடமாட்டமும் இல்லை.

ஸ்வாமி! இதோ ஓர் பத்து ரூபாய் வந்து கிடக்கிறது, இது எவருடையது? என அவரைக் கேட்டது. அது நம்முடையது எடுத்துக்கொள் என்றார். அதை கையால் எடுக்காமல் ஓர் பாத்திரம் கொண்டு மூடியது அந்த பைத்தியம், அவர் சிரித்தார். அடுத்து ஓர் பத்துரூபாய் அதேமாதிரி உருண்டு வந்தது, அதுவும் அந்த பாத்திரத்தின் அருகே வந்து கிடந்தது. ஸ்வாமி! இது என்ன விந்தை! மறுபடியும் ஓர் பத்து ரூபாய் வந்திருக்கிறதே? எனக் கூறியது. அதுவும் நம்முடையதே எடுத்துக்கொள் என்றார். மூடி இருந்த பாத்திரத்தை லேசாக திறந்தது. அந்த பத்து ரூபாயும் அந்த நோட்டுடன் சேர்ந்து கொண்டது. அது அந்த நேரம் ஆச்சர்யமாகவும் மாயா ஜாலமாகவும் தோன்றிற்று. அவர் சிரித்தார். அது கேட்டது, ஸ்வாமி! சிரித்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? யாராவது தவறுதலாக விட்டு காற்றில் பறந்து வந்தால் அது நம்முடையதாகிவிடுமா? உடையவரிடம் சேர்க்கவேண்டாமா? எனக்கேட்டது. ஸ்வாமிகளும் அதற்கு உடையவரிடம் சேர்த்துவிடு என்றார் புன்முறுவலுடன்.

அது அந்த இரண்டு பத்து ரூபாய்களையும் எடுத்துக் கொண்டு சற்றுதூரம் நடந்து சென்று பார்த்தது. எந்த ஜீவர்களையும் அங்கு காணவில்லை. அந்த வீடுகளின் மேல் மாடிகளிலும், சுற்றுப்புறங்களிலும் எவரையும் காணோம். வீடுகளும் பூட்டு போட்டு பூட்டிய வண்ணம் இருந்தது. திரும்பவும் வந்து, இதற்கு உடையவரை தேடிப் பார்த்தது எவரையும் காண முடியவில்லை, அப்படியானால் இது எவருடையது எனக்கேட்டது. நான்தான் அப்போதே சொன்னேனே! இது நம்முடையது; எடுத்துக்கொள் என்று சொன்னேன். நீதான் சந்தேகப்பட்டு தேடிப்பார்த்து இப்பொழுது ஓர் முடிவுக்கு வந்திருக்கிறாய். கோடி வஸ்திரம் எடுக்க இருபது ரூபாய் வேண்டும் எனக்கேட்டாய் அல்லவா! அதை இறைவன் கொடுத்திருக்கிறான். சரி புறப்படு காசிக்கு. அது பூர்த்தியாகட்டும் என்றார். அதுக்கு ஒன்றும் புரியவில்லை, அவர் காட்டிய வழியே அது சென்றது. காசியை அடைந்தார்கள். அன்று காசிக்கு வருவது மூன்றாவது முறையாகும்.

குழந்தைகளே!

கங்கையை அடைந்து ஸ்ரீஸ்வாமிகள் சொன்னதாவது: இன்று மூழ்குவதுடன் உலக சம்பிரதாயத்தை முடித்துக் கொள்கிறோம். இனி உலகம் வேறு நீ வேறு! இந்நிலை படிப்படியாக இனி சித்திக்கும். ஆகவே காசியில் கடைசியில் மூழ்கினால் ஏதாவது முக்கியமான ஒன்றை விடவேண்டும் என வேதம் சொல்கிறது. நீ எதை விடப்போகிறாய்? எனக்கேட்டார்.

அந்த பைத்தியம் சிரித்துக் கொண்டே, **ஸ்வாமி! எடுப்பதும், கொடுப்பதும் அவன் வேலை. ஆனால் வினையினால் இயங்கும் கருவி அந்த இயக்கத்தை தனதாக பாவிக்கிறது. அந்த பாவனை நீங்க வேண்டும். அந்த வினை நீக்கத்திற்கு அவனாகிய தாங்கள் எதை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுங்கள்; எதை கொடுக்க வேண்டுமோ அதை கொடுங்கள் என பணிவுடன் வேண்டிக் கொண்டது.**

அவர் சிரித்தார். நீ பேசத் தெரிந்தவன் ஆகையால் சாதுர்யமாக பேசுகிறாய் என்றார்.

அது சொன்னதாவது:

இதை பேச வைப்பதே நீங்கள்தானே! பேச்சும் அதன் பொருளும் உம்முடையதே என்றது. ஸ்ரீஸ்வாமிகள் சொன்னார்: சரி குழந்தாய்! (அன்று தான் ஒரு முறை குழந்தாய் என அழைத்தார்) ஏதோ என்னுடன் சேர்ந்து கொஞ்ச காலம் சந்நியாசியாகவே அலைந்து விட்டாய். இனி நீ சந்நியாசியாகவே வாழ்ந்துவிடு. சந்நியாசிகளுக்கு கோபம் முதலில் வரும். அது உனக்கு வரக்கூடாது. ஆகவே சாதுவாகவே மாறிவிடு.

**சாதுவுக்கு காமமும், அதை சேர்ந்த கோபமும் கூடாது.**

இந்த இரண்டையும் இனி **விட்டுவிடு**. இதை சங்கல்பம் செய்து ஸ்ரீஅன்னை கங்கா பவானியிடம் முறையிட்டுக் கொள். இதை நீ சத்தியபிரமாணமாக கொடுத்தால் அந்த இரண்டையும் அவள் எடுத்துக்கொள்வாள். அவை இரண்டும் உன்னைப் பற்றாது.

**காமம் அற்றவன் இருந்தும் பிரேதமே!**
**காமமே உலக இயக்கத்திற்கு காரணம்!**
**காமம் இல்லையானால் உலகம் இல்லை!**

நீ பிரேதமாக ஆகுவதால் உன் இடையில் கட்டி இருக்கும் அதாவது கடைசி நேரத்தில் அறுத்தெரியப்படும் பந்தக் கயிற்றை இப்போதே அகற்றிவிடுவோம் எனக்கூறி, இரு கற்களை எடுத்து அந்தக் கயிற்றை தட்டி எடுத்து கங்கையில் எறிந்துவிட்டார். இந்த சம்பவத்திற்கென்று ஓர் வஸ்திரத்தை ஸ்ரீபரமன் போட்டான் போலும்! அதையெடுத்து ஒரு பகுதியை கயிறாகவும் ஒரு பகுதியை கௌபீனமாகவும் வைத்து முடி போட்டு அதை கட்டி வைத்தார். மேலும் இரண்டு ஜட்டிகள் அதன் கைவசம் இருந்தது. அவைகளையே மாறி மாறி ஜலத்தில் நனைத்த நிலையில் உபயோகப்படுத்த ஆணையிட்டார். ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரமும், படுக்கும்போது ஒரு தரமும் ஆக இப்படி மாறிமாறி அதை நனைத்து

ஈரப்பதம் உலராமல் பார்த்துக்கொள்ளச் செய்தார். ஒரு மூன்று நான்கு மாதங்கள் இடைவிடாமல் செய்யும்படி பணித்தார்.

முன்பின் அறிமுகம் இல்லாமல் இருக்கும் மார்வாடி பாத்திரக் கடையில் சென்று ஓர் தாமிர செம்பு கேட்டார். அவனும் எந்த வார்த்தையும் பேசாமல் எடுத்துக் கொடுத்தான், பணம் எதுவும் கேட்கவில்லை. அந்த பைத்தியம் அந்த செம்புடன் கங்கையில் மூழ்கியது. **அங்கு ஓர் உணர்வைப் பெற்றது. அந்த உணர்வே இந்த நிமிடம் வரை ஆட்கொண்டிருக்கிறது. அதுவே குணம் களைந்த நிலையில் பாதுகாத்து வருகிறது. அந்த உணர்விலேயே உடல் உபாதைகளையும், உலக மயக்கங்களையும் மறக்கமுடிகிறது.**


அந்நிலையில் ஸ்ரீஸ்வாமிகள் படிக்கட்டில் நின்றுகொண்டிருந்தார்கள். ஒரு செம்பு ஜலத்தை எடுத்து அவர்கள் திருவடியை அலம்பி தெய்வாதீனமாக ஒரு குழந்தை கொடுத்த புஷ்பங்களை அவர் திருவடியில் சாத்தி திருவடி தீர்த்தத்தை உட்கொண்டு, திருவடி மலரை சிரமேற்கொண்டு திரும்ப அந்த கங்கையில் முழங்கால் ஜலத்தில் நின்றுகொண்டு அவர் திருவாக்கால் வந்த சத்திய வசனத்தை ஸ்ரீகங்கா பவானியிடம் முறையிட்டு ஜலத்தை புரோட்சித்து ஸ்ரீஅன்னையின் அனுமதியுடன் திரும்ப ஜலத்தை செம்பில் தாங்கி ஸ்ரீஸ்வாமிகளுடன் திருக்கோயிலை அடைந்தது.

ஸ்ரீஜயனை தரிசித்து அன்பின் நிலையில் அபிஷேகாதிகளை செய்து ஸ்ரீநந்திகேஸ்வரர் திவ்விய அஸ்தத்துடன் தீர்த்தம் எடுத்து அதன் கரங்களில் கொடுக்க, சகல தேவர்களும் ஆசீர்வதிக்க, அந்த தீர்த்த செம்பை ஸ்ரீஸ்வாமிகளிடம் கொடுக்க, அவர்கள் அதை வாங்கி அடுத்து இருந்த ஒருவரிடம் தகடு வைத்து பற்ற வைக்கப் பணிக்க, அவரும் அவ்விதமே பற்ற வைத்து ஸ்ரீஸ்வாமிகளிடம் கொடுக்க, அதற்குள் அந்த பைத்தியம் ஸ்ரீகாசிவிஸ்வநாதரின் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து ஒருமுறை அங்கப்பிரதட்சணம் செய்து சகல உணர்வுகளையும் கெடுத்து முடித்தவுடன், ஸ்ரீஸ்வாமிகள் அந்த தீர்த்த செம்பை பைத்தியத்திடம் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு ஸ்ரீஸ்வாமிகளுடன் ஆலய வீதியைத் தாண்டி கடைவீதி வரும் வரை ஸ்ரீஹரிஹரன் பசு வடிவில் வந்து வழி அனுப்பி நிற்கும்போது அந்த பசுவின் கண்களில் கண்ணீர் நிறைந்து நின்று ஒழுகியது.

''பக்தி நிலையில் பிரிவாற்றாமையால் ஒரு கணம் தவித்து ஞான நிலையில் ஐக்கியபான்மையால் மனம் மறைகிறது.

அவன் நடத்தும் நாடகத்தில் பக்தி முதிர்ச்சியாகி ஞானமாக மிளிர்கிறது''.


**எல்லாம் நீ!**



# ஏன் இந்த கோரக்காட்சி?

குழந்தைகளே!

காசி க்ஷேத்திரத்தை விட்டு பிரிந்த சிலநாட்கள் உணர்ச்சியற்ற கட்டையாகவே தோன்றியது. ஏதோ ஒன்றை பறிகொடுத்த பான்மையில் மனம் சோர்ந்திருந்தது. அடுத்து ஹௌரா எக்ஸ்பிரஸ் மூலமாக ஒருவார பயணத்திற்கு பிறகு **கல்கத்தா** வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்து **காளிகாட்** என்ற இடத்தில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் பூஜித்த ஸ்ரீபவதாரணியை தரிசிக்கச் சென்றார்கள். ஸ்ரீகங்காதேவியே அங்கு ஹூக்ளி என்ற பெயரில் சமுத்திரத்தில் சங்கமமாகிறாள் போலும்? அங்கு ஸ்ரீஅன்னையை தரிசிக்க காலை பத்து மணி சுமாருக்கு சென்றார்கள். அமைதியான இடம் ஆரண்யமான நந்தவனம். அங்கு ஸ்ரீஅன்னையை கண்டதும் ஏனோ மனதில் ஓர்வித பயம் உண்டாகியது. காரணம் அந்த ஸ்ரீஅன்னை அவ்வளவு கோரமாகவும், கோபமாகவும், குருதி வழியும் நாக்குடனும் ஓர் தலையை அறுத்து கையில் பிடித்த நிலையில் அந்த தலையில் இருந்து அடுத்த கரத்தில் தாங்கியிருக்கும் தாலத்தில் குருதி கொட்டிய வண்ணமாயும், வெட்டிய வாளாயுதத்திலும் குருதி சொட்டும் நிலையிலும் காட்சி கொடுத்தாள்.



ஸ்ரீஸ்வாமிகள் முன்செல்ல அவர்கள் கையைப் பிடித்து வெளியே இழுத்தது அந்த வைத்தியம். ஸ்ரீஸ்வாமிகள் ஏன் என்று கேட்க? ஏனோ ஸ்வாமி! ஸ்ரீஅன்னையைப் பார்க்க முடியவில்லையே! ஓர் தாயின் சொரூபம் இப்படியும் உண்டா? எப்படி அருகில் செல்வது? என சற்று தாமதித்து நின்றது. ஸ்ரீஸ்வாமிகள் சிரித்தவண்ணம், "உன் மனதின் காட்சியே அப்படித் தெரிகிறது. உண்மையில் நீ காணும் காட்சி பொய்! அமைதியாகப் பார்" எனச்சொல்லி அதன் கைகளை பிடித்து உள்ளே அழைத்துச்சென்று படிகளின் வழியே மேலே ஏற்றி ஸ்ரீஅன்னையின் மார்புக்கு நேராக வந்து தரிசிக்க வைத்து அங்கு உள்ள அர்ச்சகர் ஸ்ரீஅன்னையின் நாக்கில் உள்ள குருதியை எடுத்து நெற்றியில் பொட்டாக வைக்க அது குங்குமமாக மாறிவிடுகிறது. ஏதோ அரைகுறை மனதோடு ஸ்ரீஅன்னையை

தரிசித்து வெளியே வந்து அன்றைய பொழுதைக் கழித்துவிட்டு இரவு அங்கு நந்தவனத்தில் படுத்துவிட்டார்கள்.

நெடுநேரம் இரவில் அந்த பைத்தியத்திற்கு தூக்கம் வரவில்லை. அது ஸ்ரீஅன்னையிடம் முறையிட்டதாவது: அம்மா! லோகமாதா! பவதாரணி! சாந்த சொரூபிணி! சத்ய சொரூபிணி! ஹே... தாயே! இது என்ன சோதனை? ஏன் இந்த கோரக் காட்சி? ஸ்ரீபரமஹம்சர் உன்னைப் பற்றியும், உன் மஹிமையைப் பற்றியும் எவ்வளவோ சொல்லி இருக்கிறாரே! அவர் வழியைப் பின்பற்றிவரும் இந்த அனாதையை, ஓர் அபலையை இப்படி பயமுறுத்தலாமா? ஓர் பைராகி பிராமணி அன்னையிடம் சில சாதனைகள் பயிலும் சமயம் அதில் ஓர் சாதனையில் ஓர் மயானக் கரையில் ஓர் பிரேதத்தின் மீது அவர் அமர்ந்து உன்னை தரிசிக்கும்போது இப்படி கோரக் காட்சியில் நீ வந்ததாக அவர் சொன்னார்.

அந்நிலையிலும் ஸ்ரீபரமஹம்சர் சொன்னதாவது:

அம்மா! நீ எப்படி வேண்டுமானாலும் வா! நீ தாய்! நான் சேய்! ஓர் சேயை தாய் என்ன செய்வாளோ அது நடக்கட்டும் என அமைதியாக ஆனந்தமாக இருந்தார். நீயோ உண்மைத் தாயல்லவோ! உடனே சாந்த ஸ்வரூபிணியாக காட்சி கொடுத்து அவரை குழந்தையாக உன் மடிமீது அமர்த்திக் கொண்டாயே! உனக்கு பாரபட்சம் கிடையாதே! இந்த குழந்தை மீது உனக்கு என்ன அதிருப்தியா? பல காலமாக ஒரு தாயை பார்க்காத சேய் பிரிவாற்றாமையில் வாடும்போது, தம் தாயைப் பார்த்தால் அந்த சேயின் நிலை என்ன ஆகும்? அது உனக்குத் தெரியாததா? அந்த சேயை விரட்டுவதுபோல நீ செய்தால் அது எங்கே போகும்? ஆதரவற்ற இந்த அனாதையை உதாசீனம் செய்யாதே! இனி தாங்க முடியாது என உள்ளம் கசிந்து தனியே அமர்ந்து புலம்பிக் கொண்டிருந்தது.

ஸ்ரீஸ்வாமிகள் எழுந்து வந்து அதன் தலையை தடவிக்கொடுத்து என்ன பிரார்த்தனையோ? உன் பிரார்த்தனையால் எவரும் தூங்க முடியவில்லையே என்றார். அன்று அவர் சொன்ன வாசகம் புரியவில்லை. அவரைப் பிரிந்தபின் புரிந்தது! அதைப்போல ஒவ்வொரு சமயத்தில் அவர் வார்த்தைகள் அபயஸ்தமாகவும், ஆனந்தமாகவும், ஆழ்ந்த கருத்தாகவும், ஞானத்தின் சிகரமாகவும் இருக்கும். ஆனால் மாயை என்ற திரையால் மூடிவிட்டான். அவனைப் பிரிந்ததிலிருந்து இந்த வினாடிவரை அந்த வார்த்தைகள் மெய்சிலிர்த்த ஞான வாசகமாகவே தோன்றுகிறது. மேலும் அதை விளக்க முடியாது. ஸ்ரீஸ்வாமிகள் தலையை தடவிக்கொடுத்தவுடன் நித்ராதேவி வந்து ஆட்கொண்டாள் போலும். என்னே ஸ்ரீமாயவனின் மாயம்?

காலையில் எழுந்து காலைக் கடனை முடித்து ஸ்ரீஅன்னையை தரிசிக்க சென்றார்கள். ஹே.. லோகமாயா! உன் தன்மைதான் என்னே? என்று உருகும்போது அன்பின் சொரூபமாக கருணையின் வடிவமாக, பல காலம் தன் சேயை பிரிந்திருந்த ஒரு தாய் காலவசத்தால் அந்த சேயை பார்த்தால் என்ன நிலையோ அதே நிலையில் ஸ்ரீஅன்னை இருகரம் நீட்டி அழைத்து அணைத்துக்கொள்ள துடித்தாள். அதை எப்படி எழுதுவது? அருகில் நின்ற ஸ்ரீஸ்வாமிகளையும் பாராமல் தாயிடம் ஓடியது அந்த பைத்தியம். அங்கு நடந்த காட்சி ஓர் பேரானந்தமாகும். ஸ்ரீஸ்வாமிகள் அருகில் வந்து ஓர் புன்சிரிப்புடன் அதன் பெயரைச் சொல்லி அழைத்து முதுகை தடவிக்கொடுத்து என்னை மறந்து விட்டாயே! இனி நான் தேவையில்லையா! என்றார். காட்சி மாறியது, உலகம் தோன்றியது!

**"காட்டுவதும், மறைப்பதும் அவன் வேலை போலும்? கண்டால் சிரிப்பதும், காணாமல் அழுவதும் அதன் வேலை போலும்? இந்த இரண்டும் மாயா காரியமாகும்!"**

எம் மழலைகளே!

மூன்று தினங்கள் ஸ்ரீஅன்னையின் ஆலயத்தில் தங்கி, இனி **பூரி ஜகந்நாதம்** போவோம் என முடிவுசெய்து அதை அழைத்துச் சென்றார்கள். வீதிவழி வரும்போது அந்த வைத்தியம் கேட்டது: ஸ்வாமி முக்கிய திருத்தலங்களில் உள்ளே செல்லும் போதெல்லாம் அசரீரியாக மூன்று வாக்கியங்கள் கேட்கிறது. அதன் உண்மை கருத்துக்கள் புரியவில்லையே? எனக்கேட்டது. அவை என்ன வாக்கியம்? என அவர் கேட்டார்.

1) இங்கு ஏன் வந்தாய்?

2) எதைக் காண வந்தாய்?

3) என்ன பெற்று கொள்ளப் போகிறாய்?

என கேள்வி வருகிறது ஸ்வாமி எனக்கூறியது.

அவர் சொன்னதாவது:

என்னுடைய பாதையில் நீ வந்தால் அதன் கருத்து புரியும். இப்பொழுது உன் வழியில்தானே நான் வந்து கொண்டிருக்கிறேன். ஆகவே உனக்குப் புரியவில்லை! நீ பக்தி நிலையைத் தாண்டி ஞான நிலைக்கு வரவேண்டும் என்பதே இறைவனின் தீர்ப்பு! கூடிய சீக்கிரம் மாறிவிடுவாய். பூரி ஜகந்நாதம் சென்றதும் உன் நிலை மாறும். இதன் பொருளும் அங்கு விளங்கும் எனக்கூறி முடித்தார். அதுவும் அதைவிடுத்து அடுத்த கேள்வியைக் கேட்டது. ஆமாம் ஸ்வாமி! இங்கு அன்னையை கண்டதோடு சரி, அவளிடம் எதுவும் பெற்றதாக தெரியவில்லையே என்றது. அவரும் ஓர் புன்முறுவலுடன் இதுவே கடைசி முறையாகும்போல் தெரிகிறது. மாதமும் பதினொன்று ஆகிவிட்டது என காலத்தை ஞாபகப்படுத்தினார். அதன் அர்த்தம் புரியவில்லை, தாம் புறப்பட்டு வந்த பண்டரிபுரத்தை ஞாபகப்படுத்தினார் போலும்?


அப்பொழுது ஜன சந்தடியற்ற ஓர் பாதையில் சென்று கொண்டிருந்தார்கள். அந்த தெரு ஓர் பூங்காவை ஒட்டி அமைந்திருந்தது. அந்த பூங்காவில் அமர்ந்து சமைத்து சாப்பிட்டுவிட்டு செல்லலாம் என அது சொல்லியது. அதுசமயம் ஏழு வயதிருக்கும் ஓர் சிறுமி அலங்கார தேவதையாய் வந்தாள். அதன் அழகை வர்ணிக்க ஏடும் இல்லை, எழுத்தாணியும் எழுதாமல் மௌனமாகும்! அப்படி பேரழகுடன் முன்பு வந்து, மகராஜ்! என அழுத்தம் திருத்தமாக கூப்பிட்டு கவனத்தை அதன் பக்கம் திருப்பியது. அதன் கையில் ஓர் மண்கலசம் இருந்தது. ஓர் பாவனையில் ஸ்ரீமஹாலட்சுமியே அமிர்தகலசம் தாங்கி நிற்பது போல் தோன்றியது. அடுத்த கணத்தில் ஸ்ரீஅன்னை அன்னபூரணி ஜகன் மாதாவாக வந்து அமுதம் தரும் பாவனையாக மாறியது. அடுத்த கணத்தில் மதுரை திருமலை நாயக்கர் மடியில் அமர்ந்து ஸ்ரீகுமரகுருபரனை வருக வருக என அழைத்து அமரச்செய்து, அவன் பாக்களில் தன்னை மறந்த ஸ்ரீஅன்னை மீனாட்சி பால்ய பருவமாக வந்து இந்த ஞானாமிர்தத்தை ஏற்றுக்கொள் என உவந்து அளித்த காட்சியாகப்பட்டது!

**என்னே அந்த ரூபலாவண்யத்தின் காட்சிகள்? அந்த இறைவனிடம் ரூபலாவண்யமும், மஹிமைப் பிரபாவமும் இருப்பதனாலன்றோ இந்த ஜீவர்களால் மறக்க முடிவதில்லை! அவன் அழகில் மயங்காதவர் யார்?**

அந்த ஸ்ரீபவதாரணியாகிய அன்னை மீண்டும் அந்த பைத்தியத்திற்கு சேதனா சக்தியை ஊட்டும் பொருட்டு மீண்டும் "ஹே... மகராஜ்!" என உரக்க அழைத்தாள். அந்த பைத்தியமும் அந்த குழந்தையை நோக்க 'தேகோ' எனச்சொல்லி அந்த மண்கலசத்தை அதன் கைகளில் கொடுக்க, அது ஒன்றும் புரியாமல் வாங்க, ஸ்வாமி சொன்னார்: "இங்கு ஸ்ரீஅன்னை எதுவும் கொடுக்கவில்லை என குறைபட்டுக் கொண்டாயல்லவா அதை நிறைவேற்றிவிட்டாள். ஏன் தயக்கம்? அதை வாங்கிக் கொண்டு வா" என குரல் கொடுத்தார்!

எந்த நிமிஷமும் சந்தேகம் என்ற சர்ப்பம் நம்மை தீண்டி சலனத்தையும், சந்தேகத்தையும் கூட்டி வைக்கிறது என்பதற்கு இது ஓர் காட்சியாக அமைகிறது! அந்த பூங்காவில் அமர்ந்து சமைத்துவிட்டு அந்த கலசத்தை ஸ்ரீஸ்வாமிகள் பிரித்து பார்த்தார். அதை எடுத்து சாப்பாட்டின் ஊடே வைத்தார், அது ஊறுகாய் (மாங்காய்) போலும்? அதை ஒரு வாரமாக சுவைத்தார்களாம்!

**எல்லாம் நீ!**





# இதுவரை சரி இனி இல்லை!

குழந்தைகளே!

அடுத்த ஒரு வாரத்தில் **பூரிஜகந்நாதம்** வந்து சேர்ந்தார்கள்.

தெற்கே ஸ்ரீரங்கமும்,
வடக்கே ஸ்ரீபத்ரிநாத்தும்,
மேற்கே ஸ்ரீதுவாரகையும்,
கிழக்கே ஸ்ரீபூரிஜகந்நாத்தும்,
மத்தியில் ஸ்ரீபண்டரிபுரமும்

என ஸ்ரீசத்துக்கள் சொல்லுவார்கள். இந்த பூரிஜகந்நாத் மற்ற ஆலயங்களைப் போல் மூலவர் கல் விக்ரஹமாக அமையவில்லை; மரத்தாலானது. அதுவும் பூர்த்தியாக முடியவில்லை. இங்கு மூர்த்திகள் ஸ்ரீகண்ணன், ஸ்ரீசுபத்ரா, ஸ்ரீபலராமன் என சொல்வதுண்டு.

இதை முறையாக ஆன்மா, பிரகிருதி, புருஷன் என சொல்வதுண்டு. **புருஷனுக்கும், ஆன்மாவுக்கும் இடையில் பிரகிருதி என்ற மஹாமாயையாகிய திரை இருக்கிறது. இந்த திரையை புருஷனானவன் தம் விவேகத்தினாலும், சாதுக்கள் சேவையினாலும், ஸ்ரீசத்குரு உபதேசகிரமத்தினாலும், ஸ்ரீஇறையருளாலும் நீக்க முடியும். ஸ்ரீஆன்ம சொரூபம் ஆகமுடியும் !**

இந்த ஸ்தலத்தில் ஓர் விசேஷம் அதாவது பிரதி ஏகாதசி தோறும் பண்டரிபோல் பஜனை விசேஷமாக நடைபெறுவதுண்டு. அனேக இடங்களிலிருந்து பக்தர்கள் வருகிறார்கள். ஆனந்தமாக பஜனை பாடி துவாதசி பாரணை முடித்து அதிதி பூஜையையும் செய்து செல்கிறார்கள்.

மேலும் இங்கு தினமும் ஏழு மண்பானைகளை ஒரே அடுப்பின் மீது அடுக்கிவைத்து இந்த ஏழிலும் அரிசியைப் போட்டு அடுப்பை மூட்டினால் ஏழாவது பானையில் உள்ள அரிசியை பதம் பார்த்து வெந்துவிட்டால் ஏழையும் இறக்கிவிடுகிறார்கள். ஏழு பானைகளிலும் சாதம் ஒரே சீராக வெந்துவிடுகிறது. பிறகு அந்த ஏழு பானைகளையும் ஸ்வாமியின் முன் அமைந்த அகலமான பீடத்தில் உடைத்து, உடைந்த

ஓட்டுடன் சாதத்தை நிவேதனம் (ஆவியை) செய்து, அந்த ஓடுகளிலிருக்கும் பிரசாதத்தையே அப்படியே ஓட்டுடன் சாதுக்களுக்கு பிரசாத போஜனமாக கொடுக்கிறார்கள். அப்படி ஸ்ரீபகவத் பிரசாதத்தை மூன்று தினங்கள் உண்டு அந்த பைத்தியம் மனநிறைவு கொண்டது போலும்.

அந்த ஆலயத்திலும் அந்த மூன்று வாக்கியங்கள் கேட்டன. ஆனால் மனம் சந்திரனைப் போல் குளிர்ந்து சாந்தமானது. இனி யாத்திரை போதும் என நிறைவு வந்ததுபோல் ஓர் தோற்றம் உண்டாகியது. அங்கு காட்சி எதுவும் இல்லையானாலும் காரணகாரியம் நிறைவுற்றது. மூன்றாவது தினம் பிரசாதம் புசித்து வெளியேறி வரும்போது ஓர் சாது ஓர் பாடல் பாடியதாக தோன்றியது. அது அசரீரியாக ஒலித்ததுபோல் தோற்றியது. அதை அந்த சாது பாடவில்லை, அது ஸ்ரீபட்டிணத்தடிகள் பாடியதாகும்.

**"உடலுக்குள் நீ நின்று உலாவியதை காணாமல்**
**காடு மலை தோறும் திரிந்து கால் அலுத்தேன் பூரணமே".**

எம் செல்வங்களே!

இந்த பாடலை கேட்டவுடன் அந்த கணத்தில் இருந்து மனஅசைவு குறைய ஆரம்பித்தது! ஆனால் ஸ்ரீஸ்வாமிகளிடம் ஒன்றும் சொல்லவும் இல்லை, அவரும் ஒன்றும் கேட்கவும் இல்லை! மனசாட்சியாகவே உணர்ந்தார்கள் போலும்! அதன் பிறகு ஸ்ரீஸ்வாமிகளிடம் கூட அதிக வார்த்தைகள் பேச முடியவில்லை. அவரை அமைதியாகவே காணும் அந்த காட்சியே பேரானந்தமாகத் தோன்றும்! அதிலேயே லயித்து வேறு எதுவும் கேட்காமல் அவர் கேட்டதற்கு மட்டும் விவேகத்துடன் பதில் சொல்லி முடித்துக் கொள்ளும்.

வண்டியும் ஆந்திர மாநிலம் வந்தது. **விசாகப்பட்டிணம்** அதாவது **வால்ட்டர்** என்ற இடத்தில் **சிம்மாசலம்** என்ற ஸ்தலத்தில் ஸ்ரீயோகநரசிம்ம மூர்த்தியை தரிசித்து ரயில்வே ஸ்டேஷனில் சமையல் செய்து கொண்டிருக்கும்போது அந்த பைத்தியம் ஸ்ரீஸ்வாமிகளிடம் சொன்னதாவது: ஸ்வாமி! தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம் இவைகளை முறையாக தரிசித்துவிட்டோம்; இனி போதும் என்ற நிறைவும் உண்டாகிவிட்டது. மேலும் ஆந்திர மாநிலம் வந்துவிட்டோம், இனி தமிழ்நாடுதான். அங்கு இருவரும் பாதயாத்திரையாக ஸ்ரீசபரிமலை சென்று ஸ்ரீசபரி மாதாவை தரிசித்து அவள் கிருபையாலும், உபதேசத்தாலும், யோகத்தால் ஞான சித்தி பெற்ற நைஷ்டிக பிரம்மச்சாரி ஸ்ரீசபரிநாதனையும் தரிசித்து அங்கிருந்து என்ன முடிவு கூறுகிறீர்களோ அதன்படி நடக்கலாம் என பணிந்து சொல்லிக் கொண்டே வரும்போது ஸ்ரீஸ்வாமிகள் இடைமறித்து, உன் கற்பனையில் சபரிமலை வரை சென்றுவிட்டாய். அது நடைபெற வேண்டுமே? அது எப்படி நடக்கும்? என கேள்விக்குறி போட்டார். அடுத்து அவர் சொன்னது: சபரிமலையில் நாம் இருவரும் அவசியம் சந்தித்து தரிசிக்கலாம் இது உறுதி! என வாக்கு கொடுத்தார்.

எம் அன்பின் முத்துக்களே!

இப்படி சங்கல்பம் செய்துகொண்டே போகும்போது விஜயவாடாவுக்கும், விசாகப்பட்டணத்திற்கும் இடையே இருக்கும் **டுணி** என்ற ஓர் இடத்தில் ரயில் நின்றது. பல சங்கல்பங்களுக்கிடையே யாத்திரையின் நிறைவை உரையாடி முடிக்கும்போது அந்த டுணி என்ற

ஸ்டேஷனில் ஓர் டிக்கட் பரிசோதகர், அவர்கள் வண்டியில் ஏறினார். அவர் வேறு எவரிடமும் டிக்கட் கேட்காமல் நேரே அந்த இருவரிடமும் வந்து, ஓ.. மகராஜ்! டிக்கட் வைத்திருக்கிறீர்களா? என தமிழில் கேட்டார். ஸ்ரீஸ்வாமிகளும் ஓர் புன்முறுவலுடன் இல்லை என பதில் சொன்னார். உடனே அந்த T.T.E. சொன்னதாவது: இதுவரை டிக்கட் இல்லாமல் பயணம் செய்தது சரி, இனி மேல் டிக்கட் இல்லாமல் பயணம் செய்யக் கூடாது ஜாக்கிரதை! என ஓர் கடின வாசகத்தையும் கடைசியில் பிரயோகித்து, ஊம்! இறங்குங்கள் என்றார். ஸ்ரீஸ்வாமிகளும் அந்த வார்த்தைக்குத்தான் இதுவரை காத்திருந்ததுபோல் புன்முறுவலுடன் அந்தப் பைத்தியத்தின் பெயரைச் சொல்லி, எதிர்பார்த்தோம் முடிந்துவிட்டது. இனி யாத்திரை இல்லை. கீழே இறங்கலாம் எனக்கூறி அதன் முகத்தைப்பார்த்து, என்ன யோசிக்கிறாய்? நீ கேட்டாய் அவன் அனுமதி கொடுத்தான், இன்று அவன் சொல்லிய வண்ணம் முடித்துக்கொண்டான் எனச்சொல்லி அதன் கரத்தைப்பற்றி எப்படி முதலில் ஏற்றிவிட்டாரோ அதே நிலையில் அதன் கரத்தைப் பற்றி **நிறைவுடன்** இறக்கிவிட்டார். இந்த பதினொன்றரை மாதகால பிரயாணத்தில் ரயிலில் கீழே அமர்ந்திருந்தாலும் வரும் டிக்கட் பரிசோதகர்கள் சீட்டில் ஏறி அமர்ந்து கொள்ளும்படி கூறிய அந்த உபசரிப்பான ரயில் பயணம் நிறைவுற்றது போலும்!

குழந்தைகளே!

**பூணியில்** இறங்க, அங்கே ஓர் ஸ்ரீகண்ணன் கோயில் இருந்தது. அதில் போய் தங்கினார்கள். பகலில் தருமத்தை முடித்து சமையல் செய்து ஆகாரத்தை முடித்துக் கொண்டு, சொல்லி வைத்தது போல் ஓர் படம் பிரேம் போடும் கடையில் சென்று அவனிடம் தமிழில் பேசினார். அவனும் தமிழில் பேசினான். அவர் மூலமாக (அங்கிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து திருமந்திரநகருக்கும் செல்லும் பிரயாண கட்டணம் ஒரு நபருக்கு அறுபது ரூபாய் ஆகிறது. இருவருக்கும் நூற்றிருபது ஆகும்) ரூபாய் நூற்றைம்பது மட்டும் அனுப்பும்படி ஊருக்கு தபால் எழுதியது அந்த பைத்தியம்.

ஆறாவது நாள் ஒரு தபால் வந்தது. ஏழாவது நாள் ரூபாய் நூற்றைம்பது வந்தது. அந்த தபால் வந்ததும் அதை பிரித்து வாசித்தது அந்த பைத்தியம். அதில் ஏழு ஜீவர்கள் சிறியசிறிய காகிதத்தில் வெகு உருக்கமுடன் அந்த பைத்தியத்தை காணாமல் துடித்த நிலையில் புலம்பலாக எழுதியிருந்தார்கள். அதை படிக்க முடியவில்லை. இந்நிலை கண்ட ஸ்ரீஸ்வாமிகள் இங்கே கொடு, நான் வாசிக்கிறேன் என வாங்கிப் படித்தார். அவர் கண்களிலும் கண்ணீர் பனித்து நின்றது. ஒரு வகையாக படித்து முடித்தார். அதன் பெயரைச் சொல்லி அழைத்து, ஆமாம்! இப்படிப்பட்ட அன்பு உள்ளங்களை இவ்வளவு காலமாக எப்படி பிரிந்து இருக்க முடிந்தது? எனக்கேட்டார்.

அந்நிலையில் அந்த பைத்தியத்தின் கவலை எல்லாம் ஸ்ரீஸ்வாமிகளை எப்படியும் ஊருக்கு அழைத்துச் சென்றுவிடவேண்டும் என வேகம் உண்டாயிற்று. வந்த பணம் ரூபாய் நூற்றைம்பதையும் அவர் கைகளில் கொடுத்து சென்னை செல்ல இரண்டு டிக்கட் எடுக்கும்படியும், அங்கு சென்று திருமந்திரநகர் செல்ல டிக்கட் எடுத்துக் கொள்ளலாம் எனவும் பணிவுடன் கூறியது. ஸ்ரீஸ்வாமிகளும் சிரித்துக் கொண்டே, சற்று பொறு அவசரம் கொள்ளாதே எனச்சொல்லி விஜயவாடாவுக்கு இரண்டு டிக்கட் எடுத்து வந்தார். என்ன ஸ்வாமி! சென்னைக்கு டிக்கட் எடுக்கச் சொன்னால் விஜயவாடாவுக்கு எடுத்து வந்திருக்கிறீர்களே? அங்கு இறங்கி வேறு எடுத்துக் கொள்ளலாம் என எண்ணமா? சரி பரவாயில்லை எனச்சொல்லிய வண்ணம் வண்டியில் ஏறி அமர்ந்தார்கள். வண்டி தென்திசையை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது.

அப்பொழுது ஸ்ரீஸ்வாமிகள் சொன்ன வாசகம்:

"குழந்தாய்! நீ குழந்தை உள்ளம் கொண்டவன், ஆகவே உன்னை இனி குழந்தை என்றே அழைக்கிறோம். (அன்றுதான் அவரிடம் நான் என்ற வார்த்தை மாறியது) நீ எம் வழியில் வந்து விட்டாய், இனி உன்னை எதுவும் பாதிக்காது. நீ உன் ஊர் செல்லலாம். எம்மை அங்கு அழைக்க வேண்டாம். யாம் வந்த காரியம் பூர்த்தி ஆகியது. உன் மனோநிலை எமக்குத் தெரியும். இனி இந்த வடிவம் எங்கிருந்து வந்ததோ அங்கேயே லயமாகும். உன் பொருட்டாகவே வந்தோம், யாத்திரையும் உனக்காக பூர்த்தியாக முடித்தோம்".

**உனக்கு தந்தையாகவும், ஸ்ரீசத்குருநாதனாகவும் விளங்குபவர் ஸ்ரீவியாசபகவான் என உணர்வாயாக.**

இந்த கலியுகத்தில் உன்னை சம்ரட்சிக்கும் பொருட்டு உனக்கு முன் தோன்றி தம் சேவையை உனக்குக் கொடுத்து உன்னை ஆட்படுத்தவே இந்த ஓர் நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நாடகத்தில் உணர்ச்சியுடன் நடிக்காதே! பொருந்தியதைப் போல் நடிக்க வேண்டும்.

**இனி நீ வந்த காரியம் அதாவது உன் கடமை ஸ்ரீபிதா சேவையும், ஸ்ரீசத்குரு சேவையும்தான்! இந்த இரண்டும் உனக்கு ஒன்றாக இணைந்து அமைந்திருக்கிறது.**

மற்றும் விவகாரம் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக எப்படி பற்றியதோ அதேநிலையில் உன்னைவிட்டு அகலும். நீயாக எதையும் விலக்க வேண்டியதில்லை. அதை யாம் நிலையறிந்து நிவர்த்தித்து ஒவ்வொன்றாக விலக்குவோம். இதுவரை நீ அனுபவித்த நிலைகள் சகலமும் பேரானந்தமே! இனி நீ உன் ஸ்ரீசத்குரு சேவையின் மூலமாக சுயானுபூதி கூடி அனுபவிக்கும் நிலைகள் பிரம்மானந்தமாகும்.

நீ உணர்ந்த அனுபவநிலைகளை, ஞான வேட்கையில் தவிக்கும் பக்குவான்மாக்களுக்கு மட்டும் உணர்த்த வேண்டும். பெரும்பாலும் எதுவும் கண்டு கொள்ள முடியாத ஸ்ரீஅவதூத நிலையில்தான் நீ சஞ்சரிக்க வேண்டும். எவ்விடத்தும், எக்காரணம் கொண்டும் எந்த வல்லமைகளும் காட்டக்கூடாது. நீறுபூத்த நெருப்பாக இருக்க வேண்டும். அதற்கு தக்க சான்று ஸ்ரீஜடபரதனின் நிலையாகும். அதை மட்டும் உணர்ந்து நோக்கு. அது உனக்கு எளிதில் லபிதமாகும்! உன் ஸ்ரீசத்குரு சேவையில் நீ பரிபாகப்பட்டு வரும்போது எம் அம்சம் தாமே சித்திக்கும்! என ஆசி வழங்கினான் எம் ஸ்ரீமாதவன்.

எம் ஞானச்செல்வங்களே!

இந்நிலையில் அவன்(உணர்ந்த நிலையில் அவன் என்ற வார்த்தை வருகிறது) உரையாடி வருகிறான்! ஆனால் தம் ஸ்ரீவிஷ்ணு மாயையால் மறைத்தான் போலும்! பித்துபிடித்த நிலையில் அது அமர்ந்திருக்கிறது. உணர்ச்சியும் அற்றுவிட்டது. அந்நிலையில் ஓர் மரத்தடியில் ஓர் பாறையின் மேல் அவன் அமர்ந்திருக்கிறான். அவன் திருவடியின்கீழ் திருவடியைப் பற்றி வருடிய நிலையில் அந்த பைத்தியம் அமர்ந்திருக்கிறது. அந்நிலையில் அதற்கு கண்ணீர் தாரைதாரையாக வழிந்தோடி அவன் திருவடியை அலம்பிக் கொண்டிருக்கிறது. எதுவுமே பேச முடியாமல் வாயை அடைத்துவிட்டான் போலும்.

ரயிலில் வந்து கொண்டிருந்த அந்த இரண்டும் இறங்கியதும் தெரியவில்லை, ஜனசந்தடியான அந்த பெரிய ஜங்ஷனில் ஜீவர்கள் அதிக நடமாட்டம் இல்லாமல் செய்து விட்டான். அந்த ஸ்டேஷனில் அந்த பெரிய ஆலமரம் எப்படி வந்தது? அந்த வட்ட வடிவமான பாறை எப்படி வந்தது? இவை அனைத்தும் மாயாஜாலமாக தோன்றியது. நாடகத்தின் நாயகனே நடத்தும்போது எதுதான் நடக்காது? அங்கு கண்டதையும், அனுபவித்த நிலைகளையும் எழுத முடியவில்லை. அந்த பைத்தியத்தை பேச முடியாமல் செய்த ஸ்ரீமாயவன் - சூஸ்திரதாரி ஏதோ இரண்டொரு வார்த்தைகளை மட்டும் பேச அனுமதி தந்தான் போலும்?

ஹே... சர்வ ஜீவதயாபரா! ஏ... தீனபந்தோ! சரணாகத வத்ஸலா! இந்நிலையில் உன்னிடம் எதைக் கேட்க முடியம்? **கேட்பன அழியும், காண்பன மறையும்! கேள்வி அற்ற நிலையை அருள்வாய்! அர்த்தமற்ற காட்சிகளை மறைப்பாய்!** ஏதோ ஓர் வழியாக உன் நாடகத்தை நடத்தி முடித்துவிட்டாய்! ஒரு வருஷமாக உடன் இருந்த நீ **பொய்யைக்காட்டி மெய்யை மறைத்து உணர ஒட்டாமல் செய்து விட்டாயே!** இப்பொழுது மெய்யை உணரும் நிலையை கொடுத்து பொய்யை மறைக்கிறாய் போலும்? இதுதான் ஜீவர்களிடம் நீ காட்டும் பரிவா? எட்டும்நிலையில் இருந்து கிட்ட வந்ததும் மறைவதா? அதனால்தான் உன்னைக் கபடநாடகன் என அழைக்கிறார்கள் போலும்?

ஹே... ப்ரபோ! எம் ஐயனே! நீ எந்நிலையில் இருந்தாலும் சரி, இந்த அபலையுடன் கூட வரலாகாதா? உடன் வந்து எவரும் காணாநிலையில் நீ இருக்கலாகாதா? உன்னால்தான் சகலமும் முடியுமே! ஏன் இந்த பாராமுகம்? உனக்கு இனி எந்த சிரமமும் தராது ஐயனே! உன் சேவையும், ஸ்ரீகுருதேவர் சேவையும் இணைந்து தரலாகாதா? நீ கூட வந்தால் போதும், உன்னை எவருக்கும் காட்டிக் கொடுப்பதில்லை. சபரிமலை செல்லலாம் எனச்சொன்னாயே அது வரையிலாவது உடன் இருக்கலாமே என உருகி கேட்டது.

அதற்கு அந்த சூஸ்திரதாரி சொன்னது:-

“குழந்தாய்! சகலமும் உனக்கு உணர்த்தியும் நீயே உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்கலாமா? வினை தூலத்தின் பிரிவாலும், மாயா வடிவத்தின் மறைவாலும் நீ வருந்தாதே! யாம் என்று உன்னைப் பிரிந்தோம்? எந்நிலையிலும் உன்னுடனே இருக்கிறோம். நீயே நாமதேவனின் ஞானநிலையை எமக்குப் போதித்தாயே? அதை மறந்துவிட்டாயா? அப்படியானால் ஊருக்குத்தான் உபதேசமா? அது உனக்குக் கிடையாதா? அதை நீயும் அனுஷ்டிக்க வேண்டாமா?


**எதையும் முதலில் நீ அனுபவி! உன் அனுபவ நிலையை உணரத்துடிக்கும் பக்குவான்மாக்களுக்கு மட்டும் அதை புகட்டு! நீ கண்டதையும், கேட்டதையும், படித்ததையும் புகட்டாதே! அதை நீ உணர்ந்து ஸ்வய அனுபவம் சாத்தியமானால் உணரும் ஜீவர்களுக்கு உணர்த்து. உன் ஸ்வய அனுபவத்தை சொல்வதுதான் உண்மையாகும்! அது பலன் கொடுக்கும்!**

எம் வாக்கியப்படி நீ சபரிமலை என்று வருவாயோ அன்று உனக்காக ஒரு நாள் மட்டும் காத்து நிற்போம் இது உறுதி!” என உறுதிமொழி கொடுத்து மயக்கினான் போலும்.

குழந்தாய்!

அதோ வண்டி புறப்பட ஆயத்தமாகிவிட்டது, இதோ உன் ஊர் (சென்னை) செல்லும் சீட்டு, இந்தா மீதிப்பணம் எனச்சொல்லி எல்லாம் அதன் பைகளில் போட்டுவிட்டான். அந்த சென்னை செல்லும் சீட்டு எப்பொழுது எப்படி எடுத்தான் என தெரியவில்லை. எப்படியோ ஓர் மாயா நாடகம் நடந்து முடியும் தருவாயில் இருந்தது.

அந்த பைத்தியத்தை கைத்தாங்கலாக அழைத்து வந்து ஓர் கம்பார்ட்மெண்டில் அமர வைத்தான். என்ன காரணமோ அந்த வண்டியில் எந்த ஜீவர்களும் ஏறவில்லை! எம் பிரபுவின் தோள்களை பற்றி கதறியது. அதன் சிரசை தம் இருகரம் கொண்டு தடவிக் கொடுத்தான். இருக்கையில் அவன் அமர்ந்தான். அவன் மடியில் சிரம் புதைத்து கதறி அழுதது அந்த பைத்தியம். அதன் சிரசில் தம் இருகரத்தையும் வைத்து நிமிர்த்தினான். அவன் கண்களிலும் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது! (அது கண்ணீர் அல்ல; ஜீவர்களை மயக்கும் நடிப்பு) அந்நிலையில் அந்த பைத்தியம் அந்த ஸ்ரீமாயவனின் கண்ணீரைத் துடைத்தது.




ஸ்ரீமாயவனின் மாயம், வண்டியின் வெளியே அவன் நின்றான், எதிரில் உள்ள டீ ஸ்டாலுக்குச் சென்றான். மூன்று வாழைப்பழங்கள் வாங்கி வந்தான். ஒன்றை உரித்தான், அந்த பைத்தியத்தின் வாயில் புகட்டினான். இரண்டை அதன் கரத்தில் கொடுத்தான். அதில் ஒன்றை உரித்து அவன் வாயில் ஊட்டியது! மீதி ஒரு பழம் இருந்தது; அதை பிரசாதமாக வைத்துக் கொண்டது. வண்டி புறப்பட்டது!

**தேவாதிதேவா...! ஹே... பிரபோ...! என அலறியது அந்த பைத்தியம்.**

அவன் இடுப்பில் கரம் வைத்து ஓர் மோகனப் புன்னகையுடன் ஸ்ரீபண்டரியில் நிற்பதுபோல் நின்றான்! அந்த காட்சியுடன் அவனை உள்ளத்தில் வைத்து கதவுகளை இறுக மூடிக்கொண்டது. உணர்வற்ற ஜடமாகி விட்டது. அந்த ஜடம் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. அந்த ஸ்ரீவாசுதேவனானவன் உள் இருந்து அதை அசைத்துக் கொண்டிருக்கிறான். அதன் இயக்கம் புரியவில்லை! அது கர்மாவோ, மாயையோ அதை அவனே அறிவான்!

**புனித யாத்திரை முடிந்தது!**

**எல்லாம் நீ!**



# அவன்தான் தாங்களா? தாங்கள்தான் அவனா?

அவன் அருளால் அவன் கொடுத்த அந்த ஓர் வாழைப் பழத்தோடு அதிகாலை ஐந்து மணி அளவில் இது திருமந்திரநகர் வந்து இறங்கியது. ஒரு வருஷம் கழித்து வந்ததால் அது திருமந்திர நகராகத் தெரியவில்லை; ஒரு புதிய உலகத்திற்கு வந்திருப்பதாக ஓர் உணர்வு தட்டியது. நேராக கோவிலுக்கு சென்றது.

கோவிலில் ஸ்ரீசுவாமிகளைக் காணவில்லை. தோட்டத்திற்கு சென்றது; அங்கு செடிகளுக்கு ஜலம் பாய்ச்சிக் கொண்டிருந்தார்கள். தோளில் இருந்த ஜோல்னாப்பையை அங்கு ஓர் ஓரமாக போட்டுவிட்டு அவர் திருவடிகளில் சாஷ்டாங்கமாக விழுந்தது அந்த பைத்தியம். எழுந்தவுடன் அவர் தம் தோளில் அதை சாத்திக்கொண்டு இறுக அணைத்துக் கொண்டார். இருவரும் எதுவும் பேசவில்லை; பேச முடியவில்லை. இருவர் கண்களிலும் கண்ணீர் கொட்டியது. அந்த பைத்தியத்தை கோவிலுக்கு அழைத்து வந்தார்.

எம் திருவடி! முதலில் குளி என்றார்கள். அதுவும் குளித்துவிட்டு வந்தது; அதற்குள் எப்படியோ இட்லி, வடை, பூரி என சில பதார்த்தங்கள் வாங்கி ரெடியாக இருந்தார்கள். வந்தவுடன் சாப்பிடு என்றார்கள். அப்போதும் இந்த பைத்தியத்திற்கு கண்ணீரை நிறுத்த முடியவில்லை. தயாராக இருந்த இலையை அவருக்கொன்றும் இதுக்கொன்றுமாக போட்டு ஜலம் தெளித்து அந்த பைத்தியமே இருவருக்கும் பரிமாறியது. "ம்" சாப்பிடு என்றார்கள். அதனால் ஏனோ ஆகாரம் ஏற்க முடியவில்லை. எம் ஐயாவே இதுக்கு வாயில் ஊட்டினார்கள், இதுவும் அவருக்கு மூன்று வாய் ஊட்டியிருக்கும்; பின் இது சாப்பிட சாப்பிட அவர் இலையிலுள்ளதையும் எடுத்தெடுத்து இதன் இலையில் வைத்து விட்டார்கள்.

அப்போது அவர் சொன்ன வாசகம்:

திருவடி! நீதான் சாப்பிடவேண்டும். நீதான் வளரும் குழந்தை; உன் உடம்புக்கு இப்போது ஆகாரம் தேவை. "உண்டவன் உரம்(வேலை) செய்வான்". இது வாழ்ந்து முடிந்த கட்டை; இதுக்கு சிறிதளவு போதும். அதற்கு மேலும் சாப்பிட்டால் இங்கு ஜீரணமாகாது. உன் உடம்பு உழைக்கவேண்டும்; இன்னமும் உழைப்பு இருக்கிறது; நீ இங்கு அனேகருக்காக இருக்கவேண்டும்; **யாம் உன் ஒருவனுக்காகவே இருக்கிறோம்**.

ஐயா! இதனுடன் வந்தவர் போலவே சொல்கிறீர்களே! அவர் உங்களுக்குத் தெரியுமா? ஆனால் உடன் வந்தவர் அந்த விட்டலாகவே தோற்றும்; பின் மறைபடும்; பின் தோற்றும்; பின் மறைபடும்; ஏன் இந்த நாடகமோ? ஏன் வந்ததுதான் வந்தான் யாம் தான் வந்திருக்கிறோம் என ஓர் பொறி தட்டினால் போதுமே அவனை கொள்ளைகொண்டு போய்விடுவோமா என்ன? ஏன் இந்த மறைப்பு?

எம் ஐயா அவர்கள் சிரித்துக்கொண்டே சொன்னார்கள், ஏன் திருவடி! தோற்றுவது யாரிடத்தில்? மறைவது எவ்விடத்தில்? என இதை நீ உணரலாமே?

ஐயா! அதை அந்த நேரம் ஒரு வருஷ காலமாக உணரமுடியவில்லை. ஆனால் இன்று தாங்களைக் கண்டதும், இந்த கேள்வியைக் கேட்டதும் உணரமுடிகிறது. அதாவது தோற்றியது அறிவிடத்தில்; மறைந்தது மன மாயையிடத்தில்.

அவர் கேள்வி: அறிவென எதைச்சொல்கிறாய்? மனமென எதைச் சொல்கிறாய்?

அது சொன்னது, உள் உணர்வை அறிவென உணரமுடிகிறது. காணும் காட்சியையும், அது சம்பந்த எண்ணத்தையும் மனமென தெரிகிறது.

அவர் கேட்டார், அப்படி இப்போது இருக்கிறதா?

அது சொன்னது, ஐயா! உள் உணர்வு **அவன்தான்** என உறுதிகொள்கிறது. ஆனால் கண்ட காட்சியோ, நடந்த நிகழ்ச்சியோ, இப்படியும் இருக்குமா? இதுவும் நடக்குமா? என கேள்விக்குறியாக அசைந்து கொண்டே இருக்கிறது.

அவர் கேட்டார், திருவடி! இப்போது உணர்வு மெய்யா! காட்சி மெய்யா?

அது சற்று திகைத்தது. வாய் பேசமுடியவில்லை. ஆழ்ந்து உணர்ந்தது.

அது சொன்னது, ஐயா! அந்த உணர்வு இன்னமும் அசையாமல், அழியாமல், மாறாமல் இருக்கிறது. ஆனால் காட்சி அந்த வினாடி ஓர் இன்பதுன்பத்தை தந்து அந்த வினாடியே மறைந்துவிட்டதே. அப்படியானால் காட்சியும், நிகழ்ச்சியும் வந்து, இருந்து, மறைவதால் அதை பொய்யென உணர முடிகிறது. இந்த உணர்வை **"அவன்தான்"** என்ற மெய்யை அசைக்கவோ, அழிக்கவோ, மாற்றவோ முடியவில்லையே.

எம் திருவடி! அப்படியானால் மனக்கண்ணினால் காணும் காட்சியையும், கேட்கும் வார்த்தைகளையும், நடைபெறும் நிகழ்ச்சிகளையும், முதலில் "அவனாக", "அவனுடையதாக" உணரவேண்டும். இந்த மெய்யுணர்வை(அறிவை) மட்டும் வைத்துக்கொண்டு மேலே சொன்ன மூன்றையும் தள்ளிவிடலாமே?

அது கேட்டது, அவன் வந்ததற்கு, அவனை கண்டதற்கு, அவனோடு உரையாடியதற்கு மேலே கூறிய மூன்றுதானே ஆதாரம்?

ஐயா திருவடி! ஸத்யத்திற்கு தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இல்லவே இல்லை. அது

தன்னை தோற்றுவித்துக் கொள்வதற்காக இப்படி ஓர் **பொய் வேஷம்** அணிந்துதான் தீரவேண்டும். ஆகவே வேஷத்தைக் கலைத்துவிடு; **உள் நிற்கும் உண்மையை மட்டும் ஏற்றுக்கொள்.**

அது சொன்னது, ஐயா! இப்போது தாங்கள் கொடுக்கும் உதாரணமும், அறிவுரையும் அதீதமாக இருப்பதால் இதனால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

அவர் கடகடவென சிரித்தார். உண்மைதான் திருவடி! இன்னமும் காலப்போக்கில் அந்த மெய்யுணர்வு உனக்குக் கூடும். அதுசமயம் இவரைவிட விளக்கம் அதிகமாக நீ தரமுடியும்.

அது கேட்டது, அது எப்படி முடியும்? தாங்களைவிட அதிகம் தரமுடியுமென்றால் இதற்கு விளங்கவில்லையே!

ஐயா திருவடி! ஸ்ரீவேதவியாசரையும், அவர் குமாரன் ஸ்ரீசுகப்பிரம்ம ரிஷியையும் படித்தும் இருக்கிறாய்; இவரிடம் பாடம் கேட்டும் இருக்கிறாயல்லவா? அவ்விருவரின் விளக்கமே நம் இருவரின் அனுபவ பாடம்.

அது சொன்னது, அது எப்படி எப்போ வாய்க்குமோ? அது தாங்கள் கிருபையால் அது முடியட்டும். இதனுடன் **வந்தது நம் விட்டலன்** என்றா சொல்கிறீர்கள்?

அவர் சொன்னார், அதிலும் சந்தேகமோ?

அது கேட்டது, அவன் விட்டலன் என்றால் அதை நீங்கள் மெய்ப்பித்துக் காட்ட முடியுமா? அவர் கடகடவென சிரித்தார்.

பின் அவர் சொன்னது: உனக்கு அந்த பண்டரியில் இருக்க சலித்து இங்கு திரும்பி விடவேணுமென்று முடிவு செய்தாய்; அவனே வந்து அந்த எண்ணத்தை தடுத்து ஆட்கொண்டான். பின் நீங்கள் இருவரும் ஓர் மஹான் மூலமாக சந்நியாசம் (தற்காலிகமாக) ஏற்று நதியில் இறங்கி சில பிரதிக்ஞைகளையும் செய்தீர்கள்.

1. புனிதயாத்திரை முடியும் பரியந்தம் ரயில் டிக்கட் எடுக்கக் கூடாது. T.T.E. டிக்கட் எங்கே? எனக்கேட்டால் உடனே இறங்கி விடவேண்டும். மறுமுறை ரயிலில் ஏறினால் டிக்கட் இல்லாமல் வண்டி ஏறக்கூடாது. அத்துடன் புனிதயாத்திரை முடிந்துவிட்டதென உணரவேண்டும்.
2. பெரும்பாலும் சுடுகாட்டில்தான் (இடுகாடு ஆகாது) இரவு படுக்க வேண்டும்.
3. யாசகம் எடுக்கும்போது நீதான் பாடவேண்டும்; அவன் தாளம் போடவேண்டும்.
4. பணம் ரூபாய் நான்கு அல்லது ஐந்திற்குள்தான் சேர்க்கவேண்டும்; அதிக பணம் சேர்க்கவும் கூடாது, இருப்பு இருக்கவும் கூடாது.
5. நம் இருவருக்கு மேல் வேறு கூட்டம் சேர்க்கக் கூடாது. அன்று சாப்பாடு எங்கேனும் கிடைத்துவிட்டால் எங்காவது ஓர் இடத்தில் அமர்ந்து ஒரு மணி நேரம் பஜனை செய்தே ஆகவேண்டும்; பணம் வாங்கக் கூடாது.

6. நீ எமக்கு குரு; யாம் உனக்கு குரு; உலகில் வேறு குரு எவரும் இல்லை. அது புனித யாத்திரை முடியும் பரியந்தம்தான்.

7. விறகு பொறுக்கி கல் அடுப்புக்கு கல் எடுத்துக் கொடுப்பது உன் வேலை; சமைப்பது எம்வேலை; சாப்பிடுவது நம் இருவருமே இருந்தாலும், ஆகாரம் உனக்குத்தான் அதிகம் மீதி இருப்பதை யாம் உண்கிறோம்.

ஏன் திருவடி! இப்படியெல்லாம் ஓர் பிரதிக்ஞை ஏற்றுக்கொண்டுதானே பிரயாணம் துவங்கினீர்கள்? இவையாவற்றையும் ஆதியோடு அந்தமாகக் கேட்ட அந்த பைத்தியம் சரேலென அவர் திருவடிகளில் பற்றியவண்ணம் கதறி அழுதது.

அந்த பைத்தியம் சொன்னதாவது:

ஓ.. எம் குருதேவா! (இங்கு வார்த்தை மாறியது ஆனாலும் அது நிலைத்து நிற்கவில்லை அங்கு எம் கவனக்குறைவே காரணம்) உடன் இருந்தவர் போல அனைத்தையும் அப்படியே ஒப்பிக்கின்றீர்களே! உம்மை எப்படி உணர்வது? **அவன்தான் தாங்களா? தாங்கள்தான் அவனா?** புரியவில்லையே ஐயா! ----------------------------------------------------என கண்ணீர் விடும்போது...,


ஐயா ஆசீர்வாதம் செய்வது போல் இதன் சிரசில் கரங்களை வைத்து (அனைத்தையும் மறைத்து) பொறு! பொறு! அவசரப்பட்டுவிடாதே. அவன் அவன்தான்! யாம் யாம்தான்! அவன் யாமாக முடியாது; ஆனால் யாம் அவனாகுவோம். அதை பிற்காலத்தில் உன் ஸ்வய அனுபவத்தில் உணர்வாய்! காலம் (கண்ணன்) உன்னைக் கனிய வைக்கும். அக்கனியை யாம் சுவைப்போம்.

இந்த பைத்தியத்திற்கு அது கனவா? இது கனவா? அல்லது இரண்டும் நினைவு தானா? புரியாமல் குழம்பும்போது அவர் சொன்னார், (முதுகில் ஓர் தட்டு தட்டி; அனைத்தையும் அந்த வினாடி மறக்கடித்தார்) ஏண்டா திருவடி! மணி ஒன்பது ஆகப்போகிறது. வீட்டிற்கு சென்று உன் தற்காலிக உறவு, சுற்றம் அனைத்துக்கும் இங்குள்ள கடையில் இருந்து இனிப்புகள் நிறைய வாங்கிச்சென்று, பிரசாதமாக கொடுத்து, அவர்கள் சோகத்தை மாற்று. ஓய்வு எடுத்துவிட்டு இரவு இங்கு வரலாம் எனச் சொல்லி அனுப்பிவைத்தார்கள்.


எவன் யாத்திரை போனானோ? எவன் கூட்டிச்சென்றானோ? எவன் திரும்பி வந்தானோ? எவரிடம் கதை அளந்தானோ? எவர் கதை கேட்டாரோ? கதை எவருடையதோ? இவை அனைத்திற்கும் எவன் பொறுப்போ?

சென்றதும் ஒருவனே!
அழைத்துச் சென்றதும் ஒருவனே!
கொணர்ந்து சேர்த்ததும் ஒருவனே!
அவன் ஒருவனையன்றி அன்னியமில்லை;
அந்த ஒருவனும் அதற்கு அன்னியமில்லை
இதை பிற்கால அனுபவத்தில் உணர்ந்தோம்!

**எல்லாம் நீ!**



# சபரிமலையில் ஸ்ரீபக்தவத்ஸலன்!



எம் குழந்தைகளே!

முன்பு அவனுடன் சில காலம் சஞ்சரித்த யாத்திரை முற்றுப்பெறவில்லை. காரணம் சபரி மலையில் அவனை தரிசித்தால் தானே அது பூர்த்தியாகும். அடுத்த இரண்டொரு மாதத்தில் மார்கழி மாதம் வந்தது. மார்கழி மாத கடைசியில் அது **சபரிமலை** யாத்திரையை மேற்கொண்டது. வழக்கமாக பெருவழிப்பாதை வழியாக அது பம்பை நதி சென்று ஸ்ரீஅடியார்களுடன் தங்கி மறுநாள் சந்நிதியை நோக்கி வேகமாகச் சென்றது.

ஸ்ரீசபரி பீடத்தில் ஸ்ரீஅன்னை சபரி மாதாவை தரிசிக்கும் பாக்கியம் பெற்றது. ஸ்ரீஐயப்பனுக்கு ஸ்ரீசத்குருவாக அமர்ந்த ஸ்ரீசபரிமாதா பழுத்த பழமாக ஓர் பாறை மீது அமர்ந்திருந்தாள். ஸ்ரீஅன்னையே அதன் பெயரைச் சொல்லி அழைக்க அந்த பைத்தியம் அவள் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து எழ, எம் அன்னை புன்முறுவலுடன், எம் செல்வமே! உனக்காகவே ஸ்ரீஐயன் காத்து கொண்டிருக்கிறான் என உணர்த்தினாள்! ஓர் யந்திரமாக சந்நிதியை நோக்கி ஓடியது அந்த பைத்தியம்!

பகல் மணி பனிரெண்டு இருக்கலாம், ஸ்ரீஐயப்பன் சந்நிதியில் எந்த நேரமும் அவனை தரிசிக்கும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆரவாரத்தோடு (ஐயப்ப நாமகோஷம்) இருக்கும் இடம் அமைதியாக இருந்தது! ஒரு பத்து பதினைந்து பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள்! அவர்களும் அமைதியாக தரிசித்து பிரதட்சணமாக வந்து கொண்டிருந்தார்கள்! அங்கு ஸ்ரீஐயன் சந்நிதியில் முன்னே உள்ள கம்பியில் சாய்ந்தபடி இருகரமு ம் இடுப்பில் வைத்த நிலையில் அந்த ஸ்ரீபக்தவத்ஸலன் மௌனானந்தமாக நின்று கொண்டிருந்தான். அதை மௌனானந்தமாகத்தான் தரிசிக்க முடிந்ததே தவிர வாக்கியார்த்தம் அங்கு இல்லை. அந்த தரிசனமானது ஸ்ரீபிரம்மானந்த நிலையில் அமைந்தது போலும், அதை அவனே அறிவான்.

**எல்லாம் நீ!**



# ஸ்ரீசர்வாங்க சேவை!

## 1. எது உண்மையோ அது நடைபெறும்!

குழந்தைகளே!

இதை இப்படி செய், இங்கே வா, அங்கே போ, இதை கொடு, இதை வாங்கு என ஆணையிட்டு அதை செய்வது **வேலையாகும்**. உள்ளக்கனிவுடன், நெகிழ்வுடன், ஸ்வயமாக தமக்கு தோன்றும் **அனுபவ உணர்வுடன், உள்ள உவகையுடன் தாமாக செய்வது சேவையாகும்.**

குருபக்தி மிகுந்திருந்தால் தமக்குத்தாமே தோற்றும் சுயஅனுபவத்தினால் **அவர் தேவை** அவஸ்யம் நமக்கு தோற்றும்! அவை சேவையாக முடியும்! அங்கு கேள்வியில்லாமலேயே பதிலாக முடியும்! இங்கு **விட்டுக்கொடுத்தல்** தான் மிகமிக முக்கியம்! **முழு சரணாகதிதான்** மிகமிக முக்கியமாகும்! சில உதாரணங்கள் தருகிறோம்.

எம் ஸ்ரீகுருதேவர் திருமந்திர நகரில் பஸ்நிலையம் சமீபம் ஸ்ரீமந் நாராயணனுக்கு ஒரு ஆலயம் வைத்திருந்தார்! அங்குதான் ஸ்ரீகுருதேவர் தங்கி இருந்தார். ஒருசமயம் ஆலயத்தில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தோம். அப்போது காலை பத்துமணி இருக்கும். ஸ்ரீகுருதேவர் ஆலயத்திற்கு வந்தார். அந்த பைத்தியத்திடம், திருவடி! நண்பகல் இரண்டு மணிக்கு மதுரை செல்லவேண்டும், இந்த வேஷ்டியை அலசி உலர்த்தி தருகிறாயா? **முடியுமா??** எனக்கேட்டார்கள்.

அந்த பைத்தியமும் ஒரு சிரிப்புடன் **தங்கள் கிருபையினால் முடியும்** என்றது. வேட்டியை அவிழ்த்து கொடுத்துவிட்டு ஒரு துண்டை கட்டிக்கொண்டு கட்டிலில் சயனித்துவிட்டார்கள். அவர் வேட்டியை கொடுத்த நேரம் நல்ல வெயில், வானவெளியில் மருந்துக்குகூட ஒரு மேகம் கிடையாது. அவ்வளவு சுத்தமாக இருந்தது.

எம் ஸ்ரீகுருதேவருடைய விதிமுறைகளைப் பார்த்தால் அதிஆச்சர்யமாக இருக்கும். ஒரு பக்கெட் தண்ணீரில்தான் குளிக்கவேண்டும். ஒரு வேட்டி, ஒரு சட்டை, ஒரு துண்டு, ஒரு கௌபீனம் ஆக இந்த நான்கையும் சோப்பு போட்டு அலசிவிட வேண்டும்! சோப்பு அதிகம் கரைந்துவிடவும் கூடாது! துணிகளை அடித்து துவைக்கவும் கூடாது! முறுக்கி பிழியவும் கூடாது! துணியை வேகமாக

உதறவும் கூடாது! துணிகள் பால் போன்று அதிவெண்மையாகவும் இருக்கவேண்டும். (ஆனால் இந்த பாடம் உங்களுக்கு கொடுக்கவில்லை)

அந்த பைத்தியமும் ஸ்ரீகுருநாமதியானத்துடன் துணியை சோப்பு போட்டு அலசி வெளியே உலர்த்தப் போகும்போது பார்த்தால் வானத்தை யாரோ களவாடிப் போய்விட்டார்கள் போல் ஒரே கருமேகம்! ஒரே குமுறல்! கடும்மழை! கடுமையான காற்று! அந்த பைத்தியத்திற்கு ஒன்றும் ஓடவில்லை. ஸ்ரீகுருதேவரை பார்த்தால் ஸ்ரீகோகுலகண்ணன் திருட்டு தூக்கம் தூங்குவதைப் போல் ஆனந்தநித்திரையில் இருந்தார். கோயிலின் உள்வெளியில் நின்றபடி வேட்டியை (எட்டு முழம்) தலையில் போட்டுக்கொண்டு இரண்டு கைகளாலும் ஆட்டிஆட்டி உலர்த்தியது.

**சோதனையாக** மழை வேகத்தாலும், காற்றின் உத்வேகத்தாலும் தூவானம் இருபக்கமும் ‘விர்விர்’ என அடித்துக் கொண்டிருந்தது. பனிரெண்டரை மணி வரையிலும் மழையும், காற்றும் ஓயவில்லை. அந்த பைத்தியத்திற்கு கை ஓய்ந்து அசந்துவிட்டது போலும். இன்னமும் ஒரு மணி நேரத்தில் வேட்டியை எப்படிக் கொடுக்க முடியும்? ஆனாலும் முடியும்!!!

வேட்டியோ அலசியபடியே உலராமல் அப்படியே இருந்தது. அந்த பைத்தியம் சோரவில்லை. சேர்ந்துவிட்டது அதனுடன்! ஹே.. குருதேவா! சோதனையும், அதனால் வரும் வேதனையும் உனக்குதானே!! உன்னை நீயே சோதிப்பதில் உனக்கென்ன லாபம்? இதன் லாபநஷ்டம் உனக்குதானே!!!

ஆணையிட்டதும் நீயே!
ஆணையை ஏற்றதும் நீயே!!
ஆணையைத் தடுப்பதும் (மழையும்) நீயே!!!
ஆணைக்கு உட்பட்ட பொருளும் (வேட்டியும்) நீயே!!!!
**எது உண்மையோ அது நடைபெறும்**

என புலம்பிக் கொண்டே கண்களில் தாரை தாரையாக கண்ணீர் மழை கொட்டும்போது வெளியே கொட்டும் மழை நிற்காமலே பெய்து கொண்டிருக்க உள்வெளியே **ஒரு அனல்காற்று** வீசியது. அரை மணி நேரத்தில் வேட்டி உலர்ந்துவிட்டது. குறிப்பிட்ட நேரத்தில் ஸ்ரீகுருதேவர் எழுந்தார். ஒன்றும் அறியாதவர் போல் (அனைத்தும் நடத்தியது அவரே) என்ன திருவடி! இந்த கொட்டும் மழையிலும் துணியை உலர்த்திவிட்டாயே! வெகு சாமர்த்தியமான குழந்தையப்பா நீ! உன் போன்ற குழந்தையை பெறுவதற்கு யாம் பெரும் பாக்கியவானாக இருக்கவேண்டுமென ஒரு அருட்புலம்பல் புலம்பிவிட்டு சென்றுவிட்டார்கள். பெற்றவர் யாரோ? பிறந்தவன் எவனோ?? அனுபவம் எதுவோ??? இந்த பாடம் யாருக்கோ????

**அதை அதுவே அறியும்!!!!**

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. அஹத்தில் அடங்கான் - அகத்தில் அமர்வான்!

ஒருசமயம் ஸ்ரீகுருதேவருடன் ஒரு காட்டில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தோம். ஜலம் ஓடும் இடத்தில் கரங்களால் ஜலம் எடுத்து அருந்துவோம். காய்கனி கிடைத்த இடத்தில் அவைகளை

**அவற்றின் அனுமதியுடன்** எடுத்து உண்போம். சில இடங்களில் இலை தளிர்களை அந்தந்த **செடி, கொடிகளிடம் கேட்டு** உண்போம். ஒரு இடத்தில் இவை ஒன்றும் கிடைக்கவில்லை. பெரும்பாலும் பாறைகள் சூழ்ந்த இடம். ஒரு சொட்டு ஜலம் மருந்துக்குக் கூட கிடைப்பது அரிதாயிற்று. அந்த இடத்தில் ஒரு பாறையின் கீழ் குகை போன்ற இடம். அதனுள் ஸ்ரீகுருதேவர் அமர்ந்து கொண்டு, திருவடி! வெய்யிலின் கடுமை கொடுமையாக இருக்கிறது. தாகமாக இருக்கிறது. கொஞ்சம் ஜலம் கிடைத்தால் நடக்க இயலும். இல்லையானால் நிலைமை மிகவும் மோசமாகிவிடும் என கடைக்கண் பார்வையினால் நோக்காமல் நோக்கி, பரிதாபமுடன் கேட்பவர் போல் (நடித்தார்) நடத்தினார் இந்த பாவையை!



அந்த பைத்தியமும் முதலில் சற்று மிரண்டது. இங்கு ஜலத்திற்கு உரிய அறிகுறியே தோன்றவில்லை. ஒன்று ஆகாய கங்கை (மழை) வரவேண்டும் அல்லது பாதாளகங்கை பொங்கி வரவேண்டும். ஹே.. குருதேவா! எந்த நாடகத்திற்காக இந்த நடிப்போ? அதை நீயே அறிவாய்! என மனதிற்குள் புலம்பிக் கொண்டே அரைகல் தூரம் போயிருக்கும். வெய்யிலின் கொடுமையால் சோர்ந்து போய் "ஹரே... கிருஷ்ணா..." என அந்த காடே அதிரும்படி அலறி கத்தியது!

**"அவன் அருளால் அவன் தாள் வணங்கினால்**
**அவன் பார்த்துப்பன்"** என்ற நிலை பெறலாம்.

ஓர் பாறையின் கீழ் சுத்தமான தெளிவான **"அமிர்தஸ்வரூபமான"** ஜலம் ஒரு மூன்று அடிகளுக்கு கீழே இருக்கிறது. அங்கு இறங்கவும் மார்க்கம் இல்லை. ஜலம் எடுக்க பாத்திரமும் இல்லை. ஜலத்தை கண்டுகொண்டோம், மோண்டு வரவோ, கொண்டு செல்லவோ மார்க்கம் தெரியவில்லை. மேலும் அந்த பைத்தியம் **"அழுதால் உன்னைப் பெறலாம்"** என்ற நிலையில் உன்னை பெற்றோம், தொடமார்க்கம் தெரியவில்லையே என

ஹே.. ப்ரபோ!

ஜலம் கேட்டதும் நீயே!
ஜலம் எடுக்கச் சென்றதும் நீயே!!
ஜலத்தை காண்பித்ததும் நீயே!!!
ஜலத்தை தொடமுடியாமல் சோர்வதும் நீயே!!!!

**எந்த முடிவும் நலமே?**
ஆனால் அதை ஏற்கும் மனம்தான் சுகவீனம்!!!
இது சோதனையோ, வேதனையோ? கருணை செய் எம் ஐயனே!!

என கதறி உருகும்போது மூடி இல்லாத ஓர் பித்தளை தூக்குப் பாத்திரத்துடன் பத்து வயது சிறுமி புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தாள்.

பாவாடை சட்டையுடன் ஆடுமேய்க்கும் ஓர் கோலுடன் நின்று கொண்டிருந்தாள். (அங்கு ஆடும் இல்லை, குட்டியும் இல்லை நாங்கள்தான் ஆடும் குட்டியும் போலும்)

அவள் கேட்ட கேள்வியாவது:

இரண்டுடன் வந்து ஒன்றை இழந்து தவிப்பவன்போல் தோற்றுகிறதே? ஏதாவது வேண்டுமா? ஏன் இப்படி திருட்டுமுழி முழிக்க வேண்டும்? எம்மை உணர்ந்தவன் போல் பேசினாள். யாமும் (பைத்தியமும்) வேஷத்திற்கு தக்கபடி நடித்தோம்.

அம்மா! இதனுடைய ஸ்ரீகுருதேவருக்கு ஜலம் வேண்டும். அதிக தாகத்துடன் சற்று தூரத்தில் இருக்கிறார், கொண்டு செல்ல பாத்திரம் இல்லை. உன் பாத்திரத்தை கொடுத்தால் சற்று உபகாரமாக இருக்கும் என்றது. அவள் தாம்பு (கயிறு) இல்லையே என்றாள். பரவாயில்லை இதன் துண்டு இருக்கிறதே, அது ஐந்துமுழம் என்று சொல்லி அந்த தூக்கு பாத்திரத்தை வாங்கி இந்த பைத்தியத்தின் தலையில் கட்டியிருந்த துண்டை அதில் பிணைத்தால் மூன்று அடியில் கிடந்த ஜலம் ஆறு அடிக்கும் கீழே போய்விட்டது. (எம் துண்டு ஐந்துமுழம் என்று ஒரு அளவு சொன்னது அஹமாகும்)

**"அஹத்தில் அடங்கான், அகத்தில் (பணிவில்) அமர்வான்".**

அங்கும் அஹம் அறுபட்டது.

**"எல்லாம் உனது செயல் என்றெண்ணும் எண்ணமும் 'நீ'**

**அல்லாது எமக்குளதோ 'ஐயா' பராபரமே"** என்றபடி

**"எல்லாம் நீயே"** என அலறியது.

ஆறடிக்கு கீழே போன ஜலம் ஓரடிக்கு மேலே வந்துவிட்டது. துணியை கட்டாமலே அந்த பைத்தியம் ஜலம் மோண்டு கொண்டு ஸ்ரீகுருதேவரிடம் சென்றது! ஸ்ரீகுருதேவரும்,"வறண்ட பூமியை காட்டினாலும் மிரண்டு போகாமல் கரைகண்டு வந்துவிட்டாயே **நீ ஓர் மஹானப்பா!!!**" என்றார்கள்.

அப்போது அந்த பைத்தியம்,

யாம் என்றென்றும் உம் **'மகனே'**!!!
சீடனாக வைத்து தண்டிக்கவும், ரட்சிக்கவும், பரீட்சிக்கவும் இனி வேண்டாம்.

பக்தனாக இருந்து உம்மை பற்றிப் பிடிக்க திறமையும் இல்லை!
பக்தீ என்ற ஆற்றலை பெறும் வன்மையும் இல்லை!!

மகனாக (மண்ணாக) இருந்தால் போதும்!!!
ஓர் கருங்கல்லைப் போலும், ஓர் பட்டமரம் போலும் இருந்தால் போதும் என வேண்டிக்கொண்டது!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 3. மறந்து போன மாத்திரை!

ஒருசமயம் ஸ்ரீகுருதேவருக்கு தூலம் நலிவுற்றது. அது 1981-ம் ஆண்டாகும். அமெரிக்கன் ஆஸ்பத்திரியில் (தூய இருதய ஆஸ்பத்திரி) மூன்றுமாத காலமாக (90 நாள்) படுக்கையில் இருந்தார்கள். இரவும்பகலும் அவர் அருளால் அவருக்கு சேவை செய்தது. அது ஒரு கிறிஸ்துவ ஆஸ்பத்திரி. அங்கு நர்சும், சிஸ்டரும் கிறிஸ்துவர்களே. ஆனாலும் அனைவரும் அந்த பைத்தியத்துடன் நெருங்கி சில பாடம் கேட்பார்கள். காரணம் இது மதபேதமின்றி பைபிளில் இருந்து சில உண்மைகளை கதைகள் மூலம் போதிக்கும்.

அங்கு ஒரு சர்ச் உண்டு. அங்கு அன்னை மரியாளுடைய சொரூபம் உண்டு. அது ஸ்விட்சர்லாண்டில் இருந்து கொண்டுவரப்பட்டது. இந்த பைத்தியம் அதன்முன் அமர்ந்து மணிக்கணக்கில் தியானம் பண்ணும். இது அங்குள்ள டாக்டர், நர்ஸ்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். ஏன் என்றால் இதன் நெற்றியில் அழகாக, அகலமாக ஏழுமலையான் போன்று வெகுபிரகாசமாக நாமம் போட்டிருக்கும். காலையிலும், மாலையிலும் குளித்தவுடன் நன்றாக நாமம் போட்டுக்கொள்ளும். நாமம் இல்லாத நேரம் இல்லை. அப்படி நாமம் போட்டுக் கொண்டு பிரேயர் ஹாலில் அமர்ந்து தியானம் செய்வது அவர்களுக்கு ஓர் அதிசயமாகவே தோற்றும் போலும்.

அவர்களுக்கு பக்தி, ஞானம் இவைகளை பைபிளிலிருந்தே பாடம் புகட்டும். **கிருஷ்ணனும் கிறிஸ்துவும்** ஒன்று என்பதை பல உதாரணங்களுடன் விளக்கும்.

கிருஷ்ணன் வளர்ந்தது மாட்டுக் கொட்டகை. கிறிஸ்து பிறந்தது மாட்டுக் கொட்டகை.

கிருஷ்ணன் விளையாட்டுப் பருவம் வெண்ணை திருடுதல்; பின் சிலகாலம் ஆனிரை (பசுக்களை) மேய்த்தான். ஆகவே அவனை கோவிந்தன் என்றும், கோபாலன் என்றும் அழைப்பதுண்டு.

**கோவிந்தன்:** ஜீவனின் பசுத்(ஜீவத்)தன்மையையும், அதனால் விளைந்த பாச (பந்தம், பற்று) தன்மையையும் நீக்கி தன் திவ்ய சரணாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்பவன் எனப்பொருள்.

**கோபாலன்:** பசுக்களை மேய்க்கும் பாலகன்; அதாவது ஜீவர்களாகிய நாம் பசு. நம்மை ஒழுங்காக மேய்ப்பவன் எனப்பொருள்.

கிறிஸ்துவின் தலையாய தொழில் தச்சு; ஆனால் சிலகாலம் ஆடுகள் மேய்ப்பவனாக இருந்தார். (யாமே நல்ல மேய்ப்பன்)

நொண்டி, சப்பாணி நடக்க இயலாத ஆடுகளுக்காக பட்டி சாத்தாமல் ஆயன் காத்திருப்பது போல, கிறிஸ்துவும் ஜீவர்களாகிய நமக்காக காத்திருந்து தம் அபயகரம் இரண்டையும் அகலவிரித்து வாருங்கள் குழந்தைகளே! உங்களுக்காக காத்திருக்கிறோம் என அன்பும், கனிவும் நிறைந்த முகத்துடன் காத்திருக்கிறார் எனப்பொருள். ஆகவேதான் தம் கனிமொழியால் **யாமே நல்ல மேய்ப்பன் என்றும், யாமே ஸத்யமும், வழியும், ஜீவனுமாக இருக்கிறோம் என்றும் அத்வைத போதனையை** சொல்லாமல் சொல்லி உண்மையை சூட்சுமமாக உணர்த்தி நிற்கிறார்.


அவர்கள் இருவர் மரணமும் துர்மரணம். ஆனால் சற்று மாறுபட்டது. ஒற்றுமையில் பார்த்தால் இருவருக்குமே இரும்பால்தான் மரணம் சம்பவித்தது.

அவர்கள் அனைவரும் அதிசயமும், ஆனந்தமும் அடைந்தனர். அவர்கள் ஓய்வு நேரங்களில் இந்த பைத்தியத்துடன் பலவிதமான சாந்தி, சமாதானம், அமைதி என பலப்பல கேள்வி கேட்டு திருப்தியுற்றனர்.

அச்சமயம் ஸ்ரீகுருதேவருக்கு நான்கு மணிக்கு ஒருதரம் இரண்டு மாத்திரை கொடுக்க டாக்டர் உத்தரவு. அதை சிரத்தையுடன் கொடுத்துக் கொண்டிருந்தது. அன்று எட்டு மணிக்கு மாத்திரை கொடுத்துவிட்டோம். இனி நள்ளிரவு பனிரெண்டு மணிக்கு கொடுக்க வேண்டும். அன்று ஆஸ்பத்திரி படுக்கையில் ஸ்ரீகுருதேவர் சயனித்திருக்கிறார். இதுவும் மூன்று சிஸ்டர்களும் வெளிவராண்டாவில் இருந்து ஒரு முக்கியமான விஷயத்தை பேசித் தெளிந்து கொண்டிருந்தோம். பக்கத்தில் கடிகாரம் வைத்துக் கொண்டுதான் பேசிக்கொண்டிருந்தோம்.

பேச்சு சுவாரஸ்யத்தில் மணி 12:10 ஆகிவிட்டது. ஆகா! பத்து நிமிஷம் தாமதித்து விட்டோமே! என்ன அஜாக்கிரதை? சேவை விட்டுப் போய்விட்டதே என ஸ்ரீகுருதேவர் அறைக்குச் சென்றால் ஸ்ரீகுருதேவர் கதவை உள்புறமாக தாளிட்டுக்கொண்டார்கள். கதவை தள்ளிப் பார்த்தது, திறக்க முடியவில்லை. அந்நிலையில் **கதவை தட்டக் கூடாது.**

1. பெரியவர்களை **எக்காரணம்** கொண்டும் தூக்கத்தில் இருந்து எழுப்பக் கூடாது.
2. கண்டிப்பாக **எழுப்பித்தான்** ஆகவேண்டுமென்றால் அவர்கள் திருவடியின் நேர் இருந்து **ஸ்ரீபாதத்தை சற்று** ஸ்பரிசித்து எழுப்பலாம். வேறு அங்கங்களை தீண்டக்கூடாது.
3. நம்மவர்களையும் தூக்கத்தில் எழுப்புவதை தவிர்க்க வேண்டும். **முக்கிய காரணமாயின்** பாதத்தை தட்டி எழுப்பலாம். தூக்கத்தில்தான் ஒருவன் மனதையும், பிராணனையும் ஒன்றுபடுத்தி தம் ஆத்மாவுடன் ஒன்றி இருக்கிறான்.



தவறிவிட்டோமே என வருந்தி கதவு அருகில் அமர்ந்து கதவிலேயே சாய்ந்து அழுது கொண்டிருந்தது. ஹே.. குருதேவா! எப்படியோ பிழை நடந்துவிட்டது. அறிந்து செய்வது தப்பு! அறியாமல் செய்வது தவறு!! தப்பு செய்தால் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும். தவறு செய்தால் தம் தவறுக்கு சொல்லி அழுது முறையிட்டு இனி அவ்விதம் நடைபெறாமல் தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். யாம் செய்தது தவறாகும். அந்த தவறும் சத்தான சில வாசகங்களை பேசி அந்த குழந்தைகளை உஜ்ஜீவிப்பதற்குத்தான்.

ஆனால் நீ கர்த்தாவா என தாங்கள் கேட்கலாம்? உண்மைதான். யாம் ஒரு கருவியே. இந்த கருவியை பயன்படுத்தியதும் தாங்கள் தானே? உம்மையன்றி இந்த தூலம் செயல்படுமா? எந்த வினாடியும் இது உம் கைபதுமையே! தவறோ சரியோ நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனி இவ்வாறு நடக்காத வண்ணம் இதை தடுத்தாட் கொள்ள வேண்டியது உம் பொறுப்பே!

## “எல்லாம் நீயே!”

யாம் அறிந்ததெல்லாம் இந்த ஒன்றே என புலம்பிய வண்ணம் இருக்கும்போது ஸ்ரீகுருதேவர் புன்முறுவலுடன் கதவை திறந்தார். இந்த தூலம் சோர்ந்த நிலையில் அவர் திருவடியில் விழுந்துவிட்டது. அந்நிலையில் அவர் திருவடியைப் பற்றியது. அவரும் ஒரு சிரிப்புடன், என்ன திருவடி பயந்துவிட்டாயா? யாம் உன்னை சோதிக்கவில்லை. உன்னோடு சற்று விளையாடினோம். அவ்வளவுதான். நீ ஒன்றும் வீண்காலம் கடத்தவில்லை. சத்தாகவே இருந்தாய்.

**உலகில் புகுந்தால் அது அனர்த்தமாகும்.**
**உண்மையில் நிலைத்தால் அது அர்த்தமுள்ள சத்தாகும்.**

**சேவை** என்பது ஒரு வைரச்சுரங்கம் போன்றது. வெட்டவெட்ட (அள்ள அள்ள) குறையாதது. இதைத்தான் தாயுமானவர்

**“அன்பர் பணிக்கு எம்மை ஆளாக்கி விட்டுவிட்டால்**
**இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே”**

என்று பாடினார். **சேவையின் முடிவிடம் அபேதநாட்டம்**. அபேதநாட்டம் சித்தியாகும் பரியந்தம் ஒருவன் சேவை செய்தே ஆகவேண்டும். சேவையின் முடிவிடம் அவன் உள்ளத்தில் தாமாக பிரகாசிக்கும். **அங்கு குற்றம் குறை தோற்றாது. எல்லாம் அவனே என்ற ஓர் சத்வ குணம்தான் தோற்றும்!** இது சாட்சி நிலையாகும்.

சாட்சி நிலையில் ஒருவன் அடியெடுத்து வைக்கும்போது யார் **எதைச் செய்தாலும், என்ன சொன்னாலும் அங்கு எல்லாம் அவனே என ஆகிவிடும்.**

**“எல்லாம் நீயே”** என்ற பூரணத்வம் தாமே உண்டாகும். அங்கு மனம் அசையாது.

“குற்றம் குறை தோற்றின் அங்கு சேவை முற்றுப் பெறவில்லை. எல்லாம் அவனே என்பது பூர்த்தியானால் சேவையில் மனம் நாடாது”. **ஆனால் ஆனந்தம் குறையாது.** அங்கு கர்மாவும்

முடிவுறும். ஆனால் **பரகர்மா** இயங்கும். **பரகர்மா** எண்ணம் இன்றி செய்வதாகும். இங்கு **சத்வ குணம்** ஒன்றே தோற்றும்.

இங்கு **துவைதம்** கண்டிப்பாக உண்டு. ஆனால் ஆனந்தம் எந்நிலையிலும் மாறாது.

## "இது பேரானந்தமே"

பெயரளவில் தோன்றும் ஆனந்தம் ஆகும். **நித்திய சத்திய பிரம்மானந்தமாகாது.** இங்கு சாட்சித் தன்மையும் அழியவேண்டும். இங்கு ஈசனும் இல்லை. ஜீவனும் இல்லை!

## "நாம் நாமாகவே இருக்கிறோம்"

என்ற நிலை பெறும் பரியந்தம் இந்த பேரானந்தம் நீடிக்கும். இந்த பேரானந்தம் (சாட்சித் தன்மை) பெற்றாலே ஓர் ஜீவன் நழுவமாட்டான்! அதாவது ஜகத் ஜீவனுக்குள் புகமாட்டான். ஈசனாகவே ஸ்ரீபரமாத்மாவாகவே இருப்பான். இனி நீ தப்பும் செய்யமாட்டாய். கவனக் குறைவினால் தவறவும் மாட்டாய். இந்த பாடம் உனக்கு பூர்த்தியாகிவிட்டது என ஆசி கூறினார்கள்.

**எல்லாம் நீ!**





# ஸ்ரீசத்குரு சேவையினால் யாம் பெற்ற அனுபவங்கள்!

## 1. பசியாற்றிய பச்சிலை!



இந்த பைத்தியம் கடும் வனங்களில் சஞ்சாரம் செய்வது வழக்கமாக இருந்தது. திருக்குறுங்குடியில் நம்பி கோயிலுக்கு நாலைந்து கிலோமீட்டருக்கு மேல் சுவாமி பாதம் என்ற ஒரு இடம் உண்டு. ஒரு பாறையில் ஸ்ரீராமன் பாதம் என்ற திருவடி பதிந்த தடம் உண்டு. அது அடர்ந்த இடமாகும். ஒருசமயம் அங்கு செல்லும்போது வழியில் கடுமையான பசி ஏற்பட்டது. செல்லும் வழியெல்லாம் ஜலம் மட்டும் உண்டது, உணவு கிடைக்கவில்லை. பசிக்கொடுமையினால் ஒரு இடத்தில் நடக்க முடியாமல் அமர்ந்துவிட்டது. கத்திக்கதற ஆரம்பித்தது அந்த பைத்தியம்.

ஹே... பரமாத்மா! ஆபத்பாந்தவா! தீனபந்தோ!! தீனரட்சகா! பசியை உண்டு பண்ணி அந்த பசிக்கு உணவு இல்லாமல் செய்வது உனக்கு அழகா? உன் குழந்தையை இப்படி சோதித்தால் அது என்ன செய்யும்? எவரிடம் முறையிடும்?

**கூவி அழும் பிள்ளைகட்கே வயிறு நிறையும்!**
**தெய்வம் கொண்டாடுபவர்க்கே அருள் புரியும்!!**

என்பது ஆன்றோர்கள் வாக்கியம் அல்லவா. இது பொய்யாகாதே!


ஹரே கிருஷ்ணா...! ஹே... பிரபோ...! என அலறும்போது அனேக வானர கூட்டங்கள் அங்கே தோன்றின. அவை ஒன்றுடன் ஒன்று விளையாடும்போது அந்த விளையாட்டின் ஆனந்தத்தில் பசி தோற்றவில்லை. அதில் இரண்டொரு வானரம் சில பச்சை இலைகளை பறித்து தின்றுகொண்டு எம்மையும் நோக்கி ஜாடை செய்தன. (அதாவது இதை நீ சாப்பிடலாம் என்று சொல்வதைப் போல்

அமைந்தன) இந்த பைத்தியமும் அந்த இலைகளை எடுத்து சாப்பிட்டு சிறிது ஜலம் அருந்தியதும் பசி அடங்கிவிட்டது. அதன் பிறகு எந்த காட்டிற்கு சென்றாலும் அந்த இலை கிடைக்கும். அதனால் கவலை, பயம் இல்லாமல் அந்த மூலிகையையே சாப்பிட்டு ஜலம் அருந்தி பசியாறும் அந்த பைத்தியம்! இது இறைவன் கொடுத்த ஒரு வரப்பிரசாதமும், ஸ்ரீகுருதேவர் ஆசியும் ஆகும்.

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. இரண்டில் ஒன்று!

ஒருசமயம் குற்றாலமலையில் ஒரு குகையில் சில மஹான்களை தரிசிப்பதற்காக (அவர்கள் ஆணையின்படி) சென்று கொண்டிருந்தது. நடுக்காட்டில் பசி ஏற்பட்டது போலும். ஏனோ அங்கு அந்த பச்சிலை மூலிகை செடி ஒரு இடத்திலும் தென்படவில்லை. **இது அவன் சூதே.** கத்திக்கதறி அழைத்தது. கதறவும் இயலவில்லை. அதிகம் சோர்ந்துவிட்டது. அந்நிலையில் ஓர் அதிசயம்!!!



ஓர் ஆறடி வேங்கை ஒரு முப்பது அடி தூரத்தில் எதிரில் நின்றுகொண்டு அந்த பைத்தியத்தை முறைத்துப் பார்த்த வண்ணம் பிளிரிக் கொண்டு (இலேசாக உறுமிய வண்ணம்) அதிஉக்ரத்துடன் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் அந்த பைத்தியத்திற்கு **கிலி அடித்தாற் போல்** வெடவெடவென நடுங்கிய வண்ணம் அதன் முகத்தைப் பார்க்காமலேயே பக்கத்திசையை பார்த்தவண்ணம் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே ஹே.. குருதேவா! ஹே.. கண்ணா!! ஹரே.. கிருஷ்ணா!!! இது என்ன சோதனை? பசிக்கு உணவு கேட்டால் நீயே கோர ரூபத்துடன் வந்து எம்மையே பட்சிப்பது போல் நிற்கிறாயே! அதுவும் சரியே. அதற்கு இது உணவாக வேண்டுமென்று விதி இருந்தால் இதை மாற்ற முடியுமா? நல்லது.

**"இரண்டிற்கும் ஏதாவது ஒன்றில் பசி அடங்க<br>உன் திருவுள்ளம் எதுவோ அது நடைபெறட்டும்"**

என உள்ளத்திலேயே குமுறி அழும்போது அந்த பைத்தியத்திற்கு அழவும் முடியவில்லை! ஏன் அழுவதற்கும் சக்தி இல்லை. எல்லாம் ஒடுங்கிவிட்டன. என்னதான் பக்தி, ஞானம் இருந்தாலும் இப்படி **மரண சம்பவ** நிலையில் அனைத்தும் நின்றுவிடும் போலும்? மரணபீதி எப்படி என்பதை அப்போது அனுபவித்தோம்! தம்மை அறியாமலேயே கால் வழியாக மூத்திரம் போக ஆரம்பித்தது. நடுநடுக்கம் என்றால் அதை அனுபவிக்கும் போதுதான் தெரிகிறது!

**ஆனால் !!!**

இதய அடித்தளத்தில் ஸ்ரீகுருதேவர் அருளிய **“ராம்”** மந்திரஜபம் ஓடிக்கொண்டிருக்கிறது. அதை உணர முடிகிறது. அதுதான் மூச்சோடு கலந்ததாயிற்றே! ஒரு பதினைந்து நிமிஷம் கழிந்திருக்கும். உடலுக்கும், கால்களுக்கும் நடுக்கம் நின்றுவிட்டது போலும். நின்றுவிட்டது என சொல்வதைவிட நடுங்க சக்தி இல்லை எனச்சொல்லலாம்!

அந்நிலையிலும் ஒரு துணிவு!!!

ஹே.. பிரபோ! பசிக்காக அழுதோம். ஆனால் நீயோ எமக்கு பசி என முன்வந்து நிற்கிறாய். யார் பசி நீங்கினாலும் பரவாயில்லை. “ஒன்று எம் பசிக்கு உணவை காட்டு” அல்லது “உன் பசிக்கு எம்மை உணவாக்கு”. இப்போது இந்த இரண்டில் ஒன்றை யாம் ஆனந்தமாக ஏற்கிறோம்.

“வல்லான் வகுத்ததே வாய்க்கால்” உன் முடிவு யாருக்குத் தெரியும்? தன்நிலை தனக்கு தெரியாமலே இன்று மனிதன் இந்த ஆட்டம் ஆடுகின்றான். தன்நிலைதான் தெரிந்து கொண்டானானால் உலகையே விழுங்கி ஏப்பம் விட்டுவிடுவான். நீ மறையவன், அனைத்தையும் உனக்குள்ளேயே மறைத்து வைத்திருக்கிறாய். ஒரு சிறுதுரும்பு அசைவதானாலும் உன் அனுமதி இன்றி அசையாது. ஆனால் **மனதின் வசப்பட்ட மனிதன் நான்! நான்!** என மார்தட்டிக் கொள்கிறான். என்ன அறிவீனம்? என புலம்பிக் கொண்டே அந்த வேங்கையை நோக்காமல் நோக்கியது.

**ஸ்ரீகுரு கிருபையினாலும், ஸ்ரீதிரு அருளினாலும்** அதன் முகத்தில் **சாந்தி** தோன்றியது. கடுமையான கர்ஜனையோடு இருந்த முகம் நாம் வளர்க்கும் வீட்டு நாய் போன்று **நன்றி உணர்வோடு** நாக்கை சுழற்றிய வண்ணம் எம்மை அழைப்பது போல் தோன்றியது.

மனதில் சத்ரு பயம் நீங்கியது. மித்ரு சுகம் தோன்றியது. அந்த வேங்கை தன் தலையை அசைத்து (பேச இயலாத் தன்மையினால்) அது முன்செல்ல இந்த பைத்தியமும் அதன் பின்னே சென்றது. ஓர் அரை மணிநேர அவகாசத்தில் ஓர் இடத்தில் அந்த வேங்கை நின்றது. ஓர் மரத்தை குறிப்பாக காட்டி அம்மரத்தையும் எம்மையும் மாறிமாறி குறிப்புடன் நோக்கிவிட்டு சென்றுவிட்டது. அது ஓர் பழமரம். கைக்கு எட்டும் தூரத்திலும், எட்டாத தூரத்திலும் கனிந்த பழங்கள் நிறைய இருந்தன. எப்படியோ அன்று பசியமர்த்திவிட்டான் எம் ஐயன்!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!


## ௩. பசிக்கு உணவா? படுக்க இடமா?

திருக்குறுங்குடி என்ற மலையில் ஆனையடிதம்பிரான் கோயில் என்று ஒன்றுண்டு. அங்கு சென்று கொண்டிருந்தோம். அங்கு நல்ல மழையின் காரணமாக தரை சேரும்சகதியுமாய் இருந்தது. கோவில் செல்லும் முன்பதாக மணி ஐந்து ஆகிவிட்டது. இருள் சூழ ஆரம்பித்தது. தங்குவதற்கு ஒரு பாறையும் கிடைக்கவில்லை. கீழேயும் படுக்க முடியாது, மரத்திலும் ஏறமுடியாது.

ஹே.. கமலக்கண்ணா! இந்த இருளில் தங்குவதற்கு இடம் தோன்றாமல் சங்கடப்படுவது உனக்கு தெரியவில்லையா? அன்று ஒரு செட்டியார் மனைவிக்காக அடர்ந்த கானகத்தில் ஒரு கிராமம்

உண்டு பண்ணி அதில் தமக்கென ஒரு குடிசையையும் அமைத்து அந்த பெண்மணிக்காக மருத்துவச்சி (நர்ஸ்) வேஷமும் அணிந்து மருத்துவமும் பார்த்தாயே!!

ஜடிலன் என்ற பள்ளி சிறுவனுக்காக ஒரு அடர்ந்த காட்டில் யாம் உனது அண்ணன் என நம்பவைத்து பலநாட்கள் அவனுடன் துணை சென்றாயே!! அவன் கேட்டதெல்லாம் கொடுத்தாயே!! இப்படி எத்தனையோ அடியார்களுக்கு எப்படியெப்படி எல்லாம் **தோன்றாத்துணையாக** இருந்தாயே! இன்று நீ இல்லாமலா போய்விட்டாய்? இருக்கிறாய், ஆனால் உம்மை கண்டு கொள்ளும் திறன்தான் எமக்கில்லை! எம் கண்கட்டாகிய திரை (மோஹம்) என்று விலகுமோ? அதை நீ அவிழ்த்தால் அன்றி எமக்கு திறன் ஏது? நீயாக வந்து வலிய காட்சி தந்தாலன்றி எமக்கு உன்னை காணும் பாக்கியம் எப்படி கிட்டும்?



ஹே.. பிரபோ...! தயை செய்வாய் என புலம்பும்போது இன்று ஒரு சிறுத்தை எதிரில் நின்றது. இன்றும் அதே நிலைதான். குலை நடுக்கம்! குரல் நடுக்கம்!! கூண்டோடு ஒரே நடுக்கம்!!! கால் வழியே மூத்திரம் போனது, மலமும் சிறிது வெளியே வந்துவிட்டது. இது என்ன உன் திருவிளையாடல்! யாம் கேட்பது ஒன்று, நீ செய்வது ஒன்றாக இருக்கிறது. இது என்ன **முரட்டு வைத்தியமாக** இருக்கிறதே! இந்த விஷப்பரீட்சையெல்லாம் போதும் ஐயனே! இன்னமும் பக்குவப்படவில்லை என்று பார்க்கிறாயா? அதுதான் நன்றாக பக்குவப்படுத்தி வருகிறாயே! இந்த பக்குவமும் தேவையா?

**அதாவது!!!**

"மரண பயம் அறவேண்டும்" என நிகழ்த்துகிறாயா? **இதில் நீதான் தோற்றுவிடுவாய்!!!** காரணம் **உன்னை மறந்தாலல்லவோ** அந்த பயம் தோற்றும்! **எண்ணம், சொல், செயல்** இந்த மூன்றிலும் நீயே இருக்கிறாய். ஒரு கதை உண்டு தெரியுமா உனக்கு?

ஒரு அடியவர் துளாய் மாலை கட்டி தினமும் உனக்கு சாத்தி ஒரு கண்ணாடியை உன்முன் காட்டி **அழகாக இருக்கிறாயா?** என உன்னை கேட்பாராம். நீ அழகில் பிரியனா!!? அலங்காரப் பிரியனா!!!? அது எமக்குத் தெரியாது! நீயும் உன் மணிமுடி அசைய தலையை அசைப்பாயாம்! ஒருநாள் அந்த தாஸானுதாஸரை அரவம் தீண்ட அந்த கொடிய விஷத்தினால் **அவதிப்பட்ட** வண்ணம் திருத்துளாய் மாலை கட்டி உனக்கு சாத்தி **அழகாக இருக்கிறாயா?** என உன்னைக் கேட்க (தாஸர் அழவில்லையாம்; நீதான் கதறி அழுதாயாம்)

அப்போதும் அந்த அடியார் சொன்னதாவது:

ஹே.. திருட்டுக் கண்ணா!

**இது விதி;** உனக்கு மாலை கட்டுவது **எம் தலைவிதி;**

எம் மாலையை நீ அணிந்து கொள்வது **உன் விதி;** இங்கு சர்ப்பம் தீண்டியது **எம் தலைவிதி.**

இங்கு உனக்கு மாலை கட்டும் **எம் தலைவிதி** முற்றுப் பெற்றால் அங்கும் வந்து உனக்கு மாலை கட்டி சாத்துவோம்! அது **உம் தலைவிதியாக** மாறும். எம் தலைவிதியை அழித்தால் **உம் தலைவிதி** மாறும் என்றாராம்.

"இங்கு இரண்டும் ஒன்றுபட்டன"
"விதியும், தலைவிதியும் நின்றுவிட்டன"

இது நடந்த சம்பவம்! இங்கு என்ன நடக்க இருக்கிறதோ அது நடைபெறட்டும்.

## எல்லாம் நீயே!!!

இதுவே எம் ஸ்ரீகுருதேவரால் அறிந்து உணர்ந்து அனுபவித்தது. அவர் வேறு நீ வேறல்ல! படுக்க இடம் கேட்டால் பசிக்குது என நீ வருகிறாய். (பசிக்கு) உணவா? (படுக்க) இடமா? இது உன் விளையாட்டு! என புலம்பிக்கொண்டே அதை நோக்காமல் நோக்கினோம். அந்த சிறுத்தையும் ஒரு பூனைபோல் நன்றி உணர்வுடன் அந்த பைத்தியத்தை நோக்கி ஒரு அசட்டு சிரிப்புடன் (உன்னை தின்றால் என் கதி என்ன ஆவது?) உன்னை அழைத்துச் செல்லவே வந்தோம் என சொல்லாமல் (மௌனமாக) சொல்லி அது முன்செல்ல இந்த பைத்தியமும் பின்செல்ல ஒரு பத்து நிமிஷத்திற்குள் ஒரு குகை முன் நின்றது. யாம் சற்று தள்ளியே நின்றோம். அது அந்த குகை வாயிலில் நின்றபடி ஓம்காரமாக கர்ஜித்தபடி தம் கால்களால் தரையை ஓங்கி அடித்தது.

தரையை பலமுறை ஓங்கி அடித்ததிலும், அதன் கர்ஜனையிலும் குகையினுள் பதுங்கி இருந்த இரண்டு சர்ப்பங்கள், ஒரு உடும்பு, பேர் சொல்லத் தெரியாத இரண்டு ஜீவன்கள் வெளியே வந்து இந்த சிறுத்தையை கண்டு அலறி ஓடிவிட்டன. குகை காலி ஆகியது. அதுவும் இந்த பைத்தியத்தை உள்ளே சென்று ஓய்வு எடுக்குமாறு சமிக்ஞை செய்துவிட்டு சென்றுவிட்டது.

இவைகளை படிக்கும்போது இப்படியும் நடக்குமா எனக்கேட்க தோணுகிறதா?

**"முடியும். பிரமாணமாகச் சொல்கிறோம்".**

**ஸ்ரீசத்குரு பக்தியும், ஸ்ரீஇறை நம்பிக்கையும்** உங்களுக்கு இருக்குமானால் இந்த (இல்லாத) உலகம் உங்கள் திருவடிக்கு கீழே அடங்கிவிடும். இது உறுதி!

இந்த உலகத்தை உங்கள்

**கல்விகேள்வியாலோ,**
**அதிகார (அஹங்கார) பலத்தினாலோ,**
**பணபலம், பக்கபலத்தினாலோ**
**நீங்கள் அடக்க நினைத்தால்**
**உங்களை அடக்கி, ஒடுக்கி, பொடிப்பொடியாக்கி ஊதிப்பறத்திவிடும் இந்த உலகம்!**
**"இந்த உலகமாகிய மாயை சாமான்யமல்ல!"**

**எல்லாம் நீ!**



# பொறுமையின் பெருமை!

## 1. அனைவரும் நல்லவர்களே!

1975 முதல் 1980 வரையிலும் பாத்திர வியாபாரத்தில் கிடைக்கும் பழைய துணிகளை வைத்து திருமந்திர நகரில் முத்தையாபுரம் மற்றும் ஏரல், ஆறுமுகநேரி, உடன்குடி, திசையன்விளை, நாகர்கோவில் இப்படி அனேக ஊர்களுக்கு சந்தைகூடும் நாளில் சென்று வியாபாரம் செய்வதுண்டு அந்த வைத்தியம். அதில் ஒரு சம்பவத்தை மட்டும் இங்கே தருகிறோம்.



முத்தையாபுரம் சந்தை

முத்தையாபுரத்தில் வியாபாரம் செய்து வரும்போது ஒரு நாள் காலை பதினோரு மணி இருக்கலாம். (வியாபாரம் செய்யும் பொருளாவது: ஆண்கள் சட்டை, பேண்ட், வேஷ்டி, டிராயர் இன்னமும் அனேக ரகங்களும், பெண்கள் சேலை, ஜாக்கெட், பாவாடை, கவுன் இன்னமும் அனேக ரகங்களும்) கையில் ஒரு வயர் கூடை இருக்கும். அதில் மதிய உணவுடன் கூடிய டிபன் பாக்ஸ், வாட்டர் ஜக், ஒரு காசுப்பை ஆகியவைகள் இருக்கும்.

அன்று வியாபாரத்தில் எண்ணூறு ரூபாயில் இருந்து எண்ணூற்றைம்பது வரை சேர்ந்திருக்கலாம். இரண்டு பெண்கள் துணியை பார்த்துக் கொண்டிருந்தனர். ஒருவன் துணி பார்க்கும் ஜாடையில் வயர் கூடையில் உள்ள காசுப்பையையே பார்த்துக் கொண்டிருந்தான் போலும். தந்திரமாக காசுப்பையை எடுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். அவன் சற்றுதூரம் சென்ற பிறகுதான் இது கவனித்தது.

**பணப்பையை எடுத்துச் செல்கிறானே என்ற எண்ணம்!**
**அது நம்முடையதாயிற்றே என மற்றோர் எண்ணம்!!**
**நம் உடைமையை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற உந்துதல்!**

அவன் பின்னால் ஒரு பத்தடிதூரம் ஓடியிருக்கும்.

**“இது புத்தி”.**

**உடனே அறிவு பிரகாசித்தது.**
(அது இறை சொரூபம்)

**“வெகு நிதானம், அசாத்திய பொறுமை”.**

ஆமாம் உன் உடலே உன்னுடையதல்ல!
பிறகு புறத்தோற்றத்தில் உனக்கென்ன பிடிப்பு?
வந்ததும், இருந்ததும், போனதும் உன் செயலா?
உனக்கு கர்த்தத்துவம் ஏது??
உலக நிலையில் அது உன் பணமாயின் உன்னிடம் வந்து சேரும்.
அது அவனுடைய பிராப்தமாயின் அதை தடுக்க யாரால் இயலும்?

நம்முள்ளும், அவனுள்ளும், அனைத்துள்ளும் இருக்கும் **ஈசன் ஒருவன்தானே!!!** என ஆசை, பயம், கவலை அனைத்தையும் உதறிவிட்டு அமைதியாக அமர்ந்துவிட்டது அந்த பைத்தியம்.

அவன் சூதறிந்த கள்வனாயிற்றே! பக்கத்தில் இருந்தவர்களும், அடுத்த கடை அலுவலர்களுமாக ஐந்தாறு பேர்கள் அவனை துரத்திப்பிடித்து பணப்பையுடன் இழுத்து வந்துவிட்டனர், பணப்பையை கொடுத்தனர். அவர்களில் பலர் பலவாறான கேள்வி கேட்டனர். பணத்தை பறிகொடுத்துவிட்டு இப்படியும் மண்ணாட்டமா இருப்பானா மனிதன்! (மனம் படைத்ததனால் மனிதன் என ஆனான்; மனம் இல்லையானால் ஈசன் ஆவான்)

கொஞ்சமும் பொறுப்பு என்பதே இல்லையே!! (அனைத்துக்கும் பொறுப்பு ஒருவன் தானே) இவன் பெண்ஜாதி பிள்ளைகளை எப்படி காப்பாற்றப் போகிறான்? (**அடுத்த வினாடி** தன் தூலத்திற்கு என்ன வரும் எனத் தெரியாத இந்த மனிதன் தன் மனைவி, மக்களை எப்படி காப்பாற்ற முடியும்? எப்படி பொறுப்பாக முடியும்?? என்ன மதியீனம்??)

“அனைத்தும் நீயே! என அவன் பொறுப்பில் விட்டுவிட்டு நீ மனதை அலட்டிக்காமல் சும்மா இருக்கப் பழகு. உன் மனம் பல கேள்விகளை கேட்டு குழப்பம் அடையாமல் பார்த்துக்கொள்! நீ கட்டுப்படுத்தினாலும் **உன் தூலம் இயங்கும், அது பிராப்தம்**. அதில் இன்பமோ துன்பமோ, நஷ்டமோ லாபமோ **அதை இறைவா உன் கருணை!** என அமைதியாக ஏற்றுக்கொள் நலம் பெறுவாய்”. (ஒரு சிறுதுரும்பு அசைவதானாலும் **“அவனன்றி அசையாது”)**

பலப்பல விதமான கேலி கிண்டலாக மானஈனமான கேள்விகள் கேட்டனர். இது சிரித்துக் கொண்டே இருந்தது. ''பதில் பேசினால்தானே மேலும் வாக்கு வளரும்'', அவர்களுக்கும் பேச சக்தி இல்லையோ அல்லது யாம் மௌனமாக இருந்து அவர்கள் சக்தியை எல்லாம் ஜீரணித்து விட்டோமோ **அதை அது அறியும்**. ஒருவர் சொன்னார், ஏன் சாமி! அவன் பணத்தை கொண்டு சென்றான், நாங்கள் துரத்தி சென்று அந்த பணத்தை வாங்கி வந்தோம். அந்த பையில் பணம் சரியாக இருக்கிறதா என எண்ணிப்பார்க்க வேண்டாமா?

இந்த பைத்தியம் சொன்னது:

**"அவன் நல்லவனே".**

பசி, வறுமையின் காரணமாக பணம் எடுத்தான். நீங்கள் **"அனைவரும் நல்லவர்களே".** ஸ்வாமி பணமாச்சே என சிரத்தையுடன் கொணர்ந்து சேர்த்தீர்கள். பணம் எடுத்த அவனும், அதை கொணர்ந்த நீங்களும் **"நல்லவர்களாக இருக்கும்போது"** யாம் எண்ணி சரிபார்த்தால் **உங்களை நம்பாத குற்றவாளி** ஆகிவிடுவோம்!

**"நம்பிக்கையே தெய்வபலம்"** அனைத்தும் நலமாகவே நடைபெறுகிறது. **நம் மன சபலம்தான் குற்றம் குறை கண்டுகொண்டே சஞ்சலம் அடைகிறது.** இந்த மனதை சற்று நிறுத்திப்பாருங்கள்! நிதானித்துப் பாருங்கள்!! அதிக பொறுமையாக இருந்து பாருங்கள்!!! **"உண்மை அவஸ்யம் புலனாகும்".**

ஒவ்வொரு வினாடியும் அவனுடைய கண்காணிப்பில்தான் அனைத்தும் நடைபெறுகிறது. ஆனால் இந்த **பாழான மனம் பழக்க தோஷத்தினால்** நிலைபெற்று நிற்பதில்லை. அதற்கும் அவன் கருணை வேண்டும்!

**"பிராப்தாதீனத்தை தெய்வாதீனத்தால் வெல்லலாம்"**
**இது உறுதி!**

பிராப்தம் நம் தலைவிதியாக அமைந்தால் தெய்வாதீனம் என்பது

**"எல்லாம் அவனே!**
**ஆவதும் அவனே!**
**அசைவதும் அவனே!**
**அழிப்பதும் அவனே!"**

என அளவற்ற பொறுமையுடன் விட்டுப் பழகுங்கள்.

**பிராப்தத்தை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ முடியவே முடியாது!**
ஆனால்

''அதன் சுவை அனுபவத்தின் **பளு** உங்கள் தெய்வாதீனத்தால் **குறைக்கப்படும்**''.
இது எம் அனுபவ நிலையாகும்.


திருவடி சரணம்! குருவடி சரணம்!!

# உ. கண்டிப்பதோ! தண்டிப்பதோ!

ஒருசமயம் மதுரை மாநகரில் அண்ணா பஸ்நிலையத்திலிருந்து பெரியார் பஸ்நிலையத்திற்கு செல்ல டவுண் பஸ்ஸில் ஏறினோம். பஸ் பிரயாணம் செய்யும் சமயம் ஒரு ஜோல்னா பையை தோளில் மாட்டிக் கொள்வோம். அதனுள் ஒரு கட்டும் துண்டு, துடைக்கும் துண்டு, கௌபீனம், உபநிஷத் புத்தகம், ஒரு காசுப்பை (அதில் சில்லரைக்காசுகளை கொஞ்சம் அதிகமாக ரூபாய் இருபதுக்கு குறையாமல்) ஆகியவைகளை வைத்திருக்கும். ஆகையால் பை கொஞ்சம் பளுவாக தோற்றும். கண்டக்டர் அறுபது பைசா கேட்டார். அதுவும் அந்த காசுப்பையில் இருந்து அறுபது பைசாவை பொறுக்கி கொடுத்து சீட்டும் வாங்கி அந்த பையினுள் போட்டு காசுப்பையை ஜோல்னாப் பையில் போட்டுக் கொண்டது. வறுமையினாலும், பசியினாலும் **தம் பாதை தவறியதையும்** தெரியாமல் பிக்பாக்கெட்டை ஒரு கலையாக கருதும் ஜீவர்கள் அனேகர் இருக்கின்றனர். அதில் ஒருவன் அந்த பஸ்ஸில் இருந்தான் போலும். பல பைகளை பார்த்த அவனுக்கு இதனுடைய ஜோல்னாப்பையில் சிறு காசுப்பை கண்ணை உறுத்தியது.

மெதுவாக நகர்ந்து கொண்டே வந்து இந்த பைத்தியத்தின் பக்கத்தில் ஒட்டிக் கொண்டான். **அவன் அவன் கலையில் வல்லவன்**. யாம் சகலகலா வல்லவன் என்பதை எப்படி அறிவான்?? மெதுவாக ஜோல்னா பையில் கையை விட்டான்; இது நோக்காமல் நோக்கியது! காசுப்பையை அதிஜாக்ரதையாக தூக்கினான். **யாம் ஒன்றும் செய்யவில்லை.** "இந்த ஜோல்னா பையை கழற்றி அவன் தோளில் மாட்டி வைத்துவிட்டது". எல்லாம் உன்னுடைமை தானே! ஏன் சிரமப்பட்டு அந்த ஒன்றை மட்டும் எடுக்கிறாய்? நீ நலம் பெறுவாயாக! அந்த காசுப்பையில் பணம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கிறது. **"நீ நன்னாயிரு"** என வாழ்த்தியது.

ஆனால் இந்த சம்பவம் வண்டியில் எவருக்குமே தெரியாவண்ணம் மறைத்துவிட்(டோம்)டான்!!! அதற்குள் பெரியார் பஸ் நிலையம் வந்துவிட்டது. அனைவரும் இறங்கினர். அவன் அதன் கைகளில் பையையும் **தன் கைகளையும்** ஒப்புவித்தான். கீழ் இறங்கியவுடன் தண்டன் சமர்ப்பித்தான்.



அவன் சொன்னான்:

நான் தெய்வத்தை பார்த்தது இல்லை! இன்று நேராக கண்டுகொண்டேன். "கருணை என்றால் தெய்வம்; தெய்வம் என்றால் கருணை" **கண்டிப்பதோ, தண்டிப்பதோ** தெய்வத்திடம் கிடையாது! இதை பெரியோர் வாயிலாக கேட்டு இருக்கிறேன்! இன்று நேருக்கு நேராக காண்கிறேன்! இது நான் பெற்ற பெரும் பாக்கியம். இனி இத்தொழிலுக்கு ஒரு முழுக்கு போட்டுவிடுகிறேன்! **"இனி இவ்விதம் செய்யமாட்டாய்"** என ஒரு வாக்கு தங்கள்

திருவாக்கால் சொல்லிவிடுங்கள். நானும், என் குடும்பமும் நல்லா இருப்போமென பாதத்தைப் பிடித்து மன்றாடினான். **“அவனுக்கு அவன் ஆசி கூறினான்”**.

குழந்தைகளே!

**அதிகாரத்தாலும், ஆணவத்தினாலும், பதவிவெறியினாலும், பணச்செருக்கினாலும் இந்த உலகையும், உலக ஜீவர்களையும் திருத்த முயற்சிக்க வேண்டாம். நீங்கள்**

**அடங்கி இருங்கள்!**

**பணிவு கொள்ளுங்கள்!**

**இதமாக, இனிமையாக பேசுங்கள்!**

**உங்கள் மனமும் சாந்தியுறும்,**

**உங்களை அண்டிய ஜீவர்களும் பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறுவது போன்று அமைதியும், சாந்தியும் பெறுவார்கள்!**

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 3. வாய்யா நாமதாரி!

ஒருமுறை தற்காலிக அண்ணா கூடுதல் வட்டிக்கு ஒரு நபர் வசம் பல ஆயிரம் ரூபாய்கள் கடன் வாங்கியிருந்தார். தொகை அதிகமானதால் அந்த நபர் **நான்கு வெள்ளை பேப்பர்களில்** ஸ்டாம்புகள் ஒட்டி அண்ணாவிடம் கையெழுத்து வாங்கியிருந்தார். எம்மையும் கையெழுத்து போட்டு வரச்சொன்னார். இதுவும் கையெழுத்திடச் சென்றது. வெள்ளைத் தாள்களைக் கண்டதும், இவைகளில் தொகையோ, விளக்கமோ குறிப்பிடவில்லையே என்றோம். அதற்கு அந்த நபர், இவைகளில் உன் சொத்தெல்லாம் எழுதியா வாங்கிவிடப் போகிறேன்? உன் அண்ணாவே கையெழுத்து போட்டுவிட்டார், நீ போடுவதற்கென்ன? என்றார்.

இது சொன்னதாவது:

யாருக்கையா சொத்து, ஆஸ்தி என இருக்கிறது? **எல்லாம் அவனுடையதுதானே!** ஏதோ என் சொத்து, என் ஆஸ்தி என்று வாயளவில் பேசிக் கொள்கிறோம் என கடகடவென சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு கையெழுத்திட்டுவிட்டு வந்துவிட்டோம்.

அண்ணாவுக்கு இரண்டு வருஷம் வரை வட்டிதான் கொடுக்க முடிந்ததே தவிர அசலை கொடுக்க முடியவில்லை. மேலும் இரண்டரை வருஷம் ஆச்சுது. அசலைவிட வட்டி இரண்டு பங்கு கொடுத்துவிட்டார் அண்ணா. இவருக்கும் அந்த நபருக்கும் ஏதோ வாய்பேச்சில் **உறவு முறிக்கப்பட்டது.** அந்த நபர் ஆத்திரத்தில் ஒரு பத்து தினங்கள் அவகாசம் கொடுத்து இந்த பத்து தினத்தில் என் பணம் முழுவதும் கொடுக்கவில்லையானால் உன் சொத்து முழுவதும் அந்த பேப்பர்களில் எழுதி கோர்ட்டில் தாக்கல் செய்துவிடுவேன் என காரசாரமாக பேசிவிட்டார்.

அண்ணா அதிர்ந்துவிட்டார். முழுதொகையும் அவரால் கொடுக்க முடியாது. தம் நிலத்தின்

ஒரு பகுதியை ஈனக்கிரயத்திற்கு விற்றார். ஒன்பது நாட்களில் அந்த தொகை முழுவதும் கொண்டு கொடுத்துவிட்டார். அந்த பேப்பர்களை கேட்டார் அண்ணா. அந்த நபர் பேப்பர்களை ஏதோ **கபடமான** எண்ணத்தை வைத்துக்கொண்டு கொடுக்க மறுத்தார். அப்போதும் இருவருக்கும் வார்த்தை முற்றியது. அண்ணா அழுதுகொண்டே வீட்டிற்கு வந்தார். அவர் முகத்தைப் பார்த்து காரணம் கேட்டோம். விஷயத்தை சொன்னார் அண்ணா!

**அண்ணா:** தம்பி! அவன் ரொம்பரொம்ப கெட்டவன். பழிபாவத்திற்கு அஞ்சாதவன். அவனிடம் அடியாட்கள் நிறைய இருக்கிறார்கள். அவன் தலை அசைத்தால் போதும் அவன் ஆட்கள் தலையை எடுத்துவிடுவார்கள். இந்த ஊரிலே அவன் ஒருவன்தான் அதிக கடுமை(கொடுமை)யானவன். உன்னையோ, என்னையோ, நம் குடும்பம், குழந்தைகளையோ என்னமும் செய்யத்துணிவானே! அவனிடம் போய் வசமாக மாட்டிக்கொண்டேனே! **பணம் வேண்டும்** என்ற ஓர் **இக்கட்டான ஆசையால்** அவனிடம் சென்றேன். பணம் கொடுக்கும்போது உன்னையும், என்னையும், நம் அப்பாவையும் அப்படிப் புகழ்ந்தானே! இன்று அவன் பேச்சு அசுரத்தனமாக இருக்கிறது. இப்படி நடக்கும் என நான் எதிர்பார்க்கவில்லையே! இனி நாம் அனைவரும் என்ன செய்வோம்? (என குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தார்)

**வைத்தியம்:** எதையும் அவன் நாமாவை சொல்லி தீர்க்கமாக ஒரு முடிவெடுக்க வேண்டும். **அவசரமும், அதிவேகமும்** அழிவை உண்டுபண்ணும். சரி, இந்த காரியம் நீங்கள் செய்யவில்லை. “எய்தவன் இருக்க அம்பை நோவானேன்” என்றபடி உங்களை உள்நின்று இயக்கியவன் அவன் ஒருவன்தானே. நீங்கள் என்ன செய்ய முடியும்? உங்களை குற்றம் சொல்வதில் அர்த்தமே இல்லை. உங்களை தம் கருவியாக பயன்படுத்தி அவன் இயக்கினான். இதன் முடிவு எவர் கையிலும் இல்லை. அடுத்து திருவுள்ளம் எதுவோ அது தாமே நடக்கும். உங்கள் கவலையையும், பயத்தையும் விடுங்கள். இந்த செயலில் இதுவும் பங்கேற்றிருக்கிறது, கையெழுத்து போட்டிருக்கிறதே!



அன்று எம் கண்ணன் தூது சென்றான். ஸத்யத்தையும், தர்மத்தையும், நீதிமுறைகளையும் எடுத்தோதினான். துரியோதனன் கேட்கவில்லை. காரணம், “கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே” என்றபடி எது நடக்குமோ அதை தலை வணங்கி ஏற்போம் எனச் சொல்லி அந்த நபரின் இல்லத்திற்கு சென்றது. அந்த நபர் வெளிவராண்டாவில் ஒரு சேரில் சாய்ந்து அமர்ந்திருந்தார். யாம் பக்கத்தில் சென்றபோது அவர் வார்த்தையே ஏளனமாக இருந்தது.

**அவர்:** வாய்யா நாமதாரி! உன் அண்ணன் தன் தம்பியை தூதாக அனுப்பினானா? **நான் யார்** என்று அவனுக்கு தெரியாது போலும்? இனி தெரிந்து கொள்வான்!!

**அது:** அந்த நான் யார்? என்றுதான் எல்லோரும் தெரியாமல் இப்படி அவஸ்தைப்படுகிறார்கள். நீங்கள் அதை தெரிந்திருந்தால் ஆனந்தப்படும் முதல் ஜீவாத்மா இதுதான்!

**அவர்:** கிண்டலா பேசுகிறாய்! என் குணம் தெரியாமல் ஆடாதே. இன்னும் நான்கு தினத்தில் பார்!

**அது:** நீங்களும், இந்த வைத்தியமும், உலக மக்களும் எப்படி ஆடமுடியும்? அவன் ஆட்டுகிறான் நாம் அனைவரும் ஆடுகின்றோம்.

**அவர்:** இந்த வேதாந்தம் எல்லாம் என்னிடம் வேண்டாம். நீ ஒரு பக்தன்போல் பகல் வேஷம் போட்டால் நான் அதில் பயந்துவிடுவேன் என்று எண்ணுகிறாயா?

**அது:** ஐயா! யார் யாரிடம் பயம் கொள்வது? ஒருவர் ஒருவரை ஏதும் செய்ய முடியும் என்றால் இறைவன் ஏது? சரி, இந்த கதை எல்லாம் எதற்கு? அண்ணா பணம் கொடுத்துவிட்டார். நீங்கள் அந்த பேப்பர்களை கொடுக்க வேண்டும். இதை ஏன் மறுக்கிறீர்கள்?

**அவர்:** உன் அண்ணன் பணம் கொடுத்தான் என்பதற்கு என்ன சாட்சி வைத்திருக்கிறாய்?

**அது:** ஓ..! நீங்கள் அப்படி வருகிறீர்களா? உங்களுக்கும், அவருக்கும், நம் அனைவருக்கும் “அவன் ஒருவனே சாட்சி”.

**அவர்:** ஓ.. தம்பி! உன்னைப் போலல்ல. இதைவிட மஹத்தான சாமியாரை எல்லாம் நிறைய பார்த்திருக்கிறேன். நீ பட்டையா நாமம் போட்டுக்கொண்டு வந்து மிரட்டினால் நான் பயந்துவிடுவேன் என நினைக்கிறாயா? நீயும், உன் அப்பனும் ஊரை ஏமாற்றுகிறீர்கள். இது எனக்குத் தெரியாதா?

**அது:** நாம் இருவரும் பேசும்போது **அவரை** ஏன் இங்கு இழுக்கிறாய்? சரி பேப்பர்களை தருகிறாயா, இல்லையா? (இங்கு சற்று சினம்)

**அவர்:** முடியாது போடா!! உன் அப்பனை வேண்டுமானாலும் வரச்சொல். வேஷதாரி கும்பல்கள்....!

**அது:** பரவாயில்லையே! இப்போது நன்றாகப் பேசுகிறாய்! “அந்த பேப்பர்களை வைத்துக்கொண்டு நன்றாக அழு” (ஏனோ இந்த வார்த்தை வந்தது). நீ நன்னா இரு ஐயா! (எனக்கூறிவிட்டு வந்து விட்டோம்!)

இந்த சம்பவம் நடந்த மறுநாள் காலை பத்து மணி இருக்கும். அந்த நபரும், அவர் பையனும் அந்த பேப்பரை எடுத்துக்கொண்டு ஓடோடி வந்தனர். அப்போது ஸ்ரீகுருதேவர் ஸ்ரீபக்த விஜயத்திலுள்ள ஒரு கதையில் இருந்து ஸ்ரீபாண்டுரங்க லீலா வைபவத்தை பற்றி கூறிக் கொண்டிருந்தார். அண்ணா, இது மற்றும் சிலர் அமர்ந்த நிலையில் கேட்டுக் கொண்டிருந்தோம். அந்த தகப்பனும், மகனும் ஸ்ரீகுருதேவர் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து திருவடியை பற்றிய வண்ணம்,

**அவர்:** ஐயா! ஸ்வாமிகளே! தங்கள் பெருமை தெரியாத நான் என் பணச்செருக்கினாலும், அதிகார பலத்தினாலும் நேற்று உங்கள் குழந்தைகள் இருவரிடமும் **அதிக தரக்குறைவாக**

நடந்துகொண்டேன். என்னை மன்னித்தேன் என ஒரு வார்த்தை சொல்லுங்கள். அப்போதுதான் நானும், என் குழந்தைகளும் சுகமாக இருப்போம். நீங்கள் சொன்னால்தான் உங்கள் பாதங்களை விடுவோம்!(என பாதம் பற்றியபடியே கேட்டார்!)

**ஸ்ரீகுருதேவர்:** தம்பி! என் குழந்தைகள் இருவர் என நீ எப்படி கண்டாய்? நீயும், உன் குடும்பமும் எம் குழந்தைகள் இல்லையா? ஏன் இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவர்களும் எம் குழந்தைகளே! நாம் அனைவரும் அவன் குழந்தையப்பா!! பிரித்துப் பார்க்காதே! பேதப்படுத்தி பார்ப்பதனால்தானே நீ வேறு நான் வேறு; இவன் பணக்காரன் இவன் ஏழை; இவன் படித்தவன் இவன் படியாதவன் என தவறான கணக்குப் பார்த்து அவனை மறந்துவிடுகிறோம்! எந்த வினாடி தன் தவறை தவறு என எவன் உணர்கிறானோ அவன் அந்த வினாடியே **புனிதனாகிறான்.** திரும்பவும் **அந்த தவறு** வராமல் சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும், அவ்வளவுதான்.

**அவர்:** என் மூர்க்கத்தனம், ஏழைகளை மதியாமை, பணச்செருக்கினால் பிறர் பணத்தையும், சொத்துபத்திரங்களையும் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறேன். என் கண்களை திறந்தவர் தங்கள் இளையகுமாரராவார். அந்த தம்பியையும் என்னை மன்னிக்கச் சொல்லுங்கள்.

**பைத்தியம்:** ஐயா! தாங்கள் எந்த தவறும் செய்யவில்லையே! மன்னிப்பு எதற்கு? தாங்கள் மூலமாகவும், எம் மூலமாகவும், எம் அண்ணா மூலமாகவும் ஏதோ ஓர் நாடகம் நடந்தது. அது அவன் லீலாவினோதமே!

"குற்றம் ஒன்றும் பாராட்டி திரிய வேண்டாம்.
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்"

என எம் ஔவையும்,

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே
நீங்கள் எல்லோரும் எம்மிடத்தில் வாருங்கள்.
யாம் உங்களுக்கு இளைப்பாறுதல் தருகிறோம்"

என்று எம் பிதாவும் சொன்னார்கள்! இறைவனிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். திரும்ப அந்த தவறோ, தப்போ நடவாமல் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

அது நம்மால் முடியுமா என்றால் அவஸ்யம் முடியாது. எந்த வினாடியும் **பரிபூரண சரணாகதி நிலையில்** மனதை இயக்கப் பழகிவிட்டால் தப்பும், தவறும் செய்யும் **பழக்கதோஷம்** தானாக விலகிவிடும்! இப்போது ஏதோ தவறு செய்துவிட்ட நிலையில் ஸ்ரீகுருதேவரிடம் மன்னிப்பு கேட்டீர்களே அதன் காரணம் என்ன? ஏதாவது நடந்ததா?


**அவர்:** ஐயா! சின்னய்யா! (அனைவரும் இதை சின்னய்யா என்று கூப்பிடுவதால் இவரும் அப்படியே கூப்பிட்டார் போலும்?) நீங்கள் நேற்று வந்து சென்ற பிறகு என் பையனை கூப்பிட்டு, அடே! அந்த ஆத்தியப்பன், கருப்பசாமி (இது குல தெய்வ பெயர்) இருவரிடமும் வாங்கிய வெள்ளை பேப்பர்களை எடுத்துவா, அவைகளில் **எழுதுவதை எழுதி** நிரப்பிவிடுவோம் என்றேன். அவனும் எடுத்து வந்தான்.

அந்த நான்கு பேப்பர்களிலும் ஸ்டாம்புகள் இருந்ததே தவிர உங்கள் **இருவர் கையெழுத்தும் இல்லை.** அதை அழித்ததாகவும் தெரியவில்லை. இது என் மனதிற்கு பெரிய அடி!

அடுத்ததாக உங்கள் அண்ணா வட்டியாக கொடுத்த தொகை எவ்வளவோ அந்த தொகைக்குரிய இரண்டு வீட்டு பத்திரங்களையும் காணோம்! இது இரண்டாவது அடி!! இனி நான் கூடுமானவரை ஒழுங்காக நடந்து கொள்கிறேன் என புலம்பிப் போய்விட்டார்!

**எல்லாம் நீ!**





# திருடனின் அறிமுகம்!

யாத்திரை போய் வந்த பிறகு சில வருஷங்கள் பல இடங்களிலும் பஜனை, சத்சங்கம், உபந்யாசம் இவைகளை கேட்கப் போவதுண்டு. அப்படி கேட்டு வந்ததன் விளக்கத்தை ஸ்ரீகுருதேவரிடம் சொல்லியும், கேட்டும் தெளிவு பெறும்.

இப்படி சிலகாலம் சென்ற பிறகு ஒரு நாள் இரவு பதினோரு மணிக்குமேல் ஒரு முக்கியமான விளக்கம்பற்றி ஸ்ரீகுருதேவரும், அந்த பைத்தியமும் பேசிக்கொண்டிருந்தோம். அதில் ஒரு விளக்கத்தை ஸ்ரீகுருதேவரிடம் கேட்க அவர் மௌனம் சாதித்தார். அதுவும் சற்றுநேரம் மௌனமாக இருந்து திரும்பவும் கேட்டது. அதற்கு ஸ்ரீகுருதேவர் வார்த்தை திசை திருப்பி வேறு கருத்தை போதித்தார். முன்பு கேட்ட விளக்கத்திற்கு விளக்கம் அவர் தரவில்லை. அவர் அந்த பைத்தியத்தை நோக்கி, நீதான் சொல்லவேண்டும் என்றார்கள். இல்லை இதை தாங்கள் வாயிலாகத் தான் கேட்க வேண்டும் என அந்த பைத்தியம் கேட்க, அவர் ஓர் புன்முறுவலுடன் சரி, அவன் உள்ளே இருக்கிறான். அவனிடம் கேட்டுவிட்டு வா! இந்த விளக்கம் யார் தரவேண்டும் என்று அப்புறம் புரியும் என்றார்கள்! அந்த பைத்தியத்திற்கு ஒன்றும் புரியவில்லை. அர்த்தம் விளங்காமல் அமர்ந்து ஸ்ரீதிருவடி சேவை செய்த நிலையிலேயே அமர்ந்திருந்தது!

ஸ்ரீகுருதேவரும் மேலும் சிரித்தவண்ணம், ஏன் திருவடி! இவர் சொல்வது புரியவில்லை? (கோயிலை சுட்டிக் காட்டியவண்ணம்) உள்ளே இருக்கிறான், போய் தரிசித்து, அவனிடம் விளக்கம் கேட்டுவா என அதட்டலாக சொன்னார்கள்! அது எழுந்து கோயிலுக்குச் சென்றது. சாத்தியிருந்த இரு கதவுகளையும் இரு கரத்தாலும் விலக்கியது.(அதை அவரே அறிவார்! அவரே காண்பித்தார்! அவரே அங்கும் அமர்ந்திருக்கிறார் போலும்?)

எம் திருடன், எம் மாயவன் கரும்கூந்தலில் சாய்ந்த கொண்டை! அதில் ஒரு மயில்பீலி! அத்துடன் ஒரு குஞ்சம்! அத்துடன் முப்பிரியாக தொங்கும் முத்துச்சரம்! நெற்றியில் சிறிய அளவில் ஸ்ரீசூரண கோபி! செவ்விதழில் தவழும் மோகனப்புன்னகை! வினைகளை காந்தமென ஈர்க்கும் கண்கள்! கழுத்தில் ஒரு ரத்னஹாரம்! அதன்மேல் கௌஸ்துபமாலை! இடுப்பில் ஒரு மஞ்சள் பட்டு! தோள்களிலிருந்து கால் வரை பின்னிக் கிடக்கும் நீலபீதாம்பரம்! இரு கைகளிலும் அபிநயிக்கும் ஓர் குழல்!



வலக்கரத்தில் **ஸ்ரீஅடியார்களை காப்பேன்** என்று தரித்திருக்கும் கங்கணம் (காப்பு), இடுப்பில் கிங்கிணி ஓசை எழுப்பும் மின்னலை பழிக்கும் ஒரு மணியால் ஆன கொடி! அதில் அரைஞாணும், அரைமுடியும் (யாம் ஆணும் அல்ல, பெண்ணும் அல்ல என இணைத்துக் காட்டும்) இணைந்து தொங்கும் மறைப்பிடம்! திருவடிகளில் 'கலீர்.. கலீர்..' என ஒலிக்கும் நவமணி சலங்கை! இரு திருவடித்தாமரைகளிலும் சங்கு சக்கர ரேகை (அது ரேகையல்ல அம்சம்) அவனை வர்ணித்தால் ஏடும், காலமும் போதாது! ஏதோ அழகாக இருந்தான்! காலம் கடந்தவனுக்கு யாம் **கண்டுணர்ந்த நிலையில்** ஓர் நிர்ணயம், அவன் **ஐந்து வயது சிறுவன்**.


இடது திருவடியை தொங்கவிட்டு, வலது திருவடியை இடது தொடையில் தாங்கிய வண்ணம் வலது திருவடியை அசைத்து இதை **பார்த்துக்கொள்,** பற்றுவதற்கு உனக்கு அங்கே இருக்கிறது என சமிக்ஞையால் **ஸ்ரீகுரு திருவடியை** சுட்டிக்காட்டிய வண்ணம் அமர்ந்திருந்தான்! அவனைக் கண்ட அடுத்த வினாடி அங்கு நிற்கவில்லை. ஸ்ரீகுருதேவர் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி சரேலென ஓடி அந்த ஸ்ரீதிவ்ய ஸ்வரூப திருவடியை கெட்டியாக பற்றிய வண்ணம் கதறி அழுதது.


இங்கும் அங்கும் எங்கும் நீயே! இத்திருவடியல்லால் வேறு கதி இல்லை என கதற, அந்த ஸ்ரீபரவஸ்து அதை தூக்கி மார்போடு அணைத்து,

**நீ வந்த காரியம் ஆரம்பம் ஆகியது!**
**இனி அந்த நலமே சுகத்தைத் தரும்!**

அமைதியும், சாந்தியும் பெறுவாயாக! என ஆசி கூறி மௌனத்தில் ஆழ்த்தியது!

**எல்லாம் நீ!**





# யாத்திரையில் கண்ட பாதாள கங்கையும், இரு சமாதிகளும்!

ஓ.. ஆன்ம ஸ்வரூபங்களே!

ஓர்நாள் ஸ்ரீகண்ணன் மணல்வீடு கட்டி விளையாடிக் கொண்டிருந்தான். உடன் ததிபாண்டன் என்ற நண்பனும் சேர்ந்து விளையாடினான். ஸ்ரீகண்ணன் கணவனாகவும், ததிபாண்டன் மனைவியாகவும் நடித்தார்கள். விளையாட்டில் மணலே சாதமாகவும், இலைகள் காய்கறிகளாகவும் கற்பிக்கப்பட்டன. ஓர் தட்டில் சாதம் போட்டு அதாவது இலை போல் மணலில் படம் வரைந்து, அதில் மணல் சாதத்தை பரிமாறி இலை கலந்த ஜலத்தை சாம்பாராகவும், காய்கறிகளாகவும் மேலே ஊற்றி அந்த ததிபாண்டன் என்ற பெண் தன் ஆத்துக்காரனாகிய ஸ்ரீகண்ணனைப் பார்த்து, அத்தான்! சாதம் ஆறிக்கொண்டு இருக்கிறது, சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு மாடுகளை காட்டுக்கு அவிழ்த்துவிடுங்கள் என்றாள். ஸ்ரீகண்ணனும், பெண்ணே ஜலம் கொண்டு வா! கைகால் அலம்பிவிட்டு வருகிறேன் என்றான். அவளும் ஓர் கிண்ணத்தில் ஜலம் கொடுக்க கைகால்களை சுத்தி செய்யும் பாவனையில் ஓர் செடி மறைவில் சென்றான் ஸ்ரீகண்ணன்.

ஸ்ரீதிருவடியை சுத்தி செய்ய அந்த ஜலம் பத்தாது போய்விட்டது. இந்நிலையைக் கண்டாள் ஸ்ரீபாதாள கங்கை. உடனே அதே இடத்தில் தாம் உற்பத்தி ஆனாள். ஸ்ரீகண்ணனின் ஸ்ரீபாத கமலங்களை சுத்திகரித்து தம் பாதக மலங்களை போக்கிக் கொண்டாள். இதைக் கண்ட ஸ்ரீகண்ணன், ஓ.. கங்கா! இங்கு ஏன் வந்தாய்? உன்னை யார் அழைத்தது? என்றான்.

அதற்கு பாதாளகங்கை, ஓ.. பரமாத்மா! முன்பு திரிவிக்ரமனாக நீர் அவதரித்தபோது ஆகாயகங்கை உமது ஸ்ரீதிருவடியை சுத்திகரித்தாள். சமீபத்தில் பூலோக கங்கையாகிய யமுனாதேவி உம் ஸ்ரீதிருவடியை முத்தமிட்டாள். இன்று அடியாளும் உம் ஸ்ரீதிருவடியை ஸ்பரிசித்து ஜன்ம சாபல்யம் அடைகிறேன். பலகாலம் நான் செய்த தவம் இன்று நிறைவேறியது. மேலும் ஆண்கள் திருவடியை அலம்பும்போது அரைகுறையாக அலம்பக்கூடாது. அடுத்து நீர் நடத்தப் போகும் திருக்காட்சியோ தேவர் மூவராலும் உணரமுடியாது. அதை எனக்கு உணர்த்தி என்னை இந்த இடத்திலேயே பிரவர்த்திக்க அனுக்ரஹிக்க வேண்டுமென பிரார்த்தித்தாள். ஸ்ரீபரந்தாமனும் உன் வரவு ரகசியமாக இருக்கட்டுமென ஆசி கூறிச் சென்றான்.

ஸ்ரீகண்ணனும் ஆசனத்தில் அமர்ந்து, பெண்பாவாய்! சாப்பிடுவதற்கு ஜலம் கொண்டுவா என்றான். மனைவியாகிய ததிபாண்டனும், இன்னும் ஜலத்திற்கு எங்கே போவேன்? வீட்டில் சென்று

ஜலம் கேட்டால் அம்மா கோபிப்பார்கள் என்றான். ஸ்ரீகண்ணனும், அந்த செடி மறைவில் ஜலம் ஊற்றெடுத்து ஓடுகிறது. அதில் கொஞ்சம் எடுத்து வா என்றான். உடனே மனைவியும் அவ்வாறே எடுத்து வந்தாள். அந்தப் பிரவாகம் எப்படி வந்தது என அறிய வொட்டாமல் தம் மாயையால் மறைத்தான்.

எம் ஞானத்தில் விளைந்த முத்துக்களே!

மதுராவில் ஓர் ஏழைக் குடும்பம் வசித்து வந்தது. அது தாழ்த்தப்பட்ட ஜாதி. தம்பதிகள் இருவருக்கும் திருமணமாகி அனேக காலமாக குழந்தை இல்லாமல் இருந்தது. சதிபதிகளுக்கு வயதும் ஆகிவிட்டது.

ஸ்ரீராம அவதார காலத்தில் வாலியின் மனைவி தாரை எனப்பட்டவள் உத்தம பத்தினி. அவள் வாலிக்கு அனேக தடவைகள் புத்திமதி சொல்லியவள். ஸ்ரீராமன் கணையால் தம் கணவன் மாண்டான் எனக்கேட்டதும் அழுது புலம்பினாள். இறந்த கணவனுக்காக ஸ்ரீராமனிடம் மன்னிப்பு கேட்டாள். ஸ்ரீராகவனும் சில நீதிகளை சொன்னான். அதாவது **ஒருவன் அதிக வரங்கள் இறைவனிடம் பெற்றாலே அது அழிவுக்கு அறிகுறிதான் என்றும், சகோதரர்களிடம் எக்காரணம் கொண்டும் பகைமை இருக்கக்கூடாது என்றும், தன் மனையாளைத் தவிர பிறமனையாளையும், பெண்களையும் தாயாகத்தான் கருதவேண்டுமென்றும், ஆணவம் அழிவைத் தரும்** என்றும் சில தர்மங்களை அப்போது எடுத்துரைத்தான்.

அப்போது தாரை எனப்பட்டவள் மானசீகமாக ஸ்ரீராமனை விரும்பி, ஹே.. ஏழை பங்காளா! உமது பிரதிக்ஞைபடி நகருக்கு நீர் வராவிட்டாலும் என்றாவது ஓர் நாள் உமது நகருக்குள் என்னை அழைத்து ஏற்றுக் கொள்ளவேண்டும் என வேண்டினாள். ஹே.. ஜானகிராமா! அந்த நிலை எனக்கு எப்பொழுது கிட்டும்? என கண்ணீர் உகுத்தாள்.

அவளது உள்ளக்குறிப்பை நம் ஸ்ரீகோதண்டராமன் உணர்ந்து, பெண் பாவாய்! இந்த ராஜாராமன் ஏக பத்தினி விரதன். இதில் எம் ஜானகியைத் தவிர வேறு எவருக்கும் இடம் கிடையாது. உன்னைப் போலவே அனேக மகரிஷிகளும் வேண்டியுள்ளார்கள். அவர்கள் கோரிக்கையையும் நிறைவேற்ற வேண்டும். எமது அடுத்த அவதாரமான ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் உன் கோரிக்கை பூர்த்தி ஆகும் என சாதித்தருளினார். அந்த தாரையே இந்த தம்பதிகளுக்கு ஸ்ரீகண்ணன் பிறந்த அஷ்டமி தினத்தன்று பிறந்தாள். இந்த குழந்தை பிறந்த நேரம், அந்த தம்பதிகளை அதிகமாக சோதித்து வறுமையையும், கஷ்டத்தையும் உண்டு பண்ணியது. அதை இந்த தம்பதிகளால் தாளமுடியவில்லை. அந்த நிலையில் இந்த குழந்தைக்கும் ஸ்ரீகண்ணனுக்குரிய வயது ஆகியது போலும்.

ஸ்ரீகண்ணன் கோகுலத்தில் வளர்ந்து வருவதை இந்த தம்பதிகளும் அறிவர். ஆனால் ஏனோ போக முடியவில்லை. திருவருள் கூட்டி வைத்தால்தானே முடியும். இறை சம்மதமும் இசைந்து வர தம்பதிகள் அந்த குழந்தையுடன் மதுராவில் இருந்து கோகுலத்திற்கு புறப்பட்டனர். இந்த சிறு பெண்குழந்தையும் சதா தன் தாயின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தது. அது தாயை விட்டு பிரிந்ததே கிடையாது. ஓர் வழியாக கோகுலம் வந்தார்கள். அப்பொழுது ஸ்ரீகண்ணனுக்கு வயது மூன்று. கோகுலத்தில் அந்த தம்பதிகளுக்கு எவரும் உறவோ, பந்தமோ கிடையாது.

இதை எம் பிரபு அறிந்தான். யமுனை நதிக் கரையில் ஓடத்தில் வந்து இறங்கும் அத்தம்பதியரை முகமன் கூறி வரவேற்றான். அந்த நதிக் கரையிலேயே ஓர் பர்ணசாலையை நிர்மாணித்தான். அது பழங்காலத்தியது என அதில் அவர்களை குடியேற வைத்தான். ஒரு மாத பரியந்தம் அந்த குடும்பத்திற்கு வேண்டுவனவெல்லாம் கொடுத்து போஷித்தான். அந்த தம்பதியர் இருவருக்கும் தம் மஹத்துவத்தை மறைத்து வைத்தான்.

அந்த குழந்தையின் தந்தை சொன்னதாவது:

ஸ்ரீகண்ணா! இந்த குழந்தை அஷ்டமியில் பிறந்ததனால் அதிக சிரமத்தை அனுபவித்து விட்டேன். இது இங்கேயே இருக்கட்டும் எனச் சொல்லி தம் மனைவியையும் சமாதானப்படுத்தி குழந்தையை அவன் வசம் ஒப்படைத்துவிட்டு மதுரா சென்றுவிட்டனர்.

அவர்கள் சென்றதும் மறுநாள் குழந்தைக்கு வழக்கம்போல பழம், பால், தயிர் மற்றும் என்னென்ன தேவையோ அவை அனைத்தையும் கொடுத்தான். ஆனால் அந்த பெண் குழந்தை தனக்கு எதுவுமே வேண்டாம் என அடம்பிடித்தது. உனக்கு என்னதான் வேண்டும்? என ஸ்ரீகண்ணன் கேட்டான். அந்த குழந்தையும் எனக்கு அம்மாதான் வேண்டும், என் அம்மா கொடுத்தால்தான் சாப்பிடுவேன் என பிடிவாதம் செய்தது. இதை அறிந்த எம் ஸ்ரீதயாநிதியும் அவள் தாயாக மாறினான். தேவையறிந்து வேண்டுவன கொடுத்து ரட்சித்தான். ஓராண்டு ஆகியது. மதுராவில் அந்த குழந்தையின் தாயாருக்கு தம் குழந்தையை மறந்து இருக்க முடியவில்லை. அவர்களுக்கும் இறை அருளால் கஷ்டம் விலகியது போலும். இந்நிலையில் கோகுலம் போக வேண்டுமென உரைத்து தம் கணவனையும் அழைத்து வந்தாள்.

யமுனைக் கரையில் தம் மனைவியைப் போலவே ஓர் பெண் துணிமணிகளை அலசி தோளில் போட்டுக்கொண்டு ஓர் குடத்து ஜலத்துடன் செல்வதை அந்த கணவன் கண்டான். தம் மனைவியையும் சரி பார்த்தான். அவள் தம் அருகிலேயே இருக்கக் கண்டான். அப்படியானால் அந்த பெண் யார்? என அவனால் ஊகிக்க முடியவில்லை. தம் மனைவியையும் கூப்பிட்டுக் காண்பித்தான். இருவருக்கும் ஆச்சரியம் தாளவில்லை. அந்த பெண் பின்னாலேயே சென்றார்கள். அந்த பெண்ணும் அதே வீட்டினுள் நுழைந்தாள். குழந்தைக்கு ஆகாரத்தை எடுத்து வைத்துவிட்டு கொல்லைப்புறம் சென்று துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள் போலும். இந்த தம்பதிகள் உள்ளே சென்றதும் அந்த குழந்தை கேட்கிறது, அம்மா! அப்பா எப்பொழுது வந்தார்? நீ நதியில் நீராடச் சென்ற போது வந்தாரா? நீ கூட்டி வந்தாயா? என வினவினாள். அதன் தாயார் சொன்னாள், குழந்தாய்! நாங்கள் இப்பொழுதுதானே மதுராவில் இருந்து வருகிறோம். அப்படியானால் இங்கு இருக்கும் என்னைப் போன்ற அந்த பெண்மணி யார்? என்றாள். குழந்தைக்கு ஒன்றும் புரியவில்லை.

எம் செல்வங்களே!


அப்பொழுது எம் பிரபு அங்கு வந்து உரைத்ததாவது: அம்மா! உன் குழந்தைக்கு நீயாக இருந்து பாதுகாத்து வந்தது யாம்தான் என்று அவர்கள் அறியாமையின் திரையை விலக்கினான். அவர்களுக்கு அப்பொழுதுதான் கண்ணனின் அவதார மஹிமை புலனாகியது. மெய்யுணர்வு எய்தினார்கள். அவர்கள் உரைத்த வாசகமாவது: கண்ணா! நீயாக உன் மாயையை விலக்காவிட்டால் இந்த ஜீவர்களுக்கு


என்ன புரியும்? உன்னிடம்தான் எவ்வளவு கருணை இருக்கிறது. இதை உணராத ஜீவர்கள் உன்னைக் குறை கூறுகிறார்களே!

**நீயே சகலத்தையும் நடத்த சித்தமாக இருக்கிறாய். ஆனால் இந்த ஜீவர்கள் நான், நான் என சிக்கிக் கொள்கிறார்கள். அவர்கள் வினையே அவர்களை பந்தப்படுத்தி அறியாமையை உண்டு பண்ணுகிறது.**

**பிரபோ! உன் கருணையின் திரத்தை உணர்ந்தால் இந்த ஜீவர்களுக்கு எள்ளளவு கூட பயம் வராது. மயக்கம் இல்லை, கலக்கமும் இல்லை. பிராப்தம் முடியட்டும் என உன் திருமேனியிலேயே ஓர்ந்து அமைதியாக, உன் நாமதியானத்திலேயே ஆழ்ந்திருந்தால் அதுவே பேரானந்தமாக முடியும்.** குழந்தையும் நீயே! தாயும் நீயே! தந்தையும் நீயே! இங்கு எதற்கும் எந்த கவலையும் கிடையாது என அன்பின் மேலீட்டால் அவன் பரிபூரண கிருபை பெற்று ஜீவசமாதி ஆகிவிட்டார்கள். இன்றும் அவர்களது சமாதியை யமுனைக் கரையில் காணலாம். இதை அவன் அருளால் தரிசிக்க வைத்தான். **மெய்யுணர்வினால் அவனை உணருங்கள்**. பெற்றோர் சமாதி ஆனவுடன் அந்த குழந்தை ஸ்ரீகண்ணன் அரவணைப்பிலேயே வளர்ந்து பதினாயிரம் கோபியர்களுள் ஒருவளானாள். பின் அவள் பிறவியின் ரகசியமும் உணர்ந்தாள்.

**எல்லாம் நீ!**





# அதிசயம் ஆனால் உண்மை!

அது சபரிமலை யாத்திரை சமயம். பல இடங்களில் இருந்தும், பல ஊர்களில் இருந்தும் ஐயப்பன் பூஜை, கன்னி பூஜை, சாஸ்தா பிரீதி என பலவித பூஜைகளில் கலந்து கொள்ள முக்கியமானவர்கள் இந்த பைத்தியத்தை அழைப்பதுண்டு.

ஓர் சமயம் காலை நேரம் ஸ்ரீகுருதேவருடன் அமர்ந்து முக்கியமான ஓர் விஷயத்தை கருத்து பரிமாறிக் கொண்டிருந்தோம். அப்போது திருச்செந்தூரில் இருந்து ஓர் அன்பர் **அகண்ட நாமபஜனை** என அழைக்க வந்தார். வந்தவர் ஸ்ரீகுருதேவரையும் இதையும் நமஸ்கரித்துவிட்டு, ஸ்வாமி! நாளை மாலை ஆறு மணி முதல் மறுநாள் காலை ஆறு மணி வரை திருச்செந்தூரில் என் இல்லத்தில் திவ்யநாம பஜனை வைத்திருக்கிறோம். கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம் ஆகிய ஊர்களில் இருந்து **பழம்பெரும்** அடியார்கள் வருகிறார்கள்! அவர்கள் எல்லோரும் தங்களுக்கு அறிமுகம் ஆனவர்களே! அவர்கள் எனக்கு தபால் மூலம் அந்த ஸ்வாமிகளையும் (தங்களை) அவஸ்யம் அழைத்து வந்துவிடுங்கள் என்று எழுதியிருக்கிறார்கள். தாங்கள் மறுக்காமல் அவஸ்யம் மாலை ஐந்து மணிக்கு அங்கு வந்துவிடவும். உங்களை பெரிதும் அனைவரும் எதிர்பார்க்கிறோம் என்று சொன்னார். அந்த பைத்தியமும், **அவன் அனுப்பினால் வரும்** கவலையை விடுங்கள். அவன் இருக்கும்போது கவலை நமக்கு எதற்கு? **அவன் பார்த்துப்பன்** எனச்சொல்லி அனுப்பி வைத்தது!

அன்று மாலை ஒரு அன்பர் வந்தார். அவர் பாளையங்கோட்டையை சேர்ந்தவர். அவர் மிகமிக முக்கியமானவர். பலமுறை அவர் இல்லத்திற்கு போயிருக்கிறது. அவர் வந்து ஸ்ரீகுருதேவரையும், இதையும் நமஸ்கரித்தார். ஓ.. ஸ்வாமி! நாளை இரவு ஒரு கன்னிபூஜை இது ரொம்ப முக்கியமானது. ஒரு கார் இங்கு நாளை மாலை ஐந்து மணிக்கு வரும். அதில் தாங்கள் எப்படியும் வந்து சேரவேண்டும். என் குழந்தைகள் வீரமணி, ராமன், கௌசல்யா அனைவரும் உங்களை கையோடு கூட்டி வரச்சொன்னார்கள். நீங்கள் உங்கள் அப்பாவுக்கு சேவை செய்யக்கூடியவர், ஆகையினால் அதை நான் தடுக்கமாட்டேன். நாளை மாலை ஐந்து மணிக்கு புறப்பட்டு ஆறரை மணிக்கு வந்து சேரவேண்டும் என்றார்.

இருவரும் முக்கியமானவர்களே. ஆகவே இவரிடமும் **அவன் அனுப்பினால் வரும்** கவலையை விடுங்கள், அவன் இருக்கும்போது கவலை நமக்கு எதற்கு? **அவன் பார்த்துப்பன்** எனச்

சொல்லி அவரையும் அனுப்பி வைத்தது அந்த வைத்தியம். ஸ்ரீகுருதேவர் சிரித்தார். ஆமாம் திருவடி! இருவரிடமும் அவன் அனுப்பி வைத்தால் வரும் என்றும், அவன் பார்த்துப்பன் என்றும் சொன்னால் இதன் அர்த்தம் என்ன? எங்காவது ஒரு இடம்தான் போகமுடியும். இருவரிடமும் வருவதாகவும் சொல்லவில்லை, வரவில்லை என்றும் சொல்லவில்லை. ஆனால் இருவருமே உன்னை எதிர்பார்க்கிறார்கள். ஆனாலும் நீ சொன்ன வாசகம்தான் ஸத்யம். **நடப்பது நலமாகவே நடைபெறும்.**

நாளை ஒரு முக்கியமான காரியம் இருப்பதால் நீ இரண்டு இடத்தில் ஒரு இடமும் போகமுடியாது. **சும்மா இரு!** அவர்கள் இருவரும் வந்தாலும் ஏதாவது சாந்தி சமாதானம் சொல்லிவிடலாம் அல்லது திருஅருள் எப்படி நடத்துகிறதென பொறுத்திருந்து பார்ப்போம் என்றார்கள்.

மறுநாள் மாலை நான்கு மணிக்கு ஒரு காரியமாக வீட்டிற்கு சென்றிருந்தது இந்த வைத்தியம். இரவு ஏழு மணிக்கு வந்து ஸ்ரீகுருதேவருக்கு ஆகாரம் கொடுத்தது. இரவு ஒன்பது மணிக்கு திருவடி சேவை செய்யும்போது ஸ்ரீகுருதேவர் சொன்னார். குழந்தாய் திருவடி! மாலை ஐந்து மணிக்கு ஒரு கார் கொண்டு வந்தார் அந்த பாளையங்கோட்டை அன்பர். உன்னைக் கேட்டார். இப்போதுதான் வெளியே போனான், வந்தவுடன் அழைத்துச் செல்லுங்கள் என்றோம். அவர், ஸ்வாமி! அடியேன் வெளியே நிற்கிறேன் எனச் சொல்லிப்போனார். அப்புறம் வரவே இல்லை. காத்திருந்து காணவில்லை எனப்போய் விட்டாரா? என்ன விஷயம் என தெரியவில்லை என்றார்கள். நடப்பது நடக்கட்டும் என்றது அந்த வைத்தியம்.

அதற்கு மறுநாள் பாளையங்கோட்டை அன்பர் வந்து, ஸ்வாமிகளே! மன்னிக்க வேண்டும், நான் வெளியே நிற்கும்போது தங்கள் சின்னசாமி வேகமாக வந்தார். அதிகம் காக்க வைத்துவிட்டோமா எனச்சொல்லி வண்டியை எடுங்கள் எனச்சொன்னார். ஸ்வாமி! அப்பா சாமியிடம் சொல்ல வேண்டாமா என்றேன். இது சொல்லிவிட்டது எனச்சொல்லி என் கூடவே வந்துவிட்டார். தங்களிடம் அடியேன் சொல்லாமல் போனதற்கு மன்னிக்க வேண்டுமென தண்டனிட்டு நமஸ்கரித்தார். அந்த அன்பர் மேலும் சொன்னதாவது:



நேற்று என்னுடன் சுவாமி வந்தது எங்கள் பெரும் பாக்கியம். பலமுறை ஸ்வாமிகள் என் இல்லத்திற்கு வந்திருக்கிறார்கள். அமைதியாய் ஒரு இடத்தில் கண்ணை மூடி அமர்ந்திருப்பார்கள். இம்முறை வெகு ஆச்சர்யம், அடியேன்தான் பூஜை எல்லாம் செய்தேன். முடிவில் கற்பூரம் காட்டும் சமயம், ஐயா! அந்த கற்பூர தட்டை இதனிடம் கொடுங்கள் எனச்சொல்லி அவர் அந்த தட்டை சுழற்றிய விதத்தில் அந்த கற்பூர காட்சியில் அனைவரும் மெய் மறந்தோம். பிரசன்ன வெங்கடேசன் பிரத்தியட்சமாக அங்கு தரிசனம் கொடுப்பதாகவே உணர்ந்தோம். இப்படி ஒரு நிலை

என் வாழ்வில் நான் அனுபவித்ததே இல்லை. அதற்கும் மேலாக அங்கு அனைவருக்கும் விபூதி அவரே நெற்றியில் இட்டார்கள்.


கடைசியில் பெண்கள் அனைவருக்கும் புஷ்பம் கொடுத்து ஆசி வழங்கினார்கள். இப்படி ஒரு செல்வனை எங்களுக்கென்றே கொடுத்த உங்களையும், உங்கள் திருக்குமாரனையும் எப்படி வாழ்த்துவது? நான் வருகிறேன் சுவாமிகளே என இருவரையும் புகழ்ந்து சென்றார். அவர் கண்களில் கண்ணீர் கொட்டியதை உணர்ந்தோம்.

இரண்டு தினங்கள் கழித்து திருச்செந்தூர் அன்பர் வந்தார். ஸ்ரீகுருதேவரை நமஸ்கரித்தார். அவருடன் பேசிக் கொண்டிருந்தாராம். அவர் வரும் சமயம் இது இல்லை. ஸ்வாமி! உங்கள் மகன் சின்ன ஸ்வாமி வெகு அபூர்வமான பிறவி. பலமுறை என் இல்லத்திற்கு வந்திருக்கிறார். அமைதியாக அமர்ந்திருப்பார். எது கொடுத்தாலும் சாப்பிடமாட்டார். நீங்கள் சாப்பிடுங்கள் எனச்சொல்லி அவரே பரிமாறுவார். நாங்கள் சாப்பிட்டபின் ஏதோ பெயருக்கு ஒன்றிரண்டு இனிப்பு பதார்த்தம் தம் வாயில் போட்டுக் கொள்வார். அன்று பூஜைக்கு வந்திருந்த அவர்..

**ஸ்ரீகுருதேவர்:** (இடைமறித்து) அவன் அங்கு வந்தானா?

**அவர்:** ஏன் ஸ்வாமி திகைக்கிறீர்கள்? உங்களுக்குத் தெரியாதா? உங்களிடம் சொல்லவில்லையா?

**ஸ்ரீகுருதேவர்:** சொன்னான்!!! சரி சொல்லுங்கள் நடந்ததை!



**அவர்:** தானே முதலில் சாப்பிட அமர்ந்தார். அனைத்தையும் ஒன்றாக பிசைந்தார். அங்குள்ள அனைவருக்கும் குழந்தைகள் உட்பட **பிரசாதமாக** கொடுத்தார். எனக்கே வெகு ஆச்சர்யமாகிவிட்டது. **இது எங்கள் பாக்கியம் என உணர்ந்தேன்!** எல்லோருக்கும் பஸ்பம் அவரே நெற்றியில் இட்டார்! நாங்கள் பெரும் பாக்கியவான்கள். சின்ன ஸ்வாமிகள் வந்தால் சொல்லுங்கள் நான் வந்து போனேன் என்று. ரொம்ப திருப்தி ஸ்வாமி என அவரும் கூறிச்சென்றார். **ஸ்ரீகுருதேவர் அமைதியாக அமர்ந்திருந்தார்.**

குழந்தைகளே!

இந்த இரண்டு சம்பவங்களையும் நடத்தியது யார்? நாம ரூப குணம் குறி கடந்த காலாதீத ஒன்றாக அது இருந்தாலும்

“அன்பெனும் வலையில் அகப்படும் மலையே”


என்றபடி அன்புக்காக, ஆழ்ந்த நம்பிக்கைக்காக, உறுதியான வைராக்கியத்தால் தாமே நாமரூபம் தாங்கி வரும். இது அனுபவம்! ஸத்தியமாகும்!!

**“அங்கமே நின் வடிவமான சுகர் கூப்பிட**
**நீ எங்குமே ஏன்! ஏன்! என்றதென்ன பராபரமே”.**

**அது எளிமைக்கும் எளிமை!**
**பணிவுக்கும் பணிவு!!**
**மஹத்துக்கும் மஹத்து!!!**

**உடல் உலகத்தை உண்மையாகவே மறந்தால்** ஸத்யம் பிரகாசிக்கும். உங்களுக்குள் ஸத்யம் பிரகாசித்துவிட்டால் அனைத்தும் ஆனந்தமே, துக்கம் இல்லவே இல்லை!

**எல்லாம் நீ!**





# திருச்சியில் காவிரிக்கரை சம்பவம்!

## பகவான் பணம் பசி!

திருச்சியில் ஒரு குழந்தை வீட்டிற்கு மதுரையில் இருந்து பஸ்ஸில் சென்றது. பஸ்ஸிலிருந்து இறங்கியதும் டவுண்பஸ்ஸை தேடியது. அது அகப்படவில்லை போலும்? மதியம் பனிரெண்டு மணி இருக்கும். சரி ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் செல்லலாம் என ரிக்ஷா ஸ்டாண்டை நோக்கி நடந்தது. தோளில் ஒரு ஜோல்னா பை எப்போதும் இருக்கும். ஒரு நாலைந்து ரிக்ஷாக்கள் நின்றது. அங்கு நின்ற நால்வரில் ஒரு ரிக்ஷாகாரனைப் பார்த்து நீ போ என அங்குள்ள மற்றவர்கள் அனுப்பி வைத்தனர்.

அவன் இந்த பைத்தியத்தை கூர்ந்து கவனித்தான். என்ன நினைத்தானோ தெரியவில்லை, திருவடியில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான். சாமி! வண்டியில் ஏறு சாமி என்றான். ஏறி அமர்ந்து கொண்டு ஜோல்னா பையை அருகில் வைத்துக் கொண்டு **ஹரே ராம்** என்றது. அவன் **கிருஷ்ணா கிருஷ்ணா** என இருமுறை சொல்லிவிட்டு திரும்பவும் திருவடியை தொட்டு நமஸ்கரித்தான். இது சிரித்துக் கொண்டே, வண்டியை எடு என்றது. அவன் கேட்டான் தாங்கள் ராமபக்தரா சாமி, கிருஷ்ணனை கும்பிடமாட்டீர்களா? என்றான். அவனிடம் சற்று விளையாட எண்ணியது.

**பைத்தியம்:** தம்பீ! கிருஷ்ணன் ஒரு மாயாவி! ஒரு பலே திருடன்! பெண்களிடம் சேலைகளை திருடியிருக்கிறான். ஆச்சியர்களிடத்தில் பால், தயிர், வெண்ணெய் திருடி அடியும், உதையும் வாங்கியிருக்கிறான். பெரிய கொலைகாரன். எத்தனை அப்பாவிகளை கொன்றிருக்கிறான் தெரியுமா? ஏன் சொந்த தாய்மாமனையே கொன்று போட்டான். அவன் ஈவு இரக்கமற்றவன். (என சொல்லும்போதே ஓட்டிக்கொண்டிருந்த ரிக்ஷாக்காரன் தெருவில் ஒரு ஓரமாக வண்டியை நிறுத்தினான்)

**அவன்:** இந்தா சாமி! வண்டியை விட்டு இறங்கு. ஏதோ ஒரு சாமியாராக இருக்கிறாரே புண்ணியம் என உன்னை ஏற்றினேன். ஏறும்போது ராமன் பெயரை சொல்லி ஏறுகிறாரே உண்மை சாமியார் என எண்ணினேன். நீ ஓர் போலிச்சாமியார் போல் தெரிகிறதே!

**பைத்தியம்:** தம்பீ! கோபப்படாதே! இப்போது என்ன சொன்னது என இப்படி ஆத்திரப்படுகிறாய்? ராமன் ஸத்யத்தையும், தர்மத்தையும் காப்பாற்றி, ஒரு மனைவியென்று ராஜதர்மத்தை காப்பாற்றினான். அஸத்தியம் பேசாது ஸத்யம் பேசியே அத்தனை துன்பங்களையும் ஆனந்தமாக ஏற்றுக்

கொண்டான். நேர்மையாகப் போர் செய்தான். அவனுடைய ஒரு பாணமாகிய ராமபாணத்தை மிஞ்சியது எதுவும் கிடையாது.

வாழ்ந்தால் ராமனைப் போல் வாழ வேண்டும். ஆனால் கிருஷ்ணனைப் போல் எவராலும் வாழ முடியாதே! ஆனால் ராமனைப் போல் ஓர் சொல், ஓர் வில், ஓர் இல் (மனைவி) என வாழ்ந்து ஸத்யம் பேசி, தர்மம் செய்தால் **உயர் நிலையாகிய** கிருஷ்ணனாக இருக்க முடியும் என இந்த உண்மையை சொன்னது தப்பா?

**அவன்:** (திரும்பவும் நமஸ்காரம் செய்தான்) சாமி! சாமி! என்னை மன்னித்துவிடு. நீ ஏன் என் கிருஷ்ணனை அப்படி திட்டினாய்? அதனால்தான் எனக்கு கோபம் வந்தது. என்னை மன்னித்துவிடு சாமி! கிருஷ்ணனைப் பற்றி நாலு வார்த்தை நல்லதாய் சொல்லேன். ராமனை புகழ்ந்த வாய் கிருஷ்ணனையும் புகழலாமே! (எனக் கெஞ்சினான். உடனே ரிக்ஷாவையும் ஓட்டலானான்)

**வைத்தியம்:** தம்பீ..! மூர்த்தி துவேஷம் கூடாது. ஏதாவது ஒரு தெய்வத்தை நம்பவேண்டும். மற்ற எல்லா தெய்வங்களையும் நாம் வணங்கும் தெய்வமாக பார்க்கவேண்டும். எத்தனை சோதனைகள், வேதனைகள், துக்கம், துயரம், கஷ்டம், கவலை வந்தாலும் **தெய்வ நம்பிக்கையை** இழக்கக்கூடாது. இது நம் வினைப்பயன் என ஏற்றுக்கொண்டு சகிக்கவேண்டும். அதற்கு பொறுமையும் வேண்டும்.

**அவன்:** (இடைமறித்தான்) எனக்கும் கண்ணன் மேல் அதிக நம்பிக்கைதான் சாமி. அவன் ரொம்ப சோதிக்கிறான் சாமி. இருந்தாலும் நான் அவனை விடுவதாக இல்லை. பஸ்ஸ்டாண்டில் உன்னை பார்க்கும் போதே என் கண்ணனே வந்துவிட்டதாக ஒரு உணர்வு ஏற்பட்டது. அது என் மனப்பிரேமையோ அல்லது நீ அந்த கண்ணன் தானோ? அவன் எப்படியும் வருவானே. ஆனாலும் சாமி அவன் என்னை இப்படி சோதிக்கக் கூடாது. ஒரு ஆறு வருஷமா கடுமையான சோதனை.

ஒரு ஆறு வருஷம் முன் என்னுடன் பிறந்த அண்ணன் (ரொம்ப ரொம்ப முரடன்) என் வீட்டுக்கு வந்து என் பொண்டாட்டியையும், என்னையும் அடித்துப் போட்டுவிட்டு நான் வாயைக்கட்டி, வயித்தைக்கட்டி கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்த பணம் ஐயாயிரத்தை அப்படியே சொளையாக எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

நானும் பலமுறை கெஞ்சிக் கூத்தாடி கேட்டுப் பார்த்துவிட்டேன். அவன் தருவதாயில்லை. போய் கேட்டால் என்னை மிரட்டுகிறான். "நிறை சோத்தில் நாய் வாய் வைக்கக்கூடாது" என்பார்கள். அப்படி வைத்தால் அந்த வீட்டில் தரித்திரம் என்பார்கள். அதைப் போலவே என் வீட்டில் அவன் கால் வைத்து பணத்தை எடுத்தான். அன்றிலிருந்து இன்று வரை ரொம்ப கஷ்டம்தான் சாமி. ஆனால் என் கிருஷ்ணன் என் கூடவே இருக்கிறான். அன்றாட பிழைப்பு ஓடிவிடுகிறது. என்றென்றும் என் கிருஷ்ணன் என்னை கைவிடமாட்டான். என்ன சாமி? நீ ஆமான்னு சொல்லு சாமி. என் கஷ்டம் பறந்துவிடும். ஆமா சாமி என்னை விட்டுப்போன பணம் என்னிடம் வருமா?

**வைத்தியம்:** தம்பி.. தம்பி! இந்த ஆருடம், அருள்வாக்கு எல்லாம் தெரியாது. தெய்வ நம்பிக்கை ஒன்றுதான் உண்டு. இதைத்தான் அன்பர்களுக்கும் போதிக்கும். அது உன் பணமாக இருந்தால், அது உனக்கு பிராப்தியாக இருந்தால், அது உன்னை வந்து சேரும். முன்போ இப்போதோ நீ அவனுக்கு

கடன்பட்டிருந்தால் அது அவனுடையதே. அதை எண்ணாதே. உன் கிருஷ்ணனை எண்ணு. அவன் உன்னை அவஸ்யம் கைவிடான்.

**அவன்:** ஏன் சாமி! அந்த கிருஷ்ணன் எப்படி எப்படி எல்லாம் மாயாஜாலம் செய்திருக்கிறான் தெரியுமா? ஒரு பழம் விற்கும் கிழவிக்கு பவுனாக கொட்டி அவள் கஷ்டத்தை போக்கி இருக்கிறான். ஒரு குருடனுக்கு பார்வை கொடுத்து அவன் வறுமையை போக்கி இருக்கிறான். பலவருஷம் குழந்தை இல்லாமல் கஷ்டப்பட்ட தம்பதிகளுக்கு பிள்ளை செல்வத்தை கொடுத்து கவலையை போக்கியிருக்கிறான். இப்படி இன்னும் எவ்வளவோ உண்டு.

இதை எல்லாம் உன்னாட்டமா பெரியவங்க என் வண்டியில் வரும்போதெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். அவர்கள் என் கண்ணனைப் பற்றி பேசும்போதெல்லாம் அவனைப் பார்க்கணும், பார்த்துப் பேசணும் என்றெல்லாம் தோணும். அது முடியுமா சாமி?

**வைத்தியம்:** நீ இப்போது அவனுடன்தானே பேசிக்கொண்டு வருகிறாய். உன் கண்ணில் பாசம், சொந்தம், பந்தம் தோற்றுவதால் அவனை நீ காணவில்லையே என எண்ணுகிறாய். **ஒன்று தோற்றினால் ஒன்று தோற்றாது. எல்லாம் அவனே என உறுதியாக நம்பினால் எங்கும் எல்லாமாய் அவன் இருப்பான்!**

**அவன்:** அவனைக் காணமுடியும், பேசமுடியும் என்று நீ சொல்லுகிறாயா? என் வண்டியில் ஏறும் அனேகரில் சில பெரியவர்கள் இப்படித்தான் சொல்லுவார்கள். கண்ணனை நம்பு, உன் கஷ்டம், கவலை நீங்கிப் போகும் என்று சொல்வார்கள். அவனைக் காணமுடியும், பேச முடியும் என யாரும் என்னைப் பார்த்து சொன்னதில்லை. ஆனால் நீ ஒருவன்தான் என் கண்ணனை காணலாம், பேசலாம் என சொல்கிறாய். எனக்கு நம்பிக்கை இருக்கிறது சாமி!

**வைத்தியம்:** உன் நம்பிக்கை வீண் போகாது. "நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு வேதத்தின் தீர்ப்பாகும்". சரிசரி வண்டியை வேகமாகவிடு. சும்மா ஆமை நகர்ந்த மாதிரி இவ்வளவு மெயபோனா இது எப்போ வீடு சேரும். உனக்கு வேறு சவாரி கிடைக்க வேண்டாமா?

**அவன்:** என்ன சாமி! சவாரி கெடக்குது. உன்னைப் போல என் கிருஷ்ணனைப் பற்றி நாலு வார்த்தை பேசறவங்க கெடச்சா போதும் சாமி, எனக்கு எல்லாமே நெறஞ்சுவிடும் சாமி! அதுசரி சாமி, என் பணம் எனக்கு கிடைக்குமா? கிடைக்காதா?

**வைத்தியம்:** தம்பி! இங்கே பார். இந்த வார்த்தையை இங்கே கேட்காதே. உன் கிருஷ்ணனிடம் கேள். அவன் சித்தப்படி நிறைவேற்றுவான். இந்தாபார் இப்போதுதான் கண்ணனைப் பார்க்கணும், அவனோடு பேசணும் என சொன்னாய். அதற்குள் உன் பணஞாபகம் அதை மறைக்கிறது பார்த்தாயா?

**"பணத்தை கண்டால் பகவான் மறைவான்!**
**பகவானை கண்டால் பணம் மறையும்!!"**

உனக்கு இப்போது **பணமா? பகவானா?** (என்றது)

**அவன்:** சாமி...! சாமி...! பகவான்தான் முக்கியம். ஆனால் இப்போது இந்த வாழ்க்கைக்கு பணம்தானே முக்கியமாக இருக்கு. **பணம் இல்லாதவன் பிணம்**. இப்போ பணம் இல்லாதவனை எவன் சாமி மதிக்கிறான். சாமி ஒரு பழமொழி தெரியுமா உனக்கு?

"ஆத்துக்குள்ளே நின்னு **அரோகரா** போட்டாலும்
சோத்துக்குள்ளே இருக்கான் **சொக்கநாதன்!**"

என்பார்கள். சோத்தை தின்றால்தானே ஆண்டவனை நினைக்கத் தோணுது.

"சோறு வேணும்
சோத்துக்கு பணம் வேணும்
பணத்துக்கு பகவான் வேணும்!!"

**பைத்தியம்:** தம்பி! இன்று உன்னிடம் ஒரு புதுவாசகத்தை கற்றுக்கொண்டது. "பசி - பணம் - பகவான்". பலேஜோர். ஏன் இதை இப்படி பாரேன்?

பகவானை நினைத்தால் பணம் வரும்!
பணம் வந்தால் பசி போகும்!!

இது உனக்கு சரியாகப்படுகிறதா? ஏற்க முடியவில்லையா?

**அவன்:** சாமி! கேட்க நல்லா இருக்கு. ஆனால் வாழ்க்கைக்கு ஒத்து வராது. "பசி வந்தால் பத்தும் பறந்து விடும்" என சொல்வதுண்டு. **பசியின் கொடுமையும், பணத்தின் அருமையும்** உனக்கு தெரியாதுபோல் தெரியுது. நீ ஒரு பைத்தியக்காரசாமி போல் தெரிகிறது. முதலில் பணம் பின்தான் உன் பகவான். விபரம் தெரியாமல் பேசாதே!

**பைத்தியம்:** (இவன் வார்த்தைகளை கேட்டது. ஏதோ இந்த ஜீவமயக்கத்தை எண்ணியது. கடகடவென சிரித்தது) "பணம் பத்தும் செய்யும்" என்பார்கள். அது உன் நிலையில் சரியே.

பணம் பற்றச் செய்யும்!
வற்றச் செய்யும்!
சுற்றச் செய்யும்!

ரொம்ப நல்லது. இன்று உன் வண்டியில் ஏறி புதுவாசகங்களை கேட்க முடிந்தது (என சொல்லிக் கொண்டிருக்கும்போதே அடே... கோவிந்தா! கோவிந்தா! என ரிக்ஷாவின் பின்புறம் சப்தம் கேட்டது)

ஒருவன் ஒரு மஞ்சள் பையுடன் வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தான். இவன் திரும்பிப் பார்த்து வண்டியை நிறுத்தினான். இவன் பெயர் கோவிந்தன் போலும்? ஓடி வந்தவன் இவன் அருகில் வந்து அந்த மஞ்சள் பையை இவன் கைகளில் கொடுத்தான்.

எனக்கு ஒரு முக்கியமான இடத்திலிருந்து பணம் வந்தது. அன்று உன்னையும், உன் பொண்டாட்டியையும் அடித்து என் குடிவெறியில் எடுத்துப்போன பணம் ஐயாயிரம் இதில் இருக்கு

வைத்துக்கொள். உனக்கும் உன் குடும்பத்திற்கும் ரொம்ப கஷ்டத்தை கொடுத்துவிட்டேன். என்னை மன்னித்து விடு என சொன்னவன் இவன் பதிலுக்குகூட காத்திராமல் எனக்கு ஒரு அவசரமான ஜோலி இருக்கு. இன்னொரு நாளைக்கு வந்து உன்னை பார்க்கிறேன். உன் பொண்டாட்டியிடமும் சொல்லிவிடு எனச் சொல்லி வேகமாக சென்று மறைந்தான்.

ரிக்ஷாகாரன் திகைத்தான்! இந்த பைத்தியத்தையும் பணப்பையையும் மாறி மாறி பார்த்தான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. பின் அது வழிய ஆரம்பித்தது. அவன் சாமி! சாமி! இது என்ன? நீ யார்? அவன் யார்? இது ஏது? இது என்ன சாமி ஒன்றும் புரியவில்லையே? நான் கெனா (கனவு) காண்கிறேனா?

அவனால் பேச முடியவில்லை. இதுவும் ரிக்ஷா வாடகையை எடுத்து அப்படியே அவன் மஞ்சள்பை மீது வைத்துவிட்டு மெதுவாக நழுவியது சிரித்துக் கொண்டே.


அவன் சாமி! சாமி! உன் வீட்டுக்கு போக வேண்டாமா? அது இந்த தெருதானா? எந்த வரிசையில்? எந்த வீடு? அவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. பேச முடியாமல் செய்துவிட்டான் எமதய்யன்.


**“எல்லா ஊரும், எல்லா பேரும், எல்லா தெருவும், எல்லா வீடும் எம்முடையதே! நீயும் நம்மவனே! நீ உன் பணத்தையும் பகவானையும் மாற்றி வை எம்மை காண்பாய்”** எனச் சொல்லிய வண்ணம் சென்றுவிட்டது.

**அவன் மறந்தானா? மறக்கடிக்கப்பட்டானா?**

**யாம் அறியோம்!**

**எல்லாம் நீ!**






# மன ஓர்மைப்பாடு!

## 1. அவர் ஒரு மந்திரவாதி!

ஓர்நாள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தோம். செல்லும் பாதையில் ஒரு இடத்தில் ஏரிக்கரை இருக்கிறது. அதாவது ஒருபுறம் செங்குத்தான இறக்கம், அதில் ஏரி நிறைய ஜலம் இருக்கிறது. மறுபுறம் முட்புதர். கீழே கால் வைக்க இடம் இல்லை. அது ஒற்றை அடித்தடம். ஒருவர் வந்து விலகுவதாக இருந்தாலும் சற்று உரசிக்கொண்டுதான் செல்ல வேண்டும். அப்படி ஒடுங்கிய பாதை மூன்று கல் தூரம் இருக்கலாம்.

இது ஒரு பஜனை நாமாவளியை பாடிக்கொண்டே சென்றது. பின்னும் முன்னும் மனித சஞ்சாரமே இல்லை. திடீர் என்று பத்தடி தூரத்தில் ஆறு அடி நீள பெரியநாகம் தலையை சற்று நிமிர்த்திய நிலையில் எம் வருகையை எதிர்பார்த்து இருந்ததுபோல் படுத்திருந்தது. கால் முன்னே செல்ல மறுத்தது. ஆனால் பயம் இல்லை. இறந்த சர்ப்பத்தைக் கூட தாண்டலாகாது என்பது சட்டம்! இதை எப்படி தாண்டுவது? தாண்டிச் செல்லவும் முடியாது, **அது கூடாது.** விலகிச் செல்லவும் மார்க்கமில்லை! பின்னால் செல்லவும் இந்த பைத்தியத்திற்கு **அனுமதி இல்லை.** இது ஒரு இக்கட்டான சூழ்நிலை.



இரண்டு மூன்று நிமிஷம் நின்று அதை நோக்கி கூறியதாவது:

ஓ.. எம் ஐயனே! நாகராஜாவே! யாம் முன்னே செல்ல வேண்டும். யாம் பின் நோக்கி செல்லக் கூடாது. நீ உன் வாலையும், தலையையும் ஏடாகூடமாய் பின்னிப் படுத்திருக்கிறாய். விலகவும் மார்க்கமில்லை, ஒதுங்கவும் வழி தெரியவில்லை. உன்னை வணங்குகிறோம். நீ இரண்டு பக்கமும் செல்ல இடம் உண்டு. உன் உடல் அந்நிலைக்கு ஏற்றது. எமக்குப் பொருந்தாதே! நீ நல்ல

பிள்ளை! எம் செல்ல பிள்ளை!! சற்று விலகி வழிவிடு!!! என உருகி வேண்டினோம். அது தலையைத் தூக்கி எம்மை சரிபார்த்து ஓர் வணக்கம் தெரிவித்து விட்டு அடுத்து இருந்த புதருக்குள் சென்று மறைந்தது.

அடுத்து ஒரு புதரின் பக்கத்திலிருந்து எம்மையும், சர்ப்பத்தையும் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த விளையாட்டுச் சிறுவர்கள், அடே! அவர் ஒரு மந்திரவாதியடா! செத்த பாம்பை உயிர் உண்டாக்கிவிட்டார்! நம்மையும் சபித்துவிடுவார்!! என சொல்லிக்கொண்டே ஓடினர். யாம் சிரித்துக் கொண்டே சென்றோம். ஏரியை தாண்டிச் செல்லும்போது ஓடிய சிறுவர்களில் ஒரு பெரிய பையன் அங்கு வந்து சந்தித்தான். ஏன் தம்பீ! அப்படி ஓடினீர்கள்? எனக்கேட்க அவன் சொன்னதாவது:

இந்தப் பாதையில் ஒரு பெரிய சர்ப்பம் பலரை கடித்தும், பலரை விரட்டியும் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. நேற்று சாயங்காலம்தான் அதை விரட்டிவிரட்டி அடித்துக் கொன்றுவிட்டோம்! இன்று காலையில் அதைப்பார்க்க வந்தோம். அது எறும்பு அரித்து செத்துக்கிடந்தது. அப்போதுதான் நீங்கள் வருவதை கவனித்தோம். உங்களை பயமுறுத்த அதை உயிருள்ளது போல் அதிசீராக ஒரு சின்ன கல்லை அதன் தலையைத் தூக்கி தாங்கி இருக்கும்படி வைத்துவிட்டு ஒளிந்திருந்தோம். அதை எப்படி உயிர்ப்பித்தீர்கள்? அதனால்தான் உங்களை மந்திரவாதி எனச்சொல்லி என் தோழர்கள் பயந்து ஓடிவிட்டனர். நான் அடுத்த செம்பூர் கிராமம் செல்லவேண்டும். அதனால்தான் உங்களுடன் வருகிறேன் எனச்சொன்னான்.

யாம் சிரித்துக் கொண்டே இது மந்திரமும் இல்லை! மாயமும் இல்லை! மாங்காயும் இல்லை!! **மன ஓர்மை!** இதற்கு எம் ஊரில், எம் வீட்டின் அருகே நடந்த சம்பவத்தை கூறுகிறோம், கவனமாக கேள் என நடந்த சம்பவத்தை ஒரு கதையாக சொன்னோம்! இதை காண்க!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. பொம்மை அல்ல உண்மை (கருடன்)!

அந்த பைத்தியத்தின் வீட்டின் எதிர்புறம் சற்று தள்ளி ஒரு வீடுண்டு. அதில் ஓர் குடும்பம் இருந்தது. அந்த வீட்டின் அதிபர் தபால் ஆபீஸில் ஹெட்போஸ்ட் மாஸ்டராக (தலைமை தபால் அதிகாரியாக) இருந்து ஓய்வு பெற்றவர். அவர் மனைவி ஒரு ஸ்கூலில் டீச்சராக வேலை பார்த்து வருகிறாள். அவர்களுக்கு ஒரு பெண், இரண்டு ஆண் குழந்தைகள். இந்த மூன்று பேருக்கும் திருமணம் ஆகிவிட்டது. பையன்கள் இருவரும் குடும்பத்துடன் அம்மா அப்பாவுடன் சேர்ந்தே இருந்தார்கள். மகள் திருமணம் ஆகி திருநெல்வேலியில் கணவனுடன் இருக்கிறாள். அந்த பையன்களுக்கும் குழந்தைகள் உண்டு.

அந்த வீட்டு பெரியவருக்கு ஆழ்ந்த தெய்வபக்தி உண்டு. அதிவைராக்கியமானவர். எதையும் எண்ணினாலோ, சொன்னாலோ அது முடியும்வரை ஓயமாட்டார். இறைவன் அந்த வல்லமையை அவருக்குக் கொடுத்திருந்தான். அவர் வீட்டின் முன் காலியிடம் உண்டு. மூன்று பனைமரங்களும் அதை சுற்றி முள் உடை மரங்களும் அடர்த்தியாக இருக்கும். அந்த பனைமரங்கள் மூன்றில் ஏதாவது ஒன்றில் காலை ஏழு மணியில் இருந்து ஒன்பது மணிக்குள் ஒரு கருடன் வந்து அமரும். இவரும் காலையில் குளித்து

நெற்றியில் கோபி இட்டுக்கொண்டு வெளிவராண்டாவில் அமர்வார். எப்படியும் இவர் அமர்ந்து ஒரு மணி நேரத்திற்குள் அந்த கருடன் வந்து ஓர் பனையில் அமரும்; இரண்டு மூன்று சத்தம் கொடுக்கும். ஒரு சில சமயங்களில் இவர் களைத்து தூங்கி சற்று தாமதமானால் அந்த கருடன் ஓர் பனையில் அமர்ந்து பலமுறை (அரை மணி நேரமாவது) திரும்பத்திரும்ப கூவி **இவரை அழைப்பது போல்** தோன்றும். அதாவது "**நான் வந்து விட்டேன்**. நீ இன்னமும் தூங்கிக் கொண்டா இருக்கிறாய்? சீக்கிரம் வா நான் போகவேண்டும்" என துரிதப்படுத்துவது போல் இருக்கும் அந்த சப்தம். இதை யாம் பலமுறை பார்த்து வியந்தது உண்டு!!

ஒருநாள் இவர் குளித்துவிட்டு வந்து அமர்ந்துவிட்டார். கருடன் என்ன காரணமோ? என்ன சோதனையோ? வரவில்லை. இவரும் கண்ணீர் மல்க பனைமரத்தைப் பார்ப்பார். அக்கம்பக்கம் பார்ப்பார். சில வார்த்தைகள் புலம்புவார். அதாவது: நான் என்ன தப்பு செய்தேன்? என் பேரில் கோபமா? அல்லது என் மனைவி, மக்கள் மீது கோபமா? நானோ, அவர்களோ அறிந்தோ அறியாமலோ தவறு, தப்பு எந்த குற்றம் செய்திருந்தாலும் நீ பொறுக்க வேண்டியதுதானே? எங்கள் குறைகளை எவரிடம் முறையிடுவோம்? நீ பொறுக்கவில்லையானால் எங்களுக்கு வாழ்வு ஏது? உன்னைக் காணாது நான் என்றேனும் சாப்பிட்டதுண்டா? இதை நீ அறியாததா? இந்தாபார் கிருஷ்ணா! நான் எதையும் சொல்லமாட்டேன். சொன்னால் சொன்ன சொல் தவறமாட்டேன்! நீ வந்தாலன்றி **உணவு, ஜலம் அருந்தமாட்டேன்; இது ஸத்தியம்**. எனக்கென்ன கவலை! நான் செத்துப்போனால் என் மனைவி, மக்களை நீ பார்த்துக்கொள்! இதனால் வரும் **பழிபாவம்** உனக்கே! எனக்கல்ல என பலவிதமாக புலம்பி அன்று முழுவதும் அன்னபானம் எதுவும் இல்லாமல் இருந்துவிட்டார். மறுநாள் அவரால் அமர முடியவில்லை, தரையில் ஒரு பாய் போட்டு படுத்துக்கொண்டார்.

மனைவி, மக்கள், உறவினர் அந்த தெருவிலுள்ளோர் அனைவரும் எத்தனையோ சொல்லிப் பார்த்தனர். அவர் கேட்பதாக இல்லை. **கருடன் பனையில் அமர வேண்டும்.** அவனை பார்த்த பிறகுதான் ஆகாரம், ஜலம் ஏற்க முடியும் என பிடிவாதமாக இருந்தார். கேட்பவர்களுக்கு "எனக்கென்ன கவலை, அவனுக்கல்லவா கவலை வேண்டும்" என்பார். எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. இரண்டாவது நாளும் அன்னபானம் செய்யாத் தன்மையினால் அதிகம் சோர்ந்துவிட்டார். பேசவும் சக்தியற்றவரானார். எல்லோரும் பயந்துவிட்டனர். அவர் குடும்பத்தாரும், சிலரும் சேர்ந்து ஒரு யுக்தி செய்தனர்.

ஒரு தகரத்தில் கருடனாக பதுமை செய்து பெயின்ட் எல்லாம் அழகாக செய்து கருடனைப் போலவே ஆக்கினர். (கொஞ்சமும் மாற்றமில்லை) நடுஇரவில் அவர் கண் அயர்ந்த நேரம் பார்த்து ஒருவர் பனையில் ஏறி ஓர் பனைமட்டையில் பொடி கம்பி போட்டு கட்டி, அந்த கம்பி தெரியாமல் செய்து வைத்துவிட்டு கீழே இறங்கிவிட்டார். அதிகாலையில் பார்க்கும்போது கருடன் அமர்ந்தது போலவே அனைவருக்கும் தெரிந்தது. காலையில் மனைவி சொன்னாள், உங்கள் பக்திக்கு இரங்கி பகவான் வந்துவிட்டார். அவரை தரிசித்துவிட்டு அவர் அனுமதியுடன் கொஞ்சம் ஜூஸ் சாப்பிடுங்கள். அப்புறம் ஆகாரம் ஏற்கலாம் என பரிவுடன் சொன்னாள். குழந்தைகளும் சொன்னார்கள்!

அவரும் அதிமகிழ்ச்சியுடன், என் குற்றங்களை பொறுத்துக் கொண்டாயா? ஏ.. கண்ணா..!

ஹரே.. கிருஷ்ணா..! என்னை இவ்வளவு சோதித்துவிட்டாயே? பரவாயில்லை! எனக்கு உன் பேரில் நம்பிக்கையும், விரதம் காப்பதில் வைராக்கியமும் இருக்கிறதா என பரீட்சித்தாயா? இதற்கெல்லாம் நான் பயம் கொள்ளமாட்டேன். நீ இருக்கும்போது எனக்கென்ன குறை! நானும் என் மனைவியும், என் குழந்தைகளும் மற்றும் அனைவரும் நலமாக இருக்க நீ வாழ்த்து. எப்போதும் உன் மதுரக்குரல் கொடுத்து வாழ்த்துவாயே! இன்று மட்டும் ஏன் மௌனம் சாதிக்கிறாய்? நீ குரல் கொடுத்து என்னை சாந்தி பண்ணாமல் நான் என்றாவது சாப்பிட்டதுண்டா? இன்னமும் என் மீது உள்ள கோபம் தீரவில்லை போலும்? என்னை மன்னிப்பாய். உன்னை மன்னித்துவிட்டேன் என குரல் கொடு, அப்போதுதான் நான் சாப்பிடுவேன் என கருடனை நோக்கி பார்த்துக்கொண்டே படுத்துக்கொண்டார்.

எல்லோருக்கும் ஒரே அதிர்ச்சி ஆகிவிட்டது! கருடன் தரிசனம் வேண்டுமென்றார். எப்படியோ சிரமப்பட்டு செய்து மரத்தில் வைத்தோம்! அது குரல் கொடுக்க வேண்டுமென்றால் இதற்கு என்ன செய்வோம்? என அனைவரும் கலவரத்துடன் வருந்தினர். இவர் உட்கார சக்தி இல்லாத் தன்மையினாலும் படுத்த நிலையில், "நான் ஏதோ தெரியாமல் தவறு செய்திருக்கிறேன். அதை மன்னிக்க முடியாமல் எல்லோர் முன்னிலையிலும் என்னை அவமதிக்கிறாய்! இப்படி என்னை அவமதிக்கிறவன் என்முன் தோன்ற வேண்டாமே! என் முன்னால் இருந்து கொண்டே என்னோடு பேசாதிருந்தால் நான் மூன்று வருஷ காலமும் உன்னைப் பார்த்தேன், பேசினேன், அவரும் பேசுவார் என்பது பொய்யாகிவிட்டதே.

ஹே கிருஷ்ணா...! ஹே ப்ரபோ...!! "இனி நான் இருப்பதில் அர்த்தமே இல்லை. இதோ நானும் அங்கேயே வந்துவிடுகிறேன்" எனக் கதறியவண்ணம் தவழ்ந்து சென்று அருகில் கிடந்த உரலில் தம் தலையை மோதினார்! ஒரு முறை மோதலில் இரத்தம் கசிந்தது. இரண்டாவது முறை மோதச் செல்கையில் சிலர் தலையை பிடிக்கச் செய்தனர். பிடிக்க வந்தவர்களை ஒரு உதறு உதறித் தள்ளினார். (அந்த அசுரபலம் எப்படி வந்ததோ யாம் அறியோம்) **ஹே.. கண்ணா..! நீ பேசு** என ஓர் உரத்த குரலுடன் மோதப் போகும் போது

### "அந்த பொம்மைக் கருடனும் உண்மையானது".

அத்தோடு நிற்கவில்லை. மும்முறை சத்தம் உண்டு பண்ணி அவர் வீட்டின் மேலே வலம் வந்து, அனைவர் தலையிலும் படும்நிலையில் **விசிறி கொண்டு வீசியது** போல் தாழ்ந்து பறந்து விரைந்து சென்று அதே பனையில் அமர்ந்தது. சிறகை விரித்து பலமுறை குரல் கொடுத்தது, பத்து நிமிஷம் கழித்து ஆனந்தமாக பறந்து சென்றது அந்த பொம்மை (உண்மை) கருடன்.

அந்த உத்தம பக்தரும் மற்றவர்கள் சொன்ன பொம்மைக் கதையை நம்பவில்லை! எமதய்யன்! பக்தபராதீனன்! தீனசகாயன்! **என்றும் எமக்கு உண்மையாகவே** இருக்கிறான். நீங்களும் நானும் பொம்மைகளே. நம்மை ஆட்டுகிறான் நாமும் ஆடுகிறோம் என சொல்லி அவர் விரதம் முடிந்ததால் உணவு உண்டார். முன்போலவே ஸ்ரீபகவானும் அவர் ஆசையை பூர்த்தி செய்தார். இது திருமந்திர நகரில் எம் முன்னால் நடந்த ஓர் சம்பவம்.

தம்பீ! இதைப்போலவே நீங்கள் ஒரு பாம்பை அடித்திருக்கலாம்! அதை இறந்த பாம்பு என நீங்கள் கருதலாம்! **அது கதை!** ஆனால் இன்று நீங்கள் கண்டது **தற்காலிக உண்மை**. இறைவன் சர்வவியாபி! **அவன் இல்லாத இடம் இல்லை! அவன் அறியாத பொருள் இல்லை!**

இதனால்தான் பெரியவர்கள் பாடினார்கள்:

"கூப்பிட்ட **குரலுக்கு வருவேன்** என்றான் கீதையிலே கண்ணன்".

"பார்ப்பவர் **கண்ணுக்கு தெரிவேன்** என்றான் பாரதத்தில் கண்ணன்".

இங்கு **கூப்பிடும் குரலும், காணும் காட்சியும்** ஒன்றுபட வேண்டும். **ஒன்று ஒலி; ஒன்று ஒளி.** இதில்தான் இந்த இல்லாத ஜகம் கேளாததைக் கேட்டதாகவும்; பார்க்காததைப் பார்த்ததாகவும் மனமாயை கொண்டு மூடிக்கொள்கிறது! இதுவே மறைக்கும் **ஜீவபோர்வையாகும்!**

குழந்தாய்!

**பார்வையை ஒன்றுபடுத்து!**
**காட்சியை ஒன்றுபடுத்து!**

ஒன்றுபடுத்து என்றால் அனைத்துக்கும் மூலமானவன் அவனே! அவனன்றி காட்சியும் இல்லை, ஓசையும் இல்லையென முடிவில் உறுதி பண்ணு!

"நீயன்றி நான் யார்? என் நினைவு யார்? என் நெஞ்சகம் யார்? தாயன்றி சூலும் உண்டோ சாற்றாய் பராபரமே" என்றார்கள்.

**"அதுவே நாம்; நாமே அது"**

என்ற உறுதியான நிச்சயத்தினால் அது நம் சுயஅனுபவமாகுமேயன்றி எத்தனை **'கரும உபாசனை'** பண்ணினாலும் மனதிலுள்ள பேதபுத்தியானது சாமான்யமாய் விலகாது.

மேலே கூறிய இரு கதைகளும் ஸ்வயமாக அனுபவித்ததாகும்.

**உண்மையில் ஒன்றுபட்டால், மனம் மஹத்தானால்**

**இல்லையென மறைக்கவும் (மறக்கவும்) முடியும்!**

**இங்கே மனம் மஹத்!**

**உண்டு என நிரூபிக்கவும் (ஏற்கவும்) முடியும்!**


**இங்கே மனம் மலினம்!!**


**உன் மனம் இல்லை இல்லை இல்லை இல்லை இல்லை இல்லை இல்லையே;**

**இல்லையென்ற தில்லையில் (இடத்தில்)**
**இல்லையென்பதும் இல்லையே!**
**இது ஸத்யம். உண்மை இருக்கிறது!**

**எல்லாம் நீ!**

Cyan Magenta Yellow blacK





# பயமே பலிதம்!

கட்டையில் கள்வனோ பேயோ வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;
கயிற்றில் பாம்பு வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;
மரத்தில் யானை வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;
கல்லில் நாய் வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;
கிளிஞ்சலில் வெள்ளி வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;
கானலில் ஜலம் வந்ததும் இல்லை, அது போனதும் இல்லை;

**"ஆனால் வந்ததே! அது உன் மனோமய (பிராந்தி) மயக்கம்!"**

இந்த மனதிற்கு உடல் உலக பொருள்களின் **போதை** மயக்கம் இல்லையானால் ஒன்று இரண்டாகவோ, பலவாகவோ அவஸ்யம் தோற்றாது. இது பார்த்துப்பார்த்து **பழகிப்போன தோஷம்.**

நீ பழக்கத்தை விடமுயன்றாலும் **உன் பந்த ஜகஜீவர்கள்** ஒலியாலும், காட்சியாலும் **பெறுவதைப் போல் தோற்றும்** இன்பதுன்பத்தை தூண்டிவிட்டுக் கொண்டே இருப்பார்கள்! ஆகவே இந்த பயப்பிராந்தியை **மறக்கவும், மறுக்கவும்** முடியவில்லை.

1. சித்திரங்களை விசித்திரமாக பார்த்தாய்! அதாவது மண், மலை, மரம், செடி, கொடி முதலியவைகள் **அசையா சித்திரம்தானே!** அவை அசையாததுதானே! உன் மனோமய எண்ணத்தால் மரம் செடிகொடிகளை கோடானுகோடி நாம ரூபமாகவும் அவைகளை சுவைக்கும் அசைவினால் குணதோஷங்களையும் **விசித்திரமாக** கற்பித்து பின் அவைகளை விடமுடியவில்லை. அதேபோல் மண் மலைகளை ஆலயமென்றும், வீடென்றும், இவைகள் பல சேர்ந்தது ஊர் என்றும், இவைகள் பல சேர்ந்தது நகரம் என்றும், இவைகள் பல சேர்ந்தது தேசம் என்றும், இவைகள் பல சேர்ந்தது இப்பூமியென்றும், இவைகளை **எனது** என்ற குணதோஷத்தினால் **விசித்திரமாக** கற்பித்து பின் அவைகளை **மறக்கவும், மறுக்கவும்** முடியவில்லை.

2. சிற்பங்களை ஜீவசொரூபமாக பார்த்தாய். அதாவது எண்பத்துநான்கு லட்சம் ஜீவகோடி தூலங்களையும் **வினையினால்** அசைவதை விளையாட்டாகப் பார்க்காமல் **வினோதமாக**

பார்த்தாய். அதில் உன் மனம் **குணதோஷத்தினால்** பின்னிக்கொண்டது. அதனால் நடப்பன, ஊர்வன, நீந்துவன, பறப்பன என நாலு வர்ணமாக பிரித்து கோடானுகோடி நாமரூபங்களையும் கொடுத்து அந்த எண்ணங்களையும் மறக்கவும், மறுக்கவும் முடியாமல் **"ஆப்பு அசைத்த குரங்கு போல"** மாட்டிக் கொண்டால் இதற்கு யார் பொறுப்பு?

## ஆப்பு அசைத்த குரங்கு:

ஒரு விறகுவெட்டி ஒரு மரத்துண்டை பிளப்பதற்காக நுனிப்பாகத்தை அடுத்து ஒரு ஆப்பு வைத்து சம்மட்டியால் அடித்தான். முக்கால்பாகம் மரத்தினுள் ஆப்பு சென்றது. அந்த மரம் நுனிப்பாகத்தில் ஒரு விரிசல் கண்டது. அதை அடுத்து அந்த ஆப்பின் சமதூரத்தில் இன்னொரு ஆப்பு அடித்தான். அதனால் அந்த மரத்தின் நுனிப்பாகத்தின் விரிசல் அதிகமானது. மூன்றாவது ஆப்பை சமதூரத்தில் வைத்து அடித்தானானால் மரம் பிளந்து இரு கூராகிவிடும். மூன்றாவது ஆப்பு அடிக்க எத்தனிக்கையில் உடன் இருந்த சகதொழிலாளி, நண்பா! வா சாப்பிட்டுவிட்டு வந்து வேலை பார்க்கலாம் என்றான். இவனும் சரியென சம்மதித்து மூன்றாம் ஆப்பை வைக்காமலேயே சம்மட்டி, கோடாரி மற்றும் சாதனங்களை அங்கேயே அப்படியே போட்டுவிட்டு தம் நண்பனுடன் சேர்ந்து உணவருந்த சென்றுவிட்டான்.

ஒரு முரட்டுக் குரங்கு இந்த தொழிலாளியின் தலைக்கு மேலே இருந்து கவனித்துக் கொண்டிருந்தது. இதனை கவனித்துக் கொண்டே மரத்தில் தாவுவதும், தழைகளையும், கொப்புகளையும் ஒடிப்பதுமாக **குரங்கு சேஷ்டையில்** இடைவிடாமல் பல காரியங்களை செய்துகொண்டிருந்தது. ஒரு வினாடிகூட அதனால் சும்மா இருக்க முடியவில்லை. இவன் சாப்பிடச் சென்றதும் இந்த மரத்தை பிளக்க இத்தனை சிரமப்படுகிறானே! இதை நாம் பிளந்து போட்டுவிடலாம் என மூர்க்கத்தனமாக அம்மரத்தின் நுனியில் சற்று அகலமாக பிளந்த பகுதியை தம் இருகரங்களாலும் பற்றி இழுத்து பிளந்து பார்த்தது, முடியவில்லை. முயற்சி செய்தும் பலன் இல்லை. அக்குரங்கு சற்று யோசித்தது. ஏன் முடியவில்லை? காரணம் என்ன என யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தது.

இந்த கனமான இரும்புத்துண்டு இரண்டையும் (ஆப்புகளை) ஏன் இதில் சொருகி வைத்திருக்கிறான். இந்த மனிதன் மூளை இல்லாதவன். இந்த இரும்பை சொருகி வைத்ததால்தான் இம்மரத்தை பிளக்க முடியவில்லை. இந்த இரண்டையும் எடுத்து தூர எறிந்தால்தான் மரத்தை இலகுவாக பிளக்க முடியும் என (பின் விளைவுகளை கவனியாமல்) அந்த இரண்டையும் அசைத்து பிடுங்க ஆரம்பித்தது. நுனி பாகத்தில் உள்ளதை அதிக சிரமம் இல்லாமல் எடுத்து தூர எறிந்துவிட்டது. பின் அடுத்ததையும் எடுக்க எத்தனித்தது. அந்த ஆப்பை பற்றி அசைக்கும்போது மரத்தின் பிளந்த பகுதிக்குள் தம் வால் இருப்பதை இது அறியவில்லை. அதிக சிரமப்பட்டு அசைத்து அசைத்து அந்த ஆப்பையும் எடுத்துவிட்டது. ஆப்பு எடுக்கப்பட்ட காரணத்தினால் மரப்பிளவு நீங்கி மரம் ஒன்றாகி விட்டது. மரப்பிளவு நீங்கி ஒன்றானதால் குரங்கின் வால் உள்ளே அகப்பட்டு நசுங்கிவிட்டது. ஆப்பை தூர எறிந்தது. தம் வாலை எடுக்க முடியாமல் 'கிரீச்.., கிரீச்.., கிரீச்..' என கத்தி அலறியது.

## இதன் உண்மை :

பொன்னை பொன்னாக காணாமல் பூஷணமாக அதாவது ஆபரணமாகக் கண்டாய். அந்த மயக்கம் நான் செய்கிறேன், என்னால் முடியும் என்ற **அஹங்காரம்** ஒரு கை;

வந்து, இருந்து, மாறும், மறையும் பொருளை **என்னுடையது என்ற அபிமானம்** ஒரு கை; இப்படி இரு கைகளினாலும்,

**"ஆசையினால் இன்னது செய்கிறோம் என உணராமல்"**

பழமென மயங்கி விளக்கில் விழுந்து மடியும் விட்டில் பூச்சியாகவும்,
கலைமான் தன் பேடுடன் மயங்கி **மரண நிமித்தம்** தன் முன் நிற்கும் வேடுவனையும் கவனியாமல், பின் நிற்கும் வேங்கையையும் உணராமல் **"க்ஷண போகத்தில்"** சிக்கிக் கொண்டது போலவும்,
ஆசையினால் அசைத்தாய், அகப்பட்டாய், அவதிப்படுகிறாய்.

இதற்கு இறைவன் பொறுப்பா? மஹான்கள் பொறுப்பா? உணர்வீர்! உன் மனோ பயத்திற்கு எம்முன் நடந்த சம்பவத்தை தந்து இதை முடிக்கிறோம்!

இந்த பைத்தியம் திருமந்திர நகரில் இருக்கும்போது பதனீர் (பனைமரப்பால்) அருந்துவதுண்டு. காலை ஆறு மணிக்கு சென்று ஒரு மரத்தின் பதனீர் மட்டும் அருந்தி வரும். ஒரு சமயம் நம் வீட்டின் பக்கத்தில் இருப்பவரும், தம் நண்பர்களுடன் அங்கு வந்தார்.


அனைவரும் பதனீர் சாப்பிட்டார்கள். இந்த பக்கத்து வீட்டுக்காரர் பதனீர் சாப்பிடும்போது பக்கத்தில் இருந்த உடை (முள்) மரத்திலிருந்து ஒரு ஓணான் (மிகவும் சிறியது இரண்டு இஞ்ச்தான் இருக்கும்) அங்கு தாவிக் குதித்ததில் இவருடைய பதனீர் பட்டையில் விழுந்து பின் தாவிக் குதித்து வெளியே சென்றுவிட்டது. ஆனால் அதே நேரம் பதனீரில் கிடந்த **ஒரு சீவிய குரும்பல்** (அதுவும் இரண்டு இஞ்ச் அளவுதான் இருக்கும்) இவர் வாயின் வழியாக வயிற்றுக்குள் சென்றுவிட்டது. **இந்த இரண்டையும் இது அறியும்; அவர் அறியார்.** அவர் ஓணான் பதனீரில் விழுந்ததை அறிவார்; அது வெளியே தாவிக் குதித்தோடியதை அறியார்; ஒரு குரும்பை பதனீரில் விழுந்ததை அறியார். அது வாயின் வழியாக செல்லும்போது தவறுதலாக அது ஓணான்தான் என்று உணர்ந்தார்.

உடனே ஒரே அலறல்! ஐயோ! ஓணானை விழுங்கிவிட்டேனே! அது உள்ளே சென்று என் குடலை எல்லாம் அரித்து தின்றுவிடுமே! குடல் அரித்துப் போனால் நான் சாப்பிடுவது அனைத்தும் ஜீரணமாகாதே. நான் நாளை இறந்து போவேனே! என் மனைவி மக்களை காப்பது யார்? இப்படி நிர்க்கதியாக விட்டுவிட்டு நான் சாகப்போகிறேனே!

நான் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி சம்பாதித்த பணம் யார் யாரிடம் எல்லாமோ கொடுத்து வைத்திருக்கிறேனே! அதை என் மனைவியிடம் உடனே சொல்லிவிட வேண்டும். இப்போது விட்டுவிட்டால் அப்புறம் நினைவு தப்பிவிடும். அப்புறம் சொல்ல முடியாதே என அலறி அடித்துக் கொண்டு, அவிழ்ந்த வேட்டியையும் தூக்கிப் பிடித்துக் கொண்டு தலைவிரி கோலமாக வீடு சேர்ந்தார். நாங்கள் அனைவரும் பின் சென்றோம்!

ஏ.. ஜீவனே! மனைவி மக்களை காப்பாற்ற வேணுமென்று துடிக்கிறாயே! உன்னை காப்பாற்றாமல் நீ அவர்களை எங்கு, எப்படி காப்பாய்? உன்னை காப்பாற்றும் இறைவன் உன்னைச்

Cyan Magenta Yellow blacK



சுற்றியும், உன் முன்னும், உன்னுள்ளும் இருக்கிறானே. "அவனை அலறி அழைக்காமல்" மனைவி, மக்கள், பொன், பொருள் என வீணாக ஏன் அலைகிறாய்? **"கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே"** என்பார்கள். கண்ட உண்மையை எவ்வளவோ திடமாகச் சொல்லியும் அவர் நம்பவில்லை.

எம்மிடம் அவர் சொன்னதாவது:

தம்பி! இதோ பார். உன் வேலையை பார்த்துக்கொண்டு போ! நான் ஓணானை விழுங்கிய வேதனையால் துடிக்கிறேன். உன் சமாதானம் எல்லாம் எனக்கு வேண்டாம். ஓணான் பதனீரில் விழுந்ததை பார்த்தவன் நான்! அதை விழுங்கியவன் நான்! இப்போ அவஸ்தைப்படுபவனும் நான்! என் கண் முன்னே நடந்த காட்சிக்கு சாட்சி ஏன்? நீ போ என கோபமாக புலம்பிவிட்டு, ஐயோ! ஓணான் குடலை கடிக்கிறதே! அங்கு ஓடுகிறது! இங்கு ஓடுகிறது! நான் இனி பிழைக்கமாட்டேன் என புலம்புகிறார். அவர் மனம் அவரை படாதபாடுபடுத்துகிறது. வாந்தி போகிறது, பேதி போகிறது. அவர் மரணாவஸ்தைபடுகிறார்!

மறுநாள் காலையில் சென்று பார்த்தது. அவர் வேதனை குறையவில்லை. அவர் நண்பர்களிடம் சொல்லி அவரை எப்படியாவது பனையடிக்கு கூட்டிவாருங்கள். ஒரு தந்திரம் செய்யலாம் எனச்சொல்லி தூண்ட, அவர்களும் அதிக பிரயாசைப்பட்டு கைவாகு கொடுத்து பதனீர் குடிக்கும் பனையடிக்கு அழைத்து வந்துவிட்டார்கள்.

அவர்களில் ஒருவரிடம் இது சொல்லிவைத்தபடி அவர் சொன்னார். ஏ.. மாடசாமி! இப்போ நீ இந்த ஓலை பட்டையை பிடித்து பதனீர் சாப்பிடு. இந்த பதனீர் வாடைக்கு அந்த ஓணான் வந்துவிடும் என உறுதியாக நம்பும்படி பேசி பதனீரை சாப்பிட வைத்தோம். அவர் பட்டையில் வாய்வைத்து பதனீரை சாப்பிட ஆரம்பித்தார். இது முன்னதாகவே அந்த உடை (முள்) கூட்டில் அதே மாதிரி ஒரு சின்ன ஓணானை பிடித்து கைகளில் மூடி வைத்திருந்தது. அவர் பட்டையில் அவர் அறியாமல் பின்புறமிருந்து போட்டுவிட்டது. அந்த ஓணானும் தப்பித்தோம், பிழைத்தோம் என பட்டையில் இருந்து தாவிக்குதித்து ஓடிவிட்டது. இதை பதனீர் சாப்பிட்ட இவர் கவனித்தார். ஆ... ஆ... ஆ... இந்த ஓணான்தான், இப்பத்தான் என் வயிற்றில் இருந்து வெளியே வந்து என் வாய் வழியாக தாவிக்குதித்து ஓடுகிறது. ஒரு நாளுக்குள் இது என்னை என்ன பாடுபடுத்திவிட்டது.

தெய்வாதீனமாக என் பொண்டாட்டியின் மாங்கல்யபலம் (இங்கும் தெய்வபலம் இல்லை) என்னை காப்பாற்றிவிட்டது என்றார். இப்போது வலியும் இல்லை, ஓணான் ஓடியதும் இல்லை; அது கடிப்பதும் இல்லை. வாந்திபேதியும் இல்லை.

ஹே.. அறியாமையின் ஜீவனே!

இந்த மனதிற்கு

**எத்தனை கோழைத்தனம்! எத்தனை திடவைராக்கியம்!!**

## எத்தனை கோழைத்தனம்:

ஐயோ! என்னிடம் பணம் இல்லையே வறுமையால் வாடுகிறேனே!

**...வறுமைதான்.**

ஐயோ! வியாதியால் சங்கடப்படுகிறேனே. எத்தனை வைத்தியம் பார்த்தும் குணமாகவில்லையே!

**...வியாதியின் முடிவு சாவுதான்.**

எத்தொழிலை தொட்டாலும் சிறப்பு இல்லையே! மீளவே முடியாதோ?

**....எத்தொழிலும் உன்னை அழிக்கும்.**

அவன் எவ்வளவு பாவம் செய்கிறான். அவன் நல்லா இருக்கானே. நான் தருமம் செய்து கெட்டுப் போனேனே!

**.....உண்மையில் அவன் நலம் பெறுவான்.**
**.....நீ கெட்டு அழிவாய்.**

எனக்கும் ஒரு நல்லவழி கிட்டாதா?

**....கண்டிப்பாக கிட்டாது.**

நானும் சந்தோஷம் அடையமாட்டேனா?

**....உனக்கு சந்தோஷம் இல்லவே இல்லை.**

என் மனைவி மக்களை காப்பாற்றக்கூட என்னால் முடியாதா?

**....கண்டிப்பாக முடியாது.**

## எத்தனை திடவைராக்கியம்:

இறைவா! நான் உன் கை பதுமை! நான் ரதம், நீ சாரதி!
என் மனைவி மக்கள் உன்னுடையதே! என் உடைமையும், என் தொழிலும் உன்னுடையதே!
இந்த உலகமாகிய நாடக மேடையில் என்னை ஆடி நடிக்கவிட்டிருக்கிறாய்!
என் ஒவ்வொரு செயலையும், அசைவையும் நீ கவனித்தே வருகிறாய்!
என் தேவைகளைக் கொடுத்தும், தேவையற்றதை எடுத்தும் எத்தனை சிறப்பாக காரியத்தை முடிக்கிறாய்!
உனக்குத்தான் என் மீது எத்தனை கருணை! எத்தனை வாத்ஸல்யம்! எத்தனை பரிவு!
உன் கருணையின் பார்வையில் எனக்கு வறுமை ஏது.... **இல்லை.**
உன் அன்புப்பார்வையில் எனக்கு வியாதி ஏது?.... **இல்லை.**
உன் தொழிலில் எனக்கு தாழ்ச்சி ஏது?.... **எந்த தாழ்வும் இல்லை**.

அன்புக் குழந்தைகளே!

**உங்கள் ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு பார்வையிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும்,**


**அவனையே காணுங்கள்.**
**அவனையே பேசுங்கள்.**
**அவனோடு உறவாடுங்கள்.**
**அவனோடு உரையாடுங்கள்.**

**உங்கள் வாழ்க்கை சுகம் பெறும், நலம் பெறும், முடிவில் ஒன்றாகும்.**
**இதுவே வைராக்கியம்!**


**எல்லாம் நீ!**




Cyan Magenta Yellow blacK











# மறுபடியும் ஸ்ரீபண்டரிபுரம்!

எம் ஸ்ரீகுருதேவர் திருமந்திர நகரில் பஸ் நிலையம் சமீபம் ஸ்ரீமந் நாராயணனுக்கு ஒரு ஆலயம் வைத்திருந்தார். அங்குதான் எம் ஸ்ரீகுருதேவரும் ஐம்பது வருஷமாக தங்கி இருந்தார். ஸ்ரீகுருதேவருடனே 1970 முதல் 1982 வரை பட்டும் படாமல், தொட்டும் தொடாமல், ஸ்ரீகுருதேவர் என்று அறிந்தும், தெரிந்தும் **உணராமல்** "ஐயா" என்றும், "ஒரு பெரியவர்" என்றும், "ஸ்ரீகுரு" என வார்த்தையாக மட்டும் பனிரெண்டு ஆண்டுகள் அனுபவித்தது ஒரு பைத்தியம். ஒரு சிஷ்யனுக்கு பனிரெண்டு வருஷம் ஸ்ரீகுருதேவருக்கு சர்வாங்க சேவை செய்ய கிடைப்பது மிகஅபூர்வம்.

எம் அன்பின் அமுதங்களே!

அவன் ஆணையின்படி பனிரெண்டு ஆண்டுகள் ஸ்ரீசத்குரு சேவை பூர்த்தி ஆகியது போலும்? 1982ல் திரும்பவும் ஸ்ரீபண்டரியில் சென்று உறைந்துவிடுவது என சங்கல்பித்து சென்றது அந்த பைத்தியம். மூன்று தினங்களில் அது திருமந்திர நகரை விட்டு ஸ்ரீபண்டரிபுரம் போய் சேர்ந்தது. ஒருவாரம் கழித்து அந்த பைத்தியத்திற்கு முன்வினையின் காரணமாக ஓர் உபாதை வந்தது போலும்? வயிற்று நோவு, வயிற்றோட்டமும், ரத்தமும், ஜலமும் சேர்ந்து அடிக்கொருதரம் செல்லும் நிலை உண்டாகியது. உடல் அதிகமாக சோர்ந்துவிட்டது. அந்த சோர்வு மரண அனுபவத்தை காட்டியது.

சரி இனி இந்த தூலத்தின் கணக்கு முடிகிறது போலும் என முடிவுசெய்து, முடிந்தால் இப்புண்ணிய நதியாகிய ஸ்ரீசந்திரபாகா நதியுடன் இந்த தூலத்தை விட்டுவிடலாம் என முடிவு பண்ணி ஜனசந்தடியற்ற ஓர் இடத்தில் படுத்துவிட்டது. அந்த இடத்திலேயே மலஜலம் போய் சக்தி அற்று ஒவ்வொரு கருவிகளாக ஒடுங்கி வந்தது. மரணத்தின் தன்மையை உணர வைத்தான் போலும்? தூலம் முடியப் போகிற காரணத்தினால் அந்திம காலத்தில் அவனை நினைத்து முடிக்க கற்பனை செய்து உருகி அழைத்தது அந்த பைத்தியம்.

அதாவது "ஹே.. கண்ணா! நல்ல இடத்தில் கொண்டு வந்து அமர்த்தி இருக்கிறாய்! புண்ணிய பூமி, புனித நதி இது போதும் ஸ்வாமி! எவருக்குமே கிடைக்காத பாக்கியம் இந்த பைத்தியத்திற்கு அருளி இருக்கிறாய்! ஸ்ரீபஞ்சவர்களின் பேரன் ஸ்ரீபரீட்சித்துக்கு ஸ்ரீகங்கைக் கரையை அமைத்துக் கொடுத்தாய். ஸ்ரீகங்கையிலேயே ஸ்ரீபரீட்சித்து உபவாசம் இருந்து பிரயோபவேசம் செய்து கொண்டான். அதுபோல் இந்த பைத்தியத்திற்கும் ஸ்ரீசந்திரபாகா (பீமா) நதியை அமைத்துக்

கொடுத்திருக்கிறாய்! உன் மஹிமையை என்னவென்று சொல்வது? எதுவும் காலம், பக்குவம் அறிந்து செயலாற்றுகிறாய். ஹே.. கருணைக்கடலே! கோபாலா! இத்துடன் இதை முடித்து விடு'' என பிரார்த்தித்தது.

அதுசமயம் அந்த பைத்தியத்தின் பின்னால் அதன் பிடரியில் தடவிக் கொடுக்கும் ஓர் ஸ்பரிஸ உணர்ச்சி தெரிந்தது! திரும்பி அவன் நாமாவை கண்ணா... என உரக்க அழைக்கும்போது ஓர் வெள்ளைநிற பசு தன்நாவால் இதை தடவிக் கொடுத்தது, உட்கார்ந்த நிலையில் அது அந்த பசுவின் தலையைப் பற்றி **முத்தமிட்டு தடவிக் கொடுக்க அந்த பசு** தம் கொம்புகளிரண்டினாலும் அந்த பைத்தியத்தின் இரு கைகளின் இடையே கொடுத்து தூக்கி நிறுத்தியது. எப்படியோ அதன் ஸ்பரிஸ உணர்ச்சியால் எழுந்து நிற்பதற்கு திறன் கிடைத்தது. அடுத்து அந்த பசு பின்புறமாக வந்து தம் தலையைக் கொண்டு அந்த பைத்தியத்தின் முதுகில் கொடுத்து தள்ளி நடக்கும்படி பணித்தது, நடக்க சக்தி வந்தது! எப்படியோ அந்த கோமாதா தள்ளிச் செல்ல அது நடந்தது போலும்.

சற்று தூரத்தில் **ஸ்ரீராம் மந்திர்** (ஆலயம்) இருக்கிறது. அது மிக பிரசித்தி பெற்றதாகும். அதில் சிற்பங்களும், சித்திரங்களும் புராண இதிகாசங்களையும், ஸ்ரீஅடியார்களின் வாழ்க்கை வரலாறுகளையும் காட்டும் வகையில் திவ்விய சொரூப காட்சிகளாக அமைந்திருக்கிறது! அங்கும் ஓர் நான்கு தடவையாவது சென்று தரிசித்திருக்கும். உள்ளே சென்றால் வெளியேவர இரண்டு மணி நேரமாவது ஆகும். சுரங்கப்பாதைபோல் தெய்வ அம்சமாக அமைந்திருக்கிறது. அதை ஓர் அடியார் நிர்மாணித்திருக்கிறார். **கைகாட்டிபாபா** என்பது அவர் திருநாமாவாகும். அங்கு பல இடங்களில் இருந்து பணம் வசூலிக்கப்படுகிறது. வரும் யாத்திரைவாசிகளும் பணம் தருகிறார்கள். தினமும் நூறு சாதுக்களுக்கு குறையாமல் அங்கு போஜனம் செய்விக்கப்படுகிறது.

ஸ்ரீபண்டரி வரும் யாத்திரைவாசிகளும், சாதுக்களும் அங்கு செல்லாமல் வரமாட்டார்கள். அந்த ஸ்ரீகைகாட்டிபாபாவும் 1970ல் சென்ற சமயம் புனித யாத்திரை பயணத்திற்கு ஆசி வழங்கினார். 1982ல் செல்லும்போது அவரும் ஸ்ரீபூர்ணசமாதி ஆகிவிட்டார் போலும்? அந்த ஆலயம் வரை அந்த கோமாதாவும் அந்த பைத்தியத்தை தள்ளிச் சென்று அருகே விட்டுவிட்டு சென்று விட்டது. அந்த பைத்தியம் ஆயாசம் மேலிட்டு ஆலய வாயிலிலேயே படுத்துவிட்டது.

சற்று நேரத்தில் ஓர் **தந்தையும் மகளுமாக** இருவர் வந்தனர், பக்கத்தில் அமர்ந்தனர். தம் தந்தையை நோக்கி அந்த பெண் குழந்தை தமிழில் கேட்கிறது, அது ஆச்சர்யமானதே! அப்பா இவர்தானா? அவரும் ஓர் புன்முறுவலுடன், 'ஆமாம் ஆமாம்' எனச்சொல்லி அதன் முகத்தை சற்று கூர்ந்து கவனிக்கிறார். அந்த பெண் குழந்தையின் வயது சுமார் எட்டு இருக்கலாம். நெற்றியில் அகலமான பொட்டு, கைகளில் நிறைய வளையல், திருவடியில் ஒரு ஜோடி சிலம்பு, பாவாடை சட்டை, வட்ட வடிவம் கொண்ட முகம் இத்யாதி வடிவத்துடன் எம்பிரான் அருகில் நிற்கும் ஸ்ரீரகுமாயி (ருக்மணி) போல் காட்சி கொடுத்தாள்!

அதிகம் சோர்ந்து விட்டாரே என அவள் சொல்ல, ஸ்திரமான மனம் படைத்தவன் என அவர் சொல்ல, இருவரும் சேர்ந்து சிரித்துக் கொண்டே அருகில் அமர்ந்த வண்ணம் அதன் தலையைப்பற்றி மெதுவாக தூக்க, அதுவும் எப்படியோ எழுந்து அமர, அந்த குழந்தை தாம் கொணர்ந்த செம்பு ஜலத்தை

Cyan Magenta Yellow blacK



அதன் முகத்தில் தெளித்து அந்த பைத்தியத்தின் முகத்தை அலம்பி தம் பையில் தயாராக வைத்திருந்த டவலை எடுத்து அதன் முகத்தைத் துடைத்து ஒரு தாயின் நிலையில் அந்த பைத்தியத்தின் எதிரே அமர்ந்து முதலில் ஓர் இலையைப் போட்டு செம்பு ஜலத்தை இலையில் தெளித்து தாம் கொணர்ந்த டிபன் கேரியரை திறந்து பாத்திரத்தில் இருந்த அன்னத்தை எடுத்து வைக்க அது தயிர் சாதம் (அதை எங்கு, எப்படி தயாரித்தாளோ தெரியவில்லை) எடுத்து இலையில் வைத்தாள். ஊம்! மெதுவாக அள்ளி உண்கிறாயா? அல்லது ஊட்டி விடட்டுமா என பரிவுடன் கேட்க, உடன் வந்த பெரியவர் புன்னகையுடன் அந்த பைத்தியத்தை நோக்க அந்த ஒரு கணம் அவர் சாட்சாத் ஸ்ரீவிடோபாவாக தோற்ற, அவள் அன்னை ஸ்ரீரகுவாக தோற்ற அந்த நேரத்தில் அந்த வியாதிக்கு உணவுதான் முக்கியமென அறிந்தான் போலும். அதையே ஊட்டி விடட்டுமா என எம் அன்னை பரிவுடன் கேட்கிறாள் என்றால் எவ்வளவு அன்பு? எத்தனை பரிவு? எத்தகைய கருணை? "நம் நம்பிக்கையும், வைராக்கியமும் அவன் அருளால் பெற்றால் எதுதான் நடவாது?" ஓர் உண்மைத் தாய்க்கும், தாயை மறக்க முடியாத சேய்க்கும் உள்ள நிலையை பாருங்கள்,

**நீங்களும் ஓர் பைத்தியமானால் இதை அனுபவிக்கலாம்.**

அன்பின் செல்வங்களே!

அவள் மூன்று வாய் பரிந்து ஊட்ட மீதியை அந்த பைத்தியமே தம் கரத்தால் அள்ளி உண்ண, உண்ட திருப்தியுடன் மீதி ஒரு நபர் உண்ணும் அளவு அன்னம் மீதியாக இருக்க அதை **உச்சிஷ்டமாக அந்த இருவரும் ஏற்றார்கள்.** அந்த நிலையை உணரும் போது அந்த காட்சியானது ஸ்ரீபகவானும், ஸ்ரீஜனாபாயும் உச்சிஷ்டம் சாப்பிடும்போது ஸ்ரீநாமதேவர் கண்டு ஆனந்தக்கண்ணீர் வடித்து, அந்த உச்சிஷ்டம் தமக்கும் கிடைக்காதா? என ஏங்க ஸ்ரீநாமதேவர் மனோநிலை கண்டு, ஸ்ரீபகவானும் தம் திருக்கரத்தால் ஸ்ரீநாமதேவருக்கு ஊட்டினார். அதை நினைவுபடுத்தி மனம் உருகி கண்ணீர்விட்டது அந்த பைத்தியம். அதை அவர் கவனித்தார். இன்னும் வேண்டுமா? இந்தா! என தம் கரங்களால் மும்முறை அந்த பைத்தியத்திற்கு ஊட்டி விட்டார்.

**"இந்நிலை நீங்களும் பெற வேண்டுமானால் அபிமான அஹங்காரத்தை விடுங்கள்". ஆனால் ஆச்சாரம், அனுஷ்டானம், குல அபிமானம், கோத்திரம், உயர்ந்தது, தாழ்ந்தது, எச்சில் என தலையிட்டு உங்களை நீங்களே கட்டிக் கொண்டீர்களே! இந்த கட்டுகளை நீங்கள் அவிழ்த்துக் கொண்டால் நீங்களும் அடுத்த கணமே எம் ஆனந்தம் பெறமுடியும்.**

ஓ.. மழலைகளே!

அந்த பைத்தியத்திற்கு அத்துடன் தூல உபாதை நீங்கி விட்டது. தூலத்திற்கு புதியசக்தி வந்துவிட்டது. அடுத்து பசி வரும் நேரமெல்லாம் அவன் நாமாவை உச்சரித்து கைகளை நீட்டினால் உணவாகவோ, பணமாகவோ அவன் அருளுகிறான். அந்த நேரம் தேவையை பூர்த்தி செய்ய மட்டும் வாங்கி திருப்தியுறும் அந்த பைத்தியம். தேவைக்கு மிஞ்சி நாளைக்கு என சேர்த்து வைப்பதில்லை. போதும் என்ற நிறைந்த மனம் வரும்போது பெருகும் பேரானந்தம் நாளடைவில் ஸ்ரீபிரம்மானந்தமாக மாறிவிடுகிறது.

ஓர்சமயம் ஒரு வீட்டின் முன் நின்று ஸ்ரீபகவான் நாமாவைப் பாடிக் கொண்டிருந்தது. ஐந்தாவது வாசலில் இருந்த தாயாரின் மடியில் அமர்ந்திருந்த ஓர் குழந்தை தத்தித்தத்தி நடந்து இரண்டு ரொட்டித்துண்டுகளை எடுத்து வந்து ஐந்து படிகளையும் அமர்ந்து அமர்ந்து இறங்கி அருகில் வந்து அந்த ரொட்டிகளை அந்த பைத்தியத்தின் கைகளில் கொடுத்துவிட்டு இரண்டு திருவடிகளிலும் இரண்டு நயனங்களையும் பதித்து நமஸ்கரித்து எழுகிறது. அந்த காட்சியை கண்டதும் அன்று கோகுலத்தில் எம் கண்ணன் ஓர் நாவல்கனி விற்ற மூதாட்டிக்கு காட்சி கொடுத்த பாவனை அப்படியே பிரதிபலிக்கிறது!

அந்த காட்சியை அந்த பைத்தியம் எண்ணி தம் கண்களில் கண்ணீர் பொங்க அந்த பிஞ்சுக்கரங்களை தம் கண்களில் ஒற்றி ஸ்ரீதிருவடி ஸ்பரிசமாக ஏற்று ஆசி கூறி பகவான் நாமாவை உச்சரித்து செல்கிறது, அதன் தாய் அருகில் நிற்கிறாள். குழந்தையின் செய்கையையும் அங்கு நடந்த நிகழ்ச்சியையும் கண்டு அளவில்லா ஆனந்தம் கொண்டு வீதியில் வந்து அதை நமஸ்கரித்து பிரதட்சணம் செய்து நிற்க தெய்வாதீனமாக திருத்துளாய் மடிமீது இருக்க அதை பிரசாதமாக கொடுத்தது. அந்த அன்னையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக தம் இல்லம் ஏகினாள்.

எம் செல்வங்களே!

அந்த பைத்தியம் தினமும் அதிகாலை மூன்று மணிக்கு எழுந்து சந்திரபாகா நதியில் நீராடி திருப்புண்டரம் அணிந்து நான்கு மணிக்கு கோவில் திறக்கும் நேரத்தில் ஆலயத்தினுள் செல்லும்! அங்கு ஸ்ரீபண்டரிநாதனுக்கு எண்ணைக்காப்பு சாத்தி, சந்தன அபிஷேகம் செய்து, பால் அபிஷேகம் செய்து அடுத்து தயிர் அபிஷேகம் செய்து, அடுத்து கை நிறைய வெண்ணையை எடுத்து அவன் வாயில் வைத்து சாப்பிடும் பாவனையாக சில பாடல்களைப் பாடி மங்கள ஆரத்தி செய்து அபிஷேக சந்தனம், அபிஷேக பால், தயிர் முதலியவைகளை பிரசாதமாக கொடுக்கிறார்கள். ஒரு மாதம் வரை இந்த காட்சியை அனுபவித்து பேரானந்தம் அடைந்தது. பத்து தினங்கள் வெளியே சென்று கை நீட்டி பகவான் நாமாவை பாடி தர்மார்த்தி எடுத்து பசி உபாதையை குறைத்தது. பிறகு ஓர் வைராக்கியம் பிறந்தது. நீ கொணர்ந்து கொடுக்க காத்து இருக்கும்போது ஏன் வீணாக அலைய வேண்டும்? என்ற எண்ணத்தை கொடுத்தான்.

"**தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே**" என்றபடி அமைதியாக இருந்துகொண்டு காலை அபிஷேக ஆராதனைகளை முடித்து பிரசாதம் உட்கொண்டு நதிக்கரைக்கு வந்துவிடும். அங்கு அன்னை ஜனாபாய் ஆஸ்ரமத்தில் அமர்ந்துவிடும் அல்லது அருகே உள்ள துகாராம், ஞானேஸ்வரர், நாமதேவர், புண்டரீக பக்தர், கோராகும்பர், சாமந்தர், போசலபாவா, குபராபாய், கானோபாத்ராபாய், தத்தாத்ரேயர் ஆகியோர் ஆஸ்ரம ஆலயங்களை தரிசித்து அமர்ந்துவிடும். ஆங்காங்கே சகலமும் எது எதை எப்படி நடத்த வேண்டுமோ அவைகளை எவ்வித குறையுமின்றி நடத்தி வைத்துவிடுகிறான், கிடைத்தால் உண்பது கிடைக்கவில்லையானால் அதையும் தேடுவதில்லை. அவன் நாமாவே சகலத்தையும் பாவனம் செய்துவிடும்.

ஆலயத்தில் ஓர் ஓரமாக ஜனசந்தடியில்லாத இடத்தில் அவனுடைய நாமதியானத்தில் அமர்ந்துவிட்டால் வருகிற ஒரு சிலர் ஏதாவது பைசாவை போட்டு விடுகிறார்கள். இதை அறிந்த அந்த ஆலய காவலாளியாக இருந்த ஸ்ரீரங்கன் அந்த பைத்தியத்தை கடிந்துரைத்தான். ஏ.. சாது! **இந்த**

**ஆலயத்தில் அமரக்கூடாது.** வெளியே போ! என கோபமாக விரட்டினான் போலும். அந்த பைத்தியத்தின் நிலையை பாருங்கள்? அதுவும் இது அவன் சூது என உணர்ந்தது. இனி கோவிலுக்குள் செல்வதில்லை என உறுதிகொண்டது.

கோவிலுக்கு சற்று (மூன்று கி. மீ) தூரத்தில் ஓர் கிராமத்தில் அமைந்த பக்த மீரா, சாந்தசக்கு, அமைதியின் ஜனா ஆகியோர் ஸ்ரீகண்ணனை தொட்டில் கட்டி தாலாட்டு பாடி கொண்டாடியதாக கூறும் ஆலயங்களில் சென்று மூன்று தினங்கள் தங்கியது. மேலும் கோவிலுக்குள் நுழையாதே என்ற வார்த்தைகள் அந்த பைத்தியத்தின் மனதை மிகவும் புண்படுத்தியது.

ஜனா ஆஸ்ரமத்தில் நதிக்கரையில் இரவு தூங்க முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க கதறிக்கதறி அழுதது! ஏ.. மாயவா! மாதவா! மதுசூதனா! ஹே.. சூஸ்திரதாரி! இது என்ன சோதனை? உன் இல்லத்திற்கு வரக்கூடாது என சொல்லிவிட்டாயே? இது நியாயமா? நாடு விட்டு நாடு வந்து இனம் தெரியாத பூமியில் பாஷை தெரியாத ஊமையாக இருக்கும் ஓர் அனாதை, ஓர் அபலை நீ ஆதரவு தருவாய் என உன் இல்லத்திற்கு வந்தால், இங்கு வராதே! இங்கு நுழையாதே! என நீ சொன்னால் இந்த அனாதை எங்கு செல்லும்? இதற்கு புகலிடம் ஏது? ஹே.. துளசீதரா! தாமோதரா! நீயே இங்கு வரும்படி ஆணையிட்டாய், வந்தவனை உள்ளே வராதே என விரட்டுகிறாய்! இதுதான் நீ செய்யும் தர்மமா? இதுதான் கருணையா? இப்படி சோதித்து சோதித்து என்ன பலனைக் கண்டாய்? சோதனைக்கு ஓர் அளவு கிடையாதா? நீ நடத்தும் நாடகத்தை யார் அறிவர்? என்ன காரணத்திற்காக வரவேண்டாம் என்று சொன்னாயோ?

ஏ.. பிரபோ! கோடானுகோடி ஜீவர்களுக்கு புகலிடம் கொடுத்த நீ இந்த ஜீவனை மட்டும் அலட்சியப் படுத்துவானேன்? என்ன குற்றம் கண்டாய்? அப்படியே தவறு இருந்தாலும் பொறுப்பது உன் கடமை இல்லையா? உன் ஆலயத்தின் உள்வந்து தரிசிக்க முடியாத ஜன்மா ஓர் ஜன்மாவா? இந்த ஜன்மா இனியும் தேவையா? எம் ஐயனே! புகலிடம் உன் திருவடியே என பற்பல விதமாக அழுது புலம்பி படுத்துவிட்டது. அதை தூக்கம் என சொல்ல முடியாது! பேருணர்வில் ஒன்றி லயித்திருந்தது! இரவு சுமார் பனிரெண்டு மணி இருக்கும் அந்த பைத்தியத்தின் தலையில் ஓர் கை தடவி வருடிக்கொடுத்தது. சோர்ந்து போயிருந்த அது தலையை நிமிர்த்தி நோக்கியது. அங்கே **அவன் அதனருகில் அமர்ந்திருந்தான்**. அப்படியே அவன் திருவடியை கெட்டியாக பற்றிக் கொண்டது. அந்த நிலையை எப்படி எழுத முடியும்? சேதனா சக்தி வந்தது. அவன் மடியில் அமர்த்திக் கொண்டான்.

அவன் சொன்னதாவது:

குழந்தாய்!

அதிகமாக நொந்து போனாய் போலும்? பாவம் உன் நிலை கண்டால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது! உன்னை திக்கற்ற நிலையில் விட்டு விடுவோமா? உன் போன்ற அடியார்கள் நிலையில் எத்தனை வாத்ஸல்யம் உடையோமாக இருக்கிறோம்? வினை வசத்தால் சோர்ந்து போகும்போது எம் கருணையை மறந்து விடுகிறாய்! இந்த கலியுகத்தின் சூழ்நிலை அப்படி அமைந்திருக்கிறது. யாம் என்ன செய்வோம்? இதற்கு யாம் பொறுப்பல்ல. இந்த கலியுக தர்மம் அப்படித்தான் இருக்கும். தர்மத்தை வகுத்தவனே தர்மத்தை குறை கூறலாமா? அங்கு விக்ரஹ ரூபியாக இருக்கும் எம் முன் ஐந்து, பத்து,

இருபது என பணம் போடப்படுகிறது. அப்படி பணம் போட்டவர்களுக்குத்தான் எம்மை தரிசிக்கவோ, ஆலிங்கனம் செய்யவோ, பிரசாதமாக எம் மாலையை கொடுக்கவோ செய்கிறார்கள். உன் போன்ற பரதேசியை 'சலோ.. சலோ..' என்று விரட்டுகிறார்கள். பணத்திற்குதான் மதிப்பு தருகிறார்கள். உண்மை சாதுக்களுக்கு இங்கு ஆலயத்தில் மதிப்பு இல்லை.

ஆலயம் ஓர் வியாபார ஸ்தலமாகிவிட்டது. இந்நிலையில் யாம் என்ன செய்ய முடியும்? உன் போன்ற அடியார்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களுக்கு சேவை தருவோம். அதுவே எம் பாக்கியமாகும். இன்னமும் சில காலங்களில் அடியார்களே ஆலயங்களுக்குச் செல்ல முடியாத நிலை உருவாகும். இனி நீ இங்கு வர வேண்டாம்! யாம் அவஸ்யம் நீ அழைக்கும் போதெல்லாம் வந்து விடுகிறோம். உன்னை விட்டு என்றும் எந்நிலையிலும் அகலோம். ஆலயத்திற்குள் உன்னை வரவிடவில்லை என சாபம் கொடுத்துவிடாதே! உன் நன்மைக்காகவும், எம் சேவைக்காகவும்தான் உன்னை உள்ளே வரவேண்டாம் எனச்சொன்னோம் என சொல்லிய வண்ணம் ஸ்ரீபிரபு அதன் விரிப்பில் சயனித்துக் கொள்ள, அந்த பைத்தியம் அவனுடைய திருவடியை தம் துடையில் தாங்கிய வண்ணம் திருவடி சேவை செய்தது.

குழந்தைகளே!

ஓர் பைத்தியம் பைத்தியக்காரத்தனமாக ஏதேதோ கிறுக்கிவைக்கிறது. **உணர்ந்த உள்ளங்கள் உணரட்டும்! உணராத உள்ளங்கள் மாயையின் சாமர்த்தியத்தில் மயங்கி உலகின் நிலையில் செல்லட்டும்!** அதை எவரும் திருத்த முடியாது! நாய் வாலை நிமிர்த்துவாரும் உண்டா? அது தேவையும் இல்லை.

அன்று துவாபர யுகத்தில் எம் கண்ணன் சொன்னான்: யாம் ஸ்ரீபரமாத்மா, யாம் சொல்வதை கேளுங்கள்! **ஸத்யம் பேசுங்கள், தர்மம் செய்யுங்கள்** என புகன்றான். எவரும் அவன் வார்த்தையை செவி சாய்க்கவில்லை! சில பக்குவான்மாக்கள் கேட்டு பயன் அடைந்தார்கள். பலர் இவனைத் தூற்றினர். இவன் ஓர் இடையன் ஏதோ மாய வித்தை காட்டுகிறான். வித்தை கற்றவன் ஞானி ஆகமுடியுமா? என விட்டுவிட்டனர். **அவன் திருவடியை பற்றியவர்கள் நலம் அடைந்தனர். பற்றாது விட்டவர்கள் இனிமையை சுவைத்தார்கள். அந்த இனிமையின் சுவை இவர்களுக்கு புரியவில்லை. பாவம், இந்த இனிமையே ஜனனத்திற்கும், கர்மாவுக்கும் வித்தாக இருக்கிறது.**

எம் ஞான மழலைகளே!

அன்று முதல் இரவு காலங்களில் வந்து சில சந்தேகங்களை நிவர்த்தி செய்வான். பெரும்பாலும் ஸ்ரீஅடியார்களின் அனுபவ சம்பந்தமாக சில ரகசிய கருத்துக்களையும் பக்தி சம்பந்தமாகவும், ஞான சம்பந்தமாகவும் உள்ள தொடர்புகளையும் **ஸ்ரீசத்குரு** மூலமாகத்தான் உணர முடியும். யாம் அதை உணர்த்துதல் கூடாது, மேலும் "ஸ்ரீவியாசபகவான் அம்சமான உன் ஸ்ரீசத்குரு பணியை சிரத்தையாக ஏற்று லயமானால் ஒவ்வொரு நிலைகளும் தாமே உன்னைத் தொடர்ந்து வரும். அந்த காலங்களில் யாம் அந்தர்யாமியாக இருந்து அனுக்ரஹிப்போம்! இடம்மாறும், பெயர்மாறும் ஆனால் அனைத்தும் ஸ்ரீபரமாத்மா சொரூபமாகிய யாமே குருவாகவும், திருவாகவும் இயங்குகிறோம்" எனவும் உணர்த்தினான்.

ஸ்ரீசத்குரு சேவையில் ஸ்ரீசர்வாங்க சேவையே முக்கியமானது! அது எல்லோருக்கும் கிட்டுவதில்லை! உண்மையாகிய ஸ்ரீசத்குருநாதனை இந்த கலியுகத்தில் தரிசிக்க முடியாது! காரிய குரு எனவும், காரண குரு எனவும் இரண்டு குருமார்கள் உலகில் உண்டு. காரிய குருக்கள் தம் காரியம் நிறைவேறும் நிமித்தம் சீடர்களை பயன்படுத்திக் கொள்வார்கள். **காரண குரு சிஷ்யர்களின் வினை, மனம் கண்டு, நிலை அறிந்து, காலம் உணர்ந்து அதை நீக்க பாடுபடுவார்கள். உண்மையான ஸ்ரீசத்குருநாதனை இந்தக் கலியில் எங்கோ ஒருவரைத்தான் தரிசிக்க முடியும். அந்த ஸ்ரீசத்குருநாதனுக்கு ஓர் சத்சீடன் (அணுக்கத் தொண்டன்) அமைவது மிகமிக கடினம்.** அப்படி அமைந்தாலும் அந்த ஸ்ரீசத்சீடன் பரிபூரணமாக சேவை செய்வதை ஸ்ரீசத்குரு ஏற்றுக் கொண்டாலும், அந்த சத்சீடன் சேவை செய்ய முடியாதபடி, இரு தூலங்களில் ஒன்று மறைக்கப்படும்.

**ஸ்ரீசத்குரு சரீரம் மறைக்கப்பட்டால் அது மாயையாகும். சத்சீடன் சரீரம் மறைக்கப்பட்டால் அது கர்மாவாகும். இதுதான் 'கலியுக தர்மமாகும்' எனச்சொன்னான்.**

மேலும் அவன் சொன்னதாவது:

"ஸ்ரீசத்குருவானவர் சர்வாங்க சேவையை தம் உண்மை சீடனுக்கு பனிரெண்டு ஆண்டுகள் கொடுத்து ஆட்படுத்திக் கொண்டாரானால், அடுத்த ஆறு ஆண்டுகள் ஸ்ரீசத்பாவ சேவையையும், அடுத்த ஆறு ஆண்டுகள் ஸ்ரீஆத்மபாவ சேவையையும் முறைப்படிக் கொடுத்து ஆட்கொண்டு அந்த உண்மை சீடனுக்குள் தம்மை முழுமையாக வைத்து தம் மயமாக்கி விடுகிறார். இப்பொழுது சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார நிலையில் யாம் தொழில் கர்த்தா என்ற நிலையில் சத்வகுண ரீதியில் உன் போன்ற ஸ்ரீஅடியார்களுக்காக ஸ்ரீதெய்வ அம்சமாக இருக்கிறோம். மேலும் நீயே ஸ்ரீசத்குரு அம்சம் பெறும் போது, யாம் ஸ்ரீகடவுள் அம்சம்(கடந்த ஒன்று, உன்னுள் உணர்வது) பெறுவோம். அதை நீயும் அப்போதைக்கப்போது உணர முடியும்" என்ற சில ரகசியங்களை உணர்த்தினான்.

குழந்தைகளே!

**இந்நிலை பெறுவது என்றால் "துவேஷங்கள் அறுபட வேண்டும். ஏற்றத்தாழ்வு தோற்றக் கூடாது. அதனால்தான் பக்தியின் முதிர்ச்சி நிலையாகிய கடைசிப் படியும், ஞானத்தின் முதல் படியும் ஒன்றுபடும். மண்ணையும், பொன்னையும் ஒன்றாக மதிப்பவனும்; சண்டாளனையும், வேதம் கற்ற பிராமணனையும் சமமாக மதிப்பவனும்; புனித கங்கா தீர்த்தத்தையும், சாக்கடை ஜலமும் ஒன்றென மதிப்பவனும்; விஷத்தையும், அமிர்தத்தையும் ஒன்றென மதிப்பவனும்தான் ஞானம் பெற முடியும்".**

எம் ஞானச் செல்வங்களே!

உச்சிஷ்டம் ஸ்ரீபிரபுவின் பிரசாதமாக கருத வேண்டும். **உச்சிஷ்டம் ஸ்ரீபரம பாவனமாக கருதப்பட வேண்டும். உச்சிஷ்டமே பரமான்னமாகும்.** இதை ஸ்ரீபரமாத்மா அனேக இடங்களில் மெய்பித்துக் காட்டி இருக்கிறான். **ஆச்சாரங்களும், அனுஷ்டானங்களும், சில கட்டுப்பாடுகளும், சாஸ்திர சம்பிரதாயங்களும், மந்திர தந்திரங்களும் பக்திநெறியின் அடிப்படைகளாகும்.**

**பக்தி ஞானமாக மிளிரும்போது மேலே சொன்னவைகள் ஒவ்வொன்றாக தாமாகவே விலகவும் செய்யும், சிலவற்றை நாமாக விலக்கவும் வேண்டிவரும். ஏனென்றால் இவைகளே தளைகளாக மாறி உங்கள் கால்களை சுற்றிக் கொள்ளும். பிறகு ஞானநெறியில் உங்களால் நடக்க முடியாது போய்விடும்.**

ஞானநிலையில் கோவிலுக்கு செல்வதும் இல்லை. அந்த மனோநிலையும் இருப்பதில்லை. கோவிலில் நடக்கும் அபிஷேக ஆராதனைகளை தனக்குள்ளேயே தரிசிக்கும் நிலை கூடுகிறது. சர்வசதாவும் இறை சிந்தனையிலேயே இருக்கும்பொழுது இந்நிலை பெறமுடியும். **பெரும்பாலும் உங்கள் மனோமய கற்பனையே ஆசையோடு கூடி இருப்பதாலும், அந்த சுவை அனுபவத்தை நேருக்கு நேர் அனுபவிப்பதாலும், மேலும் ஜக பழக்கதோஷத்தாலும் ஸ்ரீஆத்மநலன் உங்களுக்குத் தோற்றுவதில்லை, உலக இனிமைதான் தோற்றுகிறது.**

அன்புக்குழந்தைகளே!

ஸ்ரீபண்டரியில் இரண்டரை மாதங்களுக்கு மேல் ஓடிவிட்டது. மனதின் அலைச்சலும் நின்றுவிட்டது போலும். ஒருநாள் அவனுடன் உரையாடும் போது, இனி இந்த தூலத்தின் முடிவிடம் இந்த ஸ்ரீபண்டரியிலேயே இருக்க வேண்டும்; இனி எங்கும் சஞ்சாரம் செய்யமுடியாது போல் தோன்றுகிறது, போதும் எம் ஐயனே! இனி இதை இங்கேயே முடித்துவிடு என இரைஞ்சி, அழுது பிரார்த்திக்கும் போது அவன் சரேலென அந்த வைத்தியத்தின் வாயைப் பொத்தினான்.

எம் பாலகா!

அவசரப்பட்டு ஒரு முடிவெடுக்காதே! முடிவெடுத்தால் அதன்படி நடக்க வேண்டும். பின் அவைகளை மாற்றவும் முடியாது. மாற்றவும் கூடாது. இன்னமும் சில தினங்கள் கழித்து ஓர் முடிவுக்கு வா! அது உறுதியாகும் எனச்சொல்லி மறைந்தான்.

அதேபோல் இரண்டாவது நாள் ஜனாபாய் ஆஸ்ரமத்தில் சந்திரபாகா நதியைப் பார்த்த வண்ணம் அமைதியாக, ஆனந்தமாக அமர்ந்திருந்தது. அதுசமயம் ஓர் வயோதிக தந்தையை ஓர் பெண் குழந்தை அழைத்து வந்தது. அந்த பெரியவருக்கு எழுபது வயதிருக்கலாம். இரண்டு கைகளாலும் இரண்டு கால்களாலும் நடந்து வந்தார். அந்த பெண் குழந்தைக்கு சுமார் பத்து வயதிருக்கும். அதன் தோளில் இரண்டு முடிச்சுகள் தொங்கிக் கொண்டிருக்கிறது. கையில் ஒரு செம்பும், கமண்டலமும் இருந்தது. அந்த இருவரும் ஜனாபாய் ஆஸ்ரமத்தின் கீழே அமர்ந்தார்கள். சற்று சிரமபரிகாரம் செய்தார்கள். அவர்கள் பாஷையில் ஏதோ பேசினார்கள். பிறகு ஸ்நானம் செய்ய ஆரம்பித்தார்கள். அதாவது கொண்டு வந்த பொருள்களை அங்கேயே வைத்துவிட்டு ஒரு வஸ்திரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, செம்பையும் கைகளில் எடுத்துக் கொண்டு அந்த பெரியவரை அழைத்து படிக்கட்டில் அமரச்செய்து, செம்பு கொண்டு ஜலத்தை எடுத்து அவரை ஸ்நானம் செய்வித்தது அந்த குழந்தை.

அந்த பெரியவரை ஸ்நானம் செய்வித்த பாவனை மிகவும் புனிதமானதாகும். அபிஷேக பாவனையில் நடந்தது. அவரும் அந்த காட்சியிலேயே அமர்ந்திருந்தார். அதை கண்களை மூடி உள்நேத்திரத்தால் நோக்கும்போது ஸ்ரீபாண்டுரங்கனுக்கு அபிஷேக பாவனை பிரத்தியட்சமாகத்

தோற்றியது. அந்த குழந்தை அவர் மேல் உள்ள ஜலத்தை நன்றாக உலர்த்தி மாற்றுடை உடுத்தி திரும்ப அழைத்து வந்து, ஓர் வஸ்திரத்தை ஆசனமாக விரித்து அமரச்செய்து திரும்ப சென்று ஸ்நானம் செய்து கமண்டல தீர்த்தத்துடன் வந்து ஓர் தாலத்தில் தம் தந்தையின் திருவடியை வைத்து, அதை சுத்தி செய்து ஒரு பையில் இருந்த திருத்துளாயை (துளசியை) எடுத்து திருவடியில் இட்டு தீர்த்தத்தையும் உண்டு தலையில் புரோக்ஷித்து திருத்துளாயையும் சற்று உட்கொண்டது.

அந்த பைத்தியம் தம் கண்களில் கண்ணீர் வடிய அந்தக் காட்சியை கண்டு களித்தது. உடனே கீழே இறங்கி அந்த தீர்த்தத்தை பணிவுடன் கேட்க அந்த குழந்தையும் புன்முறுவலுடன் கொடுக்க அதை உண்டு ஆனந்தம் கொண்டு தம் இருக்கையில் அமர்ந்து மேலும் கவனிக்கும்போது அந்த குழந்தை மூன்று கல் எடுத்து அடுப்பு மூட்டி மாவு பிசைந்து ரொட்டி தட்டி சுடுகிறது.

அதுசமயம் திருக்கோயிலில் இருந்து ஸ்ரீஜயனும், ஸ்ரீஅன்னையும் வந்து பக்கத்தில் அமர்ந்து கொண்டு அதிதியாக இருக்க, சுட்ட ரொட்டிகளை அதிதிகளுக்கு கொடுக்க, பெரியவர் ஜாடை காட்ட அந்த குழந்தை இரு கைகளாலும் ரொட்டிகளை அவ்விருவருக்கும் கொடுத்து தொட்டுச் சாப்பிட ஏதோ ஓர் பொடியை கொடுக்க அவ்விருவரும் அதை ஏற்றுக் கொள்ள, இந்த பைத்தியத்தையும் சுட்டிக்காட்டி ரொட்டி கொடுப்பதற்கு அனுமதி கேட்க பெரியவரும் கொடுக்கச் சொல்ல அந்த பைத்தியமும் எதிர்பார்த்தது போல் கிடைக்க, உடனேஅதிக ஆவலுடன் கீழே இறங்கி வந்து அந்த நால்வருக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அதை பெற்றுக் கொள்ள அந்த அதிதிகள் இருவரும் ஸ்ரீஜயனும், ஸ்ரீஅன்னையுமாக காட்சி கொடுத்தனர்.

அந்த பெரியவர் சாப்பிடும்போது அவர் கடித்து சுவைத்து கொடுத்த ரொட்டியை வாயினின்றும் பிடுங்கி ஸ்ரீஜயன் ஆனந்தமாக ஸ்ரீஅன்னைக்கும் கொடுத்து தானும் உண்டார்கள். பிறகு ஒருவருக்கொருவர் அந்த பைத்தியத்தையும் சேர்த்து உச்சிஷ்டம் பகிர்ந்துண்டு ஆனந்தம் அடைந்தார்கள். அந்த உச்சிஷ்ட மஹிமையினால் ஸ்ரீகண்ணனும் ராதையுமாகவும், அவர்கள் ஸ்ரீநாமதேவரும் ஜனாபாயுமாக காட்சி கொடுத்தார்கள். அது சுயானுபூதி நிலையாகும். **"பாகவதோத்தமர்களின் உச்சிஷ்டம் அதன் பெருமை எவராலும் அறிய முடியாது."** மற்றவர்களுக்கு உச்சிஷ்டம் என்றால் அது அருவருப்பை உண்டு பண்ணும்.

எம் ஞான மழலைகளே!

ஓர்சமயம் ஒரு இல்லத்தில் ஸ்ரீசமாராதனை நடந்தது போலும்? அது முடிந்தவுடன் அவர்கள் உண்ட மீதியை இலையுடன் வெளியில் குப்பை தொட்டியில் போட்டார்கள். அதை பரிவுடன் நோக்கியது அந்த பைத்தியம். அதுசமயம் நான்கு நாய்கள் வேகமாக வந்து அதை உண்ண சண்டையிட்டுக் கொண்டன. அதுசமயம் ஓர் சாதுவும் அங்கு வந்து இதை கவனித்தார். அவர் அந்த இலைகள் அருகே அமர்ந்தார். அந்த நாய்களை கை அமர்த்தி "சற்று பொறுக்கவும்" என்றார். அந்த நான்கு நாய்களும் அருகே வரிசையாக அமர்ந்துவிட்டன. அவர் அந்த எச்சில் இலைகளை வழித்து எடுத்து மொத்தமாக சேர்த்தார். அடுத்து ஆறு இலைகளை வரிசையாக போட்டார். அருகே பார்த்துக் கொண்டிருந்த அந்த பைத்தியத்தையும் தம் அருகே அமரும்படி பணித்தார். அந்த நான்கு நாய்களையும் மீதி இருந்த நான்கு

இலைகளிலும் அமர்ந்து உண்ணும்படி பணித்தார். அவைகளும் எந்த சண்டையும் இல்லாமல் வரிசையாக அமர்ந்து சாந்தி நிலையில் உண்டன. அந்த வைத்தியமும் அமைதியாக, ஆனந்தமாக அந்த உச்சிஷ்டத்தை உண்டது.

**அந்த உச்சிஷ்ட மஹிமையால் அந்த சாது வேத நாயகனாகவும், நான்கு நாய்களும் சதுர்வேதங்களாகவும் தோன்றிற்று. ஆகவே ஸ்ரீஅடியார்கள் உச்சிஷ்ட நிலையை எவரும் விரித்துரைக்க முடியாது. அவை அனுபவ நிலையாகும். இது பேதமற்ற உண்மை ஞானத்திற்கு அஸ்திவாரமாக அமையும். இது உறுதி.**

**எல்லாம் நீ!**





# அது கரைந்துவிட்டது!



ஸ்ரீபரமாச்சாரியார்

குழந்தைகளே!

இந்த நிலையில்தான் அந்த தந்தையும் மகளுமாக இருந்து சேவையின் மஹத்துவத்தை காட்டினான். அன்று ஒருநாள் அவனுடன் சம்பாஷணை செய்யும்போது மனமானது கசிந்து உருகி குழந்தையும் தந்தையுமாகி வந்து சேவையின் மஹத்துவத்தை உணர்த்திய காரணத்தால் ஸ்ரீபிதாவாயும், ஸ்ரீசத்குருநாதனாயும் அமைந்திருக்கும் அந்த **ஸ்ரீமஹத்திற்கு** சேவை செய்து ஸ்ரீசத்பாவ சேவையும், ஸ்ரீஆத்மபாவ சேவையும் பூர்த்தி செய்ய ஓர் பேருணர்வு உண்டாகியது! வார்த்தை அளவில் அதை ஆசையென்று சொன்னாலும் அது அனுபவ பயிற்சி நிலையாகும் என உணர்ந்தது அந்த பைத்தியம்.

அன்று இரவு அவனுடன் உரையாடும் போது முடிவில் ஸ்ரீகுருநாதனின் பெருமையை உணர்த்தி, ஆற்றின் மறுகரையில் காஞ்சி மஹாபெரியவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் தம் பரிவாரங்களுடன் வந்து தங்கி இருக்கிறார். நீ நாளை காலை ஸ்நானம் முடித்து அவரிடம் செல். நீ தங்குவதா? வேண்டாமா? என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி அவர் உனக்கு சொல்வார். அதன் பிறகு ஒரு முடிவு எடுப்பாயாக! எனச்சொல்லி மறைந்துவிட்டான்.

மறுநாள் அதிகாலையில் ஸ்நானம் முடித்துக் கொண்டு பீமாநதியின் மறுகரையில் ஓர் மடத்தில்

தங்கி இருந்த ஸ்ரீகாஞ்சி மஹானை தரிசிக்கச் சென்றது அந்த பைத்தியம். ஸ்ரீஸ்வாமிகள் ஓர் ஓரமாக அமர்ந்த நிலையில் இருக்கிறார்கள். அவர் அன்பர்கள் அங்குள்ள அன்பர்களின் காணிக்கைகளை(புஷ்பம், பழம் மற்றும் பணம் இவைகளை) அவர்களின் நாமாவைச் சொல்லி அவரிடம் காட்டிவிட்டு ஓர் ஓரமாக ஒதுக்கி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த பைத்தியம் சற்று தள்ளியே அமர்ந்த நிலையில் அவர் பார்வை படும்படி கண்ணீர் ஓட அவருடைய தரிசனத்திற்காக காத்திருந்தது. தெய்வாதீனமாக கூட்டம் கலைந்து எவருமே இல்லாமல் நம் ஸ்ரீஸ்வாமிகளும், இந்த பைத்தியமும் மட்டும் இருந்தோம். அதுசமயம் ஸ்ரீஸ்வாமிகள் மெதுவாக எழுந்து வந்து இந்த பைத்தியத்தின் எதிரே சற்று தள்ளி நின்று கொண்டு, குழந்தே! என குரல் கொடுத்தார்கள். ஸ்ரீஸ்வாமிகளின் அமுதமான வார்த்தையை கேட்ட மாத்திரத்தில் அப்படியே சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு அவர் திவ்விய திருவடிகளை தொடாமலேயே நமஸ்கரித்துக் கிடந்தது. அவர் கருணையோடு, குழந்தாய்! எழுந்திரு என்றார்கள். எழுந்தது; அமர்க என்றார்கள்; அது அமர்ந்தது.

ஸ்ரீகாஞ்சி மஹான் சொன்ன வாசகம்:

குழந்தாய்! இனி எவரையும் நீ நமஸ்காரம் செய்ய வேண்டாம்; உன்னை நமஸ்காரம் செய்தவர்களை மட்டும் **"நாராயணா"** என்று சொல்லி ஆசீர்வாதம் பண்ணு. ஆனால் **"நிலைகண்டு"** நமஸ்காரம் செய். நீ இந்த ஸ்ரீபண்டரியிலேயே தங்குவதற்கு முடிவெடுத்ததாக தெரிகிறது. அது தவறு. காரணம் உன் தந்தையை சாமான்யர் என எண்ணிவிடாதே! அவர் ஸ்ரீவியாஸர் அம்சம் என உணர்வாயாக. அவருக்கு புத்திரனாகப் பிறந்த நீ பாக்கியவான். பனிரெண்டு ஆண்டுகள் எப்படியோ சர்வாங்கசேவை செய்து முடித்துவிட்டாய். இன்னமும் ஆறு ஆண்டுகள் சத்பாவசேவை செய்து முடித்துவிட்டாயானால் நீ பிறந்த காரியமும் பூர்த்தியாகிவிடும். பின் ஒரு ஆறு ஆண்டுகள் அது உன் ஸ்வய அனுபவம் (ஆத்மபாவசேவை). ஆக ஒரு ஸத்சிஷ்யன் இருபத்திநான்காண்டுகள் சேவை செய்து விட்டானானால் அவன் ஜன்மா பூர்த்தியாகிவிடும். பின் அவனுக்கு ஜன்மா இல்லை என்றே சொல்லலாம் என அருளுரையும், ஆசியும் வழங்கிச் சென்றார்கள்.

அன்று இரவு எமதய்யன் வந்தான், என்ன திருவடி! உன் முடிவு என்ன? ஸ்ரீஸ்வாமிகள் என்ன சொன்னார்? இங்குதான் தூலம் முடியும் பரியந்தம் இருப்பதாக உத்தேசமா? அல்லது இப்போதே புறப்படவேண்டும் என்ற முடிவா? என கடகடவென சிரித்துக்கொண்டே கேட்டான்.

அந்த பைத்தியமும், போதும் ஐயனே போதும்! இனி எதுவும் தேவையில்லை, சீக்கிரமாக இது திருமந்திரநகர் போகவேண்டும். அங்கு ஸ்ரீகாஞ்சி மஹாபெரியவர் உணர்த்திய ஸ்ரீசத்குரு சேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என கசிந்துருகிக் கேட்டது. அது முடிந்ததும் என்ன செய்வதாக உத்தேசம்? இங்கு வரமுடியுமா? அங்குதான் உறைவிடமா என வினவினான். அதற்கு அது, திருவருள் சம்மதம் எதுவோ அப்படி நடக்கட்டும். **உம் சித்தம் எம் பாக்கியம்** என முடித்துக் கொண்டது.

ஞான மழலைகளே!

ஸ்ரீபண்டரியில் ஓர் மிட்டாய் வியாபாரி இருந்தான். அவன் அரைகுறையாக தமிழ் பேசுவான்! அந்த பைத்தியம் அங்கு சென்றதில் இருந்து அவன் தொடர்பு ஏற்பட்டது. அந்த பைத்தியம் வீதிவழி

செல்லும்போது அந்த வியாபாரி கடையை விட்டிறங்கி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அதன் கைகளில் சில மிட்டாய்களைக் கொடுப்பான். அதுவும் அதை ஏற்றுக் கொள்ளும். அவனுக்கு சிரமம் கொடுக்கலாகாதே என சிலசமயம் பாதையை மாற்றி சென்றுவிடும். அவன் சோர்ந்து போவான். இரண்டு தினங்கள் அதை காணவில்லை என்றால் நதிக்கரையில் ஜனாபாய் ஆஸ்ரமத்திற்கே தேடி வந்துவிடுவான். கதறி அழுவான் தயவுசெய்து எம்மை புறக்கணிக்காதீர் எனக்கதறித் துடிப்பான். அவனுக்கு ஆறுதல் சொல்லி பரிவுடன் அனுப்பி வைக்கும்.

ஊர் செல்ல வேண்டும் என்ற சங்கல்பம் உறுதி ஆனவுடன் வியாபாரி முகவரியுடன் ஊருக்கு பணம் அனுப்பும்படி தபால் எழுதியது. அவன் அதன் பிரிவாற்றாமையால் மிகவும் வாடினான். அவனுக்கு சில உண்மைகளை புரியும்படி உணர்த்தி சில வாசகங்களையும் எழுதிக் கொடுக்க அதைப் பெற்றுக் கொண்டான்! நாளை பணம் வந்துவிடும் என தெரிந்ததும் அந்த வியாபாரி அன்று தம் இல்லத்தில் அதிதி சத்காரம் செய்ய வேணுமென்று பணிவுடன் வேண்ட அது சம்மதித்தது. காலை பதினோரு மணி அளவில் ஜனாபாய் ஆஸ்ரமத்தை விட்டு கிளம்பி அவன் இல்லம் சேர்ந்தது.

அங்கு ஓர் வேம்பு மரம் இருந்தது. அதன் அடியில் அமரச் செய்தான்! சிறிய வீடு அருமையான குடும்பம்! அதை பார்ப்பதற்கு தவக்கூட்டம்போல் தோன்றியது. வீட்டினுள் ஓர் ஓரத்தில் ஒரு பீடத்தில் ஸ்ரீபாண்டுரங்கன் ரகுமாயி படம் ஒன்று வைத்திருந்தான். அந்த பைத்தியத்தை உபசரிக்கும் நிமித்தம் அவன் சாமக்கிரியைகளை சேகரிக்கும் வகை அப்படியே உருக்கிவிட்டது. கணவனும் மனைவியும் சேர்ந்து அதற்கு திருவடி பூஜை செய்து ஆசனம் இட்டு அமரச் செய்து வெகு சிரத்தையுடன் தயார் செய்த உணவை ஸ்ரீபகவானுக்கு நிவேதனம் செய்து அதை பக்தி சிரத்தையுடன் படைத்தான்.

அதுவும் தீர்த்தம் புரோட்சித்து உணவு உண்ணப் போகும் அந்த நேரத்தில் தட்சணைக்காக எங்கெல்லாம் தேடி ஒரு பத்து பைசா கண்டெடுத்து அதை இலையில் சமர்ப்பித்தான்! அந்நிலையை கண்டு உள்ளக் கசிவுடன் அதை பெற்றுக் கொண்டு உண்ணும்போது உச்சிஷ்டத்திற்காக இருவரும் கையேந்தி நிற்க, அவன் அனுக்ரஹத்தால் அது உச்சிஷ்டம் கொடுக்க அந்த இரண்டும் அதை அமிர்தமாகப் புசித்து குழந்தைகளுக்காக கொஞ்சம் வாங்கி பத்திரப்படுத்தி வைத்து, அதை நமஸ்கரித்து வழி அனுப்பி வைத்தார்கள்.

குழந்தைகளே!

அன்று இரவு ஸ்ரீபரமாத்மா வந்தான். நாளை பிரிய வேண்டுமே என்ற துக்கம் தாளவில்லை. அவன் திருவடியில் சிரம் புதைத்து கதறி அழுதது அந்த பைத்தியம். அவன் அதை கைவாகு கொடுத்து தூக்கி நிறுத்தி அதன் கண்ணீரை துடைத்து உள் உணர்வைக் கொடுத்து ஸ்ரீஅடியார்கள் மூலமாக அனுபவித்த நிலைகளை ரகசியமாக போதித்தான். அன்று நடந்த நிகழ்ச்சி எழுத்தில் அடங்காது. கடைசியாக அவன் ஆணையாவது:

சில நாட்களாக நீ எம் ஆலயம் வரவில்லை, நாளை காலை நீ அவசியம் ஆலயம் வரவேண்டும்; உன் தரிசனம் தந்து ஆலிங்கனம் செய்யவேண்டும்; அது ரகசியமாக இருக்கவேண்டும் எனக் கூறி முடித்து மறைந்துவிட்டான். அந்த பைத்தியமும் அவன் ஆணையின்படி காலை நான்கு மணிக்கு சந்திரபாகா நதியில் நீராடி சென்றது. ஏனோ மணி தவறாக உணர்த்தியது. மணி மூன்றுதான் ஆகியது போலும்?

நடை திறக்கவில்லை. ஜனசந்தடி அற்ற அந்த அகால வேளையில் ஒரு வயோதிக பிராமணர் ஸ்ரீவிட்டல் நாமத்தை ஜபித்த வண்ணம் தடியை ஊன்றி ஆடிக்கொண்டே தாளம் போட்டுக் கொண்டு வந்தார். முன்புறம் நடை திறக்காததால் பின்பக்கம் பாடி ஆடிக்கொண்டே சென்றார். அந்த பைத்தியமும் ஏதோ ஓர் சக்தியால் உந்தப்பட்டு அவர் பின்னால் சென்றது.

அவர் தள்ளாடித் தள்ளாடி கம்பை ஊன்றி ஆனந்த நர்த்தனம் செய்தவண்ணம் பின் வாசல் முன் நின்றார். எவரோ கதவை திறந்தது போல் கதவு தாமே திறந்து கொண்டது. காத்திருந்தவர் போல அந்த பெரியவர் முன் செல்ல அந்த பைத்தியமும் பின் செல்ல இருவரும் உள்ளே சென்றதும் திறந்த கதவு மூடிக்கொண்டது. அந்த பெரியவரையும் காணோம். கதவுகள் எல்லாம் திறந்தபடி விளக்குகள் எரிந்தவண்ணம் இருந்தன. அவன் புன்முறுவலுடன் இடுப்பில் கரத்துடன் நின்றுகொண்டு சமிக்ஞை செய்தான். அது அவனை ஆலிங்கனம் செய்தது. **அது கரைந்து விட்டது! கர்மாவோ, மாயையோ ஒன்று வெளியே வந்தது;** அது ரகசியமானது!

**எல்லாம் நீ!**





# காந்தமலை ரகசியம்!

ஞானக் குழந்தைகளே!

அடுத்து இரண்டு வருடம் சென்றது! சபரி மலையில் அவன் சந்நிதி எதிரில் **காந்தமலை** என்ற ஓர் மலை உண்டு. அந்த காந்தமலையில் **தை** முதல் தேதியில் சூரிய அஸ்தமனத்தின் பிறகு சுமார் ஆறரை மணி அளவில் இருள் சூழும் நேரத்தில் ஜோதி தெரிவது வழக்கம். சபரிமலை செல்லும் ஐயப்ப பக்தர்கள் அவரவர் சங்கல்பத்திற்கு தக்கபடி அனுமானித்து அந்த ஜோதியை தரிசித்து வருகிறார்கள். அதை அனேகர் சுயஞ்ஜோதி என்றும், அதன் அருகில் எவரும் செல்ல முடியாது என்றும், அந்த காந்தமலைக்கு எவரும் சென்றது இல்லை என்றும் பயமுறுத்தி அங்கு எவர் சென்றாலும் மீள முடியாது என்றும் ஓர் பயமுறுத்தலை உண்டு பண்ணி வைத்திருந்தார்கள்.

அந்த பைத்தியம் தன் உடன் வரும் ஸ்ரீஅடியார்களிடம், அது காட்டப்பட்டு வருகிற ஓர் ஜோதி என்றும் அதாவது அது கற்பூர ஜோதி என்றும் கூறியது. அதை எவரும் ஒப்புக் கொள்ளவில்லை, காரணம் அதை ஆண்டாண்டு காலமாக தரிசித்து தம் மனோமய கற்பனையினால் அதை சுயஞ்ஜோதியாகவே கருதி வழிபட்டு வந்தார்கள். ஆனால் அது ஜோதி தரிசனம்தான். அதை எந்நிலையில் தரிசிக்க வேண்டும், எப்படி உணர வேண்டும்? என ஓர் நியதி உண்டு. காட்டப்படும் ஓர் ஜோதியை சுயஞ்ஜோதியாக ஒப்புதல் கூடாது.



**பம்பை நதியில்**

ஓர் மகர ஜோதிக்கு முன் தினம் அந்த காந்தமலைக்கு சென்று அதன் உண்மை இன்மையை உணர வேண்டுமென அவன் சங்கல்பத்தைக் கொடுக்க அந்த பைத்தியம் ஓர் கருவியாக இயங்கியது. அந்த பைத்தியம் தம் ஸ்ரீசத்குருதேவரிடம் விபரம் கூறி விடை கேட்க அவரும் அனுமதி கொடுக்க அந்த வருஷம் தை மாதம் முதல் தேதிக்கு முன்பு செல்ல சங்கல்பித்து உடன் வரும் ஸ்ரீஅடியார்கள் சிலரிடம் தெரிவிக்க அவர்களும், ஸ்வாமி! இது விபரீத விளையாட்டு!

இந்த விளையாட்டு வேண்டாம் என கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அந்த பைத்தியம் தம் ஸ்ரீசத்குருதேவரின் திருவருளை மேற்கொண்டு காந்தமலை செல்லப் புறப்பட்டது.

ஜோதி தோன்றும் இடத்தை குறிப்பாக வைத்து மலை ஏற ஆரம்பித்தது. பாதை இல்லாததாலும் பாறைகளும், புதர்களும் அடர்ந்திருப்பதாலும் செங்குத்தாக அதாவது நெட்டு ஏற்றமாக இருப்பதாலும் மேலே செல்ல அதிக சிரமம் உண்டாகியது. அது அணிந்திருந்த வேஷ்டி, பனியன் இவைகளை முட்கள் பிடித்து இழுத்தன போலும். விரக்தியின் காரணமாக ஓர் முடிவுக்கு வந்து வேஷ்டி, டிராயர், பனியன் இவைகளை களைந்து தம் துண்டில் சுற்றி ஓர் பாறை மீது வைத்துவிட்டு கௌபீனதாரியாய் மேல் நோக்கி ஏறியது! ஆரம்ப நிலையில் உயரம் சிறியதாக தோன்றியது. ஆனால் செல்லச்செல்ல அந்த இடத்தை அடைய முடியவில்லை. சுமார் மூன்று மணி நேரம் ஊர்ந்து ஊர்ந்து எப்படியோ ஓர் முக்கூட்டு (மூன்று சிகரங்கள் சந்திக்கும் இடம்) சமவெளி வந்தது. அந்த இடமே கீழ் இருந்து குறி வைத்த இடமாகும் என அறிந்தது.

அது ஓர் சிறிய மைதானமாக செடியும் கொடியும் பின்னிய நிலையில் அங்கே ஓர் சுனை இருந்தது. அது மிகச்சிறியதாக இருந்தாலும் ஜலம் சுரந்து கொண்டிருந்தது. அதன் அருகில் சென்றதும் தூலம் அதிகமாக சோர்ந்துவிட்டது. நடக்க சக்தி இல்லை. காரணம் முட்களும், கற்களும் தூலத்தைக் கிழித்து படாதபாடுபடுத்தி ரத்தக்களறி ஆக்கிவிட்டது. ஏறும் நிலையில் ஓர் விரக்தியும், ஓர் வெறியும் இருந்ததாலும் அதுவும் அவன் கொடுத்த தன்மையினாலும் ஏறமுடிந்தது.



அந்த பைத்தியம் சோர்ந்து போய் ஓர் பாறையில் அமர்ந்துவிட்டது. தூலத்தின் வேதனை அப்போதுதான் அதை வாட்டியது. மேல் நோக்கி கவனிக்கும்போது ஒரு பர்லாங்கு தூரம் சென்றால் அந்த காந்தமலை முடிவுறும் எனத் தோற்றியது. ஆனால் நடக்க முடியவில்லை. இவ்வளவு தூரம் கொண்டு வந்துவிட்டாயே இன்னமும் சற்று தூரம்தானே! அதற்குள் ஏன் இந்த களைப்பைக் கொடுத்தாய்? போ என அனுமதித்தவனும் நீயே! இவ்வளவு தூரம் ஏற்றிவிட்டவனும் நீயே! உன் ஆணைப்படி வந்த கருவியை சேதப்படுத்திவிட்டாயே? தூலத்தையும் இத்துடன் முடித்துவிடுவாய் போலும்? அந்த அளவுக்கு ஆயாசமும் துன்பமும் உண்டாகி மரணபயநிலையை உருவாக்குகிறதே! இதுதான் ஸ்ரீஅடியார்கள் காந்தமலை பற்றி பயமுறுத்திய நிலை போலும்? பரவாயில்லை. அப்படியே முடிந்தாலும் முக்கியமான சிகரத்தில்தானே இந்த தூலத்தைவிட ஆணையிடுகிறாய். இது காந்தமலை அல்லவா? அந்த காந்தம் இந்த இரும்பை ஈர்த்துக் கொண்டது போலும்?

ஹே.. பிரபோ!

எது நடந்தாலும் உனக்கே பொருந்தும். எந்த நிலையிலும் இந்த தூலம் உன் கைப் பதுமைதானே? நடத்து உன் ராஜ்யத்தை! என சமர்ப்பணம் செய்து கொண்டிருக்கும் போது, ஓர் பெரியவர் மேலே இருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். **அவர் நல்ல பழுத்த பழம்.** அந்நிலையில் அவர் எப்படி அங்கு வந்தார் என்பதை மறைத்தான் போலும்? வந்ததும் அவன்தானே! பிறகு மறைக்காமல் என் செய்வான்? வந்த பெரியவர் கேட்கிறார், தம்பி! இதென்ன உடலெல்லாம் ரத்தக் காயம்? எந்த மிருகமாவது உன்னை தாக்கியதா? ஏன் இந்த சிரமம்? ஏன் இங்கு வந்தாய்? இங்கு எதைப் பார்க்கப் போகிறாய்? நீ பார்க்கும் அளவுக்கு இங்கு விசேஷமானது ஒன்றும் இல்லையே என்றார்.

அதுவும் அவர் திருவடியில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தது, எழுந்திருக்க முடியவில்லை, நிலை அப்படி ஆகிவிட்டது. அவரும் சிரித்துக் கொண்டே சிரசில் கரம் வைத்து எழுந்திருக்கலாமே என ஆசி கூறினார். அவன் அருளால் அது எழுந்து, ஸ்வாமி! இதுதானே காந்தமலை? இங்குதானே ஜோதி தெரிகிறது? அந்த ஜோதியின் ரகசியத்தை தெரிந்து போகலாம் என தந்தையாகிய ஸ்ரீகுருதேவரிடம் அனுமதி பெற்று வந்தது. அதை தாங்களே உணர்த்தினால் மிகவும் நல்லது என அவரை மிகபணிவுடன் வேண்டியது. அவரும் கடகடவென அந்த காடே அலறும்படி சிரித்தார். அந்த சிரிப்பொலி இதுவரை எங்கும் கேட்டதில்லை.

குழந்தாய்!

ஜோதியைப் பார்க்க இங்குதானா வரவேண்டும்? இங்கு தெரிவதுதான் ஜோதியா? ஜோதியை நீ காணவில்லையா? அதை உன் தந்தையாகிய ஸ்ரீகுரு உணர்த்த வில்லையா? அறியாத மாந்தருக்கு பக்தி நிலையில் இது ஜோதிதான்! உண்மையை உணர்ந்த உன் போன்றவனுக்கு இது ஜோதி அல்லவே!

**"கற்பூர ஜோதி பக்தர்களுக்கு!**

**குண்டலினி ஜோதி யோகிகளுக்கு!**

**ஆத்ம ஜோதி ஞானிகளுக்கு!"**

**இதில் நீ எந்த ஜோதியை உணரவேண்டுமோ அதை உணர்.**

**"காணும் ஜோதி மறையும்,**

**உணரும் ஜோதி உன்னுள் கலந்துவிடும்".**

இந்த காந்தமலை ஜோதி காட்டப்படும் ஜோதியாகும். இங்கிருந்து சற்று தூரத்தில் ஓர் இடம் இருக்கிறது. அங்கிருந்து கற்பூரத்தை கொளுத்தி ஜோதியாக காட்டுகிறார்கள். கற்பூர ஜோதியும் இந்த உலகில் மெய்யே! அது மனோமய கற்பனை வடிவாக பல நிலைகளில் அவரவர் நிலைக்குத் தக்கவாறு தோற்றும். தோற்றுவது மறைந்தே தீரும். **உள்ளத்தால் உணரும் ஸ்ரீஆத்மஜோதியின் பிரகாசத்தினாலேயே இவ்வனைத்து அண்டங்களும், அதன் ஜீவகோடிகளும் நிலைபெற்று**

**தாமே இயங்குகின்றன!** அப்படி இயங்கும் மாயா இயக்கத்திற்கு ஓர் வடிவம் கொடுத்து பக்தர்கள் அனைவரும் சகுணப் பிரம்மமாக வழிபாடு செய்கின்றனர். இந்த ரகசியம் அனைத்தும் நீ உன் அனுபவத்தினால் ஸ்ரீகுருதேவர் உணர்த்த உணர முடியும், காண முடியாது.

இங்கு சில தந்திரீகள் அதாவது மலையாள மாந்திரீகர்கள் சில சக்திகளை தமக்குப் பயன்படுத்திக் கொண்டு இங்கு வரும் எந்த ஜீவனையும் திரும்ப போகவிடாமல் அடக்கியும், அழித்தும் விடுகிறார்கள். ஆகவே இந்த காந்தமலை வந்தவர்கள் மீண்டதில்லை என பயமுறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்த தந்திரீகள் தை முதல் தேதி காலையில் இங்கு வந்துவிடுகிறார்கள். அன்று மாலை ஸ்ரீஐயப்பன் ஆலயத்தில் கற்பூர ஆரத்தி நடைபெறும் சமயம் கோவில் மணி ஆரவாரமாக ஒலிக்கும். அந்த நிலையில் இங்கு இவர்கள் கற்பூரம் நிறைய போட்டு ஓர் பாறையில் ஜோதியாக எரியப் பண்ணுகிறார்கள். இதுவே காந்தமலை ஜோதி ஆகும்.

**கற்பூரமானது தம்மை முழுமையாக அர்ப்பணித்து மயமாக்குவது போல ஓர் உண்மை பக்தனும் தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து முழுமையான சரணாகதியில் கரைத்துக் கொள்கிறான்.**

ஒரு ஜீவன் தன் கர்மாவின் தூலத்தை அவித்தையை விரும்பாத தன்மையினால் மாயையினால் எரித்து ஞானஜோதி ஆகிவிடுகிறான். இந்நிலையிலேயே ஸ்ரீஜயப்பன் ஸ்ரீசபரிமாதாவை தரிசித்து ஞானோபதேசம் பெற்று தூல உணர்வுகளை களைந்தெறிந்து ஸ்ரீஅன்னையின் ஆணையின்படி இந்த இடத்தில் நின்று எதிரில் தெரியும் மலையில் ஓர் பெரிய பாறையை குறி வைத்து அம்பு தொடுத்து அடித்து ஓர் யதாஸ்தானத்தை அமைத்து அதாவது அதில் தாம் யோகஜோதியாய் அமர்வதற்கு திட்டம் செய்து தம் ஸ்ரீசத்குருவாகிய ஸ்ரீசபரி மாதாவை தியானித்து, தம் தூலத்தை யோகாக்கினியால் எரித்து ஸ்வயம் ஜோதி வடிவாகி ஸ்ரீஆனந்த சித்தனாய் அந்த பீடத்தில் அமர்ந்தான். அதை பந்தள அரசன் கோயிலாக நிர்மாணித்தான். இந்த இடத்தில் தம் தூலத்தை யோகாக்கினியால் எரித்து ஜோதியான தன்மையினால் இந்த மலை காந்தமலை என பெயர் உண்டாகியது.

எம் செல்வா!

பூர்வ புண்ணியத்தினாலும், ஸ்ரீதெய்வகிருபையினாலும், ஸ்ரீசத்குரு கடாட்சத்தினாலும் இந்த ரகசியங்களை நீ தெரிந்து கொண்டாய். இது காட்டப்பட்ட ஜோதி என்பதை அடுத்த ஆண்டு உலகோர் உணர்வர் என்றார். உன் நிலையைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. இந்த குளத்தில் இறங்கி ஸ்நானம் செய் என்றார். அதுவும் ஸ்நானம் செய்து எழுந்தது. அவர் தம் மடி மீதிருந்த பஸ்பத்தை எடுத்து அதன் உடலெல்லாம் தடவிவிட்டார். அவர் கருணையினால் ரணங்களும், வேதனைகளும் மறைந்தன. புத்துணர்ச்சி உண்டாயிற்று. அவரும் ஓர் புன்முறுவலுடன் இனி நீ கீழே இறங்கலாம் என தம் அபயகரத்தை நீட்டி ஓர் பாதையை காட்டினாரா? உண்டாக்கினாரா? தெரியாது. அவர் மேலே சென்றார், மறைந்தார்.

அது அவர் காட்டிய பாதையில் வேகமாக இறங்கி வந்தது. அந்த பாதை **சரங்குத்தி** என்ற இடத்திற்கு சற்று கீழே வந்து சேர்ந்தது. அங்கு பாறையில் எங்கோ வைத்த வஸ்திர மூட்டை அப்படியே இருந்தது. அவன் திருவிளையாடலை எப்படி புகழ்வது?

**அவனிடம் தம்மை முழுமையாக அர்ப்பணித்துவிட்டால் சகலமும் அவனே செய்யக் காத்துக் கொண்டிருக்கிறான்.**

அன்று ஸ்ரீஅடியார்கள் சிலரிடம் அதன் கருத்தை அந்த வைத்தியம் சொன்ன போது, ஏதோ நம்பிக்கை இல்லாமல் ஒத்துக்கொண்டார்கள். காந்தமலை சென்று மீண்டவர் இல்லை இவர் எப்படியோ சென்று வந்துவிட்டாராம். இருக்கலாம் என்று அரைகுறையாக ஏற்றனர். ஆனால் அடுத்த ஆண்டு எமதய்யன் வாக்கு பலித்தது! அதே காந்தமலையில் பத்து பேருக்கு குறையாமல் சென்று வாணவேடிக்கையாக புஸ்வாணங்களும், மத்தாப்புகளும் கொளுத்தி மீண்டு வந்து அது கற்பூர ஜோதிதான் என நிருபித்தனர். ஸ்ரீமணிகண்ட பிரபு எம் ஸ்ரீஐயப்பன் அந்த ஸ்ரீஅடியார்கள் மூலமாகவே அதை நிருபித்துவிட்டான். அதை உலகோர் உணர்ந்தனர். ஸ்ரீஅடியார்களும் அதன் பிறகு அதை உணர்ந்தனர்.

குழந்தைகளே!

**நீங்கள் இந்த விஷய ஆனந்தத்தை எவ்வளவு தூரம் மறக்கிறீர்களோ அந்த அளவுக்கு பக்தி சம்பந்தமாக ஸ்ரீஅடியார்களுக்கும், ஸ்ரீபகவானுக்கும் உள்ள தொடர்பை உணர முடியும்!**

**அந்த உணர்வை பரிபூரண சரணாகதியில்தான் உணர முடியும்.**

**எல்லாம் நீ!**





# ஸ்ரீசத்பாவ சேவை!

## 1. பாக்கியவான் பெற்ற குழந்தை!



ஸ்ரீவினாயகர் ஆலயம்

ஸ்ரீகுருதேவர் தங்கியிருந்த ஆலயத்தில் இருந்து டவுணில் உள்ள ஒரு சிவன் கோவில், அதன் அருகாமையில் உள்ள வினாயகர் ஆலயம், தெப்பம் இவைகளை வலமாக வந்தால் இரண்டும் இரண்டும் நாலு கிலோமீட்டர் ஆகும். இதை காலையும், மாலையும் இரண்டு முறை சுற்றி (வாக்கிங்) வருவதுண்டு. மாலை ஏழு மணி முதல் எட்டரை மணிவரை தெப்பம் வினாயகர் ஆலயத்தில் ஒரு மெய்யன்பர் திரு.சங்கரஐயர் என்பவர், சிவஞான போதம் என்னும் பனிரெண்டு சூத்திரத்திற்கு வேதாந்த கருத்துடன் சொற்பொழிவாற்றுவார். அதை ஒரு ஓரமாக அமர்ந்து கேட்பதுண்டு. சொற்பொழிவு முடிந்ததும் இங்கு ஆலயம் வந்தால் ஸ்ரீகுருதேவருடன் அதன் விளக்கத்தை கேட்டு கலந்துரையாடி பகிர்ந்து ஆனந்திப்போம்.

பலசமயம் இப்படி அமர்ந்து பாடம் கேட்கும்போது ஒரு அரை மணி நேரம் கூட ஆகியிருக்காது. ஸ்ரீகுருதேவர் தம் ஆசனத்தில் அமர்ந்தபடியே உணவோ, ஜலமோ ஏதோ ஒன்றை வேண்டி **“திருவடி”** என அழைக்கும் அந்த அமுதகுரல் இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் இந்த பைத்தியத்தின் காதுகளில் மிகத் தெளிவாக இனிமையாக விழும்! அந்த வினாடியே ஆசனத்தை உதறி பைகளில் போட்டவண்ணம் சரேலென வினாயகர் ஆலயத்தைவிட்டு வெளிப்படிகளில் கால் வைப்பதாகத்தான் தோன்றும். இரண்டு அல்லது மூன்று நிமிஷங்களில் ஸ்ரீகுருதேவர் முன் நிற்கும்! அவர் தேவையை பூர்த்தி செய்யும்.

அவரும் மிகுந்த குதூகலத்துடன், “நீ வெகு சாமர்த்தியசாலி, அழைத்தவுடன் வந்துவிட்டாயே. உன்னைப்போல் ஒரு குழந்தையை அடைய யாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். **யாம் பாக்கியவான்**” என்பார். “பாக்கியம் செய்தது யாரோ”, அந்த “பாக்கியம் பெற்றது யாரோ!” அந்த

ஒன்றே அறியும். (அந்த பஜாரில் அந்தநேரம் ஜனசந்தடி, வாகன நெருக்கடியை நடந்து கடப்பதற்கு குறைந்தது அரை மணி நேரமாவது ஆகும்)

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. சந்தன அபிஷேகமா!

1987ல் ஸ்ரீகுருதேவர் சரீரத்திற்கு இயலாத்தன்மை போலும். உணர்வற்ற நிலையில் படுக்கையிலேயே மலஜலம் சிலசமயம் போகும். அதை அப்போதைக்கப்போது கவனமாக பார்த்து சுத்தப்படுத்தும். இதில் இந்த குழந்தை சலிப்பில்லாமல் இருக்கிறானா என அவர் அடிக்கடி சரிபார்ப்பதுண்டு!

சிலசமயம் மலச்சிக்கல் ஏற்படுவதுண்டு. மூன்று முறை இந்த மலச்சிக்கல் வந்ததுண்டு. மூன்று நான்கு தினங்களுக்கு மலம் போகாமல் இறுகிவிடுவதுண்டு. பர்கோலக்ஸ் என்ற மலமிளக்கி மாத்திரை வாங்கிக் கொடுத்து மலத்தை வெளியேற்றி இருக்கிறது. கடைசியில் ஒருமுறை ஐந்து தினங்கள் மலம் வெளியேறவில்லை. மாத்திரை கொடுத்தும் பலன் இல்லை. ஸ்ரீகுருதேவர் முக்கியும் அதாவது ஸ்டெரெயின் பண்ணியும் கூட மலம் வெளியேறவில்லை. ஸ்ரீகுருதேவர் உட்கார்ந்த நிலையில் மலம் கழிப்பதில்லை. காரணம் கால் மடக்கி அமரமுடியாது.

அன்று ஆறாம் நாள். ஒரு சுவரை பற்றியவண்ணம் குனிந்தபடி நின்றிருந்தார்! இந்த பைத்தியம் தம் ஆள்காட்டி விரலை மலத்துவாரத்தில் விட்டு அவருக்கு அவஸ்தை இல்லாமல் சுரண்டிச்சுரண்டி எடுத்துக் கொண்டிருந்தது! ஆட்டுப்புழுக்கை போல இறுகி, கருகி இருந்ததால் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக் கொண்டிருந்தது!

ஒரு பத்து நிமிஷம் ஆகியிருக்கும். அவராலும் நிற்க மூடியவில்லை. கடைசியில் **அடைப்பு திறந்தது.** மலம் அனைத்தும் ஒர்மித்து வெளியேறியதால் குனிந்து பார்த்து மலம் சுரண்டி எடுத்துக் கொண்டிருந்த அதன் மூகத்தில் குபீரென அருவிபோல் விரைந்து மலம் நிறைந்து வழிந்தது. மூகமே தெரியவில்லை. ஆனால் எப்படியோ கண்களை இமைகள் மூடிக்கொண்டன. வாய் சற்று திறந்திருந்ததனால் வாயினுள் மலம் சிறிது சென்றுவிட்டது.



இந்நிலையில் ஸ்ரீகுருதேவர் தம் தலையை சாய்த்த வண்ணம் தம் குழந்தையின் மூகத்தை நோக்கினார். அவர் பார்வையில்

1. இவன் மனம் அருவருப்பு கொள்கிறானா?
2. ஏதாவது வாய் முணுமுணுக்கிறதா?



3. முகம் கழுவிக்கொண்டு வந்து நம்மை சுத்தப்படுத்துகிறானா?

4. வாயினுள் சென்ற மலத்தை கீழே துப்புகிறானா?

5. இந்த நிலையில் ஏதாவது **ஆறுதல் வார்த்தை** சொல்கிறானா? அல்லது **வெறுப்பான வார்த்தை** பேசுகிறானா?

என கவனத்துடன் எதிர்பார்த்திருந்தார்.

ஸ்ரீகுருதேவர் கிருபையினாலும், எமதய்யன் (கண்ணன்) அனுக்ரஹத்தினாலும் **எந்த குணதோஷமும்** இன்றி தேவாம்ருதம் (பஞ்சாமிர்தம்) என அந்த உச்சிஷ்டத்தை உண்டு கலகலவென சிரிப்புடன் இந்த பஞ்சாமிர்தத்தை உள்ளேயே அடக்கி வைத்து எத்தனை சிரமப்பட்டீர்கள். இப்போது உங்களுக்கு சிரமம் நீங்கிவிட்டது. இந்த பைத்தியத்திற்கு பூரண ஆசை நிறைவுற்றது என பேசிய வண்ணம் அவருக்கு மேல் கால் எல்லாம் சுத்தி செய்து துணி கொண்டு துடைத்து கைத்தாங்கலாக அழைத்துச் சென்று அவர் படுக்கையில் அமர்த்திவிட்டு இந்த தூல சரீரத்தை சுத்தப்படுத்தியது.

ஸ்ரீகுருதேவர் கலகலவென சிரித்தவண்ணம் இன்று உனக்கு **சந்தன அபிஷேகமா?** நீ கொடுத்து வைத்தவன் என்றார். "எல்லாம் அவனே" என்ற நிலையில் கொடுப்பவன் யார்? வாங்குபவன் யார்? கொடுத்து வாங்கும் பொருள் ஏது?

**அதை அதுவே அறியும்!**

**எல்லாம் நீ!**



# பாதம்பட்ட தூளிகள்!

ஸ்ரீகுருதேவருக்கு உபாசனாமூர்த்தி தில்லை சபேசனாகிய **நடராஜராகும்**. பலமுறை மார்கழி திருவாதிரைக்கு சிதம்பரம் போயிருக்கிறார்கள். இது கருவில் இருக்கும் போது ஒரு நடராஜர் சிலை களிமண்ணினால் இவரே செய்து அதற்கு வர்ணம் எல்லாம் கொடுத்து, மரத்தால் ஒரு பூஜை பெட்டியும் கருவறை உள்ள ஆலயம் போல் வர்ண வேலைப்பாடுகளுடன் செய்து அதனுள் அம்மூர்த்தியை வைத்திருந்தார்.

ஸ்ரீகுருதேவர் 1960-ல் வடஇந்திய யாத்திரை சென்றார். அவரும் ஒரு வருஷம் அவன் அருளால் செய்து முடித்து வரும் வழியில் அயோத்தியில் **ஸ்ரீராமர் பாதுகை** ஒன்று சந்தனக்கட்டையில் செய்ததை வாங்கி வந்தார். அவன் அருளால் நேபாள கண்டகி (பிரம்ம புத்திரா) நதியில் **சாலக்கிராமம்** இரண்டு எடுத்து வந்தார். அவைகளில் ஒன்று மஹாவிஷ்ணு, மற்றொன்று கௌரிஷங்கர் ஆகும்.



**சாலக்கிராமம்**

தினமும் அந்த சாலக்கிராமம் இரண்டிற்கும் சந்தன அபிஷேகம் மட்டும் செய்து, ஒரு பால்கிண்ணத்தில் அவைகள் இரண்டையும் வைத்து, அவைகள் மூழ்கும் அளவுக்கு பால்விட்டு கற்பூர ஆரத்தி செய்து இரவு பூஜையை முடிப்பார்.

அதுபோலவே அந்த ஸ்ரீராமர் பாதுகைக்கு வெள்ளி தகட்டில் காப்பு செய்து அவற்றிற்கும் சந்தன அபிஷேகம், பால் அபிஷேகம், **புனித தீர்த்த** அபிஷேகம் பண்ணி முடித்து கற்பூர ஆரத்தி செய்து இரவு பூஜையை முடிப்பார்.

அந்த சாலக்கிராமம் இரண்டும் இரவு முழுதும் பாலினுள் இருக்கும். மறுநாள் காலையில் ஸ்நானம் முடித்து அந்த சாலக்கிராமம் இரண்டையும் வெளியே எடுத்து சுத்தம் செய்து அந்த ஸ்ரீராமர்

பாதுகையில் வைத்துவிட்டு பாலை ஸ்ரீகுருதேவரும், அண்ணாவும், இதுவும் மட்டும் அருந்துவோம். மற்றவர்களுக்கு அப்பாலைக் கொடுப்பதில்லை. ஆனால் ஸ்ரீபாத தீர்த்தம் அனைவருக்கும் கொடுக்கப்படும்.

காலையில் பிரசாதம் கற்கண்டு மட்டும். மதியம் எந்த உணவு தயாராகிறதோ அதை நிவேதனம் செய்வதுண்டு. இரவு பழம் மட்டும் நிவேதனமாகும்.

ஸ்ரீகுருதேவர் தமிழ்நாட்டில் ஸ்தலங்களுக்கு செல்லும் சமயம் எல்லாம் **ஸ்ரீபாததூளி** என இரண்டொரு சிட்டிகை கொண்டு வருவார். வடக்கே யாத்திரை செய்யும் போதும் அங்கும் முக்கிய ஸ்தலங்களில் இருந்து **ஸ்ரீபாததூளி** சிறிதளவு கொணர்ந்தார். இவைகளை எல்லாம் ஒரு சிமிழியில் போட்டு வைத்து அந்த சாலக்கிராமம் இரண்டையும் வைக்கும் **ஸ்ரீபாதுகையின்** மேலே இதையும் வைத்துவிடுவார்.

ஸ்ரீகுருதேவருக்கும், இந்த வைத்தியத்திற்கும் நித்ய முக்கிய வழிபாடு **ஸ்ரீபாதுகை, ஸ்ரீபாததூளி, சாலக்கிராமம்** ஆகும். சாலக்கிராமத்தைப் பற்றியும், ஸ்ரீபாத தூளியையும் சற்று விளக்குகிறோம் உணர்க!

**சாலக்கிராமம் :**

இது பக்தர்களுடைய ஸ்ரீபாத தூளியாகும். இது முக்கிய ஸ்தலங்களில்தான் கிடைக்கும். அதாவது **கொடிமரம், பலிபீடம்** ஆகியவற்றின் சமீபத்தில்தான் இருக்கும். ஆலயங்களில் ஸ்ரீமஹான்கள் வழிபடச் செல்லும்போது **"அவர்கள் பாதம்பட்ட தூளிகளை"** மற்றவர்கள் பாதம் படலாகாது என வாயுதேவன் மிகவும் எச்சரிக்கையாக கவனிக்கிறான்.

ஸ்ரீமஹான்கள் சென்றவுடன் அந்த ஸ்ரீபாததூளிகளை உடனே பலிபீடம், கொடிமரம் இவற்றின் கீழே ஒதுக்கிவிடுகிறான் வாயுதேவன். அது கொஞ்சம் அதிகம் சேர்ந்தவுடன் அவற்றை எல்லாம் எடுத்து ஆகாய மார்க்கமாகச் சென்று நேபாளில் உள்ள கண்டகி நதியில் சேர்த்துவிடுகிறான். அவை உடனே **ஜீவசக்தி** உள்ள கற்களாக மாறிவிடுகிறது! இந்த கற்களே சாலக்கிராமம் ஆகும். இதை ஜீவசக்தி எனக்குறிப்பிட காரணம் ஜலப்பிரவாகத்தில் **எதிர்முகமாகச் செல்லும்!** சில இடங்களில் அருவி விழும் பகுதியில் கூட சில **சாலக்கிராமம் எதிர்த்து எகிறி மேலே செல்லும்!**

கை அடக்கத்துடன் ஒரு கண்ணை மூடி ஒரு கண் கொண்டு உற்று நோக்கினால் உள்ளே ஒரு **அக்னிப்பொறி** போன்று ஒரு ஒளி தோற்றும்! இவைகளின் வடிவம் கணநாதன், கார்த்திகேயன், கௌரி, கௌரிசங்கர், மஹாவிஷ்ணு என ஐந்தாகும். இவைகள் கிடைப்பது மிகமிக கடினம். காரணம் **ஜீவசக்தி** இருக்க வேண்டும் அல்லது **ஸ்வயம் ஒளி** இருக்க வேண்டும்!

இந்த சாலக்கிராம பூஜை மிகமிக புனிதமானது, அதிபுராதனமானது. அங்கசுத்தம் அதிலும் மேலான **மனசுத்தம் பூரணமாக** வேண்டும்! ஒவ்வொரு நாளும் ஒரு நேரமாவது **பால் அபிஷேகமோ, பால் தியானமோ** அவஸ்யம் வேண்டும். ஒரு நாள் ஒரு வேளையாவது பால் இல்லாமல் இருந்தால் அது அபசாரமாகிவிடும். முறைப்படி பால் அபிஷேகத்துடன் ஒரு சாலக்கிராமம் இருந்தால் அக்குடும்பத்திற்கு எக்குறைவும் கிடையாது. சாலக்கிராமம் லிங்கத்தைப் போல எந்த மூர்த்தி வடிவுமற்றது. ஜீவசக்தி என்பது ஜலப்பிரவாகத்தை எதிர்த்துச் செல்லும் ஆற்றலுடையது. ஸ்வயம் ஒளி நாம் பார்த்தாலே தெரியும்.

**ஸ்ரீபாத தூஸி:**

இது பக்தாளுடைய பாததூஸி! ஞானிகளாகிய ஸ்ரீமஹான்களின் பாததூஸி! இது பகவானின் ஸ்ரீபாததூஸி அல்ல! இது ஆலயங்களில் கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றில்தான் போய் சேரும். இது வாயு பகவானின் கைங்கர்யம்!

**"ஸ்ரீபாததூஸியின் பெருமையை உணர்ந்தவர்களுக்கே"** அந்த இடத்தின் இருப்பு தோற்றும், அவர்கள் கரங்களுக்குத்தான் இது கிட்டும். மற்றவர்களுக்கு இது கிட்டாது!

ஓர்சமயம் நாரதர் ஸ்ரீபகவானைக் காண துவாரகைக்குச் சென்றார். அங்கு எம் ஐயனை காணவில்லை. ருக்மணியிடம் ஸ்ரீபகவான் எங்கே எனக்கேட்டார். பகவான் பூஜை அறையில் பூஜை செய்து கொண்டிருக்கிறார் என்றாள். நாரதருக்கு ஒரே ஆச்சர்யம்!

பகவான் பூஜை செய்கிறானா!! அகில உலகமும் இவனை பூஜிக்கின்றன. இவன் எவரை பூஜிக்கிறான்? என புரியாமல் திகைத்தார் நாரதர். ருக்மணியின் அனுமதியுடன் பகவான் பூஜை அறையின் சாவித்துவாரத்தின் வழியாக உள்ளே நோக்கினார் நாரதர். நாரதர் வரவை அறிந்தான் பகவான். தம் பூஜையை முடித்து தம் பூஜைப் பொருளை (சிமிழை) ஒன்றினுள் ஒன்றாக ஏழு பெட்டிக்குள் வைத்தானாம் எம் பிரபு.

பகவான் அனுமதியுடன் உள்ளே சென்று பகவானின் பூஜாவிதி, பூஜையின் பொருள் எது? எனக்கேட்டார் நாரதர்.

பகவான் சொன்னான்:

எம் பூஜையின் மூர்த்தித்வம் **ஸ்ரீபக்தர்களின் ஸ்ரீபாததூஸியாகும்!** எம் அபிஷேகம், ஆரத்தி, நிவேதனம் ஆகிய அனைத்தும் அந்த ஒன்றிற்கே.

**"ஸ்ரீபாததூஸி இல்லாமல் யாம் இல்லை. யாம் இல்லாமல் பாததூஸி இல்லை. ஸ்ரீபகவான் என்றால் தூஸி. தூஸி என்றால் ஸ்ரீபகவான். இது பரம ரகஸியம் என்றானாம் எம் பிரபு".**

இந்த பூஜையை தினமும் செய்யாமல் யாம் இருப்பதில்லை. தினமும் இப்பூஜையை முடித்து ஆரத்திக்குப்பின் ஸ்ரீபாததூஸியை ஒரு அணுப்பிரமாணம் எடுத்து எம் சகஸ்ராரத்தில் தரித்துக் கொள்வோம் என ஸ்ரீபாததூஸியின் பெருமையை பகவான் சொன்னதாக ஸ்ரீமஹான்கள் அனுபவம்!


**எல்லாம் நீ!**



# தூலத்தில் பணிவும்! உள்ளத்தில் கனிவும்!

ஸ்ரீகுருதேவர் பூஜை கைங்கர்யத்தை பிறகு இது ஏற்றுக்கொண்டது. குறிப்பாக ஒவ்வொரு ஆண்டும் மார்கழி மாதம் திருவாதிரை அன்று விசேஷ பூஜையும் ஏழைகளுக்கு கூடுமானவரை அன்னதானமும் செய்வதுண்டு. சிதம்பரம் போவதை சிறிது காலத்தில் ஸ்ரீகுருதேவர் நிறுத்திவிட்டார். ஆனால் கடைசிவரை மார்கழி திருவாதிரை பூஜையை விடவில்லை.

ஸ்ரீகுருதேவர் சமாதிக்கு நான்காண்டுகளுக்கு முன், **இவர் சமாதியானால் நீ என்ன செய்வாய்?** என ஓர் கேள்வி கேட்டார். அதுகால பரியந்தம் அவர் சமாதி ஆவார் என்ற எண்ணமே இங்கு இல்லாதிருந்தது. அதை அவர் ஞாபகப்படுத்தவே இன்னதென விளக்கவொட்டா ஒரு துயரம், கஷ்டம், துக்கம், கவலை, பயம் குபீர் என இதை பிடித்துக் கொண்டது.



ஸ்ரீகுருதேவர் எத்தனையோ ஆறுதல் சொல்லியும் **அந்தப் பிரிவை** இதனால் ஏற்க இயலவில்லை. ஐந்து தினங்கள் அன்னபானம் ஏற்கவில்லை, நித்திரையும் வரவில்லை. தன் மனதை எத்தனையோ சமாதானப்படுத்தியும் மனம் ஏற்கவில்லை. ஸ்ரீகுருதேவரும், **வரவும் பற்றும் தூலதோற்றத்திற்கே எனவும், அதன் பிணைப்பு, அதன் துண்டிப்பு** பற்றி பலகதைகள், பல உதாரணங்கள் சொல்லிச்சொல்லி மூன்று மாத காலத்தில் சாந்தி சமாதானப்படுத்திவிட்டார்! ஆக **“ஸ்ரீமஹாசமாதியினால் வரும் பிரிவு”** இதன் மனதை விட்டு அகன்றது.

அதாவது எதுவும் வந்ததும் இல்லை;
எதுவும் வந்தால்தானே இருப்பு உண்டு!
ஆகவே இருந்ததும் இல்லை;
எதுவும் இருந்தால்தானே இழப்பு உண்டு!
இருப்பும் இல்லை! இழப்பும் இல்லை!
**அங்கு பிரிவு ஏது?**

இந்த மாறாத உறுதி உள்ளத்தில் வந்தபின் முன் வந்த கஷ்டம், கவலை, துக்கம், துயரம், பயம் இல்லவே இல்லை.

ஸ்ரீகுருதேவர் சமாதி ஆவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பே அந்த பைத்தியத்திற்கு சில முக்கியமான கருத்துக்களை சொன்னார்கள்!

குழந்தாய் சுகா!

உனக்கு **"திருவடி"** என்ற நாமா பிரத்தியட்சமாவதாக! உன் பிராப்த தூலம் மறையும் பரியந்தம் இப்போது எம் உபதேசத்தால் நீ கொண்டிருக்கும் விரதம் மறையாமல் இருக்க வேண்டும். அதாவது உன்

**"தூலத்தில் பணிவும், உள்ளத்தில் கனிவும்"** அணுவும் மாறக்கூடாது.

எமக்கு நீ ஒரே குழந்தை. உன்னை வளர்த்து, ஒரு நிலைக்கு கொண்டு வந்தது பெரிய காரியமல்ல. மேலும் நீ எம் **மனஸ்ய, அமாநுஷ்ய** சிருஷ்டி!

ஆனால் உனக்கு இருக்கும் குழந்தைகளோ **பலபேர்!** அதில் **சிலர்** இந்த ஜன்மாவில் தேறுவர். மீதியை அடுத்த சட்டையுடன் முடிப்பதற்கு தயார் செய்து, நிலைப்படுத்திவிட்டு வந்துவிடு! நீ ஓர் ஏணியாகவோ, ஓடமாகவோதான் இருக்கவேண்டும்!

நீ பரண் ஏற்றவும், கரை ஏற்றவும் அவர்கள் ஸ்ரீபாதங்களை தாங்கும் **ஒரு சுமைதாங்கியாக** இருந்தால் போதும். இதன் அர்த்தம் **பொறுமையின் சிகரமாக** விளங்க வேண்டும்!



உன் குழந்தைகளுக்கு வினையும் (தூலமும்), மனமும்(கற்பனையும்) பரிபாகப்படுவது மிகமிக கடினம். ஆகவேதான் ஆசையும், கோபமும் உன்னிடம் ஆகாது. இருப்பதை கொடுத்துவிடு, போதும் என எதிலும் நிறைவு கொள்!

நீ பிறருக்கு போதிப்பதைவிட (சொல்வதைவிட) நடந்து காட்டு! பக்குவப்பட்ட ஆன்மாக்கள் உன்னை பற்றி கரையேறிவிடுவர்! என ஆழ்ந்த கருத்துக்களை அந்த பைத்தியத்தின் உள்ளத்தில் பதித்துவிட்டார்கள்!

**எல்லாம் நீ!**



# புனித காலம் சகஜ ஐக்கியம்!

1988-ம் ஆண்டு சித்திரை மாதம் ஸ்ரீகுருதேவரால் நடந்து வீடுவரை வரவோ, ரிக்ஷா ஏறவோ, இறங்கவோ முடியவில்லை. ஆகவே பஸ்நிலையம் அருகில் உள்ள துவரை ஆபீஸில் அந்த ஆலயத்திலேயே வழக்கம்போல் படுக்கும் கட்டிலிலேயே படுத்திருப்பார். ஆகாரம் இரண்டு வேளை அதை எழுந்து அமர்ந்து உட்கொள்வார். மலஜல உபாதைக்கு சுவரைப் பற்றிய வண்ணம் நடந்து சென்று உபாதை நீக்கி வந்து படுத்துக்கொள்வார்.

பின் இரண்டு வாரங்களுக்கு படுக்கையில் எழுந்து அமர்ந்த வண்ணம் மலஜல விஸர்ஜனம் செய்வார்! ஆகாரம் ஒருவேளைதான் ஏற்க முடிந்தது! பின் மூன்று தினங்கள் எழவோ, ஆகாரம் ஜலம் ஏற்கவோ, மலஜலம் கழிக்கவோ இயலவில்லை என்று சொல்வதைவிட நிறுத்திக் கொண்டார்!

இதுகாலபரியந்தம் உறவினர்களையோ, அன்பர்களையோ அருகே அனுமதிப்பதில்லை. **இது அவர் உத்தரவு!** வந்தால் நமஸ்காரம் செய்யவேண்டும், உடனே சென்றுவிட வேண்டும். வந்தவர் உடல் உலக சம்பந்த வார்த்தை பேச அனுமதிப்பதில்லை! எதுவும் வாங்கி வரவும் கூடாது. கொண்டு செல்லவும் முடியாது!

மே பத்தொன்பதாம் தேதி (1988) அன்று வியாழன், வைகாசி ஆறு, திருவாதிரை நட்சத்திரம், அன்று காலையில் இருந்து கூட்டம் அதிகமாகியது. அப்படி இருந்தும் எவரையும் ஐந்து நிமிஷத்திற்கு மேல் நிற்க அனுமதிக்காமல் **சாந்தி சமாதான வார்த்தை பேசியே** அனுப்பிக் கொண்டிருந்தது!

அன்று மாலை ஆறு மணி சுமாருக்கு இதன் வீட்டம்மா, அண்ணா, அண்ணி, குழந்தைகள் ஒரே கும்பலாக வந்தனர். அவர்கள் அனைவரும் அன்று இரவு அங்கு தங்குவதாக திட்டமிட்டு வந்தனர் போலும். அன்று ஸ்ரீகுருதேவர் முகத்தில் பொலிவுடன் விளங்கினார். புன்முறுவல் மாறவில்லை. இன்றுதான் புனித காலம் என எம் கணிப்பை எமதய்யன் உறுதிப்படுத்தினான்.

மேலும் அவன் சொன்னதாவது:

இத்தனை ஆண்டுகள் நீ செய்த சேவை அத்தனை முக்கியமல்ல. இன்னமும் ஒரு மூன்று மணிநேரம் செய்யும் சேவைதான் முக்கியம். இது சேவையென்று சொல்வதைவிட

**"நீயும் அவரும் சகஜ ஐக்கியம்" என அறிவுறுத்தி,**

உறவை தள்ளிவிட்டாய் (இதுவரையிலும்), இனி உன் வீட்டையும் ஒதுக்கி வைப்பாயாக! பின் உன்னையும் "ஒதுக்கு அதாவது ஒடுக்கு".

**"முன்னதை செய்; பின்னதை யாம் முடிக்கிறோம்" என்றான்!**

பின்னும் சொன்னான்:

வீட்டை ஒதுக்கும்போது எந்த ஜீவனும் மனம் உடைந்தோ, மனம் கசந்தோ, மனம் சலித்தோ போகலாகாது. **அதிநிறைவாக** செல்ல வேண்டும் என கனிந்து சொன்னான்!

**ஓ.. எம் தாஸியே! "உன்னால் முடியும்! நீ நடிப்பதில் எம்மிலும் வல்லவன்! யாம் உன் பின் நிற்போம்!"** என புன்முறுவலுடன் இதை இயக்கினான்! இது இயங்கியது!

இது அண்ணாவிடம் மட்டும் சொன்னதாவது:

அண்ணா! நம் ஐயா இன்று காலையில் இருந்தே சமாதி நிலைகூடி அசைவற்றிருக்கிறார்கள். சமாதி கலைய ஒன்றோ, இரண்டோ, மூன்று தினங்களாகலாம்! ஆகவே இதுசமயம் **மௌனம்** மிகமிக முக்கியம். இவர்கள் சிறிது பேசினாலும் அது சமாதிநிலைக்கு பங்கம் ஆகலாம். பின் இதுகாலபரியந்தம் பட்டபாட்டுக்கு பிரயோஜனம் இல்லாமல் போய்விடும் என அமைதியாக சொன்னது.

இது சொன்னதை குழந்தைகளும் மற்றும் இரு பெண்களும் கேட்டு, பரவாயில்லை எங்க தாத்தா நலமாயிருக்க வேண்டும். அதுவே எங்களுக்குப் போதும். நாங்கள் இப்போதே போய்விட்டு நாளை காலை வருகிறோம் என சொல்லிவிட்டு புறப்பட்டார்கள். அண்ணி மட்டும் நான் எங்க மாமாவை விட்டு செல்லமாட்டேன். நாளைக் காலையில்தான் போவேன் என அடம் பிடித்தார்கள்! **நல்லது என்றோம்!**

அண்ணா சொன்னார், தம்பி நான் வீட்டிற்கு சென்று சாப்பிட்டுவிட்டு பத்து மணிக்கு வந்து ஒரு ஆட்டோவில் உன் அண்ணியை அழைத்துச் சென்றுவிடுகிறேன் என சொல்லி அவரும் போய்விட்டார். இந்த அண்ணி என்ற தூலத்தை எப்படி அகற்றுவது?

ஓ.. எம் ஐயனே! நீ ஏதாவது செய், என பாரத்தை அவன்மீது போட்டது. மணி எட்டு ஆகியது. அந்த அண்ணி சொன்னதாவது: இதன் பெயரை சொல்லி அழைத்து எனக்கு தூக்கம் தூக்கமாக வருகிறது; கடையில் சென்று ஏதாவது மிக்சர் அல்லது காராசேவு வாங்கிவா என்றது. பரவாயில்லையே எமதய்யன் வேலை செய்கிறான் என சொல்லி அதற்கு இருநூறு கிராம் மிக்சர் வாங்கிக் கொடுக்க, அதுவும் ஸ்ரீகுருதேவரை விட்டு அகன்று மிக்சர் தின்றது போலும்.

அந்த அம்மாவும் தூக்கக் கலக்கத்தோடும், மிக்சர் பொட்டலத்தோடும் தூரமாய் ஒரு சுவரில் சாய்ந்தபடி மிக்சரை சுவைத்தது. தம் தற்காலிக மாமாவை மறந்தது.

இது அருகிலேயே அங்குமிங்கும் நடந்தவண்ணம் ஸ்ரீகுருதேவர் திருமுக மண்டலத்தையே நோக்கிக் கொண்டிருந்தது. மணி எட்டு நாற்பத்தைந்து ஆகியது!

நம் தூலத்தில் கால் பெரு விரலில் இருந்து சகஸ்ராரம் வரை தொன்னூற்றாறு தேவ தெய்வங்கள் இருந்து இந்த தூலத்தை **நெறிமுறை தவறாமல்** அதாவது **விதிக்கப்பட்ட விதிமுறை** தவறாமல் ஆட்சி செய்கிறார்கள்! ஒவ்வொருவராக தம் யதாஸ்தானத்தை அடைந்து கொண்டிருந்தனர். இவர்கள் தொன்னூற்றாறு பேரும் சென்றுவிட்டனர்!

**எல்லாம் முடிந்து விட்டன!**

ஆனால் பிராணன் என்ற **வாசுதேவனும்**, ஜீவாத்மா என்ற **ஆத்மாவும்** மட்டும் இருந்தன.

யோகிகளுக்கு நெற்றிப்பட்டையில் பிராணனாகிய **வாசுதேவனும்**, மேல் சகஸ்ராரத்தில் ஜீவாத்மாவாகிய **ஆத்மாவும்** முடிவில் இருப்பார்கள்!

1. யோகிகள் ஞானவிசாரணை பண்ணாமல் யோகத்தை மட்டும் அனுஷ்டித்து வந்தார்களேயானால் ஜீவகளை களையாத்தன்மையினால் ஜீவன் **ஜீவாத்மாவாகவே**, பிராணனும் **பிராணனாகவே** இவ்விரண்டும் நாம ரூபத்தை இழக்காமல் ஆகாயத்தில் சென்று தூலத்தைவிடும் சமயம் எந்த எண்ணத்தை எண்ணியதோ அந்த கர்மாவுடன் **மறுபிறவிக்கு** ஏதுவாகிவிடுகிறது! இங்கு பிறவி உண்டு.

2. **யோகி ஞானவிசாரணையோடு கூடி மனோ நாசம் செய்திருந்தானாகில் வாசுதேவன் என்ற பிராணன் மனோநாசத்தினால் ஜீவகளை களைந்த ஆத்மாவை மேலே தள்ளி சகஸ்ரார உச்சிக்குழியின் மூலமாக கபாலம் திறந்து வெளியேறி பிராணன் வெளிக்காற்றுடனும், ஆத்மா பரத்துடனும் இரண்டற கலந்து மயமாகிவிடும்! இங்கு பிறவி இல்லை!**

**“ஆத்மஞானி எனச்சொன்னாலே ஞானவிசாரணையோடுகூடி மனோநாசம் செய்தவன் எனப்பொருள்!”**

**இவர்களுக்கு பிராணனாகிய வாசுதேவன் இதயகமலத்தில் இருப்பான்! விசாரணையினால் மனோநாசம் ஆனதால் ஆத்மாவானது நெற்றிப்பட்டையில் இருக்கும்.**

**இவர்கள் கர்மதூலத்தை விடும்போது கர்மாவும் முடிவுற்றது! ஜீவனும் முடிவுற்றான்!!**

**ஆகவே இந்த பிராணனை வாகனமாக்கிய இந்த ஆத்மாவானது சட்சு (நேத்திரத்தின்) வழியாக வெளியேறி பிராணன் காற்றுடனும், ஆத்மா பரத்துடனும் கலந்து, கரைந்து மயமாகும். இங்கும் பிறவி இல்லை.**

**“இது அனுபவ ஞானிகள் முடிவுற்ற சித்தாந்தம்!”**

இங்கும் ஸ்ரீகுருதேவருக்கு காலக்கணிப்பில் வியாழன் இரவு மணி ஒன்பதுக்கு இரு நேத்திரங்களின் (ஆனால் பாதை ஒன்றின் வழியாக) வழியாக பிராணன் மூலமாக ஆத்மா வெளியேறியது.

பிராணன் நெற்றிப் பட்டையில் மோதி கீழ் இறங்கி நேத்திரங்கள் வழியை பின்பற்றும்போது **பிராணனின் வேகத்தினால் வாய் சற்று திறந்தது!**

அடுத்த வினாடி ஆலயக் கதவுகள் இரண்டும் தானாக திறந்தன. உள்ளே எமதய்யன் ஸ்ரீதட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருந்தான். இது அவனைப் பார்க்க அவன் தம் இரு கரங்களாலும் சமிக்ஞை செய்தான்.

அவன் சமிக்ஞையை உணர்ந்த இது, ஸ்ரீகுருதேவருடைய தாடையில் ஓர் கையும், சகஸ்ராரத்தில் ஓர் கையும் வைத்து லேசாக அழுத்தியதில் வாய் மூடிக்கொண்டது!

**"திருவாதிரையில் ஸ்ரீகுருதேவர் மஹாசமாதி ஆனார்கள்!"** நேத்திரத்திலிருந்து வெளியேறிய ஒளி உள்ளிருந்த பரமாத்மாவுடன் லயமாகி மயமாகியது. அடுத்த வினாடி

**ஆத்மாவும், பரமாத்மாவும் ஒன்றாகி இரண்டற கலந்த தன்மையினால் அது பரத்துடன் ஐக்கியமானது!**

**இரண்டென்றான்!**
**இரண்டும் ஒன்றென்றான்!!**
**ஒன்றென்றும் இல்லையென்றான்!!!**
**இல்லை! (ஆனால்) உண்டு!!!!**

அன்று இரவே ஃபீஸ் போன பல்பு ஆகிய ஸ்ரீகுருதேவரின் தூலமாகிய **மண், மண்ணாலான வீட்டிற்கு வந்தது போலும்.** மறுநாள் எங்கிருந்தோ அன்பர்கள் கூட்டம் கூடிவிட்டது.

பூமிக்குள் தூலத்தை சமாதி வைக்கும் நிலை இந்த பைத்தியத்திற்கு தெரியாது. இதற்கும் ஒரு வழிகாட்டு என்றது அவனை.

**அவன் அருளால்** மதுரை அன்பர்கள் அஃரூரர், பீமன், உத்தவர், ஸாதுஜீ, சாத்தகி முதலியோர் முன்வந்தனர். இவர்களில் பீமன் (என்ற **முரடன்** ஆனால் உத்தமன்) கேட்டான்:

ஸ்வாமிஜீ! இதுகால பரியந்தம் இந்த தூலத்தை நீங்கள் பாதுகாத்தீர்கள், **உங்கள் கடமை முடிவுற்றது.** இனி இந்த தூலத்தை எங்களிடம் ஒப்படைக்க வேண்டியது உங்கள் கடமை. இப்போது செய்ய வேண்டிய **கிரியைகளை** நாங்கள் செய்து முடிக்கிறோம் என பணிவுடன் கேட்டனர்.

**"முன்னதாகவோ பின்பாகவோ இறந்தால் சுடுகாடு தெரியும்"** என்பார்கள். இதை அறியாத் தன்மையினால் அனுபவம் மிகுந்த மதுரை அன்பர்கள் வசம் அந்த தூலத்தை ஒப்படைத்தது. அவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அன்று மாலை முறைப்படி பனிரெண்டு அபிஷேகமும் செய்து ஆறு மணி சுமாருக்கு பூமியினுள் வைத்தார்கள் போலும்.



சமாதி ஆலய சிவலிங்கம்

**"மண்ணாசை பட்டேனே மண்ணுண்டு போட்டதடா".**

அந்த ஒன்று, ஜீவர்களை உஜ்ஜீவிப்பதற்காக மண்ணாலான ஒரு பொம்மையை எடுத்து அதனுள் இருந்துகொண்டு செய்ய வேண்டிய காரியத்தை எந்தக்குறைவும் இல்லாமல் முடித்து **மண்ணை மண்ணிலேயே போட்டுவிட்டு மயமாகியது!**

மண்ணிலே தோன்றியது!
மண்ணிலேயே விளையாடியது!!
மண்மயமானது!!!

ஆனால் இந்த மூன்றும் **காரியம்**

(அது வினை);

இதை ஆட்டுவித்தது காரணம் -
இதற்கு இருப்பு இல்லை!

**காரியம் தோற்றும்!**
**காரணம் தோற்றாது!!**


**இதை நடத்திய அந்த ஒன்றுக்கு**
**இருப்பு இல்லை!!!**

**"ஆனால் அது இல்லாமல் எதுவும் இல்லை!"**

**எல்லாம் நீ!**



ஸ்ரீகுருதேவர்



# முடிக்காமல் யாம் முடியோம்!

தூத்துக்குடியில் ஸ்ரீஅபிராமிதாஸன் என்ற பிராமண குலத்தில் உதித்த ஓர் மஹான் இருந்தார். அவர் அபிராமி அந்தாதி, சௌந்தர்யலஹரி என்ற பாடல்களையும், அதன் உயர்ந்த கருத்துக்களையும் பக்தி நிலையிலும், ஞான நிலையிலும் பாடம் நடத்தி வந்தார்.

ஸ்ரீகாஞ்சிமஹான் **மஹாபெரியவர்** அனுமதியின் பேரில் சித்தாந்த நூலாகிய சிவஞானபோதம் என்ற பனிரெண்டு சூத்திரத்தையும் வேதாந்த கருத்தாக மாற்றி எழுதி மஹாபெரியவரின் ஆசியும் பெற்றார்.

அவர் தெர்மல் நகரில் சண்முகசுந்தரம், சிதம்பரம், தியாகராஜன் முதலிய அன்பர்களுக்கு பக்தியும், ஞானமும் போதித்து வந்தார். அவர் 1987-ல் கார்த்திகை மாதம் சமாதியும் ஆனார். ஆனால் அங்கு இருக்கும் போதே 1985-ல் இருந்து இது தெர்மல் நகருக்குப் போகும். அவர் மூலமாக சில பாடங்களைக் கொடுக்கும்.

அவர் மறைந்த பின்னும் ஆறு மாதம் தொடர்ச்சியாக மாலை ஆறு மணிக்கு போகும் இரவு எட்டு மணிக்கு வந்துவிடும். கடைசியில் இரண்டு மாதம் (ஸ்ரீகுருதேவர் மஹாசமாதி 1988 வைகாசி) எம்



ஸ்ரீகுருதேவர் இருக்கும் கோவிலுக்கே வந்துவிடுவார்கள். இப்படி இவர்கள் தொடர்பு நீடித்தது. அவர்களில் ஒரு ஆறுபேர் அதிசிரத்தையுடன் கூடியவர்கள். எம் ஸ்ரீகுருதேவர் மறைவு பற்றி அவர்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டது போலும். அவர்களும் மற்றும் அன்பர்களும் கலந்து கொண்டனர்.

இது இங்கு பிடிப்பில்லாத தன்மையினால் விலகியது. **இந்த கூட்டத்தில்தான் விலகிப் போக முடியும்.** கூட்டம் கலைந்து விட்டால் ஒவ்வொருவருக்காக பதில் சொல்ல வேண்டிவரும் எனக்கருதியது. மண்ணாலான தூலம் அது தேவையென கேட்டவர்களிடம் ஒப்படைத்து முடிந்தது. இது கோவிலினுள் வந்து கதவை மூடியது.

எமதய்யன், என்ன அவசரம் என்றான்?
ஓ... எம் ஐயனே! போதும் இந்த விளையாட்டு!

1982-ல் அன்று பண்டரியில் உம்மிடம் சொன்ன வாக்கு:

**"இந்த பண்டரீயே எம் முடிவிடம்"** என்றது. காஞ்சிமஹான் மஹாபெரியவரை பார்த்துவிட்டு ஒரு முடிவெடு என்றாய். அதன்படி அந்த மஹாபெரியவர் ஸ்ரீசத்குரு சேவையையும் உணர்த்தி, பின் ஆறு ஆண்டுகள் சத்பாவ சேவையையும் உணர்த்தி அனுப்பிவைத்தார். **உன் அனுமதியுடனும்** இங்கு வந்தோம்!

**"யாம் வந்த காரியம் இரண்டும் முடிவுற்றன"**
**இனி எம் உறைவிடம் செல்ல வேண்டாமா??**

எமதய்யன் சொன்னதாவது:

ஓ.. ஓ.. அது உன் உறைவிடமா?
யாமே அன்று உன்னோடு இறங்கி வந்தவன்,
இன்னமும் அதில் ஏற **முடியவில்லையா? முடிக்கவில்லையா??**
என எமக்கே தெரியவில்லை.

**முடியவில்லை:** உன்னை விட முடியவில்லை!

**முடிக்கவில்லை:** உனக்காக வந்த காரியம் முடிக்கவில்லை!!

**நீ ஸ்ரீசத்குரு சேவை செய்தாய்!**
(அதனால் நீ அவர் ஆனாய்)

**அவர் ஆன பணியை முடிக்கவில்லையே!!**
உன் காரியம் முடிந்தால் எம் காரணமும் முடியும்!

**நாம் இரண்டும் ஒன்றானால்**
**"ஒன்றாகவே"** நிற்போம்.

இதற்குள் ஆலய கதவு தட்டப்பட்டது. கதவை திறந்தோம். சிதம்பரம் என்ற பெண் குழந்தை அங்கு கண்ணருவி ஓட நின்றிருந்தது. யாம் கதவை திறந்ததும் மண்டியிட்டு இரு திருவடிகளையும் சுற்றி வளைத்து பற்றிக் கொண்டது. அது சொன்னதாவது:

ஸ்வாமி! நம்பியவர்களை நட்டாற்றில் விட்டுவிடுவதுதான் தங்கள் தர்மமா? இது உங்களுக்கு பொருந்துமா? இப்போதுதான் கண்விழித்திருக்கிறோம். எங்களுக்கு இரையை ஊட்டி **உறங்கப்பண்ணிவிட்டு** தாங்கள் செல்லலாமே!

எங்களுக்காகவே இறங்கிவந்தாய், நீ வந்த காரியத்தை முடிக்காமல் சென்றால் உன் பெயர் (விட்டல்) கெட்டுப்போகும். பின் இந்த கலியில் உன் பெயரையே எவரும் சொல்லமாட்டார்கள்.

**“ஜீவர்களுக்கு வீணான அஞ்ஞான அவசரம்!**
**தேவாதிதேவனுக்கு கருணையும், பொறுமையும் -**
**இதுவே இரு கரம்”.**

பல ஊர்களிலும் உன் மெய்யடியார்கள் உள்ளனர். அவர்கள் **உலகை, உடலை, உடைமைகளை மறந்து தான் இறந்து போன** பின்

**ஜீவர்களின் வழிகாட்டியாக வந்த நீ,**
**அவர்கள் நிலை அறிந்து கைகாட்டிவிட்டு** போகலாமே!
(வழிகாட்டி - தெய்வம்; கைகாட்டி - ஸ்ரீசத்குரு)

இப்போது உனக்கு அங்கு என்ன அவசரம்? நீ வந்த **காரியத்தை** முடிக்காமல் சென்றால்

**நீ வந்ததற்கும், நின்றதற்கும், இறங்கியதற்கும்**
**“இந்த வேஷம் தாங்கியதற்கும்”**

பொருள் அற்றுப்போகும்! என கதறி அழுது வேண்டிக்கொண்டது அந்த பக்குவ ஆன்மா!

**அவன் சிரித்தான்! யாம் திகைத்தோம்!!**
**அது அறியும்! அது நடத்தும்!! அது முடிக்கும்!!!**

**நம்பிக்கை என்ற ஓர் கையினால் அதை பற்றுங்கள்!**
**வைராக்கியம் என்ற ஓர் கையினால் உலகை தள்ளுங்கள்!!**

வெங்காயம் (உள்ளி) என்ற ஒன்று முதலில் உருவமாக தோற்றினாலும் உரிக்க உரிக்க தோல்தான் தோற்றியதே தவிர வெங்காயம் தோன்றவில்லை. அத்தன்மை போல் நாமரூபமும் அதன் கற்பனையான **குணங்களும்**

**இல்லை! இல்லை! இல்லை! என முழுமையாக தள்ளினால்**
**எதுவும் இல்லை! ஆனால் ஒன்றுண்டு!**

என்ற நிலையை நீங்கள் அவஸ்யம் பெறுவீர்கள் என ஆசி கூறுகிறோம்!


**யாம் உங்கள் ஸ்ரீபாதச்சுவடுகளாக இருந்துகொண்டு**
**உங்களுடனேயே இருப்போம்!**
**எம்மை மறந்தாலும் யாம் உங்களை மறவோம்!**
**எம்மை தள்ளினாலும் உங்களை விட்டகலோம்!**
**எம்மை தூஷித்தாலும் அதை ஆனந்தமாக ஏற்போம்!**


காரணம்

**உங்கள் எண்ணம், சொல், செயல் அனைத்தும் யாமே!**
**உங்களை முடிக்காமல் யாம் முடியோம்!**
**இது உறுதி!**

1982-ல் இருந்தே அந்த பைத்தியத்திற்கு **திருவடிதாளி** என நாமம் வழங்கலாயிற்று! அந்த பைத்தியம் மதுரை, வேலூர், மேட்டூர், சென்னை, திருஅண்ணாமலை என பல இடங்களுக்கு செல்லும். ஒவ்வொரு ஊரிலும் ஒரு ஸ்ரீஅடியார்கள் இல்லத்தில் பத்து, பதினைந்து தினங்கள் தங்கிக் கொள்ளும். மற்ற ஸ்ரீஅடியார்கள் அங்கு வந்து தரிசித்து உபதேச கருத்துக்களை ஏற்றுச் செல்வர்! 1978 முதல் ஸ்ரீஅடியார்களுக்கு தபால் மூலமாகவே சில உபதேச கருத்துகளை எழுதி அனுப்பிக்கொண்டிருக்கிறது.

**எல்லாம் நீ!**





# சில சித்தர்களின் விளையாட்டுகள்!

## 1. சித்து இல்லாத சுத்த பைத்தியம்!



மேட்டூர் அணை ஆலமரம்

மேட்டூருக்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செல்வதுண்டு. பத்து அல்லது பதினைந்து தினங்கள் எம் சாந்தசக்கு இல்லத்தில் தங்கும். காரணம் குறிப்பாக அங்கு உள்ள காடுகளிலும், மலைக் குகைகளிலும், நீர்தேக்கத்தினுள்ளும் பல சித்த புருஷர்களை தரிசிக்க செய்தான் எமதய்யன்.

ஒருசமயம் வெடிகுண்டு புரளி நாடு முழுவதும் பரவியது. அதன் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கம், பூங்கா ஆகிய இடங்களுக்கு செல்ல எவரையும் அனுமதிப்பதில்லை. நீர்த்தேக்கத்தின் கரையில் ஒரு ஆலமரம் உண்டு. அந்த சித்தர்களின் அனுமதியுடன் அங்கு ஏகாந்தமாக இருந்து வரும். பெரும்பாலும் இதை எவரும் அறியமாட்டார்கள்.

ஒருநாள் அப்படி ஏகாந்தமாக அமர்ந்திருந்தபோது இரண்டு சித்த புருஷர்கள் வந்தனர். அவர்கள் அந்த பைத்தியத்தின் இருமருங்கிலும் இருவர் அமர்ந்து கொண்டனர். ஸ்ரீஆதிசங்கரர் அருளிய விவேக சூடாமணியில் இருந்து சில விளக்கங்களை பகிர்ந்து கொண்டிருந்தோம்.

அதுசமயம் காவலர்கள் (போலீஸ்) இருவர் எதிர்திசையில் இருந்து வந்தனர். இந்த பைத்தியத்தை கண்டு கொண்டனர். உடனிருந்த அவர்கள் இருவரும் சூட்சும சரீரிகள். ஆகவே அவர்களை அவர்களால் காண இயலவில்லை. அவர்கள் இருவரும், யாரையா அது சாமியார்? உமக்கு இங்கு என்ன வேலை? இங்கு வரக்கூடாது என்பது உமக்குத் தெரியாதா என்ன? என அதட்டியபடி கையில் உள்ள லத்திக்கம்பை சுழற்றிய வண்ணம் வந்தனர்.

எம் அருகில் இருந்த இருவரில் ஒருவர் எம் தலையில் கையை வைத்தார். **எதுவும் பேசாதே** என மட்டும் சொன்னார். யாம் சிலைபோல் ஆகிவிட்டோம் போலும். வந்த காவலர் இருவரும் தாங்களே பேசிக்கொண்டனர். இது என்ன? இப்போது இங்கே இருந்த சாமியார் எங்கு போனார்? மாயமாக இருக்கிறதே! நாம் தூங்கவில்லையே! என்ன ஆச்சர்யம்!! என சொல்லிய வண்ணம் ஓ.. சாமி! ஏ.. சாமி!! என புலம்பிய வண்ணம் தம் தடியை சுழற்றி வீசிப்பார்த்தனர். அந்த தடி எம் சரீரத்தில் அங்கும் இங்கும் ஊடுருவிப் பாய்கின்றது. ஆனால் **சரீரத்தை தொடவில்லை.** இது சினிமாவில் பார்க்கும் மாயாஜாலக் காட்சி போல் தோன்றிற்று. அங்கு உள்ள செடிக்குள்ளும், புதருக்குள்ளும் குத்தி, அடித்துப் பார்த்துவிட்டு இது நம் **மனப்பிரமையாக** தோற்றுகிறது என சொல்லிவிட்டுச் சென்றனர்.

அவர்கள் சென்றதும் அந்த சித்தர்கள் இருவரும் இதை நீ கற்றுக் கொள்கிறாயா? இன்னும் சில சித்திகள் பறப்பது, காணாமல் செய்வது, உண்டு பண்ணுவது, ஜலத்திலேயே பலகாலம் வாசம் செய்வது இப்படி எங்களிடம் நிறைய உண்டு. **சில அட்சரம்தான்**. ஆனால் நீ விவேகி; அதிசீக்கிரம் கற்றுக் கொள்வாய் ஏற்கிறாயா? என்றார்கள்.

உங்கள் சித்திகள் இந்த உடலுக்கும் உலகுக்கும்தானே? ஆத்மாவாகிய உங்களுக்கு பயன் தருமா? இதில் அஹம்தானே வளரும். அது உங்களிடமே இருக்கட்டும். இது இப்படியே ஊருக்குள் போகமுடியாது. ஆகவே எம் பழைய நிலையை ஆக்கிவிட்டுச் செல்லுங்கள் என்றது அந்த பைத்தியம்.

**“இவர் சுத்த பைத்தியம்”** என்றார் ஒருவர். “இவர் அனுபவிக்கும் ஆனந்தம் **நாம் அனுபவிக்க முடியவில்லையே**” என்றார் மற்றொருவர். அவர்களில் ஒருவர், நீ இந்த மலையை விட்டு இறங்கும்போது உன் சரீரம் உனக்கு வந்துவிடும், கவலை வேண்டாம். எங்களை மறந்து விடாதீர். அடிக்கொருதரம் வருகை தாரும் என உள்ளம் நெகிழ்ந்து கூறினார். அதுவும் அவர்கள் நிலைக்கிரங்கி **ஐயோ பாவம்** என பிரிந்து சென்றது!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## உ. சூதறிந்த கள்வன்!

ஒருசமயம் மதுரையம்பதியில் எம் செல்வன் அஃரூரர், சபரிமாதா இல்லத்தில் தங்கி இருந்தது. ஒருநாள் வாக்கிங் செல்ல சமணமலை என்ற சிறுகுன்றுக்கு சென்றோம். அங்கு பாறையில் அமர்ந்து தியானம் செய்துவிட்டு கீழே இறங்கும்போது மணி பனிரெண்டு ஆகிவிட்டது. கடும்வெய்யில், வானம் கழுவி போட்ட மாதிரி ஒரு சிறிய மேகத்தையும் காணோம். அங்கு ஒரு ஐயனார் கோவிலும், ஒரு தெப்பமும், ஒரு பெரிய ஆலமரமும் (மிகப்பெரியது) உண்டு. கொஞ்சம் நடந்து வந்து அந்த ஆலமர நிழலில் நின்று கொண்டு இந்த கடும்வெய்யிலில் எப்படி நடப்பது என தயங்கி நின்றோம்.

ஒரு பனிரெண்டு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் யோ.. சாமி! என அழைத்தான். அவனை திரும்பிப் பார்த்தது. வெயிலைக் கண்டு பயப்படுகிறாயா? நான் ஒரு சிறுகேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் கூறிவிட்டுப் போ. வெய்யில் உன்னை ஒன்றும் செய்யாது என ஆணையிட்டான். அது திகைத்துப்



மதுரை ஆலமரம்

போய் அவனை ஒருமுறை உற்றுப் பார்த்தது. அவன் **சூதறிந்த கள்வன்** என உணர்ந்து கொண்டது.

தம்பி! உன் கேள்வி என்ன? எனக்கேட்க, அவன், இந்த பெரிய ஆலமரத்தில் விதையில் வந்த அடிமரமும் சேர்த்து பதினாறு விழுதுகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட இந்த பதினாறும் ஒரே மாதிரியாக இருக்கிறது. இதில் எந்த விழுது **விதையினால் வந்த அடிமரம்** என சொல் பார்ப்போம்? என்றான். அது திகைத்தது.

இதற்கு எப்படி பதில் சொல்வது என்று எண்ணி ஹே.. குருதேவா! இது என்ன சோதனையான கேள்வி? இதற்கு எவரும் பதில் சொல்ல முடியாதே! ஹே.. ப்ரபோ! இதை உணர்த்து என முறையிடும்போது எது அடிமரமோ அதன் மேல் ஒரு அண்டங்காக்கை அமர்ந்து கரைந்த வண்ணம் தம் அலகால் கொத்திக் காட்டிற்று.

யாம் சிரித்தோம். அவனுக்கு வேகமும், ஆத்திரமும் உண்டாயிற்று. ஏன் அண்ணா! அவனிடம் கேள்வி கேட்டால் நீ வந்து பதில் சொல்கிறாயே. இது சரிதானா? என காகசொருபத்தில் இருந்த வினாயகனை சிறுவனாகிய வேலன் கேட்டான்.

அடுத்த நிமிஷம் இருவரும் சொரூபங்கள் ஆயினர். ஆமாம் முருகா! அன்று ஔவை பாட்டியிடம் பாடம் சொன்ன துடுக்குத்தனம் இன்னமும் போகவில்லையே! அவனோ ஓர் பைத்தியம்; அதாவது ஞானப் பைத்தியம்! உடல் உலகை அற்ற நிலையில் இருக்கும் அவனிடம் **உலக பாடத்தை** கேட்டால் அவன் எப்படி பதில் சொல்வான்? விளையாடுவது யார்யாரிடம், எப்படி விளையாடுவது என ஒரு கணக்கு உண்டு.

“அவன் மௌனம் சாதிப்பானே அன்றி வாக்கைக் கொடுத்து உன்னிடம் மாட்டிக் கொள்ள மாட்டான்”.

குழந்தாய்! நீ செல்லலாம் என்றான் வினாயகன். ஆனால் குமரன் விடவில்லை. குழந்தாய் திருவடி! யாம் இரண்டு அட்சரத்தில் ஒரு மந்திரம் தருகிறோம். அதை அப்யாசித்துச் சொல். நீ இங்கிருந்தபடியே ககனமார்க்கமாக இந்த உலகல்ல எந்த உலகத்திற்கும் உன்னால் செல்ல முடியும். எவர் கண்களுக்கும் புலப்படாமல் சஞ்சாரம் செய்ய முடியும் எனக்கேட்டான்!

அந்த பைத்தியம் சிரித்துக் கொண்டே, ஹே.. பிரபோ! கந்தவேலே! நீயோ, உன் அண்ணாவோ, உன் அன்னையோ, திரிகர்த்தாக்களோ இந்த **இல்லாத உலகை** சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் செய்வதற்காக அதாவது **தொழிலுக்காக வந்தவர்கள்.** உங்களுக்கு அனைத்து வல்லமைகளும் அவஸ்யம் வேண்டும்! தொழிலற்ற இந்த பைத்தியத்திற்கு என்ன வேண்டும்?

உங்கள் **திருவடி தரிசனமும், உங்கள் கருணையும்தான்** வேண்டும். உம் கருணையில்லாமல் எதை சாதிக்க முடியும்? எம் ஐயனே!

உங்களிடம் அதிகம் பேசியதால் தயவுசெய்து இந்த பைத்தியத்தை மன்னித்தருள வேண்டுமென்று சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டது அந்த பைத்தியம்! அவர்கள் இருவரும் ஆசி கூறி, வினாயகன் மட்டும் சொன்னான்: தம்பி குமரா! இந்த பைத்தியம் அவனுடைய தந்தையாகியும், குருவாயும் இருக்கும் மஹானிடமே சித்துக்கள் வேண்டாமென உதறியவனாயிற்றே! பிறகு நம்மிடம் ஏற்றுக் கொள்வானா?

**ஆனால் சில அசடுகள் சித்துக்களில் (கண் கட்டி வேலையில்) ஆசை கொண்டு காலத்தையும் வீணாக்கி, வந்த காரியத்தையும் (ஆத்ம ஞானத்தையும்) மறந்து வீண்காலம் கழித்து காலன் வசப்படுகிறார்கள்! தன்னை அறிந்த ஞானிக்கு சித்துக்கள் தேவையில்லை. அவர்களே சித்சொரூபமாக இருப்பார்கள்!**

“ஒரு சில இடங்களில் அவர்களை அறியாமலேயே சில **சித்துக்கள் தோற்றும்**. அதுவும் அவர்கள் **அறியாமலேயே அழிக்கப்படும்**”.

**அனைத்துமாக இருப்பவனுக்கு சித்து ஏது? சக்தி ஏது? சக்தி இருந்தாலே அது உடல் உலகம்தானே! சக்தியை தனக்குள் அடக்கி சுத்தசிவமாக இருப்பவனை உலகமும், ஜீவர்களும் கண்டுகொள்ள இயலாது!**

**ஊனக்கண்ணாகிய இந்த மனக்கண் இருக்கும் பரியந்தம் உருட்டல், மிரட்டல் அதாவது மாற்றத்தினால் ஏமாற்றம், ஏமாற்றத்தினால் திகைப்பு (சந்தேகம்), திகைப்பினால் பயம், பயத்தினால் மரணம் இப்படி மாறிமாறி வந்து இந்த ஆட்டத்தினால் தாம் இருந்த உண்மையை மறந்துவிடுகிறான். இது உலக ஜீவர்களுக்கு சகஜம்.**

இந்த கதை உனக்கு வேண்டாம். நீ உன் இடம் செல்லும் பரியந்தம் வெய்யில் உனக்கு தோற்றாது எனச்சொன்னான்! எம் ஐயன் வாக்குப்படி ஏதோ ஓர் மேகம் வந்தது. அதன் மூலம் வெயில் இல்லாமல் சுகமாக எம் இருப்பிடம் வந்து சேர்ந்தோம். இப்படி இயற்கையாலேயே நாம் போஷிக்கப்பட்டால் (தெய்வத்தாலேயே ரட்சிக்கப்பட்டால்) இந்த உடல் உலக பாதிப்பு இல்லாமலேயே பேரானந்தமாக இருக்கலாம்.

**இறை கிருபையும், குருவின் அருளாசியும் ஒருவனுக்கு இருக்குமாயில் இந்த இல்லாத உலகத்தை இல்லாமலேயே ஆக்கிவிடலாம். அதாவது அவனுக்கு தோற்றாமலேயே மறைக்க முடியும்.**

ஆகவே ஜாக்ரதா அவஸ்தையில் ஜாக்ரதையாகவே இருக்க வேண்டும். இறை நாமமும், குருஸ்மரணையும் எந்த வினாடியும் தைலதாரை போல் **ஒருவனுடன் இணையுமாயின்** அவன் திருவடியின் கீழ் இந்த உலகம் இயங்கும். அது அவனை பாதிக்காது. அவன் பேசும் ஸத்யமும், செய்யும் தர்மமும் அவனை ரட்சிக்கும். இதற்கு ஒரு உதாரணம் சொல்லி இதை நிறைவு செய்கிறோம்.

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 3. இறைநாமமும் குருஸ்மரணையும்!

ஒருசமயம் மேட்டூரில் வாக்கிங் செல்லும்போது சிறுநீர் கழிப்பதற்காக கற்களும், செடிகளும் அடர்ந்த பகுதியில் நின்றிருந்தோம். ஒரு சலசலப்பு சப்தம் கேட்டது. ஒரு சுண்டெலி (சிறிய எலி) அதிக வேகமாக வந்து மரணபயத்துடன் இந்த பைத்தியத்தின் திருவடிக்கு கீழே உள்ளே நுழைந்து பதுங்கிக் கொண்டது.

அதை ஒரு பெரிய சர்ப்பம் துரத்தி வந்தது போலும்? அந்த சர்ப்பம் சீறி படம் எடுத்த வண்ணம் அந்த எலி இருந்த இடத்தை கண்டுகொண்டது. இந்த பைத்தியம் காலை அகற்றினால்தான் அந்த எலியை அது பிடிக்கமுடியும். அந்த சர்ப்பம் அந்த பைத்தியத்தைப் பார்த்துக் கேட்டதாவது:

**சர்ப்பம்:** ஐயா! உன் காலடியில் என் உணவு இருக்கிறது. அதை என் வசம் கொடுத்துவிடு! (என கெஞ்சியது) எனக்கு உணவு கிடைத்து மூன்று தினங்கள் ஆகிறது. ஆகவே இந்த ஒன்றை என் வசம் ஒப்படைத்துவிடு! (என வேண்டியது)

**அது :** குழந்தாய்! உன் உணவை தடுக்க யாம் யார்? ஆனால் இந்த ஜீவன் எம் திருவடியில் **சரண் புகுந்துவிட்டது.** யாமோ சரணாகத வத்ஸலன்!

அவசியம் உன் பசிக்கு ஏற்கனவே ஒன்று தயாராக இருக்கும். அது உனக்கு கிடைக்கும் என சொல்ல...

**சர்ப்பம்:** (அதற்கு கோபம் அதிகமானது)இந்த வேதாந்தம் என்னிடம் வேண்டாம். என் குணம் உனக்குத் தெரியும். அதை தருகிறாயா அல்லது உன்னை தீண்டவா? (அதிஉக்ரத்துடன் கேட்டது)


**அது :** (சிரித்த வண்ணம்) உன்னால் இந்த தூலத்தை தீண்டும் விதியிருந்தால் அதை மாற்ற ஈசனாலும் முடியாதே. உன் காரியம் எதுவோ அதை நடத்து. (என அமைதியாக பதில் கூறியது)

அடுத்த வினாடி ஐந்து அடி தூரத்தில் இருந்து ஒரு தவளை கத்தியது. கத்தியது என்று சொல்வதைவிட என்னை சாப்பிடலாமே என்று அழைத்தது போல் இருந்தது. அந்த சர்ப்பம் எமக்கு நன்றி கூறிவிட்டு சரேலென அந்த தவளை மீது பாய்ந்து பசித்தவன் பழுத்த பழத்தை விழுங்குவதைப் போல் எடுத்துக் கொண்டது.

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 4. இது எம் தலைவிதி!

குற்றால மலையில் தேனருவிக்கு மேல் பொத்தை என்ற ஓர் இடம் உண்டு. பொத்தை என்றால் அது மலைசிகரமாகவும், பல மைல்களுக்கு மேடும் பள்ளமும் நிறைந்த புதராகவும், ஜலம் ஊற்றெடுக்கும் பகுதியாகவும், ஜலம் தெரியாமல் புல் நிறைந்த பகுதி சில இடங்களிலும், அப்பகுதிகளில் எட்டு (அ) பத்து மீட்டர் ஆழமுள்ள சேர் (சகதி) நிறைந்த பகுதியாகவும், அது அதிபயங்கரமான துஷ்ட மிருகங்கள் சஞ்சாரம் (ஜலம் பருகும் பகுதி) செய்யும் பகுதியாகவும் இருக்கும்.


குற்றாலமலை பொத்தை

அந்த பொத்தையை அடுத்து ஒரு குகை உண்டு. வருஷத்தில் சில முக்கிய காலங்களில் தூல, சூட்சும வடிவங்களில் சில மஹான்கள் வந்து கூடுவதுண்டு. இனி நடைபெறும் தெய்வீக விஷயங்கள் குறித்து பேசி ஒரு முடிவெடுப்பதுண்டு. அப்படி சிலர் கூடும்போது இந்த பைத்தியத்திற்கும் அழைப்பு வரும். இரண்டொரு நாள் தங்கி **ஒரு முடிவுக்குப்** பின் அவரவர் இடங்களுக்கு சென்றுவிடுவர்.

இதுவும் குற்றால மலையில் அந்த குகை, பாபநாசத்தில் சொரிமுத்தய்யன் கோவிலுக்கு கிழக்கே இரண்டு கல் தூரத்தில் ஒரு குகை, திருக்குறுங்குடியில் நம்பி கோயிலுக்கு மேல் ஸ்வாமி பாதம் என்ற இடத்திற்கு மேற்புறம் ஐந்து கல் தூரத்தில் ஒரு குகை, இப்படி பல இடங்களிலும் பலர் அழைப்பின் பேரில் செல்லும். இரண்டொரு நாளில் திரும்பி வருவதும் உண்டு. ஒரு சிலர் தூலவடிவத்தோடு கூடியவர்கள்(சித்தர்கள்) ஒரு வாரம் வரை தங்க வைத்துவிடுவார்கள்.

அங்கு காய், கனி, இலை இவைகளுக்கு பஞ்சமே இல்லை. இப்படி ஒரு பத்து பனிரெண்டாண்டு காலம் சஞ்சாரம் செய்திருக்கிறோம். **இது எம் தலைவிதி!** பின் தூலம் நலிந்துவிட்டதால் அங்கு மலையே ஏற இயலவில்லை. பின் அவர்களில் சிலர் தூல வடிவமாகவும், சூட்சுமமாகவும் இதன் இருப்பிடத்திற்கு தேடி வந்துவிடுவார்கள். இது இன்றும் நடந்து வருகிறது. **அதையும் அவனே அறிவான்** !

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 5. அதிசய அறுசுவை உணவு!

ஒருசமயம் காவிரிக்கரைக்கு இதை வரச்சொல்லி தகவல் வந்தது. இது திருச்சியில் ஒரு குழந்தை இல்லத்தில் தங்கிக் கொண்டு அவர்களை பார்க்கச் சென்றது. மதிய ஆகாரத்திற்கு பின் மாலை மூன்று மணி சுமாருக்கு காவிரிக்கரையில் பேசிவிட்டு, பேசிக்கொண்டே கொள்ளிடம் சென்றோம். அப்போது கொள்ளிடத்தில் ஜலம் இல்லை.

ஆனால் ஆங்காங்கே சில இடங்களில் ஜலம் தேங்கி நின்றது. ஜலம் வரும் பகுதியில் சில புதர்கள் உள்ள இடத்தில் ஒரு ஐந்து கல் தூரம் சென்றிருப்போம். கொள்ளிடம் ஆற்றில் இறங்கும்போது மாலை ஆறு மணி இருக்கலாம். கூட வந்தவர்களில் இருவர் தூலம், ஒருவர் சூட்சுமம்.

அப்போது இது கேட்டது. ஏதேனும் ஆகாரம் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு போகலாமா? அல்லது வாங்கிச் செல்லலாமா? என்றது. அவர்கள், சாப்பாட்டை அப்புறம் பார்க்கலாம் எனச்சொல்லிவிட்டனர். மெதுவாகவே நடந்து நடந்து ஒரு இடம் அமரும் போது இரவு மணி ஒன்பது ஆகிவிட்டது. சூட்சுமத்திற்கு பசி, தாகம் ஏது?

தூலவாசிகளில் ஒருவர் உனக்கு பசிக்கிறதா? என இதைக் கேட்டார். ஆமாம் பசிக்கிறது. இப்போது பசித்தால் இந்த ஆற்றுமண்ணைதான் சாப்பிடவேண்டும்! முன்பே கேட்டது, வேண்டாம்


என்றீர்கள். இப்போது பசித்தால் யார்தான் என்ன செய்யமுடியும்? உங்கள் இருவருக்கும் பசி இருக்கிறதா? எனக்கேட்டது. ஆமாம் பசிக்குது. எங்களைத் தள்ளு, நீ என்ன செய்வாய்? எங்கள் இருவரைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம்.

உணவை வா என்றால் வரும். போ என்றால் போய்விடும். நீ ஆரம்பத்தில் இருந்தே ஒரு சித்திகளும் வேண்டாம் என்று உதறி வருகிறாய். இப்போது பார் வசமாக மாட்டிக் கொண்டாய். எங்களை மாதிரி நீயும் கற்றுக் கொண்டால் இப்போது அது எத்தனை பேருபகாரமாக இருக்கும் தெரியுமா? அதுசரி நீ அக்கரை சென்று மூன்று உணவு பொட்டலங்களை வாங்கி வருகிறாயா? எனக் கேட்டார் ஒரு சித்தர்.

இதுவும், சரி கொஞ்சம் காலதாமதமாகலாம் பரவாயில்லை. சென்று வருகிறோம் எனச்சொல்லி புறப்பட்டது இந்த பைத்தியம். உடனே சூட்சும சரீரி தடுத்து, இது என்ன விளையாட்டாக இருக்கிறது? ஊர் எங்கே? இவர் போய் வருவது எங்கே? விளையாட்டுக்கும் இடம், பொருள் வேண்டாமா? அவரை மாதிரி அடக்கம் நம் கூட்டத்தில் எவருக்குமே கிடையாது.

சிலசமயம் நாம் அனைவரும் **கோபம் தாளாமல்** கீரியும் பாம்பும் என சண்டை போட்டுக் கொள்கிறோம். அதுசமயம் இவர் எத்தனை அமைதியாக யாரையும் சாராமல், சமரசம் செய்யாமல், ஒரு பொம்மலாட்டத்தைப் பார்ப்பது போல **புன்முறுவலுடன்** பார்ப்பாரே தவிர எவரையும் சமாதானம் செய்யமாட்டார். தான் சாந்தியாகவே இருப்பார்.

நாம் அனைவரும் நெருப்பு போல் பொரிந்து பின் புகையாய் தீய்ந்து போய், பேசமுடியாமல் அமைதியாகி நான் பேசியதுதான் தப்பு, நீ பேசியதுதான் தப்பு என ஒருவருக்கொருவர் தெளியும்போது, "ஏன் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கலாமே", ஏன் இந்த வீம்பு. இப்பொழுது எத்தனை அமைதியாயிருக்கு என்பாரே! இவரிடம் இருக்கும் அளவற்ற பொறுமை நம் கூட்டத்தில் எவருக்குமே இல்லை.



தேவையற்ற சித்துக்கள் இருக்கிறது!
தேவையான (ஆத்ம) சக்தி இல்லையே!
என்ன பிரயோஜனம்?

அதை இவர் மூலமாக பெறவே ஒவ்வொரு கூட்டத்திற்கும் இவரை பரிவுடன் அழைக்கிறோம். அவர் பேசாமலேயே நம் அனைவருக்கும் பொறுமையின் பெருமையை உணர்த்தி வருகிறாரே. நம் சித்துக்களை வைத்து இவரிடம் விளையாடினால் நம் சக்திகள் அனைத்தும் பஞ்சு பொதியில் நெருப்புப் பொரியென பொசுங்கிப் போகும். சரிசரி ஆவதைப்பாருங்கள் என இதை பார்த்து, ஐயா! நீங்கள் இதை தவறாக கொள்ள வேண்டாம் என வேண்டினார்.

இந்த பைத்தியம் சிரித்துக் கொண்டே, தவறு எவரிடமும் கிடையாதே. தவறாக பார்ப்பதுவும் மனமே, சரியாக

பார்ப்பதுவும் மனமே, **“சும்மா இருந்தால் மனம் இல்லை”** எல்லோருமே கூடிய சீக்கிரம் அந்நிலையை பெற்றுவிடுவீர்கள். ஐயா! நீங்கள் இருவருமே உணவு வேண்டுமானால் தருவித்தோ அல்லது போயோ சாப்பிட்டு வரலாம். இதுக்கு பசியில்லை. இருந்தாலும் ஒரு வேளை உணவு இல்லை என்றால் உயிரா போய்விடும்? எனச்சொல்லி பொறுமையின் பெருமையைப் பற்றி ஒரு மணி நேரம் அவர்களிடம் பேசியது. அவர்களும் ஆனந்தமாக கண்ணீர் மல்க கேட்டுவிட்டு, உருகிச் சொன்னார்கள்.

**“ஐயா! நாய் குணமும், பேய் குணமும் சித்தர்களை விடாது”** எங்கள் தலையெழுத்து அப்படி ஆகிவிட்டது. உங்களை நாங்கள் சார்ந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகிறோம். இதை எங்கள் அனுபவத்தில் உணருகிறோம். எங்களை மன்னித்துவிடுங்கள் என வேண்டினார்கள். அவர்கள் இருவரையும் தட்டி தடவிக்கொடுத்தோம்.

அவர்களில் ஒருவர், உங்களுக்கு நாங்கள் இருவரும் ஒரு வினோதமான ஆனால் **அறுசுவையான விருந்து** படைக்கிறோம், அதை ஏற்கவும் என்றார்.

இது சொன்னது:

**எமக்கு வினோதமும் தெரியாது! விரோதமும் தெரியாது!!** அறுசுவையும் ஒருசுவையும் தெரியாது! ஆனால் ஒன்று தெரியும்! இந்த அண்டரண்ட பிரம்மாண்டங்களும் உங்கள் கூட்டமும் யாமும் அந்த ஒன்றே எனத் தெரிகிறது!

ஒருவர் சொன்னார், **எங்கள் பாண்டித்யம் “உங்கள் அனுபவத்தின் முன் சிறிய தூசியே”** என்றார்! மற்றவர் சாப்பாட்டை பற்றிய திட்டம் தீட்டினார். இதை படிக்கும் அன்பர்களுக்கு உங்கள் திருவடியைப் பற்றி மிகப்பணிந்து கேட்டுக் கொள்கிறோம். **அதிசயம் ஆனால் உண்மை.**

**நம்பியவர்க்கு நடராஜா! தேவதேவன்!**
**நம்பாதவர்க்கு எமராஜா! காலதேவன்!!**

எதையும் நம்பினால் உண்டு. நம்பவில்லையானால் இல்லவே இல்லை.

**உண்மையை நம்பினால் நீ உண்டு!**
**உண்மையை நம்பவில்லையானால் நீயும் இல்லவே இல்லை!**

ஒரு அன்பர் சுற்றும்முற்றும் பார்த்தார். ஒரு நீர்த்தேக்கத்தின் அருகே இரு தகரக் குவளை இவர்களுக்காகவே இருந்தது போலும்? அவை இரண்டும் ரொம்ப பழையன. ஆனால் பழுதாகவில்லை. (ஓட்டையில்லை)

ஒருவர் அங்குள்ள புன்னை மரத்தில் ஒரு பென்சில் போன்ற ஒரு குச்சியை ஒடித்து தோலை எல்லாம் சுரண்டினார். அது பால் போன்ற வெள்ளை குச்சியானது. குறுமணல் பரப்பில் அந்த குச்சியை வைத்து மூன்று வாழை இலைகளை வரைந்தார் நரம்புகளுடன்!

ஒருவர் அருகில் இருந்த பருமணலை ஒவ்வொரு இலையிலும் இரு கைகளாலும் மும்முறை வைத்தார். **இலை போட்டாகிவிட்டது. சாதமும் பரிமாறியாகிவிட்டது!** ஒருவர் பெரிய தகரக்

குவளையில் முக்கால் பகுதி ஜலம் கொண்டு வந்தார். அந்த குவளை ஜலத்தில் **கொழுஞ்சி இலை, தும்பை இலை, ஆவாரை இலை, பொடுதலை** முதலிய தழை(இலை)களை போட்டு அந்த கோல் கொண்டு வேகமாக கிண்டினார். **அது சாம்பாராகிவிட்டது.**

ஒருவர் எருக்கு செடியின் பூமொட்டுக்கள் கொஞ்சம் அதிகமாகவே கொண்டு வந்தார். தம் வஸ்திரத்தில் போட்டு குலுக்கினார். **அது பொரியல் ஆனது.**

ஒருவர் உடைந்த பானையின் ஓடு ஒன்றை சமீபத்தில் கண்டார். அதையெடுத்து பொடிப் பொடியாக உடைத்து தம் வஸ்திரத்தில் வைத்து கைகளால் பிசைந்து எடுத்து மூன்று இலைகளிலும் வைத்தார். **அவை ஒரு அவியல் ஆனது.**

ஒரு இடத்தில் பசுஞ்சாணம் கிடந்தது. அதை ஒருவர் எடுத்தார். குவளையில் போட்டார். ஜலம் முக்கால் பாகம் மோண்டார். குறுமணலை ஒருபிடி அள்ளி அதில் போட்டார். அதை கோல் கொண்டு கடகடவென கலக்கினார். **அது பாயாசம் என ஆனது.**

ஒருவர் காட்டிற்குள் செடிகளுக்குள்ளே சென்றார். வரும்போது இரண்டு மண்சட்டிகளுடன் (விளிம்பு உடைந்து, சிதைந்து போன) வந்தவர், அவ்விரு சட்டிகளிலும் முக்கால் பங்கு அளவு ஜலம் கொண்டு வந்தார். ஒரு சட்டியில் மூக்குத்தி பூ, ஆவாரம் பூ இவைகளை பறித்துப் போட்டு அதை கோல் கொண்டு அலப்பினார். **அது ரசம் என ஆனது.**

மற்றொரு சட்டியில் ஜலத்தில் ஒன்றும் போடாமல் சிறிது மண் மட்டும் போட்டு அதை கோல் கொண்டு கலக்கினார். **அது மோர் என ஆனது.**

அங்குள்ள தேக்குமர இலைகள் கீழே உதிர்ந்து கிடந்ததில் ஆறு இலைகளை எடுத்து இருகைகளாலும் மாறிமாறி தட்டி வாயால் ஊதினார். **அது ஆறும் அப்பளங்கள் என ஆனது.**

ஒருவர் காட்டினில் இருந்து வட்டவடிவமான தட்டையான ஆறு காய்களை பறித்து வந்தார். அதன் காம்பு பகுதியில் பால் வடிந்து கொண்டிருந்தது. அது என்ன காய் என்று தெரியவில்லை. அதை தம் வஸ்திரத்தில் மூடி இருகைகளாலும் தட்டி ஊதினார். **அது மெதுவடை என ஆனது.**

**ஆக வடை, பாயாசம், அப்பளத்துடன் அறுசுவை உணவு தயார் ஆகிவிட்டது போலும்?**

**எப்படியோ உலகின் நிலையில் உண்டு கழித்தோம்!**

**உண்மையின் நிலையில் கண்டு களித்தோம்!!**

மணியும் இரவு பதினொன்று ஆகிவிட்டது போலும். அவர்கள் மூவரும், என்ன திருவடி ஐயா! நீங்கள் டவுனுக்கு போகவேண்டுமே. பஸ் இனி இராதே. இன்னமும் ஆறு மைல் நடந்தால்தான் ஸ்ரீரங்கநாதன் கோபுர வாசலில் வந்து பஸ் ஏறமுடியும். பத்து மணிக்கு மேல் எந்த பஸ்சும் இராதே என்றார்கள்.

இந்த வைத்தியம் கடகடவென சிரித்துக் கொண்டே, அந்தக் கவலை உங்களுக்கு எதற்கு? **எவன் கூட்டி வந்தானோ அவன் கொண்டு சேர்ப்பான்** என்றது.

அந்த சூட்சும ஸ்வரூபி சொன்னார் :


நமக்கு உலகம் தெரிகிறது. வினையும் தோற்றுகிறது. ஆகவே **நமக்கு பயமும்** தோற்றுகிறது. அதிலும் நம்முடைய **சித்துக்களினால்** வெவ்வேறு விதமாக நம்மை பாதுகாத்துக் கொள்கிறோம்.

**இருந்தாலும் மனதின் கனமும், வினையின் பயமும் நம்மை விட்டு அகலவில்லையே!** ஆனால் இவரைப் பாருங்கள். இவர் **பணிவும், கனிவும்** இவர் இந்த **ஜகத்திற்கும்**, அந்த **பரத்திற்கும்** (தெய்வீகத்திற்கும்) மயக்கமும், எந்த கலக்கமும் இல்லாமல் **"சுதந்திர புருஷனாகவே"** இருக்கிறார் என சொல்லிவிட்டு, ஐயா திருவடி! நீங்கள் எப்போதும் செல்லலாம், எப்படியும் செல்லலாம். நன்றி, சென்று வாருங்கள் என பிரியா விடை பெற்றுச்சென்றனர் அம்மூவர்.

இந்த வைத்தியம் கொள்ளிடம் தாண்டி எம் ஸ்ரீரங்கநாதன் கோபுரத்தண்டை வரும்போது மணி சுமார் பனிரெண்டரை இருக்கும். எங்கும் வெறிச்சோடி கிடந்தது. ஆனால் எமதய்யன் கிருபையினால் ஒரு டவுண்பஸ் (ஜங்ஷன் பஸ்) ஐந்து பேர்கள் அமர்ந்த நிலையில் இதுக்காகவே காத்திருந்தது போலும்? கண்டக்டர், சாமி! ஜங்ஷன் வர்ரீங்களா? என்றான். இது வேர்ஹவுஸில் இறங்கிக் கொள்கிறது, ஜங்ஷன் டிக்கட் வேண்டுமானாலும் கொடு என்றது. வேண்டாம் சாமி உன்னை வேர்ஹவுஸிலேயே இறக்கிவிடுகிறேன், அதற்குப் பணம் கொடுத்தால் போதும் என வாங்கிக் கொண்டான்.

**ஆனந்தமாக அமைந்தது!**

**எல்லாம் நீ!**





# ஒன்றினுள் ஒன்று அடக்கம்!

ஒருசமயம் மதுரையில் எம் செல்வன் அஃரூரரின் அபிராமி இல்லத்தில் வேப்பமர அடியில் அமர்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தது. அதுசமயம் மரத்தின் ஒரு கிளையில் சலசலப்பு சப்தம் கேட்டது. அண்ணாந்து பார்த்தோம். ஒரு கிளையின் நுனியில் ஒரு பச்சை நிறம் உள்ள விட்டில் பூச்சி அமர்ந்து, இளம்தளிர்களை சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

அந்த மரத்தின் கிளை எம்மிடம் புகார் செய்தது. இந்த ஜீவன் என் இளந்தளிர்களை கடித்து தின்றால் நான் எப்படி வளர முடியும்? பூ, பிஞ்சு, காய், பழமென எப்படி பலன் கொடுக்க முடியும்? என அழமாட்டாத குறையாக சொல்லியது!

ஒன்றின் பசியை (மற்ற)ஒன்று அமர்த்த வேண்டியதுதானே நியதி. இதில் நீ வருந்துவதில் அர்த்தமில்லையே என சாந்தி சமாதானம் சொல்லியது அந்த வைத்தியம். சில நிமிஷங்களில் அந்த விட்டில் பூச்சி **அதிகம் தின்றதால்** (அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்) அந்த போதை மயக்கத்தால் எமக்கு முன் விழுந்து தம் கால்களை உதறி எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தது.

அதனால் எழ முடியவில்லை. (அதன் விதி முடிகிறது போலும்) அருகில் உள்ள வேலியில் இருந்து இதை கவனித்த ஓணான் ஒன்று அதிவேகமாக ஓடி வந்து இந்த விட்டிலை சற்று சிரமப்பட்டு பழத்தை விழுங்குவது போல் விழுங்கியது. இதுவும் அளவுக்கு மிஞ்சிய ஆகாரம்தான் போலும். நடக்க முடியாமல் அந்த ஓணான் வேலிக்கு ஊர்ந்து சென்றது.

இதை சற்று தூரத்தில் இருந்து கவனித்த ஒரு சேவல் வேகமாக வந்து அந்த ஓணானை கடித்து அலகாலும், காலாலும் பிய்த்து உதறி தம் பசியாற்றிக் கொண்டது.

வெகு ஆச்சர்யம் மறுநாள் காலை யாம் வாக்கிங் போய்விட்டு வரும்போது அருகில் உள்ள குப்பைத் தொட்டியில் அந்த சேவலின் உரோமத்தை அந்த வீட்டு வேலைக்காரி கொட்டிக் கொண்டிருந்தாள். அந்த சேவல் அந்த வீட்டில் உள்ளவர்களின் பசியாற்றிவிட்டது போலும்.

குழந்தைகளே!

இதில் நீங்கள் உணர்வது யாதெனில்,

*கொன்றனை அனைத்தும், அனைத்தும் நினைக் கொன்றன;*
*தின்றனை அனைத்தும், அனைத்தும் நினைத் தின்றன;*
*பெற்றனை அனைத்தும், அனைத்தும் நினைப் பெற்றனை;*
*ஓம்பினை அனைத்தும், அனைத்தும் நினை ஓம்பின*

என்றான் எம் பட்டினத்தடிகள்! ஆகையால்

**எதுவும் ஆவதும் இல்லை, அழிவதும் இல்லை!**
**"ஒன்றினுள் ஒன்று அடக்கம்".**

"தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்
உண்டன மலமாம் உடுப்பன அழுக்காம்"

என்றார்கள். **இப்பெரிய பூமியாகிய நாடகமேடையில் அனைத்து காரியங்களும், அவரவர் வினையின் (புண்ணிய பாபத்தின்) படி ஒழுங்காக நடைபெறுகிறது!**

**இதில் போக்கு வரவை வைத்து கணக்கு பார்க்கவேண்டாம். இதில் கவனம் வைத்தால் உங்கள் கணக்கு தவறிவிடும்!**


**அதாவது மனம் புத்தி வழியில் சென்று வேண்டாத கற்பனைகளைப் பண்ணி மேலும் மேலும் கர்மாவை உண்டு பண்ணி பிறவிக்கு வித்து ஆகிவிடும்!**

**நடப்பன அனைத்தும் அவன் கிருபையினால் ஒழுங்காகவே நடைபெறுகிறது என உணருங்கள். உங்கள் முயற்சி என்னவென்றால் "எல்லாம் நீயே" என பரிபூரண சரணாகதியாக**

**"சிந்தையும் நின் போல் செயலற்று அடங்கி விட்டால் வந்ததெல்லாம் நின் செயலாய் வாழ்வேன் பராபரமே" என ஆகிவிடுங்கள்.**

**எல்லாம் நீ!**





# வாக்காகிய வினையே வாழ்க்கை விளையாட்டு!

மதுரையில் அதே இடத்தில், அதே வேப்பமரத்தடியில் கண்ணைமூடி அமர்ந்திருக்கையில் எதிர் வீட்டில் ஒரு சம்பவம். அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு நான்கு குழந்தைகள். அவற்றில் இரண்டு ஆண், இரண்டு பெண். மூத்தவன் பெரியவன் (வயது 12), அடுத்தது பெண் (வயது 10), அடுத்தது ஆண் (வயது 8), அடுத்தது பெண் (வயது 6). அன்று ஞாயிறு போலும், வகுப்பு இல்லை.

ஆகவே இந்த நான்கு குழந்தைகளும் வீட்டின் முற்றத்தில் (அகலமான இடம்) மண்ணால் வீடு கட்டி, மரப்பாச்சி பொம்மையில் சட்டி, பானை, பாத்திரபண்டம் என **குடும்ப பாணியில்** ஒரு விளையாட்டு. இதில் முதல் இருவரும் அவர்கள் பாத்திரத்தில் கணவன்மனைவி, அடுத்த இருவரும் அண்ணன்தங்கை என இவைகள் நடிப்பிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பாத்திரங்கள்.

உங்களைப் போலவே **அதிகார தோரணையில்** கணவன் மனைவியை வேலை வாங்குகிறான். மனைவியும் நான் என்ன சும்மாவா இருந்து ஊஞ்சலாடுகிறேன்? சமைக்கனும், **உங்கள் வாயிலே கொட்டனும்**. உங்கள் துணி, நம் குழந்தைகள் துணிகளை அலசனும். பாத்திர பண்டங்களை கழுவனும். கடைக்குப் போய் காய்கறி, மசாலா சாமான்கள் வாங்கனும். வீட்டுக்கு வருகிற பால்காரன், மளிகைக் கடை, ஜவுளிக் கடை, வட்டிக்காரன், இன்னமும் அனேகருக்கு பதில் சொல்லனும். இப்படி பொறுப்பில்லாமல் இருக்கிறீர்களே என **சோளப்பொரி** போல் பொரிவாள்.

இவர்களையும்விட அண்ணன், தங்கை வானரக்கூட்டம் போல் குடுமிப்பிடி சண்டை, பாத்திர உடைப்பு, அம்மாவை திட்டுதல், அப்பாவிடம் அது இல்லை, இது இல்லை என கோபத்தின் வேகம் என ரகளை செய்தனர்.

இவைகளை ஒரு மணி நேரமாவது இருக்கும், சரிபார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். **வெகு அற்புதம்!!!** இதுதானே உங்கள் இல்லங்களிலும் நடைபெறுகிறது. சற்று நேரத்தில் இந்த நால்வருடைய அம்மா அழைக்கிறாள்! குழந்தைகளே! சாப்பாடு தயார். சாப்பிட வரலாம். சாப்பிட்டுவிட்டு விளையாடலாம் என ஒரு குரல் கொடுத்தாள்! நால்வரும் அப்படியே தம் **சொந்த வீடு**, **சொந்த பாத்திர பண்டம்** அனைத்தையும் அப்படியே முற்றத்தில் போட்டுவிட்டு அம்மா என தாயிடம் ஓடி விட்டனர். இப்போது சில கேள்விகளை உங்களிடம் கேட்கிறோம்.

1. அவர்கள் கணவன் மனைவி உறவும், உங்கள் கணவன் மனைவி உறவும் வேறுபாடானதா? ஒன்றா??

   அங்கும் சம்பந்தம் இல்லாத உறவே; உங்கள் கணவன் மனைவி உறவும் சம்பந்தம் இல்லாததுதானே!! இந்த தூலத்தில் இந்த உறவு! இதற்கு முன்ஜன்மாவில் எதனுடன் உறவு வைத்திருந்தீர்கள்?

2. இந்த அண்ணனும், தங்கையும் தற்காலிகமாக அண்ணனையும், அக்காவையும் அப்பா அம்மாவாக பாவனை செய்தார்களே. இந்த விளையாட்டில் அந்த நேரத்தில் அது உண்மைதானே?

**"அம்மாவின் எண்ணமும், பசியின் வேகமும்"** வந்தவுடன் நம் வீடு போச்சே, பாத்திரம் போச்சே, நாம் பொங்கி வைத்த சாப்பாடு போச்சே, உறவு போச்சே, வேலை போச்சே என அந்த நால்வரும் சிறிதேனும் சிந்தித்தார்களா? கவலையும், பயமும் உண்டாச்சா? இல்லையே! உங்களுக்கு ஏன் இந்த பிடிப்பு விடமாட்டேன் என்கிறது.

உங்களுக்கு உங்கள் மனைவி பொங்கிப்பொங்கி போட்டுத்தான் பார்க்கிறாள். உங்கள் பசி இன்னமும் போகவில்லையா? உங்களுக்கு உங்கள் மனைவி போகத்தை கொடுத்துத்தான் பார்க்கிறாள், உங்கள் மோஹம் (வெறி) இன்னமும் தீரவில்லையா?

ஒரு ஜன்மாவில் **பிள்ளைகளினால்** அதிக சிரமம் அனுபவித்து, இறைவா! இந்த வானரங்களை எனக்கு கொடுத்துவிட்டாயே? நான் என்ன பாபம் செய்தேன்? இந்த பிள்ளைகளே இல்லாமல் செய்யக் கூடாதா? என வருந்தி முறையிடுகிறாய்!!!

**நீ கேட்ட கேள்வியின் பயனாக** அடுத்த ஜன்மாவில் குழந்தை இல்லாமல் அவஸ்தைபட்டு ஐயோ! தெய்வமே!! உனக்கு கண் இல்லையா? உனக்கு இதயமே இல்லையா? என்னை பிள்ளை பெறா மலடி ஆக்கிவிட்டாயே!! என குய்யோ முறையோ என கூக்குரலிடுகிறாய்???



ஹே.. மனித பதரே!

உன் **எண்ணமும்,** உன் **வார்த்தையும்,** உன் **செய்கையுமே,** உனக்கு **ஜன்மாவையும்**, கணவன், மனைவி, குழந்தை ஆகிய உறவுகளையும் **நீயே உண்டு பண்ணிக் கொள்கிறாய்!!!** இதற்கு இறைவன் பொறுப்பாகமாட்டான்! நீ எதை விதைக்கிறாயோ அதை நீதான் உண்ண வேண்டும்!! வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான். இதுவே முதுரையாகும்!!! வினை (விதை) ஒன்றை போட்டு பலன் ஒன்றை எதிர்பார்க்கமுடியாது.

இறைவன் இதயம் இல்லாதவன்! **நீங்கள் உருகி அழும்போது** உங்கள் இதயத்தை அவன் எடுத்துக் கொண்டு அதை **தூயதாக்கி** அதை திரும்ப உங்களிடமே கொடுத்துவிடுகிறான்.


நீ திரும்பத்திரும்ப மாசுபடுத்தினால் அவனா அதற்கு பொறுப்பு??? ஆனால்??? அவன் உன் வேலைக்கு சலிக்கப் போவதில்லை. நீ எத்தனை முறை மாசுபடுத்தினாலும் உன் **உருக்கத்தினால்** அதை தூயதாக்குவானே தவிர சலிப்படையமாட்டான்! **தண்டிப்பும், கண்டிப்பும்** அவனிடம் கண்டிப்பாக கிடையாது.

இறைவனையோ, மஹான்களையோ குறை கூறாதீர்! **உன் வாக்காகிய வினையே** உன் இன்ப துன்பத்திற்கு காரணமாக அமையும்.

**இறைவன் என்றால் கருணை! கருணை என்றால் இறைவன்!!**

**எல்லாம் நீ!**





# இது சித்து அல்ல குருநாம மஹிமை!

ஓர்சமயம் மதுரையில் நாகமலை என்ற பகுதியில் வாக்கிங் சென்றுகொண்டிருந்தோம். மலைச்சாரலில் ஒரு அடர்ந்த புதரின் பக்கம் செல்கையில் நான்கு பேர் கைகளில் இரு தடிகளுடனும், இரு பெரிய வாள்களுடனும் ஆயுத சகிதமாக வந்தார்கள். வந்தவர்கள் இந்த பைத்தியத்தைக் கண்டதும் நின்றார்கள். ஏதோ ஜாடையாக பேசினார்கள். இதன் கைகளைப் பற்றி கொஞ்சதூரம் வா என அழைத்துச் சென்றார்கள்.

அதுவும் ஏதோ நடக்கிறது என ஸ்ரீகுருநாமதியானத்துடன் ஒரு ஆட்டுக்குட்டி போல் உடன் சென்றது. மலையைத் தாண்டி அடுத்த பக்கம் சென்றுவிட்டோம். அங்கு இன்னொருவன் வந்து சேர்ந்தான். அவன் இதன் முகத்தை சற்று கூர்ந்து நோக்கினான். அந்த நால்வரிடமும் இவன்தான், இவனைவிட வேண்டாம். நம் அம்பிகை ஆலயத்திற்கு இழுத்துச் செல்லுங்கள் என்றான். இந்த பைத்தியமும் எதுவும் பேசவில்லை, சிரித்துக் கொண்டே சென்றது.

மலையில் பாதி தூரத்தில் பராமரிப்பு இல்லாத ஒரு கோவில் இருந்தது. அங்கே இந்த ஐவருடன் ஆறாவது நபராக நாமும் போய் நின்றோம். அந்த ஐவரில் இருவர் இவனை விட்டுவிடக் கூடாது. இவன் தொல்லை தாங்க முடியவில்லை. இன்று வெள்ளிக் கிழமை. இவனை அம்பாளுக்கு பலி கொடுத்துவிட வேண்டியதுதான் என ஆர்ப்பரிக்கும் போது கோவிலினுள் இருந்து பூசாரி வந்து சேர்ந்தான்.

அவன் சொன்னதாவது:

நான் அம்பாளுக்கு அலங்காரம் எல்லாம் செய்து முடித்துவிட்டேன், பலி கொண்டு வந்து விட்டீர்களா? என கேட்ட வண்ணம் வெளியே வந்து நின்று இந்த பைத்தியத்தின் முகத்தைப் பிடித்து சற்று உற்று நோக்கினான்.

மற்றும் ஐவரும், ஊம்.. சீக்கிரம் சொல்லுங்கள் பூசாரி ஐயா! காலம் தாழ்த்த வேண்டாம். ஒரே போடு நம் கவலையும், எண்ணமும், அம்பாளின் உக்ரவேட்கையும் இன்று தணிந்துவிடும் என அட்டகாசமாகப் பேசி ஆர்ப்பரித்தார்கள். பூசாரி, பொறுங்கள்! பொறுங்கள்! அவசரம் வேண்டாம். இவர் அந்த ஆளாக தெரியவில்லை. கோவிலுக்கு மேலே சென்று அந்த மண்டப உச்சியில் இருந்து

இவர் முகத்தை அவனா இல்லை வேறு ஆளா என்று பார்க்க முடியும் என சொல்லி, இந்த பைத்தியத்தை மலை முகட்டில் உள்ள மண்டபத்திற்கு கொண்டு சென்று அந்த வெளிச்சத்தில் பார்த்து ஆகா! ஆகா!! என அலறினார்!! ஐயோ! இது அவன் இல்லை! யாரோ ஒரு புண்ணியவானாகத் தோற்றுகிறது.

இவரை பலியிட்டால் நம் அம்மா நம் எல்லோரையும் பலி கொண்டுவிடுவாள். வேண்டாம் வேண்டாம் என சொல்லி ஓட ஆரம்பித்தார். அந்த ஐவரில் ஒருவன் (ஐவருமே கிங்கரர்கள் போல் மஹா முரடர்கள்) அந்த பூசாரியின் கையைப் பற்றினான். அவரால் அவன் பிடியை விட்டு திமிர முடியவில்லை. பூசாரி சொன்னான்:

ஐயா! அந்த மந்திரவாதியும் இவரைப் போலவே தலையில் ஒரு கொண்டை, நெற்றியில் சந்தன குங்குமம் வெகு அகலமாக ஒட்டி இருப்பான். உடல் அழுக்கு அடைந்து விகாரமாக இருப்பான். ஒரு அழுக்கு கந்தல் துண்டு கட்டி இருப்பான். கையில் ஒரு மந்திரக்கோல் வைத்திருப்பான். அவன் மீசையும், பரட்டைத் தலையும் வெகு அவலட்சணம். வாயில் வெற்றிலை, புகையிலைக் கறையும், துர்வாடையும் வீசுமே. அவன் என நினைத்து ஒரு புனிதமான சாதுவை கொண்டு வந்துவிட்டீர்களே எனச்சொன்னார்.

அவர்கள் ஐவரும் சற்று கூர்ந்து நோக்கிவிட்டு, அவன் என்றால் இதற்குள் எத்தனை கேலி, அவதூறு வார்த்தைகள் பேசி திட்டுவானே. ஆனால் இவர் அங்கிருந்து இதுவரை ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஏன், எங்கு இழுத்துச் செல்கிறீர்கள் என ஒரு வார்த்தையும் கேட்கவில்லையே? இப்படியும் ஒரு மனிதன் இருப்பானா? இவர் கட்டியிருக்கும் துண்டு பால் போல் தூய வெண்மையாக இருக்கிறது. உடம்பில் ஒரு நறுமண வாசனை வீசுகிறது. இங்கு மந்திரக்கோல் இல்லை. கண்ணனின் கை புல்லாங்குழல் இருக்கிறதே. தவறு செய்துவிட்டோமே என திகைத்தனர்.

ஓய்.. பூசாரி! இவரை இப்படியே அனுப்பிவிடுவோம் என வைத்துக் கொள்ளுங்கள். இவர் நேராக போலீஸ் ஸ்டேஷன் சென்று ஒரு புகார் கொடுத்து அவர்கள் ஜீப்பிலோ, வேனிலோ வந்து நம்மையெல்லாம் கைது பண்ணிக் கொண்டு போனால், நம் பெண்டாட்டி பிள்ளைகள் கதி என்ன? இவர் யாராக இருந்தால் நமக்கென்ன? இவரை இப்போது பலி இடுவோம். அந்த மந்திரவாதி எப்போது கிடைப்பானோ அவனை அப்போது பலியிடுவோம் என ஏதேதோ பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் கேட்டான்;

**ஒருவன்:** ஐயா! உங்கள் விலாவரி என்ன?

**அது:** (பலமாக சிரித்தது)

**ஒருவன்:** நான் கேட்கிறேன், பதில் சொல்லாமல் சிரித்தால் விட்டுவிடுவோம் என நினைக்கிறாயா?

**அது:** (அப்போதுதான் வாய் திறந்தது) எம் விலாவரி வேண்டும் உனக்கு அவ்வளவுதானே! (எம் புல்லாங்குழலை நீட்டி) அதோ தெரியுது பார் அது என்ன?

**ஒருவன்:** அது திருப்பரங்குன்ற மலை.



நாகமலை

**அது :** அதன் கீழே என்ன தெரிகிறது?

**ஒருவன் :** அது திருமுருகனின் கோபுரம்.

**அது :** அதோ இடப்பக்கமாக தெரிகிறதே அது என்ன?

**ஒருவன் :** அது மீனாட்சி அம்மன் கோபுரம்.

**அது :** அவன் எம் **மருமான்**! அவள் எம் **தங்கை!** இதோ நம் அனைவரின் தலைக்கு மேலே என்ன தெரிகிறது பார்!!!

**ஒருவன் :** ஐயோ...! சக்கரத்தாழ்வார்...... ஸ்வாமி! எங்களை மன்னியுங்கள். (பின் ஏதேதோ பேசி அதிகம் சிரமம் அனுபவித்தார்கள்)

அந்த பைத்தியம் அவர்களை கைவாகு கொடுத்து தூக்கிவிட்டு, பதற வேண்டாம். நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே. ஏனோ உங்கள் வினையின்படி ஒரு மந்திரவாதியிடம் எப்படியோ ஏமாந்து சிரமப்பட்டிருக்கிறீர்கள். அந்த கவலையை இனிவிடுங்கள். அந்த மந்திரவாதியைப் பற்றி இனி எண்ணவும் வேண்டாம். அவனை அப்படியே தெய்வாதீனத்தால் சந்திக்க நேர்ந்தாலும் **பகை உணர்ச்சி வேண்டாம்**. அவன் இனி உங்களிடம் வராவண்ணம் **அவன் பார்த்துக் கொள்வான்.**

நம் நல்வினை தீவினைக்கு நாமே காரணம். நாம் **அறிந்தோ, அறியாமலோ** சிலரை மனம் நோகும்படி **பேசியிருப்போம்** அல்லது அந்த நேரம் மன வெறியினாலோ ஏதாவது ஒரு **கெட்ட காரியம்** செய்திருப்போம். அதை இப்போது உங்கள் அறியாமையில் மறந்திருக்கலாம்.

**"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்"** என்றபடி அந்த வினை உங்கள் முன் ஒரு மந்திரவாதியாகத் தோன்றி, உங்கள் குடும்பங்களை அலைக்கழித்திருக்கலாம். அது "மந்திரவாதியின் வினையல்ல". உங்கள் வினை அந்த சொருபத்தில் தோன்றி துன்பம் கொடுத்திருக்கலாம்.

**"காலன் பழி ஏற்கமாட்டான்"** என்றபடி காலதேவன் நேராக வந்து உங்களை **பலி ஆக்கவும்** மாட்டான். அந்த **பழியை ஏற்கவும் மாட்டான்.**

மாரடைப்பு, ரத்தக்குழாய் வெடிப்பு, பள்ளத்தில் விழுந்தார், பஸ் மோதியது, ரயில் கவிழ்ந்தது என இன்னும் அநேக நிலையில் திசை திருப்பி அந்த மரணத்தை மாற்றிக்காட்டி, தாம் மறை பொருளாக **பலியாகவும் இல்லாமல், பழி ஏற்பும் இல்லாமல், பலி ஆக்காமல், ஆனந்தமாக விதி முடிந்தது** என ஏற்பான் எம் காலதேவன்!!! என அவர்களுக்கு ஆறுதல் கூறிச்சென்றது அந்த பைத்தியம்.

பின் ஒரு வாரம் கழிந்தது. அந்த பைத்தியம் அதே நாகமலை அடிவாரத்தில் வாக்கிங் சென்றது. அன்று தெய்வாதீனமாக அந்த மந்திரவாதியை சந்தித்தது. அவன் அதை முறைத்து சுட்டு எரித்துவிடுபவன் போலப் பார்த்தான். பிறகு அதை நெருங்கி நீ என்னைவிடப் பெரிய மந்திரவாதியா? ஏதேதோ கதை பேசுகிறார்களே. நான் மலையாள தந்திரீயாக்கும். என்னிடம் பில்லிசூனியம், செய்வினை என ஆயிரக்கணக்கில் இருக்கிறது! இந்த இடத்திலேயே உன்னை சாம்பலாக்க முடியும்!

நீ என்னவோ என்னைப் போன்று தாடி, ஜடை தரித்திருக்கிறாய்! நீயும் ஏதோ ஒரு தெய்வ வழிபாடு செய்பவன் போலும்? எந்த தெய்வமும் **என் மலையாள பகவதியிடம்** கைகட்டி வேலை செய்யுமாக்கும். உங்கள் நாட்டில் இருக்கும் அனைத்து தெய்வங்களும் என் பகவதியிடம் அடிமை வேலை பார்ப்பவர்கள் என வைத்துக் கொள்.

இப்போ உன் கையும், காலும் அசையவிடாமல் செய்யட்டுமா? பாவம் நீ **ஓர் குடும்பஸ்தன்**. ஆனால் என் வேலையை காட்டாமல் உன்னை விடமாட்டேன் என இன்னும் என்னென்னமோ புலம்பினான்.

அந்த பைத்தியம் அவன் முகத்தை ஆனந்தமாக பார்த்துக் கொண்டு மௌனச் சிரிப்பு சிரித்துக் கொண்டே, இப்போது ஏதாவது உன் குறளி வேலையைக் காட்டேன் யாம் அதை ரசிக்கிறோம் எனக்கேட்டது.

**அவன்,** ஜெய்... பகவதி! என உரக்கக் கூப்பிட்டு ஏதேதோ முணுமுணுத்தான். அந்த இடத்தில் இரண்டு மூன்று பனைமரம் இருந்தது. ஒரு கரண்ட் போஸ்டும் இருந்தது. அவன் போட்ட சப்தத்தில் அந்த மலையே அதிர்ந்தது. ஒரு பெரிய வெடிவெடித்தது போல் இருந்தது.

அவன் வாயை மூடவில்லை. அருகில் இருந்த போஸ்ட் கம்பத்தின் மின் வயரில் ஒரு பிணம் ரத்தம் சொட்டச் சொட்ட அடித்து தொங்கப் போட்டது போன்று தலைகீழாக தொங்கியது. **அது இரண்டொரு வினாடிதான்** தோற்றியது.

இது தம் இதயத்தில் கை வைத்த வண்ணம் ஹே.. குருதேவா! என உருகி அழைத்து அந்த பிணத்தை நோக்கியது. அது ஒரு காய்ந்த பனை ஓலையாக மாறியது போலும். அந்த வயரில் நிற்க முடியாமல் எங்கள் இருவருக்கும் மத்தியில் ‘தடால்’ என விழுந்தது.

ஏனப்பா, இந்த காய்ந்த ஓலைக்கா இந்த கத்து கத்தினாய்? எனப் பரிதாபமாக கேட்டது அந்த பைத்தியம். அவன் அதைக் கண்டு ஆச்சர்யம் கொண்டு வெலவெலத்துப் போனான். பிறகு ஏதோ அதிஉக்ரமாக கத்தப் போனான்! இது **சற்றுப்பொறு** என்றது. அவனுக்கு பேச நா எழவில்லை. மந்திரக்கோலை ஆட்ட முயன்றான். கோலும் ஆடவில்லை. கைகளையும் அசைக்க முடியவில்லை. எம்மை சுட்டெரித்து விடுபவன் போல் ஐந்து நிமிஷம் பார்த்தான். பின் **செயலற்றவனானான்!** அடியற்ற மரம் போல் ‘தடாலென’ திருவடியில் விழுந்தான்.

அது அவனை தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு அவன் கண்ணீரை துடைத்து, ஏன் தம்பி! இவ்வளவு சிரமம். நாம் கற்கும் செப்படி வித்தைகள் உரிய காலத்தில் **உதவாமல் போய்விடும்**. நமக்கு உதவுபவர் இறைவன் ஒருவனே! அவனை நம்பாமல் அட்சர சொரூபமான வார்த்தையை நம்புகிறாயே? நீ கற்கும் அந்த மந்திரங்களை ஒரு அட்சரம் பிசகாக சற்று மாற்றி பிரயோகித்தாலும் அது பலன் தராது! பலன் தராமல் போனாலும் பரவாயில்லை. அதுவே **அனாச்சாரமாக** மாறி உனக்கு துன்பத்தைக் கொடுக்கும். இரண்டாவது நீ எந்த தேவதையை (துர்தேவதையை) உபாசிக்கிறாயோ அதற்கு பொருள் ரூபமான ஆகாரத்தையோ, அட்சர சொரூபமான ஆகாரத்தையோ **குறிப்பிட்ட காலத்தில்** கொடுக்க வேண்டும். சற்று காலதாமதம் ஆனாலும் அதற்கு **ஒரு வெறி** உண்டாகிவிடும். **அது காலம் அறிந்து** உன்னை **பலி** கொள்ளும் அல்லது பலிவாங்கிவிடும்.

உன் திருவடியில் சிரம் தாழ்த்தி சொல்கிறோம். இனி இந்த ஈனமான **கருமத்தொழிலை** விட்டுவிடு. ஏன் இதை கருமத்தொழில் என சொல்கிறோம் என்றால் நீ ஏவல் (செய்வினை) வைப்பதில் அந்த ஜீவன் நீ வைக்கும் **கர்மாவை பொருந்தியவனாக** இருக்க வேண்டும். உன்னிடம் அந்த ஏவலை செய்யத் தூண்டுபவனும் அவனுடைய கர்மாவுக்கு பொறுப்பாளியாக இருக்க வேண்டும். அப்போதுதான் உன் ஏவல் அங்கு பலிதமாகும். இல்லாவிடில் இந்த இரண்டிற்கும் நீ பொறுப்பாளியாகி விடுவாய்.

“நல்வினை, தீவினைகளை **கர்மா** என சொல்வதுண்டு”. **பஞ்சமாபாதகமான கருமவினைகளை கருமம்** அதாவது **ஈனத்தொழில்** என சொல்வதுண்டு! எது எப்படியும் போகட்டும்!! இதை இத்துடன் விட்டுவிடு. இனி எவர் சொன்னாலும் நம்பாதே, அதை செய்யாதே!


ஐயா! என கதறி உன்னிடம் **பழைய வாசனையின்படி** கேட்டால் கொஞ்சம் பஸ்பத்தை கொடு. இறைவனை நம்பு **அவன் பார்த்துக்கொள்வான்** என நீ விலகிவிடு. இது அவன் உலகம்! அவன் காரியம்!! **அவன் பார்த்துக் கொள்வான்!!!** உனக்கேன் இந்த வீண் வம்பு! எனச்சொல்ல அவனும் திருந்திய உள்ளத்தினனாய், ஹே.. கருணாசாகரா! கருணைக்கடலே! நான் அறிந்தோ, அறியாமலோ இதுகால பரியந்தம் ஏதேது செய்திருந்தாலும், தற்சமயம் ஏதோ என் அறிவீனத்தால் தாங்களை உணராமல் திட்டிய அபசாரத்தையும் குற்றம் குறை காணாமல் மன்னித்தருள வேண்டும் ஸ்வாமி! எனக்கூறி தண்டன் சமர்ப்பித்து எழுந்து தம் கைக்கோலையும் ஒடித்து புதருக்குள் வீசி எறிந்துவிட்டு சென்றுவிட்டான்!

ஆனால்???

இந்த காரியம் சித்துக்களும் அல்ல, மந்திரமும் அல்ல!!! பின் இது எப்படி நடைபெற்றது என்றால் “அவனை (ஸ்ரீகுரு, ஸ்ரீதிரு) முழுமையாக நம்பி வைராக்கியத்துடன் இருந்தால்” எந்த எண்ணவிருத்தியும் இல்லாமல் அவன் **அவனுக்குரிய பதுமைகளை** ஒழுங்காக நடத்திச் செல்வான்! அதாவது **“உலகம் அவித்தை. அதை நடத்துவது ஈசனின் மாயை”** அதை ஏன் எப்படி என கேள்வி கேட்க முடியாது! கேட்கக் கூடாது!! இங்கு தொழிலைப் பற்றிய விசாரணை தேவை இல்லை.

“அது நன்மையோ, தீமையோ கர்மாவின்படி நடத்தும். நாம் ஆம், சரி என **பொறுமையாக ஏற்றுக் கொள்ளலே விவேகம்!**”

**எல்லாம் நீ!**



# பகிர்ந்துண்டால் பசியாறும்!

## 1. சமாராதனை

அன்புக்குழந்தைகளே!

சேவை எனச்சொல்லும்போது இந்த தூலத்திற்காக தம்மை அர்ப்பணித்துக்கொண்டவர்கள் இருவர். ஒருவர் **திருஆலவாயில்** (மதுரையில்) உள்ள நாகமலைபுதுக்கோட்டையில், ஸ்ரீஅபிராமி இல்லத்தில் வாழ்ந்துவரும் தம்பதியினராகிய சண்முகவேல் என்ற **அஃரூரர்**, அவர் தர்மபத்தினி சுப்பம்மாள் என்ற **சபரிமாதாஜீ**.

மற்றொருவர் **மேலான மேட்டூரில்** ரஷ்யன் தெர்மல் குவாட்டர்ஸில் புனித வாழ்வு நடத்திவரும் திருமலைகுமரனும்,(அவர் குடும்பப்பெயர் திருமலை, இறைவன் சூட்டிய பெயர் குமரன் ஆக இரண்டும் இணைந்து **திருமலைகுமரன்** என ஆனது) அவர் தர்ம பத்தினியும், எம் திருவடிக்குழந்தையுமான சாந்தசக்குவும் ஆகும். (அவர் குடும்பப்பெயர் சாந்தா, இறைவன் சூட்டிய பெயர் சக்கு(பாய்) ஆக இரண்டும் இணைந்து **சாந்தசக்கு** என ஆனது)

இதில் சேவையில் முதலிடம் பெறுவது சாந்தசக்கு!
இரண்டாவது இடம் பெறுவது சபரிமாதாஜீ!

ஆனால் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல. ஆனால் இவ்விருவரும் எம் இரு கண்கள் போன்றவர்கள். இவ்விருவருமே தங்கள் பதிதர்மத்தை சிறப்பாக செய்து முடித்து அவர்கள் அனுமதியுடனே இந்த வைத்தியத்தின் **சர்வாங்க சேவையை** சிறப்பாக செய்து முடித்தார்கள். ஆனால் சாந்தசக்கு தம்மை -------------------------------------------------------கரைத்துக்கொண்டாள்.

1. அஃரூரர் எம் அறிவுக்கண்.
2. திருமலைக்குமரன் எம் இதயவாஸி.

எம் சாந்தசக்குவை ஏன் முதலிடம் என்று சொன்னோம் என்றால் பக்தி பூர்வமாக அனேக இடங்களில் யாம் சில காரியங்களை செய்தாலும் மேலான மேட்டூரில், ரஷ்யன் தெர்மல் குவாட்டர்ஸில், முதல் மாடியில் அமைந்த எம் சாந்தசக்குவின் அபிராமி இல்லத்தில் தான் அது முழுமையாக நிறைவுற்றது.

எப்படி என்றால் எம் திருடனின் ஆணையின்படி 1990-ல் ஒரு **ஸப்தாஹம்** நடத்த ஆணையிட்டான். அதாவது ஒரு மண்டலம் (41 முதல் 48 நாட்கள் வரை) நீ உபந்யாசமும், பூஜையும் ஒரே இடத்தில் நடத்தவேணுமென்பது அவன் கட்டளை. அதற்குரிய இடத்தை தேர்ந்தெடுக்கும் போது மேலான மேட்டூர்தான் அமைவுற்றது. மேலான மேட்டூரில் எம் சாந்தசக்குவின் அபிராமி இல்லத்தில், தினமும் மாலை ஆறு மணி முதல் இரவு எட்டு மணிவரை கதாகாலட்சேஷபமும், பஜனையும் அதிசிறப்பாக நடைபெற்றது.

ஒரு மண்டலம் பூர்த்தியானதும் எம் சாந்தசக்குவின் அபிராமி இல்லத்தில் சமாராதனை நடைபெறவேணுமென்று எமதய்யனின் ஆணை. அந்த நாற்பத்தியொன்று தினங்களும் மங்கள ஆரத்தி முடிந்ததும் குறைந்தது இருபது, முப்பது பேருக்கு அவன் அருளால் போஜனமும் செய்விக்கப்பட்டது. நாற்பத்தியோராவது நாள் சாந்தசக்கு அந்த குவாட்டர்ஸில் உஞ்சவிருத்தி எடுக்கவேண்டும் என விதிக்கப்பட்டது.

அதன்படி அக்குழந்தையும் காலைக்கடனை முடித்து, நெற்றியில் ஆண்டாள் போன்றே திருகோபியும் இட்டு, ஓர் மடிசெம்பில் திருநாமமும் இட்டு, ஒவ்வொரு இல்லத்திற்கும் சென்று ஸ்ரீஹரிநாமத்தை விடாமல் ஜபித்தவண்ணம் உஞ்சவிருத்தி எடுத்து வந்தது. ஒன்றரை மூட்டை அரிசி சேர்ந்துவிட்டது. அவற்றை பாகம் பண்ணி அடியார்களுக்கு அமுதூட்ட ஓர் ஏழு பெண்களை (சப்தகன்னிகளை) தேர்ந்தெடுத்தோம். அனைவரும் விரதம் இருந்து பாகம் பண்ணி சமாராதனை நடைபெறும் போது சாப்பிடும் ஒவ்வொரு ஸ்ரீஅடியார்களிடமும் அவர்களின் **உச்சிஷ்ட பிரசாதத்தை** ஒரு பிடிவாங்கி, அவைகளை மொத்தமாக சேர்த்து **மஹாபிரசாதமாக்கி** அந்த ஏழுபேரும், எம் செல்லக்குழந்தையும், இந்த பைத்தியமும் சேர்த்து ஆக ஒன்பது பேரும் அந்த மஹாபிரசாதத்தை உண்டு, அவன் அருளை பூரணமாகப் பெற்று அதன்மூலம் அதை முழுமையாக நம்பியவர்களுக்கும் அருள்பிரசாதமாக வழங்கினோம்.

இந்த சாந்தசக்குவுக்கு ஞானபூமியாம் திருஅண்ணாமலையில் மண்ணாலான வீடு இருந்தாலும் அது எம் சாந்தசக்குவின் வீடு அல்ல. இது உறுதி. அவள் சொந்த ஊரும், வாழும் பூமியும், வீடும் (தற்காலிகமாக) மேலான மேட்டூரே தவிர அது திருஅண்ணாமலை இல்லவே இல்லை. இதுவே உண்மை!

திருவடி சரணம்! குருவடி சரணம்!!

## 2. ஓர் கவளம் உணவு

மேட்டூரில் காவிரிக்கரை ஓரமாக சில பாறைகளை தாண்டி புதர் உள்ள பகுதிகளில் சற்று அமர்வதுண்டு. ஒரு மாடு மேய்க்கும் சிறுமி வயது பத்து இருக்கலாம். அவள் அடிக்கொரு தரம் இதை பார்ப்பாள். அவள் மதிய உணவுக்காக பழைய சாதம் ஜலத்துடனும், சிலசமயம் இட்லி, ஒரு சின்ன தூக்கில் கடும்காப்பி (பால் இல்லாதது) இப்படி ஏதாவது ஒன்றைக் கொண்டு வருவதுண்டு.

இதை பார்த்துவிட்டால் எங்கிருந்தாலும் ஏ.. சாமி! ஏ.. சாமி! என குரல் கொடுத்துக் கொண்டே வருவாள். அவள் தூக்குப் பாத்திரத்தில் அன்று கொண்டு வந்ததை அவள் பாதி இது பாதி சாப்பிடுவோம். இப்படி பாதி கொடுத்துவிடுகிறாயே உன் பசி அடங்க வேண்டாமா? நீ காலையில்

வந்தவள் சாயந்தரம் ஐந்து மணி சுமாருக்குதான் போகிறாய். அது வரையிலும் பசி தாங்க வேண்டுமே!! இந்த பைத்தியமாவது பத்து மணிக்குள்ளாக வீட்டிற்கு சென்றுவிடும். அங்கு ஏதேனும் ஆகாரம் எடுத்துக் கொள்ளும் என கேட்டால், அவள் அழகாக அதிதிருத்தமாக பதில் சொல்வாள் **"சாமி.. பகிர்ந்துண்டால் பசியாறும்"** என பெரியவர்கள் சொல்வார்கள், ஆனால் எனக்கு தெரிவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். உன் வயிற்றுக்குள் **ஓர் கவளம் உணவு** போனால் இந்த உலக ஜீவர்கள் அனைவரின் பசியும் அடங்கும். இது சரியோ தவறோ எனக்குத் தெரியாது.

ஏதாவது தெரியாமல் சொன்னால் மன்னித்துவிடு சாமி என கெஞ்சிய முறையில் அந்த பிஞ்சு உள்ளம் நெகிழும்போது எம் கண்களில் கண்ணீர் ததும்பும். அதை அவளிடம் காட்டிக் கொள்வதில்லை.

அவள் கொடுத்ததை சாப்பிட்டவுடன் ஏ.. சாமி! இங்கே வா எனச்சொல்லி காவிரி ஜலத்திற்கு அருகே உள்ள பாறையில் நிற்க வைத்து இருகரங்களாலும் ஜலத்தை அள்ளி அந்த பாதத்தில் விட்டு நன்றாக கழுவி அதில் ஒழுகும் ஜலத்தை மும்முறை சாப்பிட்டு, தம் தலையிலும் தடவிக்கொண்டு, அங்கு அருகாமையில் உள்ள திருத்துளாய் செடியில் சிறிது துளாயும் பறித்து (அதை பறிக்கும் போது என் சாமிக்கு சில இலைகளை எடுத்துக் கொள்கிறேன். என்னை மன்னித்துவிடு என வேண்டிக் கொண்டு) அதன் திருவடியில் போட்டு நமஸ்கரித்து, **சாமியோ..! என் பூஜை முடிந்துவிட்டது!** என சொல்லும் அழகு அன்று எம் ஆண்டாளிடம் கண்ட **கனிவும், பணிவும், இனிமையும் போல** எம்மை மெய்விதிர்க்கச் செய்யும்!

உங்களுக்கு ஒன்று கூறுகிறோம்:

உங்கள் வீட்டில் புஷ்பமோ, துளாயோ, வாழை இலையோ, காயோ, பழமோ, வேறு எதுவாயினும் ஓர் செடி, கொடி, மரம் இவைகளிலிருந்து எடுக்கும்போது அந்த தாவரங்களிடம் அனுமதி பெற்று எடுங்கள். நாம் ஜலம் விட்டு, நாம் உரமிட்டு, நம் நிலத்தில் நாம் நட்டதுதானே என **கர்விக்க** வேண்டாம்.

அது **ஸ்ரீபூமிமாதாவுக்கு** சொந்தமானது. அந்த மரம், செடி, கொடிகளுக்கும் **உயிர் உண்டு!** நீங்கள் அனுமதி பெற்று எடுத்தால் அவைகள் உங்களை வாழ்த்தும். உங்கள் குடும்பம் நலம் பெறும். உங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுங்கள்.

ஏ.. செடியே! அல்லது ஏ.. மரமே! எங்கள் பூஜைக்கு புஷ்பங்கள் கொடு, இலைகள் கொடு, காய்கள் கொடு, பழங்கள் கொடு என **பணிவுடன்** அவைகளிடம் கேட்டு வாங்குங்கள்!

அந்த குழந்தை சில துளாய்களை தம் வாயில் போட்டுக் கொள்ளும், இதன் வாயிலும் சில துளாய்களைத் திணிக்கும்! யாம் ஆனந்தமாக ஏற்போம்! கள்ளம், கபடு, சூது, வாது, பொய், பொறாமை இல்லாத உள்ளங்கள் இறைவன் வசிக்கும் கோயிலாகும். உங்கள் அனைவரின் உள்ளங்களையும் மாசுமரு அற்றதாக வைத்திருக்கப் பழகுங்கள்.

**யாம் அங்கு குடியிருப்போம்!!!**

அந்த குழந்தையின் கள்ளம் கபடமற்ற சேவை ஒரு சில வருஷங்கள் நீடித்தன. நம் அன்பர்கள் இதை காணும் போதெல்லாம் ஸ்வாமி! எங்கள் வீட்டிற்கு வருகை தாருங்கள் என்றும், ஸ்வாமி! எப்போது

எங்கள் வீட்டிற்கு வருவீர்கள் எனவும் கேட்பதுண்டு. அப்போதெல்லாம் "அவன் எப்போது அனுப்புகிறானோ அப்போ வரும்" என பதில் சொல்வது வழக்கம். அதேபோல் எதிர்பாராத நிலையில் அவன் அனுப்பி வைப்பான். அவர்கள் அழைப்பில்லாமலேயே அவர்கள் வீட்டில் நுழையும். அவர்களுக்கு கையும் ஓடாது! காலும் ஓடாது!! இப்படி அனேக இடங்களில் நடப்பதுண்டு. இது சகஜம்.

ஒரு நாள் அந்த குழந்தையிடமே இது நேராக கேட்டது:

ஆமாம் குழந்தாய்! எம் அன்பர்கள் எல்லா ஊரிலும் இருக்கிறார்கள். அவர்களில் அனேகர், ஸ்வாமி! என் வீட்டிற்கு எப்போ வருவீர்கள்! எப்போ வருவீர்கள்!! என கேட்பதுண்டு. ஆனால் நீ ஏன் உன் வீட்டிற்கு அழைக்கவில்லை? அல்லது யாம் வரத்தகுதி இல்லையா?? எனக்கேட்க, அந்த குழந்தை கடகடவென வெகு அழகாக சிரித்து, "ஏன் சாமி! எனக்கென ஒரு வீடுண்டா!!"

**"உன் திருவடியே என் வீடு!**
அந்த வீட்டிற்குள் உன்னை எப்படி அழைத்துச் செல்ல முடியும்??
**சாக்கடைக்கு போக்கிடம் ஏது?"**

இதன் பொருள் அவள் சொன்னது:

நான் சாக்கடை! நான் சேருமிடம் சமுத்திரமாகிய உன்னிடம்!! நீ ஒரு பைத்தியகார சாமி! (அது எம்மை நன்றாக புரிந்து கொண்டு சொன்னது போலும்)

யாமே உன்னிடம் தானே!
எமக்கு உன் ப(ா)தம்தான் வீடு!
எமக்கென ஒரு வீடு ஏது???

யாம் கல்லாட்டமாக நின்றோம்!!!
**"அன்றும் இன்றும் என்றும் செங்கல் மீது அசையாது நின்றோம்".**
**"இன்று உங்கள் பொருட்டு சற்று இறங்கி வந்தோம்".**
(இது அவன் வாசகம்)

**எல்லாம் நீ!**





# பணிந்த உள்ளத்தில் இறையருள் தங்கும்!

ஒருசமயம் மேட்டூரில் சாலை ஓரத்தில் வாக்கிங் சென்று கொண்டிருந்தோம். அது காலை நேரம். இரவு மழை பெய்து ஒரே குளிர்ச்சியாக இருந்தது. ரோட்டின் ஓரங்களில் நத்தைக்கூடும், மர அட்டைகளும், சிறுபூச்சிகளும் சென்று கொண்டிருந்தன.

இது அதிக கவனமாகவே சென்று கொண்டிருந்தது. எப்படியோ ஒரு நத்தைக் கூடு மிதிபடும் நேரத்தில் **"ஹரே... ராம்"** என எகிறிக் குதித்து தள்ளி நின்று அந்த நத்தை மிதிபட்டு விட்டதா என கூர்ந்து நோக்கியது. அது மிதிபடவில்லை.

கால் பாதமானது அதில் உரசிச் சென்று அப்பால் போய்விட்டது போலும். நத்தைக் கூட்டிற்குள் இருந்த நத்தையானது தன் இரண்டு கொம்பு போன்ற அலகை தூக்கிய வண்ணம் நமஸ்கரித்தது. இந்த பைத்தியமும் அதை நோக்கி, நல்லவேளை தப்பித்துக் கொண்டாய். மிதிபட்டிருந்தால் என்னவாகியிருப்பாய்? எனக்கேட்டது.

குழந்தைகளே!

அதற்கு அந்த நத்தை சொன்ன ஒரு விளக்கம்:

பாதத்தில் கீழே தரையில் அழுந்தும் பகுதியில் மூன்று பிரிவு உண்டு. **படர்கால்**, உள்ளங்கால் அதாவது **திருவடித்தாமரை** அல்லது **பத்மபாதம்** அல்லது **அபயஸ்தலம்** மற்றும் குதிங்கால் என மூப்பிரிவாகப் பிரிப்பதுண்டு.

படர்கால் - பக்தி
அபயஸ்தலம் - ஞானம்
குதிங்கால் - கர்மா என சத்துக்கள் பிரிப்பார்கள்!

முன்னும் பின்னும் பக்தியும், கர்மாவுமாகும். மத்தியத்தில் பூப்போன்ற மிருதுவான இடம் ஸ்ரீமஹான்கள் வாஸம் பண்ணப்பட்ட இடமாகும்! ஆகவே ஸ்ரீகுருதேவருக்கோ, மஹான்களுக்கோ பாதசேவை செய்யும் பாக்கியம் கிட்டினால் அந்த பத்மபாதத்தை அந்த அபயஸ்தலத்தை நம் கைகளினால் மெதுவாக வருடிவிடும் போது அங்கு வாஸம் பண்ணும் மஹான்களின் சிரசில் உங்கள் கரம்படும்.

அதுசமயம் அவர்கள் உங்களை நோக்கும் பாக்கியம் நீங்கள் பெற முடியும். நீங்கள் அந்த மஹான்களை நினைத்துப் பார்ப்பதைவிட அவர்கள் **இந்த குழந்தை ஸத்தாக இருக்கிறது**, உணர்ந்து சேவை செய்கிறது, **நலம் பெறுக!!** என வாழ்த்தினால் போதும். உங்கள் குறை நீங்கும்.

**நீங்கள் நினைத்தால் முக்தி இல்லை; அவர்கள் உங்களை நினைக்க வேண்டும்! அவர்கள் உங்களை நினைக்கும் அளவுக்கு நீங்கள் நடக்க வேண்டும்!**

இது அந்த நத்தை சொன்ன வரலாறு ஆகும்!!!

அது மேலும் சொன்னதாவது:

உன் **அபயஸ்தல** தரிசனமும், ஸ்பரிசமும் எனக்கு கிடைத்துவிட்டது. இதில் **நிதரிசனமான** ஒரு காட்சியை பாரும். இங்கிருந்து இந்த பெரிய ரோட்டைத் தாண்டி அப்பால் செல்கிறேன், என்னை அந்த **பத்மபாதம்** எப்படி காத்தருள்கின்றது என காண்க! என்று சொல்லி அந்த விஸ்தாரமான ரோட்டை **அனாயாசமாக ஊர்ந்து** சென்று கடந்தது.

அனேக பஸ், லாரி, வேன், ஜீப், டூவீலர்கள் பல சர்... சர்... என செல்கிறது! (அது உண்மையோ! பொய்யோ!! அந்த நத்தை இறைநாம சங்கீர்த்தனத்துடன் ஆடிப்பாடி செல்வதாக உணர்ந்தோம்) மறுபக்கம் சென்றதும் முன் இரு அலகையும் தூக்கி நமஸ்கரித்துச் சென்றது.

**"பணிந்த உள்ளத்தில் இறையருள் பிரவாகம் தங்கும்".**

**பணத்தாலோ, பதவியாலோ, குலத்தாலேயோ, பட்டப்படிப்பினாலேயோ எந்த பேத உணர்வினாலும் நீ இறை அருளைப் பெறமுடியாது என பிரமாணமாகச் சொல்கிறோம்! யந்திர, மந்திர, தந்திர, யோக சித்திகள் போன்ற எந்த பேத உணர்வினாலும் "அது நீ" ஆக முடியாது!**


**எல்லாம் நீ!**





# எம்மதமும் சம்மதமே!

மேலான மேட்டூரில் ஓர்நாள் டேம் பூங்காவில் ஒரு ஓரமாக மரத்தின் கீழ் உள்ள திண்ணையில் அமர்ந்து உபநிஷத் சரி பார்த்துக் கொண்டிருந்தோம். அதுசமயம் ஓர் கிறிஸ்தவ தம்பதியர் ஐந்து வயது பாலகனுடன் வந்தனர். பார்க்கை சுற்றிப் பார்த்து வந்த அவர்கள் இந்த பைத்தியத்தை பார்த்த உடன் சற்று நின்றனர். ஒரு ஐந்து நிமிஷம் அவர்கள் இருவரும் ஏதேதோ பேசி ஓர் முடிவெடுத்தனர். பிறகு அருகில் வந்தனர். ஐயா! உங்களிடம் சில வார்த்தைகள் பேச வேண்டும் என்றனர்.



அதற்கு இது சொன்னதாவது:

ஆரூடம், குறி, ஜாதகம், அருள்வாக்கு இப்படி உங்கள் குடும்பம், தொழில், உடல் சம்பந்த வார்த்தைகளாக இருந்தால் வீண்காலம் கடத்த வேண்டாம். தெய்வீக பக்தி, ஞானம், தியானம் இது பற்றி கேட்பதானால் இரண்டொரு வார்த்தைகள் கேளுங்கள் என்றது.

அவர்கள் சொன்னதாவது:

**முன்கை நீண்டால் முழங்கை நீளும்** என்கிறார்களே இது **தானத்திற்கு** சொன்னதா? **தருமத்திற்கு** சொன்னதா? தானம் வேறா? தர்மம் வேறா? இதற்கு பலபேரிடம் விளக்கம் கேட்டிருக்கிறோம். அவரவர்க்கு தெரிந்ததை ஏதேதோ சொன்னார்கள். சிலர் இந்து தர்மசாஸ்திரத்திலிருந்து விளக்கம் சொன்னார்கள். ஆனால் எங்கள் பாதிரியார் **தர்மமும் தானமும் ஒன்றுதான்**, உனக்கு மனதிற்கு எப்படி தோன்றுகிறதோ அப்படி செய் என பதில் கூறினார். அது எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. நீங்கள் ஓர் இந்து ஸாதுபோல் தோற்றுகிறது. கோபம் உங்களிடம் வராதுபோல் தோற்றுகிறது. உங்களுக்கு தெரிந்ததை சற்று விளக்கமாகச் சொல்லவும். உங்களிடம் நாங்கள் திருப்தி அடைவோம் எனத்தெரிகிறது என்றார்கள்.

இந்த வைத்தியம் கேட்டதாவது:

அது எப்படி இதை இந்து ஸாது எனச்சொல்ல முடிந்தது? நெற்றியில் ஏதாவது சின்னம் இருக்கிறதா? அல்லது எம் வார்த்தைகளில் அப்படி இந்து வாசனை வீசுகிறதா? சரி! எம் பதில் உங்களுக்கு திருப்தி அளிக்க வில்லையானால் ஏதாவது திட்டிவிட்டு போவீர்களா? பரவாயில்லை. திட்டினாலும் ஏற்றுக் கொள்வோம். அடித்தாலும் வாங்கிக் கொள்வோம்! பதிலுக்கு எதுவும் செய்து பழக்கம் இல்லை! ஆனால் உங்கள் கேள்வி நல்ல கேள்வி. நல்ல பலன் உள்ளதாக தோற்றுகிறது. யாம் எந்த மதவாதியும் அல்ல. **எம்மதமும் சம்மதமே!** உங்களுக்காக ஒரு சிறிய கதை சொல்கிறோம். இதை உங்கள் அன்பர்களிடமும் சொல்லலாம். அவர்களும் பயனடைவார்கள் என ஓர் கதை சொன்னது!

உங்கள் கேள்வியாவது:

தானம் என்றால் என்ன? தருமம் என்றால் என்ன?

தானம் வேறு, தர்மம் வேறு! தானம் என்றால் பலனை எதிர்பார்த்து செய்வது; தர்மம் என்றால் பலன் கருதாது செய்வதாகும்.

**தானம் :**

அன்னதானம், சொர்ணதானம், பூமிதானம், கோதானம் என இன்னும் அனேகம் இருக்கிறது. இதை செய்பவர்கள் **ஏதாவது சங்கல்பத்தை** வைத்து அதை **அடைய குறிக்கோள்** கொண்டு செய்வதாகும். இது புண்ணிய சம்பந்தம் உடையது. பலன் கொடுத்தே தீரும்.

இரண்டுரக தர்மங்கள் உண்டு.

**முதல்ரக தர்மமாவது :**

இறை நாமாவைப் பஜிப்பதும், துதிப்பதும் இறைவனை அடையும் பக்தி மார்க்கத்தை **நிலை கண்டு, இடம் கண்டு** பேசி மற்றவர்க்கு **இறை உணர்வை** உண்டு பண்ணுவதும் தர்மமாகும். உடல் சிரமத்தினால் அவதியுறும் ஜீவர்களுக்கும், வறுமையினால் வாடும் ஜீவர்களுக்கும் (உன்னிடம் பொருள் இருந்தால், இது இறைவன் பொருள், இறைவனுக்கு இறைவனே கொடுக்கிறான், நாம் ஓர் பொம்மையே என்றபடி கொடு), கஷ்டத்தினால் வாடும் ஜீவர்களுக்கும் **இறை நாமாவையும், இறை நம்பிக்கையும்,** அவனை நம்பு; இது அவன் ராஜ்யமே; அவன் பார்த்துக் கொள்வான் என்று **இறை உணர்வையும்** ஊட்டுவது முதல்ரக தர்மமாகும்.

**"ஸத்யம் பேசினால் தர்மம் நிலை பெறும்".**

**இரண்டாவதுரக தர்மம் :**

மேலே சொன்ன தானங்களை **பலனை எதிர்பார்க்காமல்**, எந்த கற்பனையான சங்கல்பங்களையும் செய்து கொள்ளாமல், அதாவது கொடுப்பவர், "நான் கொடுக்கிறேன்" என எண்ணம் இல்லாமல், இன்ன பொருளை என்ற எண்ணம் இல்லாமல், இன்னாருக்கு(இன்னவகைக்கு)

கொடுக்கிறேன் என்ற எண்ணம் இல்லாமல், அவர்களிடம் **எந்த பதில் வார்த்தையும்** பெற்றுக் கொள்ளாமல் "இது இறைவன் பொருள், இறைவனுக்கு இறைவனே கொடுக்கிறான், நாம் ஓர் பொம்மையே" **என்ற ஓர்மையில்** ஓர் பொருளை கொடுத்தால் அது இரண்டாவதுரக தர்மமாகும்.

ஒரு தர்மம் எடுப்பவனுக்கு பத்து பைசா போட்டாலும் அவன் குருடா, நொண்டியா, பிழைக்க இயலாதவனா, வியாதியஸ்தனா என அவன் **நாமரூபத்தை** நோக்காமல், அவனுள்ளும் இறைவன் இருக்கிறான்; நம்முள்ளும் இறைவன் இருக்கிறான்; இந்த பொருளும் இறைவனுடையதே என இந்த மூன்றையும் ஒன்றுபடுத்த வேண்டும். நாம் கொடுப்பது பணமா, வஸ்திரமா, உணவா, பூமியா, மாடா என அவைகளை அலசி ஆராய்ச்சி செய்யாமல், நீ எந்த தெய்வத்தை நம்பினாலும் அந்த தெய்வ எண்ணத்துடன் கொடுத்து (இந்து தெய்வத்தில் **எதுவானாலும் சரி** அல்லது பிதாவே என **கர்த்தரை** எண்ணி அல்லது **பிஸ்மில்லா** என அல்லாவை எண்ணி) அந்த பொருளையும், காலத்தையும் அந்த வினாடியே மறந்துவிடு! இந்த தர்மத்தினால் புண்ணியம் சித்தித்தாலும் இவ்வுலக, தெய்வ உலக **பலனைத் தராது.** பிறவா நிலையாகிய மூக்தியைக் கொடுக்கும்!

ஒரு பொருளை ஒருவருக்கு கொடுக்கும்போது **இறை உணர்வில்லாமல்** உடல், உறவு, உலக உணர்வினால் கொடுத்தால் அது தானமும் ஆகாது, புண்ணியமும் ஆகாது, **அது பாபமாக முடியும்!** காரணம் நான் கொடுத்தேன், என் பொருளை கொடுத்தேன், நான் கொடுத்ததனால் அவன் உயர்ந்தான் என்றால் அது **மஹா பாபமாகும். விளம்பரப்படுத்தி** கொடுப்பது, எழுத்தில் (ரசீது, கல்வெட்டு) கொடுப்பதும் பாபமாகும்! அந்த பாபத்தின் பலனை அனுபவித்தே தீரவேண்டும்.

ஒருவன் ஒருவனுக்கு பத்து பைசா தருமம் செய்தான். அவன் அந்த பத்து பைசாவினால் ஓர் தூண்டில் முள் வாங்கினான். அதை வைத்து மீன் பிடித்தான். கொஞ்சம் பணம் சேர்ந்தது; ஓர் வலை வாங்கினான். மேலும் மீன்களைப் பிடித்தான். மேலும் அதிக பணம் சேர்ந்தது. ஒரு படகு வாங்கினான்; மேலும் அதிகம் மீன்களைப் பிடித்தான். ஓர் கப்பல் வாங்கினான், பெரும் பணக்காரன் ஆனான். மேலும் பல கோடிக்கணக்கான மீன்களைப் பிடித்து வெளிநாட்டுக்கு அனுப்பி குபேர சம்பத்துடன் ஓர் கோடீஸ்வரன் ஆகிவிட்டான். பல கப்பல்கள் வாங்கிவிட்டான். அள்ள அள்ள, கொடுக்கக் கொடுக்க, குறையாது பணம் சேர்ந்தது. **"இது பாப சம்பாத்தியமாகும்".**

அந்த பத்து பைசா கொடுத்தவன், **நான் பத்து பைசா கொடுத்தேன் என்னால் அவன் கோடீஸ்வரன் ஆனான்!!!** என மார்தட்டிக் கொண்டு அவன் பாபத்தில் இவன் பாதியை ஏற்றுக் கொண்டான்!!

## நீ புண்ணியம் செய்தாயா? பாபம் செய்தாயா?

ஹே.. மனிதனே! இந்த உலகம் தேவனின் ராஜ்யம். அனைத்து பொருள்களும் அவன் உடைமையே! உன் புண்ணியபாப கணக்கின்படி சிலசமயம் சிலவற்றை கொடுக்கிறான்! சிலசமயம் உன்னிடம் இருந்து சிலவற்றை எடுக்கிறான்!! **அவனுக்கு கொடுக்கவும் உரிமை உண்டு! அதைப்போல் எடுக்கவும் உரிமை உண்டு!!** கொடுத்தாலோ எடுத்தாலோ **ஏன்? எப்படி?** என கேட்காதே! **சகலமும் அவனே என சரணாகதி நிலையில்** நீ எதை கொடுத்தாலும் எதை

வாங்கினாலும் அந்த புண்ணிய பாபம் இரண்டும் உன்னைச் சாராது. இது தான தர்ம, புண்ணிய பாபத்திற்கு கொடுக்கும் சிறு விளக்கமாகும்!

இனி முன்கை நீண்டால் முழங்கை நீளும்- இதன் கதை:

உங்களைப் போன்ற எம் கர்த்தரின் பக்தன் ஒருவன் இருந்தான். வறுமையில் அதிக வருத்தம் அடைந்தான். நோயினால் மிகவும் மெலிந்தான். மனைவி, குழந்தைகளை வளர்க்க முடியாமல் அதிக சிரமப்பட்டான். **வறுமையும், கடுமையான கஷ்டமும் ஒருவனை பக்குவப்படுத்தும் சாதனமாகும்**. அந்த சாதனையில் இவன் நன்றாக கசக்கி பிழியப்பட்டு **ஒன்றும் இல்லாத** அதாவது எந்த உறவும் இல்லாத **சக்கையானான்**. இறைவனை அடைவது சாமான்யமல்ல.

## தனிமையாக்குவான்! தவிக்கச் செய்வான்!
## ஒன்றுமே செய்ய முடியாத இயலாத்தன்மை கொடுப்பான்!

அப்புறம் இறைவனே அனைத்துமாக இருந்து கொண்டு "கண்ணை இமை காப்பது போல் காத்தருள்வான்". இது இறைவன் திருவிளையாட்டு எனச்சொல்லலாம். இந்நிலைக்கு இந்த பக்தன் ஆளாக்கப்பட்டான். எம் கர்த்தர் பிரத்தியட்சமானார். இந்த குழந்தையும் தம் தாயின் மடியில் படுப்பது போல் கர்த்தரின் மடியில் படுத்துக்கொண்டு கொஞ்சம் தூங்கினான். கர்த்தர் அவன் தலைமுதல் கால்வரை தம் அபயகரத்தால் மெதுவாக வருடிவிட்டார்!

**இயேசு:** குழந்தாய்! அதிகம் சோர்ந்துவிட்டாய். வறுமையினால் அதிக கஷ்டம் அனுபவித்தாயா? உடல் நோயினால் பீடிக்கப்பட்டாயா? மனைவியினால் கடும் வார்த்தைகளை கேட்டு நொந்து போனாயா? உன் பிள்ளைகளுக்கு எதுவும் கொடுக்க இயலாமையினால் அவர்கள் இப்படி சோம்பேறி அப்பனிடம் பிறந்தோமே என உன்னை தினமும் திட்டித் தீர்த்து விட்டார்களா? உன் நிலையை (வினைகளை) காணும்போதெல்லாம் யாம் கலங்கி அழுவோம். ஆனால் அந்த அதிர்வுகளில் எல்லாம் **எம் நினைவு** உன்னைவிட்டு ஓர் வினாடியும் குறையவில்லை, மேலும்மேலும் அதிகரித்தது. புடம் போட புடம் போடத்தான் பொன் பிரகாசிக்கும். (என சொல்லிக் கொண்டிருக்கும்போது இடைமறித்து)

**பக்தன்:** ஓ.. எம் பிதாவே! யாம் பட்ட கஷ்டத்திற்கு அளவே இல்லை. இப்படி ஒருவனை நீ சோதிக்கக் கூடாது. இப்படி சோதித்தால் உம்மிடம் யார் வருவர்?

**இயேசு:** யாம் என் செய்வோம்? "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்". வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்!! இதுதானே உண்மை! முன் ஜன்மாவில் நீ செய்ததை அனுபவித்தாய். இதற்கு எம்மால் என்ன செய்ய முடியும்?

**பக்தன்:** முன் வினையென்றாலும் இப்படியா?? அது எமக்கு அப்போதே தெரிந்திருந்தால் இப்படி வந்து மாட்டி இருக்க மாட்டேன்!! இனி எம்மை கீழே அனுப்பிவிடாதே!

**இயேசு:** எம் அன்புக் குழந்தாய்! யாம் வேண்டுமென்றே செய்தோம் என்று எண்ணுகிறாயா?

**பக்தன்:** யாம் பட்ட கஷ்டம் கவலைகளை நீ பட்டால் தெரியும்? நீதான் சொர்க்கத்தில் ஆனந்தமாக இருக்கிறாயே!! உனக்கென்ன எம் சிரமம் தெரியப்போகிறது?

**இயேசு:** உன்னை இனி எந்த துன்பமும் வாட்டாது. எல்லாம் முடிந்துவிட்டன. நீதான் எம்மிடம் வந்துவிட்டாயே, இனி அனைத்தையும் மறந்துவிடு.

**பக்தன்:** மறக்கவா? ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைக்கும்போது எம் நெஞ்சே வெடித்துவிடும்போல் தெரிகிறது. இந்த மாதிரி கஷ்டம் சிரமத்தினாலேயே எம் பிள்ளைகள் எம்மை விட்டு ஓடிவிட்டனர். எம் மனைவி, இவன் உதவாதவன் என எம்மை வெறுத்து ஒதுக்கிவிட்டாள். உம் நாம ஜபத்தாலும், உம் பரிபூரண கிருபையாலும், உம் கருணா பிரவாகத்தினாலும் உம் திருவடி அடைந்து விட்டோம். இது போதும் பிதாவே! (என கர்த்தரின் மடியில் சுருண்டு படுத்துக்கொண்டு) ஓ.. எம் பிதாவே! எம் வருத்தம் தீர ஒரு கதை சொல்லுமே! கேட்போம்.

**இயேசு:** (கலகலவென சிரித்தார்) அன்பு மிகுந்த குழந்தாய்! ஒரு கதை சொல்கிறோம். கவனமாகக் கேள். இதை கேட்டால் உன் சிரமம் குறையும். ஆனந்தமாக தூங்கிவிடுவாய்!

**இயேசு சொன்ன கதை:**

ஓர் நகரத்தில் ஒரு அரசன் அதாவது சக்ரவர்த்தி எனச்சொல்லலாம். வாலிப வயது (பக்தன் “ஊம்” கொட்டி வந்தான்). அழகான தோற்றம், “ஊம்”. புஜபலபராக்ரமம் பொருந்தியவன், “ஊம்”. மணிமுடியும் செங்கோலும் அவன் வீரப்பிரதாபத்தை உணர்த்தின, “ஊம்”. அனேக சிற்றரசர்கள் அவனுக்கு கப்பம் கட்டி வந்தனர், “ஊம்”. கஜானா செல்வம் பொங்கி வழிந்தது, “ஊம்”. நாடும் மக்களும் மழைவளத்தினாலும், நேர்மையினாலும் எந்த குறையும் இன்றி அதிஆனந்தமாக இருந்தார்கள், “ஊம்”.

அவனுக்கு ஓர் மனைவி, அவள் தேவலோக ரம்பை போன்று அழகும், யௌவனமும் நிறைந்திருந்தாள், “ஊம்”. தம் கணவனுக்கு சகல சுகங்களையும் கொடுத்து பதிதர்மத்தோடு கூடி இருந்தாள், “ஊம்”. போகத்திற்கும், போக்கியத்திற்கும் எந்த குறையும் இல்லை, “ஊம்”. தம் உறவினரோடும், இனஜன பந்துக்களோடும் அதிஆனந்தமாக இருந்தான், “ஊம்”. பையன்கள் இரண்டுபேரும் சுந்தர சொரூபத்தோடு நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்கள், “ஊம்”. விளையாட்டு மைதானம், அதன் பக்கத்தில் ஒரு ஆறு நீந்தி விளையாடுவதற்கு என மிகவும் களிப்புடன் இருந்தார்கள், “ஊம்”. ராஜபோகமான அறுசுவை உணவு, “ஊம்”. உடுத்துவதற்கு விதவிதமான துணிமணிகள், “ஊம்”. தங்கம், வைரம் என நவரத்தின ஆபரணங்கள், “ஊம்”. அதை ஓர் சொர்க்கலோகம் என்றே சொல்லலாம் (இப்படி சொல்லி வரும்போது அந்த பக்தனுக்கு சலிப்பு ஏற்பட்டது போலும்?)

**பக்தன்:** ஏ.. பிதாவே!! கதையை நிறுத்தும்!!! இது என்ன கதை!!! கேட்கச் சகிக்கவில்லை!!!!

**“உப்பு சப்பு இல்லாத கதை”.**

**இயேசு:** (திகைத்து) என்ன குழந்தாய்! கோர்வையாகத்தானே சொல்லி வந்தோம். ஏதாவது விட்டுப்போய்விட்டதா? அல்லது இந்த கதையை எவரிடமாவது சொல்லக் கேட்டிருக்கிறாயா?

**பக்தன்:** எம் கர்த்தாவே! கதையென்றால் ஊடல், அடிபிடி சண்டை, பணவறுமை, தூல உபாதை, கஷ்டம், கவலை, துக்கம், பயம் இவையெல்லாம் வரவேண்டாமா? ஒரேயடியாக இனிமையையே சொன்னால் "சுவாரஸ்யமாக இல்லையே!" **(இயேசு சிரித்தார்)**

**இயேசு:** ஏண்டா குழந்தாய்! கதையில் கஷ்டம், கவலை, துக்கம், துயரம், பயம், நோய் நொடி, வறுமை இவையெல்லாம் வரலாம்! **ஆனால் உன் வாழ்க்கையில் வரலாகாதா?**

**பக்தன்:** (கர்த்தருடைய இரு கால்களையும் பிடித்து மன்றாடினான்) ஹே.. எமது பிதாவே! கர்த்தாவே! **எம் வாசகம் ஊருக்கு உபதேசம்! தங்கள் வாசகம் உலகஜீவ அனுபவ நிலை!** எம் அறியாமை இருள் அகன்றது. ஹே.. இறைவா! கஷ்ட நஷ்டம், இன்ப துன்பம், லாப நஷ்டம் இதுதானே வாழ்க்கை. இந்த வாழ்க்கையை தன் **சொந்த பந்தத்துடன்** அனுபவிக்கும்போது துக்கமாக தோற்றுகிறது. ஆனால் கருணையே வடிவான தங்கள் **நாம ஜெப பாடல், ஆடலுடன்** அனுபவிக்கும்போது அவை **மறத்துப்போய் மறந்துவிடுகின்றன!** அது காலக்கிரமத்தில் இறந்துவிடுகின்றன. எம் மனம் மஹத்தாகி விடுகிறது. எம்மை மன்னியும்.

சற்று நேரம் கழித்து, எம் பரமபிதாவே! யாம் நரகம், சொர்க்கம் இரண்டையும் பார்க்க வேண்டும். நரகவேதனை எதனால்? சுவர்க்கசுகம் எதனால்? இதை அனுபவ நிலையில் தரிசிக்க அருள் செய்யுங்கள் என வேண்டினான்.

எமது இயேசுவும் தம் குழந்தையை நரகத்திற்கு முதலில் அழைத்துச் சென்றார். ஓர் மாடியிலிருந்து கீழே இருவரும் நோக்கினர். கீழே உள்ள பெரிய ஹாலில் ஓர் நீளமான (ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடுவதற்கான) டைனிங் டேபிளும், சேர் வகைகளும் போட்டிருக்கக் கண்டனர். ஓர் தேவதூதன் மணியை அடித்தான். நரகவாசிகள் ஆயிரம் பேரும் தோலும், எலும்புமாக மெலிந்த நிலையில் அவரவர் நாற்காலியில் வந்து அமர்ந்தனர். எல்லோருடைய இரண்டு கைகளும் முழங்கையும் மணிக்கையும் **மடக்க முடியாதபடி** ஓர் கட்டை வைத்து கட்டப்பட்டிருக்கின்றன. அடுத்து ஓர் தேவதூதன் ஓர் மணியடித்தான். **அவர்களுக்கு விருப்பமான உணவு வகைகளை** சில தேவதூதர்கள் அந்த மேஜையில் வைத்துச் சென்றனர். ஒருவராலும் **கையை மடக்கி** சாப்பிட முடியவில்லை.

ஒருவனை ஒருவன் **முறைத்துப் பார்க்கிறான்**. நாம் சாப்பிட(முடிய)வில்லை. வேறு எவனாவது சாப்பிட்டால் அவன் தொண்டையை **கடித்து குதறி** விடுவதுபோல் அதிஉக்ர கோபத்துடன் அங்கும்இங்குமாக பார்க்கிறார்கள். **எவரும் சாப்பிடவில்லை.** அரை மணிநேர அவகாசத்தில் மறுமுறை மணி அடிக்கப்படுகிறது. தேவதூதர்கள் அனைத்து சாப்பாட்டையும் எடுத்துச்சென்று விடுகிறார்கள். அந்த நரகவாசிகளும் அவரவர் இடத்திற்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர். **வெறிநாய்** போன்று போய்விட்டார்கள்.

**பக்தன் கேட்கிறான்:** ஓ.. எம் கர்த்தாவே! இது கொடுமையிலும் கொடுமை!! இப்படி அன்னத்தை பார்க்கவைத்து பரிதவிக்க, பதைபதைக்க இட்டுச் செல்லலாமா? இதை தாங்கள் எப்படி

சகித்துக் கொண்டு இந்த **நிர்வாகத்தை நடத்துகிறீர்?** இந்த தேவதூதர்களை தண்டிக்க வேண்டாமா? இவர்களை இப்படி பட்டினி போட்டால் தெரியும்!! எங்கள் நாட்டில் என்றால் யாம் அதிகாரியாக இருந்தால் இந்த தேவ தூதர்களுக்கு **மரண தண்டனை** வழங்கியிருப்போம். நீர் இவர்களை இப்படி விட்டு வைக்கலாமா???

அதற்கு எம் பிதாவும் புன்முறுவலுடன், எம் குழந்தாய்! **ஆத்திரம் அறிவு நாசம்!** ஆகவே ஆத்திரம் வேண்டாம்! ஆவேசம் வேண்டாம்! சற்று பொறுமையாக இரு. சொர்க்கத்திற்கும் சென்று பார்த்துவிட்டு நாம் இருவரும் ஓர் முடிவுக்கு வருவோம் என அவனை சாந்தப்படுத்தி சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கும் இதே போல் ஓர் மாடியில் நின்றுதான் பார்த்தார்கள்! அங்கும் இதே போல் ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடும் டேபிள், சேர்தான் இருந்தது. அங்கு போல் இங்கும் ஓர் தேவதூதன் மணி அடித்தான். சொர்க்கவாசிகளும் வரிசையாக வந்து தம் இருக்கைகளில் அமர்ந்தனர்.

சொர்க்கவாசிகள் அனைவரும் **நல்ல சரீரபுஷ்டியுடன்** இருந்தனர். ஆனால் இவர்கள் கைகளும் (இரண்டும்) நரகவாசிகளைப் போலவே முழங்கையும், மணிக்கையும் மடக்க முடியாதபடி கட்டப்பட்டிருந்தன. மறுமுறை மணி அடிக்கப்பட்டது. அவர்களுக்கு பிடித்த உணவு தட்டுக்களில் பரிமாறப்பட்டன. அனைவர் முகத்திலும் அமைதியும், சாந்தியும், ஆனந்தமும் நிலவியது. ஒருவன் தம் கையால் எதிரில் இருப்பவனுடைய தட்டில் இருந்த ஆகாரத்தை எடுத்து சிந்தாமல், சிதறாமல் அவனுக்கு ஊட்டுகிறான்! அவன் இவன் தட்டில் இருந்தவற்றை இவனுக்கு ஆனந்தநிலையில் சிந்தாமல், சிதறாமல் ஊட்டுகிறான்! கொடுக்கப்பட்ட அவகாச நேரமோ முப்பது நிமிடம், ஆனால் இருவர் இருவராக இருபது நிமிடத்தில் ஆகாரங்களைப் புசித்து முடித்தனர்.

பத்து நிமிடங்கள் அவரவர் க்ஷேம லாபங்களை பேசி இறை அன்பையும், இறை கருணையும், இறைவன் ஜீவர்கள் மேல் வைத்திருக்கும் **பாரபட்சமற்ற சமபார்வையையும்**, அவர் பெருமையையும் பேசி முடித்துவிட்டு தங்கள் இருப்பிடம் செல்கின்றனர்.

இவற்றை கண்ட பக்தன், ஹே.. கருணை நிறைந்த கர்த்தரே! என்னே உன் கருணை! உன் செயல்களை எவன் **அஸாத்ய பொறுமையுடன்** உணர்ந்து நோக்குகிறானோ அவனே தெளிவடைகிறான். **காட்சியிலும் கேள்வியிலும்** (வார்த்தையிலும்) மனதை சிதறடித்து **அவசரமும், ஆத்திரமும், சந்தேகமும்** உடைய மனிதன் உன் உண்மையை உணராது **உலக ஜீவகுணதோஷங்களுக்கு ஆளாகி, உன்னைக் குறை கூறியே** தம்மை கெடுத்துக்கொள்கின்றான். இதைத்தான் உன் வாக்காக பூலோகத்தில் சொல்வதுண்டு! அதாவது

"முன்கை நீண்டால் முழங்கை நீளும்!"
"பகிர்ந்துண்டால் பசி ஆறும்!"
"பொருள் கொடுக்கக் கொடுக்க குறையாது!"
"அருள் எடுக்க எடுக்க வளரும்!"
"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்!"
"இறைக்கும் கிணறுதான் ஊறும், இறைக்காத கிணறு பாழ்படும்!"

என பல பழமொழிகள் சொல்வதுண்டு.

இந்த சொர்க்கவாசிகள் பூலோகத்தில் வாழும்போது பிறரை தாமாக (நம்மவர்களாக) பாவித்து, கொடுத்துக்கொடுத்து வாழ்ந்ததால் அவர்கள் **நல்வினைப் பழக்கம்** இங்கும் சுபவாஸனையாக இருந்து சுகவாசிகளாகவும், நலம் பெற்றவர்களாகவும் இருக்கச் செய்கிறது.

**ஆனால்**

இந்த நரகவாசிகளோ அங்கும் “எச்சில் கையால் காகம் ஓட்டியதில்லை” அதாவது கொடுத்தறியாதவர்கள். தானும் உண்ணாமல், பிறருக்கும் கொடுக்காத ஈயாத லோபிகள். அவர்கள் **துர்வாஸனை** இந்த இடத்திற்கு வந்தும் மாறாமல், **அசுப வாஸனையாகவே** இருக்கிறது.

கர்த்தரே! **எதற்கும் கொடுப்பினை வேண்டும்!** அடியேன் தங்களுக்கு ஓர் கதை சொல்கிறோம். இது எம் பாட்டி சொன்ன கதை. ஓர் வயதான மூதாட்டி. அவள் விபரம் தெரிந்ததில் இருந்து எவருக்கும் தானதர்மம் செய்தறியாதவள் - **கருத்தக்கருமி, ஈயாத லோபி.** எச்சில் கையால் காகம் விரட்டாதவள். அவள் தொழில் கூடின வட்டிக்கு பணம்கொடுத்து நிலமோ, பொன்னோ, பொருளோ, பத்திரங்களையோ அபகரித்து வைத்துக் கொள்வது. தானும் சரியான உணவு ஏற்பதும் இல்லை; பிறருக்கும் எந்த உணவும் கொடுத்ததும் இல்லை. அவள் ஓர் நாள் விதியால் மரணம் அடைந்தாள். அவள் விதிப்படி நரகலோகம் சென்றாளாம்.

ஆமாம் தேவா! “கும்பீபாகம்” என ஓர் நரகம் இருக்கிறதாம். **ஆனால் யாம் நரகம் பார்த்தது போதும் எம் பிதாவே!** அன்று அந்த நரக விமர்சனையை எம் பாட்டி சொன்னபோதே மூன்று தினங்கள் யாம் ஆகாரம் எடுக்கவில்லை! கேட்ட அன்றே அந்த நிலையென்றால் பார்த்துவிட்டாலோ எம் பிராணன் நில்லாது! இதை உம்மிடமே விமர்சிக்கிறோம் பாரும்! “கொல்லன் உலையில் சென்று ஊசி விற்பது போல”. சர்வ சிருஷ்டி கர்த்தாவே நீர்! உம் சிருஷ்டியை உம்மிடம் சொல்வது அழகல்ல!

துர்நாற்றம் கடுமையாக வீசும் அந்த **சுகந்தத்தில்** தேள், பாம்பு (பல வகை), நட்டுவாக்காலி, பூரான், பிள்ளை பூச்சி இன்னும் கொடிய விஷஜந்துக்கள் எத்தனை உண்டோ அத்தனையும் நிறைந்த **அந்த அமைதியான** இடத்தில் இந்த பாட்டி என்ன பாடுபட்டாளோ? யாம் அறியோம்! கத்திக்கதறி கூப்பிடுகிறாளாம். நான் செய்த பாபங்களுக்கு இந்த தண்டனை போதாதுதான்! அவ்வளவு கொடும்பஞ்சமா பாதகங்களைப் பண்ணினேன். **அன்று அது எனக்கு சுகமாக இருந்தது.** அந்த சுகத்தின் (சுகம் அல்ல இனிமை) இன்பம் இப்படி இருக்கும் என முன்பே தெரியாமல் போச்சே!! இது முன்பே தெரிந்திருந்தால் நானும் தானதருமம் செய்திருப்பேனே!!!

இயேசுவே..! தேவா..! பிதாவே..! என் குரல் உனக்குக் கேட்கவில்லையா? என குமுறி அழும்போது, வானவீதியில் ஒரு தேவதூதன் செல்வதைப் பார்த்தாள். ஐயா! ஐயா!! கருணை கூர்ந்து என்னைக் காப்பாற்று. நீ மவராசன். நீ நல்லா இருக்கணும் என குய்யோ முறையோ என அலறும்போது அந்த தேவதூதன் எண்ணுகிறான், புண்ணியம் செய்தவர்கள்தானே எம்மை காணமுடியும்!! அப்படியானால் இந்த மூதாட்டியாகிய ஜீவன் ஏதோ புண்ணியம் செய்திருக்கலாம் என எண்ணி மேலே நின்று கொண்டே, ஏ.. மூதாட்டியே! நீ ஏதேனும் புண்ணிய காரியம் செய்திருக்கிறாயா? புண்ணியம் பண்ணாமல் நீ எம்மை பார்க்க முடியாது என்றான்.

அவள் பலமுறை சிந்தித்துப்பார்த்து, நான் எந்தப் புண்ணியமும் செய்யவில்லையே ஐயா! கொடுமைகள்தானே நிறைய செய்திருக்கிறேன் எனச்சொல்ல, அந்த தேவதூதன், ஏ.. பிதாவே! இந்த ஜீவன் ஏதோ **ஓர் நற்காரியம்** செய்திருக்கிறாள். இவள் செய்த கடுமையான பாபமானது இவள் புண்ணியத்தையும் சொல்லமுடியாமல் மறைக்கிறது! அடியேனுக்கு அந்த நற்காரியத்தை காட்டி அருளும் என வேண்ட, இறை கருணையினால் **ஓர் கனிந்த வாழைப்பழம் தோன்ற,** ஏ.. பாட்டி! இப்படி பழம் ஏதாவது தருமம் செய்தாயா? என கேட்டான்.

ஆமாம் ஐயா! என்றோ ஒரு நாள் மூன்று வாழைப்பழம் வைத்திருந்தேன்; இரண்டை சாப்பிட்டு விட்டேன். ஒரு பழம் அழுகிய நிலையில் சாப்பிட தகுந்ததாக இல்லை. அதை குப்பைத் தொட்டியில் போடச் சென்றேன். அப்போது பிச்சைக்காரன் பசிக்குது அம்மா! ஏதாவதுகொடு எனக்கெஞ்சினான். உடனே நான் குப்பையில் போடுவதை அவன் டப்பாவில் போட்டேன். **இந்தா சாப்பிடு** என சொன்னேன். அது இப்போது இந்த பழத்தைப் பார்த்த பிறகுதான் ஞாபகம் வருகிறது ஐயா என கெஞ்சும் முறையில் சொன்னாள்.

அந்த தேவதூதனும் சிரித்துக் கொண்டே, சரி பாட்டி இந்த பழத்தை யாம் பிடித்துக் கொள்கிறோம். உனக்கு நேராக நீட்டுவோம்! அதன் காம்பு பகுதியை நீ பலமாக பற்றிக்கொள். உன்னை கரையேற்றிவிடுகிறோம் என்றான்! அந்த கிழவியும் காம்பை பற்றிக்கொள்ள, தேவதூதன் மேலே தூக்கினான். அந்த மூதாட்டி பாதிக்கு மேலே வெளியேறிவிட்டாள்.

அவளுக்கு ஆனந்தம் தாளவில்லை, குதூகலத்துடன் சென்றாள். இன்னமும் இரண்டொரு வினாடிகளில் அவள் வெளியே வந்து விடலாம். கும்பீபாக நரகில் கோடிக்கணக்கில் அவதியுற்று அலறி முறையிட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர், இந்தக் கிழவி மேலே போகிறாளே! அவளைப் பின்பற்றி நாமும் சென்று விடலாம் என்ற நப்பாசையினால் அக்கிழவியின் கால்களை பற்றிக் கொண்டார்களாம்!

**இங்கும் அவள் துர்வாஸனை போகவில்லை.**

“தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்”

“ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது”

“நாய் வாலை நிமிர்த்த முடியாது”


“கழுதைக்கு உபதேசம் காதில் ஓதினாலும் அது ‘காள்காள்’ என்று கத்தும் புத்தியை விடாது”

என்ற பழமொழிகளின்படி கிழவி கூறினாள்:

“அட பாபஜன்மங்களே! **‘நான் செய்த’** புண்ணியத்தில் நான் சொர்க்கம் போகிறேன்”, என் கால்களை விடுங்கள் என்று தம் இரு கால்களையும் உதறினாள்.

தேவதூதன் சொன்னான்:

இது நான் செய்த புண்ணியம், இது என்னுடைய கால் என அஹங்கார அபிமானத்தோடு கூடிய “செருக்கு” உன் கொஞ்சம் புண்ணியத்தையும் உண்டுவிட்டது எனச்சொல்லி, அவளை நரகத்திலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டான் எனச்சொல்லி கதையை முடித்தான் அந்த பக்தன்.



இதுவரை இந்த பைத்தியத்திடம் கதை கேட்ட அந்த தம்பதிகள் இருவரும், ஐயா! **எங்கள் தேவனை** இதுவரையில் நாங்கள் கண்டதில்லை. இன்று தங்கள் மூலமாக தங்கள் சொரூபமாகவே காண்கிறோம், உணர்கிறோம் என கண்ணீர் ததும்பி நா தழுதழுத்துக் கூறினர். ஸத்தியத்தையும் தர்மத்தையும், புண்ணியத்தையம் பாபத்தையும், தானத்தையும் இவ்வளவு விளக்கமாக **கையில் உள்ள நெல்லிக்கனியைப்** போல் விளக்கி அருளினீர்கள்.

தங்களை ஓர் படம் எடுக்க அனுமதி தரவேணுமென்று அனுமதி பெற்று அந்த பைத்தியத்துடன் மனைவியும் குழந்தையும் ஓர் படம், அவனும் குழந்தையும் ஓர் படம், அந்த பைத்தியத்தை தனியாக ஓர் படமும் எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் எண்ணத்தை எமதய்யன் பூர்த்தி செய்து வைத்தான் போலும்?

அடுத்தவாரம், அதே இடத்தில் அத்தம்பதிகளும், குழந்தையும் இதை சந்தித்து, **“ஐயா! தாங்களே எங்கள் தேவன்”** என கதறி அழுது அந்த மூன்று படத்தையும் அப்பைத்தியத்திடம் காட்ட, அந்த இரண்டு பேருடன் அமர்ந்து எடுத்த படம் (சில வருஷங்களுக்கு முன்பு எம் சிரசில் ஜடா மகுடமும், இருதோளினும் திரித்திரியாக ஜடா முடிகளும் கோர்வையாகத் தொங்கும்) சிரசில் ஜடாமகுடத்துடனும், தனிப்படத்தில் ஜடாமகுடம் இல்லாமல் **கர்த்தரின்** அம்ஸத்திலும் அமைந்திருந்தது. அது அவன் சூழ்ச்சியே! யாம் அறியோம்!!

**எல்லாம் நீ!**






# கிறிஸ்துவும் கிருஷ்ணனும் ஒன்றே!

மேட்டூர்டேம்(அணை) பூங்காவின் அருகே தண்ணீர் செல்லும் மதகு(மடை) இரண்டு இடத்தில் உண்டு. அந்த இரண்டையும் படிகள் மூலம் தாண்டிச் சென்றால் டேம் (அணை) மேலே செல்லலாம். அதில் எண்பத்தி இரண்டு படிகள் உண்டு. ஒருசமயம் அதில் ஏறிச் செல்லும்போது ஓர் பாதிரியார்(சேலம் சர்ச்சில் பணிபுரியப்பட்டவர்) மேலே நின்றபடி இந்த பைத்தியத்தை கூர்ந்து பார்த்தார் போலும்? அவர் கண்களுக்கு காட்சி எப்படி அமைந்ததோ **அதை அவன் அறிவான்**. அவன் அருளால் அதை அவர் நோக்கினார். அவர் கண்களுக்கு ஓர்சமயம் பரமபிதா சொரூபமும், ஓர்சமயம் ஸாது சொரூபமும் தெரிந்ததாம்! பரமபிதாவாக தோற்றம் தெரியும்போது ஜடாமகுடம் மறைகிறது. ஓர் சாதுவாக காணும்போது ஜடாமகுடம் தோற்றுகிறது.

இந்த காட்சியை கண் கொட்டாமல் பார்த்தவர், இது மேல் தளத்திற்கு வந்ததும், பிதாவே! என அடியற்ற மரம்போல் ‘தடால்’ என விழுந்து அதன் திருவடியை பற்றிக்கொண்டார். அது ஒன்றும் தோன்றாமல், ஓ.. தேவாதிதேவனே! பிதாவே என, அவரை இருகரங்களாலும் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டு, ஏன் இந்த கோலம்? நிதானமாக இருங்கள்! பொறுமையாக அமைதியை கடைபிடியுங்கள்! விஷயத்தை சொல்லுங்கள்! என அவரை தேற்றுவது பெரும்பாடாகி விட்டது. அவர் அழுகையை நிறுத்தி தாம் கண்ட காட்சியை சொன்னார்.



அதற்கு அந்த பைத்தியம், ஐயா! **இது பிரேம பக்தியாகும்**. அதாவது அறியாதவர்கள் **மனப்பிரமை** என்பார்கள். என்ன விஷயம்? தாங்கள் யார்? இதற்கு முன் என்ன செய்து கொண்டு இருந்தீர்கள்? இப்போது என்ன செய்கிறீர்கள்? என அவரை விசாரிக்க, தனக்கு சேலம் என்றும் ஓர் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்ததாகவும் அப்போது இந்து மதத்தில் இருந்து ராமாயணம், பாரதம், சில உபதேச கருத்துக்களை படித்ததாகவும்,

ஒரு அந்தணரிடம் வேதம் சற்று கற்றதாகவும், ஏனோ அந்த பிடிப்பு நீடிக்கவில்லை என்றும், பிறகு இப்போது பனிரெண்டு வருஷமாக கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்து, இப்போது இரண்டு வருஷமாக ஃபாதராக பணிபுரிகிறதாகவும் சொன்னார். என் பார்வைக்கு இந்துக்களும், கிறிஸ்தவர்களும் தங்கள் மதத்தைக்கொண்டு ஆடுகிறார்கள். ஆனால் சில முக்கிய விஷயங்களில் **இரண்டும் ஒன்றென உணர்கிறேன்** என்றார்.


**ஃபாதர்:** ஐயா! தாங்கள் மதவாதி அல்ல என உணர்கிறேன். இந்த மதங்களை ஏன் பிரித்துப்பிரித்து போட்டியும், பொறாமையும், பூசலும் உண்டு பண்ணுகிறார்களே? இவர்களைத் திருத்த முடியாதா?

**அது:** ஐயா! அது இனி நடக்காது. மேலும்மேலும் விரிவடைந்து சர்வமும் நிர்மூலமாகும். சகலமும் ஆடி அதிர்ந்து அழிந்து ஒன்றென்றும், அது அன்றென்றும், இல்லையென்றும் ஆகிவிடும். இதுவே முடிவு! இப்போது சகலமத ஆலயங்களிலும் (அனைத்து கோயில்களிலும்) உருவஅருவ (சிலையும், சூட்சுமமாகவும்) **நாம ரூப குண தெய்வங்களை** வைத்து **வியாபாரம் நடைபெறுகிறது.** உண்மை மறைபொருளாக இருந்து சர்வசாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கிறது.

**ஃபாதர்:** இந்த கிறிஸ்துவும், கிருஷ்ணனும் ஒன்றென என் **உள் உணர்வு** உணர்த்துகிறது. **புறவுணர்வு** இல்லையென மறுக்கிறது. இதன் விளக்கம் சற்று தெளிவாக சொன்னால் நான் அமைதி பெறுவேன்.

**அது:** ஐயா! இந்த இருவரும் ஒருவரே! இருவரும் **அயோனி** சம்பந்தர்கள். இருவருமே ஆடுமாடு மேய்த்தவர்களே! அங்கு ஏரேது மன்னன் என்றும், இங்கு கம்சன் என்றும் இவ்விருவரும் **சிசுவதை** செய்தவர்களாவர். கிறிஸ்துவிடமும், கிருஷ்ணனிடமும் அற்புதங்கள் பல நடந்திருக்கின்றன!


அவர் சிலுவையில் அறையப்பட்டார்; இவர் பாணத்தால் அடியுண்டு தூலத்தை விட்டார். இருவருக்குமே மரணம் இல்லை. ஆனால் உலக நிலையில் வார்த்தையாக பேசப்படுவது **துர்மரணம்!**



ஆனால் இது அவர்களாகவே தமக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்டது. இவர் சிலுவையை சுமந்த காரணம் **'ஐ'**(I) என்றால் நான். இந்த அஹங்காரத்தை எந்த சாதகன் முழுமையாக அழிக்கிறானோ, 'ஐ'யை (நானை) வெட்டுகிறானோ ✝ அவன் யாமாக இருப்பான் என உணர்த்தினார். அறியாத மாந்தர் அதை ஓர் மதசின்னமாக ✝ சிலுவையாக பிடித்துக்கொண்டனர்.

கிருஷ்ணன் பாணம் பட்டு உயிர் நீத்த காரணம் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்றபடி. ஆகவே அறிந்தோ, அறியாமலோ "பாபம்" பண்ணாதே; அது தொடர்ந்து வந்து உன்னை அழிக்கும் என உணர்த்தவே ராமனாக தோன்றிய ஜீவாத்மா மறைந்திருந்து ஒரு ஜீவனை(வாலியை) வதைத்ததால், அதே ஜீவன், ராமன் கண்ணனாகத் தோன்றிய காலத்து, தாம் மறைந்திருந்து பாணம் போட்டு கண்ணனை வதம் பண்ணினான். **குற்றமோ, பாபமோ**

பண்ணாதே என அறிவுறுத்தும் பொருட்டு கிருஷ்ணன் கற்றுக் கொடுத்தான். ஆக இந்த இருவரும் ஒருவரே என முடிவு பண்ண வேண்டும்.



**கல்வாரி மலை**

இதை நிதரிசனமாக உங்களுக்கு உணர்த்துகிறோம். **நீர் சுத்தாத்மா, ஓர் பக்குவ ஆன்மா.** யாம் உணர்த்துவதை நீர் உணர முடியும் எனச்சொல்லி அருகில் இருந்த செடி, கொடிகள் அடர்ந்த குன்றுக்கு அவரை அழைத்துச் சென்றது. மலை உச்சி வந்தடைந்ததும் இருவரும் ஓர் பாறையில் நின்றோம். உங்கள் கிறிஸ்துவும், எம் கிருஷ்ணனும் **ஒன்றென்பது உண்மையானால்** நீங்கள் இங்கு மண்டியிட்டு உம் பிதாவை கத்திக்கதறி அழைப்பீராக! என்றோம். அவர் **நிலை பக்குவப்பட்டுவிட்ட** தன்மையினால், ஓ... எம் கர்த்தாவே! எம் அன்பின் பிதாவே! உம் தரிசனம் இந்த வினாடி கிடைக்கவில்லையானால் நான் **பிராணஹத்தி** பண்ணுவது உறுதி எனச்சொல்லி தலை துண்டிக்கப்பட்ட ஒரு ஆடு ஐந்து நிமிஷம் எப்படி **மரணதுடிப்பில் துடிக்குமோ** அதே நிலையில் துடித்து தாங்க முடியாத **மரண வேதனையில்** சரீரம் கீழே அதல பாதாளத்தில் விழும் நிலை ஆயிற்று.

**"நையாத மனிதற்கு உய்யாது கண்டுகொள்ள"**

என்பது இங்கே பூர்த்தியானது போலும்!! அந்த தூலம் கீழே விழுந்துவிடாமல் அது தாங்கிக் கொண்டது போலும்!!! **"அதுவும் இதுவும்"** கூர்ந்து நோக்கின. **"ஓர் ஜோதி - அசரீர ஒலி"** (ஆனால் ஒளி) அஞ்ஞானத்தை அகற்றுவது ஒளிதானே!!

**"சுத்தம் - ஒன்றும் இல்லை!" "அதன் கீழ் ஒன்றுண்டு!"**
**"அறிவு நிலையில் ஒன்று!" "மனோ நிலையில் இரண்டு, உலக நிலையில் பல!"**

**"மனோ கண்களைக் கொண்டு பார்!"**
**"அறிவுக் கண்கொண்டு உணர்!"**
**"பார்வை மறைய வேண்டும், அறிவு ஒடுங்க வேண்டும்!"**
**"இது விளங்கும் வரை காத்திரு!"**
**"இதைக் கேட்டால் குழப்பம், உணர்ந்தால் ஆனந்தம்!"**
**"அந்த இரண்டும் உணர்ந்ததுகள்!!!"**

**எல்லாம் நீ!**



# இறைவனுக்கு ஏற்ற இடம்!

மதுரையில் ஒரு கிறிஸ்துவ ஹாஸ்டல் பக்கம் இது வழக்கமாக வாக்கிங் செல்லும். அதில் ஓர் பிளே கிரௌண்ட் (விளையாட்டு மைதானம்). அதில் மாலை வேளையில் சில குழந்தைகள் பந்து ஆடும். அதில் சில மாணவர்கள் இந்த பைத்தியத்தை பார்க்கும் போதெல்லாம் கேலி, கிண்டல், நையாண்டி (இது உலக வார்த்தை, எமக்கில்லை) செய்வர்! இது தலையைக் குனிந்த நிலையில் சென்றுவிடும். ஆனால் ஆனந்தம் எந்த வினாடியும் குறைவதில்லை. **அது எம் சொரூபம்தானே!**

ஒரு ஞாயிறு மாலை நேரம், மூன்று மாணவர்கள் இதன் பின்னால் ஏதேதோ பேசி சிரித்துக்கொண்டு வந்தனர். வீடுகள், ஜன நடமாட்டம் இல்லாத இடம் வந்ததும் ஓர் பாறையில் இது அமர்ந்தது. அந்த மூவரும் அருகில் வந்தனர். ஜடாமகுடம், விரிஜடை இவைகளை காட்டிக்காட்டி ஏதேதோ பேசினார்கள். இதுதான் காதிருந்தும் செவிடாய், கண் இருந்தும் குருடாய் இருக்கிறதே!

**ஒருவன் :** ஸ்வாமிகளுக்கு எந்த ஊரோ?

**அது :** தெரியவில்லையே!

**ஒருவன் :** ஸ்வாமிகளுக்கு ஊர் பேர் கிடையாதா? தெரியாதா?

**அது :** ஊரும் பேரும் தெரிந்தால் இப்படி எப்படி இருக்க முடியும்?

**ஒருவன் :** அப்படியானால் ஆகாயத்தில் இருந்து குதித்து வந்தீர்களா?

**அது :** வாஸ்தவந்தான். ஆகாயமே எம் இருப்பிடம். இங்கு எப்படி வந்தோம் என்றுதான் தெரியவில்லை!

**ஒருவன் :** உம்முடைய அம்மா அப்பா பெற்று இங்கு வரவில்லையா?

**அது :** அந்த அம்மா அப்பாதான் கோடானுகோடியில் யார் அம்மா, யார் அப்பா என தெரியவில்லை?

**ஒருவன் :** இந்த வேதாந்தம் வேண்டாம்! நீர் ஒரு சாமியார் தானே?

**அது :** (பலமாக சிரித்துக் கொண்டே) சாமி + யார் = சாமியார்? இது கேள்விக் குறிதானே! சாமி எங்கே?

**ஒருவன் :** இவர் பெரிய ஆளாக இருப்பார் போல் தெரிகிறது! ஆமாம் சாமி! எந்த ஊரில் இருந்து இந்த மதுரைக்கு வந்தீர்?

**அது :** இது போகாத இடம் இல்லை, பார்க்காத ஊர் இல்லை.

**ஒருவன் :** அப்படியானால் ஊர்சுத்திச் சாமியாரா?

**அது :** அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்.

**ஒருவன் :** அப்படியானால் எல்லா ஊருக்கும் போவீர். ஆனால் எந்தெந்த ஊரில் **சின்னவீடு** இருக்கு?

**அது :** (சிரித்துக் கொண்டே) எல்லா ஊரிலும் **சின்னவீடாகத்தானே** இருக்கிறது. யாம் அமருவதற்கு பெரிய சுத்தமான வீடு இல்லையே.

**ஒருவன் :** சாமி நீர் என்ன சொல்கிறீர்? சின்னவீடு, பெரியவீடு என வினோதமாக பிரிக்கிறீரே! கொஞ்சம் விளங்கும்படி சொல்லும்.

**அது :** தம்பிகளே! உங்கள் கர்த்தரின் படத்தை பார்த்திருப்பீர்களே. தம் இதயத்தை திறந்து காட்டுகிறார். அதை **முள்வேலிக்கம்பியினால்** சுற்றி பிணைத்து, **ரத்தம் சொட்டச்சொட்ட** இறுக்கி எப்படி சிறிதாக்கிவிட்டீர்கள்??? இது போதாதா? **"இன்னமும் இறுக்கி சின்னவீடாக்க வேண்டுமா?" உங்கள் படிப்பும் பட்ட(மும்)தும் போதாதா?** இதை சொல்லும்போது எம் கண்கள் குளமாகி நீரை கொட்டிக் கொண்டன.

இதைக்கண்ட அம்மூவரும், ஐயா! போதும்! போதும்!! எங்கள் அறிவுக்கண்ணை திறக்க வந்த பெருமானே! **படிப்பின் செருக்கினாலும், மத மமதையினாலும்** இவ்வாறு உங்களை சிரமப்படுத்தி விட்டோம். தயவுசெய்து எங்களை மன்னித்தருள வேண்டுமென்று திருவடியில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அவர்கள் மனம் திருந்திவிட்டார்கள்.

அது அவர்கள் மூவரையும் தடவிக் கொடுத்து ஆசீர்வதித்து, குழந்தைகளே! உங்கள் **வாலிப பிராயம், மதப்பற்று** இவையெல்லாம் சேர்ந்து "இளம் கன்று பயம் அறியாது" என ஆக்கிவிட்டது. இது இன்னமும் வளர்ந்தால், இது எங்கே கொண்டுவிடும் தெரியுமா? "துள்ளிய மாடு பொதி சுமக்கும்" என ஆகிவிடும்.

உங்கள் பிதாவை சற்று நோக்குங்கள். கசையால் அடித்தார்கள்! உடல் எல்லாம் ரத்தப் பிழம்பு! தலையில் முள்முடி! முகம், உடல் எல்லாம் ரத்தப் பிரவாகம்! அந்நிலையிலும் சுமக்க முடியாத ஒரு சிலுவை!! அதையும் தாங்கி தூக்கிக் கொண்டு செல்லுகையில் குண்டும், குழியும், கல்லும் காலை இடறிவிடும்போதும்

**அவர் முகம் பிரகாசித்தது! புன்முறுவல் மாறவில்லை!!**
**"பரம பிதாவை(பிரம்மத்தை) தரிசித்த வண்ணம் ஆனந்தமாக சென்றார்".**

அப்போது, எம் பரமபிதாவே! இவர்கள் இன்னது செய்கின்றோம் என அறியாமல் செய்கிறார்கள். இவர்கள் பாபங்களை மன்னியும்! என்றார்.

சிலுவையை கீழே வைத்து, அவரை அதில் படுக்க வைத்து, இருகைகளை தனித்தனியாகவும் (ஒன்று நம்பிக்கை, மற்றொன்று வைராக்கியம்) இருகால்களையும் ஒன்றாகவும் (காலமாகிய காலதேவனை நடந்து, கடந்து **ஒன்றுபட்டு காலபயத்தை ஒழித்தார்!**) வைத்து சிலுவையில் அறைந்தனர்.

அவர் சிலுவையின் நோக்கமே **'I'** என்ற அதாவது **நான்** என்ற **அஹங்காரத்தை அடி,** அதாவது **ஒழி** என்றார். அதுவே இந்த ✝ சின்னம். அதை நீங்கள் ஓர் மதமாக பற்றிக்கொண்டு **நான் என்ற அஹங்காரத்தையும், எனது என்ற மமஹாரத்தையும்** விடாமல் வீணாக மிருகத்தையும் விட கேவலமாக அலைந்து கொண்டிருக்கிறீர்கள்.

**அடங்கி இருங்கள். அமர வாழ்வு பெறலாம்!**
**அடக்க நினைத்தால் மரம் என ஆகுவீர்!!**

ஐயா! உங்கள் அறிவுரை இதுவரை எங்கள் மதகுருக்கள் போதிக்கவே இல்லை. அவர்கள் போதிக்கவில்லையா? அல்லது எங்களுக்கு அறிவு வரவில்லையா? தெரியவில்லை. ஓர் நிலையில் நாங்கள் திருப்தியும், ஆனந்தமும் பெற்றோம், எப்படி என்றால் உங்கள் திருமுகத்தையும், திருமுடியையும் கண்டதும் எங்கள் பிதாவை **பிரத்தியட்சமாக** தரிசித்தோம் என உணர்கிறோம் என்று நமஸ்கரித்துச் சென்றார்கள்.



இதை நன்றாக உணரும்போது **பாரதபூமியே** இறைவனுக்கு ஏற்ற இடம் எனத்தெரிகிறது.

**காரணம்**

**இறைவன் ஜெருசலம் நகரில் தோன்றினார்.**


அங்கு சவுக்கால் அடித்து, முள்முடி சூட்டி, சிலுவையில் அறைந்து மரிக்கச் செய்தனர். பின்

**மெக்காவில் முகமது நபியாக அவதாரம் செய்தார்.**

அங்கும் அவரை கல்லால் அடித்தே மரிக்கச் செய்தார்கள்.

**இதன் காரணமாக பாரத பூமி** ஒன்றே பக்தி, யோகம், ஞானத்திற்கு ஏற்ற பூமி. இதுவே சாதனைக்கு ஏற்றதாகிறது; மற்ற பூமியெல்லாம் கர்மபூமி, போக பூமி ஆகிறது!

**எல்லாம் நீ!**



# ரிபுகீதை கிடைத்த கதை!




அந்த பைத்தியம் 1982ல் பண்டரியில் இருந்து வந்த பிறகு ஸ்ரீகுருதேவர் சொன்னதாவது: உனக்கு **ஸ்ரீமத்ரிபுகீதை** என்ற நூல் உன் கைகளில் என்று அகப்படுமோ அன்று நீ ஜீவன் முக்தி நிலை பெற முடியும் என்றார்கள். இந்த பைத்தியமும் பல இடங்களில் தேடியும் ரிபுகீதை கிடைக்கவில்லை.

காலமும், மனோபக்குவமும் வந்தது போலும். 1992ம் ஆண்டு கார்த்திகை தீபத்திற்காக திருஅண்ணாமலைக்கு ஸ்ரீஅடியார்கள் உடன் வந்தது. வந்த இடத்தில் கிரிவலம் பூர்த்தி செய்து ஸ்ரீரமணாஸ்ரமம் சென்றோம். அங்கு ஆறு ரிபுகீதை புத்தகங்கள் இருக்கக்கண்டோம். உடனே ஒரு புத்தகம் மட்டும் எடுத்தோம். சென்னை அன்பர் V. ஹரிஹரன் என்பவர் அதற்குரிய ரூபாய் இருபதைக் கொடுத்தார் போலும். அவருக்கும் கடைசி வரை கடமைப்பட்டிருக்கிறோம். தம் இருப்பிடத்திற்கு வந்த பிறகு, மீதி இருந்த ஐந்து புத்தகங்களையும் வாங்கிவிட வேண்டுமென்று சென்று பார்க்க மீதி ஐந்து புத்தகங்களும் தீர்ந்து விட்டதாக அறிந்தோம்.

ஸ்ரீசத்குரு உணர்த்த உணர்ந்து, அந்த ரிபுகீதையை பலமுறை பாராயணம் செய்ய ஒரு வருஷத்திற்குள்ளாக மனம் அமைதியும், சாந்தியும், மௌனமும் அடைந்தது.

ஸ்ரீகுருதேவர் கிருபையினால்

| | |
|---|---|
| **இரண்டென்றான்!** | (குரு தெய்வம்) |
| **இரண்டும் ஒன்றென்றான்!** | (ஸ்ரீசத்குரு ஒன்றே) |
| **உணர்வு தெரியலையே!** | (அகண்டைகரச பிரம்மானந்த நிலை) |
| **இரண்டென்ற நிலை!** | (1976 முதல் 1982 வரை) |
| **ஒன்றென்ற நிலை!** | (1982 முதல் 1984 வரை) |



அதாவது இங்கு தெய்வமும் உண்டு ஸ்ரீசத்குருவும் உண்டு. ஆனால் தெய்வம் தோற்றா நிலை, ஸ்ரீசத்குரு பிரத்தியட்சம்.

**ஸ்ரீசத்குரு தாம் ஆன நிலை!** (1984 முதல் 1992 வரை)

**ஒன்றென்றும் இல்லை என்றான்!** (1992 முதல்....??? அது அறியும்! இன்னமும் ஆகவில்லை போலும்)

ஸ்ரீசத்குரு சமாதிக்குப் பின் மூன்றாவது ஆண்டு (1991) குருபூஜை முதல் ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீஅடியார்களுக்கு எழுதிய தபால்களையே ஸ்ரீஞான தீபமலர்கள் என்ற பெயரில் தொகுத்து புத்தகங்களாக வெளியிட்டோம். அவை ஐந்து ஆண்டுகளுடன் போதும் என நிறைவு பெற்றன.


ஸ்ரீகுருதேவரின் பரிபூரண சமாதிக்குப் பின்னும் 1994 வரை ஆறு ஆண்டுகள் இந்த பைத்தியமும், அண்ணாவும் மார்கழி திருவாதிரையை சிறப்பாக செய்து வந்தோம். 1995 -ம் ஆண்டுக்குப் பின் தூத்துக்குடி செல்வதை எமதய்யன் குறைத்துக் குறைத்து நிறுத்திவிட்டான்.


## "பிறந்த மண்ணின் பிணைப்பு இருக்கலாகாதாம்"

காரணம் அவன் அறிவான். காரியம் யாம் அறியோம்.

ஸ்ரீமத்ரிபுகீதையில் 44 அத்தியாயத்தில் 1924 பாடல்கள் உண்டு. ஸ்ரீகுருதேவர் கிருபையினால் அவைகளில் தெளிந்தெடுத்து 164 பாடல்கள் மட்டும் தொகுத்து ஒரு சிறிய புத்தகமாக அடுத்த கார்த்திகை தீபத்தன்று (1995ல்) வெளியிட்டு நிறைவு செய்து கொண்டோம்.

**எல்லாம் நீ!**





# இங்குதான் இருக்கிறோமா? அங்கு இல்லையா??

மதுரையில் எம் செல்வன் அஃரூர்- சபரி தம்பதிகளின் ஸ்ரீஅபிராமி இல்லத்தில் இருக்கும்போது அனேக ஸ்ரீமஹான்கள் எம் ஸ்ரீரிபுகீதையை கேட்க வருவார்கள். அவர்கள் வாசகமாவது: ஹே.. சுகா! கழுதைக்கு உபதேசம் காதிலே ஓதினாலும் அது 'காள் காள்' என்று கத்தும் புத்தியை விடவேவிடாது. நீ ஏன் (இவர்களிடம்) **மோஹவாசிகளிடம் மாட்டிக்கொண்டு கத்திக்கத்தி** உன் பிராணனைக் கொடுக்கிறாய். எங்களோடு வந்துவிடு! இது கலியுகம். அதுவும் வரவர தோஷம் பெருகுமேயன்றி குறையாது! ஒவ்வொரு ஜீவனும் "ஆப்பு அசைத்த குரங்கு போல் மாட்டிக் கொண்டிருக்கிறார்களே". இவர்களுக்கு கட்டையை பிளப்பது எப்போது? ஆப்பை அகற்றுவது எப்போது? அதாவது வினை களைவது எப்போ? மனதை மஹத்தாக்குவது எப்போ? நீயாக வீண் சிரமத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறாய்?

அதற்கு இந்த பைத்தியம் பதில் சொல்லும்: ஹே.. பிரகஸ்பதி! (பிரஜாபதிகளே) உங்கள் அனைவருக்கும் எம் சிரம் தாழ்ந்து உங்கள் ஸ்ரீபத்மபாதத்தை எம் சிரம்மேல் வைத்து உங்கள் திருவடி தாஸிகளை ஏற்று அந்த தாஸியாகவே எம்மை ஆக்க கிருபை கூறுங்கள்! மேலும் உங்கள் வல்லமை சக்திகள் எமக்கு வேண்டவே வேண்டாம்!!

**நலம் பெறுக! சுகம் பெறுக!!** என ஆசி கூறினால் போதும். உங்கள் ஆசியே எமக்கும் மனோபலமும்(மனம் மஹத்து), அதனால் ஜீவர்களுக்கு ஆத்மபலமும் தந்து உதவும்! உங்களை ஒன்று கேட்கிறோம். இங்கு இராதே அங்கு வந்துவிடு என பலமுறை பலரும் அழைக்கிறீர்களே! "யாம் இங்குதான் இருக்கிறோமா? அங்கு இல்லையா??" நீங்கள் யார்? யாம் நீங்கள் இல்லையா???

**யாமே நீ, நீயே யாம்!**

**நாம் இரண்டும் ஒன்றானால் தேனின் சுவையது போல் திகட்டாய் பராபரமே!!**

இதுதானே உண்மை! இது எமக்கு ஒரு பரீட்சையா???

அவர்கள் ஊகூம்! இவனை திருப்பவும் முடியாது, திருத்தவும் முடியாது. ஆஞ்சநேயன் போன்று ஸ்ரீகுருதேவரிடமும், மாயா சொருபமான கண்ணனிடமும் மற்றும் மஹான்களிடமும் **பரிபூரண ஆசி** பெற்று வந்தவன். இன்னும் சற்று இவனிடம் பேசிக் கொண்டிருந்தால் **அவன் பைத்தியம் நமக்கும் பிடித்துவிடும்** எனச்சொல்லி வந்தவர்கள் வந்த வழியே சென்றனர்.

**எல்லாம் நீ!**



# ரமண குடீரத்தில் ரமித்த காலம்!




சுவாமி ஸ்ரீ ஞானானந்தா

1993ம் ஆண்டு திருச்செந்தூரில் ஷண்முகானந்தா என்ற ஒரு துறவியை எமதய்யன் சுட்டிக் காண்பித்தான். எம் ஸ்ரீபரமஹம்ஸர் வழியில் தோன்றிய ஒரு **முத்து** ஆகும்! முறைப்படி சந்நியாசம் ஏற்று, வேதம் ஓதி, வழிமுறைகளை இயம நியமத்தோடு ஏற்று வாழ்ந்து வந்தவர். பூரணத்துவம் பெறத் துடிக்கும் ஒரு பக்குவ ஆன்மா. சுதந்திரமாக இருக்க வேண்டுமென இந்த ஷண்முகானந்தா மடத்தை விட்டு வெளியேறி திருச்செந்தூரில் சிவாலயத்தில் தங்கி இருக்கும்போது, இதை அது தரிசித்தது. இரண்டும் ஒன்றோடு ஒன்று கலந்து கொண்டன. எமதய்யன் சிலநாள் கழித்து அதற்கு ஞானானந்தா என நாமகரணம் சூட்டினான்.

எம் செல்வன் ஞானானந்தாவை திருச்செந்தூரில் சிலர் பதவிக்கும், பணத்திற்கும் பயன்படுத்த எண்ணினர்! அந்த தீயசக்திகளைக் கண்டு பயந்துபயந்து அருகில் உள்ள குலசேகரப்பட்டணம் என்ற ஊரில் ஸ்ரீஅறப்பளீஸ்வரர், ஸ்ரீஅறம்வளர்த்தநாயகி கோவிலில் சரண் புகுந்தான். அங்கும் சிலகாலம் இருப்பதற்குள்ளாக அங்குள்ள சில பெரியவர்கள் எம் ஞானானந்தாவை தங்களுக்கு பேரும், புகழும், பணமும் சேர வேண்டி தம் தவறான காரியத்திற்கு பயன்படுத்த முற்பட்டனர்! எமதய்யன் (ஸ்ரீகண்ணன்) இதை அறிந்து எம் ஞானானந்தாவை இவர்களும் கெடுத்துவிடக் கூடாது என எமக்கு அறிவித்து அவனை உன் வழியில் கொண்டுசெல் என ஆணையிட்டான்.

அதாவது ஞானபூமியாம் திருஅண்ணாமலைக்கு நீ கூப்பிட்டு அவன் வந்தாலும், அவன் அன்பர்கள் விடமாட்டார்கள். அவன் அன்பர்களிடம் நீ கெட்ட பெயர் எடுக்கத்தான் வேண்டும். கார்த்திகை தீபத்தை (1995) சுட்டிக்காட்டி அவன் அன்பர்களுடன் அழைத்துச் செல். அவன் அவசியம் அங்கு நின்றுவிடுவான். உன் ஞானானந்தாவுடன் சிலகாலம் தங்கி, அங்கு உள்ள சில மெய் அன்பர்களுக்கு நீ ஞானபாடம்

நடத்து. அது ஒரு காலம் பூர்த்தியாகும். பகவான் ஸ்ரீரமணருடைய அத்யந்த பக்தரும், சத்சீடனாகியும் உள்ள ஸ்ரீஅண்ணாமலை ஸ்வாமிகளுடைய இடத்தில் அவருடைய சீடன் சுந்தரம் ஒரு இடத்தை தற்காலிகமாக கொடுப்பான். அது ஸ்ரீஅண்ணாமலை ரமண குடீரம் என்ற நாமதேயத்துடன் திகழும். அதில் உன் ஞானானந்தாவை உன் சேவையின் நிமித்தம் வைத்துக்கொள் என்றான்.



**ஸ்ரீ சுந்தரம் சுவாமி**

அவன் ஆணையின்படி நல்லவன்பாளையம் என்ற இடத்தில் ஒரு நாடகம் நடந்தது. நான்கு வருஷங்கள் (1996-2000) அந்த இடத்தில் விழாக்கோலத்துடன் பல காட்சிகள் வந்து போயின. அண்ணாமலை தீபவிழா என்றும், குருபூஜையென்றும், சிவராத்திரி என்றும், ஆருத்ரா என்றும், கோகுலாஷ்டமி என்றும் இன்னும் பல விழாக்கள் அதிகோலாகலத்துடன் நடந்து முடிந்தது. அங்கு இருக்கும் போதுதான் தியாகப்பிரம்மம் (சிறிய திருவடி), பீஷ்மன், லக்ஷ்மணன், பரதன், சசி என பிரம்மச்சாரி குழந்தைகள் சேவைக்கென வந்தனர். சேவையில் முழுமையாக ஈடுபட்டனர்.




**ஆரம்பகாலம் (1996)**

எம் குழந்தை ஞானானந்தாவின் பராமரிப்பிலும், இந்த ஐந்து பிரம்மச்சாரி குழந்தைகளின் சேவையிலும் அந்த ஸ்ரீஅண்ணாமலை ரமண குடீரம் வெகுவேகமாக வளர்ந்துகொண்டிருந்தது. ஸ்ரீமத்ரிபுகீதையே அங்கு பாடமாகவும், அனுபவமாகவும் அமைந்தன. சில குறிப்பிட்ட அத்யாயங்களை சிறுசிறு புத்தகங்களாகப் போட்டு அனைவரும் ஒரு நிலைப்பட்டனர்.



இந்த நிலையில் மேலைநாட்டு அன்பர்களும் சிலர் வந்து சேர்ந்தனர். இவர்களில் அனேகர் வந்து போனாலும் ஆறுபேர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் ஆனந்தி, (நவநீத்) கிருஷ்ணன், ராதா, ஜெயந்தன், கோபால், மாதவன்



ஒன்பதாவது ஸ்ரீகுருபூஜை (1997)



ஸ்ரீகுருபூர்ணிமா (1997)



குடீரம் - 1997 நடுவில்

ஆகியோர். இவர்கள் நாட்டுப்பெயர் என்னவோ இதுக்குத் தெரியாது. இறைவனால் இந்த ஆறு பேர்களுக்கும் கொடுக்கப்பட்ட நாமா இதுவாகும். இவர்கள் ஆறுபேரும் தம்மை முழுமையாக ஆன்மீகத்திற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாகும். இதில் மாதவன் என்பவன் அரபு நாட்டைச் சேர்ந்தவன். அவனை யாம் முதலில் சந்திக்கும் போது முன்கோபியாகவும், அதிமுரடனாகவும் இருந்தான். இறைவன் கிருபையினாலும், பூர்வ கர்மா அனுபவித்து விலகியதாலும் படிப்படியாக மாறி ஒரு புனிதமானவனானான்.




பத்தாவது ஸ்ரீகுருபூஜை (1998)

**எல்லாம் நீ!**



கோகுலாஷ்டமி விழா



திரு. மாதவன்



# சாது தரிசனம் பாப விமோசனம்!

முக்கடல் சந்திக்கும் கன்னியாகுமரியில் யாத்ரீகர்கள், மேல் நாட்டவர்கள், பல மதத்தினர்கள் சுற்றுலாவாக வருவது வழக்கம். ஓர் நாள் சென்னையிலிருந்து ஒரு பிராமண குடும்பத்தினர் (தாய், தந்தை, ஒரு பையன், வயதுக்கு வந்த ஒரு பதினாறு வயது பெண்ஆகிய நால்வர்) வந்து லாட்ஜில் ரூம் போட்டு தங்கினர். ஆலயம், விவேகானந்தர் பாறை, காந்தி மண்டபம், கடற்கரை, கடை வீதி இவைகளை சுற்றிப் பார்த்துவரும்போது அந்த பெண் எப்படியோ தம் பெற்றோரை தவறவிட்டுவிட்டாள்.

திகைத்து கண்கலங்கி கடைவீதியில் அலையும் போது, ஒரு கைடு (சுற்றிக் காட்டுபவன்) இவளை கவனித்தான் போலும்? சற்று நெருங்கி வந்து, அம்மா உன் பெற்றோர் உன்னைக் காணாமல் நீ ரூமுக்கு போயிருப்பாய் என எண்ணி ரூமுக்குச் சென்றிருக்கிறார்கள். நான் உனக்கு வழிகாட்டி உன் பெற்றோரிடம் சேர்த்துவிடுகிறேன் எனச்சொல்லி அழைத்துச் சென்று விபசாரம் நடக்கும் ஒரு இடத்தில் ஒரு நபரிடம் சேர்த்துவிட்டு, அதற்குரிய பணம் வாங்கிக் கொண்டு சென்றான். அவர்களின் காரியம் முடிந்து வெளியே வரும்போது பெற்றோர் மகளைக் கண்டனர்.

பெரும் அதிர்ச்சியும், துக்கமும் அடைந்தனர். அவனை அந்த பெரியவர் பார்த்தார். அடே குடிகேடா! இந்த ஈனத்தொழில் செய்து நீயும் வாழ வேண்டுமா? **இச்ஜென்மாவை முடி; இதன் தண்டனையை அனுபவி** என்று சொல்லிவிட்டு சென்றார்கள். அவர்கள் ஊர் போவதற்கு முன், அவன் அந்த பெரியவரிடம் சென்று காலில் விழுந்து கத்திக்கதறி இனி இந்த துர்தொழிலை செய்யமாட்டேன் என மன்னிப்பு வேண்டியிருக்கிறான்! அவரும் சற்று சினம்தணிந்து, உனக்குக் கிடைக்கும் ஈனப்பிறவியில் எங்காவது ஒரு மஹான் தரிசனமும், மூன்று தினம் அவர் கையினால் பிரசாதமும் வாங்கி உண்டால் உன் பாபம் தொலையும், புனிதமானவனாவாய்! என அருளிச்சென்றார் போலும்!!! (ஊர் வந்து அந்த பெண் குழந்தையும் தற்கொலை செய்து கொண்டது போலும்!)

அவனும் ஒரு பெண் கார் ஓட்டிக்கொண்டு வரும்போது ஆக்ஸிடெண்டில் (விபத்தில்) சிக்கி மரித்தான் போலும்!! அடுத்து ஒரு மாதத்தில் காகமாக ஜனித்தான். ஒரு சிலருக்கு **நல்ல வழி காட்டிய** பயனினாலும், கடைசியில் **ஓர் பெரியவர் தரிசனத்தினாலும்**, காகமாக இருந்தாலும் **முற்பிறவி மறவாமல்** இருந்திருக்கிறான். கன்னியாகுமரி கடற்கரையிலும், காந்தி மண்டபத்திலும், விவேகானந்தர் பாறையிலும் பறந்து சென்று, அவர்கள் எறியும் உச்சிஷ்டத்தை உண்டு ஸ்ரீமஹான்கள் யாரென்று தெரிந்துகொள்ள முடியாமல் அதிக அவதியுற்றான் போலும்!

தெய்வாதீனத்தால் சிலர் உணவருந்தும்போது பேசும் வார்த்தைகளை கவனித்திருக்கிறான். மதுரையில் மீனாட்சி அம்மன் தெப்பத்தை சுற்றி தினமும் மாலை வேளையில் சத்சங்கம் சிலர் நடத்துகிறார்கள். அங்கு ஓர் ஸ்ரீமஹான் இருக்கிறார். நாளை இங்கிருந்து நேராக மதுரை செல்ல வேண்டும், அந்த ஸ்ரீமஹானை தரிசிக்க வேண்டும் என்று சிலர் பேசிக்கொண்டார்களாம். இதை கேட்ட மறுநாளே அந்த காக ஜீவாத்மா ஒவ்வொரு இடமாக தங்கித் தங்கி இரையெடுத்துக் கொண்டு ஒரு வாரத்தில் மதுரை வந்து சேர்ந்தது. அங்கு அந்த மீனாட்சி தெப்பத்தை சுற்றிச்சுற்றி உணவருந்திக் கொண்டு, வேறு எந்தக் காகத்துடனும் சேராமல் தனித்து இருந்திருக்கிறது.

இங்கு (மதுரை) நாகமலை புதுக்கோட்டையில், ஸ்ரீஅபிராமி இல்லத்தில், அஃரூரர்-சபரி என்ற உத்தம தம்பதிகள் வசித்து வருகிறார்கள். அவர்கள் இல்லத்தில் ஒரு மஹான் இருக்கிறார். அவர் அத்வைத ஞானி. அவரை மூன்று தினங்களுக்கு முன் சென்று தரிசித்து சில விளக்கங்களை கேட்டு வந்தோம். உண்மையை ஸ்பஷ்டமாக உள்ளங்கை நெல்லிக்கனி போல காட்டி உணர்த்தக் கூடியவர் என சில அன்பர்கள் பேசிக் கொண்டார்களாம்!



**மதுரை குடில்**

ஐந்தாவது தினத்தன்று இதை இந்த காகஜீவன் கேட்டு கண்டிப்பாக அவரிடம் சென்றால் நாம் சாபவிமோசனம் பெறலாம் என நாகமலை புதுக்கோட்டை சென்றானாம்! அங்கு எம் குழந்தைகள் அஃரூரர், சபரி காகத்திற்கு **இறை பிரசாதத்தையும்** மற்றும் சேவு, மிக்சர் ஆகியவைகளையும் தினமும் போடுவதுண்டு. அங்கு நான்கு ஐந்து தினங்கள் ஆகாரம் ஏற்றுக் கொண்டானாம்! எம் குழந்தைகள் வெளிவராண்டாவில் அமர்ந்து பேசும்போது அருகில் ஒரு மரத்தில் இருந்து கேட்டானாம்.

அவர்கள் சொன்னதாவது:

நம் ஸ்வாமிகள் திருஅண்ணாமலையில் தம் குடிலில் இருப்பார். ஆனந்தமும், பூரணதிருப்தியும், மனோசுகமும் கொடுப்பவர் அவரே. இன்னும் மூன்று வாரத்தில் நாம் இருவரும் அங்கு செல்ல வேண்டும். அவர் தரிசனம் பெற்று வரவேண்டும் என்று பேசிக் கொண்டார்களாம்!

இந்த காகஜீவனும் மறுநாள் அங்கிருந்து திருஅண்ணாமலைக்கு பறந்து சென்றிருக்கிறான். வழியில் ஊர்ஊராக இரை எடுத்துக் கொண்டே அங்கு குடிலுக்குச் சென்று விட்டான். அங்கு செல்ல ஒரு வாரம் ஆகியிருக்கிறது. அங்கும் எம் செல்வன் ஞானானந்தா(சந்நியாசி) காலையில் சில இட்லி, தோசை முதலிய பட்சணங்கள் போடுவானாம். மதியம் மிக்சர், சேவு போடுவானாம்!

எம் ஞானானந்தாவிடம் மூன்று நாள் ஆகாரம் எடுத்திருக்கிறான். அவனை யாமாக பாவித்து ஆனந்தம் கொண்டிருந்தானாம். அவன் ஒருநாள் காகங்களின் தொந்தரவு பொறுக்க மாட்டாமல், உங்கள்

எல்லோருக்கும் **தந்தையாகிய** ஸ்வாமிதான் மேட்டூருக்கு போய்விட்டாரே! அங்கு போக வேண்டியதுதானே! இங்கு வந்து ஏன் என் பிராணனை வாங்குகிறீர்கள்? என அதட்டி சத்தம் போட்டானாம்!

ஓர் மஹானை தரிசிப்பது எவ்வளவு கடினம் என இப்போதுதான் தெரிகிறது; அறியாமல் சில பாபங்களை செய்துவிடுகிறோம். அந்த உண்மையை உணர்ந்து அதன் பரிகாரம் தேட எவ்வளவு கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது? உழைத்தால்தான் உண்மையை பெற முடியும்.

**"ஸாது தரிசனம் பாப விமோசனம்!"**

எனச்சொல்வது எவ்வளவு பெரிய உண்மை! ஹே... பகவானே! இந்த ஜன்மா பூராவும் அலைந்தாலும் பரவாயில்லை. ஏன் என்றால் என் **பாபங்கள் அத்தனை கடினமானது.** அதை செய்யும்போது எவ்வளவு இனிமையாக இருக்கிறது. அதை உணரும்போதுதான் வருந்துகிறோம்.

**"க்ஷண நேர இன்பத்தை அனுபவித்தால்**
**மஹத்தான துன்பத்தை அனுபவிக்க வேண்டும்!!!"**

இது நியதி என்பதை அன்று அறியாமல் போனோமே என பலவாறாக வருந்தியது அந்த காகஜீவாத்மா!!

அரிப்பெடுக்கின்ற படையை சொரியும்போது எவ்வளவு இன்பமாகத் தோற்றுகிறது. மேலும்மேலும் அதை **சொரியச்சொரிய** இனிமை குறையாமலே அது **ரணமாகிறது.** அதன் பிறகு அது தரும் கடும்வேதனை தாங்க முடியவில்லை. அப்போதுதான் நினைக்கிறோம், நாம் இப்படி நகம் கொண்டு சொரியாமல் இருந்திருந்தால், இந்த துன்பம் அனுபவிக்க வேண்டியது இல்லையே என உணருகிறோம்.

"இன்பத்தில் துன்பம்; துன்பத்தில் இன்பம்!"

**இது இறைவன் (இயற்கை) வகுத்த நியதி!**

அதிகம் உண்ணும்போது **ருசி - இன்பம்!**

அதனால் வரும் வயிற்று **உபாதையால் துன்பம்!**

அரிப்பெடுக்கும் படையை சொரியும்போது **ஸ்பரிச இன்பம்!**

அதனால் வரும் **புண்ணால் துன்பம்!**

இதைப் போல ஒவ்வொன்றும் அறியலாம்.

கடினமான **உழைப்பு துன்பம்!**

அதில் பெரும் **ஊதியம் இன்பம்!**

மருந்தில் உள்ள **கசப்பு துன்பம்!**

வியாதி **குணமானால் இன்பம்!**

இவை அனைத்தும் **உடலில் பின்னிய மனோவாஸனையாகும்!**

இன்பமும் துன்பமும் தூலத்தில் பிணைந்த மனோ அசைவாகும்! தூலம் **வினை சம்பந்தம்!** அதை அசைக்கும் மனம் **மாயாசம்பந்தம்!** இந்த மனோமய மாயையை ரசிக்காமல், விசாரணை பண்ணாமல் அதாவது **உடல் உலகப் பொருள்களாக** காணாமல், அனைத்தும் இறைவன் உடைமையே என உறுதியாக இருந்தால் நம் **மனமடமை** தாமாக விலகிவிடும்.

1. **இன்பமும் துன்பமும்** உடலுக்கும் அதை ஏற்கும் உலகத்திற்குமாகும்!
2. **ஆனந்தம், அனுபவிப்பவன், அனுபவம்** இது தெய்வத்திற்கு உரியதாகும்!!
3. **நலம், சுகம்** இது மனம் மஹத்தானால் தற்போதமாகும். இது அஹண்டாகார விருத்தியாகும்.
    1. இன்ப துன்பம் தூல விருத்தி.
    2. ஆனந்தம் சாட்சி விருத்தி.
    3. நலம் சுகம் அகண்ட விருத்தி.

யாம் மேட்டூரில் எம் சாந்தா, திருமலை வீட்டில் சிட் அவுட்டில் (பால்கனி) தங்கியிருப்போம். காலையும் மாலையும் அதிரசம், சேவு, மிக்சர், பிஸ்கட் என காகம், மைனா, அணில் ஆகியவைகளுக்கு பகிர்ந்து கொடுப்பதுண்டு. கன்னியாகுமரியிலிருந்து வந்த காகஜீவனுக்கு இந்த பைத்தியத்தைக் கண்டதும் அதன் மனோவியாதி, தூலபிணைப்பு எல்லாம் அகன்று விட்டது போலும்! மூன்று நாட்கள் அதிஆனந்தமாக கைகளில் வந்து பொறுக்கி எடுத்து உண்பான்! அப்போது இது அவனை கவனிக்கவில்லை. நான்காம் நாள் நமஸ்காரம் செய்து **பிரியா விடைபெற்றான்!**


அன்று இரவு எம் திருடனிடம் அவனைப் பற்றி விசாரித்தோம்! ஆதியோடந்தமாய் அவன் வரலாற்றை சொன்னான் எம் ஐயன்! அன்று இரவு அவன் தூலத்தை(காக உடலை)விடும் தருணம் போலும்? இரவு ஒரு மணி சுமாருக்கு கதவை தம் அலகால் தட்டினான் போலும். எம் சாந்தா போய் திறந்து பார்த்தாள். இவன் ஒரு ஓரமாக நின்றது இருளில் தெரியவில்லை. சாந்தா கேட்டாள், அப்பா! கதவு தட்டும் சத்தம் கேட்டது, திறந்து பார்த்தால் எவரையும் காணோம் என்றாள். இனி எச்சத்தம் கேட்டாலும் கதவை திறக்க வேண்டாம் எனச்சொன்னோம். அந்த காகஜீவன் (பிரம்மமுகூர்த்தம்) அதிகாலை மூன்று மணிக்கு வீட்டு வாசலில் தம் தலையை வைத்து இரு சிறகுகளையும் விரித்து படுத்தபடி தம் ஜீவனை விட்டுவிட்டது. அது **அருள்பிரசாதம்** உட்கொண்ட தன்மையினால் ஓர் யோக புருஷன்(பிராமண) இல்லத்தில் பையனாக ஜனித்திருக்கிறான். பிராயம் வந்ததும் ஓர் சத்குருவை அடைந்து உண்மைக்கு உகந்த பாத்திரம் ஆவான்!


இதிலிருந்து நீங்கள் அறிவதாவது:

**"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற முதுரைப்படி நம்வினையை நாமே அனுபவிக்க வேண்டும். கடுமையான பாபம் பண்ணியிருந்தாலும் பூர்வ புண்ணியம் விசேஷமாக இருக்குமேயானால் அவசியம் ஓர் மஹான் அருள் பெற்று மேலே போக முடியும்! பூர்வம் விசேஷமாக இல்லையானாலும் இப்பிறவியில் பெரியவர்கள் வாக்கை முழுமையாக நம்பி சர்வார்ப்பணம் செய்யப் பழகலாம்.**

**உன் பங்கு ஒன்றுதான். அங்கு இறைவன் கருணை ஒன்பதாகும்! உன் ஒரு பங்கு மனோகற்பனைகளை விரிக்காமலும், சந்தேகத்தை உண்டு பண்ணி சஞ்சலத்தை உண்டு பண்ணாமலும் பணம், பதவி, குலகுடும்ப கௌரவம், பட்டம், வித்வத்வம் என நம்மைக் கெடுக்கும் மோஹவஸ்துக்களின் இணக்கம் இல்லாமலும், அனைத்தும் அவனே(எல்லாம் நீயே) அவனன்றி அணுவும் அசையாது என 'சும்மா இருக்கப்' பழகுங்கள்!**

**எல்லாம் நீ!**





# கதாதர் கரை சேர்த்தார்!

நல்லவன்பாளையத்தில் அமைந்த ஸ்ரீஅண்ணாமலை ரமண குடீரம் நான்கு ஆண்டுகளுக்குள் வெகுவாக வளர்ச்சி ஆனது. அதாவது **உலக** அளவில் பிரசித்திபெற்று தூளிபாபா! தூளிபாபா! என வியக்கத்தக்க முறையில் தோற்றியது. ஸ்ரீகுருதேவர் ஆரம்ப ஆணையாவது: மடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும் உலகம் வியக்கத்தக்கவாறு அதாவது புகழ்ந்து கொண்டாடும்படி ஆகிவிடாதே! **அது படுகுழியாகும்** என்றார்கள்! இந்த குடீரத்தை குலைத்துவிட முடிவெடுத்தோம்! எமதய்யனிடம் (ஸ்ரீகண்ணனிடம்) இதுபற்றி ஆலோசனை செய்தோம். அவனோ ஒரு சூத்திரதாரி; ஒரு பக்காத்திருடன்; அவன் ஆணையின்படி நடந்தோம்.

அதாவது ஸ்ரீஅண்ணாமலை ரமண குடீரத்தின் அதிபதி ஸ்ரீஅண்ணாமலை ஸ்வாமிகளின் மாணவன் சுந்தரமாகும். அவன் ஆளுகையில்தானே அந்த குடீரம் இருந்தது. சுந்தரம் வெறுக்கத்தக்க முறையில் ஒரு நாடகம் நடத்தினோம். ஏற்கனவே எம் ஞானானந்தாவிற்கும், சுந்தரத்திற்கும் மனதில் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. இந்த குடீரம் ஞானானந்ததாவின் மேற்பார்வையில் நடந்து வந்தது சுந்தரத்திற்கு சற்று கசப்பாகவே இருந்தது. எம்மீதும் ஒரு கசப்பு உணர்ச்சி உண்டு பண்ணவேண்டும் என்று திட்டமிட்டு எமதய்யனுடனும், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருடனும் கலந்து ஒரு முடிவெடுத்தோம். அந்த நாடகம் அழகாக நடந்தது.

2000 புத்தாண்டை மூன்று தினங்கள் சிறப்பாக கொண்டாடினோம். மேட்டூரில் E.B.யில் வேலை பார்த்துக் கொண்டிருந்த எம் அன்புக் குழந்தைகள் சாந்தா(சக்கு) திருமலை ஆகிய தம்பதிகளுக்கு சுதாகர், மனோகர் என இரண்டு குழந்தைகள் இருந்தனர். அவர்களிடம் உங்கள் இரண்டு குழந்தைகளில் ஒன்றை உங்களுக்கு வைத்துக் கொள்ளுங்கள்; மற்றொன்றை எமக்கு கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டோம். அவர்களும் மனம் உவந்து கொடுத்துவிட்டார்கள். அந்த மனோகரின்(பெரிய திருவடி) பிரம்மச்சரிய விழாவும் அதிசிறப்பாக நடந்து முடிந்தது. அதுவே அந்த குடீரத்தின் கடைசி விழாவாகும்.

அடுத்து எம் அண்ணல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்(கதாதர்) பிறந்த பூமியும் எம் அன்னை சாரதாதேவி பிறந்த பூமியுமாகிய முறையே கமார்புகூர், ஜெயராம்பாடி இருக்கும் கல்கத்தாவுக்கு ஞானானந்தாவையும், சுந்தரத்தையும் உடன் அழைத்துச் செல்வதாக இருந்தோம்.

ஆனால்!!!

யாம் திருஅண்ணாமலை வந்த காரியமும் ஞானானந்தாவை பலவந்தமாக அழைத்து வந்த காரியமும் **பூர்த்தியாகியது.** நாலரை ஆண்டுகள் முடிந்ததால் ஞானானந்தாவையும், சுந்தரத்தையும் உடன் அழைத்துச் செல்லவில்லை. இதை எம் ஞானானந்தா சகித்துக் கொண்டான். எம் சுந்தரத்தால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அத்துடன் எம் சுந்தரம், நம்மை அழைத்துச் செல்லவில்லையே என்ற **வேதனையால், கடும்சினத்தால்** யாம் புறப்படும் நான்கு தினங்களுக்கு முன் அவன் குடீரத்திற்கு வர(இயல)வில்லை. அதைக்கூட ஏற்றுக்கொண்டோம். மூன்று தினங்கள் அவன் ஆஸ்ரம ஆள்வசம் வழக்கம்போல் இரண்டு முறை ஆகாரம் கொடுத்துவிட்டான்.

**"கடைசி தினம் ஆகாரமும் வரவில்லை";**
**"அவனும் அவன் தவறை உணரவில்லை";**

**"யாமும் போதும் என நிறைவு கொண்டோம்".**

அன்று இரவு குடீரத்தை விட்டு கிளம்பும்போது, வண்டியில் கால்வைக்கும்போதே, இந்த குடீரத்தில் இனி உன் பாதம்படவேண்டாம் என்றான் எமதய்யன். **அது உன் கிருபை என்றோம்!** அவன் வாக்குப்படியே நடத்தி முடித்துவிட்டான். அவன் ஆட்டுகின்றான் (தூலங்களை) நாம் ஆடுகின்றோம் **("பழவினை கணக்குப்படி").** புதிய கணக்கு தொடர வேண்டாம். அதாவது **"நான்", "எனது"** என்ற உங்கள் **மனக்கணக்குப்படி.** இது கற்பனை.

எம் ஞானானந்தாவுக்கு ஒரு நப்பாசை(சிறிய ஆசை). அதாவது கல்கத்தாவில் தட்சிணேஸ்வரம், பேலூர்மடம், கமார்புகூர், ஜெயராம்பாடி ஆகிய இடங்களில் நமக்கு அறிமுகமானவர்கள் நிறைய உண்டு. நாம் உடன் சென்றால் அனைத்தையும் சுற்றிக்காட்டலாம். நாம் செல்லவில்லையானால் இவர்கள் பிரயாணம் பயனுள்ளதாக அமையாது என கருதினான் போலும்? யாம் ஒரு சூத்திரதாரி என்பதை சற்று தெரிந்திருந்தும் முழுமையாக அவன் உணரவில்லை. அவன் உணரவில்லையோ அல்லது யாம் உணர்த்தவில்லையோ அந்த ஒன்றே அறியும்! கல்கத்தாவில் ரயிலை விட்டு இறங்கியதும் **பார்த்தசாரதி** என்ற ஒரு தோற்றத்தில் அந்த ஒன்றே இறங்கி வந்தது. நாமாவுக்கு ஏற்ற பணிவு, கனிவு, சேவை, தெளிவு - **சுத்தாத்மாவாக** அது அன்றும் இன்றும் என்றும் தோற்றிக் கொண்டிருக்கிறது.




கமார்புகூரிலும், ஜெயராம்பாடியிலும் எம் தந்தை ஸ்ரீபரமஹம்ஸதேவரும், ஸ்ரீஅன்னை சாரதாதேவியும் முறைப்படி வரவேற்று உபசரித்தனர். இதில் ஒரு அழகு, அதை எப்படி எழுதுவது? ஆனாலும் எழுதுகிறோம். எளிமைக்கும் எளிமையென்றாலும், பணிவின் இலக்கணம் என்றாலும் அது எம் ஸ்ரீபரமஹம்ஸதேவரையே சேரும். கொட்டும் மழையில் பெரிய அளவில் ஒரு குடைபிடித்துக் கொண்டு எம்மையும்,



எம் அன்புக் குழந்தைகளையும் பக்குவமாக ஒரு அறையில்(கரையில்) சேர்த்தார்.

எம் அன்னை சாரதாதேவி எம்மையும், எம் குழந்தைகளையும் வெகுவெகு கனிவுடன் வரவேற்று, நேரே இங்கு வந்திருக்கலாமே சகல வசதியும் செய்து கொடுத்திருப்போமே என கனிந்துகூறி, **அறிவின் சிகரமாம்** தந்தையைவிட **அன்பின் தாழ்மையாம்** அன்னை சமுத்திரத்தைவிட பரந்துவிரிந்து எங்களை ஏற்றுக் கொண்டார்கள்.

கல்கத்தா பயணத்தை இரண்டு வாரங்களில் முடித்து எம் தவப்புதல்வன் மஹேஸ்வரன், தற்காலிகமாக ஹார்பரில் பணியாற்றி வந்த கோவாவுக்கு எம் குழந்தைகளுடன் சென்றோம். கோவாவில் இருக்கும்போதுதான் எம் ஞானானந்தா போனில் பேசுவான்: "ஸ்வாமிஜீ! ஸ்ரீஅண்ணாமலை ரமண குடீரம் எப்படியும் நமக்கே சேரும். ஒவ்வொரு கல்லிலும் உங்கள் நாமாவே (தூளி) பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தாங்கள் நேராக இங்கு திருஅண்ணாமலைக்கு வருகை தரவும் என புலம்பிக் கொண்டிருந்தான்''. இனி திருஅண்ணாமலையில் எந்த குடீரமோ, ஆஸ்ரமமோ அமைக்கப் போவதில்லை, அமரப்போவதும் இல்லை; யாம் அங்கு வந்த காரியம் பூர்த்தியாகிவிட்டது என அவன் அருளால் முடிவெடுத்திருந்தோம்.

எம் ஞானானந்தா வாசகங்களை ஃபோனில் கேட்கும்போதெல்லாம் அந்த அண்ணாமலை ரமண குடீரம் என்ற கட்டிடம் தோற்றமாத்திரமாய் தோற்றிக் கொண்டிருப்பதனால்தானே இந்த வாசகத்தை ஞானானந்தா புலம்பிக் கொண்டிருக்கிறான் என எமதய்யனுடன்(ஸ்ரீகண்ணனுடன்) ஒரு முடிவெடுத்தோம். அவன் யாம் பார்த்துக் கொள்வோம் என்றான். **அவன் ஆணையின்படியே** அந்த கட்டிடம் இடித்து நொறுக்கப்பட்டது. அது இருந்த தடயமே இல்லாமல் ஆகிவிட்டது.

ஞானானந்தாவின் உண்மைத் தொண்டர்களாகிய குழந்தைகள் எம் மீது கடும்சினம் கொண்டிருந்தனர். காரணம் இந்த தூளிசாமிதான் நம் ஸ்வாமிகளை கடத்திக் கொண்டு போய்விட்டார், இவர் நம் ஸ்வாமிகளை திருஅண்ணாமலைக்கு அழைத்துச் செல்லவில்லையானால் ஞானானந்தா நம்மிடமே நிலைத்திருப்பார்; இந்த திருட்டுச் சாமியார்(தூளி) எங்கிருந்து வந்தாரோ? என எம்மைப் பழித்து, அவருக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எண்ணமும் இப்போது பலிதமாயிற்று. இப்போது எம் ஞானானந்தா அவன் அடியார்கள் அமைத்துக் கொடுத்த **"அருள் ஞானபீடம்"** என்ற ஆஸ்ரமத்தில் அன்பர்களுக்கு பாடம் நிகழ்த்திக் கொண்டு சுகமாக இருக்கிறார்.

**எல்லாம் நீ!**




# அன்பின் குடில்!



ஆரம்பத்தில் - அன்பின் குடில்

யாம் கோவாவில் எம் குழந்தைகளுடன் மூன்று வாரம் தங்கியிருக்கும்போது, மேட்டூர் அன்பர்கள் மேற்கே சித்தேஸ்வரன் மலைக்கும், கிழக்கே அன்னை காவிரி நதிக்கும் மத்தியில் காவிரிக்கரையை ஒட்டி ஒரு பூமி வாங்கி அதில் **“அன்பின் குடில்”** என்ற நாமதேயத்துடன் ஒரு குடிலை அமைத்து வைத்தார்கள். அது மேல்நாட்டு அன்பர்கள், மேட்டூர், மதுரை, திருஅண்ணாமலை, சென்னை ஆகிய இடங்களில் அவன் அருளால் தங்கள் கர்மாவை **ஒழுங்காக பார்த்து முடித்துக்** கொண்டிருக்கும் மெய் அடியார்களின் அன்புக் காணிக்கையாகும்.



இங்கு ஸ்ரீபரமஹம்ஸ தேவரின் ஒழுக்கம் **நிறைந்த பக்தியும்**, ஸ்ரீஆதிசங்கரரின் வேதாந்தத்தின் **அத்வைத பாடமும்** எம் ஸ்ரீஅண்ணலின் (ஸ்ரீகண்ணனின்) கிருபையினாலும், எம் ஸ்ரீசத்குருதேவர் (ஸ்ரீவியாசர்) பரிபூரண ஆசியினாலும் நடந்து கொண்டிருக்கிறது.











ஓ.. எம் அன்பின் சொரூபமான அன்பிற்கு அன்பர்களே!

ஒன்று முடிவுரையாக கூறிக்கொள்கிறது உங்களின் பைத்தியம். யாம் தோன்றியதோ, கல்வி பயின்றதோ, குடும்பஸ்தன் என ஆனதோ, ஒரு தொழிலதிபர் ஆனதோ, இவைகளையெல்லாம் துறந்து பரதேசி ஆனதோ மேலே கூறிய இவை அனைத்திற்கும் காரணமாக எம் தந்தையாயும், அவரே (ஸ்ரீவேத வியாச பகவானே) ஸ்ரீசத்குருவாக ஆனதோ, பால்யத்திலிருந்தே பக்தி, வைராக்கிய, ஞானத்திற்கோ, **"ஸ்வய ஞானானுபவம்"** பெற்றதற்கோ வேறு எந்தக் காரிய காரணமும் இல்லவே இல்லை.

**உங்களுக்காகவே ஓர் தோற்றம் உண்டாக்கிக் கொண்டோம்;** அனைத்தையும் முறையாக ஏற்றோம்; உங்களுக்கும் முறையாக உணர்த்தினோம்; **இந்த பைத்தியத்தை நம்பி சிரத்தையோடு கூடிய வைராக்கிய சீலர்களான உங்கள் அனைவரையும் காலாதீத அந்த ஒன்றாக்கிவிட்டோம்!!!** இது உறுதி.

இது ஸத்யம்! இது ஸத்யம்!! இது ஸத்யம்!!!

இந்த பைத்தியம் பால்யத்தில் பற்றிப்பிடித்த பக்தியான **"கொழு கொம்பு" ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவராகும்.** பிரேமபக்தி, மூர்த்திகளின் பாவனா சொரூபசமாதி, எளிமை, இனிமை, விபரம் அறியா குழந்தை பாவம், ஸ்ரீகுருபக்தி, தெய்வத்தின் அருளாசியோடு ஏற்றல் மற்றும் எதையுமே தாம் அனுபவித்து பின் அவற்றை போதித்து சாதித்த ஸ்ரீபரமஹம்ஸதேவரே பக்திக்கும், வைராக்கியத்திற்கும் **ஓர் ஓடமாக இருந்து கரை சேர்த்தார்.**

அடுத்து அத்வைத ஞானசாதனையை முறையாக அறிவுறுத்தியவர் **"ஸ்ரீஆதிசங்கரராகும்".** ஸ்ரீபரமஹம்ஸ தேவரும், ஸ்ரீஆதிசங்கரரும் **எம் இரு கண்களாகும்.**

இந்த பார்வையினாலேயே **ஞான ஒளியாகிய** ஸ்ரீகுருதேவர் தந்த பாடங்கள் ஸ்ரீபக்தவிஜயம், ஸ்ரீபாகவதம், ஸ்ரீவாஸிஷ்டம், சித்தர் பாடல்கள் மற்றும் அனேக நூல்களை உணர்ந்து அனுபவித்தோம்.

குறிப்பாக ஓர் உண்மை என்னவென்றால் திருவடிதாஸியாகிய எமதய்யன் (திருடன் ஸ்ரீகண்ணன்) மூலமாக இந்த வினாடி வரை எவராலும் கிரஹிக்க முடியாத, எவராலும் உணர்ந்து அனுபவிக்க முடியாத, அனேக அனுபவ ஸாராம்ஸங்களை யாம் முதலில் பருகி ஆனந்தித்து அவைகளை சிறுசிறு கதைகளாகவோ, கருத்துக்களாகவோ, நாடக பாணியிலோ உங்கள் அனைவருக்கும் உணர்த்தியும், புத்தகங்களில் வரிவடிவில் எழுதியும் இருக்கிறோம்.

சம்சார சாகரத்திலிருந்து கரையேற்றிய **"ஓடமாக"** அமைந்தவர் எம் **ஸ்ரீபரமஹம்ஸராகும்**.

பரசொரூப ஸ்திதியாகிய (அத்வைத) மேல்மாடிக்கு **"அனுபவ படிக்கட்டுகளாக"** அமைந்து, எம்மை பக்குவமாக ஏறச்செய்து ஆனந்தித்தவர் எம் **ஸ்ரீஆதிசங்கரராகும்.**

**இவை இரண்டிற்கும் உறுதுணையானவன் எமதய்யன் ஸ்ரீகண்ணனாகும்.**

**ஸ்வயம் பிரகாசமாக இருந்து, எம் அறிவுக்கண்ணாக இருந்து,** ஸ்வய ஞானானுபவ சாராம்ச **"ஸ்ரீமத்ரிபுகீதையாக"** இருந்து,

**"(ஸ்ரீசத்குரு) அவரே யாமாகி; யாமே அவராகி"**

இரண்டற கலந்த நிலைக்கு எம் ஸ்ரீசத்குருவான, ஸ்ரீவேத வியாச பகவானான எம் தந்தையையே சாரும்.

## ஸ்ரீமத்ரிபுகீதையின் சுருக்கம்

ஸ்ரீபரமஹம்ஸரின் பக்தி, வைராக்கிய யோகத்தையும், ஸ்ரீஆதிசங்கரரின் வேதாந்த(அத்வைத) கருத்துக்களையும் முறையோடு போதித்தார் எம் ஸ்ரீகுருதேவர். அதை அவர் கிருபையினால் சாதித்த பிறகு, ஸ்ரீசத்குருதேவரின் அருள் ஒலியாயும், ஸ்வய ஒளியாயும் அமைந்திருக்கும் **"ஸ்ரீமத்ரிபுகீதை"** என்று உன் கைகளில் கிடைக்கின்றதோ, அதன் சாராம்சமாகிய, **"நீயே அது; அதுவே நீ"** என என்று ஆகின்றாயோ அன்றுதான் உனக்கு ஜீவன்முக்தி என அருள்பாலித்தார்கள் எம் ஸ்ரீகுருதேவர்.

ஸ்ரீமத்ரிபுகீதை 1992-ம் ஆண்டு ஸ்ரீகுருகிருபையினால் திருஅண்ணாமலை என்னும் ஞான க்ஷேத்திரத்தில் ஸ்ரீரமணாஸ்ரமத்தில் கிடைத்தது. 2001-ம் ஆண்டு **அவர் கிருபையினாலும், அவன் ஒத்துழைப்பினாலும்** நாற்பத்தி நான்கு அத்தியாயங்களாயும், ஆயிரத்தி தொள்ளாயிரத்தி இருபத்தி நான்கு பாடல்களாயும் அமைந்து, விரிந்து, பரந்து இருந்த நூலில் மாணிக்கங்களாக (உள் ஒளி பொருந்தியதாக) பொறுக்கி எடுத்து ஸ்ரீகுருதேவர் உபதேசக் கருத்துக்களாக நூற்றி எட்டு பாடல்களையும், சத்சிஷ்யனின் ஸ்வய அனுபவ பாடல்களாக முப்பத்தி இரண்டு பாடல்களையும் சேர்த்து நூற்றி நாற்பது பாடல்களை மட்டும் தொகுத்து நித்திய பாராயணமாக அன்பு உள்ளங்கள் அனுபவித்து வருகின்றன. மேலும் ஸ்ரீகுருதேவர் உபதேசக் கருத்தான நூற்றி எட்டு பாடல்களுக்கும் விளக்க விரிவுரையாக ஓர் நூலையும் தயார் செய்து அதையும் அனுபவ வழிகாட்டியாக வைத்திருக்கின்றனர்.

மெய் அன்பர்களே! அன்பான குழந்தைகளே! இது அன்பின் குடிலே தவிர **ஆஸ்ரமம் அல்ல**. இங்கு வேதபாடமோ, சாஸ்திரபாடமோ, உபநிஷத்துகளின் பாடமோ, புராண இதிகாசகதைகளோ,

Cyan Magenta Yellow blacK





வைத்தியத்தின் அறை



பிரம்மசாரிகள் தங்கும் அறைகள்




தியான மண்டபம்



சமையல் மற்றும் சாப்பாட்டு அறைகள்





யந்திர, மந்திர, தந்திரங்களோ, விதிமுறை கட்டுப்பாடுகளோ எதுவுமே இல்லை.

**"இது சுதந்திர பறவைகளின் கூடு ஆகும்".**

இங்கு தலைவர், தொண்டர், மேனேஜர், டைரக்டர், பொருளாளர், காப்பாளர், ஆசிரியர், மாணவர் என்ற **பேதபார்வையாளர்கள்** எவரும் கிடையாது. எந்த சீரணிப்புப்பணிகளும், அபிவிருத்தி பணிகளும் கிடையாது!

இங்கு சில பிரம்மச்சாரிகள் மட்டும் உண்டு. பிரம்மச்சாரிகளிலும் **அதீத நிலையை** அடைந்த சில மேலை நாட்டவர்களும் உண்டு. ஆக **இவர்களுடன்** உதவாத ஓர் பைத்தியமும் உண்டு. இவர்களுக்கு மட்டும்தான் இங்கு தங்க இடம் உண்டு.

இந்த பைத்தியத்தை நம்பி அனேக **ஞானவேட்கை உள்ள குடும்பஸ்தர்கள் வந்து செல்வர். ஆனால் "தங்க இடம் இல்லை".** தயவுசெய்து மேலை நாட்டவர்களாகிய உங்கள் அனைவரின் பாதங்களையும் வணங்கி இந்த பைத்தியம் விண்ணப்பிப்பதாவது:

**"போனால் அங்கு தங்கலாம் என வரவேண்டாம்";**

வந்து உங்கள் தரிசனம் தந்துவிட்டு **உடனே செல்லலாம்.** "உங்களை தங்க வைப்பதற்கு வசதிசெய்யவில்லை" என்பதற்கு

**இந்த பைத்தியத்தை மன்னிக்கவும்!**

**எல்லாம் நீ!**



# ஸ்வய அனுபவ மாணிக்கங்கள் !

1. அடங்கி இரு; அடக்க எண்ணாதே !
2. உன் கரண ஒழுக்கமே உன்னை காப்பாற்றும்!
3. பெண், பொன் இவற்றில் சர்வ ஜாக்கிரதையாக இரு !
4. கடும்சொல், சுடும்சொல் பேசாதே !
5. எங்கும், எந்நிலையிலும் குற்றம் குறை காணாதே !
6. அப்படி தோற்றின் அவை உன்னிடமே என உணர் !
7. உணர்ந்த உடன் மற, மன்னி, விட்டுக் கொடுத்து விலகு !
8. இறை, குரு நாமஸ்மரணையுடன் எந்த வினாடியும் இரு !
9. இனிமையாகவும், இதமாகவும் பேசு; ஆனால் பேச்சைக்குறை !
10. உடல், உலக, சினிமா மற்றும் காமரசனையாகப் பேசாதே !
11. தாழ்ந்து நின்றால் வாழ்ந்து நிற்பாய் !
12. பணிவே பரம்பொருள் !
13. இறை நாமத்துடன் துணிவே துணை !
14. கர்மாவின் செய்கை உனக்கு; அதன் பலன் அவனுக்கு !
15. ஆணவத்தை அன்பால் வெல் !
16. ஆசைகளை மனநிறைவால் வெல் !
17. பொறுமையை உடையவர் இகழ்வை அடையார் !
18. ஆத்திரம் அறிவு நாசம்; மனதின் சூத்திரம் அறிவின் கூர்மை !
19. நீ உன்னை ஆளவந்தவன்; உலகில் ஆழ வரவில்லை !
20. தீயதாக கேளாதே; தீயதாக பார்க்காதே; தீயதாக பேசாதே !
    (இவை அனைத்தும் உன் மனஎண்ணமே)
21. வார்த்தைக்கு வார்த்தை எதிர்வார்த்தை பேசாதே !

22. காண்பதையும், கேட்பதையும் நம்பி பேசிவிடாதே !
23. பேச்சு ஒரு முடிவாகாது; மௌனமே முடிவாகும் !
24. நீ மதிப்பு கொடுத்தால் உனக்கு மரியாதை கிடைக்கும் !
25. எவரிடமும் பணிவுடனும், கனிவுடனும் இரு !
26. வார்த்தையினால் நீ புண்படாதே; பிறரையும் புண்படுத்தாதே !
27. மனத்தெளிவு வேண்டுமா? நிதானத்தை கடைபிடி ! (நீ+தானம் = நிதானம்)
28. போட்டி போட்டால் கோட்டியில் (பைத்தியம்) முடியும் !
29. வார்த்தை அடர்ந்த காடு; உட்புகுந்தால் வெளியே வரமுடியாது !
30. வாக்கு அக்கினியாகும்; அதைக் காப்பதே தபஸாகும் !
31. செய்கை; செய்கையின் தன்மை; அதன் பயன் உனக்கில்லை !
32. இயற்கையே (இறைவனே) அதனதன் செய்கையை செய்கிறது !
33. இயற்கையிடம் பாரபட்சதோஷம் இல்லவே இல்லை !
34. கவனக்குறைவினால் ஜீவன் மயங்குகிறான் !
35. உன் வாக்கே உன் வாழ்வாக முடிகிறது !
36. இறைவன் நல்லவன் என்று எவனையும் ஏற்பதும் இல்லை !
37. இறைவன் பாபி என்று எவனையும் தள்ளுவதும் இல்லை !
38. ஜீவனின் புண்ணியபாப பலன் அவரவர்க்கு ஒழுங்காக அமைகிறது!
39. கர்மாவின் பலன் ஆத்மாவைப் பற்றாது!
40. இறைநாமாவை முன்வை; உன் கர்மாவைப் பின்வை!
41. அவனன்றி அணுவும் அசையாது (இது ஸத்ய வாசகமே. ஆனால்)
42. இம்மொழி லௌகீகத்திற்கும் தெய்வீகத்திற்குமே உண்டு!
43. இம்மொழி பரமார்த்தீகத்திற்கு இல்லை! (அங்கு நீயும் அவனும் ஒன்றே)
44. சர்வார்ப்பணமாக வாழ்பவன் வாழ்வில் அமைதி, ஸாந்தி நிலவும்!
45. விருப்பும் வெறுப்பும் வாழ்வின் துன்பமே!
46. கோபமும் ஆசையும் கணவன் மனைவி போன்றதாகும்!
47. இந்த இரண்டும் இணைந்தால் பயம் துக்கம் என்ற பிள்ளைகள் உண்டு!
48. பிறப்பும் இறப்பும், நினைப்பும் மறப்பும் போன்றதாகும்!
49. உலகில் வாழ சற்று ஆசையும் கோபமும் இருக்கலாம்!
50. உலகின் நிலையில் விரோதம், குரோதம், மோஹம் கூடாது!
51. ஓர் சாதகனுக்கு சந்தேகம் சர்ப்பம் போன்றதாகும்!
52. ஓர் சாதகனுக்கு கடும்தூக்கமும், சோம்பலும் காலனாகும்!
53. புண்பட்ட மனதிற்கு ஆத்ம போதனையே சாந்தி!

54. இக்கலியில் சரணாகதியைத் தவிர வேறு கதி மோட்சம் இல்லை!
55. இக்கலியில் இறை நாமாவைத் தவிர வேறு வழி இல்லை!
56. குணதோஷ வார்த்தைகள் வந்தால் நீயே கலிபுருஷன்!
57. இறை உணர்வோடு அமுதவாக்கு வந்தால் நீயே கற்கி அவதாரம்!
58. உன் மனம் உனக்கு எதிரி; உன் மனசாட்சி உனக்கு நண்பன்!
59. உடல் உலக பொருள்களை விரும்பினால் தெய்வத்தை விட்டுவிடு!
60. தெய்வத்தை விரும்பினால் உடல் உலக பொருள்களை விட்டுவிடு!
61. அருளும் பொருளும் இரு துருவமாகும்! (ஒன்று சேராது)
62. எங்கேயோ தெய்வம் இருக்கிறதென ஓடித் தேடுவது அஞ்ஞானம்! (துவைதம்)
63. தெய்வம் நம்முன் இருப்பதென்பது பக்தி! (விஸிஷ்டாத்துவைதம்)
64. தெய்வம் நம்முள் நாமாக இருப்பதை உணர்வது ஞானம்! (அத்வைதம்)
65. நடந்ததை எண்ணினால் ஏமாழி!
66. நடக்கப்போவதை எண்ணினால் புறவாழி!
67. நடப்பதாக இருப்பவன் அறிவாழி!
68. இந்த மூன்றுமற்றவன் பரவாழி!
69. வேகத்தை விடு; விவேகத்தை தொடு!
70. நலமும் சுகமும் உன் மனதிடமே; அவை வெளியில் இல்லை!
71. சொர்க்கமும் நரகமும் உன் கற்பனையே!
72. முதலில் பணியக் கற்றுக்கொள்; கட்டளையிடும் பதவி தானே வரும்!
73. அடியவனாயிரு; அடியாளாய் மாறிவிடாதே! (குரோதம் முதலிய வெறி உணர்வுடன்)
74. சாந்தமே சாகரத்தினும் பெரியது!
75. பொறுமையே முக்தியின் திறவுகோல்!
76. பேராசையே பொறாமையின் அடிப்படை!
77. ஜலமும், பிருதிவியும் முறையே புண்ணிய பாப கர்மாக்கள்!
78. அக்கினி தெய்வ அம்ஸம் பொருந்தியது!
79. கர்மா கீழ் நோக்கி இழுக்கும்; தெய்வம் மேல் நோக்கித் தள்ளும்!
80. விளக்கத்தின் நிமித்தம் வாதம் செய்யலாம்!
81. முரட்டுத்தனத்தின் நிமித்தம் பிடிவாதம் கூடாது!
82. வேதசாஸ்திர பாட நிமித்தம் தர்க்கம் செய்யலாம்!
83. தம் வாக்கையே ஸ்திரப்படுத்த குதர்க்கம் கூடாது!
84. லௌகீகத்திற்கும், தெய்வீகத்திற்கும் தர்மாதர்மம் உண்டு!
85. பரத்திற்கு தர்மாதர்மம் இல்லவே இல்லை!

86. ஒன்று செய்; அதுவும் நன்று செய்; அதுவும் அன்றே செய்!

87. எல்லாம் ஈசன் செயலென்றால் அங்கு புண்ணியபாபம் இல்லவே இல்லை!

88. நீ நலம் பெறவேண்டுமா? உன் நாவை அடக்கு!

89. அஸத்தியம் பேசுவதென்பது இறை சிந்தனை இல்லாமல் பேசுவதாகும்!

90. இறை சிந்தனை இல்லாமல் கொடுப்பதும், வாங்குவதும் புண்ணிய பாபம்!

91. இறை சிந்தனையோடு கொடுப்பதும், வாங்குவதும் ஸத்யமும் தர்மமுமாகும்!

92. தெய்வ கிருபை நவக்கிரஹ பிடியிலிருந்து விடுவித்து அனுக்ரஹம் பண்ணும்!

93. குருகிருபை அஞ்ஞான இருளை அகற்ற ஆசி வழங்கும்!

94. இரண்டு என்ற இடத்தில் பயம் உண்டு; ஒன்றென்ற அனுபவத்தில் பயம் இல்லை!

95. இறைவன் தோன்றாத்துணைவன்; ஆத்மா அந்தர்யாமி!

96. ஆத்மா அந்தர்யாமி; பரமாத்மா சர்வாந்தர்யாமி!

97. அதன் (பிரம்மம்) ஒளியாலேயே அனைத்தும் பிரகாசிக்கிறது!

98. அனைத்தின் அம்ஸம் அதனிடத்தில் இல்லவே இல்லை!

99. அது கர்த்தாவுமல்ல; போக்தாவுமல்ல; ஆனால் அனைத்தும் அதுவே!

100. அனைத்து ஜீவகோடிகளும் பெண்; அந்த பரமாத்மா ஒன்றே ஆண்!

101. **அறியாமை** என்பது காண்பது, கேட்பது, நுகர்வது, சுவைப்பது, ஸ்பரிசிப்பது ஆகியவற்றை நாமரூப குணத்துடன் **"நாவால்"** விவகரித்து 'குணதோஷங்களை' கற்பனையால் உண்டுபண்ணுவது!

102. **ஞானம்** (அறிவு) என்பது சத்யத்தை போதித்து (ஒலி கொடுத்து), தர்மத்தை நிலை பெறச்செய்து (ஒளியை உண்டு பண்ணி) இரண்டற்ற தாம் தாமாயிருப்பது!

103. நாமரூபமாகக் கண்டால் குணதோஷங்கள் தோற்றும்; அனைத்தும் இறைவனாகவும், இறைவன் உடமையாகவும் உணர்ந்தால் சத்வகுணம் ஒன்றே பிரகாசிக்கும்; **அனைத்தும் நாமே** என உணர்ந்தால் பிரம்மானந்தமாகவே நாம் இருக்கலாம்!

104. நாமே இரண்டானோம் (ஜீவன், ஆத்மா); நாமே பலவானோம் (ஆத்மா, ஜீவன், உலகம்); இந்த பலவற்றையும் இரண்டாக்க வேண்டும்; பின் இரண்டையும் ஒன்றாக்க வேண்டும்; பின் அந்த ஒன்றும் இல்லையென்றாகிவிடும்; அது காலாதீத ஒன்றே!

105. நாமரூபமாகக் கண்டால் உலகம் தெரியும்; ஏககுணமாக (ஸத்வம்) உணர்ந்தால் தெய்வம் தெரியும். குணாதீதமானால் (நிர்க்குணமானால்) அனைத்தும் மறையும்! அங்கு "அது நீயே; நீயே அது!"

106. உலகமாகக் கண்டால் "விளையாட்டு"; தெய்வமாக உணர்ந்தால் "ரஸனை" (ரசித்து ஆனந்திப்பது); தாமாக உணர்ந்தால் விளையாட்டும் இல்லை; ரஸனையும் இல்லை; கேட்பாரும் இல்லை; விளங்கும் பொருளும் இல்லை என்றாகிவிடும்!

107. அனைத்தும் தெய்வமாக உணர சாட்சிபாவம் தேவை; இது அழுது கரைந்தால்தான் கிட்டும். இங்கு உருக்கம் அதாவது கசிந்து அழுதால் **வினை கரையும்.** அனைத்தும் நாமாக உணர சர்வசாட்சிபாவம் தேவை. இங்கு சிரிப்புத்தான் உண்டாகும். (அழாமல் சிரிக்க முடியாது)

108. எமக்குள்ளே நீ இருக்க; உமக்குள்ளே யாம் இருக்க இந்த மன அசைவு நின்றால் போதும். இதற்கு ஒரே வழி **"அது நாம்; நாமே அது"** இங்கு சொல்வதற்கும் இல்லை; ஆவதற்கும் ஒன்றுமில்லை; **"உன் உள் உணர்வே"** ஆதாரம்.

அ. நடந்து முடிந்தவற்றில் எண்ணம் இல்லாதவனும்,
நடக்கப் போவதில் கற்பனை பண்ணாதவனும்,
நடப்பனவற்றை இல்லை இல்லை என உறுதி பண்ணியவனும்
உண்மையான ஆத்மசாதகன் ஆவான்.

ஆ. "கண்கள் கொண்டு பார்த்தால் வேஷம் தெரியும்".
"மனக்கண் கொண்டு பார்த்தால் துவேஷம் தெரியும்".
"அறிவுக்கண் கொண்டு உணர்ந்தால் அனைத்தும் மறையும்".

இ. **அகம்பிரம்மம் ஜகம்பிரம்மம் அகமே எல்லாம்**
**ஜகம்பரமும் ஜீவர்களும் சிறிதுமில்லை.**

ஈ. இகத்தைக் கண்ட கண்கள்
இறைவனைக் காணாது!
இறைவனைக் கண்ட கண்(மனம்)
பரத்தைக் காணாது!!
பரத்தை உணர்ந்த அறிவு
அங்கு எதுவும் இராது!!!
அதுவே **மஹாமௌனம்!!!!**

**அனைத்தும் ஒன்றே! அது நலமே!!**

**அது சிவமே!!! அது யாமே!!!!**

**அது நீயே!!!!!**

**எல்லாம் நீ!**

பக்கம் ( )

# ஓம் அறிமுகம்.

1. வ. கருப்பசாமி :- குல, குடும்ப, கர்மா, சம்பந்தம், பஜனை பக்தி சாதனைகள்!!!

2. V.K. [illegible] :- ஞானசாதனை, வைராக்யம், கர்மா சாதனையில் தொழில் வேகம்!!!

3. திருவடி :- முறையாக ஸ்ரீ குருதேவரிடம் பாடம் ஏற்றல், அத்வைதம் அறிமுகம், பற்பல சோதனைகள் அவர் கிருபையின் சாதனையால் வெல்லுதல்!!!

4. [illegible] :- எம் திருடன் (கண்ணன்) அறிமுகம்; ஞான நூல் ஸ்ரீமத் ரிபுகீதை அறிமுகம்; அதன் உட்புகுதல், அதனால் முந்தய மூன்று யுகங்களின் ஸ்ரீ மஹான்கள் தரிசனமும் அவர்கள் ஆசியும், சில சித்தர்கள் அறிமுகம்; அவர்கள் இதன் ஞானபாடம் ஏற்றல்!!!

5. வைத்தியம் :- அனைத்து பக்தி ஞானசாரம் சங்கிலியும் ஓர் சுத்த வைத்தியமாக இருந்து தொகுத்து வெளியிடுதல், குழந்தைகளுக்கு குழந்தையாக இருந்து பாடம் அருள்தல்!!!

6. [illegible] பாபா :- இந்த மஹாத்மாவை இந்த விநாடி பரியந்தம் தேடிக்கொண்டிருக்கிறோம். அவரைக் கண்டால் எமக்கு இங்கு வேலை இல்லை. யாம் இங்கு வந்த காரியம் முடிவுறும். கண்டால் சொல்லவும். அன்பு, கருணை!!!

# முடிவுரை

அன்பில் விளைந்த முத்துக்களே!

தோற்றமும், இருப்பும், முடிவும் இல்லாத ஒன்றை எப்படி முடிக்கமுடியும்? மேலே கண்ட **அனுபவ சித்தாந்தத்தை** எழுதியவன் ஒரு முழு பைத்தியமாகும்! “பைத்தியம் பத்தும் செய்யும்” என்பது ஓர் பழமொழியாகும். அது செய்யும் பத்தையும் உணரவும்!

1. பார்ப்பது
௨. கேட்பது
௩. பேசுவது
௪. சுவைப்பது
5. நுகர்வது
6. நடப்பது
7. கொடுப்பது
௮. வாங்குவது
௯. இவைகளை எண்ணுவது
10. இவைகளை **உடனே** மறப்பது.

இந்த பத்தும் இருந்தால் அது ஞானப்பைத்தியம் என சொல்லலாம்! ஆனால் இவைகளில் ஓர் உண்மை இருக்கிறது. மேலே கண்ட பத்திலும் **நான், எனது** சம்பந்தம் இல்லாமல் **தெய்வாதீனம்** என்ற எண்ணத்துடன் அதாவது **சர்வார்ப்பணம்** என்ற மன ஓர்மையுடன் நிகழ்ந்தால் அது சுத்த(ஞான) பைத்தியமாகும்! அந்த பைத்தியம் பிடித்துவிட்டால் பிராப்தாதீனத்தால் உலக நிலையில் அனைத்து கர்மாக்களும் நடைபெறும்; அந்த நடை உடை பாவனையில் வஞ்சகம், சூது, பொய், மது, மாது, டம்பம் இந்த ஆறும் இருக்க முடியாது!

**முடிந்த முடிவாக அனைவரும் உணர்வது:**

**பக்தி வேறு, ஞானம் வேறு இல்லவே இல்லை.**

**பக்தி** என்றால் நாம ரூபமுள்ள ஒரு இறைவனை சூட்சுமமாக **மனோவடிவில்** வைத்துக் கொண்டு அழுது அழுது அந்த மனதை கரைக்க வேண்டும். மனதும் அழுது அழுது கரைந்து சுத்தமாகும். அங்கு நீ எந்த இறைவனை எண்ணினாயோ அவனும் இருக்க மாட்டான்!

**ஞானம்** என்றால் அனைத்துக்கும் **காரணகாரியம் ஒன்றே**. அதுவே உன் கற்பனையினால் தேவ தெய்வங்களாகவும், ஜடகடபடாதிகளாகவும் (முறையாக மண்மலை; எண்பத்துநான்கு லட்சம் ஜீவ கோடிகள்; மரம், செடி, கொடி, புல், பூண்டு) அனைத்து அண்டபிண்ட சராசரங்களாகவும் உன் மனதினால் **தற்காலிக** தோற்றமாயுள்ளது என ஓர்மையுடன் உணர்ந்து

**“அது நாம், நாமே அது”**

**எனத் தெளிக!**

பாபா

**எல்லாம் நீ!**












Adobe of Love

You are Everything!